Y211,31 N77
N78·1;2
122077

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

—————

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்ட மன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர்.**

—————

1977, ஜூலை 4, 6, 8, 9, 11-ஆம் நாட்கள்

—————

(தொகுதி 1-எண்கள் 1 முதல் 5)

—————

## உள்ளடக்கம்.


திங்கட்கிழமை, 1977 ஜூலை 4.

| | | பக்கங்கள். |
|---|---|---|
| | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | i-iv |
| | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. .. | v |
| | தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் .. .. | vii—xv |
| 1. | உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் .. .. | 1—11 |
| 2. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 11 |

புதன்கிழமை, 1977 ஜூலை 6.

| | | |
|---|---|---|
| 1. | பேரவைத் தலைவர் தேர்தல் .. .. | 13—14 |
| 2. | பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் .. .. | 15 |
| 3. | பேரவைத் தலைவருக்கும், பேரவைத் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள் .. .. | 15—43 |

புதன் கிழமை, 1977 ஜூலை 6—தொடர்ச்சி.

பக்கங்கள்

4. ஒழுங்குப் பிரச்சினை—
குடியரசுத் தலைவர் மறைவு குறித்து இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வது பற்றி .. .. .. .. .. 44—49

5. இரங்கல் தீர்மானங்கள்—
(அ) முன்னாள் தற்காலிக ஆளுநர் திரு. பி. சந்திரா ரெட்டி அவர்கள் மறைவு குறித்து .. 50—64
(ஆ) முன்னாள் மேலவைத் தலைவர் திரு. எம். இரத்தினசாமி அவர்கள் மறைவு குறித்து.. 50—64
(இ) இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் மறைவு குறித்து .. 64—78

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. 78

வெள்ளிக்கிழமை, 1977 ஜூலை 8.

1. ஒழுங்குப் பிரச்சினைகள்—
(அ) வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து .. .. .. 79—82
(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. ரா. பொன்னப்ப நாடார் அவர்களின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் கொண்டுவரப்படாதது குறித்து .. .. .. .. 82—87
(இ) சட்டமுன்வடிவுகளின் நகல் தமிழில் வழங்கப் படாதது குறித்து .. .. .. .. 88—89
(ஈ) ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெறு முன் வெளியில் கருத்துக்களைக் கூறி, அவை பிரசுரிக்கப்படுவது குறித்து .. .. 90

2. அறிவிப்புகள்—
(அ) பேரவை அலுவல் குறித்து .. .. .. 87
(ஆ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம் .. 87—88

3. அரசினர் சட்டமுன்வடிவுகள்—
தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு .. .. .. .. .. 88—90



வெள்ளிக்கிழமை, 1977 ஜூலை 8—தொடர்ச்சி.

பக்கங்கள்

4. விளக்கம் கோரல்—
அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கும் ஒத்தி வைப்புத்தீர்மானங்கள், உரிமை மீறல் பற்றிய தீர்மானம் ஆகியவை பற்றிக் குறிப்பிடப் படாதது பற்றி .. .. .. 90—91

5. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம். .. .. .. .. 91—198

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 198

சனிக்கிழமை, 1977 ஜூலை 9.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்—
முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து .. 217—220

2. இரங்கல் தீர்மானம்—
முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். பொன்னப்ப நாடார் மறைவு குறித்து .. .. .. 220—232

3. உரிமைப் பிரச்சினை—
"அண்ணா" நாளிதழ் மீது எழுப்பப்பட்ட பிரச்சினை .. .. .. 232—235

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—
(அ) செங்குன்றம் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து .. .. .. 235—251
(ஆ) மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதில் காலதாமதமும், விவசாயத் தொழிலாளிகள் பாதிப்பும் .. .. 251—254
(இ) சென்னை, சேலம், ஈரோடு, கோவை போன்ற பகுதிகளில் மாணவரிடையே அமைதி யின்மையும் பள்ளிகளும் கல்லூரிகளும் மூடப்படுவதும் குறித்து .. .. .. 254
(ஈ) கோவையில் மூடிக்கிடக்கும் ஆலைகள் குறித்து 255

5. அரசினர் சட்ட முன் வடிவு—
தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 1/77) .. .. .. .. 256—288

## சனிக்கிழமை, 1977 ஜூலை 9—தொடர்ச்சி.

பக்கங்கள்


6. அரசினர் தனித் தீர்மானம்—

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிஆகியவைகுறித்த உத்தரவாத வரையறையை உயர்த்தல் குறித்து .. .. 288—322

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. 322


## திங்கட்கிழமை, 1977 ஜூலை 11.


1. அமைச்சர் அறிக்கை—

காவிரி நீர் பிரச்சினை குறித்து கர்நாடக மாநில முதலமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை .. 329—333

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—
சென்னை புதுக் கல்லூரி மூடப்பட்டது குறித்து. 333—353

3. அறிவிப்பு—

தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு மேலவையில் நிறைவேற்றப்பட்டது குறித்து .. .. .. .. .. 353

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் (தொடர்ச்சி) .. 353—454

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. 454—455


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள் பயண அனுமதிச் சீட்டுகள், மது விலக்கு, சுகாதாரம், மருத்துவம், அறக் கட்டளைகள், லஞ்ச ஒழிப்பு, தொழில்கள்.

2. மாண்புமிகு திரு. இ. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் தீர்வை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்கு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், கம்பெனிகளை பதிவு செய்தல்.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு மீனளம்.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—செய்தி, விளம்பரம், படச் சுருள் தொழில் நுட்பம், திரைப்படச் சட்டம். சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்,

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கல்வி, ஆட்சி மொழி, அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள், தொழில் நுட்பக் கல்வி உட்பட வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நகராட்சி, சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் திட்டம், கிராம வாசிகள் கடன் பட்டிருத்தல்.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர் நலன், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரம், குடி நீர் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலன், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடி மக்கள்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்கு வரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்கு வரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், கால் நடை வளர்ப்பு, இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி உதவி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பொறியியல் சம்பந்தமான பகுதிகள், பால், பால்வள நிறுவனம், வெள்ளத் தடுப்பு.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—இட வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, வேளாண்மைப் பணி சம்பந்தமான வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள், முகமதியர் அறக் கட்டளைகள் ஆலைத் துணிகள், நூல், கைத்தறி.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

## THIRU PRABHUDAS PATWARI

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption and Industries.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)—Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Mines and Minerals, Iron and Steel Control.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)—Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Minister in-charge of Food, Food Production, Co-operation and Fisheries.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Publicity*)—Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister in-charge of Education including Technical Education, Official Language, Approved Schools, Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Village Industries, Rural Industries Project and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes.

11. THE HON. THIRU C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister in-charge of Transport, Nationalised Transports, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Vigilance Service, Indian Overseas and Refugees and Evacuees.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn and Handloom.



**தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.**

பேரவைத் தலைவர்:

* மாண்புமிகு திரு. முனு ஆதி

பேரவைத் துணைத் தலைவர்;

* திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

@ மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்;

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்.

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

சார்புச் செயலாளர்கள்.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி. ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்

விவாதப் பதிப்பாளர்;

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்;

திரு. பி. கே. இலக்குமிநாராயணன்

எஸ்டேட் அதிகாரி;

திரு. வி. சீதாராமன், பி.காம்.

---

* 6—7—1977 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
@ 13—7—1977 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | ஓசூர் (செ.வ.) |
| 2 | அப்துல் ரஜாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. ஜி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. .. | பெண்ணாகரம். |
| 5 | அமிர்த ராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 6 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.) |
| 8 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாதன், திரு. அ. க. .. | வேலூர். |
| 10 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி, |
| 11 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) .. | கோயம்புத்தூர் (மேற்கு) |
| 12 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 13 | அர்ச்சுனன், திரு. வீ. .. .. | ஆரணி. |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன், திரு. க. .. | புரசவாக்கம். |
| 16 | அன்பழகன், திரு தி. .. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. இல. .. .. | திருநாவலூர். |
| 22 | ஆறுமுகம், திரு. மு. .. .. | சேலம்-2. |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 27 | இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 28 இராமசாமி, திரு. க.ந.க. .. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர். |
| 30 இராமசாமி, திரு. எஸ். வி. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 31 இராமசாமி, திரு. டி. .. .. | இராமநாதபுரம். |
| 32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை. |
| 34 இராமச்சந்திரன், திரு. என். | செஞ்சி. |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) .. | பண்ருட்டி. |
| 36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என். | ஹொசூர். |
| 37 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. | தல்லி. |
| 39 இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 41 உக்கிரபாண்டியன், திரு க. | பரமக்குடி (செ.வ.) |
| 42 உச்சி, திரு. கே. .. | கூடலூர். |
| 43 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 44 உமாநாத், திரு. ரா. .. .. | நாகப்பட்டிணம். |
| 45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்) .. | திருநெல்வேலி. |
| 47 எத்ராஜ், திரு. கி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பேட். |
| 49 ஐசரி வேலன், திரு. .. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 50 கணேசன், திரு. இ. .. .. | எடப்பாடி. |
| 51 கணேசன், திரு. எஸ். .. .. | பூம்புகார். |
| 52 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலப் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 53 கந்தசாமி, திரு. க. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 55 கபாலி, திரு. டி. கே. ... | மயிலாப்பூர் |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 57 கருணகிரி முத்தையா, திரு. க. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. .. | அண்ணாநகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. மு. தாழை | திருவாரூர் (செ.வ.) |
| 60 கருணாமூர்த்தி, திரு. வெ. .. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. | ஆலங்குளம். |
| 62 கலியமூர்த்தி, திரு. துரை. .. | சிதம்பரம். |
| 63 காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்) .. | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. பொ. .. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 67 கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 68 கிட்டு, திரு. ப. கோ. .. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி. எம். .. | பாலக்கோடு |
| 70 கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 72 கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 74 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 75 குருசாமி, திரு. ப. .. .. | ஆண்டியூர் (செ. வ.) |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்) .. | உடுமலைப்பேட்டை. |
| 77 கோதண்டராமன், திரு. வி. கே. | குடியாத்தம். |
| 78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி. | முசிறி. |
| 79 கோபாலன், திரு. போ. .. | உதகமண்டலம். |
| 80 கோவிந்தராசன், திரு. இ. .. | நெல்லிக்குப்பம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 81 கோவிந்தன், புலவர் கா. .. | செய்யாறு. |
| 82 கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |
| 83 சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு |
| 84 சண்முகம், திரு. கா. ந. .. | லால்குடி. |
| 85 சண்முகம். திரு. ப.உ. .. | திருவண்ணாமலை |
| 86 சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 87 சண்மும், திரு. ச. .. | கூத்தகுடி, திருப்பத்தூர். |
| 88 சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம். |
| 90 சந்திரன், திரு. ப. .. .. | பெரணமல்லூர். |
| 91 சந்திரன், ஜெயபால் திரு, இரா. எ. .. | தியாகராயநகர், சென்னை |
| 92 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டிணம். |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) .. | திருமங்கலம். |
| 94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபனாசம். |
| 95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை. |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ. வ.). |
| 98 சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 99 சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி. |
| 100 சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 101 சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 102 சின்னசாமி, திரு. வி. கொ. | பவானிசாகர். |
| 103 சின்னய்யா, திரு. வீ. .. | குளத்தூர் (செ வ.). |
| 104 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 105 சீனிவாசரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 108 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 110 சுப்பராயன், திரு. என். .. | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 113 சுப்பிரமணியன், திரு. மா. .. | சின்னசேலம். |
| 114 சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை. |
| 115 சுப்பிரமணியம், திரு. ஆர். சி. | கடலாடி. |
| 116 சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |
| 117 சுப்பிரமணியன், திரு. வ. மு. .. | மானாமதுரை (செ. வ.). |
| 118 சுப்பிரவேலு, திரு. கே. .. | சீர்காழி (செ. வ.). |
| 119 சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 சுப்புலட்சுமி, திருமதி .. | மொடக்குறிச்சி. |
| 121 சுப்பையா, திரு. ச. .. | சங்கரநாயினார் கோவில் (செ. வ.). |
| 122 சுவாமிதாஸ், திரு. எ. .. | பத்மநாபபுரம். |
| 123 செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 124 செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 125 செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான் (செ. வ.). |
| 126 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 127 செல்வராஜ், திரு. சீனி. .. | சமயநல்லூர் (செ. வ.). |
| 128 செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ. வ.). |
| 130 சோமசுந்தரம், திரு. ஓ. ப. | பொள்ளாச்சி. |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்) | கிருஷ்ணராயபுரம் (செ. வ.). |
| 132 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 134 சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. .. | விளவங்கோடு. |
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 137 தங்கவேல், திரு. ர. ச. .. | வால்பாறை (செ. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 138 தண்டபாணி, திரு. ரா. க. சு. | காங்கேயம். |
| 139 தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.). |
| 143 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்) .. | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பே. சு. | கலசப்பாக்கம். |
| 146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா) | திருவோணம். |
| 147 துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கராபுரம். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.). |
| 151 துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 152 தைலப்பன், திரு. டி.எம். .. | ஒரத்தநாடு. |
| 153 நடராசன், திரு. அ. .. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தீ.சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 நாச்சிமுத்து, திரு.க. .. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 பரமசிவன், திரு. ஏ. எம். .. | மேலூர். |
| 162 பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ. வ.). |
| 163 பழனிச்சாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிச்சாமி, திரு. சொ. த. | அவினாசி (செ. வ.). |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 168 பாண்டியன், திரு. .. .. | சேரன்மாதேவி. |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. .. | சோழவந்தான். |
|  | பெரம்பூர் (செ. வ.). |
| 171 பாலன், திரு. சு. .. .. | காஞ்சிபுரம். |
| 172 பாலாஜி, திரு. க. .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 173 பாலுச்சாமி, திரு. அ. .. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 174 புருஷோத்தமன், திரு. து. .. | ஆலங்குடி. |
| 175 புஷ்பராஜு, திரு. த. .. | மங்களூர் (செ. வ.) |
| 176 பெரியசாமி, திரு. மொ. .. | உப்பிலியாபுரம். |
| 177 பெரியசாமி, திரு. ரா. .. | மதுரை மேற்கு. |
| 178 பெரியசாமி, திரு. டி. பி. மு. | வரகூர் (செ. வ.) |
| 179 பெருமாள், திரு. என். .. | விளாத்திகுளம் |
| 180 பெருமாள், திரு. ரா .கு. .. | பெருந்துறை. |
| 181 பொன்னுசாமி, டாக்டர், ஏ. | இராயபுரம். |
| 182 பொன்னுரங்கம், திரு. ப. .. | திருச்செங்கோடு. |
| 183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) .. | நன்னிலம் (செ.வ.) |
| 184 மணிமாறன், திரு. மா. .. | திருப்பூர். |
| 185 மணிமாறன், திரு. ஆர். .. | எழும்பூர், சென்னை. (செ.வ.) |
| 186 மணிமுடி, திரு. எஸ், .. | தொண்டாமுத்தூர். |
| 187 மருதாசலம், திரு. க. .. | பாளையங்கோட்டை. |
| 188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்) .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 189 மாணிக்கம், திரு. சி. .. | அணைக்கட்டு. |
| 190 மார்க்கபந்து, திரு. ரா. .. | பட்டுக்கோட்டை. |
| 191 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. | வேதாரண்யம். |
| 192 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. | தர்மபுரி. |
| 193 முத்துசாமி, திரு. பா. க. சி. .. | ஈரோடு. |
| 194 முத்துசாமி, திரு. சு. |  |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 195 முத்துசாமி கரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 196 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 197 முருகேசன், திரு. கூ. ச. .. | திருவரம்பூர். |
| 198 முனிசாமி, திரு. பொ. .. | வந்தவாசி, (செ.வ.) |
| 199 முனிரத்தினம், திரு. எஸ். .. | கும்மிடிபூண்டி. |
| 200 முனு. ஆதி, திரு. .. .. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) | தாம்பரம், சென்னை. |
| 201 மூக்கையா தேவர், திரு. பி.கே. | உசிலம்பட்டி. |
| 202 யூசப், திரு, யா. சை.மு. .. | ராதாபுரம். |
| 203 ரகுமான்கான், திரு. ஏ. .. | சேப்பாக்கம், சென்னை. |
| 204 ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 205 ரகோத்துமன், திரு. கோ. .. | முகையூர். |
| 206 ரமணி, திரு. கு. . .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 207 ரசாக், திரு. எம். எம், ஏ. | கடையநல்லூர். |
| 208 ராமசாமி, திரு. கோ. .. | சிவகாசி. |
| 209 ராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோயில். |
| 210 ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர். |
| 211 ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 212 ராமலிங்கம், திரு. இ. .. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.) |
| 213 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 214 ராஜு, திரு. செ. மெ. .. | தலைவாசல் (செ. வ.) |
| 215 ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ. வ.) |
| 216 லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 217 லத்தீப், திரு. எம். ஏ. .. | வாணியம்பாடி. |
| 218 வடிவேலு, திரு. கே. .. | கரூர். |
| 219 வரதராஜன், திரு. என், .. | திண்டுக்கல். |
| 220 வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 221 வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர். |
| 222 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 223 விஜயராகவன். திரு. பொ. | கிள்ளியூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 224 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 225 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 226 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. | ஆத்தூர். |
| 227 வேணுகோபால், திரு. த. .. | தண்டராப்பட்டு. |
| 228 வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஒட்டபிடாரம் (செ. வ.) |
| 229 ஜகதீசன், திரு. ஆனூர் .. | செங்கல்பட்டு. |
| 230 ஜான் வின்சென்ட், திரு. மு, | நாங்குனேரி. |
| 231 ஜெபமணி திரு. ர. .. | சாத்தான்குளம். |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 ஜெயவேலு, திரு. எம்.ஏ. .. | காட்பாடி. |
| 234 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | திருவட்டார். |
| 235 நியமன உறுப்பினர். .. | வெற்றிடம். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்பமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் —அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
3 மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
4 மாண்புமிகு திரு. கே., இராஜா முகமது—அமைச்சர்.
5 திரு. வி. பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

## அரசு வரிசைத் தொகுப்பு அட்டவணையை (INDEX) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது: முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் " சட்ட முன்வடிவு " என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும் 'குழு (க்கள்)', 'மன்றம்(கள்)' 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் அனைத்தும், இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் " தலைவர் " என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது:—

| | | |
|---|---|---|
| அ. | : | அறிக்கை. |
| அறிவி. | : | அறிவிப்பு. |
| அ.வி. | : | அரைமணி விவாதம். |

குு.வி. : குறுகிய கால விவாதம்.
பொ. வி. : பொது விவாதம்.
ஆ. உ. : ஆளுநர் உரை.
உ.பி. : உரிமைப் பிரச்சினை.
ஒ.பி. : ஒழுங்குப் பிரச்சினை.
க.ஈ. : கவன ஈர்ப்புகள்.
க.ஈ.அ. : கவன ஈர்ப்பு அறிக்கை.
ச.அ.நி. : சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.
ச.ஆ.நி. : சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை— இந்நிலையில்,
(1) ஆய்வு / கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.
(2) ஆய்வு / கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்,
(3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம்.
(4) ஆய்வு / கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்,
(5) ஆய்வு / கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம், முதலியன.
ச.பிரி.ஆ. : சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்தல்.
ச.பே. : சட்டமன்றப் பேரவை.
ச.மே. : சட்டமன்றப் மேலவை.
த.கோ. : தகவல் கோரல்.
த.வி. : தன்னிலை விளக்கம்.
தீ. : தீர்மானம்.
உ.தீ. : உரிமைத் தீர்மானம்.
ஒ.தீ. : ஒத்திவைப்புத் தீர்மானம்.
த.தீ. : தனித் தீர்மானம்.
து.மா.கோ. : துணை மானியக் கோரிக்கை.
மி.மா.கோ. : மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே.அ. : பேரவையின் அலுவல்.

## தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்.

1977, ஜூலை 4, 6, 8, 9, 11 ஆம்–நாட்கள்

(தொகுதி I எண்கள் 1—5)

### அ


| | பக்கங்கள் |
|---|---|
| அண்ணாமலை திரு. எம்— | |
| கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த. தீ.) .. .. .. | 289—291 |
| அம்பிகாபதி திரு. மு— .. .. .. | 357—358 |
| ஆளுநர் உரை (தீ) | 399—404 |
| ஆளுநர் உரை மீதான விவாதம் நடக்குமுன் அது பற்றிய கருத்து வெளியே கூறப்படுவதும் அவை பத்திரிகையில் வெளியிடப்படுவதும் குறித்து (ஒ.பி.) .. .. .. | 90 |
| சந்திராரெட்டி, திரு. பி., இரத்தினசாமி, திரு. எம். (இ.தீ.) .. .. .. | 59 |
| பக்ருதீன் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) .. .. .. .. | 73 |
| வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து (ஒ.பி.) .. .. .. | 81 |
| ரங்கநாதன் திரு. அ. கு— .. .. .. | 182—185 |
| ஆளுநர் உரை (தீ) | |

அ—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **அரங்கநாதன் திரு. மு—** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. | 172—179<br>358—359 |
| **அரங்கநாயகம் திரு. செ —** | |
| புதுக் கல்லூரி (சென்னை) மூடப்பெற்றது குறித்து (ஒ.தீ.) .. .. .. .. | 350—352 |
| **அழகர்சாமி திரு. சோ —** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. | 356—358 |
| கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) .. .. .. | 295—296 |
| செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. .. .. .. | 236—227 |
| பேரவைத்தலைவர், துணைத் தலைவர் தேர்தல் பாராட்டுரைகள் .. .. .. | 26—27 |
| பொன்னப்ப நாடார், திரு. ரா. (இ.தீ.).. .. | 227—228 |
| **அன்பழகன் திரு. க —** | |
| அண்ணா நாளிதழ் மீது (உ.பி.) .. .. | 234—235 |
| ஆளுநர் உரை (தீ) .. .. | 417<br>420—421 |
| இரத்தினசாமி, திரு. எம் (இ.தீ.) .. .. | 52 |
| சந்திராரெட்டி, திரு. பி. (இ.தீ.) | 53—56 |


ஆ


| | |
|---|---|
| **ஆறுமுகம், திரு. எச். ஜி.** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. | 393—394 |





| | பக்கம் |
|---|---|
| **இ** | |
| இரங்கல் குறிப்பு— .. .. | 217 |
| அருணாசலம், திரு. வி. எஸ். | |
| இரத்தினசாமி, திரு. எம்., முன்னாள் மேலவைத் தலைவர் (இ.தீ.) | 50—64<br>219 |
| எல்லப்பன், திரு. பி. எஸ். .. .. | 218 |
| கண்ணன், திரு. எம். ஆர். .. .. | 219 |
| கோபாலன், திரு. கே. பி. .. .. .. | |
| சந்திரா ரெட்டி, திரு. பி., முன்னாள் தற்காலிக ஆளுநர் (இ.தீ.) .. | 50—64<br>218 |
| சாரதி, திரு. மா. பா. .. .. .. | 217 |
| சிவப்பிரகாசம், திரு. வி. எஸ். .. .. | 219 |
| சிவபெருமாள், திரு. ஜி. .. .. .. | 220 |
| சுப்பையா, திரு. கே. வி. .. .. | 219 |
| சுவாரஸ், திருமதி. .. | 218 |
| சொக்கலிங்க அம்பலம், திரு. என். வி. .. | 220 |
| தசரதன், திரு. டி. .. | 218 |
| தாமோதரன், திரு. எம். பி. .. | 219 |
| நாகிரெட்டி, திரு. டி. | |
| பக்ருதீன் அலி அகமது, திரு., இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) .. | 64—78<br>218 |
| பெரியவால குருவ ரெட்டியார், திரு. ஏ. வி. பி. .. | 220—232. |
| பொன்னப்ப நாடார், திரு. ரா (இ.தீ.) .. .. | 217 |
| பொன்னம்பலக் கவுண்டர், திரு. பி. .. | 218 |
| மாரியப்பன், திரு. ஏ. . | 219 |
| ராமகிருஷ்ணன், திரு. கே. . | 218—219 |
| ராமலிங்கம், திரு. எஸ். | 219 |
| ராஜமன்னார், திரு. ஜி. .. | 218 |
| ராஜா கவுண்டர், திரு. ஏ. | |
| ராஜா பிள்ளை, திரு. வி. கே. | |

இ—தொடர்ச்சி.

பக்கங்கள்

இரங்கல் குறிப்பு—தொடர்ச்சி.


லட்சுமணக் கவுண்டர், திரு. எஸ். .. 220

லட்சுமி அம்மாள் பாரதி திருமதி. .. 219

இராகவானந்தம் திரு. எஸ்.—
ஆளுநர் உரை (தீ) .. 116—118

இராதா திரு. எஸ். ஆர்.—
ஆளுநர் உரை (தீ) .. 91—105

இராமச்சந்திரன் திரு. எம். ஜி.—
காவிரிநீர் பிரச்னை குறித்து கர்நாடக முதல்வருடன் பேச்சு வார்த்தை (அ) .. .. 329—330, 331—332, 333
குடியரசுத் தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வது குறித்து (ஒ.பி.) .. .. .. 48
கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த. தீ.) .. .. 313—314; 315—316, 318, .. 319—320
செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு (ஒ. தீ.) .. .. .. 241—246, 247—249, 250
பேரவைத் தலைவர், துணைத்தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. 33—37

இராமச்சந்திரன் திரு. ச.—
பொன்னப்ப நாடார் (திரு. ரா.) மறைவுக்கு இரங்கல் தீர்மானம் (ஒ.பி.) .. .. 84—87
மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதில் காலதாமதமும் விவசாயிகள் பாதிப்பும் (ஒ. தீ) 253—254

இராமச்சந்திரன் திரு. ந.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. 358—359, 359—365
பள்ளிகளும் கல்லூரிகளும் மாணவர்களது கிளர்ச்சி காரணமாக மூடப்பெறுவது (ஒ.தீ) .. 254




இ—தொடர்ச்சி.

பக்கங்கள்


இராமசாமி திரு. டி.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 394—399

இராஜா முகமது திரு. கே.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 176—177


ஈ


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. பி.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 379—382


உ


உத்திராபதி திரு. பொ.—
மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதில் தாமதமும் விவசாயிகள் பாதிப்பும் (ஒ.தீ.) .. 251

உமாநாத் திரு. ரா.—
பக்ருதின் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) .. .. .. .. 70—71
வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து (ஒ.பி.) .. .. .. .. 79—82

உரிமைப் பிரச்சினை—
'அண்ணா' நாளிதழ் மீது .. .. .. .. 232—235

உறுப்பினர்கள் உறுதி மொழி எடுத்துக் கொள்ளல்— 1—11


எ


எட்மண்ட் திரு. க. உரோ.
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 416—418, 419
கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த. தீ.) .. .. .. .. 288—289, 308—311, 312, 317, 320—321
வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து (ஒ. பி.) .. .. .. .. 79—82

பக்கங்க

ஏடுகள்.—

பேரவை முன் வைக்கப்பெற்றவை .. 198,199—21
454,45

ஓ

ஒழுங்குப் பிரச்சினை (கள்)—

ஆளுநர் உரை மீதான விவாதம் நடக்கு முன் அதுபற்றிய கருத்துக்கள் வெளியே கூறப்படுவதும் அவை பத்திரிகைகளில் வெளியிடப்படுவதும் குறித்து .. .. .. .. 90

குடியரசுத் தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வது குறித்து .. .. .. .. 44—49

சட்டமுன் வடிவு தமிழில் வழங்கப் பெறுதது .. 88—89

பொன்னப்ப நாடார் (திரு. ரா.) மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்படாதது குறித்து .. .. .. .. 82—84

வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து .. .. .. .. 79—82

க.

கணேசன் திரு. எஸ்.—

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 160—163
355—358,
359

கந்தசாமி திரு. கே.—

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 404—409

பொன்னப்ப நாடார் திரு. ஆர், (இ.தீ.) .. 228—229

கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) .. .. .. 300—303

பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. .. 29—30

கரியமாணிக்க அம்பலம் திரு. கரு. ராம.—

ஆளுநர் உரை (தீ.) .. .. .. .. 152—155



க—தொடர்ச்சி.

பக்கங்கள்

கரியமாணிக்க அம்பலம் திரு. கரு. ராம.—தொடர்ச்சி.

கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1977 .. .. 273

கருணாநிதி திரு. தாழை. மு.—

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 355

கருணாநிதி திரு. மு.—

அண்ணா நாளிதழ் மீது (உ.பி.) .. .. .. 234,235

ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 118—119
177—178
197
417—421

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், உரிமைப் பிரச்சினைகள், எடுத்துக் கொள்ளுதல் (த.கோ.) 91

குடியரசுத் தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வது குறித்து (ஒ.தீ.) .. .. .. .. 45—47

காவிரி நீர், கர்நாடக முதல்வருடன் தமிழக முதல்வர் நடத்திய பேச்சு வார்த்தை (அ) 331—333

கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ) .. .. .. .. 311,313,
315—318
319

செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. .. .. .. .. 246—247
249—250

பக்ருதீன் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) .. .. .. .. 67—68

பேரவைத்தலைவர், துணைத்தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. .. 18—20

பொன்னப்ப நாடார், திரு. ரா. (இ.தீ.) .. 222—224

பொன்னப்பநாடார், திரு. ரா. மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப் படாதது குறித்து (ஒ.பி.) .. .. .. 84

க—தொடர்ச்சி.

பக்கங்கள்

கருணாமூர்த்தி திரு. வெ.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. 185—187

கல்விக் கூடங்கள்—
புதுக்கல்லூரி (சென்னை). மூடப்பெற்றது குறித்து (ஒ.தீ.) 333—353

காவிரி நீர் பிரச்சினை—
கர்நாடக முதல்வருடன் தமிழக முதல்வர் நடத்திய பேச்சு வார்த்தை (அ) .. .. 329—333

கிட்டப்பா திரு. என்.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 354

கிருஷ்ணன் திரு. ரா.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 436—439

கூட்டுறவு—
வங்கிகள் உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) .. .. .. 288—322

கோதண்டராமன் திரு. வி. கே.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 156—160, 354
வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து (ஒ.பி.) .. .. .. .. 81

ச.

சங்கரய்யா திரு. என்.—
சந்திரா ரெட்டி திரு. பி., இரத்தினசாமி, திரு. எம். (இ.தீ.) .. .. .. 57
பொன்னப்ப நாடார் திரு. ரா. (இ.தீ.) .. 225—226
பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. .. 72—74
பொன்னப்ப நாடார், திரு. ரா. மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்படாதது குறித்து (ஒ.பி.) .. .. .. .. 86



ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சட்ட முன்வடிவுகள்—
கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்), 1977. .. .. .. .. 88, 89
அறிமுகம் .. .. .. .. .. 256—285
ஆய்வு .. .. .. .. .. 286—288
பிரிவு வாரி ஆய்வு .. .. .. 288
நிறைவேற்றத் தீர்மானமும் நிறைவேற்றமும் .. 353
மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி ..

சண்முகம் திரு. கூத்தகுடி ச.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. 139—147

சண்முகம் திரு. ப. உ.—
கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ) .. .. .. .. 312

சந்திரன் திரு. ப.—
பொன்னப்ப நாடார் திரு. ஆர். (இ.தீ.) 229—230

சமரசம் டாக்டர் கே.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 135—139

சாதிக் பாட்சா திரு. எஸ். ஜே.—
ஆலைகள் கோவையில் மூடிக் கிடப்பது (ஒ.தீ.) 255
கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977. 257—258, 286—287
சட்ட முன்வடிவு தமிழில் வழங்கப் பெறாதது (ஒ.பி.) .. .. .. .. .. 88—89
வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து (ஒ.பி.) .. .. .. .. 82

சிவசாமி திரு. செ.—
கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. 266—268

ச—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **சுப்ரமணியம் திரு. ஒ—** | |
| செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. .. .. .. | 237 |
| புதுக் கல்லூரி (சென்னை) மூடப்பெற்றது குறித்து (ஒ.தீ.) .. .. .. .. | 334—335 |
| **சுப்பிரமணியம் திரு. பாக்கூர் சு.—** | |
| ஆளுநர் உரை (தீ) | 365—371 |
| **சுப்பிரவேலு திரு. கா—** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. .. | 358—359 |
| **சுப்பு திரு. க.—** | |
| அண்ணா நாளிதழ் மீது (உ.பி) .. .. .. | 232—233 |
| ஆலைகள் கோவையில் மூடிக்கிடப்பது (ஒ.தீ.) .. | 255 |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. .. | 106—116<br>195<br>358—359 |
| ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், உரிமைப் பிரச்சினைகள் எடுத்துக் கொள்ளுதல் (த.கோ.) .. | 90—91 |
| கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. | 274—276<br>283—284 |
| குடியரசுத்தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வது குறித்து (ஒ.பி.) .. .. .. .. | 44—46 |
| செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) .. .. .. .. | 237<br>238—241 |
| பள்ளிகளும் கல்லூரிகளும் மாணவர்களது கிளர்ச்சி காரணமாக மூடப்பெறுவது (ஒ.தீ.) | 254 |
| **சுப்புலட்சுமி திருமதி—** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. .. | 382—384 |




சு—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **சுவாமிதாசன் திரு. அ—** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. .. | 384—392 |
| கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) .. .. .. .. | 296—298 |
| **செல்வராசன் திரு. அ—** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. .. | 147—149<br>358—359 |
| **செல்வராஜ் திரு. மு—** | |
| கூட்டுறவு வங்கிகள் உத்திரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ) .. .. .. .. | 298—300<br>310 |
| **சௌந்தரபாண்டியன் திரு. பெ—** | |
| ஆளுநர் உரை (தீ) .. .. .. .. | 418<br>420—422 |
| **தலைவர்—** | |
| அறிவிப்புகள்— | |
| அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம் | 87,88 |
| அலுவல் குறித்து | 87 |
| சந்திரா ரெட்டி திரு. பி., இரத்தினசாமி திரு. எம். (இ.தீ.) .. .. .. | 64 |


தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

உரிமைப் பிரச்னை—

அண்ணா நாளிதழ் மீது—
6-7-1977 அன்று தாம் எழுப்பிய
ஒழுங்குப் பிரச்னையை ஆதரித்து எதிர்க்
கட்சித்தலைவர் பேசிய பேச்சு முழுமை
யாக வெளியிடப் பெறாமல் அவை
முன்னவரது கருத்தையே அவர் ஆதரித்
துள்ளதுபோல பொதுமக்களிடையே
தவறான எண்ணம் உண்டாகும் வகையில்
அண்ணா நாளிதழ் அவை நிகழ்ச்சியை
வெளியிட்டுள்ளதாக அதன்மீது ஓர் உறுப்
பினர் கொடுத்திருந்த உரிமைப் பிரச்னை
முன்அறிவிப்பின்மீது தலைவர் 1977

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஜூலை 9. ஆம். தேதி. தீர்ப்பளிக்கையில் எழுத்துக்கு எழுத்து சரியாக அவை நிகழ்ச்சி வெளியிடப்படவில்லை என்பதே உறுப்பினரது ''குற்றச்சாட்டு'' எனவும் அவைக்குறிப்புகள் முழுவதுமாக இல்லாமல் குறிப்பிட்ட சில பகுதிகள் மட்டுமே நாளிதழ்களால் பொதுவாக வெளியிடப் பெறுகின்றன என்றும் அவ்வாறே அண்ணா நாளிதழிலும் செய்தி வந்துள்ளது என்றும் கூறி தமது இசைவை மறுத்தார். 532-233

ஒத்தி வைப்புத்தீர்மானங்கள்—

இசைவு அளித்தல் குறித்து—

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எல்லாவற்றையும் குறிப்பிட வாய்ப்பு இருப்பதால் அக்காரணத்தைக்காட்டியே ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்குத் தலைவர் தம் இசைவை மறுப்பது சரியாக இருக்காது என எதிர்க்கட்சித் தலைவர் 1977 ஜூலை 9 ஆம் தேதி தெரிவித்தபோது ஒரு குறிப்பிட்ட நிகழ்வுபற்றிகுறிப்பிடப் பெறாமல் பொதுப்படையாகக் கொடுக்க பெறும் தீர்மானங்கள் குறித்து தான் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்புள்ளது என்பதால் இசைவு மறுக்கப்பெறுகிறது என்றும் எல்லா ஒத்திவைப்புத் திர்மானங்களுக்குமே இசைவு மறுக்கப்பெறுவதில்லை என்றும் எதுஅவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்ததென்று தலைவர் கருதுகிறாரோ அதை அவையில்கொண்டுவந்து விவாதிக்க அனுமதிக்கப்படும் என்றும் பேரவைத் தலைவர் குறிப்பிட்டார். 255

காவல் துறை—

செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கி சூடு பற்றியும் பலர்அதன் காரணமாக காயமுற்றிப்பதால் அப்பகுதியில் நிலவும் பதட்ட நிலை குறித்தும்: முதலமைச்சரின்விரிவான அறிக்கைக்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 235-251



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி,

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

பள்ளிகளும்-கல்லூரிகளும்—

சென்னை, சேலம்,ஈரோடு, கோவை போன்ற பகுதிகளில் மாணவர்கள் மத்தியில அமைதியின்மை உருவாகி போராட்டங்கள் வெடிப்பதனால் பள்ளிகளும் கல்லூரிகளும் மூடப்பட்டு வருவது குறித்தும் மாணவர்கள் கல்விக்கு உத்தரவாதம் அளிக்க நடவடிக்கை எடுககவேண்டியது குறித்தும்:

தீர்மானம் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை பற்றியதாக இல்லாது பலவற்றை பற்றியதாக உள்ளதாலும் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் இவை பற்றி பேச உறுப்பினர்களுக்கு வாய்ப்பு உள்ளதாலும் இசைவு மறுக்கப்பெற்றது. 254

சென்னைப் புதுக்கல்லூரியில சேரவிரும்பும் மாணவர்களிடமிருந்து கட்டாய நன்கொடை வசூலிப்பதனால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு குறித்தும், வன்முறைக் கிளர்ச்சியில் ஈடுபட்டது குறித்தும், அதன் விளைவாக அக்கல்லூரி மூட்ப்பெற்றிருப்பது குறித்தும்:

கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப்பிறகு இப்பொருள்குறித்து மேலும் விவாதிக்க தேவையில்லையென இசைவு மறுக்கப்பெற்றது. 333-353

தொழிற்சாலைகள்—

ஆலைகள் கோவையில் மூடிக்கிடப்பது குறித்து, முன்னறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களே, இது சமீபத்திய நிகழ்ச்சி அல்ல, வெகு நாட்களாக நடைபெற்று வரும் நிகழ்ச்சி எனக் குறிப்பிட்டுள்ளதாலும் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் இது குறித்துப் பேச வாய்ப்பிருப்பதாலும் இசைவு மறுக்கப்பெற்றது. 255

பக்கங்கள்

தீ—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி:

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

தீர்ப்பாசனம்—

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர்விடுவதில் கால தாமதமும், விவசாயிகள் பாதிப்பும்; இது தொடர்பாக அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் பொதுப்பணித்துறை அமைச்சரது விரிவான அறிக்கைக்குப் பின்இசைவு மறுக்கப்பெற்றது. 251-254

ஒழுங்குப் பிரச்சினைகள்—

ஆளுநர் உரைமீது அவையில் விவாதம் துவங்குமுன் அவைக்கு வெளியில் கருத்து வெளியிடல்:

ஆளுநர் உரையின் மீதான விவாதம் துவங்குவதற்கு முன்னரே அவரது உரை பற்றிய கருத்துக்களை வெளியில் கூறுவதும், அதைச் செய்தித்தாளில் வெளியிடுவதும் முறையா என 1977 ஜூலை 8 ஆம் தேதி ஓர் உறுப்பினர் ஓர் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பினார்.

அதை உரிமை மீறல் பிரச்சினையாக உறுப்பினர் எழுப்ப விரும்பினால் எழுத்து மூலம் முன்னறிவிப்புக் கொடுத்தால் அது குறித்து பரிசீலிக்கப்பெற்று தீர்ப்பு வழங்கப்பெறும் எனத்தலைவர் தீர்ப்பளித்தார். 90

குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் முன்னதாக நிகழ்ச்சி நிரலில் இடம் பெறாதது குறித்து:

குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது மறைவு குறித்து கொண்டு வரப் பெற்றுள்ள இரங்கல் தீர்மானம் நிகழ்ச்சி நிரலில் முதல் இடம் பெறாது மூன்றாவதாகத் தள்ளப்பெற்றிருப்பது சரிதானா என்பதாக, 1977 ஜூலை 8ஆம் தேதி அவையில் ஓர் உறுப்பினரால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பெற்றது.



பக்கம்

தீ—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப்பிரச்சினைகள்—தொடர்ச்சி.

கட்சித்தலைவர்கள் சிலரது கருத்துக்களையும் அவைமுன்னவர், முதலமைச்சர் ஆகியோர்களுடைய கருத்துக்களையும் கேட்டறிந்த பின் முதலில் உள்ள இரண்டு இரங்கல் தீர்மானங்களை ஒன்றாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றிய பின் குடியரசுத்தலைவர் மறைவு குறித்தஇரங்கல் தீர்மானத்தைத் தனியாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றி மறைந்த அன்னாருக்கு உரிய மரியாதை தெரிவிக்கும் வகையில் உடனே அவையை ஒத்திவைப்பது பொருத்தமாக இருக்கும் என்பதால் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பெற்றுள்ள வரிசைமுறை சரியானதே என்று தீர்ப்பளிக்கப்பெற்றது. 44-49

குறைந்த கால அளவில் வினாக்கள் எடுத்துக் கொள்வது குறித்து

வினாக்களுக்கான விடைகளை அனுப்பி வைக்க துறைகளுக்கு 42 நாட்கள் கால வரம்பு கொடுத்திருப்பதை, பாராளுமன்றத்திலுள்ளது போல, 10, 11 நாட்களாகக் குறைக்க வேண்டுமென ஓர் உறுப்பினர் 1977 ஜூலை 8ஆம் தேதி ஒழுங்குப்பிரச்சினையொன்றைஎழுப்பினார். ஒரு வினாவுக்கான விடையை துறை அனுப்பி வைப்பதற்கு 42நாட்கள்பொறுத்திருக்க வேண்டுமென்றால் வினாவே பயனற்றதாகி விடும் என்றார்.

தலைவர் குறிப்பிடுகையில் விதிகளில் 42 நாட்கள் என்று கொடுத்திருப்பது உச்சவரம்பு தான் என்றும் விடை ஒரு வாரத்திலும் தயாராகலாம். 42 நாட்களிலும் தயாராகலாம் என்றும் 10நாட்களுக்குள்ளேயே விடைபெறப் பெற்றால் அவை நிகழ்ச்சி நிரலில் இடம்பெறச் செய்ய 42 நாட்கள் பொறுத்திருக்கத் தேவையில்லையென்றும் இதற்கு நிலைவிதிகளில் மாற்றம் ஏற்படும் வரை நடைமுறையிலுள்ளதையே அவையின் பின்பற்ற வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார் 79-81

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப்பிரச்சினைகள்—தொடர்ச்சி.

சட்ட முன்வடிவின் தமிழ்ப்பிரதி வழங்கப் படாமை குறித்து:

சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பெற்றுள்ள நிலையில் அறிமுகம் செய்யப்பெறுவதற்காக வந்துள்ள ஒரு சட்டமுன்வடிவின் பிரதி ஆங்கிலத்தில் உள்ளது என்றும் இனி மேலாவது தமிழிலே சட்டமுன்வடிவு கொடுக்கப்பெறுமா என்றும் அறிய ஓர் உறுப்பினர் ஜூலை 8 ஆம்தேதி ஒழுங்குப் பிரச்னை ஒன்றை எழுப்பினார். 79–81

சட்டமன்ற நடவடிக்கைகள் தமிழிலேயே நடைபெறுகிற வரையில் தாம் கூடுமான வரை தமிழுக்கே முதலிடம் தருவதாகவும் குறிப்பிட்டு சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை ஆங்கிலத்திலேயிருந்து தமிழில் சரியானபடி மொழி பெயர்க்கக் கூடிய அளவுக்கு நிலைமை இல்லை எனவும் தலைவர் குறிப்பிட்டார் 89

பொன்னப்ப நாடார் (திரு. ரா) மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை கூட்டத் தொடரில் முதல் நாளே எடுத்துக் கொள்ளாதது குறித்து:

திரு. ரா. பொன்னப்ப நாடார் விமான விபத்தில் உயிரிழந்தது குறித்து முதல் நாள் கூட்டத்திலேயே கொண்டு வந்திருக்க வேண்டிய இரங்கல் தீர்மானத்தை கொண்டு வராமல் இருப்பது முறைதானா என ஓர் உறுப்பினர் 1977 ஜூலை 8 ஆம் தேதியன்று ஒழுங்குப் பிரச்னை ஒன்றைப் எழுப்பினார்.

முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் 29 பேர்கள் மறைந்துள்ளதால், எல்லா இரங்கல் தீர்மானங்களும் மறுநாள் கொண்டு வரப்பெறும் எனத் தலைவர் குறிப்பிட்டார். 83.84









தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப்பிரச்சினைகள்—தொடர்ச்சி.

பாராளுமன்ற இங்கிதம்—

கைதட்டல் தவிர்த்து மேசையை தட்டுவது குறித்து

உறுப்பினர்கள்தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள, கையொலி செய்தலை தவிர்த்து மேசையைத் தட்டினால் போதுமானது 178

விவாதம்—

அவையின் மொழி–அமைச்சர் தமிழில்உரையாற்றுவது குறித்து:

அமைச்சர், ஒருவர் சட்ட முன்வடிவின் மீதான விவாதத்திற்கு ஆங்கிலத்தில் பதிலளிக்கத் தொடங்கியதும், ஓர் உறுப்பினர் அமைச்சர் ஆங்கிலத்தில் பேசினால் எப்படிப் புரிந்து கொள்வது என்ற பிரச்னையை எழுப்பினார். இப்பிரச்சினை குறித்து பேரவைத் தலைவர் "ஆங்கிலத்தில் பேசக்கூடாது என்று விதி இல்லை. தமிழில் பேசுவது நல்லது என்றாலும் ஆங்கிலத்தில் தான் தம்மால் சரியாகச் சொல்ல முடியும் என்று கருதுவதால்,அவருக்குஅனுமதி வழங்கப் பெற்றது" என்று குறிப்பிட்டார்.

இப்பிரச்னை சிறிது நேரத்திற்குப்பின் மீண்டும் மற்றொருஉறுப்பினரால்எழுப்ப பெற்றபோது, பேரவைத் தலைவர், இது தொடர்பாக சட்டப்பேரவை விதியை சுட்டிக்காட்டி, ஆங்கிலத்தில் உரையாற்றக் கூடாதுஎனவிதியில்லையென்றும் அங்கீரிக்கப்பெற்றமொழிகளான தமிழ் ஆங்கிலம்' அல்லதுஇந்தி இவையல்லாது கன்னடத்திலும்', மலையாளத்திலும், தலைவர் அனுமதி பெற்று பேசலாம் என விதி இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். 278, 285

உரையாற்றுவதுபற்றிய விதிமுறைகள்—

உறுப்பினர்கள் அவைத் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டுமே அல்லாது, உறுப்பினர்களைப் பார்த்துப் பேசுதல் கூடாது. 197

பக்கங்கள்

த— தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

ஒருபொருள்குறித்து ஏற்கெனவே பேசிவிட்ட உறுப்பினரே மீண்டும்அதுகுறித்து பேச முற்படக் கூடாது. 343

ஒதுக்கப்பெற்ற நேரத்திற்குள் முடிவதாக இருத்தல் நலம். 262,303,307

ஒழுங்குப் பிரச்னை—

ஒழுங்குப் பிரச்னையை எந்த நேரத்திலும் எழுப்ப ஓர் உறுப்பினருக்கு உரிமை உள்ளது என்றாலும்,பேசிக்கொண்டிருப்பவர் தம் பேச்சை முடித்தவுடன் எழுப்புதல் வேண்டும். 344 348

குறுக்கீடுகள்—

உறுப்பினர்கள் அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு பேசுவதும் நேருக்கு நேராக விளக்கம் கொடுப்பதும் தவிர்க்கப் பெற வேண்டும். 284

எதிர்க் கட்சித் தலைவர் கூறியவற்றிற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுமுன், பொறுமையாக இல்லாமல், அக்கட்சி உறுப்பினர்கள் குறுக்கிடுவது மரபு அல்ல. 177

குறுக்கீடுகளுக்கென தனியே நேரமில்லாததால். ஓர் உறுப்பினரது பேச்சுக்கிடையே எழுகிற குறுக்கீடுகள், அவருக்கென ஒதுக்கப்பெற்ற நேரத்திற்கு உட்பட்டவைதான். 113

முதல் அமைச்சர் பதில் அளித்துக் கொண்டிருக்கும்போது உறுப்பினர்கள் குறுக்கிடுவதும் முறை அல்ல .. .. 245



பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டுகள்—

தீர்ப்பளித்த ஒன்றைப்பற்றிப் பேசக்கூடாதுஎன்றும் பத்திரிகையிலே வந்தது என்று சொல்லி நேரிடையாகக் குற்றம் சாட்டுவது தவறு என்றும் குறிப்பிட்டு ஓர் உறுப்பினர் கூறிய சில பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து அகற்றிட பேரவைத் தலைவர் ஆணையிட்டார். 175

துவங்க வேண்டிய முறை—

''மாண்புமிகு தலைவர்அவர்களே', என்று உறுப்பினர்கள் தங்கள்உரையை துவங்க வேண்டும். ''மாண்புமிகு உறுப்பினர்களே'' எனத் துவங்குவது முறையல்ல. 306

தொடர்புடைமை—

விவாதத்திலுள்ள பொருளுக்குத் தொடர்பில்லா முறையில் உறுப்பினர்களது பேச்சு அமைதல் கூடாது. 118

விவாதத்திலுள்ள பொருள்குறித்தே உறுப்பினர்கள் தம்பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டும். 268

39—43

தேர்தல், நன்றியுரை

பக்ருதீன் அலி அகமது, திரு. இந்திய குடியரசு தலைவர் (இ.தீ.) 64—78

தனித் தீர்மானங்கள்—

கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல். 288-322.

தாமரைக்கனி, திரு. இரா.— 377-379.

ஆளுநர் உரை (தீ) 15

திருநாவுக்கரசு, திரு. எஸ்.— 37—38

தேர்தல், துணைத்தலைவர்

தேர்தல், நன்றியுரை

128/31—4

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

**தலைவர்—தொடர்ச்சி.**
தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.
விவாதம்—தொடர்ச்சி.

**தீர்மானங்கள்—**
ஆளுநர் உரை, நன்றி தெரிவித்தல் 91–198, 353-354
ஆலைகள் கோவையில் மூடிக்கிடப்பது குறித்து (ஒ.தீ.) 255
செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு (ஒ.தீ.) 235-251
பள்ளிகளும், கல்லூரிகளும், மாணவர்களது கிளர்ச்சி காரணமாக மூடப் பெறுவது. (ஒ.தீ.) 254
புதுக்கல்லூரி (சென்னை) மூடப்பெற்றது குறித்து (ஒ.தீ.) 333-353
மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் விடுவதில் தாமதமும் வ்வசாயிகள் பாதிப்பும் (ஒ.தீ.) 251-254

**துரை முருகன், திரு.—**
புதுக்கல்லூரி (சென்னை) மூடப்பெற்றது குறித்து (ஒ.தீ.) 335-338

**தேர்தல்—**
தலைவர் 13—14
துணைத்தலைவர் 15
தேர்தல், பாராட்டுரைகள் 15—37

ந

**நடராசன், திரு. ஆ.—**
ஆளுநர் உரை (தீ) 187-191

**நல்லதம்பி, திரு. தீ. சு.—**
ஆளுநர் உரை (தீ) 445-450

**நாராயணசாமி முதலியார், திரு. கே.—**
கடன் நிவாரண சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1977 88,89, 256-257, 277-280, 282-283, 287-288



ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

175-177

**நீக்கம்—**

**நீர்ப்பாசனம்—**
காவிரி நீர் கர்நாடக முதல்வருடன் தமிழக முதல்வர் நடத்திய பேச்சு வார்த்தை (அ) 329-333

ப

**பாலகிருஷ்ணன், திரு. சோ.—** 169-172
ஆளுநர் உரை (தீ)

**புஷ்பராஜு, திரு. த.—** 450-452
ஆளுநர் உரை (தீ)

**பெரியசாமி, திரு. டி. பி. மு.—**
கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 276-277
சந்திராரெட்டி திரு. பி., இரத்தினசாமி, திரு. எம். (இ.தீ.) 60-61
பக்ருதீன் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) 74-75

ம

**மணிமாறன், திரு. மா.—** 353—354
ஆளுநர் உரை (தீ)

**மருதாசலம், திரு. கே.—** 150—151
ஆளுநர் உரை (தீ)

**மனோகரன், திரு. கி.—** 234
அண்ணா நாளிதழ் மீது (உ.பி)
சந்திராரெட்டி, திரு. பி., இரத்தினசாமி, திரு. எம். (இ.தீ.) 50—52

ம—தொடர்ச்சி.

பக்கங்கள்


**மனோகரன், திரு. கி.—தொடர்ச்சி.**

- பக்ருதீன் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) 64—67
- பொன்னப்ப நாடார் (திரு.ரா.) (இ.தீ.) .. 221—222
- குடியரசுத் தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து (ஒ.பி.) .. .. 44, 45 46, 49
- கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (தீ) .. .. .. 312
- பேரவைத்தலைவர், துணைத் தலைவர் தேர்தல் பாராட்டுரைகள் .. .. .. 15—18

**மார்க்கபந்து, திரு. ரா.—**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. 163—168
- கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 258—265
- கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த: தீ.) .. .. 306—303
- சந்திராரெட்டி, திரு.பி., இரத்தினசாமி, திரு.எம். (இ.தீ.) 60—61
- பக்ருதீன் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) 74
- பேரவைத்தலைவர், துணைத் தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. 28—29

**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—**

- ஆளுநர் உரை (தீ) 356—358
- கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. 261—263
- காவிரிநீர் பிரச்னை குறித்து கர்நாடக முதல்வருடன் தமிழக முதல்வர் நடத்திய பேச்சு வார்த்தை (அ) .. 330




பக்கங்கள்

ம-தொடர்ச்சி


**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—தொடர்ச்சி**

- குடியரசுத்தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து (ஒ.பி.) .. .. .. .. 48
- கூட்டுறவு வங்கிகள், உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) .. .. .. .. 291—295
- சந்திராரெட்டி, திரு. பி. இரத்தினசாமி. திரு. எம் (இ.தீ.) .. .. .. .. .. 56—57
- செங்குன்றம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு (ஒ. தீ.) .. .. .. .. 249
- பக்ருதீன் அலி அகமது. திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ. தீ) .. .. .. .. 68—70
- பேரவைத் தலைவர், துணைத்தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. .. 20—22
- பொன்னைப்ப நாடார், திரு. ரா. (இ.தீ.) .. 224—225
- மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதில் தாமதமும், விவசாயிகள் பாதிப்பும் (ஒ. தீ.) 252—253

**முத்தையா திரு. இரா.—**

- ஆளுநர் உரை (தீ) 125—130


ர


**ரகுமான்கான் திரு. அ.**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 358—359, 409—416, 423

**ரசாக் திரு. எம். எம். ஏ.—**

- ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 424—426

**ரமணி திரு. கு.—**

- ஆளுநர் உரை, (தீ) .. .. .. .. 130—135

ர—தொடர்ச்சி


பக்கங்கள்

ராமசாமி திரு. எஸ். ஜே.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. 119—121

ராமசாமி திரு. து.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. 427—433

ராமநாதன், திரு. சி.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. 452—454

ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் திரு.
ஆளுநர் உரை (தீ) .. .. .. 121—125

ல

லத்தீப் திரு. எம். ஏ.—
கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1977 269—272, 279
கூட்டுறவு வங்கிகள். உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த. தீ.) .. 303—306
சந்திராரெட்டி திரு. பி. இரத்தினசாமி திரு. எம். (இ.தீ.) .. .. 61—64
பக்ருதீன் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) .. 75—78
புதுக்கல்லூரி (சென்னை) மூடப்பெற்றது குறித்து (ஒ. தீ.) .. .. .. .. 338—341, 349—350
பேரவைத் தலைவர், துணைத்தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. 30—33
பொன்னப்ப நாடார், திரு. ரா. (இ.தீ.) 230—232
பொன்னப்பநாடார் (திரு. ரா.) மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்படாதது குறித்து (ஒ. பி.) .. .. .. 86—87





பக்கங்கள்

வ

வடிவேலு, திரு. கே.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 191—198

வரதராஜன் திரு. என்.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 355—356
கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. 263—267

விஜயராகவன் திரு. பொ.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 439—445

வெளி நடப்பு—
பொன்னப்ப நாடார் (திரு. ரா.) மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்படாதது (ஜனதா, தி. மு. க.) .. .. .. 84—85

வேலுச்சாமி திரு. ஒ. சோ.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 179—181

ஜ

ஜெகதீசன் ஆனூர் திரு.—
ஆளுநர் உரை (தீ) .. .. .. .. 433—436

ஜெபமணி திரு. ர.—
பொன்னப்ப நாடார், திரு. ரா. (இ.தீ.) .. 226—227

பக்கங்கள்

ஜ—தொடர்ச்சி

**ஜேம்ஸ் திரு. ஜே.—**

| | |
|---|---|
| கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977. .. .. .. | 260—261 |
| குடியரசுத் தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து (ஒ. பி.) .. .. .. .. | 46 |
| சந்திராரெட்டி, திரு. பி., இரத்தினசாமி திரு. எம். (இ.தீ) .. .. .. .. | 58—59 |
| பக்ருதீன் அலி அகமது, திரு. இந்தியக் குடியரசுத் தலைவர் (இ.தீ.) .. .. .. .. | 71—73 |
| பேரவைத் தலைவர், துணைத்தலைவர் தேர்தல், பாராட்டுரைகள் .. .. .. | 24—26 |
| பொன்னப்ப நாடார் (திரு. ரா.) மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்படாதது குறித்து (ஒ. பி.) .. .. .. .. | 82—84 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் ஆறாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்.

**திங்கட்கிழமை, 1977, ஜூலை 4.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்*) மாண்புமிகு உறுப்பினர்களே, அண்மையில் நடைபெற்ற ஆறாவது பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களாக வந்திருக்கும் உங்கள் அனைவரையும் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

மக்களின் பிரதிநிதிகளாய் அவர்களுக்காகக் கடமையாற்ற பெரும் பொறுப்பினையேற்று இங்கு நாம் வந்துள்ளோம். இதனைக் கருத்திற்கொண்டு பேரவையில் பணியாற்ற வேண்டுவது நமது கடமையாகும்.

பேரவைத் தலைவரை இப்பேரவை தேர்ந்தெடுக்கிற வரையில் செய்ய வேண்டிய முன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கென என்னை இப்பேரவையின் தற்காலிகத் தலைவராக ஆளுநர் அவர்கள் நியமித்தமைக்கு அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 12 ஆம் பக்கத்திலுள்ள இணைப்பைப் பார்க்கவும்.

(தற்காலிகப் பேரவைத் தலைவர்) [ஜூலை 4, 1977

உறுப்பினர்களாகிய நாம் இப்பேரவையின் அலுவல்களை ஏற்று நடத்துவதற்கு முன், அரசியலமைப்புச் சட்டப்படி அதற்குரிய உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை நிறைவேற்றவும் ஆளுநர் அவர்கள் என்னை நியமித்துள்ளார்.

முதலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அடுத்து அவை முன்னவர் அவர்களையும், பின்னர் மற்ற அமைச்சர்களையும், பிற கட்சித் தலைவர்களையும், முன்னாள் பேரவைத் தலைவரையும், முன்னாள் அமைச்சர்களையும், மற்ற உறுப்பினர்களை அவர்களின் பெயர்களின் தமிழ் அகர வரிசைப்படியும் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்வதற்கென சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அழைப்பார். அவ்வாறு அழைக்கப் பெறும் உறுப்பினர்கள் ஒவ்வொருவராக வந்து, தங்கள் தேர்விற்கான சான்றிதழைச் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் கொடுக்க வேண்டும்.

உறுதிமொழி பொறிந்துள்ள இதழில் "உளமார உறுதி கூறுகின்றேன்" அல்லது "கடவுளறிய உறுதி கூறுகின்றேன்" என்று உள்ளது. அவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. இதில் அவரவர்கள் விரும்பும் ஏதாவதொரு முறையை ஏற்று அவர்கள் விரும்பும் மொழியில் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு, அவ்வுறுதிமொழி படிவத்தில் கையொப்பமிட்டு செயலாளரிடம் கொடுத்துவிட்டு, அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டிலும் கையொப்பம் இடுதல் வேண்டும்.

உறுதிமொழி எடுக்கும் சடங்கு புனிதமானது. எனவே, இது முறையாக நிறைவேறும்வரை எல்லா உறுப்பினர்களும் பேரவையில் அமைதியாக அமர்ந்து இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது மாண்புமிகு அமைச்சர்களைத் தவிர மற்ற உறுப்பினர்களுக்குப் பேரவையில் உட்காருவதற்குத் தனி இடம் ஒதுக்கப்படவில்லை. அண்மையில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கின்ற பேரவைத் தலைவர், பேரவை விதிகளின்படி உறுப்பினர்களுக்குத் தனி இடம் ஒதுக்கித் தருவார்கள்.



ஜூலை 4, 1977] (தற்காலிகப் பேரவைத் தலைவர்)

நாளை மறுநாள் பேரவைத் தலைவர், பேரவை துணைத் தலைவர் தேர்தல்கள் இப்பேரவையில் நடைபெறும். அதற்கான வேட்புத் தாள்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சட்டமன்றப் பேரவை விதிகளின்படி பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலில் கலந்து கொள்பவர்களும், அவர்களின் பெயர்களை முன்மொழிபவர்களும் அதை வழிமொழிபவர்களும் உறுதிமொழி எடுத்திருக்க வேண்டும்.

இப்போது செயலாளர் உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்கென உறுப்பினர்களை அவர்களது பெயர்களைச் சொல்லி அழைப்பார்.

[பின்னர் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்கள்.]

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள் :—

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.
2. மாண்புமிகு திரு. இ. மனோகரன்.
3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்.
4. மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்.
5. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.
6. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து.
7. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
8. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.
9. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி.
10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு
11. திரு. மு. கருணாநிதி.
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
13. திரு. என். சங்கரய்யா.
14. * திரு. ஜே. ஜோன்ஸ்.
15. திரு. சோ. அழகர்சாமி.
16. திரு. ரா. மார்க்கபந்து.

(தற்காலிகப் பேரவைத் தலைவர்) [ஜூலை 4, 1977

உறுப்பினர்களாகிய நாம் இப்பேரவையின் அலுவல்களை ஏற்று நடத்துவதற்கு முன், அரசியலமைப்புச் சட்டப்படி அதற்குரிய உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை நிறைவேற்றவும் ஆளுநர் அவர்கள் என்னை நியமித்துள்ளார்.

முதலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அடுத்து அவை முன்னவர் அவர்களையும், பின்னர் மற்ற அமைச்சர்களையும், பிற கட்சித் தலைவர்களையும், முன்னாள் பேரவைத் தலைவரையும், முன்னாள் அமைச்சர்களையும், மற்ற உறுப்பினர்களை அவர்களின் பெயர்களின் தமிழ் அகர வரிசைப்படியும் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்வதற்கென சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அழைப்பார். அவ்வாறு அழைக்கப் பெறும் உறுப்பினர்கள் ஒவ்வொருவராக வந்து, தங்கள் தேர்விற்கான சான்றிதழைச் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் கொடுக்க வேண்டும்.

உறுதிமொழி பொறிந்துள்ள இதழில் "உளமாற உறுதி கூறுகின்றேன்" அல்லது "கடவுளறிய உறுதி கூறுகின்றேன்" என்று உள்ளது. அவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. இதில் அவரவர்கள் விரும்பும் ஏதாவதொரு முறையை ஏற்று அவர்கள் விரும்பும் மொழியில் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு, அவ்வுறுதிமொழி படிவத்தில் கையொப்பமிட்டு செயலாளரிடம் கொடுத்துவிட்டு, இங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டிலும் கையொப்பம் இடுதல் வேண்டும்.

உறுதிமொழி எடுக்கும் சடங்கு புனிதமானது. எனவே, இது முறையாக நிறைவேறும்வரை எல்லா உறுப்பினர்களும் பேரவையில் அமைதியாக அமர்ந்து இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது மாண்புமிகு அமைச்சர்களைத் தவிர மற்ற உறுப்பினர்களுக்குப் பேரவையில் உட்காருவதற்குத் தனி இடம் ஒதுக்கப்படவில்லை. அண்மையில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கின்ற பேரவைத் தலைவர், பேரவை விதிகளின்படி உறுப்பினர்களுக்குத் தனி இடம் ஒதுக்கித் தருவார்கள்.



ஜூலை 4, 1977] (தற்காலிகப் பேரவைத் தலைவர்)

நாளை மறுநாள் பேரவைத் தலைவர், பேரவை துணைத் தலைவர் தேர்தல்கள் இப்பேரவையில் நடைபெறும். அதற்கான வேட்புத் தாள்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சட்டமன்றப் பேரவை விதிகளின்படி பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலில் கலந்து கொள்பவர்களும், அவர்களின் பெயர்களை முன்மொழிபவர்களும் அதை வழிமொழிபவர்களும் உறுதிமொழி எடுத்திருக்க வேண்டும்.

இப்போது செயலாளர் உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்கென உறுப்பினர்களை அவர்களது பெயர்களைச் சொல்லி அழைப்பார்.

[பின்னர் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்கள்.]

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள் :—

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.
2. மாண்புமிகு திரு. இ. மனோகரன்.
3. மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்.
4. மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்.
5. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.
6. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து.
7. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
8. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.
9. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி.
10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.
11. திரு. மு. கருணாநிதி.
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
13. திரு. என். சங்கரய்யா.
14. * திரு. ஜே. ஜோர்ஸ்.
15. திரு. சோ. அழகர்சாமி.
16. திரு. ரா. மார்க்கபந்து.

17. புலவர் கா. கோவிந்தன்.
18. திரு. க. அன்பழகன்.
19. திரு. ப. உ. சண்முகம்.
20. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
21. திரு. எம். அண்ணாமலை.
22. திரு. கே. எம். அப்துல் ரஜாக்
23. திரு. கி. அப்துல் லத்தீப்.
24. * திரு. எம். ஏ. லத்தீப்.
25. * திரு. கா. அப்புனு கவுண்டர்.
26. திரு. இரா. அமிர்த ராஜ்.
27. திரு. மு. அம்பிகாபதி.
28. திரு. ரா. அய்யாசாமி.
29. திரு. அ. க. அரங்கநாதன்.
30. திரு. மு. அரங்கநாதன்.
31 திரு. இரா. அருணாசலம்.
32. திரு. வீ. அர்சுணன்.
33. திரு. தி. அன்பழகன்.
34. * திரு. மெ. ஆண்டி அம்பலம்.
35. * திரு. இரா. ஆதிசுவாமி.
36. திரு. த. ஆறுமுகம்.
37. திரு எச். ஜி. ஆறுமுகம்.
38. திரு. இல. ஆறுமுகம்.
39. * திரு. மு. ஆறுமுகம்.
40. திரு. இரெ. இராசமாணிக்கம்.
41. திரு. ஆ. இராசரத்தினம்.
42. திரு. எஸ். ஆர். இராதா.
43. திரு. க. ந. க. இராமசாமி.
44. திரு. எஸ். ஜே. இராமசாமி.
45. திரு. எஸ். வி. இராமசாமி.



46. திரு. டி. இராமசாமி.
47. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.
48. திரு. என். இராமச்சந்திரன்.
49. ‡ திரு. என். இராமச்சந்திர ரெட்டி.
50. திரு. செ. இராமலிங்கம்.
51. * திரு. தெ. இரா. இராஜாராம் நாயுடு.
52. திரு. கோ. இளங்கோவன்.
53. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்.
54. திரு. க. உக்கிரபாண்டியன்.
55. திரு. கே. உச்சி.
56. திரு. பொ. உத்திராபதி.
57. திரு. ரா. உமாநாத்.
58. திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்.
59. திரு. கி. எத்ராஜ்.
60. * திரு. ஏகாம்பர ரெட்டி.
61. திரு. ஐசரி வேலன்.
62. திரு. இ. கணேசன்.
63. திரு. எஸ். கணேசன்.
64. திரு. ம. கண்ணன்.
65. திரு. க. கந்தசாமி.
66. திரு. கா. வே. கந்தசாமி.
67. திரு. டி. கே. கபாலி.
68. * திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
69. * திரு. க. கருணைகிரி முத்தையா.
70. திரு. தாழை மு. கருணாநிதி.
71. திரு. வெ. கருணாமூர்த்தி.
72. திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்.
73. திரு. துரை கலியமூர்த்தி.
74. திரு. கி. பெ. காத்தமுத்து.

75. திரு. பொ. காளியப்பன்.
76. திரு. ஆர். காளியப்பன்.
77. திரு. என். கிட்டப்பா.
78. திரு. ப. கோ. கிட்டு.
79. * திரு. பி. எம். கிருஷ்ணன்.
80. திரு. செ. கிருஷ்ணன்.
81. * திரு. நா. கிருஷ்ணன்.
82. திரு. பீ. கிருஷ்ணன்.
83. திரு. ரா. கிருஷ்ணன்.
84. திரு. என். குப்புசாமி.
85. திரு. ப. குருசாமி.
86. திரு. வி. கே. கோதண்டராமன்.
87. திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்.
88. திரு. போ. கோபாலன்.
89. திரு. பி. கோவிந்தராசன்.
90. திரு. மு. பொ. கோவேந்தன்.
91. திரு. கா. ந. சண்முகம்.
92. திரு. ஆர். சண்முகம்.
93. கூத்தகுடி திரு. ச. சண்முகம்.
94. * திரு. செ. சதாசிவம்.
95. திரு. ஆர். சந்திரசேகரன்.
96. திரு. ப. சந்திரன்.
97. * திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்.
98. டாக்டர் கே. சமரசம்.
99. * திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்.
100. திரு. கோ. சாது செல்வராஜ்.
101. * திரு. தா. சாமிக்கண்ணு.
102. திரு. பொ. சிகாமணி.
103. திரு. செ. சிவசாமி.



104. திரு. மு. சிவபெருமாள்.
105. திரு. வ. சின்னசாமி.
106. திரு. வி. கொ. சின்னசாமி.
107. * திரு. வீ. சின்னய்யா.
108. திரு. க. இரா. சின்னராசு.
109. * திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார்.
110. திரு. ப. சுந்தரம்.
111. * திரு. மு. சுந்தரம்.
112. திரு. மு. சுந்தரராஜன்.
113. * திரு. நா. சுந்தரராஜ்.
114. திரு. என். சுப்பராயன்.
115. * திரு. கே. ஜே. சுப்பிரமணியம்.
116. திரு. மா. சுப்பிரமணியன்.
117. * திரு. ஓ. சுப்பிரமணியன்.
118. திரு. ஆர். சி. சுப்பிரமணியம்.
119. * திரு. டி. சுப்பிரமணியம்.
120. திரு. வ. மு. சுப்பிரமணியன்.
121. திரு. கா. சுப்பிரவேலு.
122. திரு. க. சுப்பு.
123. திருமதி சுப்புலட்சுமி.
124. திரு. ச. சுப்பையா.
125. * திரு. எ. சுவாமிதாஸ்.
126. திரு. கா. செங்கோடன்.
127. திரு. கு. அ. செங்கோட்டையன்.
128. திரு. அ. செல்லப்பா.
129. திரு. அ. செல்வராசன்.
130. திரு. சீனி. செல்லராஜ்.
131. திரு. மு. செல்வராஜ்.
132. திரு. கெ. சொக்கலிங்கம்.

[ஜூலை 4, 1977

133. திரு. ஒ. ப. சோமசுந்தரம்.
134. திரு. கே. சௌந்திரராசன்.
135. திரு. மு. ரா. சௌந்திரராஜன்.
136. திரு. ஆர். சௌந்திரராஜன்.
137. திரு. தே. ஞானசிகாமணி.
138. * திரு. பொ. தங்கவேலு கவுண்டர்.
139. திரு. ர. ச. தங்கவேல்.
140. திரு. ரா. க. சு. தண்டபாணி.
141. திரு. இ. தமிழரசன்.
142. திரு. ந. தனசேகரன்.
143. திரு. ப. தனபால்.
144. * திரு. கோ. தனுஷ்கோடி.
145. திரு. இரா. தாமரைக்கனி.
146. திரு. சு. திருநாவுக்கரசு.
147. திரு. பி. எஸ். திருவேங்கடம்.
148. திரு. துரை கோவிந்தராசன்.
149. திரு. ப. துரைசாமி.
150. திரு. துரை முத்துசாமி.
151. திரு. துரை முருகன்.
152. திரு. சு. ம. துரைராஜ்.
153. திரு. வ. துலுக்காணம்.
154. திரு. டி. எம். தைலப்பன்.
155. திரு. அ. நடராசன்.
156. திரு. எஸ். நடராசன்.
157. திரு. இ. சு. நல்லதம்பி.
158. திரு. க. நாச்சிமுத்து.
159. திரு. கொ. பொ. நாச்சிமுத்து கவுண்டர்.
160. * திரு. ரா. நாராயணன்.
161. திரு. செ. பட்டாபிராமன்.



ஜூலை 4, 1977]

162. திரு. கே. பண்ணை சேதுராம்.
163. திரு. அ. மா. பரமசிவன்.
164. திரு. மொ. பரமசிவம்.
165. * திரு. சு. பழனிச்சாமி.
166. * திரு. சொ. ந. பழனிச்சாமி.
167. திரு. சி. பழனிமுத்து.
168. * திரு. அ. ப. பழனியப்பன்.
169. திரு. நா. பழனிவேல்.
170. திரு. பாண்டியன்.
171. * திரு. சோ. பாலகிருஷ்ணன்.
172. திரு. வெ. பாலகுருவா ரெட்டியார்.
173. திரு. சு. பாலன்.
174. திரு. க. பாலாஜி.
175. திரு. அ. பாலுச்சாமி.
176. திரு. து. புருஷோத்தமன்.
177. * திரு. த. புஸ்பராஜு.
178. திரு. எம். பெரியசாமி.
179. * திரு. ரா. பெரியசாமி.
180. * திரு. டி. பி. மு. பெரியசாமி.
181. * திரு. என். பெருமாள்.
182. திரு. ரா. கு. பெருமாள்.
183. டாக்டர் ஏ. பொன்னுசாமி.
184. திரு. ப. பொன்னுரங்கம்.
185. திரு. மா. மணிமாறன்.
186. திரு. ஆர். மணிமாறன்.
187. திரு. எஸ். மணிமுடி.
188. திரு. கே. மருதாசலம்.
189. திரு. சி. மாணிக்கம்.
190. திரு. மா. மீனாட்சிசுந்தரம்.

[ஜூலை 4, 1977

191. * திரு. பா. க. சி. முத்துசாமி.
192 திரு. சு. முத்துசாமி.
193. * திரு. சு. முத்துசாமி கரையாளர்.
194. திரு. இரா. முத்தையா.
195. திரு. கூ. ச. முருகேசன்.
196. திரு. பொ. முனிசாமி.
197. திரு. எஸ். முனிரத்தினம்.
198. திரு. முனு ஆதி.
199. திரு. யா. சை. யூசுப்.
200. திரு. ஏ. ரகுமான்கான்.
201. திரு. வி. ரகுராமன்.
202. திரு. கோ. ரகோத்தமன்.
203. திரு. கு. ரமணி.
204. திரு. எம். எம். ஏ. ரசாக்.
205. * திரு. கோ. ராமசாமி.
206. திரு. பி. ராமதாஸ்.
207. திரு. சி. ராமநாதன்.
208. திரு. இ. ராமலிங்கம்.
209. * திரு. ராஜ்குமார் ரா. விஜயரெகுநாத தொண்டமான்.
210. திரு. செ. மெ. ராஜு.
211. * திரு. வி. கே. ராஜு.
212. திரு. என். லட்சுமிநாராயணன்.
213. திரு. கே. வடிவேலு.
214. திரு. என். வரதராஜன்.
215. திரு. சௌ. வே. வரதராஜன்.
216. திரு. சீ. மு. வாசன்.
217. திரு. மி. வின்சென்ட்.
218. * திரு. பொ. விஜயராகவன்.
219. திரு. பி. வேங்கா கவுண்டர்.
220. திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு.



ஜூலை 4, 1977]

221. திரு. ஆ. வெள்ளைச்சாமி.
222. திரு. த. வேணுகோபால்.
223. * திரு. ஓ. சோ. வேலுச்சாமி.
224. திரு. ஆனூர் ஜகதீசன்.
225. * திரு. மு. ஜான் வின்சென்ட்.
226. * திரு. ர. ஜெபமணி.
227. திரு. வே. இரா. ஜெயராமன்.
228. திரு. எம். ஏ. ஜெயவேலு.
229. திரு. க. அரங்கசாமி.
230. திரு. சு. பாக்கூர் சுப்பிரமணியம்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) : யாரேனும் உறுப்பினர் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டியவர்கள் அவையில் இருந்தால் இப்போது வந்து எடுத்துக்கொள்ளலாம்.

இத்துடன் உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் நிகழ்ச்சி முடிவடைகின்றது.

இன்று உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் எனது அறையிலோ அல்லது நாளை மறுநாள் இந்த அவையிலோ உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம். உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் பேரவைத் தலைவர்/துணைத் தலைவர் தேர்தலில் கலந்துகொள்ள முடியாது என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

நாளை பேரவைக் கூட்டம் இல்லை.

இந்த அவை இன்று இத்துடன் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஜூலைத் திங்கள் 6 ஆம் தேதி புதன்கிழமை அன்று காலை 9.00 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.35 மணி அளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

2. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் : இல்லை.

---

* கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

† ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

## இணைப்பு.

(*) 1 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

தற்காலிகப் பேரவைத் தலைவராக நியமிக்கப் பெற்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர், மாண்புமிகு திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் ஆளுநர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.



---

புதன்கிழமை, 1977 ஜூலை 6.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: (திரு. பி. கே. மூக்கையாத் தேவர்). இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். மதுராந்தகம் தொகுதி உறுப்பினர் திரு. சி. ஆறுமுகம் நேற்று காலை எனது அறையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். அரசியலமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் அவையில் அமரக் கூடாது.

(புதிதாக யாரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளவில்லை.)

### (1) பேரவைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: பேரவையின் அடுத்த அலுவல் அரசியலமைப்பின் 178 ஆவது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். அப்பதவிக்கு வேட்பாளரின் வேட்புத் தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை விதிகளின் 4 (4) விதியின்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பட்டவர்கள், முன்மொழிந்தவர்கள், அதை வழிமொழிந்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்—

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. முனு ஆதி.

முன்மொழிந்தவர்—மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

வழிமொழிந்தவர்—மாண்புமிகு திரு. கி. மனோகரன்.

**இரண்டாவது மனு :—**

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. முனு ஆதி.

முன்மொழிந்தவர்—திரு. ரா. மார்க்கபந்து.

வழிமொழிந்தவர்—திரு. பி. சந்திரன்.

ஆக, ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால் நான் திரு. முனு ஆதி அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (ஆரவாரம்).

இத்துடன் என்னுடைய அலுவல் இனிது முடிவடைகிறது. இப்போது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. முனு ஆதி அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களை பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் இருக்கையில் அமரு வதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று, அவர்கள் அமர்ந்த பின் எல்லோரும் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

அவை முன்னவர் மாண்புமிகு திரு. கி. மனோகரன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்களும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள். (ஆரவாரம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** (மாண்புமிகு திரு. முனு ஆதி) இந்த மன்றத்தின் சம்பிரதாயப்படி துணைத் தலைவர் தேர்தலை நடத்திவிட்டு, பின்னால் பாராட்டுரைகளை வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு, இப்போது துணைத் தலைவர் தேர்தலை நடத்தலாம் என்று எண்ணுகிறேன். அதற்கு முன்னால் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து என்னை இந்தப் பேரவைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு என் நன்றி கலந்த வணக்கத்தை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, இப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். இந்தச் சபையின் மரபைக் காப்பாற்று வதற்கு எல்லா உறுப்பினர்களும் துணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





## 2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்தபடியாக, பேரவைக்கான துணைத் தலைவர் தேர்தல். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. பேரவையின் 5 (2) விதியின்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப் பேரவைக்கு அறிவிக்கின்றேன். அவர்கள் விவரம் வருமாறு :—

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. எஸ். திருநாவுக்கரசு.

முன்மொழிந்தவர்—மாண்புமிகு திரு. கா. காளிமுத்து.

வழி மொழிந்தவர்—மாண்புமிகு திரு. பெ. சௌந்தர பாண்டியன்.

**இரண்டாவது மனு—**

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. எஸ். திருநாவுக்கரசு.

முன்மொழிந்தவர்—திரு. பாண்டியன்.

வழி மொழிந்தவர்—திரு. கே. எம். அப்துல் ரசாக்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால் நான் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் இந்தப் பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

முதலில் இந்த அவையின் முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பாராட்டிப் பேசுவார்.

பின்னர், இரங்கல் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படும். இப் போது அவை முன்னவர் அவர்கள் பேசுவார்கள்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. பேரவைத் தலைவருக்கும், பேரவைத் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாமன்றத்தின் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் தலைவராக ஏகமனதாகத் தாங்கள் தேர்ந்தெடுத்திருப்பதை மகிழ்ச்சியோடு நான் வரவேற்கிறேன்

என்பது மட்டுமல்லாமல் சுமுகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்த எதிர்கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும் நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிக்க பொறுப்பு வாய்ந்த ஒரு பதவியில் தாங்கள் உட்கார்த்தி வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. 1962-லிருந்து கடந்த அவை முடிகிற காலம்வரை தாங்கள் இங்கே உறுப்பினராக இருந்து நல்ல அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றிருக்கிறீர்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஒரு மாமன்றத் தலைவருக்கு என்னென்ன தகுதிகள் தேவையோ அந்தத் தகுதிகளையெல்லாம் தாங்கள் பெற்றிருப்பதாக எல்லோரும் நம்பத் தகுந்த அளவுக்கு உங்கள் நடவடிக்கைகள் நிச்சயமாக அமையும் என்பதில் எனக்குத் துளிக் கூடச் சந்தேகம் இல்லை

குறிப்பாக, மாமன்றத் தலைவருக்கு என்று சில பண்புகள் உண்டு. அந்தப் பண்புகளில் மிக முக்கியமானவைகளில் ஒன்று, பாரபட்சமற்ற முறையில் எதிர்க்கட்சி, ஆட்சிக்கட்சி என்ற பேதமின்றி எல்லோரையும் அரவணைத்துச் செல்லுகின்ற பண்பு ஒரு மாமன்றத் தலைவருக்கு நிச்சயம் இருந்தாக வேண்டும். இந்தப் பொறுப்பில் தாங்கள் கடமை தவறாமல் காரியமாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரு முறை மாமன்றத் தலைவராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் நீங்கள் கட்சிக்கு அப்பாற்பட்ட முறையில் பணியாற்றுவீர்கள் என்பதையும் அதன்படி மறக்காமல் செயலாற்றுவீர்கள் என்பதையும் நான் மனதார நம்புகிறேன்.

இந்த நேரத்தில் சபையின் கவனத்திற்கு நான் 1925-ஆம் ஆண்டு திரு. வி. ஜே. பட்டேல் அவர்கள் சபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது குறிப்பிட்ட ஒரு உண்மையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

> "From this moment, I cease to be a party man. I belong to no party. I belong to all parties. I belong to all of you. I hope and trust that my hon. Friend, the Leader of the Swaraj Party, will take immediate steps to absolve me from all the obligations of a Swarajist Member of this House."





(முற்பகல் 9-10)

சுயராஜ்ய கட்சியின் மிக முக்கியமான உறுப்பினராக இருந்து சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர்கள் தெரிவித்த கருத்தைத்தான் உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்; சில சந்தர்ப்பங்களில், நெருக்கடியான சில நேரங்களில், கொந்தளிக்கின்ற கடலில் நீச்சலடிக்கின்ற நிலைமை உங்களுக்கு ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் பொறுப்புணர்ச்சியுடனும், அமைதியுடனும் நீங்கள் சபையை நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது.

சபாநாயகர் பதவி என்பது மலர்ப்படுக்கை என்பதும் அது ஒரு முட்படுக்கை என்பதும்—அது மலர்ப்படுக்கையாவதும், முட்படுக்கையாவதும் இங்கே பணியாற்றுகின்ற உறுப்பினர்களைப் பொறுத்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு இருக்கிற மகிழ்ச்சி—இங்கே எதிர்வரிசையில் அமர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, தேசீய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் சரி, மெத்தப் பொறுப்புணர்ச்சியோடு காரியமாற்றுவார்கள் என்பதில் எனக்குப் பரிபூரணமான நம்பிக்கை இருக்கிறது. கடந்த ஒன்பது ஆண்டுக் காலமாக—இந்தச் சபையில் ஏழாண்டுக் காலம் முதலமைச்சராகப் பணியாற்றி, அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலே இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தன்னை இணைத்துக் கொண்ட திரு. கருணாநிதி அவர்கள் இங்கே எதிர்க்கட்சி வரிசையில் இருப்பது ஆரோக்கியமான அரசியலுக்கு நிச்சயமாக உதவும் என்று நான் நம்புகிறேன். காழ்ப்புணர்ச்சியும், கோபதாபங்களும் அற்ற நிலையில் சபையை நடத்திச் செல்வதற்கு நிச்சயம் அவர்களது உதவி இருக்குமென்று நான் நம்புகிறேன். அதேபோல் மற்றைய கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும் உதவுவார்கள் என்பதிலே எனக்கு நம்பிக்கையுண்டு.

தயவு செய்து ஒன்றை மட்டும் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் நமது விவாதங்களில் தேவையற்ற, மரபுக்கு அப்பாற்பட்ட, முறையற்ற, தனிப்பட்ட மனிதர்களைப் பற்றிக் குறை கூறுகின்ற, அவமானப்படுத்துகின்ற 'blackmailing' 'போன்றவைகளை' 'character assassination' போன்றவைகளை எந்த அளவுக்குத் தடுத்து, எந்த அளவுக்கு

[திரு. கி. மனோகரன்] [1977 ஜூலை 6

விடுத்து, எந்த அளவுக்கு முற்றிலும் ஒழித்து, தமிழக
மக்களுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய
பணியில் இந்த மாமன்றம் உதவும் வகையில் நீங்கள் எல்லோ
ருக்கும் அறிவுரை கூறி, அணைத்துச் செல்ல வேண்டுமென்று
உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இன்றிலிருந்து கட்சிக்கு அப்பாற்
பட்டவர்கள் என்று நான் குறிப்பிட்டேன். அந்த மாபையும்
நீங்கள் காப்பாற்றி அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, நீங்கள் சபாநாயகராக இருக்கின்ற
காலம் வரை ஒரு அருமையான எடுத்துக்காட்டாக அமர்ந்து
பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையை நீங்கள் எல்லோருக்கும்
உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, சபாநாயகர்
பொறுப்பிலிருந்து வழுவினார், ஒரு தனிப்பட்ட கட்சிக்குத் துணை
நின்றார், சபாநாயகர் ஆட்சிக் கட்சிக்குத் துணை நின்றார் என்ற
குறை இல்லாமல், அதே நேரத்தில் எந்தக் காரணத்தைக்
கொண்டும் எதிர்க்கட்சியினரை சபாநாயகர் உதாசீனம் செய்தார்
என்ற அவச்சொல்லை வாங்காமல், பண்போடு நீங்கள் நடந்து
கொள்வீர்கள் என்று சொல்லி நீங்கள் வாழ்க என்று வாழ்த்தி,
உங்கள் பணிகள் வெல்க என்று கூறுகிறேன்.

துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அருமை
நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் உங்களுக்கு உற்று உதவுகின்ற
நண்பராக நிச்சயம் நீங்கள் கடைப்பிடிக்கின்ற நேர்மையான வழி
அவரும் செல்வார் என்று நம்பி எனது இதயபூர்வமான வாழ்த்
துக்களை, எனது கட்சியின் சார்பாகவும், முதலமைச்சர் அவர்
களின் சார்பாகவும், இந்த மாமன்றத்தில் தெரிவித்து அவரையும்
வாழ்க, வெல்க என்று கூறி விடை பெற்றுக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** பேரவையின் தலைவர் அவர்களே,
இந்தப் பேரவையில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள
தங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக
வரவேற்று, வாழ்த்தி பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்
கிறேன். அதைப் போலவே, துணைத் தலைவராகத் தேர்ந்
தெடுக்கப்பட்டிருக்கிற இளம் நண்பர் திருநாவுக்கரசு அவர்
களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வாழ்த்தி,
வரவேற்று, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1977 ஜூலை 6] [திரு. மு. கருணாநிதி]

இந்தப் பேரவையினுடைய மாண்புகளும், மரபுகளும் தாங்கள்
அறியாதது அல்ல. 1962 ஆம் ஆண்டு முதல் இந்தப் பேரவையிலே
தாங்கள் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று ஆழ்ந்த
அனுபவத்தையும் ஆற்றலையும் பெற்றுத் திகழ்கின்றீர்கள். நீங்கள்
அமர்ந்திருக்கும் இந்த நாற்காலி சரித்திரத்தைப் புரட்டிப்
பார்த்தால் 1922 ஆம் ஆண்டு வெல்லிங்டன் பிரபுவும், வெல்லிங்டன்
சீமாட்டியும் சென்னை மாநகரத்திலே அமர்ந்து, சென்னை மாகாண
சட்டப் பேரவைக்கு—அப்போது கவுன்சில் என்று இதற்குப்
பெயர்—வழங்கிய, ஆடம்பரமான, அலங்காரமான நாற்காலி
யாகும். ஒருவேளை அந்த நாற்காலிதான் இப்போது இருக்
கிறதோ, இல்லையோ—அது எனக்குத் தெரியாது. அந்த
நாற்காலியை 1922 ஆம் ஆண்டு வெல்லிங்டன் பிரபுவும்
அவருடைய துணைவியாரும் பரிசாக வழங்கினார்கள். அப்படி
வழங்கிய நேரத்தில் வெல்லிங்டன் பிரபு குறிப்பிட்டார்—'இந்த
மாமன்றம் 1921 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.
பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபுகளைப் பின்பற்றி நடைபெற்று
வருகிறது என்பதை அறிய மெத்த மகிழ்ச்சியடைகிறேன்' என்று
வெல்லிங்டன் பிரபு குறிப்பிட்டு இந்த நாற்காலியை அப்போது
பரிசாக வழங்கினார்கள் என்று சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

அப்பேர்ப்பட்ட, பெருமை மிகுந்த, நீண்டகால வரலாற்றுப்
புகழ் வாய்ந்த ஒரு நாற்காலியில் தாங்கள் இன்றைக்கு அமர்த்தப்
பட்டிருக்கிறீர்கள். இந்த நாற்காலியை கடந்த காலத்தில் பல
சான்றோர்களும், பல ஆன்றோர்களும், பல மேதைகளும் அலங்
கரித்திருக்கிறார்கள். இந்த நாற்காலியில் அமர்ந்தவர்கள் அமைச்
சர்களாக ஆனதும் உண்டு; அமைச்சர்களாக இருந்தவர்கள்
இந்த நாற்காலியில் அமர்ந்ததும் உண்டு. தங்கள் நிலை என்னவோ
எனக்குத் தெரியாது. எனினும் தாங்கள் மேலும் பல
பொறுப்புக்களை ஏற்றிட வேண்டுமென்ற அவாவினைத் தெரிவித்து,
இந்த மன்றத்திலே உங்களை வாழ்த்தி, வரவேற்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அவையின் முன்னவர் திரு. மனோகரன் அவர்கள் இங்கே
எடுத்துக் காட்டியதுபோல் ஆளும் கட்சிக்கும் எதிர்கட்சிக்கும்
சம நிலையில் தாங்கள் தீர்ப்புக்களை வழங்குவீர்கள் என்றும்
இரு கட்சிகளையும் சமமாக நடத்துவீர்கள் என்றும்

[திரு. மு. கருணாநிதி] [1977 ஜூலை 6

நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு. ஏனென்றால் தங்கள் கடந்த கால சட்டமன்ற வாழ்க்கையில் அடிக்கடி சபாநாயக ரிடத்தில் தகராறு செய்பவர்கள் தாங்களாகவேதான் இருந்திருக்கி றீர்கள். அவைகளில் நியாயமான கோரிக்கைகள் இருந்திருக்கும் அல்லது சபாநாயகரால் வேறுவிதமாகத் தீர்ப்பளிக்கப்பட்ட கோரிக்கைகளும் இருந்திருக்கும். ஆனாலும் அதேநேரத்தில் சபாநாயகருக்கு அடங்கிச் செல்லும் பெருந்தன்மையையும் உங்களிடத்தில் நாங்கள் பல நேரங்களில் கண்டிருக்கிறோம். அந்தப் பெருந்தன்மை இன்றைக்கு நீங்கள் அமர்ந்திருக்கின்ற இருக்கைக்கு மேலும் புகழ் சேர்ப்பதாக அமையும் என்று கருது கிறேன். ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமாக—உங்க ளுடைய பெயரே முனு ஆதி; முனுவை ஆளும் கட்சிக்கும் ஆதியை எதிர்க்கட்சிக்கும் தாங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும். ஆதியில் இருந்த கட்சி அல்லவா? அப்படிப் பகிர்ந்தளிப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பிடில் வாசிக்கின்றபோது அதிலுள்ள வில்லைப்போன்று—இந்தப் பக்கம் இழுத்தால் ஒரு நாதம் வரும். அந்தப் பக்கம் இழுத்தால் இன்னொரு நாதம் கிளம்பும், அதேபோல் ஆளும் கட்சிப் பக்கம் இழுத்தாலும், எதிர்க்கட்சிப் பக்கம் இழுத்தாலும் இனிய நாதம் கிளம்பவேண்டு மென்று கேட்டுக் கொள்வேன்.

(முற்பகல் 9.20)

இந்தச் சட்டமன்றத்தை அப்படி நீங்கள் நடத்துவதற்கு எதிர்க் கட்சியின் சார்பில் குறிப்பாக அவை முன்னவர் அவர்கள் குறிப் பிட்டதுபோல், திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படும், எங்களுடைய ஒத்துழைப்பு என்றென்றும் உங்களுக்கு இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். துணைத் தலைவரைப் பொறுத்த வரையில் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்தப் பதவியை எதிர்க் கட்சிக்கு வழங்க முன்வந்தார்கள். அந்த முறை இப்போது கடைப்பிடிக்கப்படவில்லை. அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை. இந்த மாமன்றத்திற்கு ஒருமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிற தங்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வரவேற்றுப் பாராட்டி மகிழ்ந்து அமர்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டது பற்றி என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டு தல்களையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக



1977 ஜூலை 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் துணைத்
தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மதிப்பிற்குரிய திரு.
திருநாவுக்கரசு அவர்களுக்கும் எங்கள் இந்திய தேசிய காங்கிரஸ்
கட்சியின் சார்பாகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

இந்த அவையில் தாங்கள் பல ஆண்டுகளாக உறுப்பினராக
இருந்து நல்ல அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். முன்னால் பேசிய
அவை முன்னவர் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்
குறிப்பிட்டதைப்போல் நீங்கள் கட்சி சார்பற்ற முறையில் இந்த
அவையை நடத்தி, இந்த அவைக்குரிய கௌரவத்தைக்
காப்பாற்றுவீர்கள் என்பதிலே எங்களுக்கு நிச்சயமாக நம்பிக்கை
உண்டு. கடந்த காலத்தில் இந்த அவையின் தலைவர்களாகப்
பல பெரியவர்கள் இருந்து நல்ல பல மரபுகளைக் கடைப்பிடித்து
வந்திருக்கிறார்கள். அந்த மரபுகளைத் தாங்கள் ஏற்று, இந்த
அவையின் பண்புகளையும் மரபுகளையும் காப்பாற்றுவீர்கள்
என்று நான் நம்புகிறேன்.

இந்த அவையில் புதிதாக பல உறுப்பினர்கள் வந்திருக்
கின்றார்கள். முன்னால் அனுபவம் பெற்ற உறுப்பினர்களும்
வந்திருக்கிறார்கள். சில சமயங்களிலே அவைத் தலைவர்
அவர்கள் கோபமாகப் பேசவேண்டிய சந்தர்ப்பமும் வரும்.
தங்களைப்பற்றி இங்கே குறிப்பிடுகிறபோது, அடிக்கடி தங்களுக்குக்
கோபம் வருமே அப்படிக் கோபம் வருவதை விட்டுவிட
வேண்டுமே என்ற கருத்தையெல்லாம் தெரிவித்தார்கள். நீங்கள்
இப்போது எந்த இடத்திலே இருக்கிறீர்கள் என்றால் கோபம்
இல்லாமல் இருக்கவேண்டிய ஒரு இடத்தில் அமர்ந்திருக்
கிறீர்கள். ஒரு சமயம் தவறிப்போய் ஒரு உறுப்பினர் உணர்ச்சி
வசப்பட்டுக் கோபமாகப் பேசினால் அதற்குப் பதிலாகத்
தாங்களும் உணர்ச்சி வசப்பட்டுவிடாமல் உறுப்பினர்களை
அரவணைத்துப் போகவேண்டிய முறையைக் கடைப்பிடிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். சில குணநலன்கள் ஒருவரிடம்
நீடித்து இருந்தால் சீக்கிரம் போவது கடினம், எனவே
கோபத்தை விடுவது தங்களுக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்
தாலும், தாங்கள் தங்களுடைய சேம்பரிலிருந்து அவைக்கு
வருவதற்கு முன்னால் எப்படிப்பட்ட நிலை அவையில் வந்தாலும்

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1977 ஜூலை 6

கோபம் வராமல் பார்த்துக்கொள்வேன் என்று உறுதியெடுத்துக்
கொண்டு 10 நாட்களுக்கு அவைக்கு வருவீர்களானால் பிறகு
அந்தக் கோபம் போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

இந்த அவையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளுங்
கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் நடத்திச்
சென்று இந்த அவையின் மரபையும் பண்பையும் காப்பதற்கு
நாங்கள் இந்திய தேசீயக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக
முழுமையான ஒத்துழைப்பைத் தருவோம் என்று தெரிவித்துக்
கொண்டு, இந்த அவையினுடைய துணைத் தலைவராகத் தேர்ந்து
எடுக்கப்பெற்றிருக்கிற திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும்
என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து அமர்கிறேன்
வணக்கம்.

* **திரு. என். சங்கரய்யா :** சட்டமன்றப் பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையினால் தாங்கள் ஒரு
மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலும் என் சார்பிலும் எங்களது இதயப்பூர்வ
மான வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்
கொள்கிறேன். அதேபோல் சட்டமன்றப் பேரவைத் துணைத்
தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கும்
திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலே எங்களுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுதல்
களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்
கூடிய தாங்கள் நீண்டகாலம் இந்தப் பேரவையில் உறுப்
பினராகப் பணியாற்றி வந்திருக்கிறீர்கள் என்பதைத் தமிழகம்
நன்கு அறியும். அது மட்டுமல்ல; தாங்கள் உறுப்பினராக
இருந்த கட்சியிலே மிகத் தீவிரமாகப் பணியாற்றி வந்திருக்
கிறீர்கள். அப்படிப் பணியாற்றிய தாங்கள் இன்றைக்கு
இந்தச் சட்டமன்றப் பேரவையின் தலைவர் பொறுப்புக்கு வந்து
இருக்கிறீர்கள். இந்தச் சட்ட மன்றத்திலே ஏற்படுகிற போராட்
டங்களுக்கு நடுநிலைமை வகித்து நிதானமாக சகல தரப்
பினருக்கும் நியாயம் வழங்கக்கூடிய பொறுப்பு என்பது
ஆரம்பத்திலே சற்று சிரமமாகத்தான் இருக்கும். இருந்த



1977 ஜூலை 6] [திரு. என். சங்கரய்யா]

போதிலும் இந்த மன்றத்திலே பல்வேறு பொறுப்புகளை வகித்து
அனுபவம் பெற்றவர்களின் கருத்துக்களையும் இந்த அவையின்
தலைவராக இருந்த பல பெரியவர்கள் காட்டியிருக்கின்ற நல்ல
வழிமுறைகளையும் கடைப்பிடித்து மிகச் சிறப்பான முறையிலே
இந்தப் பேரவையை நடத்திச் செல்வீர்கள் என்று நான் உறுதி
யாக நம்புகிறேன். இங்கே பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய பெரிய
கட்சியாக இருந்தாலும், சிறிய கட்சியாக இருந்தாலும் அதைக்
கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், அவர்கள் சொல்லக்கூடிய
கருத்துக்களின் தன்மைகளைப் புரிந்து அதற்கு முக்கியத்துவம்
கொடுத்து நீங்கள் நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்தச் சபையினுடைய முன்னவர் அவர்கள் குறிப்பிட்
டதைப் போன்று சபையினுடைய தலைவராகப் பொறுப்பேற்ற
உடனே அவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவரல்ல, எல்லாக் கட்சி
களுக்கும் அப்பாற்பட்டவராக ஆகிவிடுகிறார். ஆகவே, அந்த
முறையிலே தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களுக்கும் சேவை
செய்வதற்காக இங்கே வந்து சேவை செய்வதற்குத் தாங்கள்
உறுதுணை புரிவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

இந்த நேரத்திலே ஒன்றே ஒன்றை மட்டும் நான் கூற விரும்பு
கிறேன். இந்தப் பேரவையை எப்படி நடத்திச் செல்வது
என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகள் சமுதா
யத்தில் உள்ள மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்
தான் இருக்கின்றனவே தவிர, விதிமுறைகளுக்காக நாம் இருக்க
வில்லை. சமுதாயத்தில் உள்ள மக்களுடைய பிரச்சினைகளைத்
தீர்ப்பதுபற்றிய கருத்துக்களை எடுத்துச் சொல்கிறபோது
தமிழகத்தின் மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து விவாதிக்கிற
பொது அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அது எவ்வளவு
சிரமமாக இருந்தாலும் மக்களின் நலன் கருதி இப்படிப்பட்ட
பிரச்சினைகளை அவையிலே வெளியிடுவதற்குத் தாங்கள் அனுமதி
யளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையிலே பேரவையின் நட
வடிக்கைகளைத் தமிழிலேயே நடத்தக்கூடிய முறையில் நாம்
வெற்றி கண்ட மாநிலமாக இருக்கிறோம். இனி வருங்காலத்
திலேயும் எல்லாக் குழுக்களின் நடவடிக்கைகளையும் தமிழிலேயே

[திரு. என். சங்கரய்யா] [1977 ஜூலை 6]

சிறப்பாக நடத்தமுடியும் என்பதற்கு வழிவகை செய்து தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தாங்கள் பாடுபடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்ற திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் எங்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, தங்களுக்கும், துணைத் தலைவருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒத்துழைப்பைக் கொடுத்து, இந்த மாமன்றத்திலே நாங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்கிற நேரத்திலே அவை களைத் தாங்கள் ஆக்கப் பூர்வமாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டசபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற உங்களை ஜனதா கட்சியின் சார்பிலே பாராட்டி வரவேற்கிறேன். அதோடு இந்தச் சட்டப் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களையும் பாராட்டி வரவேற்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு முன்பாக பல எதிர்க்கட்சித் தலைவர்கள் உங்களுக்கு அறிவுரைகள் கூறியிருக்கிறார்கள். அதே போன்று பல கோரிக்கைகளையும் முதல் கட்டத்திலேயே வைத் திருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே ஒன்றிரண்டு காரியங் களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்ட சபையைப் பொறுத்தமட்டில் நல்ல மரபுகளைக் கடைப்பிடித்து இந்த நாட் டிற்கு வழிகாட்டி இதுவரையிலும் செயல்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள்.

(முற்பகல் 9-30)

உங்களைப் பொறுத்தமட்டில் பல்வேறு துறைகளில் நீங்கள் அனுபவம் மிக்க ஒரு அங்கத்தினராக இருந்திருக்கின்றீர்கள் என்பதை நான் இங்கே எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. 1962-ஆம் ஆண்டு முதல் இந்த மன்றத்தில் ஒரு அங்கத்தினராக ஆளுங்கட்சியில் சில காலம், எதிர்க்கட்சியில் சில காலம் இருந்து இருக்கின்ற காரணத்தினால் ஆளுங்கட்சியில் இருக்கின்ற அங்கத் தினர்களுக்கு என்ன தேவை என்பதையும், அதேபோன்று



1977 ஜூலை 6] [திரு. ஜே. ஜேம்ஸ்]

எதிர்க்கட்சியில் இருக்கின்ற அங்கத்தினர்களுக்கு என்ன என்ன தேவைப்படுகிறது, அவர்களது உரிமைகள் எந்த அளவிற்குப் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களுக்கு சபாநாயகர் என்ற முறையில் எப்படி நீதி வழங்க வேண்டுமென்பதையும் நன்றாக நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

கடைசியில் நீங்கள் எதிர் வரிசையில் இருந்தபொழுது என்னுடைய சீட்டிற்கு அருகாமையில் இருந்தீர்கள் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அந்த நாட்களிலே எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்காக எந்த அளவிற்கு நீங்கள் பாடுபட்டீர்கள் என்பதையெல்லாம் நான் மறக்கவில்லை. ஆகவே, நீங்கள் சபாநாயகராக இருக்கின்ற பொழுது எந்த அளவிற்கு எதிர்க்கட்சியில் இருக்கின்ற அங்கத் தினர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக் கிறீர்கள் என்பதை நான் கூறாமலேயே நீங்கள் நன்றாக அறிவீர் கள். எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்திலே கூறு வதைப் போல, 'The Ruling Party has its way. The Opposition has its say', எங்களுக்கு இருக்கின்ற ஒரே உரிமை, எங்கள் குறைகளை, எங்கள் உரிமைகளை, எங்கள் தேவைகளை, அதோடு ஆளுகின்ற கட்சியில் ஏற்படுகின்ற சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் உரிமைதான் எங்களுக்கு இருக்கிறது. அவைகளைச் சுட்டிக் காட்டும் உரிமைகளை நீங்கள் எங்களுக்கு அளித்தாக வேண்டும். அதை அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஏனென்றால் நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபொழுது எதையும் தெரிந்து தைரியமாகச் சொன்னீர்கள் என்பதை நன்றாக அறிவோம். ஆகவே, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கின்றபொழுது, இந்த மாமன்றத்தின் சபாநாயகராக மட்டுமல்ல, எதிர்க்கட்சியில் இருக்கின்ற எங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற காவலராக நீங்கள் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவேளை நீங்கள் எண்ணலாம், சட்டம் படித்த ஒரு அங்கத்தினராக இருந்தால் இன்னும் திறமையாகச் செயலாற்ற முடியுமே என்று உங்களுக்கு ஐயப் பாடு தேவை இல்லை என்று எடுத்துக் காட்டும் முறையில் இதற்குமுன்பு இந்த மன்றத்தில் சிறப்பாகச் செயலாற்றிய சில

தலைவர்கள் சட்டப் படிப்பு இல்லாத தலைவர்கள் இருந்தார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். சுருக்கமாக, குறிப்பாகக் கூற வேண்டுமென்றால் இதற்கு முன்னால் இருந்த திரு. புலவர் கோவிந்தன் அவர்களும், அதற்கு முன்னதாக இருந்த திரு. மதியழகன் அவர்களும், அதற்கு முன்பாகச் சிறப்பாகப் பெயர் பெற்ற திரு. யு. கிருஷ்ணாராவ் அவர்களும் சட்டப்படிப்பு இல்லாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் சட்டப்படிப்பு இல்லாமல் இருந்தபொழுதும்கூட எந்த அளவிற்குச் சிறப்பாகப் பெயர் எடுத்தார்களோ அதைப்போல நீங்கள் பெயர் எடுக்க நிச்சயமாக வாய்ப்பிருக்கிறது, பெயர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களுடைய உரிமைகளை எந்த அளவிற்குக் காக்கின்றீர்களோ அப்பொழுதுதான் உங்களுக்குச் சிறப்பான பெயர் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது மாமன்றத்தில் ஒரு மரபு இருக்கிறது. இதற்கு முன் இருந்தவர்கள் வழங்கிய தீர்ப்புகளைக் கையாளும் ஒரு மரபிருக்கிறது. சாதாரணமாக திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் வழங்கிய தீர்ப்புகளை யெல்லாம் நாம் இங்கே எடுத்து ஒரு ரூலிங்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்று முதல், இனிமேல் வருகின்ற சபாநாயகர்கள் எல்லாம் பயன்படுத்தும் வகையில், திரு. முனு ஆதி அவர்களின் தீர்ப்பு என்று கூறுகின்ற முறையில் வருகின்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கூறி மீண்டும் உங்களை வாழ்த்தி அமைகின்றேன்.

* **திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பேரவைக்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள தங்களுக்கும், துணைத் தலைவரவர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்று இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற அவர்களுக்கு உதவியாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் தங்களைச் சேர்ந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். எனக்கு முன் பேசிய தலைவர்கள் கூறியதைப்போல இந்த

1977 ஜூலை 6] [திரு. சோ. அழகர்சாமி]

மாமன்றத்தில் இதற்குமுன் பல மிகப்பெரிய தலைவர்கள் எல்லாம் அந்த ஆசனத்திலே இருந்து பெரிய சிறந்த பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். நான் கேள்விப்பட்ட மட்டும் இதற்கு முன் இருந்த நம்முடைய மதிப்பிற்குரிய பேரவைத் தலைவராக இருந்த திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் அனைவராலும் பாராட்டப் பெற்று, ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல், அது முதலமைச்சராக இருந்தாலும் அல்லது வேறு உறுப்பினர்களாக இருந்தாலும் ஒரேமாதிரியான நிலையிலே பாவித்து அவர்கள் பணியாற்றினார்கள் என்பதை நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அந்தமாதிரியே இந்த அவையில் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்களும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் 1962-ஆம் ஆண்டு முதல் இந்தச் சபையில் உறுப்பினராக இருந்திருக்கின்றீர்கள். ஆளுங்கட்சி சார்பிலும் கடமையாற்றி இருக்கின்றீர்கள். எதிர்க்கட்சி சார்பிலும் சிறந்த முறையில் பணியாற்றி இருக்கின்றீர்கள். ஆகவே, எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பையும், அவர்கள் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்வதற்கும், தங்கள் கருத்துக்களைக் கூறுவதற்கும் அதிக உதவியைத் தங்களிடத்தில் இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதுவும் எதிர்க்கட்சியிலே இருக்கும் எண்ணிக்கையிலே குறைந்த கட்சியாக இருந்தால் சொல்ல வேண்டிய விஷயங்களை எவ்வளவு தூரம் சொல்ல முடியும் என்ற ஒரு நிலை தங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அந்த முறையிலே இந்தச் சபையிலே இருக்கின்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்யவும், நாங்கள் எங்கள் பகுதி மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கவும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்னால் கூறிய தலைவர்கள் கூறியதைப்போன்று, தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கட்சிச் சார்பு என்ற முறையை நீக்கி பொதுவான நிலையை அடைந்திருக்கின்றீர்கள். அந்த வகையில் எங்களுக்குப் பாதுகாப்பாக இருந்து எங்கள் கடமைகளை ஆற்ற உதவியாக இருப்பீர்கள் என்று எண்ணி, எங்கள் கட்சியின் பூரணமான ஒத்துழைப்பும் கூறி மீண்டும் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

[1977 ஜூலை 6

* திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இந்த மாமன்றத்தினுடைய அங்கத்தினர்கள் அனைவருக்கும் உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பிலே என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று இந்த மாமன்றத்தினுடைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற தலைவரவர்கள் இந்தப் பொறுப்பை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிபீடம் ஏறியிருக்கின்ற காலத்திலே இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்றீர்கள். இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற தாங்கள் செவ்வனே, திறம்பட, மற்ற மாநிலங்களெல்லாம் பாராட்டுகின்ற வகையிலே சிறப்பான முறையில் நடந்து, இந்தத் தமிழகத்தினுடைய பெருமையைக் கூட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

அதேநேரத்திலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன். தலைவரவர்களே, அருமைச் சகோதரர் அழகர்சாமி அவர்கள் சொல்லும்பொழுது எங்களைப் போன்ற சிறிய கட்சிகள் என்று சொன்னார்கள். நாங்கள் சிறிய கட்சிகளாக இருக்கும்பொழுது, எங்களுடைய எண்ணிக்கையிலே சிறிய கட்சிகளாக இருக்கும் பொழுது எங்களுடைய கருத்துக்களைச் சொல்லும் பொழுது முழுமையாகச் சொல்ல முடியாத சில நிலைமைகள் ஏற்படலாம். அந்த நேரங்களிலே தலைவரவர்கள் எங்களுக்குக் கைகொடுத்து உதவும் வகையிலே, எங்கள் கருத்துக்களை முழுமையாகச் சொல்லும் வகையிலே எங்களுக்கு உதவிகரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே எண்ணிக்கையிலே குறைவாக இருக்கின்ற கட்சிகள் சொல்லுகின்ற கருத்துக்களுக்கும் அதிகமாக முக்கியத்துவம் தருகின்ற முறையிலே இருந்துவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே கட்சி பெரியதா, சிறியதா என்று இல்லாமல் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். எண்ணிக்கையிலே சிறிய கட்சி என்று சொல்வதைப்போல கங்காருவைப் பற்றிச் சொல்வார்கள். ஒரு தாய் தனது குழந்தையை எப்படிப் பாதுகாக்கிறது என்று சொல்வார்கள். அதைப்போல பெரிய கட்சிகளாக இருப்பவர்கள் சிறிய கட்சிகளுக்குப் பாதுகாப்பு தரும் வகையிலும் இந்தச் சபை அமைய வேண்டும் என்று தெரிவித்துக்



1977 ஜூலை 6] [திரு. ரா. மார்க்கபந்து]

கொள்கின்றேன். உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் என்றும் நாங்கள் ஒத்துழைப்போம் என்று கூறி எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு. க. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே; இந்திய தேசிய ஃபார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக கட்சி பேதமின்றி தாங்களும், துணைத் தலைவரவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டமைக்காக மகிழ்ச்சியையும், பாராட்டு தலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களைப் பற்றிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர்களும், ஆளுங்கட்சித் தலைவர்களும் பல கருத்துக்களைத் தெளிவாகச் சொன்னார்கள். புயலின் சின்னமாகக் கடந்த சட்டமன்றத் தொடர்கூட்டத்திலே நடந்த தாங்கள் இன்று அமைதியின் பிரதிபலிப்பாக அமர்ந்திருப்பதைக் காணும்பொழுது நான் நிச்சயம் உங்கள் சார்பாக அவர்களுக்குத் தங்களது கடமைகளை மிக அமைதியோடு, பொறுப்புணர்ச்சியோடு ஆற்றுவீர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9-40).

சட்டமன்றத்தின் கூட்டங்கள் நடைபெறுகின்ற காலத்தில் பல நேரங்களில் ஆத்திரம் அளிக்கக்கூடிய சூழ்நிலை இருந்ததையும் அந்த நேரங்களிலே அன்று ஆரம்பிக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய தாங்கள் எவ்வளவு விரைவாகவும் ஆத்திரத்தோடும் வேகத்தோடும் செயல்பட்டிருக் கிறீர்கள் என்பதையும் உணர்ந்த மாமன்ற உறுப்பினர்கள்தான் தாங்கள் இப்போதும் அந்த ஆத்திரத்திற்கு ஆளாகி விடுவீர்களோ என்ற ஐயத்தைக் கிளப்பி அப்படிச் செயல்படமாட்டீர்கள் என்ற உறுதியையும் கூறினார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் இந்தத் தமிழகத்தின் சட்ட மரபுகளையும், இந்த மாமன்றத்தின் கடந்தகால வரலாற்றையும் நன்கு அறிந்த தாங்கள் யாரோடும் சேராமல் நடுநிலை கோணாமல் இங்கே தீர்ப்பு வழங்குவீர்கள் என்பதில் சந்தேகம் இல்லையென்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு கட்சியின் சார்பாகவும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பெற்ற பல குழந்தைகள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள்.

[திரு. க. கந்தசாமி] [1977 ஜூலை 6

தாய் வலிமையுள்ள சில குழந்தைகளிருந்தாலும் அவைகளில் எளிய அல்லது வலுவில்லாத குழந்தை இருக்கிறபொழுது அந்தத் தாயினுடைய அதிகபட்ச அன்பும் ஆதரவும் அரவணைப்பும் அந்த வலுவிழந்த குழந்தைக்குப் போவதை நாம் உணர்ந்திருக்கிறோம். அந்த அளவிற்கு எண்ணிக்கையில் பலமில்லாதிருந்தாலும் எங்களைப் போன்ற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூறுகின்ற நல்ல கருத்தைத் தாங்கள் ஏற்று, அதற்காக அதிக நேரம் ஒதுக்குவதோடு மாத்திரமல்லாமல், உரிய நேரத்தையும் நல்க வேண்டுமென்று சிறிய கட்சிகளின் சார்பாக நானும் எனது கருத்தைக் கூறிக்கொள்கிறேன். அந்த அளவிற்கு எதிர்காலத்தில் நல்ல முறையில் நமது சபையின் நடவடிக்கைகள் இருக்கும் என்றும், நல்லபல காரியங்களை ஏழை எளிய மக்களுக்கு, இன்று புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசு செய்வதற்கு உறுதுணையாக இருப்போம் என்றும் கூறி, அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இன்று அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற வகையில் நல்ல முறையில் போட்டியில்லாமல், தாங்களும் துணைத் தலைவரவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நான் மகிழ்ச்சியையும் வரவேற்பையும் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் பேரவைத் தலைவராகவும் இந்த மன்றத்ினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேரவையினுடைய துணைத் தலைவராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதையடுத்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நான் தங்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பேரவைத் தலைவருடைய கடமைகளைப் பற்றியும் அவர் சந்திக்க இருக்கின்ற பிரச்னைகளைப் பற்றியும் அந்தப் பிரச்னைகளை அவர்கள் எப்படியெல்லாம் சந்திக்க வேண்டும், சமாளிக்க வேண்டும் என்பவைகளைப் பற்றியும் இங்கே பேசிய அவை முன்னவர் அவர்களும் மற்ற சக எதிர்க்கட்சித் தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்தப் பேரவையினுடைய நடவடிக்கைகளைச் செம்மையாக, சிறப்பாக, நடத்திச் செல்ல நீங்கள் தகுதி படைத்தவராக இருக்கிறீர்கள் என்பதை நன்றாக அறிகிறேன்.



1977 ஜூலை 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

1962-லேயிருந்து இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்த தாங்கள் பெரிய அனுபவங்களைப் பெற்றிருக்கிறீர்கள். கடந்த ஐந்தாவது சட்டமன்றத்தில் நானும் நீங்களும் சேர்ந்து பணியாற்றக் கூடிய வாய்ப்பினையும் பெற்றிருக்கிறோம். இந்த மன்றத்திற்குத்தான் நீங்கள் இன்றைக்குத் தலைமை வகிக்கிறீர்கள் என்பது அல்ல. தலைமை வகித்த பழக்கம் உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் நன்றாக அறிவேன். இந்த மன்றத்திற்கில்லாவிட்டாலும் ஒரு நகராட்சி மன்றத்திற்குத் தாங்கள் தலைமை வகித்து சிறப்பான இடத்தை, நகராட்சி மன்றத் தலைவர்கள் வரிசையில் பெற்றிருக்கிறீர்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆகையினால், நீங்கள் நகராட்சி மன்றத்தில் தலைமை வகித்து பெற்ற அனுபவங்கள் உங்களுக்கு இந்த மன்றத்தை நடத்திச் செல்ல உறுதுணையாக இருக்கும் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

சபாநாயகர் பொறுப்பு அவ்வளவு எளிதானதல்ல என்பதை இந்த மன்றத்து உறுப்பினர்கள் நாங்கள் எல்லோரும் நன்றாக உணர்ந்திருக்கிறோம். 'The Speaker' என்று சொல்லக்கூடிய அவர்தான் சபையிலே அதிகமாகப் பேசாதவர். ஸ்பீக்கர் என்பவர்—மற்றவர்களைப் பேச வைத்துவிட்டு, அதிகமாகப் பேசாமல் யார் இருக்கிறாரோ அவர்தான் சட்டமன்ற மரபுப்படி ஸ்பீக்கர் அல்லது சபாநாயகர் என்று சொல்லப்படுகிறார். "ஸ்பீக்கர்" என்ற வார்த்தை கூட மிகுந்த பொருள் பொதிந்த வார்த்தை என்பதை இந்த நேரத்தில் நான் எண்ணிப்பார்க்கிறேன். 'சபா' என்கின்ற அந்த சமஸ்கிருத வார்த்தையில் 'ஆ' என்றால் அழகு என்று பொருள். அந்த அழகு எல்லா இடத்திலும் இருக்கிறது. பாம்பினிடத்திலும் அழகு இருக்கிறது, பசுவினிடத்திலும் அழகு இருக்கிறது. ஆனால் 'பா', அந்த அழகு என்கின்ற வார்த்தை இரண்டு பொருளையும் தந்தாலும், 'சபா', சமன்படுத்தப்பட்ட அழகு, ஒழுங்குபடுத்தப்பட்ட அழகு, அழகுக்கே ஒரு ஒழுக்கத்தைத் தருகின்ற அழகு எந்த இடத்தில், எந்தக் கூட்டத்திலே ஏற்படுகின்றதோ, அந்தக் கூட்டம் தான் 'சபா' என்று சமஸ்கிருதத்திலே சொல்லப்படுகிறது. அப்படி ஒழுக்கம், நிதானம், நேர்மை என்கின்ற அத்தனை அம்சங்களும் இருக்கின்ற கூட்டத்தினுடைய, இந்த மன்றத்தினுடைய நாயகராக நீங்கள் வீற்றிருக்கிறீர்கள். இந்த மன்றத்திலே ஒழுக்கம் இருக்க வேண்டும், நேர்மை இருக்க

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 6

வேண்டும், நிதானம் இருக்க வேண்டும், நடுநிலைமை இருக்க வேண்டும். அப்படி இந்த மன்ற உறுப்பினர்களிடத்திலே இவைகளையெல்லாம் எதிர்பார்க்கின்ற தலைவர் முதன் முதலாக அவைகளையெல்லாம் கடைப்பிடிக்கக்கூடியவராக, யார் இருக்கின்றாரோ, அவர் தான் இந்த மன்றத்தினுடைய நாயகராக இருக்க வேண்டுமென்று சொல்வதற்காக, "சபாநாயகர்" என்று சொல்லப்படுகிறது என்று நான் கருதுகிறேன். தங்களிடத்தில் இந்தப் பண்புகள் எல்லாம் நிறைய இருக்கின்றன.

கடந்த காலத்தில், லத்தீப் எழுந்தால், நானும் எழுவேன் என்பதைப் போல், இப்பொழுது லத்தீப் எழுந்தால், எழ முடியாத இடத்தில் நாங்கள்—நீங்கள் இருக்கிறீர்கள். நிலைமை மாறியிருக்கிறது. உங்களுடைய நிலைமையும் மாறியிருக்கிறது, என்னுடைய நிலைமையும் மாறியிருக்கிறது. ஆகையால், இவைகளை யெல்லாம் மனதில் வைத்து நீங்கள் நடந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அதே சமயத்தில் முஸ்லீம் லீக் 10 இடத்தில் போட்டியிட்டு, துரதிருஷ்டவசமாக நான் ஒருவன்தான் இங்கே வந்திருக்கிறேன். ஒருவனாக இருக்கிறேன் என்பதற்காக, நேரத்தைக் குறைத்து விடாமல், இந்த நாட்டிலே, சிறுபான்மை சமுதாயத்தினுடைய ஏகப் பிரதிநிதியாக நான் ஒருவன்தான் வந்திருக்கிறேன் என்பதை நீங்கள் நினைவிலே வைத்து, உரிய முறையில், தேவையான நேரத்தை எனக்குக் கொடுத்தால் போதும். அந்த நேரத்தை தாங்கள் அளிப்பீர்கள் என்று நான் கருதுகிறேன்.

The Speaker is sitting on the seat of sobriety and impartiality and he has always got a sense of discretion which he is entitled to use but that discretion should be used not in favour of any Party or group or any individual Member but should be used always in favour of the Rules of the House and the conventions that have been evolved and established by his predecessors. Therefore I would request you, Mr. Speaker, Sir, that you must use your utmost sense of sobriety while occupying the highest seat, the seat of Speaker, and also your character should always be the character of impartiality. That only would deliver the goods both to the institution of the Speakership and also to the House.

என்று ஒரு பெரியவர் சொன்னதைப்போல், நீங்கள் நேர்மையாக இருக்க வேண்டும், நடுநிலையோடு இருக்க வேண்டும். அதே நேரத்தில்



1977 ஜூலை 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

The Speaker is sometimes expected to show some leniency towards the Executive because the Executive is the pivot around which legislative activities of the House revolve.

என்று சொல்வார்கள்.

Without their being an Executive, there cannot be a House. Therefore, the Speaker is sometimes expected to show some leniency, not deviating much towards the established norms and conduct of impartiality.

என்பதையும் மறந்துவிடாமல் தாங்கள் செயல்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, உங்களுக்கு என்னுடைய வாழ்த்தையும் தெரிவித்து, தாங்கள் இல்லாத நேரத்தில் இந்த அவையை நடத்திச் செல்லக்கூடிய பொறுப்பைப் பெற்றிருக்கிற இளைய நண்பர் இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில், உங்களுடைய காரியங்களில், உங்களுடைய கடமைகளில், நாம் ஒத்துழைப்போம், இந்த அவையினுடைய பெருமையை நாம் உயர்த்துவோம், அப்படி உயர்த்துவதற்கு நாங்கள் முயல்வோம், நீங்களும் எங்களோடு ஒத்துழைக்க முயலவேண்டும். நாம் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து இந்த அவையினுடைய சிறப்புக்களையும் பெருமையையும், மரபுகளையும் உயர்த்துவோம் என்பதை இந்த நேரத்தில் கூறுரையாக ஏற்று தங்கள் இருவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து அமர்கிறேன்.

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** வணக்கத்திற்குரிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை. எதிர்க்கட்சியாக இங்கே அமர்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களும், இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்களும், ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தேசிய ஃபார்வார்ட் பிளாக்கைச் சேர்ந்தவர்களும், ஃபார்வார்ட் பிளாக்கைச் சேர்ந்தவர்களும், ஒருமனதாக விட்டுக் கொடுத்துத் தேர்ந்தெடுத்திருக்கின்ற இந்த நல்ல நேரத்தில், நான் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன். [1977 ஜூலை 6

உங்களுக்கும் துணைத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் கூறிக்கொள்கிறேன். இதனை என்னுடைய எண்ணம் என்று மட்டும் எடுத்துக் கொள்ளாமல், இந்தச் சட்டப் பேரவையில் தங்களுக்கு வாழ்த்துக்களைக் கூறிய நண்பர்களுடைய எண்ணங்களோடு, எங்கள் கட்சியின் பிரதிநிதிகளாக வந்திருக்கிற உறுப்பினர்களின் எண்ணங்களோடு இணைத்துத் தெரிவித்துக் கொள்வதில் நான் உண்மையிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

சட்டப் பேரவைத் தலைவராகப் பொறுப்பு ஏற்பது என்பது எளிதான காரியம் அல்ல என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பாரபட்சமின்றி, விருப்புவெறுப்பின்றி, சாதிபேதம் பாராமல், மதத்திற்குள் நுழைந்து விடாமல், நீங்கள் தாமரை இலைத் தண்ணீர் போல இருந்து, உங்களுடைய கடமையை யாற்றி நேர்மைக்கு வழிகோலுவதற்கு நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள் என்பதை நான் கூறிக் கொள்ளத் தேவையில்லை என்று இருந்தாலும்கூட, அதை வற்புறுத்த வேண்டிய அவசியத்திலே நான் இருக்கிறேன் என்று கருதுகிறேன்.

ஒரு மாநிலத்தில் வழக்கு மன்றங்களிலே நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும்போது சட்டங்களை அடிப்படையாக வைத்து அவர்கள் தீர்ப்புக் கூற வேண்டியிருக்கிறது. அந்தச் சட்டங்களையே உருவாக்கித் தருகின்ற இந்தச் சட்டமன்றப் பேரவை எவ்வளவு மகத்தான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறதென்பதையும், அதற்குத் தலைமை தாங்குகின்ற உங்களுடைய முடிவு தமிழகத்து மக்களுக்கு எப்படிப்பட்ட உத்தரவாதத்தினைத் தரக்கூடிய பொறுப்பு மிக்க முடிவாக இருக்க வேண்டியுள்ளது என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்கத் தவற மாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப் போல, ஒரு கட்சியின் சார்பாக நின்று போட்டியிலே வெற்றி பெற்றாலும், ஒருசில பதவிகளை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள், கட்சிக்கு அப்பாற்பட்ட நடுநிலைமையோடு, இந்த மாநிலத்து அனைத்து மக்களுடைய பிரதிநிதிகளாகப் பணியாற்ற வேண்டும்;

1977 ஜூலை 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அதுதான் குறிப்பிடத்தக்க அறிவுரையாக இருக்க வேண்டும்; செயலாகவும் இருக்க வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் உங்களைப் பாராட்டும்போது, ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். "இங்கே போராட்டம் ஏற்படும்; தயவு செய்து நீங்கள் நடுநிலைமை வகித்துக் காப்பாற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். நான பணிவோடு தங்கள் மூலம் சொல்லிக் கொள்கிறேன், இது போராடும் அவை அல்ல; இது விவாத அமைப்பு உள்ள அவை; நாம் போராடுவதற்கு எவ்வளவோ இடங்கள், எத்தனையோ காரணங்கள் அவைக்கு வெளியே இருக்கலாம். அந்த வார்த்தையை அவர்கள் ஏன் குறிப்பிட்டார்கள் என்று நான் எண்ணும்போது, போராட வேண்டிய நிலையிலே இங்கே நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விடுமோ என்று அவர்கள் ஐயப்படுகிறார்களோ என்று நான் கருதுகிறேன். எங்களைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சியாக இருக்கின்ற நாங்கள் நிச்சயமாக அப்படிப்பட்டதொரு நிலைமையைத் தலைவர் அவர்களுக்கு உருவாக்க மாட்டோம் என்பதை உறுதியோடு கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாற்காலி, லார்டு வெல்லிங்டன் பிரபுவால் கொடுக்கப்பட்டது என்றும் அதுதானா இது என்று தனக்குத் தெரியவில்லை ஞாபகம் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர் கொடுத்த அதே நாற்காலிதான் இது என்று நான் கேள்விப்பட்டதை, இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவருக்கே உரித்தான பாணியிலே, ஒரு உதாரணத்தை இங்கே சொன்னார்கள். வயலின் வாசிக்கின்றவர்கள் வில்லைப் பயன்படுத்தும்போது, முன்னாலேயும் பின்னாலேயும் இழுக்கும்போது நாதம் கிளம்புவதுபோல உங்களுடைய தீர்ப்பு இருக்க வேண்டுமென்கிற நிலையில் அவர்கள் சொன்னார்கள். நான் அதோடு இன்னும் ஒன்றைச் சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் வில்லை இழுப்பதற்கு முன்னால் தந்திக் கம்பிகளை ஒழுங்காக சுருதி சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்; அது மட்டுமல்ல; நீங்கள் வில்லை இழுக்கும்போது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 6

எந்த இராகத்தை நீங்கள் வாசிக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதில் இருந்து சுரம் குறையாமல், வழி தவறிப் போகாமல், எடுத்த இராகத்துக்கொப்ப, இராகத்தைக் கலைக்காமல் வாசிப்பது போல, நீங்கள் உங்களுடைய கருத்தை வெளியிட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். (ஆரவாரம்).

இன்னொன்று கூற விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள், 'ஸ்பீக்கர்' என்பது பேசாமல் இருப்பவருக்குப் பெயராகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பெரும்பான்மையான தீர்ப்புகள், வாக்குகள் மூலம் எடுக்கப்பட்டாலும்கூட, அதை முடிவாக நீங்கள் சொன்னால்தான் அது முடிவாகிறதே தவிர, நாங்கள்—பெரும்பான்மையானவர்கள்—முடிவு எடுத்தாலும்கூட அது நிச்சயிக்கப்படுவதில்லை. ஆகவே, இதை முடிவாகச் சொல்வது நீங்கள் என்பதால்தான் அந்த 'ஸ்பீக்கர்' என்ற பெயர் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று நான் கருதுவது தவறில்லை என்று கருதுகிறேன்.

அப்படிப்பட்ட முடிவைச் செய்கின்ற நீங்கள், திரு. லத்தீப் அவர்கள் தராசு சின்னத்திலே நின்று வெற்றி பெற்றதைப்போல, நீங்களும் தராசு நிலையிலே இருந்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவையில் வருகின்ற பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சில கருத்துக்கள் மாறுபட்டு இங்கே சொல்லப்பட வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படலாம். "முஸ்லீம் சமுதாயத்தின் சார்பாக நான் ஒருவன்தான் வந்திருக்கிறேன்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த அமைச்சரே இருக்கிறார்; இன்னும், மூன்று இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இங்கே உறுப்பினர்களாக எங்கள் பக்கத்தில் வந்திருக்கிறார்கள் என்பதை நான் வற்புறுத்திக் கூறும்போது, ஒரு மதத்திற்கு, ஒரு சாதிக்கு, ஒரு வர்க்கத்துக்காக மட்டும் நாங்கள் பிரதிநிதிகளாக வரவில்லை என்பதையும் எல்லோருக்கும் பிரதிநிதிகளாக—மக்கள் அனைவருடைய எண்ணத்தின் பிரதிநிதிகளாக—நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் என்ற நிலையில் எங்களுடைய கடமையைச் செய்து, உங்களுக்கு ஒத்துழைப்புத் தருவோம் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

1977 ஜூலை 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இவைகள் அத்தனையையும் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டு இருப்பார்கள் என்று நம்பும்போது, நிச்சயமாக அவைகளைக் கடைப்பிடிக்கக்கூடிய வகையிலே அவர்கள் செயல்படுவார்கள் என்பதிலே எனக்கு நம்பிக்கை உண்டு; நீங்கள் அவர்களுக்கு உங்களுடைய பதவியின் தரத்தையும், திறமையையும், நடுநிலைமை—வரம்பு மீறாத கொள்கையையும், உங்கள் செயல்மூலம் காட்டி, அவர்களை உங்களுடைய இடத்திற்குக் கொண்டு வரக்கூடிய நிலையில் நீங்கள் அவர்களுக்கு வாய்ப்புத் தருவீர்கள்; அவர்களுக்கு நல்ல சிறப்பான அறிவுரைகளைக் கூறுகின்ற வகையில் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களுக்குப் பாராட்டுக் கூறி, எதிர் வரிசையில் இருக்கிற அனைவருக்கும் இந்த நேரத்தில், ஆளும் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில், அளிக்க வேண்டிய நம்பிக்கையைச் சொல்லிக் கொண்டு ஒன்றைக் கூறவேண்டியவனாக இருக்கிறேன்.

(முற்பகல் 10-00)

எங்களைப் பொறுத்தவரையில், அவைத் தலைவர் அவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் சஞ்சலமோ, சங்கடமோ, குழப்பமோ ஏற்படாத வகையில் ஒத்துழைப்பைத் தருவோம் என்று உங்கள் மூலமாக அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட மன்றப் பேரவை, இதற்குமுன் எப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏதாவது தவறான பாதையில் செல்லக் கூடிய சுற்றுச்சார்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, அவைகளை நினைவில் கொள்ளாமல், கெட்டதை மறந்து, நல்லதை நினைவில் வைத்து நாம் செயல்படுவதற்கு முன்னிற்கும்போது, திரு. புலவர் சாம்பமூர்த்தி, டாக்டர் யு. கிருஷ்ணாராவ் போன்றவர்களை நினைவில் கொண்டு, அவர்களைப் போல் நாம் செயல்படுவோம் என்ற உறுதியினை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களையும் உங்களுக்குத் துணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. திருநாவுக்கரசையும் வாழ்த்துக்கள் கூறி, பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. என். திருநாவுக்கரசு)**: வணக்கத்திற்குரிய சபையின் தலைவர் அவர்களே, இங்கே வாழ்த்துக்களை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர்

[பேரவைத் துணைத் தலைவர்]   [1977 ஜூலை 6

அவர்களே, ஆளுங்கட்சித் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்களே, அவையின் மாண்புமிகு உறுப்பினர்களே, நீங்கள் அனைவரும் என்னை ஏகமனதாகப் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் உங்களிடத்தில் கூறிக்கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே இந்த மாமன்றத்தின் துணைத் தலைவராக பொறுப்பில் இருந்தவர்கள் எனக்கு முன்னவர்களாக இருந்தவர்கள் ஆற்றியிருக்கிற பணிகளை, அவர்கள் கடைப்பிடித்திருக்கிற கடமை உணர்வு, கட்டுப்பாடு, கண்ணியம் ஆகியவற்றை நான் படித்தும், அனுபவம் பெற்றவர்களிடத்தில் கேட்டும் அறிந்திருக்கிறேன். அவர்கள் காத்த, கடைப்பிடித்த அந்த மரபுகளையும், கண்ணியமான உணர்வுகளையும், இந்தச் சபையின் பாரம்பரியத்திற்கு எவ்விதக் களங்கமும், கெட்ட பெயரும் ஏற்படாமல், பேரவைத் தலைவருக்குத் துணையாக இருந்து, இந்த மாமன்றத்தின் நல்ல பெயரைக் காப்பேன் என்கின்ற உறுதியை உங்களிடத்தில் கூறிக் கொள்கிறேன்.

எனக்கு இன்று உங்கள் வாழ்த்துக்களைத் தந்ததுபோல, வரும்நாட்களில் இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களும், அவை உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய அன்பையும், ஆதரவையும் கொடுத்து, அவை நடவடிக்கைகள் செம்மையாக நடைபெற, எந்தவித அரசியல் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் பாரபட்சமற்ற முறையில் நடுநிலையில் இருந்து நான் செயல்பட வாய்ப்புகளைத் தந்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேரவைத் துணைத்தலைவராக என்னை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து வாழ்த்தியமைக்கு மீண்டும் நன்றியைக் கூறி இத்தோடு என்னுடைய உரையை முடித்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி):** மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களே, சக எதிர்க்கட்சித் தலைவர்களே, அவை உறுப்பினர்களே, நீங்கள் அனைவரும் ஏகமனதாக என்னை இந்த மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு நான் மனமார மகிழ்ச்சி கொள்வதோடு, நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஜூலை 6] [பேரவைத் தலைவர்]

இந்த மன்றத்தினுடைய மரபையும், பண்பாட்டையும் முறையாகக் காப்பாற்ற வேண்டுமென்று நீங்கள் எல்லாம் எனக்கு அன்பு வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்கள். என்னுடைய பதினைந்து ஆண்டுக்கால அனுபவத்தில் நடைபெற்ற சிலபல நிகழ்ச்சிகளை வைத்து, இங்கே உறுப்பினர்கள் 'நமது அவையின் தலைவர் முன்கோபக்காரர், சத்தம் போட்டுப் பேசுவார்' என்றெல்லாம் என்னைப்பற்றிப் பேசினார்கள். நான் இன்றைக்கு இந்த இடத்தில் அமர்ந்திருப்பதற்குக் காரணம் நம்முடைய முதலமைச்சர் தான். இதுவரை 3 முறைகள் அதிகம் பேசிவிட்டாய் என்றுதான் இன்றைக்கு இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள். நான் கொஞ்சம் கோபத்தோடு வேகமாகப் பேசுவேனே தவிர அதில் விவேகம் இருக்கும். அப்படிப்பட்ட மரபிலும், பாரம்பரியத்திலும் வந்திருக்கிற நான் உண்மையில் இந்த மன்றத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதில் உங்கள் ஆதரவோடும், ஒத்துழைப்போடும் நிச்சயமாக நன்கு செயலாற்றுவேன் என்கிற நம்பிக்கை எனக்குண்டு.

இந்த நாற்காலியில் பெரிய பெரிய அறிஞர்களும், மேதைகளும் அமர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு என்னையும் அதில் அமர வைத்திருக்கிறீர்கள். நான் எப்படி என் கடமைகளை முறையோடு நிறைவேற்றுவேன் என்ற அச்சம் எனக்கு இருந்தாலும், "நான் இருக்க பயமேன்" என்பதாக எனக்கு முன்னால் அரசியல் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் எனக்குச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாகரிகமான, கண்ணியமான முறையில் நடவடிக்கைகள் இந்த மன்றத்தில் நடைபெற நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். உங்கள் ஒத்துழைப்போடுதான் இந்த மன்றம் சிறப்போடு அமைய முடியும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நாம் வகுத்திருக்கிற சட்டமன்றப் பேரவை விதிகள் சில நேரங்களுக்குப் பாதுகாப்பே தவிர நாம் நடந்து கொள்கிற முறைகள், பரிமாறிக்கொள்கிற கருத்துக்கள் பிடிப்புள்ளனவாக இருக்க வேண்டுமே தவிர பிடிவாதம் இல்லாமல் அமையுமானால் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்போடும், ஆதரவோடும் நமது சட்டமன்றப் பேரவை மரபுகளை முறையாகக் காப்பேன் என்கிற உறுதியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 6

இந்த நேரத்தில் பழகிய முகங்கள் பலபேரைப் பார்க்கிறேன். இந்த மன்றத்தை அலங்கரித்த பல உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், இந்த இருக்கையிலே எனக்கு முன்னால் இருந்து வழிகாட்டிய புலவர் கோவிந்தன் அவர்கள் ஆகியோர் இருக்கிறார்கள். அதேநேரத்தில் புதியவராக இந்தமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற பல பேர்களும் இருக்கிறார்கள். இந்த மன்றத்தின் மரபு எப்படிக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்கு, தங்கள் கருத்துக்களை எந்த எந்த முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்குப் புதிய உறுப்பினர்களுக்குப் பழைய உறுப்பினர்கள் வழிகாட்டியாக இருக்க வேண்டும். பழைய உறுப்பினர்கள் புதிய உறுப்பினர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து, இந்த மன்றத்தின் விதிகளை எடுத்துச் சொல்வார்களானால் என்னுடைய வேலை சுலபமாக அமையும் என்று கருதுகிறேன். காரணம், சூடான வாதங்கள் வரலாம், அதுவே வேகமாகி மன்றத்தின் கௌரவமான பாரம்பரியத்தைக் கெடுத்து விடக்கூடிய அளவுக்குப் போகாமல் இருக்கவேண்டுமானால் அது அவைத்தலைவர் கையில் இல்லை; மன்ற அங்கத்தினர்களாகிய உங்கள் கையில் இருக்கிறது. எனவே, புதிய உறுப்பினர்கள் உங்கள் பின்னால் செல்கிற வகையில், உங்கள் மன்ற நடவடிக்கை இருக்குமானால் நமது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வரலாறு எப்படிப் புகழ் மிக்கதாக அமைந்து வந்திருக்கிறதோ அதுபோலவே மேலும் அமைந்துக்கொள்ள முடியும்.

இங்கே பல பேர்கள் பேசினார்கள். எனது அருமை நண்பர்கள் திரு. அழகர்சாமி, திரு. மார்க்கடந்து, திரு. கந்தசாமி, திரு. லத்தீப் போன்றவர்கள் பேசினார்கள். திரு. லத்தீப் சிறு கட்சி, சிறுபான்மையினர் என்று சொன்னார்கள்.

இந்த இடத்தில் நின்றுகொண்டு பார்க்கிற நான் இங்கே இருக்கிற உறுப்பினர்களாகிய நீங்கள் தமிழகத்தின் 4½ கோடி மக்களின் நல்வாழ்வைக் கட்டிக் காக்க வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். சிறுபான்மை, சிறு கட்சி என்கிற பேச்சுக்கே இடம் இல்லை. தமிழகத்தின் 4½ கோடி மக்களின் பிரதிபலிப்பாக இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். இங்கே எத்தகைய சூடான வாதங்கள் வந்தாலும் தமிழகத்தின் மக்களுக்கு நலம் செய்யத் தான் எழக்கூடும். திரு. லத்தீப் சொன்னதுபோல சிறுபான்மை யினராகிய முஸ்லீம் சமுதாயம் அல்லது பார்வர்ட் பிளாக் உறுப்பினர் சொன்னதுபோல சிறு கட்சியைச் சேர்ந்தவர்கள்



1977 ஜூலை 6] [பேரவைத் தலைவர்]

என்றல்ல—நீங்கள் என்றைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டீர்களோ அன்றைக்கே இந்த நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்கு, நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு உங்கள் கடமையை ஆற்ற வந்திருக்கிறீர்கள் என்று பொருளே தவிர சிறுபான்மை, சிறுகட்சி என்பது முன்னாலும் இருந்ததில்லை; இனியும் இருக்க முடியாது. சிறுகட்சியைச் சேர்ந்தவரானாலும் சிறுபான்மையைச் சேர்ந்தவரானாலும் பெரும்பான்மையைச் சேர்ந்தவரானாலும் நாம் ஆற்ற வேண்டிய கடமை நாட்டு மக்களின் நலவாழ்வுக்குத்தான். அப்படிப்பட்ட பெரும் கடமையை நிறை வேற்றுவதாக நீங்கள் மக்களுக்கு உறுதி அளித்து விட்டு வந்திருக்கிறீர்கள். அந்தக் கடமையை நீங்கள் செம்மையாக ஆற்றுவீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சட்டமன்ற செயல்முறையில் தேர்ச்சிபெற்றிருக்கிற நல்ல அனுபவம் பெற்றிருக்கிற பல மன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

வெளியில் இருக்கின்ற பொதுமக்களின் பிரதிநிதிகளாக இங்கே மன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பெரும் அனுபவம் பெற்றவர்கள். ஆகவே, அவர்களுக்கு எல்லாம் இங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்ல வேண்டிய தேவையில்லை. என்னைப் பொறுத்தவரையில், எனக்குக் கோபம் வந்தபோது நான் இருந்த இடம் வேறு, இப்போது இருக்கிற இடம் வேறு, இதை நான் 15 ஆண்டுகளாக உணர்ந்து இருந்திருக்கிறேன். நான் அதிகமாகப் பேசுவேன் என்ற காரணத் திற்காகவோ என்னவோ அதிகமாகப் பேசாத இடத்தில் நம் முடைய முதலமைச்சர் அவர்கள் என்னை அமர்த்தியிருக் கிறார்கள். ஆகவே, இந்தச் சபையின் கவுரவத்தைக் காப்பாற்று வேன் என்றால் அது இந்தச் சபையிலுள்ள உறுப்பினர்களின் கைத்துழைப்பால்தான் முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன். இந்தப் பதவியிலிருந்து பொறுப்பாகப் பணியாற்ற வேண்டும் என்ற நினைவோடு பார்க்கும்போது, அண்ணாவின் பாரம்பரியம் என் நினைவுக்கு வருகிறது, எனவே, அண்ணா அவர் களுடைய பாரம்பரியம் மேலும் மேலும் சிறப்படைய வேண்டு மென்றால், அது மேலும் மெருகேற வேண்டுமென்றால், அதற்கான கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டியது சபைத் தலைவருடைய கையில் மட்டுமல்ல, சபை உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பில் தான் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒத்துழைப்பைத் தருவதாக

[பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 6

எல்லாக் கட்சித் தலைவர்களும் கூறியிருக்கிறார்கள். நான் சார்ந்திருந்த கட்சியினுடைய தலைவருடைய சிறப்பான குணங்களை நான் நன்கு அறிந்தவன். அந்த அளவில் என்னுடைய பணியைச் சிறப்பாக ஆற்றுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இதுவரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிர வாதியாக இருந்தவன். ஆனால் இன்றிலிருந்து கட்சிக்கு அப்பாற்பட்டவனாகப் பணியாற்றுவேன். இங்கேயுள்ள உறுப்பினர்கள் நாட்டு மக்களுக்காக என்னென்ன கருத்துக்களை இந்தச்சபையில் வைக்கவேண்டுமென்று கருதுகிறார்களோ அதற்கு எந்தவிதமான தடையும் இல்லாமல், அவைகளைச் செய்வதற்கு உறுதுணைபுரியக்கூடிய தலைவராக இருந்து வருவேனே தவிர ஒரு தலைப்பட்சமாகவோ, ஒரு கட்சியினருக்கு மட்டும் சலுகைகள் வழங்ககக்கூடிய முறையிலோ என்னுடைய நடவடிக்கைகள் அமையா என்ற நம்பிக்கையை நான் உங்களுக்குத் தருகிறேன். என்ன தான் அனுபவம் பெற்றிருந்தாலும், சட்டசபையின் சட்டவிதிகளை எடுத்துச் சொல்லுகின்றபோது, அவைகளைக் காப்பாற்றுவதற்கு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு மிகவும் தேவை. பலதரப்பட்ட விவாதங்கள் வரும்போது, அதனால் சூடு ஏறுகிற நேரத்தில், அமைதி மிகவும் தேவை. அதற்கு இந்த மன்றத்தில், முன்னால் இருந்த அங்கத்தினர்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை.

அதே நோத்தில் நியாயம் எற்படுகிற முறையில், நான் சார்ந்திருந்த கட்சிக்குப் பெருமை தேடுகிற விதத்தில் நிச்சயமாகப் பணியாற்றுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் கட்சிக்கு அப்பாற்பட்டவனாக நின்று, இங்கேயுள்ள எல்லாக் கட்சியினரும் நாலரைக் கோடி மக்களின் நலன்களுக்காக இங்கு கொண்டுவரப்படும் சட்டதிட்டங்களின் மீதான விவாதத்தின்போது அதற்கான உரிமைகளைக் காப்பாற்றுகின்றவனாகவும், இதற்கான கருத்துக்களைச் சொல்லும்போது அதற்கு இடம் அளிக்கின்ற வகையிலும், நான் பணியாற்றுவதற்கு, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருடைய உறுதுணையும் எனக்குத் தேவை, தேவை என்பதை எனது பணிவன்பான வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.



1977 ஜூலை 6] [பேரவைத் தலைவர்]

இங்கேயிருக்கின்ற பலர் ஏற்கனவே சட்டமன்றத்தில் இருந்து
நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கலாம். பலர் புதிதாக
சட்டமன்றத்திற்கு வந்திருக்கலாம். உங்கள் அனைவரையும்
நம்பித்தான் இந்தப் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன். இந்த
மன்றத்தின் பாரம்பரியத்திற்கு ஏற்ப நடந்து கொள்வது
எல்லோருக்கும் பெருமை அளிக்கக்கூடியதாக அமையும்.
அதே நேரத்தில் சட்டதிட்டங்களுக்கு மாறுபட்ட நிலை
ஏற்படும்போது, தனிப்பட்டவர்களின்மீது நடவடிக்கை
எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்போது வேதனையாக
இருக்கலாம். நிச்சயமாக அந்த அளவுக்குப் போகாது என்று
நான் நம்புகிறேன். அதற்கு ஏற்கனவே அனுபவமும், பழக்கமும்
உள்ள உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று மன்ற
உறுப்பினர்களை நான் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்வதோடு,
உங்களை நம்பித்தான் இந்த மன்றத்தின் மரபை நான் காப்பாற்ற
முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக, இங்கே நல்ல அனுபவமும் பழக்கமும் உள்ள
உறுப்பினர்கள் சூடு ஏறக் கூடிய விதத்தில் நடந்து கொள்ள
மாட்டார்கள் என்று நம்புகிறேன். காரணம், இவர்களைப்
பார்த்து, புதிதாக வந்திருக்கிறவர்களும் சட்டமன்ற
உறுப்பினர்கள் என்றால் இப்படித்தான் உரத்த குரலில் பேச
வேண்டும் போலிருக்கிறது என்று பேசுவார்கள். ஆகவே,
அவையை நன்கு நடத்திச் செல்வதற்கு உங்களுடைய
ஒத்துழைப்பையும் உறுதுணையையும் தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அவ்வித ஒத்துழைப்புக் கிடைப்பதாக
இருந்தால், இந்தச் சபையின் பண்பைக் காப்பாற்றுவேன், நான்
அதற்குரிய மரியாதையைக் காப்பாற்றுபவனாகவும் இருப்பேன்.
இந்த மன்றத்தின் மரியாதையையும் என்றைக்கும்
காப்பாற்றுவேன் என்று தெரிவித்துக்கொள்வதோடு, அதற்கு
நீங்கள் அத்தனை பேரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்வதோடு, இந்த அளவுக்குப் பெரியதொரு
இடத்திற்கு என்னை நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஏகமனதாகத்
தேர்ந்தெடுத்தமைக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்
கொள்வதோடு, என் இதயப்பூர்வமான நன்றியறிதலையும் தெரிவித்
துக்கொள்வதோடு, இந்தச் சபையின் கவுரவத்தையும், பண்பை
யும் மரபையும் காப்பாற்றுவேன் என்பதைத் தெரிவித்துக்
கொண்டு, எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்
கொண்டு இவ்விடத்தில் அமருகிறேன். வணக்கம்.

## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### குடியரசுத் தலைவர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்வதுபற்றி.

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆப் ஆர்டர், நிகழ்ச்சிநிரலில் உள்ள இரங்கல் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதற்கு முன்பு ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். இந்திய அரசியலமைப்பின் தலைமையாக இருக்கின்றவர் குடியரசுத் தலைவர். எல்லா விஷயங்களிலும் குடியரசுத் தலைவருக்கு முதலிடம் கொடுப்பது வழக்கம். இங்கே நிகழ்ச்சிநிரலில் மூன்றாவது இடமாகத் தள்ளியிருக்கிறோம். வேண்டுமென்றால், இரண்டாவது இடமாக வைத்திருக்கலாம். அப்படியிருக்க இதை மூன்றாவது இடமாகத் தள்ளிப் போடப்பட்டிருப்பது, வரம்பு முறைக்கு உட்பட்டதுதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாமன்றத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்பு பேசிய அருமை உறுப்பினர் அவர்கள் காலஞ்சென்ற குடியரசுத் தலைவரின் இரங்கல் தீர்மானத்தை அவர் வகித்து வந்த பதவியை ஒட்டியும், தகுதியை ஒட்டியும், தரத்தை ஒட்டியும் இதற்கு முதலிடம் தந்திருக்க வேண்டும் என்றும், அதற்குப் பிறகு மற்ற இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் கொண்டு வந்திருக்க வேண்டும் என்றும் நல்லெண்ணத்தோடும், நல்ல நோக்கத்தோடும், எடுத்துச் சொன்னார்கள். ஆனால், நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, மூன்றாவது வரிசையாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதின் மூலம் காலஞ்சென்ற குடியரசுத் தலைவரை அவமதிக்க வேண்டுமென்றோ அல்லது பெருமைக்கு இழுக்குத் தேட வேண்டுமென்றோ கருதவில்லை என்பதையும் இந்தச் சபை முடியும் போது, மிக உயர்ந்த இடத்தில் உட்கார்ந்து உன்னதமான கடமையை ஆற்றி வந்த இந்திய துணைக் கண்டத்தின் தலைவராக வீற்றிருந்த பெரியாரின் இரங்கல் தீர்மானத்தோடு இந்த அவை முடிவடைந்து பெருமையாக இருக்கும் என்கின்ற காரணத்திற்காகத் தான் வரிசைப்படி கடைசியில் போடப்பட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை அருமை நண்பர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொடுத்த விளக்கம், ஓரளவு பொருத்தம் உடையது என்றாலும், குடியரசுத் தலைவர் பதவி என்பது மிகப் பெரிய பதவி என்பது அனைவருக்கும் தெரிந்த ஒரு விஷயமாகும். அப்படிப்பட்ட பதவியிலிருந்த ஒருவரின் மறைவு குறித்து அவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய இருக்கிறார்கள். நண்பர் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டது போல், இதற்கு மூன்றாவது இடம் கொடுக்காமல், அவை முன்னவர் அவர்கள், குடியரசுத் தலைவர் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து, மற்றவர்களுக்குப் பின்னால், ஆறாவது இரண்டாவது மூன்றாவது தந்து, அதற்குத் தகுந்தவாறு இரங்கல் தீர்மானங்களை எடுத்துக் கொண்டு முன்மொழிவார்கள் என்று கருதுகிறேன். நாம் என்னதான் விளக்கங்களை அளித்தாலும், வெளியில் இருக்கின்றவர்கள் பேசுகின்ற பொழுது, இதை மூன்றாவது இடத்திற்குத் தள்ளிவிட்டோம் என்ற தேவையில்லாத சர்ச்சை ஏற்படுவதற்கு ஆளாக நேரிடும். அதுமட்டுமல்ல, இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய மறைவு குறித்தும் இதில் இணைக்கப்படவில்லை. அதுவும் பின்னால் சேர்க்கப்படும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்ட உணர்வுகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்றாலும், தீர்மானத்தைப் படிக்கும்போது, இரண்டு தீர்மானங்களையும் தனியாகப் படித்துவிட்டு அதன்பின் தனியாக, தனி மரியாதை தரப்படுகின்ற வகையில் காலஞ்சென்ற குடியரசுத் தலைவரின் மறைவுக்கான இரங்கல் தீர்மானத்தைப் படிக்க இருக்கிறேன் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். நாளைக்கு பல இரங்கல் தீர்மானங்கள் வர இருக்கின்றன. இதோடு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தீர்மானமும் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உறுதி கூறி, ஏதோ அந்தத் தீர்மானத்தைச் சேர்க்காமல் அவர்களை மறந்து விட்டோம் என்றோ, அல்லது அவர்களை அவமரியாதைப்படுத்த வேண்டும் என்றோ எண்ணம் சிறிதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, வெளியில் உள்ள ஊராருக்கோ அல்லது எதிர்க்

[1977 ஜூலை 6

கட்சித் தலைவர் அவர்களுக்கோ அத்தகைய சந்தேகம் வர வேண்டிய அவசியம் இல்லை என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.20]

**திரு. க. சுப்பு:** ஒழுங்குப்பிரச்சினையின்மீது தங்களுடைய மேலான தீர்ப்பைக் கூற வேண்டுகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** எதிர்கட்சித் தலைவர் அவர்களே ஏற்றுக் கொண்டார்களே . . . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல்--அவையின் முன்னவர் கூறிய விளக்கத்தை ஒருவேளை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும் கூட, அதை முறையான விளக்கமாக மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். இதை எதிர்க்கட்சி வரிசையிலிருந்து வந்தது என்று கருதாமல், நல்ல கருத்தாக இருக்கின்ற காரணத்தால், நமது தீர்மானத்தில் மூன்றாவதாக இருப்பதை, மறைந்த குடியரசுத் தலைவர் பக்ருதின் அலி அகமதுவுக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொண்டு பிறகு மற்றத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வது முறையாக இருக்குமென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அருமை உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்தைத் தெரிவிக்கும்போது, அவை முன்னவர் தெரிவித்த கருத்துக்களைத் தாங்கள் ஏற்றுக் கொண்டாலும் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகத்தை அவர் கிளப்பியிருக்கிறார். மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிற அவர்களே ஏற்றுக் கொண்ட பிறகு, நிச்சயமாக மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதையும், மக்கள் மத்தியில் அவர்களுக்குச் செல்வாக்கும் நம்பிக்கையும் இருக்கிறது என்றும் மனதார நம்புகிறேன் என்பதையும் அவருக்குத் தெரிவித்து, பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தாமல் காரியமாற்றுவோம் என்று அவர்களுக்குச் சொல்லி என்னை தீர்மானத்தைப் படிக்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜூலை 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையில் எடுத்துக் காட்டியதுபோல் ஒரு பெரும் பொறுப்பில் இருந்த ஜனாதிபதிக்கான இரங்கல் தீர்மானத்தை முதலிலே எடுத்துக் கொண்டால் உடனே இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற மரபு இருக்கிறது. எனவே, மற்ற இரு தீர்மானங்களை எடுத்துக் கொள்ள முடியாது. ஆகவே, இருக்கின்ற வரிசையிலேயே எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோளைத் தாங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடியரசுத் தலைவர் இரங்கல் தீர்மானத்தைப் பற்றிப் பேசிய பிறகு உடனடியாக அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற நியதி இருப்பதை நான் புரிந்து கொள்ளுகிறேன். ஆனால் இங்கே அவை முன்னவர் மூன்று தீர்மானங்களை ஒன்றாகப் படித்து முன்மொழிந்து அவற்றின் மீது உரையாற்றி, அதற்குப் பிறகு எதிர்க்கட்சிகள் சார்பில் வழி மொழிந்து இரங்கலுரை ஆற்ற இருக்கிறார்கள் என்று திட்டமிடப்படிருக்கிறது. எனவே, குடியரசுத் தலைவருக்கான இரங்கல் தீர்மானத்தை எடுத்துக் கொண்டவுடன் அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரச்சினை எழ வாய்ப்பே இல்லாமல் போகிறது. அப்படி ஏதாவது நிர்ப்பந்தம் இருக்குமானால் இன்றைக்கு குடியரசுத் தலைவர் இரங்கல் தீர்மானத்தை மட்டும் எடுத்துக் கொண்டு நாளைய மாறுநாள் மற்றைய தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம். குறிப்பாக, இந்தச் சபையில் கடந்த காலத்தில் எதிர்க்கட்சிக் குழுத் தலைவராக அரும்பணியாற்றி அகால மரணமடைந்த பொன்னப்ப நாடார் போன்றவர்களுக்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்களைக் கவுரவிக்கின்ற வகையில் தீர்மானங்களைக் கொண்டு வரும்போது திரு. சந்திரா ரெட்டி போன்று மற்றுமுள்ள மறைந்தவர்களுக்கான இரங்கல் தீர்மானங்களை எல்லாம் நாளை மறுநாள் வைத்துக் கொண்டு இன்று குடியரசுத் தலைவர் இரங்கல் தீர்மானத்தை மட்டும் எடுத்துக் கொள்ளலாம் என்பது பற்றித் தங்கள் தீர்ப்பை வழங்க வேண்டுகிறேன்.

[1977 ஜூலை 6

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, மூன்று தீர்மானங்கள் அவையில் முன்மொழிவதற்காகக் கொண்டு வரப் பட்டிருக்கின்றன. இதிலே குடியரசுத் தலைவர் பற்றிய இரங்கல் தீர்மானத்தை முதலில் படித்து விட்டு நிறைவேற்றுவதில் எந்த விதமான சிரமமும் இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர் களே, இதிலே கவுரவப் பிரச்சினை எதுவும் கிடையாது. கொண்டு வந்த தீர்மானங்களை அப்படியே நிறைவேற்றிவிட வேண்டுமென்ற பிடிவாதம் எங்களுக்கு இல்லை. நாங்கள் நினைத்தது எல்லாம் குடியரசுத் தலைவர் அவர்களுடைய இரங்கல் தீர்மானத்திற்குப் பிறகு ஏனைய தீர்மானங்களைப் படித்து அவையை நடத்திக் கொண்டு செல்வது அவருக்குரிய தகுதியை, மரியாதையைத் தருவதாக அமையாது என்ற எண்ணத்தில் கொண்டு வரப் பட்டது. மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் சொன்னது போன்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போன்று அவரை அலட்சியப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு நாங்கள் அதைக் கொண்டு வரவில்லை. முன்னாலே அந்தத் தீர்மானத்தைப் படிக்க வேண்டுமென்பதிலே அவை முன்னவருக்கு எந்தக் கஷ்டமும் வந்துவிடப் போவதில்லை. ஆகவே, நீங்கள் இப்படித் தான் செய்ய வேண்டுமென்று சொல்வீர்களானால், எதிர்க்கட்சி யிலிருந்து சொன்னார்கள் என்பதற்காக அலட்சியப்படுத்தாமல் நிச்சயமாக அதை ஏற்றுக் கொள்வதில் எங்களுக்கு எந்தவித மான கருத்து வேறுபாடும் இல்லை. மூன்று தீர்மானங்களில் முதலில் எதிர்க்கட்சி நண்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்க குடியரசுத் தலைவர் அவர்களுடைய இரங்கல் தீர்மானத்தை முதலில் படிக்கும் வகையில் வரிசைப்படுத்துவோமானால் கூட்டம் முடைய உள் உணர்வை உங்கள் மூலம் தெரிவித்துக் கொண்டு தாங்கள் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜூலை 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே வந்திருக்கிற இரண்டு தீர்மானங்களைத் தனியாகவும், ஜனாதிபதி மறைவு குறித்த தீர்மானத்தைத் தனியாகவும் முன்மொழிந்து நிறை வேற்றி முடிப்பதுதான் நல்லது. அப்போது கடைசியில் அவையைத் தள்ளி வைக்கப் பொருத்தமாக இருக்கும். ஆகவே, அதே போன்று தீர்மானங்களை முன்மொழிந்து நிறைவேற்றுவது நலம்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாமன்றத் தலைவர் அவர் களே, நான் ஏற்கெனவே தெரிவித்த கருத்தைத்தான் நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அதற்குப் பிறகு பிரச்சினையைக் கிளப்பி மாமன்றத் தலைவர் அவர்களின் தீர்ப்பு என்ன என்று கேட்ட உறுப்பினருக்குப் பதில் சொல்லியதன் மூலம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முதலிலே, இரண்டு இரங்கல் தீர்மானங்களைத் தனியாக நான் அவையில் படித்துவிட்டு அதற்குப் பிறகு மூன்றாவதாக, தனித் தீர்மானமாக காலஞ்சென்ற குடியரசுத் தலைவர் அவர்களின் இரங்கல் தீர்மானத்தை உங்கள் மத்தியில் படிக்க இருக்கிறேன் என்பதையும் சொல்லி, அந்தத் தீர்மானத்தைப் படித்து அது பற்றி ஒருசில கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு அதை யொட்டி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றக் கட்சிகளின் தலைவர்களும் தங்களது கருத்துக்களை வெளியிட்டதற்குப் பிறகு சபை ஒத்தி வைக்கப்படும் என்பதை நான் உங்கள் முன்னிலையில் தெரிவித்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானங்கள் நிறை வேறியதற்குப் பிறகு, காலம் சென்ற மாமேதைகளுக்கு நமது அஞ்சலியைத் தெரிவிக்கின்ற முறையிலே அவர்களை இழந்து வாடுகின்ற குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்ற வகையில் சபையில் இருக்கிற அனைவரும் ஒரு நிமிஷம் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

## (5) இரங்கல் தீர்மானங்கள்.

### (அ) முன்னாள் தற்காலிக ஆளுநர் திரு. பி. சந்திரா ரெட்டி அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாமன்றத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

> "தமிழ்நாடு, ஆந்திரா, முதலிய மாநிலங்களின் உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், தமிழ்நாட்டின் முன்னாள் தற்காலிக ஆளுநராகவும் பணியாற்றிய திரு. பி. சந்திரா ரெட்டி அவர்கள் 7—10—1976 ஆம் தேதி யன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் அவரது மறைவினால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது."

### (ஆ) முன்னாள் மேலவைத் தலைவர் திரு. எம். இரத்தினசாமி, அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாமன்றத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

> "1921 ஆம் ஆண்டிலிருந்து 1926 ஆம் ஆண்டு வரை தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகவும், 1925-26 ஆம் ஆண்டில் அதன் தலைவராகவும், பின்பு 1962 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு வரை இராஜ்ய சபை உறுப்பினராகவும் இருந்த திரு. எம். இரத்தின சாமி அவர்கள் 1—6—1977 ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவரது மறைவினால் வருந்தும் குடும்பத் தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது."

மாமன்றத் தலைவர் அவர்களே, திரு. சந்திரா ரெட்டி அவர்களைப் பற்றி இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அதிகம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. பெருமதிப்பிற்குரிய திரு. சந்திரா ரெட்டி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வைஸ் சான்சலராகவும், அதற்குப் பிறகு, நீங்கள்





நன்கு அறிகின்ற அளவிற்குத் தலைசிறந்த தலைமை நீதிபதி யாகவும், அதன் மூலம் தனக்கென்று ஒரு தனிப் பெருமையைப் பெற்றிருந்தார் என்பதையும் அப்படிப்பட்டவருடைய இழப்பு ஈடு செய்யமுடியாத பெரிய இழப்பு என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் இங்கே கொண்டுவருவதன்மூலம் அவரது கடந்தகால சேவைக்கு மரியாதை தெரிவிக்கவும், அவரைப் போன்ற நல்லவர்கள் நீண்ட நெடுங்காலம் வாழவில்லையே என்ற வருத்தத்தைத் தெரிவிக்கவும் அவரது மறைவினால் வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்தவருத்தத்தையும் இரங்கலையும் தெரிவிக்கின்ற முறையில் இந்தத் தீர்மானத்தை நான் கொண்டுவருகிறேன்.

திரு. இரத்தினசாமி அவர்களைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பெருமதிப்பிற்குரிய திரு. இரத்தினசாமி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வைஸ் சான்ஸலராக இருந்த காலத்தில் அந்தப் பல்கலைக் கழகத்தை எந்த அளவிற்கு ஒரு முன்மாதிரியாக வைத்தார் என்பதும், அவர் எத்தனை புத்தகங்களை எழுதியிருக்கிறார் என்பதும் 'intellectual giant' அறிவுலக மேதை என்று சொல்லத்தக்க அளவிற்குத் திகழ்ந்தார் என்பதும் ராஜ்ய சபாவில் அவர் ஆற்றிய அரும்பணியின் மூலம் அவரது பேச்சின் மூலம் தலை சிறந்த கருத்துக்களின் மூலம் அவர் பெற்றிருந்த பேரிடமும் பெருமையும் எந்த அளவிற்கு அமைந்திருந்தது என்பதும் நான் நேரிலே கண்டிருக்கிறேன். என்றாலும் நான் சொல்லாமலேயே நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அவர் அடக்கத்தின் உருவாகவும், அமைதியின் உருவமாகவும், அதிகம் பேசாதவராகவும், ஆனால் அளவிற்கு மேல் சிந்திக்கும் தகுதி படைத்திருந்தார் என்பதையும் நீங்கள் எல்லாம் அறிவீர்கள். திரு. இரத்தினசாமி அவர்கள் பேராசிரியர் என்ற பொருளுக்கு இலக்கணம் வகுத்து, வகுத்த இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாகவும் திகழ்ந்தார் என்பதையும் நாடு நன்றாக அறிந்திருக்கிறது. அவரோடு பேசிய நண்பர்கள் யாரானாலும் சரி, அறிவு முதிர்ந்த பேராசிரியராக இருந்தாலும் சரி, விவரம் தெரியாதவர்களாக இருந்தாலும் சரி, அவரிடம் பேசிவிட்டு வெளியே வருகின்றபோது, தன்னை அறியாமல் தன்னிடம் ஏதோ ஒருவித உணர்வு ஏற்பட்டதையும் அந்த உணர்வு அவரது

அறிவைத் தூண்டுகின்ற விதத்தில் அமைந்திருக்கும் என்பதைப் பலர் அறிந்திருப்பார்கள். அப்படிப்பட்டவருடைய மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும் என்பது அறிவிலே நம்பிக்கையுள்ளவர்களுக்கு, ஆற்றலிலே நம்பிக்கையுள்ளவர்களுக்கு, திறமையிலே நம்பிக்கையுள்ளவர்களுக்கு, ஒழுக்கத்திலே நம்பிக்கையுள்ளவர்களுக்கு, பண்பாட்டிலே நம்பிக்கையுள்ளவர்களுக்குப் புரியும் என்று நான் மனதார நம்புகிறேன். அப்படிப்பட்டவரின் மறைவுக்கு இந்த அவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்வது முழுமுதற் கடமையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தீர்மானங்களின் மேல் பல கட்சிகளின் சார்பாகத் தலைவர்கள் பேசியதற்குப் பிறகு கடைசித் தீர்மானமாக மறைந்த குடியரசுத் தலைவரின் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிய இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

* **திரு. க. அன்பழகன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் இங்கே கொண்டுவந்திருக்கின்ற இரங்கல் தீர்மானங்களை வழிமொழிகின்ற வகையில் கழகத்தின் சார்பாகவும், எதிர்க்கட்சி என்ற உரிமையோடும், இரங்கல் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய மறைந்த திரு. சந்திரா ரெட்டி அவர்கள் நீதிமன்றங்களிலே நீண்ட நாள் நடுவராக விளங்கியவர் மட்டுமல்ல, இரண்டு உயர்நீதி மன்றங்களிலே தலைமை நீதிபதியாகவும் விளங்கிய சிறப்பைப் பெற்றவர். இடைக்காலத்தில் தமிழ்நாடு ஆளுநராகவும் திகழ்ந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் இருக்கக்கூடிய சிறப்பைப் பெற்றிருந்தார்கள். கல்வித் துறையில் மிகுந்த ஈடுபாடும் நீதித் துறையில்தனிப் பேரும் பெற்றவர்கள். இப்படிப்பட்ட தனித் தகுதிகளைப் பெற்று வாழ்ந்த ஒருவராகத் திகழ்ந்தார்கள். திரு. சந்திரா ரெட்டி அவர்கள், இந்தியாவினுடைய அரசமைப்புச் சட்டத்தில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே எப்படிப்பட்ட உறவுகள் அமையவேண்டும் என்று பரிசீலனை செய்கிற குழு ஒன்றிலும் சிறப்பான பணியாற்றியிருக்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறபோது, உறுப்பினர்கள் அங்கும் இங்கும் செல்லாமல் இருப்பது நல்லது. இரங்கல் தீர்மானத்தின்மீது பேசிக்கொண்டிருக்கிறபோது வெளியே போய்க் கொண்டிருப்பது இரங்கல் தீர்மானத்திற்கு உகந்ததாக இருக்காது.

**திரு. க. அன்பழகன் :** மத்திய-மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய உறவுமுறைகளைப்பற்றி பரிசீலனை செய்ய ஒரு குழு முன்னாள் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. ராஜமன்னார் அவர்கள் தலைமையில் அமைந்தபோது, சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த திரு. டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களும், திரு. சந்திரா ரெட்டி அவர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் அந்தக் குழுவில் ஏறத்தாழ ஓராண்டுக்கு மேலாகத் தீவிரமாகப் பணியாற்றி, இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள எல்லா அரசியல் தலைவர்களும் சட்ட மேதைகளும் வியந்து பாராட்டத்தக்க வகையில் சிறந்த முடிவுகளை எடுத்து, மாநில சுயாட்சி நிறைவு காண அரசியல் சட்டம் எப்படி எதிர்காலத்தில் உருவாக்கப்படவேண்டுமென்று அவர்களின் அறிக்கையின் மூலமாக நாட்டிற்கு வழங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் மறைந்தது அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல, நீதித் துறைக்கும் பெரிய இழப்பாகும். தமிழ்நாட்டு மக்களிடத்திலேயும் மதிப்பையும் மரியாதையையும் பெற்றிருந்த அவர் மறைந்தது குறித்து தமிழ்நாட்டு மக்களுக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவருடைய மறைவுக்கு இந்தச் சட்டப் பேரவை இரங்கல் தீர்மானம் நிறைவேற்ற இருக்கிற இந்த நேரத்தில் இந்த நாடு ஒரு சிறந்த அறிவாளியை இழந்துவிட்டது என்பதை நினைவுகூர்ந்து இந்த இரங்கல் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலமாக அரசியலிலே அறிஞர்களுக்கு அறிஞராக, வழிகாட்டியாக, வித்தகராக விளங்கிய ஒரு பெருந்தகையாவார். அவர்கள் முதன்முதலாக, தமிழ்நாடு என்ற பெயர் இடப்படாத, ஆனால் இணைப்புற்றிருந்த சென்னை மாநிலத்தில் விளங்கிய, மாநில கவுன்சிலின் உறுப்பினரான காலத்தில் நான் பிறக்கவில்லை. 1921 ஆம்

[திரு. க. அன்பழகன்] [1977 ஜூலை 6

ஆண்டிலே உறுப்பினரான அவர் 1926 ஆம் ஆண்டிலே அதன் தலைவராக விளங்கினார். நீதிக் கட்சி ஆட்சி நடைபெற்ற காலத்தில் அந்தக் கட்சியின் நல்ல ஆலோசகராக விளங்கினார். சட்டக் கல்லூரி முதல்வராகப் பல ஆண்டுகள் திகழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக விளங்கினார்.

அப்படி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விளங்கிய காலத்திலேதான் அந்தப் பல்கலைக் கழகத்தின் மாணவராக நான் இருந்த நிலையில் அந்தத் துணைவேந்தரிடத்தில் பழகும் பல நல்ல வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. அவர்கள் பெருந்தன்மையின் சின்னமாக விளங்கியதன் காரணமாக, அந்த நாட்களிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேசுவது தடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் ஒருசிலரால் வலியுறுத்தப்பட்ட நேரத்தில் அந்த வலியுறுத்தல்களையெல்லாம் மீறி பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் பல்கலைக் கழகத்திலே அண்ணாவைப் போன்ற அறிவாளிகள் பேசுவதில் தவறில்லை, அவர்கள் தங்களுடைய கருத்துக்களை முறையாகச் சொல்லும் பொழுது அவற்றை ஏற்பவர்கள் ஏற்கட்டும், ஏற்க விருப்பமில்லாதவர்கள் விட்டுவிடலாம் என்று சொல்லிவிட்டு, அண்ணா அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் முதன்முதலாக அனுமதி வழங்கிய பெருந்தகையாளர் அவர். அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் அங்கு ஆற்றிய உரைகள் பேராசிரியர் இரத்தினசாமி அவர்களுக்குப் பெருமகிழ்ச்சியாக இருந்தது. பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் தலைமையிலே அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்,

**The World—old and new**

என்ற தலைப்பில் பேசினார்கள். அவர்கள் பேசிய பேச்சைக் கேட்ட பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் அங்கிருந்த பேராசிரியர்கள் பலரை அழைத்து இதைப்போலப் பேசுகின்றவர்கள் யார் யார் இந்தப் பல்கலைக் கழகத்திலே இருக்கிறீர்கள் என்று கேட்டார். மேலும் அவர், "நான் கருத்துக்களை முறையாகச் சொல்வேன். ஆனால் இப்படி அடுக்கடுக்காகச் சொல்ல வேண்டுமென்றால் அது இயலாது" என்று கூறிவிட்டு, "அப்படிச் சொல்லக் கூடிய ஆற்றல் பெற்ற பேச்சாளர்கள் சிலர்தான் நாட்டில் உள்ளனர்" என்றார். அந்த முறையில் அண்ணாவைப் பாராட்டியவர்கள் அவர்கள்.



1977 ஜூலை 6] [திரு. க. அன்பழகன்]

அவர்கள் அண்ணாவையும் அவரது கொள்கைகளையும் பாராட்டினார்கள் என்பது மட்டுமல்ல. அவர் ஒரு உயர்ந்த பொதுநோக்குப் படைத்தவர். ஒவ்வொரு மாநில மக்களுக்காகவும் அவர்தம் உரிமைகளுக்காக மாநிலங்கள் அவையிலே 12 ஆண்டுக் காலம் பணியாற்றிய காலத்தில் மாநிலங்களுக்காக வாதாடியவர்கள். சிறுபான்மை இனத்திற்காக வாதாடியவர்கள். எந்தவொரு சமுதாயமும் புறக்கணிக்கப்படக்கூடாது, கைவிடப்படக்கூடாது என்று மத்திய அரசினிடத்தில் பலமுறை வாதாடியவர்கள். தெளிவான நீரோடை போன்ற ஆங்கில மொழி நடையில் அவருடைய கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. அவர்களுடைய இல்லத்திற்கு எப்பொழுது காணச் சென்றாலும் ஏறத்தாழ ஒரு நூல்நிலையத்தின் நடுவிலேதான் அவர்கள் இருப்பார்கள். ஜான்சனைப்போல, மேதைகள் என்று பாராட்டப்பட்ட வேறுபல அறிஞர்களைப்போல, எல்லாப் பக்கங்களிலும் நூல்கள் இருக்க இடையிலே பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் அமர்ந்திருப்பார்கள். டெல்லியிலே இருக்கின்ற பொழுதெல்லாம் ஒன்று மாநிலங்கள் அவையிலே இருப்பார்கள் அல்லது பாராளுமன்ற நூல்நிலையத்திலே இருப்பார்கள். அவர்களிடத்தில் யார் பேச நேரிட்டாலும் கூட அதிகமான சொற்கள் இல்லாமல் குறைந்த சொற்களைக் கொண்டு பொறுமையாக நிறைவான கருத்துக்களைத் தருகின்ற பேராற்றலைப் பெற்றிருந்தார்கள். தமிழ் மொழியைப் பற்றி அப்படிச் சொல்வார்கள், மிகக் குறைந்த சொற்களில் நிறைவான கருத்துக்களைச் சொல்லும் ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு என்று சொல்வார்கள். அதைப் போல ஆங்கிலத்திலேயும், தங்கள் திறமை, அறிவாற்றல் காரணமாக ஆங்கிலச் சொற்களைத் தெளிவாகப் பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் எடுத்தாண்டார்கள். அவர்கள் நிறைவான வாழ்வைப் பெற்றிருந்தார்கள். தங்களிடத்தில் படித்தவர்கள் பல்வேறு துறைகளிலும், அகில இந்திய அளவிலும் தகுந்த இடங்களில் இருப்பதைக் காணும் பேறு பெற்றிருந்தார்கள். இந்தச் சட்டமன்றத்தில் நான் இடம் பெற்ற முதல் ஆண்டு, 1957 ஆண்டிலும், அதற்குப் பிறகு பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 1967-ம் ஆண்டிலும், பின்னரும் எனக்கு வாழ்த்துக்கூறி பாராட்டி அன்பு காட்டியவர்கள். இங்கு பேசிய நண்பர் மனோகரன் அவர்கள் அவை முன்னவர் என்ற முறையிலே பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் பேராசிரியர் என்ற சொல்லுக்கு

இலக்கணமாக இருந்தார்கள் என்று பாராட்டினார்கள். அது முழு உண்மையாகும். அப்படிப்பட்ட பேராசிரியரிடத்திலே ஒரு வகையிலே மாணவனாக இருந்தவன் என்ற முறையிலே, ஒவ்வொரு வகையிலும் என்று சொல்ல முடியாவிட்டாலும், ஒருவகையிலே மட்டும் மாணவனாக இருந்தேன் என்ற முறையிலே என்னுடைய ஆசிரியருக்கு நான் செலுத்தும் இரங்கலாகவும், இன்று எதிர்க் கட்சி என்ற தகுதியுள்ள, திராவிட முன்னேற்றக் கழகத்திடம் பரிவு காட்டியவர் அவர் என்ற முறையிலேயும், அறிஞர் அண்ணா அவர்களின் தம்பிகளிடத்தில் அன்பு காட்டியவர் என்ற முறையிலேயும், இந்தச் சட்டமன்றத்திலே உள்ள அனைவருக்கும் பொதுவான பெருந்தகை என்ற முறையிலேயும் பேராசிரியர் இரத்தினசாமி அவர்களின் மறைவுக்குத் தமிழ்நாடு ஆழ்ந்த இரங்கல் செலுத்துகின்றது என்ற முறையிலே இந்த இரங்கல் தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று கூறி இதனை வழிமொழிந்து அமர்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மதிப்பிற்குரிய அவை முன்னவரவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கின்ற இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆதரித்துப் பேச முன்வந்துள்ளேன். மதிப்பிற்குரிய காலஞ்சென்ற நீதிபதி சந்திரா ரெட்டி அவர்கள் பல பொறுப்புக்களை ஏற்று நல்லமுறையிலே பணியாற்றியவர்கள். அவர்களுடைய இழப்பு நாட்டுக்கே ஒரு பெரிய இழப்பாகக் கருத முடியும். அன்னார் அவர்களுடைய குடும்பத்திற்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அடுத்து, பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் தமிழகத்திலே தலைசிறந்தவர்களில் ஒருவராகப் பணியாற்றி இருக்கின்றார்கள் என்பதை முன்னால் பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் விரிவாக இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் பேராசிரியராகவும், சட்டமேலவையின் தலைவராகவும் பணியாற்றி, பின்னாலே இராஜ்ய சபையிலே உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியிருக்கின்றார்கள். அவர்கள் இந்தியாவினுடைய அரசியல் பொருளாதார நிலைமைகளைப் பற்றியும், மொழி சம்பந்தமான கருத்துக்



களையும் நல்ல முறையிலே இராஜ்ய சபையிலே பேசியிருக்கின்றார்கள் என்பதை யெல்லாம் பத்திரிகை வாயிலாக நாம் உணர்ந்திருக்கின்றோம். அவர்கள் ஒரு அறிஞர் என்பதை நல்லமுறையிலே வெளிக்காட்டி பணியாற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய இழப்பும் தமிழ்நாட்டிற்கு ஒரு மாபெரும் இழப்பு என்ற முறையிலே அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

***திரு. ந. சங்கரய்யா :** பேரவைத் தலைவரவர்களே, திரு. பி. சந்திரா ரெட்டி அவர்களுடைய மறைவு குறித்து சபையின் முன்னவர் அவர்கள முன்மொழிந்த தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன். திரு. பி. சந்திரா ரெட்டி அவர்கள் சிறந்த நீதிபதியாகப் பணியாற்றியதோடு மாநில மத்திய அரசுகளின் உறவுகள் சம்பந்தமாக அவர்கள் ஆற்றிய பணியும், அரசியல் வாழ்க்கையில் ஆற்றிய பணியும் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன என்று குறிப்பிட்டு அன்னாருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய அனுதாபங்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்

அடுத்து, திரு. எம். இரத்தினசாமி அவர்கள் மறைவு குறித்து அவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன். ஒரு காலத்தில் தேசிய விடுதலை இயக்கத்தினுடைய ஒரு பகுதியாக நேரடியாகப் போராடுதலும், பிரிட்டிஷார் ஆட்சிக்கு எதிராகப் போராடிய நேரத்தில் மற்றும் பல தலைவர்கள் இந்த நாட்டின் சட்ட மன்றங்களிலே நுழைந்து அதில் பணியாற்றுவதன் மூலம் இந்திய மக்களுக்குச் சில சலுகைகள் கிடைக்க முயற்சிக்கலாம் என்று பாடுபட்டார்கள். அந்த வரிசையிலே திரு. எம். இரத்தினசாமி அவர்கள் அன்றைக்கே இந்தத் தமிழ்நாடு மேலவையிலே உறுப்பினராக இருந்து பாடுபட்டவராவார். மேலும் கல்வித் துறையிலும் சிறந்த முறையிலே பணியாற்றியவர். அன்னாருடைய மறைவினால் பாதிக்கப்பட்ட அவருடைய குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தையும் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று கூறி நான் அமர்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சட்ட மன்றப் பேரவைத் தலைவரவர்களே, திரு. சந்திரா ரெட்டி அவர்களின் மறைவு குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். திரு. சந்திரா ரெட்டி அவர்கள் தமிழகமும், ஆந்திராவும் ஒன்றாக இருந்தபொழுது சென்னை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்று சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றி, சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதியாகவும், பின்னால் தமிழகமும், ஆந்திராவும் மொழிவழி மாநிலமாகப் பிரிந்தபொழுது ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிந்தபொழுது ஆந்திர மாநிலத்தின் நீதிபதியாகவும் செயலாற்றி உள்ளார்கள். அதற்குப் பின்பு தமிழ்நாட்டு நீதிமன்றத்தில் உயர்நீதிபதியாகச் சிலகாலம் பணியாற்றி மீண்டும் ஆந்திர மாநிலத்தின் நீதிமன்றத்தில் உயர் நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்கள்.

கடைசியில் தமிழகத்தில் மைசூர் மகாராஜா அவர்கள் கவர்னராக இருந்து வெளிநாடு சென்றிருந்தபொழுது ஏற்பட்ட இரண்டாண்டு இடைவெளியில் அவர்கள் தமிழ் நாட்டில் ஆளுநராகப் பணியாற்றி இறுதியாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் அமர்ந்து சிறந்த சேவையைச் செய்துள்ளார்கள். ஆக, திரு. சந்திரா ரெட்டியைப் பொறுத்த மட்டில் அவர்கள் கல்வித் துறையில் பெரிய பதவிகளை ஏற்றுள்ளார். நீதித் துறையில் சிறந்த, உயர்ந்த பதவிகளையும் வகித்து, அரசியலில் ஒரு சிறந்த மேதையாக விளங்கினார்கள் என்று கூறும்போது நிச்சயமாக அவரை இழந்த காரணத்தினால், தமிழகமும், ஆந்திர மாநிலமும் ஒரு பெரியாரை இழந்து விட்டது என்று கூறும்போது, நிச்சயமாக அது மிகையாகாது. ஆகவே, அன்னாரை இழந்து வாடுகின்ற அன்னாரது குடும்பத்திற்கு ஜனதா கட்சியின் சார்பில் நான் எங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இங்கே அவையின் முன்னவர் கொண்டு வந்துள்ள பேராசிரியர் இரத்தினசாமி அவர்களது இரங்கல் தீர்மானத்தையும் ஜனதா கட்சியின் சார்பில் ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் சுதந்திரா கட்சி ஃபௌண்டர்—லீடர்; ஆரம்பித்த தலைவர்களில் ஒருவராக, இராஜாஜி அவர்களின் உற்ற





நண்பராக இருந்தார் என்பதனை இந்த மாநிலம் நன்றாக அறிந்திருக்கிறது. அவர்கள் முதலில் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராகவும், அடுத்து சென்னைச் சட்டக் கல்லூரியின் முதல்வராகவும் பணியாற்றி, அரசியலில் நுழைந்து, இராஜ்ய சபை அங்கத்தினராகவும் நமது மாநிலத்தில் மேலவை அங்கத்தினராகவும் பணியாற்றி, கடைசியில் மேலவையின் தலைவராகவும் கூட செயலாற்றினார்கள் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். கடைசியாக, அன்னாருக்கு 1968 ஆம் ஆண்டு பத்ம பூஷன் என்ற பட்டமும் கூட வழங்கப்பட்டது என்று சொன்னால் நிச்சயமாக அந்த அளவிற்கு அவர் ஒரு பெரியார் என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆக, அன்னாரை இழந்து தவிக்கின்ற குடும்பத்திற்கும் ஜனதா கட்சியின் சார்பாக எங்களது அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

* **திரு. மு. அம்பிகாபதி:** சட்டப் பேரவையின் மாண்புமிகு தலைவர் அவர்களே, அருமை உறுப்பினர்களே, அவையினுடைய முன்னவர் அவர்கள் திரு. பி. சந்திரா ரெட்டி அவர்களுடைய மறைவிற்கும் திரு. எம். இரத்தினசாமி அவர்களுடைய மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து முன்மொழிந்த தீர்மானங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வழிமொழிந்து பேசுவதற்காக முன்வந்திருக்கிறேன். மதிப்பிற்குரிய முன்னவர் மேன்மைமிக்க திரு. சந்திரா ரெட்டி அவர்களுடைய மறைவிற்கும் திரு. இரத்தினசாமி அவர்களுடைய மறைவிற்கும் இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். தமிழகத்திலும் ஆந்திர மாநிலத்திலும் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக விளங்கிய திரு. சந்திரா ரெட்டியினுடைய மறைவிற்கும் தமிழகத்தில் தலைசிறந்த கல்வியாளராக இருந்தவரும் சட்ட மன்ற மேலவை உறுப்பினராக இருந்தவரும் இராஜ்ய சபை உறுப்பினராகப் பணியாற்றியவருமான திரு. இரத்தினசாமி அவர்களுடைய மறைவிற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்ட மன்றக் குழுவின் சார்பில் எங்களுடைய அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறோம். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது தலைவரவர்களே, என்று மட்டுமே சொல்ல வேண்டும். "உறுப்பினர்களே," என்று கூடச் சொல்லக் கூடாது. "தலைவரவர்களே" என்று மட்டும் சொல்லித் துவக்கினால் நலம் என்று கருதுகிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையினுடைய முன்னவர் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக நான் வழிமொழிகிறேன். நான் ஒரு வழக்கறிஞன் என்ற காரணத்தினாலே திரு. சந்திரா ரெட்டி தமிழ் நாட்டு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்து ஆற்றிய பணிகளையும் அவர்கள் கொடுத்த தீர்ப்புகளையும் பார்க்கின்ற வாய்ப்புப் பெற்றவன். அவர் ஒரு சிறந்த நீதிபதி என்பதையும், சிறந்த சட்ட வல்லுநர் என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில் அவை அமைந்திருக்கின்றன என்று கூற விரும்புகிறேன். அவர் மறைவிற்காகவும் மற்றும் திரு. இரத்தினசாமி அவர்கள்—சிறந்த பேராசிரியராகவும், கல்விமானாகவும், அரசியலிலே தெளிந்த அனுபவம் உடையவராகவும் இருந்தவர்—மறைவிற்காகவும் எங்களுடைய உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக, அவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிகின்றோம்.

**திரு. டி. பி. மு. பெரியசாமி:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அவையின் முன்னவர் முன்மொழிந்துள்ள பெருமதிப்பிற்குரிய காலஞ்சென்ற திரு. சந்திரா ரெட்டி அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தின் மீது சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மறைந்த தலைவர் திரு. சந்திரா ரெட்டி அவர்கள் ஆந்திர மாநிலத்தில் பிறந்தாலும் கூட இந்திய துணைக்கண்டத்தில் வாழ்ந்த 40 கோடி மக்களது நல்வாழ்விற்காக தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்டவர் என்பதை சபை நன்றாக அறியும். அவர் கல்வித் துறையில் ஆற்றிய பணியினை இன்று இந்திய துணைக் கண்டத்தில் இருக்கக் கூடிய அனைத்துக் கல்விப் பேரறிவாளர்களும் அனைத்துப் பல்கலைக் கழகங்களும் எடுத்துக் காட்டாக வைத்து, கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றன என்பதை சபை நன்கு அறியும். அதேபோல், நீதித்துறையில் அவர் பணியாற்றிய



பொழுது அவர் வழங்கிய தீர்ப்பினை இன்று உயர்நீதிமன்றமும் எடுத்துக்காட்டாக, மேற்கோளாகக் காட்டி தீர்ப்பளிக்கிறது என்பதையும் சபை நன்கு அறியும். அதேபோல், பொது வாழ்விலும் தனக்கென ஒரு பாதை அமைத்து அந்தப் பாதையிலிருந்து நடுநிலை பிறழாது எந்தவிதமான உள்நோக்கமும் கொள்ளாது, அவர் பதவிக் காலத்தில், தமிழகத்திற்கும் ஆந்திர மாநிலத்திற்கும் பெருமை தேடித் தந்தார் என்பதை சபை நன்கு அறியும். அந்தப் பெரும் தலைவருக்குத் தமிழகச் சட்டமன்றத்தின் சார்பாக, அவை முன்னவர் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை, இந்திய தேசிய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வழிமொழிகிறேன்.

அடுத்தபடியாக, பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் தமிழகத்தின் கல்வித் துறையில் ஆற்றிய பணி, அதற்கடுத்த படியாகப் பொது வாழ்வில் ஈடுபட்டு, பிறகு சுதந்திராக் கட்சியின் முன்னணித் தலைவராக விளங்கிய பொழுதும், அவர் எடுத்துக் கொண்ட திட்டங்களுக்காகவும், அவர் சார்ந்திருக்கிற கட்சி சுதந்திராக் கட்சியாக இருந்தாலும் கூட, நாட்டில் வாழக்கூடிய ஏழை எளிய மக்களின் வாழ்வு, இன்னல்பட்டுக் கொண்டிருக்கிற, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்வு ஏற்றம் பெற வேண்டுமென்று அவர் ஆற்றிய பணி, போற்றுதலுக்குரியது. அவர் சார்ந்திருக்கிற சுதந்திரா கட்சியினுடைய கோட்பாடு வேறாக இருந்தாலும், நாட்டு மக்களுடைய நன்மைக்காகத் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்டவர் என்பதை இந்தச் சபை நன்கு அறியும். அவரது மறைவும் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியத் துணைக்கண்டத்திற்கே பேரிழப்பாகும் என்று சொல்லி, முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை, இந்திய தேசிய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வழிமொழிந்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் தலைவரவர்களே, இரண்டு மாமேதைகளுடைய மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அவை முன்னவர் இரண்டு இரங்கல் தீர்மானங்களை முன்மொழிந்திருக்கிறார். அதனை இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் சார்பாக நான் வழிமொழிந்து என்னுடைய மரியாதையை மறைந்த தலைவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 6

ஒருவர் சட்டப் பிரிவில் மிகப் பெரிய மேதையாக விளங்கினார். வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் இருந்து சட்டத் துறைக்கு மாபெரும் சிறப்பைச் சேர்த்த ஒரு மாமேதை அவர்.

1965 இல் தமிழகத்தில் மொழிப் போராட்டம் நடைபெற்ற பொழுது, தமிழகம் முழுவதும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஆர்த்தெழுந்தபோது நான உயர்நீதி மன்றத்தில் ஒரு ஜூனியர் வக்கிலாக இருந்தேன. அப்பொழுது ஜூனியர் வக்கில்கள் எல்லாம் சேர்ந்து, ஜூனியர் அட்வகேட்ஸ் அசோசியேஷன் என்று ஒரு அசோசியேஷனை அங்கே ஏற்படுத்தியிருந்தோம்.

[முற்பகல் 11.00]

அந்தச் சந்தர்ப்பத்தின் வாயிலாக 1965 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் தேதி ஓர் அறிக்கையை உயர்நீதிமன்றத்தின் எல்லா வழக்கறிஞர்களுக்கும் கிடைக்கும் வகையில் நாங்கள் வெளியிட்டோம். அதிலே 1965 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் தேதி மாநிலத்தில் இருக்கிற அத்தனை வழக்கறிஞர்களும் நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் இந்தி ஆதிக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தம்முடைய கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விட்டோம். அதனை ஆட்சேபித்து அங்கே உயர்நீதிமன்றத்திற்குப் பொறுப்பில் இருந்த அதிகாரி அவர்கள் 'ஜூனியர் அட்வகேட்ஸ் அசோசியேஷன்' தலைவராக இருந்த என்னை அழைத்துக் கொண்டு உயர்நீதி மன்றத்தில் அன்றைக்குத் தலைமை நீதிபதியாக இருந்த மாண்புமிகு சந்திரா ரெட்டி அவர்களுடைய அறைக்கு அழைத்துச் சென்று இப்படி செய்கிறார்கள், இதைக் கண்டிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது அவர்கள்,

'Before they begin their agitation, why are you so much agitated? They have brought their agitation only to the Advocates' Chambers and not to the Chambers of the Judges and Law Officers. Therefore, this being an extraordinary situation, other things being equal, what you say is correct, that politics should not be brought to the Court premises. But now other things are seldom equal, they are unequal. There is an extraordinary situation and therefore they are doing something which is their business. So I would request you, young friends, that you should not bring your agitation to the Court Chambers but keep it to the Advocates' Chamber.'



1977 ஜூலை 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்று சொன்னார்கள். வழக்கறிஞர்களுடைய இந்தப் போராட்டம் அவர்களுடைய சேம்பர்ஸில் நடக்கின்றது. ஆகவே, அதை எதிர்ப்பதற்கு நமக்குக் காரணம் இல்லை. சமுதாயத்தில் இன்றைக்கு அசாதாரணமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அசாதாரணமான சூழ்நிலையில், அசாதாரணமான காரியங்களை நாம் செய்யத்தான் வேண்டியிருக்கிறது. ஆகையினால் அதை எதிர்த்து நீங்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள் என்றால், நீதித் துறையில் இருந்தாலும் சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாறுதல்களையும் மறுமலர்ச்சிகளையும், போராட்டங்களையும் எவ்வளவு தூரம் மதித்திருக்கிறார் என்பது நமக்குத் தெரிய வருகிறது. அப்பேர்ப்பட்ட மாமேதை இன்றைக்கு நம்மிடையே இல்லை. அவரது மறைவிற்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மறைந்த மாமேதை பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் கல்வித் துறையிலும், சமூகத் துறையிலும் மிகப் பெரிய அளவிற்குச் சேவையை இந்த நாட்டிற்கு ஆற்றி இருக்கிறார்கள். இங்கே அவை முன்னவர் அவர்கள், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அவர்கள் கல்வித் துறையில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைச் சிறந்த அறிவாளிகளாகவும், சமூக, சமுதாயவாதிகளாகவும், பொருளாதார விற்பன்னர்களாகவும் ஆக்கி இருக்கிறார்கள். அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபடா விட்டாலும் மனித ஜீவாதாரத்திற்கு அடிப்படையான சுதந்திரங்களுக்கு ஆபத்து ஏற்படும்போதெல்லாம் அதற்கான கண்டனத்தைத் தெரிவிப்பதில் வெளிப்படையாக எத்தகைய முற்போக்கு முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். அதனால்தான் அன்று திராவிட முன்னேற்றக் கழகம் இராஜ்ய சபைக்கு ஓரிரண்டு உறுப்பினர்களை அனுப்ப வாய்ப்புக் கிடைத்தபோது முதன் முதலாக பேரறிஞர் அண்ணா அவர்கள் பேராசிரியர் இரத்தினசாமியை இராஜ்ய சபைக்கு, அவருடைய அறிவு பயன்பட வேண்டுமென்று அனுப்பி வைத்தார்கள். அவர்கள் சிறந்த தேசியப் பற்றுக் கொண்டவர்கள்; மொழிப் பற்றும் கொண்டவர்கள்; மதப் பற்றும் கொண்டவர்கள்;

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 6

இனப் பற்றும் உள்ளவர்களாகத் திகழ்ந்தவர். கல்வித் துறையில் முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவராகவும், சமூக சீர்திருத்தம் ஏற்படுத்த வேண்டுமென்ற பேரவாவினைக் கொண்டவராகவும் இருந்தார். அன்னாருக்கு—மறைந்த அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் என்னுடைய சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னவர் முன்மொழிந்து எதிர்க்கட்சித் தலைவர்கள் வழிமொழிந்து காட்டிய உணர்வுகளுடன் என்னுடைய உணர்வினையும் இணைத்துக் கொண்டு என்னுடைய இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிஷம் மவுனமாக எழுந்து நின்று மரியாதை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும். ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

**(இ) இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் மறைவு குறித்து.**

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாமன்றத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"1977 பிப்ரவரி 11 ஆம் தேதியன்று இந்தியக் குடியரசின் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் மறைவை யொட்டி இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவருடைய மறைவினால் ஒரு உறுதியான விடுதலை வீரரையும், மேன்மையான அரசியல்வாதியையும், கல்வியறிவாளரையும், பண்பாளரையும் இந்நாடு இழந்துவிட்டது. தனது வாழ்நாளின் இறுதிவரை அவர் சற்றும் தளராது கடைப்பிடித்து வந்த உயரிய லட்சியங்களாகிய நாட்டுப் பற்று, நாட்டு ஒற்றுமை, மக்கள் தொண்டு முதலிய நற்பணிகளில் நம்மை நாம் மீண்டும் அர்ப்பணித்துக்



1977 ஜூலை 6] [திரு. கி. மனோகரன்]

கொள்வதே அவருடைய சீரிய நினைவுக்கு நாம் செலுத்தும் நினைவஞ்சலியாகும். அவரது மறைவினால் வருந்தும் அவரது துணைவியாருக்கும், குடும்பத்தின் ஏனையோருக்கும் இப் பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் ஆறாத் துயரையும் தெரிவித்துக் கொள்ளுகிறது."

மாமன்றத் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற மதிப்பிற்குரிய பக்ருதீன் அலி அவர்களைப் பற்றி இந்தச் சபையில் உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிற அனைவரும் மிகத் தெளிவாகப் புரிந்து இருப்பீர்கள என்று நான் மனதார நம்புகிறேன். குறிப்பாக, மதச் சார்பற்ற இலட்சியத்தில் நம்பிக்கை கொண்டவரும், தேசிய நீரோட்டத்தோடு தன்னை இணைத்துக் கொண்டவரும், தனக்கென்றுத் தனித்தன்மையை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று விரும்புகின்ற எல்லோரும் திரு. பக்ருதீன் அலியை மறக்கமாட்டார்கள் என்பது மிக நிச்சயமான ஒன்று. அவர் குடியரசுத் தலைவராக ஆவதற்கு முன்பு, சாதாரண இராஜ்ய சபா உறுப்பினராக இருந்த காலத்திலேயிருந்து அதற்குப் பிறகு அவர் "இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டராக" மத்திய அமைச்சரவையில் அங்கம் பெற்ற நாளிலிருந்து அவர் குடியரசுத் தலைவராக ஆகி, கடைசியில் தனது வாழ்நாளில் பெரும் புகழ் எய்தி, சாவில் நட்ட நாள்வரை அவரைத் தெரிந்துகொள்ளும் நல்வாய்ப்பை நான் பெற்றவன் என்ற முறையில் எனது சில உணர்வுகளை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

காலஞ்சென்ற பெருமதிப்பிற்குரிய பக்ருதீன் அலி அகமது அவர்கள் ஆரம்பத்தில் அஸ்ஸாம் மாநிலத்தில் நிதி அமைச்சராகப் பணியாற்றினர். அவரைப் பார்த்த நண்பர்களும், அவருடன் உரையாடிய நண்பர்களும் ஒரு உண்மையைத் தெளிவுடன் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். காட்சிக்கு எளியவரும், ஆனல் கருத்துக்களில் அழுத்தம் உள்ளவராகவும், தனது எண்ணத்தில் நிலையாக நிற்பவரும், தலைசிறந்த தேசியவாதியாகவும் இந்தியத் துணைக் கண்டத்தின் 56 கோடி மக்களின் ஒருங்குபட்ட உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கவல்ல, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய, உயர்ந்த பண்பாளராக விளங்கினர் என்பது நீங்கள் எல்லாம் அறிந்த ஒன்றாகும்.

## இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் மறைவு குறித்து.

[திரு. கி. மனோகரன்] [1977 ஜூலை, 6

பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் திரு. பக்ருதீன் அலி அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு, அறிஞர் அண்ணா அவர்களோடு நான் பெற்றேன். அதைத் தொடர்ந்து, அண்ணா அவர்கள் காலஞ்சென்றதற்குப் பிறகு, அதே பக்ருதீன் அலி அவர்களை, அவர்கள் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது சந்திக்கின்ற வாய்ப்பு, நமது முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்களோடு நான் பெற்றேன் என்பதும், திரு. பக்ருதீன் அலி அவர்கள் எந்த அளவுக்குத் தமிழகத்தின்பால் பற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதும், தமிழகம் தொழில் துறையில் முன்னேற எவ்வளவு அக்கறை உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், நாட்டுக்கும் தெரியும் என்று நம்புகின்றேன்.

திரு. பக்ருதீன் அலி அவர்கள் தம் சட்டப் படிப்பை, இன்னர் டெம்பிளில் முடித்துவிட்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்துவிட்டு, உலகத்தின் பல்வேறுபட்ட நாடுகளில் சுற்றி, ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர் என்ற உணர்வை உருவாக்காமல், ஓர் உலக மனிதனாக, உலகத்தில் இருக்கிற மானிட சமுதாயத்தின் ஓர் அங்கமாக தன்னைக் காட்டிக்கொண்டார், காப்பாற்றிக்கொண்டார் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அப்படிப்பட்ட நல்லவரின் இழப்பு எவ்வளவு பெரிய பேரிழப்பு என்பதை நான் சொல்லிக் கொள்ளத் தேவையில்லை. அவர் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாரோ அந்தக் கட்சிக்கு விசுவாசம் உள்ளவராகவும், அந்தக் கட்சிக்கு நெருக்கடியான நேரத்தில், அந்தக் கட்சியைக் காப்பாற்றுவதில் உறுதியுள்ளவராக இருந்தார் என்பதையும், ஆனால், அந்தக் கட்சி தவறு செய்கின்ற நேரத்தில் தட்டிக் கேட்பதில் சளைக்காதவராக இருந்தார் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல சந்தர்ப்பங்களில் அன்றைக்குப் பிரதம மந்திரியாக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்குப் பல்வேறுபட்ட யோசனைகளைச் சொல்லி, சில நேரத்தில் யோசனைகளைச் சற்றுக் கடுமையாகவும் தெரிவித்து, தனது தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்வதில் தனக்கு நிகர் தானே என்பதை அவர் உருவாக்கினார் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று கருதுகிறேன்.

## இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் மறைவு குறித்து.

[திரு. கி. மனோகரன்]

1977 ஜூலை 6]

திரு. பக்ருதீன் அலி அகமது இந்திய துணைக் கண்டத்தின் தேசியத் தலைவர்களில்—முன்னணியில் நின்ற தலைவர்களில்— ஒருவர் ஆவார் என்பதை நான் சொல்லிக் கொள்ளத் தேவையில்லை.

அப்படிப்பட்ட பெருமதிப்பிற்குரிய, நியாயத்திற்குக் கட்டுப் பட்டு நடக்கின்ற பண்பாளரை இந்தியத் துணைக்கண்டம் இழந்து விட்டது—நிச்சயமாக நான் கருதுகிறேன்—ஈடு செய்ய முடியாத இழப்பு. அதை எப்படி நிறைவேற்றுவது என்பதையே இந்தத் தீர்மானம் இங்கே சுட்டிக் காட்டுகிறது. அவர் எந்த லட்சியத்திற்காக வாழ்ந்தாரோ, அந்த லட்சியத்தை நிறைவேற்று வதற்கு நாம் நம்மை இணைத்துக் கொள்வதன் மூலம், பிணைத்துக் கொள்வதன் மூலம், ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம், அவரது ஆத்மா சாந்தி அடையத்தக்க வகையில் பணியாற்றுவோம் என்ற சூளுரையை எடுத்துக் கொள்வது ஒன்றே நாம் அவருக்குச் செய்கின்ற சிறப்பான மரியாதைக்குரிய காரியம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து, மறைந்துபோன அவருக்கு நமது இரங்கலைச் சொல்லி, அவரது அருமை மனைவியார் அவர்களுக்கு இந்தச் சபையின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து, அவர் விட்டுச் சென்ற லட்சியங்களைத் தொடர்ந்து பின்பற்றுவோம் என்று கூறி நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன். இதையொட்டி மற்றைய கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நமது குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய பக்ருதீன் அலி அவர்கள் மறைவு குறித்து அவையின் முன்னவர் மாண்புமிகு மனோகரன் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உணர்வுகளையும் இணைத்துக் கொள்வதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

நமது நாட்டின் மிகப் பெரிய மனிதர்களில் ஒருவர் என்கின்ற புகழ் படைத்தவர் மறைந்த குடியரசுத் தலைவர் ஆவார்கள். அவர்கள் இளமைக் காலத்திலேயே இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, அடக்குமுறைகளுக்கு ஆளாகி, இந்திய மண்ணின் விடுதலை வீரர் பட்டியலில் தன்னை இணைத்துக் கொண்டவர் ஆவார். அஸ்ஸாம் மாநிலத்தின் அமைச்சர் பொறுப்பை ஏற்று, திறம்பட அதனை நடத்தியவர். அதற்குப் பிறகு மத்திய அரசின் தொழில் அமைச்சராகவும், அதன்

[திரு. மு. கருணாநிதி] [1977 ஜூலை 6

பின்னர் உணவு வேளாண்மைத்துறை அமைச்சராகவும் பொறுப் பேற்று, இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களின் பிரச்சினை களை, அவை முன்னவர் எடுத்துக்காட்டியதுபோல, மிக உன்னிப் பாகக் கவனித்து, அக்கறையோடு நிறைவேற்றுகின்ற பண்பாட் டைப் பெற்றிருந்த பெருந்தகையாளர் மறைந்துவிட்ட குடியரசுத் தலைவர் அவர்கள்.

அவர்களுக்கு ஜனநாயகத்திலே எவ்வளவு நம்பிக்கை உண்டு என்பதையும், ஜனநாயகத்திற்குச் சீர்குலைவு ஏற்படும் என்று தோன்றிய நேரத்தில் எல்லாம் நடுநிலையோடு எப்படி அவர் கருத்துக்களை எடுத்துச் சொன்னார் என்பதையும் அவை முன்னவர் இங்கே எடுத்துக் காட்டினார்கள். ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்ட காலத்தில் அவர்களுடைய உள்ளம் எவ்வாறு எல்லாம் புழுங்கிற்று. அவர்களுடைய இதயம் எவ்வாறு எல்லாம் விம்மிற்று என்பதை அவர்களை உணர்ந்தவர்கள் நன்கு அறிவார்கள். ஜனநாயகம் சற்று அபசுரமாக மாறிய நேரத்தில், அந்த அபசுரத்தை மாற்றியமைத்து, இந்தியத் துணைக்கண்டத்தில் தேர் தல் பிரகடனப்படுத்தப்பட்ட அந்த அறிக்கையில் கையெழுத்திட்ட அந்தப் பெரியவர், ஜனநாயக கீதம் ஒழுங்காக ஒலிக்கின்ற நேரத்தில் நம்மிடையே இல்லாது போய்விட்டார்களே என்கின்ற பெரும் கவலை நம் உள்ளத்தை எல்லாம் ஆட்டிப் படைக் கிறது. இருந்தாலும், நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமை உடையது இந்த உலகம் - என்னும் வள்ளுவர் குறளுக்கு ஒப்ப, நாம் உலகின் பெருமையை எண்ணி, இந்த உலகுக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த அந்தப்பெரிய உத்தமரின் பணியை எண்ணி, அவருடைய புகழ் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டுமென்ற விழைவினைத் தெரிவித்து, அவருடைய குடும்பத்தாருக்கு குறிப்பாக அவருடைய அருமைத் துணைவியாருக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து, அவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை நான் இங்கே வழிமொழிந்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே காலஞ்சென்ற இந்தியக் குடியரசுத் தலைவர் மதிப்பிற்குரிய பக்ருதீன் அலி அகமது அவர்கள் மறைவு குறித்து அவை முன்னவர் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆமோதிக்கின்றேன்.



1977 ஜூலை 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மதிப்பிற்குரிய பக்ருதீன் அலி அவர்கள் விடுதலைப் போராட்டத்
தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டு செயலாற்றியவர் ஆவார்.
அப்படி விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு
செயலாற்றிய பெரும் தலைவர்களில் ஒருவராக வளர்ந்து,
இந்தியக் குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்கின்ற அளவு
வளர்ந்துள்ள ஒரு மாமனிதர். அவருடைய அனுபவம், சுதந்திரப்
போராட்ட காலத்திற்குப் பிறகு மாநில அமைச்சராகவும், மத்திய
அமைச்சராகவும் பல்வேறு பொறுப்புகளை ஏற்று இந்த நாட்டின்
வளர்ச்சிக்கு, இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்
பணி ஆற்றப் பயன்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் இந்திய நாடு மத பேதமற்ற ஒரு
கொள்கையை அனுஷ்டிக்கிறது, நடைமுறைப்படுத்துகிறது
என்பதனை எடுத்துக்காட்டாக இந்திய நாட்டில் ஒருவர் ஒரு
மதத்தின் காரணமாக, சிறுபான்மையினர் என்ற காரணத்திற்
காக எந்தப் பொறுப்பிலும் இருக்க முடியாது என்ற நிலை
இல்லாமல், ஒரு இந்தியக் குடிமகன் எந்த மதத்தைச் சேர்ந்தவ
ராக இருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்,
எப்பகுதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் எவ்வளவு
பெரிய பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள முடியும்
என்பதற்கு எடுத்துக்காட்டாக குடியரசுத் தலைவராக அவர்கள்
விளங்கினார்கள். அதுமட்டுமல்லாமல், தேசிய ஒருமைப்
பாட்டின் சின்னமாக அவர்கள் விளங்கினார்கள் என்று சொன்னால்
அது மிகையாகாது. அவர்கள் உணவு அமைச்சராக இருந்த
போதும் விவசாயத் துறை அமைச்சராக இருந்த போதும்
நாட்டினுடைய உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு
அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் அவர் ஆற்றிய
பணி, மகத்தானதொன்று. நாட்டின் பல்வேறு மாநிலங்களைப்
பஞ்சம் கவ்வியபோது வறட்சி நிலவியபோது, எல்லா மாநிலங்
களிலும் இருந்து வந்த உணவுப் பற்றாக்குறையைப் போக்கு
வதற்கு அரும்பாடுபட்டு பெரும்பணி ஆற்றினார்கள். மிக சிறப்
பான முறையில் பணியாற்றிய அவர்களை நினைக்காமல் இருக்க
முடியாது.

அவர்களுடைய பணியின் காரணமாக, தியாகத்தின் காரண
மாக, உழைப்பின் காரணமாக குடியரசுத் தலைவராக உயர்த்
தார்கள். அப்படி குடியரசுத் தலைவராக இருந்த நேரத்திலும்
கடைசி வரையிலும் நாட்டிலுள்ள அனைவருக்கும் சேவை

செய்து வந்த ஒருவருடைய மறைவு நம் அனைவருக்கும் ஒரு பேரிழப்பாக அமைந்து விட்டது. இந்த இழப்பை எப்படி ஈடுகட்டுவது என்றால் அவர்களுடைய வழிமுறைகளை பின்பற்றி, சாதி மத பேதமற்ற உழைப்பால் அதன் மூலமாக ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்துவதற்கு நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்வதுதான் அவருக்குச் செலுத்தக்கூடிய சிறந்த அஞ்சலி யாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, அன்னாருடைய குடும்பத்தாருக்கும், நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன்.

மறைந்துபோன நம்முடைய நாட்டு ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமது, அவர்களுடைய மறைவு, ஒரு சிறந்த தேச பக்தனை இந்த நாடு இழந்துவிட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அப்படிப்பட்ட ஒரு உயர்ந்த மனிதனை இந்த நாடு இழந்திருக்கிறது. நாடாளுமன்றத்தில் நல்ல குணங்களோடு அங்கு 500 சொச்சமுள்ள அங்கத்தினர்களிடமும் பழகி வந்தார். பாராளுமன்றத்தில் நாலா பக்கங்களிலிருந்தும், கேள்விகள் கடுமையாக வந்து கொண்டிருக்கும். அந்த நேரத்தில் எல்லாம் அதற்குப் பதில் சொல்கிற நேரத்தில் எல்லாம் அங்கே எழுப்பப் படுகின்ற கேள்விகளில் இருக்கின்ற கோபமோ கடுமையோ சிறிதும் இல்லாமல், அதனுடைய பிரதிபலிப்பு கொஞ்சமும் முகத்தில் வராமல் பதில் சொல்லிக் கொண்டிருப்பார். அதே போன்று இன்டரப்ஷன், அதாவது குறுக்கீடுகள் நாலா பக்கத் திலிருந்தும் வரும்போதும், குறுக்கீடுகளுக்கு இடம் கொடுத்து, நிதானமாகப் பதில் சொல்வார். கடுமையான குறுக்கீடுகள் வரும் நேரத்தில் அவர் உட்கார்ந்து கேட்டுவிட்டு, நிதான புத்தியோடு பதில் சொல்லுவார். உண்மையில் அதைப்பார்த்து யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அப்படிப்பட்டவர் மறைந் திருக்கக் கூடிய இந்த நேரத்தில் மார்க்ஸிஸ்டு கட்சியின் சார்பாக இரண்டு விஷயங்களை இங்கு சொல்லாமல் இருந்தால், இங்கு அவருக்கு மரியாதை செலுத்துவதாக ஆகாது.

ஒன்று, தேர்தலுக்கு முன்னதாக அதாவது இருபது மாதங்களாக இந்த நாட்டு மக்கள் பட்ட அல்லல்கள், துன்பங்கள், துயரங்கள், கொடுமைகள் இவைகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இது சம்பந்தமான புகார்களைப் பல கட்சிக்காரர்களும் கூறியபோது, ஜனாதிபதியாக இருந்து மறைந்துபோன பக்ருதின் அலி அகமது அவர்கள் இந்தப் புகார்களை எல்லாம் கேட்டு தாக்குப் பிடிக்க முடியாமல், அவருடைய உள்ளம் இவைகளை எல்லாம் கேட்டு தாக்குப் பிடிக்காமல் போய் இறுதியில் அவருடைய இருதயம் நின்று விட்டது என்றுதான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஸீரியஸாக கருதுகிற கருத்தோட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையிலும், மற்ற சட்ட சபைகளானாலும் சரி, நாம் சிறப்பாக சுதந்திரமாக முறைப்படி நடந்து வந்திருக்கிறோம் என்று சொன்னால், அதற்கு பெரும் பங்கு அவருக்கு உண்டு. அவர் மறைவதற்கு சிறிது நாட்களுக்கு முன்னதாக நம்முடைய நாட்டில் ராணுவ ஆட்சியின் ஆபத்து வந்துவிடுமோ என்ற எண்ணம் உண்மையிலேயே இருந்துவந்தது. அந்த நிலைமையிலிருந்து மாறி, அதைத் தடுத்து நிறுத்தி நமது உரிமைக்கு வழிவகுத்து கொடுத்ததில் யாருக்காவது பொறுப்பு இருக்கிறதா என்றால், அதில் பெரும் பொறுப்பு மறைந்த பக்ருதின் அலி அகமது அவர்களைச் சார்ந்தது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக, இரண்டு உண்மைகளைச் சொன்னால்தான், அவருக்கு அளிக்க வேண்டிய மரியாதைகளை நாம் கொடுத்தவர்களாக ஆவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு விஷயங்களிலும் அவரது துணைவியார் அவருக்குத் துணையாக இருந்து, அவர் இறப்பதற்காக வேதனைப்பட்ட நேரத்தில் இரவு பகலாக அவரோடு இருந்து, கணவருக்கு வேதனைகள் ஏற்படும்போது, கணவரோடு துணையிருந்து வேதனைப்பட்டார்கள். அப்படிப்பட்ட இரட்டிப்பு வேதனைகளை அனுபவித்த அந்த அம்மையாருக்கும் உண்மையில் மார்க்ஸிஸ்ட் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, சபையில் முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து முடிக்கின்றேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மறைந்த குடியரசுத் தலைவர் திரு. பக்ருதின் அலி அகமது அவர்களுடைய மறைவு குறித்து, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்]. [1977 ஜூலை 6

மறைந்த திரு. பக்ருதின் அலி அகமது அவர்கள் உயிரோடு
இருந்த பொழுது ஒரு சிறந்த இந்தியனாக வெளிநாட்டினரும்
பாராட்டக்கூடிய அளவில் இருந்தார்கள் என்று சொன்னால்
நிச்சயமாக அது மிகையாகாது. ஒரு சிறந்த தேச பக்தராக,
தேசீயத்தில் நம்பிக்கையுள்ளவராக, தேசிய ஒற்றுமை கலாச்
சாரம் இவைகளின் சின்னமாக அவர் இருந்தார் என்று
சொன்னால் நாம் அனைவரும் அதை ஏற்றுக்கொள்வோம். அவர்
மறைவு குறித்து பல்வேறு கருத்துக்கள் கூறினாலும் விவாதத்திற்
குரிய காரியங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவது பொருத்த
மாக இராது என்று எண்ணி அவர் இந்த நாட்டில், நெருக்கடி
நிலைமை அமலில் இருந்த போது அவர் மறைந்து விட்டார்
என்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டில் நெருக்கடி
நிலைமை தேவையா என்பதை அவர் எண்ணிப் பார்க்காமல்
இல்லை. ஒரு சிறந்த தேச பக்தன், ஜனநாயகத்தில் மிகவும்
நம்பிக்கையுள்ள தலைவன், ஜனநாயகத்திற்குச் சற்று பலகீனம்
ஏற்பட்டிருக்கின்றது என்று அறிந்த போது இந்த நாட்டைக்
காக்கவேண்டும், ஜனநாயகத்தைக் காக்கவேண்டும் என்கின்ற
எண்ணத்தோடு இந்த தேசத்தில் தேர்தல் வேண்டும் என்று
தேர்தல் அறிவிப்பை பிரகடனம் செய்தார்கள் என்பதை இந்த
நாட்டு மக்கள் அனைவரும் அறிந்திருக்கிறார்கள். ஆகவேதான்,
அன்னாருடைய தீர்க்கமான செயலால்தான் இந்த மாமன்றத்தில்
நாம் செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நாம்
அனைவரும் ஒத்துக்கொள்வோம் என்று எண்ணுகின்றேன்.
அப்படிப்பட்ட ஒரு சிறந்த தேசபக்தனை நாம் இழந்துவிட்டிருக்
கிறோம். அவர் பெரிய செல்வந்தராக இருந்தார். ஒரு சிறந்த
தேசீயவாதியாக இருந்தார், ஜாதி, மத சார்பற்ற தேசீயவாதி
யாக இருந்தார். இஸ்லாமிய மதத்தில் நம்பிக்கையுள்ளவராக
இருந்தாலும் எம்மதமும் சம்மதம் என்ற எண்ணத்தில் இருந்
தாலும், மதங்களின் உயர்ந்த நோக்கம் ஏழைகளுக்கு உதவி
செய்யும் என்று அவர் கருதிக் கொண்டிருந்தார்.

(முற்பகல் 11-30)

செயலில் அதனைச் செய்து காட்டினார்கள் என்று கூறுகிறபோது
நிச்சயமாக அது உண்மை என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.



1977 ஜூலை 6] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆக, இந்த நிலையில் இந்த நாட்டில் ஜனநாயகத்தைக்
காப்பாற்றி, நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து, நம்மை
விட்டுப் பிரிந்து இறைவன் அடி எய்திய அன்னாருடைய
குடும்பத்திற்கு ஜனதா கட்சியின் சார்பாக எங்கள் அனுதாபத்
தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி**: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,
அவை முன்னவர் மாண்புமிகு மனோகரன் அவர்கள் முன்
மொழிந்த இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின்
சார்பில் வழிமொழிந்து பேச முன்வந்திருக்கிறேன்.

மதிப்பிற்குரிய மறைந்த பக்ருதின் அலி அகமது அவர்கள்
இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்கிய
வர்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மக்களுடைய
நலன்களுக்காகவும் பாடுபட்டவர்கள். இந்திய நாட்டினுடைய
சுதந்திரத்திற்காக அல்லும், பகலும் அயராது உழைத்தவர்கள்.
'பாரத நாடு பழம்பெரும் நாடு' என்று பாரதி சொன்னானே,
அந்தப் பாரதியின் வழியில் நின்று பாரத நாட்டினுடைய
செல்வனாக வாழ்ந்தவர்கள். அவர்களுடைய சிறந்த தேச
பக்தியும், சேவையும், கல்வியறிவும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்
போராடிய அந்தத் தீரமும் இன்றைக்கு நாமெல்லாம் பெற
வேண்டிய இந்தச் சூழ்நிலையில், மறைந்த பக்ருதீன அலி அகமது
அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற இந்த வேளையில் இந்திய
கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அவருடைய மறைவிற்கும்,
அவருடைய மறைவினால் வருந்தும் அவருடைய குடும்பத்
தாருக்கும் எங்கள் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அஞ்சலி என்பது சம்பிரதாயத்திற்காகச் செய்வதில்லை; ஒரு
மறைந்த தலைவர் வழியைப் பின்பற்றி, பாரத தேசத்தின்
ஒருமைப்பாட்டையும், பாரத நாட்டின் வளர்ச்சியையும், முஸ்லீ
மானாலும், இந்துவானாலும், எந்த மதமானாலும், சாதியானாலும்
பாரத நாட்டின் பிள்ளைகள் என்ற உணர்வோடு ஒன்றுபட்டு
வாழவேண்டுமென்ற உணர்வோடு நம்முடைய தேசத்தின் சுதந்
திரத்திற்காகவும், தேசத்தின் ஜனநாயகத்தைக் காப்பாற்று
வதற்காகவும்—நம்முடைய நாடு பங்களாதேஷ், சிலி போன்று
ஆகிவிடாமல் தடுத்து நிறுத்தியதற்காகவும் இந்திய கம்யூனிஸ்டு
கட்சியின் சார்பில் அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறேன்.
வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்களால் பக்ருதீன் அலி அகமது அவர்களுடைய மறைவுக்காகக் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தை உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் நான் வழிமொழிகிறேன். ஏறக்குறைய 200 ஆண்டுக் காலமாக அந்நியர் ஏகாதிபத்தியத்தில் இந்திய நாடானது அடிமைப் பட்டிருந்தது. அந்த அடிமைத் தளையிலிருந்து இந்திய நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்து இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் சுதந்திரத்தை வாங்கித் தந்த முன்னணித் தலைவர்களில் சிறந்தவராக விளங்கிய பக்ருதீன் அலி அகமது அவர்களை நாம் இன்று இழந்து நிற்கிறோம். அப்படி சுதந்திரத்திற்காகப் போராடிய பல தலைவர்களை நாம் இழந்து இருக்கிற நிலையிலே பக்ருதீன் அலி அகமது அவர்கள் மதத்தால் வேறுபட்டு இருந்த போதிலும், அண்டை நாடான பாகிஸ்தானோடு இந்தியாவினுடைய உறவு சரிப்பட்டு இல்லாத நிலையிலும் கூட, இந்திய நாட்டினுடைய மிகப் பெரிய பொறுப்பை, இந்திய நாட்டின் ஜனாதிபதி என்ற பொறுப்பை இந்தியா அளித்திருக்கிறது என்று சொன்னால் அந்த மகான், அந்தப் பெரியவர் எந்த அளவுக்கு மதத்திற்கு அப்பாற் பட்டு, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, தான் ஒரு இந்தியன் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் தன்னுடைய சொல்லிலும், செயலிலும் என்பதை நாம் அறிவோம். அத்தகைய பெரியார் பல்வேறு பிரச்சினைகளில் தன்னுடைய கருத்துக்களை ஓர் இந்தியனாக இருந்து, இந்திய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் செயலாற்றிய அப்பழுக்கற்ற ஒரு அரசியல்வாதியை, கல்வியாளரை இழந்து வாடுகிறோம். அந்தப் பெரியாருடைய மறைவினால் வருந்துகிற குடும்பத்திற்கு, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் என் ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்தி அமர்கிறேன்.

திரு. டி. பி. மு. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் கொண்டு வந்துள்ள மறைந்த இந்தியக் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்களின் இரங்கல் தீர்மானத்தை இந்திய தேசிய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் வழிமொழிகிறேன். மறைந்த தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் இந்திய நாட்டுமக்கள் அடிமைப்பட்டு கிடந்த காலத்தில், நாட்டு மக்கள் விடுதலை வேட்கை கொண்டிருந்த காலத்தில் அந்த மக்களுக்கு

1977 ஜூலை 6]  [திரு. டி. பி. மு. பெரியசாமி]

எந்தப் பாதையைக் காட்ட வேண்டுமென்று இந்திய நாட்டுத் தலைவர்கள் பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில், இந்த நாட்டு மக்களுக்கு அகிம்சா முறையில் விடுதலை வாங்கித் தருவதா, புரட்சியின் மூலமாக விடுதலையை வாங்கித் தருவதா என்ற கேள்விக்குறி எழுப்பிய நேரத்தில், மதிப்புக்குரிய காலஞ்சென்ற இந்தியக் குடியரசுத் தலைவர் பக்ருதின் அலி அகமது அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு எந்த விதத்திலும் சுதந்திரம் வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். அந்த சுதந்திரத்தை ரத்தம் சிந்தித்தான் பெறவேண்டுமென்று கருதினால் கூட, நானும் அதற்குத் தயார் என்று சொன்ன பெருந்தகையாளர் பக்ருதின் அலி அகமது அவர்கள். பின்னால் சரித்திர ஆசிரியர்கள் பக்ருதின் அலி அகமது அவர்களை ஒரு அகிம்சாவாதி என்றும், காந்திய பக்தர் என்றும் சித்தரித்து விட்டார்கள்.

மதிப்பிற்குரிய அந்தப் புரட்சியாளர் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டு மக்கள் அடைய வேண்டிய பயனை அடைய முடியாமல் தவித்துக் கொண்டிருந்த வேளையில், இந்த நாட்டின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு இந்தியச் சட்ட மன்றத்தில் அவர் ஆற்றிய முதல் பேருரையிலே ஏழை எளிய மக்கள் அடைய வேண்டிய நல்ல பலன்களை அடைய முடியாமல் போனதற்குக் காரணம் இந்த நாட்டு மக்களுக்கு அன்றையதினம் நாம் ஆக்கிக் கொடுத்த அரசியல் சட்டங்கள், நாட்டு மக்களுக்கு நல்ல பலன் அளிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட ஒரு பெருந்தகையாளர், அப்படிப்பட்ட புரட்சி மனப் பான்மை உள்ளவரை இந்த நாடு இழந்து தவிக்கிறது. அவரை இந்த நாடு இழந்து தவிக்கிற இந்த நேரத்தில் அந்தப் பெருந் தகையார் எந்த நல்ல நோக்கத்திற்காகப் பாடுபட்டாரோ அந்த நல்ல நோக்கத்திற்கு, அந்த நற்பணிகளுக்கு இந்தச் சபையும் நாமும் நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று கூறி இந்திய தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக முன்னவர் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழி கிறேன், ஆதரிக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரத குடியரசுத் தலைவர் மேதகு அலி ஜனாப் பக்ருதின் அலி அகமது மக்பூர் அவர்களுடைய மறைவுக்காக அஞ்சலி செலுத்து வதற்காக நம்முடைய முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிந்து ஆதரிக்கிறேன். மார்க்கத்தின் பெருமை என்று பொருள் தருகின்ற பக்ருதின் என்ற சொற்றொ

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 6

டருக்கு ஏற்ப அவர் இஸ்லாம் மார்க்கத்திற்கு மட்டும் பெருமை சேர்க்கக்கூடியவராக அல்லாமல் அவர் ஏற்றுக் கொண்டிருந்த ஜனநாயக மார்க்கத்திற்கு, மனிதாபிமான மார்க்கத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய ஒரு பெரியவராகத் திகழ்ந்தார்கள் என்பதை இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மற்றத் தலைவர்களும் பேசிய பேச்சுக்களில் இருந்து நாம் நன்றாக உணருகிறோம். மேதகு, மறைந்த திரு. பக்ருதின் அலி அகமது அவர்கள் ஒரு சிறந்த தேசியவாதியாக விளங்கினார், ஒரு சிறந்த சிந்தனையாளராக விளங்கினார்; ஒரு நல்ல கல்வியாளராக விளங்கினார், சமூக சீர்திருத்தத்திலே அக்கறை கொண்டவராகத் திகழ்ந்தார். ஜனநாயகத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு திகழ்ந்தார், சிறந்த நிர்வாகியாகவும் இருந்தார். எந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும் அவர் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளுக்கு அழகு செய்யக்கூடியவராக, அணி சேர்க்கக் கூடியவராகத் திகழ்ந்தார். அவருடைய மூதாதையர் சிறந்த வீரர்களாக இருந்தார்கள், மறைந்த குடியரசுத் தலைவர் அரச பரம்பரையில் வந்தவர் என்ற காரணத்தினால் பல போராட்டங்களிலே ஈடுபட்டு சுதந்திரத்திற்காக உழைத்தவராகத் திகழ்ந்தார். அவருடைய தந்தையார் அவர்களே ஒரு போர் வீரராக, போர்த் தளபதியாகத் திகழ்ந்தவர் ஆவார்கள். அப்படிப்பட்ட வீரப் பரம்பரையிலே தோன்றிய திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் டெல்லிப் பட்டணத்திலிருந்து அஸ்ஸாம் மாநிலத்தின் தலைநகராகிய கௌஹாத்தியிலே சென்று குடியேறி அங்கே சிறப்பு மிக்க குடியைச் சேர்ந்தவராக, பெரிய செல்வந்தராக, அதிக செல்வாக்கு மிக்கவராக, 'படே சர்க்கார்' என்று அங்கேயுள்ள மக்கள் எல்லாம் அழைக்கக்கூடியவராகத் திகழ்ந்தார்.

அவர்கள் அந்த மாநிலத்தினுடைய நிதியமைச்சராகப் பல ஆண்டுகள் பணியாற்றி அவர்கள் அங்கேயே தொடர்ந்து இருப்பார்களானால் மற்ற இளைஞர்களுக்கு வாய்ப்புக் கிட்டுமோ இல்லையோ என்று கருதி டெல்லிப் பட்டணத்திற்கு வந்து மத்திய அரசாங்கத்திலே பல்வேறு பொறுப்புகளை ஏற்று, அவர் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளுக்கு எல்லாம் நீதி செய்யக்கூடியவர்களாக விளங்கினார்கள். அமைச்சராக இருந்தும், தாம் சார்ந்திருக்கிற கட்சிக்காக, நோய்வாய்ப்பட்ட காலத்திலேகூட, எல்லா இடங்களுக்கும் சென்று ஆக்கத்தைத் தேடக்கூடியவராகத் திகழ்ந்தார்கள். அவரது மறைவு குறித்து இந்த அவைக்கு வெளியேயும் உள்ளேயும் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன



1977 ஜூலை 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஆனால் இரங்கல் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே இந்த அவைமுன் நான் சர்ச்சைக்குரிய விவாதத்தை எழுப்ப விரும்பவில்லை. அவர்களுடைய உடலில் எத்தனை வேதனை ஏற்பட்டாலும், அவர்களுடைய உள்ளத்திலே எத்தனை பெரிய வேதனை ஏற்பட்டாலும் தான் ஏற்றுக் கொண்டிருக்கிற பதவிப் பொறுப்பைப் பொறுத்தவரையில் அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்ட விதிகளை மீறாமல் கட்டுப்பாட்டோடு பணியாற்றி வந்தார்கள், அதுதான் அவர்கள் பெற்றிருந்த மாபெரும் பெருமையாகும் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். அப்படி இருந்தும், சில சிக்கலான சூழ்நிலைகளிலே தாம் வகிக்கின்ற பதவிக்கு இருக்கிற கட்டுப்பாடுகளையும் பொறுப்புகளையும் கடைப்பிடித்து தனக்கு இருக்கிற உரிமைகளையும் விட்டுக்கொடுக்காத காரணத்தால்தான் இன்றைக்கு இந்திய நாட்டில் ஜனநாயகம் நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் இங்கே பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதிலே ஓரளவிற்கு உண்மை இருக்கிறது. வீரர் பரம்பரையிலே வந்த, மறவர் குலத்திலே வந்த அவர், உருது மாகவிஞர் திரு. ராவிப் அவர்களின் குடும்பத்திலே திருமணம் செய்ய எண்ணி பேகம் ஆபிதா அவர்களை மணந்தார்கள். அதன் காரணமாக இலக்கிய நயமும், வீரத்தின் மரபும் அவரிடம் சேர்ந்ததின் காரணமாக இரண்டு பண்புகளையும் அவர்கள் கொண்டிருந்தார்கள். அவர்கள் கனிவையும் காட்டினார்கள், வீரத்தையும் காட்டினார்கள். அவர்கள் எப்படி எப்படி அவைகளைக் காட்டினார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை, சொல்லவும் கூடாது. அப்படிப்பட்ட பெருமகனார் மறைந்துவிட்டார்கள். அவருடைய மறைவுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். அவர் இஸ்லாமியராகத் திகழ்ந்தாலும் தாம் ஒரு சிறந்த இந்தியராகத்தான் திகழ்ந்தார்கள் என்று இங்கே எடுத்துக் காட்டினார்கள். அது உண்மைதான்.

"இன் ஷானியத் ஹீ இன்ஷான்கோ இன்ஷான் பனாதி ஹை,
இன்ஷானியத் நஹி தோ இன்ஷான்—இன்ஷான் நஹீ'
ஹை."

மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் மனிதாபிமானம் அவனிடத்திலே இருக்க வேண்டும். மனிதன் முதலில் தான் ஒரு மனிதன் என்பதை உணரவேண்டும். அப்படி உணரவேண்டுமானால் மனிதாபிமானம் அவனிடம் இருக்க வேண்டும். மறைந்த குடியரசுத் தலைவர், நான் ஒரு மனிதனாக இருப்பதால் மனிதன் மனிதனாக இருப்பதற்கு ஒரு மார்க்கம் வேண்டும், அந்த மார்க்கம்

தான் இஸ்லாம் என்று சொன்னார்கள். ஆகவே, மனிதன் மனிதாபிமானத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர் ஒரு சிறந்த மந்திரி, தலைசிறந்த அறிவாளி. அவருடைய மறைவு குறித்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக மரியாதையைத் தெரிவித்துக் கொண்டு அவருடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தில் நானும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறந்த தேச பக்தரும், இந்த நாட்டு விடுதலை வீரரும், இந்தியக் குடியரசுத் தலைவராகவும் இருந்த திரு. பக்ருதீன் அலி அகமது அவர்கள் மறைவுகுறித்து முன்மொழியப்பட்டிருக்கின்ற இரங்கல் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த அரிய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொண்டு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த குடியரசுத் தலைவருக்கு அஞ்சலி தெரிவிக்கின்ற முறையில் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்துநிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப் பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மறைந்த திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவோடு நிறுத்தி, பேரவையை ஒத்திவைக்கிறேன். நாளைக் காலை 10 மணிக்கு ஆளுநர் அவர்கள் கூட்டு அவைக்கு உரையாற்றுவார்கள். நாளை மறுநாள் 8-7-1977 அன்று காலை 9-மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 11-48 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

இல்லை.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

**வெள்ளிக்கிழமை, 1977 ஜூலை 8.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிகழ்ச்சி நிரலில் முதல் நிகழ்ச்சி "வினாக்கள்-விடைகள்". வினாக்கள் அனுமதிக்கப்பட்டு இலாக்காக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விடைகள் வந்தபின் வினாக்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு விடையளிக்கப்படும். இன்று வினா-விடை நேரம் இல்லை.

### (1) ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) வினாக்களுக்கான விடைகளை விரைவில் பெறுவது குறித்து.

**திரு. ரா. உமாநாத்:** தலைவரவர்களே, ஒரு விஷயம் நான் சொல்ல விரும்புகிறேன். வினாக்களுக்கு 42 நாள் நோட்டீஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வினாவை இன்றைக்கு அனுப்பி வைத்தால், 42 நாள் பொறுத்துத்தான் அந்த க்வஸ்டி யனுக்கு விடை வரும். Then it will become a dead question பார்லிமென்டில் 10 நாள்தான் நோட்டீஸ். அங்கு இதைவிட 'டபிள் தி மெம்பர்ஷிப்' (Double the membership) இருக்கிறது. அங்கு 11-வது நாள் பதில் வரும். அமைச்சர்கள் பதில் கொடுப் பார்கள். அதேபோல் இங்கும் செய்ய வேண்டும். ஆகவே, 42 நாள் என்பதைத் தயவுசெய்து குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** சட்டமன்ற விதி களின்கீழ் சாதாரண கேள்விக்கு இத்தனை நாட்கள் அவகாசம் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. வினாக்கள் அங்கீ கரிக்கப்பட்டவுடன், அந்தந்தத் துறைக்கு அனுப்பப்பட்டு, பதில் கள் சேகரிக்கப்பட்டு, அதற்குப் பின்னரே அமைச்சர்கள் பதில்

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

அளிக்கிறார்கள். பதில்கள் சேகரிக்க அமைச்சர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இப்படிப்பட்ட அவகாசம் கொடுக்கும் முறையை விதிகளில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அவசரமான கேள்விகள் கேட்கவேண்டுமென்றால் 'ஷார்ட் நோட்டீஸ் க்வெஸ்டியன்'—குறுகிய காலக் கேள்விகள் இருக்கின்றன; அந்த அடிப்படையிலே கேட்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, நேற்றைக்கு முந்தைய நாள் இரங்கல் தீர்மானங்களை இங்கே முன் மொழிந்து நிறைவேற்றியபொழுது, காலஞ்சென்ற திரு. பொன்னப்ப நாடார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய ஒழுங்குப் பிரச்சினையை ஒட்டியதா, நீங்கள் கேட்பது?

THIRU J. JAMES: Sir, on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறதே, அதை ஒட்டியதா என்று கேட்கிறேன். இது வேறு என்றால் அப்புறம் அனுமதிக்கிறேன்.

**திரு. சா. உமாநாத்:** அமைச்சர் அவர்கள், அந்தந்த டிபார்ட்மென்டுக்கு அனுப்பி, பதில் பெற்று பிறகு அமைச்சர், அவைக்கு பதில் கொடுக்க வேண்டும், அதனால், 42 நாள் என்று விதிமுறையிலே இருக்கிறது என்று சொன்னார்கள். நாடாளுமன்றத்திலே இதே ப்ரொஸீஜர்தான். க்வெஸ்டியன் கொடுத்தவுடனே அது டிபார்ட்மென்டுக்குப் போகும். அங்கிருந்து அமைச்சருக்குப் பதில் வரும். பிறகுதான், க்வெஸ்டியன் லிஸ்டில், அது பிரின்ட் ஆகி சபையில் வரும். இருந்தாலும், க்வெஸ்டியன் கொடுத்து 10 நாள் முடிந்து, 11-வது நாள் பதில் பிரின்ட் ஆகி வரும்போது, அங்கே பிராக்டிக்கபிள் (practicable) ஆகும் போது, நமக்கும் பிராக்டிக்கபிள் ஆகவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். [illegible]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உமாநாத்தினுடைய ஒழுங்குப் பிரச்னைக்குப் பதில் கூறுகிறேன். நம்முடைய சட்டமன்ற விதிகளில் அதிகபட்ச நாள் 42 என்றிருக்கிறதே தவிர, 10 நாள்களில் விடை வந்தால், 42 நாள் வரை பொறுத்திருக்கப்

போவதில்லை. அந்த விதிகளிலே மாற்றம் ஏற்பட்டால், திரு. உமாநாத் சொன்னதைப்போல் மாற்ற அவை தயாரானால், நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஆனால், இன்றைக்கிருக்கிற சட்டமன்ற விதிகளில் மாக்சிமம் 42 நாள் என்றிருக்கிறது. விடை, ஒரு வாரத்திலும் தயாராகலாம். 42 நாட்களிலும் தயாராகலாம். ஆகவே சட்டமன்ற விதிகளின்படி அதிகபட்ச நாள் 42 என்பதாகும்.

**திரு. ரா. உமாநாத்:** விதியை மாற்ற வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பின்னால் யோசிக்கப்படும். இன்றைக்கிருக்கும் விதிகளின்படி, அதிகபட்சம் 42 நாள் என்பதாகும். அதன்படிதான் அவையை நடத்தவேண்டியிருக்கிறது.

**திரு. மு. அம்பிகாபதி:** அதையொட்டி நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். 42 நாள் என்பது தேவையற்றது. எனவே, அதை மாற்றி குறுகிய காலத்தில், மக்களுக்கு விவரங்கள் கிடைக்கும் வகையில் அவகாசத்தைக் குறைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கனவே கொடுத்த தீர்ப்பை ஒட்டித்தான் நீங்கள் எழுப்புகிறீர்கள். விதியை நீங்கள் மாற்றினால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இன்றைக்கு இருக்கும் விதிகளை ஒட்டித்தானே அவை நடக்க வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இங்கே சொன்ன மாதிரி ஷார்ட் நோட்டீஸ் கொடுத்து 3 நாள் ஆகிறது. அதற்கு எவ்வளவு நாள் ஆகும்? அதையாவது, இவ்வளவு நாளைக்குள், குறுகிய காலத்திற்குள் எடுத்துக்கொள்ள வேண்டும். முதன் முதல் இன்றைக்கு, குறுகிய காலக் கேள்வியைக் கொண்டுவந்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும். அதையும் காலதாமதப்படுத்தாமல், கேள்விகளுக்கான விடையைச் சீக்கிரமாகக் கொண்டுவருவதற்கு ஆவன செய்யவேண்டும். அதற்குத் தலைவரவர்கள் வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் இந்த மன்றத்தில் நீண்டகால பயிற்சி பெற்றவர். விடை தயாரான பிறகு, கொடுப்பதில் கால தாமதம் என்பதில்லை. ஆகையினால், இதில் காலதாமதம் என்ப தில்லை.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, ரூல் 34-ல் 'Provided further that the Speaker may with the consent of the Minister concerned order a question to be entered in the list of questions with shorter notice than fifteen days.' என்றிருக்கிறது. அமைச்சர் ஒத்துக்கொண்டால், அதை முன்ன தாகவே கொண்டு வரலாம் என்றிருக்கிறது.

MR. SPEAKER: 'Consent of the Minister concerned' . . . .

THE HON. THIRU G. R. EDMUND: That too is not mandatory but it is only optional.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, நான் கேட்டுக்கொள்வது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்ட ராமன் அவர்கள் சொல்லியதுதான். அமைச்சரிடம் சொல்லி சீக்கிரமாகக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி.

**(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. ரா. பொன்னப்ப நாடார் அவர்களின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் கொண்டுவரப் படாதது குறித்து.**

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, நேற்றைக்கு முன் தினம் இங்கே இரங்கல் தீர்மானங்கள் கொண்டுவந்து நிறை வேற்றியபொழுது, காலஞ்சென்ற திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம் கொண்டு வரப் படவில்லையே என்று கேள்வி எழுப்பப்பட்டபோது, அவையின் முன்னவர், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம் இன்றையதினம் கொண்டுவரப்படும் என்று உறுதி அளித்தார்கள். ஆனால், இன்றைக்குள்ள நிகழ்ச்சி நிரலைப் பார்க்கும்போது, அந்தத் தீர்மானம் சேர்க்கப்





படவில்லை. காலஞ்சென்ற திரு. பொன்னப்ப நாடார் கழிந்த 25 ஆண்டுக்காலம் சட்டசபை அங்கத்தினராகவும், ஜனதா கட்சியின் அகில இந்திய தலைவர்களில் ஒருவராகவும் இருந்தவர். இந்த அவையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றி அர சியல் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்திற்காக பம்பாய்க்குச் சென்று திரும்பி வருகிறபொழுது, 12—10—1976 அன்று . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் அதிகமாகச் சொல்லாமல், ஷார்ட்டாக முடியுங்கள். இல்லாவிட்டால் மற்ற காரியங்கள் கெட்டுவிடும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பம்பாயிலிருந்து வரும்போது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதையெல்லாம் ஜெனரல் டிஸ்கஷனில் வைத்துக்கொள்ளலாம். நீங்கள் ஒழுங்குப் பிரச் சினையைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பம்பாயிலிருந்து வரும்போது அவர் விமான விபத்தில் மாண்டு போனதை நாம் அறிவோம். அவருக்காக இரங்கல் தீர்மானம் அன்றையதினமே நிறைவேற்றி யிருக்கவேண்டும். பல்வேறு அசௌகரியங்கள் இருந்த கார ணத்தினால் அதனை அன்றையதினம் நிறைவேற்றவில்லை. இன்றைய தினமாவது அந்தத் தீர்மானம் வரும் என்று எதிர் பார்த்தோம். ஆனால், வரவில்லை, இது தமிழகத்திலிருக்கிற 4½ கோடி தமிழ் சமுதாயத்தையும் அவமதிக்கின்ற செயலாக இருக்கிறது. இது வேண்டுமென்றே செய்கிற காரியம் என்று நினைத்து, நாங்கள் வருந்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடியுங்கள், டிஸ்கஷ னுக்குப் போகாதீர்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இதற்கான காரணம் என்ன என்பதைத் தலைவரவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும் என நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற உறுப்பினர் கள், மேலவை உறுப்பினர்கள் 29 பேர் மறைந்திருக்கிறார்கள். 29-ல் எதெதெற்கு தீர்மானம் கொண்டுவரலாம் என்று முறை யாக யோசித்த பொழுது நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்

என்று முடிவெடுத்திருக்கிறேன். இந்த இரங்கல் தீர்மானம் நாளைக்கு வரும். இதோடு இதை விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இரங்கல் தீர்மானங்கள், குடியரசுத் தலைவர், திரு. சந்திரா ரெட்டி, திரு. இரத்தினசாமி ஆகியோரைப் பற்றி இங்கே வந்த நேரத்திலே, நான் இந்தப் பிரச்னையை இந்த அவையிலே எழுப்பினேன். எதிர்க் கட்சிக் குழுவினுடைய தலைவராகவும் நீண்டகாலம் சட்டப் பேரவையிலே உறுப்பினராகவும் இருந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் திடீரென்று மறைந்தமைக்காக அனுதாபத் தீர்மானம் அன்றைக்கே இணைத்திருக்க வேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். அதோடு வேறுசில சட்டமன்ற உறுப்பினர்கள் மறைவிற்கும் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். அப்பொழுது அவையினுடைய முன்னவர் அவர்கள் இது மறுநாள் வரும் என்று குறிப்பிட்டார். மறுநாள் இன்றைக்குத்தான். இன்றைக்கு அது வராதது வருந்தத்தக்கது என்று மாத்திரம் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய மறைவு குறித்த இரங்கல் தீர்மானம், இன்னும் மற்ற சட்டமன்ற மறைந்த உறுப்பினர்களின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் வேறு எந்த நிகழ்ச்சியையும் நாம் நடத்துவது முறையாகாது. அதற்கு இந்த அரசு துணையாக இல்லாமல் இருப்பது குறித்து வருத்தம் தெரிவித்து மீண்டும் இங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளில் இன்றையதினம் கலந்து கொள்வது இல்லை என்று கூறி நாங்கள் வெளியேறுகிறோம்.

**(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)**

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் அதேபோல மறைந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எந்த வகையான அவமரியாதையையும் காட்ட வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த



விரும்புகிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுகின்ற வகையில், இரங்கல் தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பதை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். ஆகையினால் நம் ஜனதா கட்சியைச் சேர்ந்த தலைவர்களையும், மாண்புமிகு உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வதெல்லாம், இதை பெரிதாக வருத்தத்திற்குரிய செய்தியாக ஆக்க வேண்டாம் என்றும், அவர்கள் மீண்டும் சட்டமன்ற நடவடிக்கைகளில் இன்று வந்து கலந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரு. பொன்னப்ப நாடாரை அவமரியாதை செய்ததாகாது என்று குறிப்பிட்டார்கள். அவமரியாதை செய்ததாக குறிப்பிடவில்லை. அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள், என்பதுதான் எங்கள் கருத்தாகும். திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இரங்கல் தீர்மானம் ஆரம்பத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுவதில் எந்தவிதமான சங்கடமும் உங்களுக்கு ஏற்பட்டிருக்க முடியாது. மறந்து விட்டீர்கள் அல்லது அலட்சியப் படுத்தி விட்டீர்கள் என்பதைத் தெரிவித்து, முழு நேரமும் அல்ல, அடையாளமாக அவர்களோடு இணைந்து வெளிநடப்பு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இரங்கல் தீர்மானத்தில், அலட்சியப்படுத்துவதற்கோ, அவமரியாதைக்கோ இடம் இல்லை. இது வேண்டும் என்றே, வீண் பழிசுமத்தும் காரியம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, அன்றைய தினம் இதைப் பற்றிப் பேசும்போது இந்த இரங்கல் தீர்மானம் மறுநாள் இங்கே கொண்டு வருவதாகத்தான் குறிப்பிடப்பட்டது. மறுநாள் என்பது இன்று தான்; இன்றைக்குக்

கொண்டு வருவதிலே பெரிய சிரமங்கள் இருந்திருக்க முடியாது. அதைக் கொண்டு வாராதது பற்றி எங்களுடைய வருத்தத்தை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே நேற்றைய தினம் பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே இது பரிசீலித்திருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன். அதிலே எதிர்க் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டிருக்கக் கூடும்; இது ஏன் பேசப்படவில்லை என்பது தெரியவில்லை.

**திரு. ந. சங்கரய்யா:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை அரசாங்கம் இன்றைக்குக் கொண்டு வந்திருந்தால் நலமாக இருக்கும் என்று என் கட்சியின் சார்பிலே கூறிக்கொள்ளுகிறேன். ஆனால் இதை வைத்து சபையை விட்டு வெளியேற மாற்று கட்சியினர் எடுத்துக் கொண்டிருக்கும் முடிவு தேவையில்லை என்று கருதுகிறேன். இந்த அரசாங்கம் இன்றைய நிகழ்ச்சியிலேயே இதை எடுத்துக் கொண்டால் நலமாக இருக்குமென்று, எங்கள் கட்சியின் சார்பிலே கூறிக் கொள்ளுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, முதலில் நாம் பேசும்போது இதைப்பற்றி விவாதித்தோம். இப்போதும் அரை மணி நேரம் இடைவெளிவிட்டு, நீண்ட காலமாக, 20 ஆண்டுக்கும் மேலாக இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மறைந்ததற்கு நாம் முதலாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். எனவே அரை மணி நேரம் இடைவெளிவிட்டு அனுதாப தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு நடவடிக்கைகளைத் தொடங்குவது நலம் என்று எங்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும், அனுதாப தீர்மானம் அடுத்தநாள் எடுத்துக்கொள்ளப்படும் என்று தாங்களே அறிவிப்பைச் செய்தீர்கள். ஏன் இது நிகழ்ச்சி நிரலிலே சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதற்கான காரணம் கூறப்படவில்லை. இன்றைக்கே சேர்த்துக்கொண்டிருந்தால் நலமாக இருக்கும் என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்த கருத்து நியாயமானது என்றுதான் படுகிறது. இருந்தாலும் இந்த விவகாரத்தில் வெளிநடப்பு செய்வது தேவையற்ற ஒன்று என்ற காரணத்திற்காக அவர்களை மீண்டும் அவை நடவடிக்



கையில் கலந்து கொள்ளவேண்டுமென்று தாங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். முடிந்தால் இன்றே இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு மற்ற அலுவல்களை எடுத்துக் கொள்வது நலம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னது போல ஆளுங்கட்சியைப் பொறுத்த வரையிலும் அதே கருத்தைத்தான் கொண்டு இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளுவதற்குப் பதிலாக அதை நாளைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் தீர்மானித்துள்ளார்கள். அதற்குக் காரணம் மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் மட்டுமல்ல. இந்த சட்டமன்றப் பேரவை, மேலவையிலே இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சுமார் 23 பேர்கள் மறைந்திருக்கிறார்கள். ஆகவே 23 பேர்கள் சட்ட பேரவை, மேலவை உறுப்பினர்கள் மறைவு குறித்தும் இரங்கல் தீர்மானம் கொண்டுவர இருக்கிறோம். மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் மறைவு குறித்து மட்டும் இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து மற்ற 23 பேர்களையும் மறந்து விட்டால் நியாயமாக இருக்காது. ஆகவே மறைந்த அத்தனை உறுப்பினர்களுக்கும் இரங்கல் தீர்மானம் கொண்டு வருகின்ற வகையில் நாளைக்கு பேரவை நிகழ்ச்சிகளிலே இடம் பெறும் என்று கூறிக் கொண்டு, இதை அரசியல் பிரச்சினை ஆக்க வேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

## 2. அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

'7—7—1977 ஆம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விவரம் உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்'.

### (ஆ) அலுவல் ஆய்வுக்குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு—தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 193 (1) வது

### அறிவிப்புகள்

விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்—

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்.
2. மாண்புமிகு முதல் அமைச்சர்.
3. மாண்புமிகு பேரவை முன்னவர்.
4. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
6. திரு. மு. கருணாநிதி.
7. திரு. க. அன்பழகன்.
8. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
9. திரு. என். சங்கரய்யா.
10. திரு. ஜே. ஜேம்ஸ்.
11. திரு. சோ. அழகர்சாமி.
12. திரு. ரா. மார்க்கபந்து.
13. திரு கே. கந்தசாமி.
14. திரு. எம். அப்துல் லத்தீப்.
15. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
16. திரு. துரை. கோவிந்தராசன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

### (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

### (1) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

**(இ) சட்ட முன்வடிவுகளின் நகல் தமிழில் வழங்கப்படாதது குறித்து.**

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தின் நடவடிக்கைகள்,



தமிழில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பில்லின் நகல் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி மேலாவது தமிழில் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்ட முன்வடிவை ஆங்கிலத்திலேயிருந்து தமிழில் சரியானபடி மொழிபெயர்க்கக் கூடிய அளவுக்கு நிலைமை இல்லை. கூடுமானவரையில் பேரவையின் நடவடிக்கைகள் தமிழிலேயே இருக்கவேண்டும் என்பதில் பேரவைத் தலைவர் பேரவா கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு தலைவர் இந்த மன்றத்திலே தமிழுக்கு முதலிடம் தருவார் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இதற்கு முன், சட்ட முன்வடிவு ஆங்கிலத்திலே இருப்பது நிறைவேற்றப் பட்டாலும், ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டதை தமிழில் கொடுப்பது வழக்கமாக இருந்திருக்கிறது. சட்டமன்ற நடவடிக்கைகளை தமிழிலிலே நடத்த நல்ல அமைச்சர்கள் இருக்கிறார்கள். சட்டத் துறையிலேயும் தமிழிலே திறமை வாய்ந்த பலர் இருக்கிறார்கள். இங்கே தமிழ் தெரியாத பலர் இருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தமிழிலே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(முற்பகல் 9-20)

### (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு—தொடர்ச்சி.**

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்:** நான் இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுக் கேற்ப நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டுமென்று பெயர் தந்திருக்கிருர்கள். ஆகவே, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நிமிடம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி எல்லோரும் என்னுடன் ஒத்துழைத்து, பெயர் கொடுத்துள்ள எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் கிடைக்கும்படி, குறிப்பிட்ட நிமிடத்திற்குள் தங்கள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். திரு. எஸ். ஆர். இராதா.

### (1) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

**(ஈ) ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெறுமுன் வெளியில் கருத்துக்களை கூறி அவை பிரசுரிக்கப்படுவது குறித்து.**

**திரு. மு. அம்பிகாபதி:** சார், On a point of order, பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடைபெறுவதற்கு முன்னால் அதுபற்றிய கருத்துக்களை வெளியில் கூறுவதும், அதைச் செய்தித் தாளில் பிரசுரிப்பதும் ஒழுங்குதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் அதுபற்றி உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப விரும்பினால், அதை எழுத்துமூலம் கொடுங்கள். நான் அதைப் பரிசீலித்து என்னுடைய முடிவினைத் தெரிவிக்கிறேன்.

### 4. விளக்கம் கோரல்.

**அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் உரிமை மீறல் பற்றிய தீர்மானம் ஆகியவைபற்றி குறிப் பிடப்படாதது பற்றி.**

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, விதி 42 இன் கீழ் பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். பேரவை விதிப்படியே அவை கூடுவதற்கு முன்பாகவே கொடுத் திருக்கிறோம். மற்ற அலுவலை எடுத்துக்கொள்வதற்கு முன்பு அந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று விதி சொல்கிறது. அவற்றைப் பற்றி தாங்கள் எதுவும் சொல்லவில்லை.



அதோடு அவை உரிமை மீறல் பற்றி 'அண்ணா' பத்திரிகையின் மீது ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவை தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினையை நாளை எடுத்துக்கொள்ள இருக்கிறோம் என்று என் அறையில் சொல்லி யிருக்கிறேன்

**திரு. மு. கருணாநிதி:** உரிமைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்த அவையில் முன்மாதிரியாக இருப்பது, உரிமைப் பிரச்சினையை உடனடியாக எடுத்துக்கொள்வது, அதற்குப் போதுமான ஆதாரங்கள், விவரங்கள் இல்லாத நிலைமையில், அந்த உரிமைப் பிரச்சினைபற்றி அவையில் படித்து, நாளையதினம் எடுத்துக்கொள்வோம் என்று அறிவிப்பது வழக்கம். அதைப் போல தாங்கள் இன்று அறிவிக்கவில்லை என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனி அடுத்து வருகிற உரிமைப் பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளும்போது இதுபற்றி யோசிக்கிறேன்.'

### (5) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

***திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நேற்று ஆற்றிய உரைக்குக் கீழ்க்கண்ட நன்றி கூறும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள், 7 ஆம் தேதி அன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

---

@ 199-205 ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பெற் றுள்ளது.

@ 206-215 ஆம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப் பெற்ற ஆளுநர் உரையின் தமிழாக்கம் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. துரை கோவிந்தராசன் : நான் இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்தப் பேரவையில் ஆற்றிய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை நான் முன்மொழிந்ததையொட்டி, ஒருசில கருத்துக்களை அவைமுன் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இதுவரையில் பல்வேறு ஆளுநர்கள் இந்த அவையில் உரையாற்றியிருக்கிறார்கள். அந்த உரைகள் எல்லாம் ஆங்கிலத்தில் நடைபெற்று வந்திருக்கின்றன. ஆனால் நேற்றைக்கு நமது ஆளுநர் அவர்கள், தமிழ்மொழியில் ஆரம்பித்து, முடிக்கின்ற நேரத்திலும் தமிழ் மொழியில் முடித்திருக்கின்ற அளவுக்கு அவருடைய தமிழ் ஆர்வம், தமிழ் உணர்வு இருந்திருப்பதை நாம் உள்ளபடியே பாராட்டியாக வேண்டும். இன்றைய தினம் தமிழக ஆளுநர் அவர்கள் தமிழை அறிந்து கொள்வதில், தமிழைத் தெரிந்துகொள்வதில் மிக்க உற்சாகத்தைக் காட்டுகிறார், ஆர்வத்தைக் காட்டுகிறார் என்பதை அவர் தம் பேச்சின் துவக்கத்திலும், முடிவிலும் தெரிவித்ததன் மூலமாக தமிழகத்தில் இருக்கிற மக்களுக்கு அவர் தெரிவித்திருக்கிறார் என்று நான் கருதுகிறேன்.

அவருடைய உரை உள்ளபடியே, இத்தனை ஆண்டுகளாக பல்வேறு ஆளுநர்கள் ஆற்றிய உரைகளில் இருந்து மாறுபட்டு, பல்வேறு பிரச்சினைகளை மிகத் தெளிவாக இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருப்பதாக அமைந்திருக்கிறது. ஆளுநர் அவர்கள் இந்த அரசு அமைந்தது பற்றியும், தேர்தல் நடைபெற்றது பற்றியும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஒரு அச்சமற்ற, நேர்மையான தேர்தல் நடைபெற்றது என்பதை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நடைபெற்ற தேர்தலைப்பற்றி பல்வேறு வகையான கருத்துக்கள் இருந்தாலும் ஆளுநர் அவர்கள் தெளிவாக அச்சமற்ற, நேர்மையான தேர்தல் நடைபெற்றது என்று சொல்லும்போது இன்றைக்கு தமிழகத்தில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டுள்ளதையும் இந்த அவையைப் பார்க்கிற நேரத்தில் நமக்கு மிக நன்றாகத் தெரியும். அச்சமற்ற, நேர்மையான தேர்தலுக்கான காரணங்களைக் குறிப்பிடவில்லை





என்றாலும், அவர்கள் அடுத்து ஒன்று சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்தில் அமைந்திருக்கிற அரசு லஞ்ச ஊழலைக் களைகின்ற அரசாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள்.

இன்றைக்கு தமிழகத்தில் முதலமைச்சராக பொறுப்பேற்று இந்த அவையில் உட்கார்ந்திருக்கிற புரட்சித் தலைவர் இந்த அரசு அமைவதற்கு முன்னால் லஞ்ச லாவண்யம் அற்ற ஒரு நேர்மையான அரசு வேண்டுமென்பதற்காக மிகப் பெரிய போராட்டங்களை நடத்தி, இன்றைக்கு தமிழக மக்கள் அத்தனைபேரும் ஏற்றுக் கொள்கிற வகையில் இந்த அரசை அமைத்திருக்கிறார்கள். இந்த அரசு லஞ்ச லாவண்யங்களை, ஊழல்களைக் களைய வேண்டுமென்பதில் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்துகிறது என்பதை ஆளுநர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். லஞ்ச ஊழல்களைத் தடுப்பதிலும், நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்வதிலும் எவ்வளவு விரைவாக, தீவிரமாக இந்த அரசு செயல்பட இருக்கிறது என்பதை ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். இந்த அரசு இன்றைக்கு லஞ்ச ஊழல்களைத் தடுப்பதற்கு, நிர்வாகச் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு எவ்வளவு ஆர்வம் காட்டுகிறது என்பதற்கு நமது ஆளுநர் அவர்களுடைய உரையையே நாம் சாட்சியாக எடுத்துக் கொள்ளலாம். இன்றைக்கு அமைந்திருக்கிற இந்த அரசு இதுவரையிலும் இருந்த லஞ்ச லாவண்யங்களை, ஊழல்களைக் களைவதிலும், ஊழல்களை செய்தவர்களை, அவர்களுக்குரிய தண்டனையை வாங்கிக் கொடுப்பதிலும், ஒரு செம்மையான, தூய நிர்வாக அமைப்பின்மூலம் ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் பயன்படுகிற அரசாக அமைய வேண்டுமென்பதில் இன்றைக்கு நாம் மிகவும் அக்கறை கொண்டிருக்கிறோம். அதுவும் அடித்தளத்தில் இருக்கிற பிற்பட்ட மக்களுக்கு, நியாயம் கிடைக்கச் செய்வதன் மூலமாக நிர்வாகத்தை திறம்பட நடத்திட இந்த அரசு கொண்டிருக்கிற ஆர்வத்தை ஆளுநர் அவர்கள் தம் உரையில் எடுத்துச் சொல்லியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அதே நோக்கில் ஆளுநர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். மக்கள் அனைவருக்கும் சாதி, சமய, கட்சி சார்பற்று நியாயம் வழங்கப்படவேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொன்ன இந்தக் கருத்தை அவையில் இருக்கிற அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசு எந்தச் சாதிக்கோ, எந்த

மத்திற்கோ எந்தக் கட்சிக்கோ உரிய அரசாக இல்லாமல் தமிழ்நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கிற பிற்பட்ட மக்களுக்கு இந்த அரசு பணியாற்றும் என்பதை மிகத் தெளிவாக ஆளுநர் அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பது நாம் பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

[முற்பகல் 9.30]

அதே நேரத்தில் இன்னொன்றையும் ஆளுநர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கிற உறவுகள் கட்சிப் பற்றற்ற உறவாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் எடுத்துக் சொல்லியிருக்கிறார்கள். அதனை ஆளுநர் அவர்கள் தெரிவித்திருப்பது இன்றைக்கு இருக்கிற மத்திய அரசோ அல்லது இங்கிருக்கிற இந்த மாநில அரசோ பல்வேறு விவகாரங்களில் மாறுபட்ட கருத்து கொண்டிருந்தாலும் அந்த என்ற முறையில் இரண்டு அரசுகளும் தொடர்புள்ள அரசினராக மக்களுக்கு நன்மை செய்வதில் இரண்டு அரசுகளும் இணைந்து ஒன்றாகச் சேர்ந்து பாடுபடுவதில் அக்கறை காட்டியிருக்கிறது என்பதை அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

மொழியைப் பற்றி அவர்கள் தெளிவாக்குகிற நேரத்தில், அரசியல், கலாசாரம், பொருளாதாரம், மொழி இவற்றிற்காக இந்த அரசு மத்திய அரசிடம் வாதாடுவதற்குத் தயாராக இருக்கிறது என ஆளுநர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மொழிப் பிரச்சினை எந்த அளவிற்கு இன்றைக்கிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். இன்று அமைக்கப்பட்டிருக்கிற இந்த அரசு மொழிப் பிரச்சினையில் எந்த அளவிற்கு ஆர்வம் காட்டுகிறது என்பதை ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் தெரிவித்திருக்கிறார்கள். இரு மொழிக் கொள்கையை அறிவித்த அவர் மத்திய அரசு எந்த அளவிற்கு அதில் நடந்து கொள்ளும் என்பதை அவர்கள் எடுத்துச் சொல்கிற நேரத்தில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையில் எடுத்துச் சொல்வேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதைச் சொல்கிற நேரத்தில் இந்த மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டது என்றாலும், தனி அதிகாரங்கள், தனியாக சுயேச்சையாக இயங்குகிற அரசாங்கத்தை நடத்துவதற்கு சில அதிகாரங்கள் தேவை என்பதையும் அவர்கள் கோடிட்டுக் காட்டுகிற வகையில் வெளியிட்டிருக்கி





றார்கள். மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் தர வேண்டும் என்கிற உணர்வு இருக்கிறது என்பதை, இன்றைக்கு மத்தியில் உள்ள பிரதம அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்திருப்பதை ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த உறுதிமொழி செயல்வடிவம் பெறுகிற நேரத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு அரசியல் பிரச்சினைகள் அடிபட்டுப் போகும் என்பதை நான் இந்த அவையில் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வேன். அப்படி ஒரு நிலை ஏற்படுகிறநேரத்தில் பிரதம அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற வாக்குறுதியின்படி மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஒரு நெருக்கமான உறவு ஏற்பட்டு அந்த உறவின் மூலமாக நல்ல அதிகாரங்கள் மாநில அரசுக்கு அமையுமானால் இந்தக் கூட்டாட்சி அமைப்பில் ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒரு இணைந்த அரசாக அமைவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தங்கள் வரும் என்பதை ஆளுநர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அப்படி வருகிற நேரத்தில் நாம் என்ன விரும்புகிறோமோ, நாம் எதை எதிர்பார்க்கிறோமோ அந்தக் காரியங்கள் இன்றைக்கு நடைபெறும் என்பதை ஆளுநர் அவர்கள் சுட்டிகாட்டியிருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும். இந்த மாநில அரசு நினைப்பதைச் செய்வதற்கு, காரியமாற்றுவதற்கு இடம் தர வேண்டும் என்பதில் இன்று ஆளுநர் அவர்கள் காட்டுகிற ஆர்வம் உள்ளபடியே பாராட்ட வேண்டிய ஒன்றாகும். அதற்காக ஆளுநர் அவர்கள் மத்திய அரசோடு, மத்திய அரசில் இருக்கிற பிரதம அமைச்சர் அவர்களிடம் பேசி அதற்காக சட்டத் திருத்தங்கள் புதிய வடிவம் தருவதற்கு இந்த அரசின் மூலமாக பல்வேறு பணிகளை ஏற்றுக்கொள்வதற்கு இன்றைக்குத் தயாராக இருக்கிறார்கள். அப்படி எடுக்கிற நேரத்தில் பல்வேறு பிரச்சினைகள் நமக்குத் தீருவதற்கு வழி ஏற்படும்.

இன்றைக்கு ஆளுநர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் அண்டை மாநிலத்தில் இருக்கிற மாநில அரசோடு பல்வேறு நேரங்களில் மாறுபட்ட கருத்துக்கள் வருகின்ற காரணத்தால் இந்த மாநிலம் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு அண்டை மாநிலமாக இருக்கிற மைசூர் மாநிலத்தோடு, கேரள மாநிலத்தோடு, இந்த மாநிலத்தில் இருந்த பழைய அரசுக்கு உறவு சரியாக இல்லாத

நிலையில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படும் என்பதை ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த உறவுகள் சுமுகப்படுத்தப்பட்டு உறவுகள் இன்றைக்கு நேசமாக மாறி இந்த இரண்டு அரசுகளும் இணைந்து காரியமாற்றுகிற ஒரு நிலை ஏற்படுமானால் என்னைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற எங்களுக்கு பல்வேறு வாய்ப்புகள் ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கொள்வேன். ஆளுநர் அவர்கள் அதைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அண்டை மாநில அரசுகளுடன் நேசமான உறவுகள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நேசமான உறவுகள் இருந்திருந்தால்—பல நன்மைகள் ஏற்பட்டிருக்கும். சென்ற ஆண்டு எங்களுடைய பகுதிகளில்—பல்வேறு மாவட்டங்களில்—விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமை இருந்தது; அந்த நேரத்தில் அரசாங்க அதிகாரிகளும், அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் அதைப் பற்றிக் கவனிக்காததின் விளைவாக வரவேண்டிய தண்ணீர் வராது, கல்லணைக் கால்வாயில் விட வேண்டிய தண்ணீர் விடாத காரணத்தால் எந்த அளவிற்கு விவசாயம் பாதிக்கப்பட்டது, தஞ்சை மாவட்டத்தில் எந்த அளவிற்குப் பாதிப்பிற்கு ஆளானோம் என்பதை மிகத் தெளிவாக்கியிருக்கிறார்கள். அதை இதயத்தில் வைத்துக் கொண்டு ஆளுநர் அவர்கள் அதைப் பற்றித் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இரு மாநில அரசுகளுக்கும் இடையே நல் உறவுகள் இருக்க வேண்டும். அந்த உறவுகளை வலுப்படுத்த நாம் முயற்சி எடுத்துக்கொள்வோம் என்று ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை நாம் பாராட்டியாக வேண்டும்.

அப்படிப்பட்ட உறவுகள் ஏற்படுகிற நேரத்தில் மொழிப் பிரச்னை உருவாகி விடும் என்பதால் இந்த அரசினுடைய மொழிப் பிரச்னை பற்றி ஆளுநர் அவர்கள் தெளிவாக்குகிற நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டு அதற்கு வழிவகுக்கிற வகையில் இருமொழிக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவோம் என்பதை ஆளுநர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பது மிக மிகப் பாராட்ட வேண்டிய ஒன்றாகும். இன்றைக்கு மொழிப் பிரச்னையில் எந்த அளவிற்கு வேகம் காட்டப்படுகிறது, அதிலே அரசியல் ஆதாயம் தேடுவதற்கு எந்த அளவிற்கு ஆர்வம் காட்டப்படுகிறது என்பது தெரியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த



மன்றத்தில் எடுத்து வைத்த, இந்த மன்றத்தின் அனுமதியோடு தமிழ்நாட்டிற்கு அளித்திருக்கிற அந்த இருமொழிக் கொள்கையை இன்றைக்கு இந்த அரசு ஏற்றுக்கொண்டு அதைத் தீவிரப் படுத்தி செயல்படுத்துவதற்கு ஆளுநர் அவர்கள் உறுதி கொடுத்திருப்பது உள்ளபடியே வரவேற்க வேண்டிய ஒன்று என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வேன்.

இருமொழிக் கொள்கையைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் ஆளுநர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தமிழ் இலக்கியங்கள், கலை, கலாசாரம் இவற்றைப் பாதுகாப்பதற்காகவும், ஆராய்வதற்காகவும் வழிவகை காணுவோம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் இலக்கியங்களை இன்றைக்குப் பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு, அதைப் பரப்புவதற்கு, வெளி நாடுகளில் அவற்றைப் பற்றி தெரிவிப்பதற்காக, பரப்புவதற்காக இன்றைக்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்கிறது என்று சொன்னால் இந்த அரசு எந்த அளவிற்கு தமிழ்மீது உற்சாகமான ஆர்வத்தைக் காட்டி, ஆதரவைக் காட்டி அதற்கான பணிகளில் ஈடுபடுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன்.

இன்றைக்கு தமிழ் மொழி பற்றி, கலை பற்றி, கலாசாரங்கள் பற்றி நாம் வெளிநாடுகளுக்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம். அப்படி ஈடுபட்டிருக்கிற நேரத்திலே, நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்வேன். தமிழ் மொழி பற்றி, கலை பற்றி, கலாசாரம் பற்றி, இலக்கியங்கள் பற்றித் தெரிவிக்கிற நேரத்தில் பழைய இலக்கியங்கள் என்று சொல்லி தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று இப்படி பழைய இலக்கியங்களை பார்த்துக் கொண்டிருப்பதை விட ஏழை எளியவர்களுக்குப் பயன்படுகிற இலக்கியங்களாக, அவர்கள் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய இலக்கியங்களாக பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பல்வேறு சுவடிகளும், புத்தகங்களும் இன்று நம்மிடம் இல்லாமல் இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு எழுத்தும், அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும், இவற்றைப் பல்வேறு இலக்கியங்களாக நாம் இன்றைக்கு உருவாக்கலாம். அந்த இலக்கியங்கள் ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகிற இலக்கியங்களாக அமையும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வேன். அவர்களுடைய

பேச்சுக்களும், எழுத்துக்களும் இலக்கிய வடிவம் பெறுவதற்கு ஆவன செய்வதாக ஆளுநர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பதை நாம் வரவேற்றாக வேண்டும்.

ஆளுநர் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். பருவ மழை தவறி இருப்பதால் காவிரிப் பகுதிகள் பாதிக்கப்படுமோ என்று அஞ்சி அப்படிப் பாதிப்புகள் ஏற்படுகிற நேரத்தில் அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பருவ மழை எந்த அளவிற்கு இந்த அரசை வஞ்சித்தாலும் அந்த வஞ்சகங்களைச் சமாளிப்பதற்கு, இயற்கையை எதிர்த்துப் போராடுவதற்கு இன்றைக்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகிறது என்பதையும் ஆளுநர் அவர்கள் தெரிவித்திருப்பது உள்ளபடியே நாம் வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

ஆளுநர் அவர்கள் பருவ மழை பற்றி எப்படி எடுத்துச் சொன்னார்களோ அதேபோல் விலைவாசி நிலை பற்றிச் சொல்லி, அதைக் கட்டுப்படுத்த, அதனை முறைப்படுத்த, அதனை ஒழுங்குபடுத்த நடவடிக்கைகள் எடுப்போம் என்று சுட்டிக்காட்டி அதனைச் சொல்கிற நேரத்தில் இன்றைக்கு விலைவாசிகள், அத்தியாவசியப் பொருள்களின் விலை எந்த அளவிற்கு நாட்டு மக்களுக்குத் தேவையான சில நேரங்களில் விலைகள் ஏறியிருக்கின்றன என்பதை ஆளுநர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சமையலுக்குப் பயன்படுகிற எண்ணெய்களின் விலைகள் இன்றைக்கு அதிகமாக ஆகியிருக்கிறது, அதனைக் குறைக்க வேண்டும், அந்த விலைகளைக் கட்டுப்படுத்தி இந்த மாநிலத்தில் உள்ள மக்களுக்கு அவற்றை முறையாகக் கொடுப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் தெரிவித்திருப்பது வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

உணவுப் பொருட்கள் உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளுக்கு வருமானம் வருவதற்கும், விவசாயிகளுக்கு வேலை இல்லாத காலங்களில் அவர்களுக்கு வருமானம் தேடித் தருவதற்கும், போதிய திட்டங்கள் ஏற்படுகின்றன என்பதைக் கேட்கிற நேரத்தில் உண்மையிலேயே மகிழ்ச்சி ஏற்படுகிறது. இன்றைக்கு விவசாயிகள் விவசாய காலங்களைத் தவிர மற்றக் காலங்களில் வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டு அவர்கள் எந்த அளவிற்கு கிராமங்களில் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை

தெளிவாக உணர்ந்து அதைத் தம்முடைய ஆளுநர் அவர்கள் விவசாய காலங்கள் தவிர வேலை தெரிவித்திருக்கிறார்கள். வேலைவாய்ப்பு தருவதற்கு இல்லாத காலங்களில் அவர்களுக்கு ஆளுநர் அவர்கள் இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-40)

வரவேற்றாக வேண்டும். அந்த நான் பாராட்டியாக வேண்டும். திட்டங்களைப்பற்றிச் சொல்லு ஆளுநர் அவர்கள் வேலைவாய்ப்புத் இருக்கின்ற குடியானவர் கின்ற அதே நேரத்தில் கிராமங்களில் ஏழை மக்களுடையவும் களுடையவும், விவசாயிகளுடையவும், வசதிகளை ஏற்படுத்தவேண்டும் குறைகளைத் தீர்ப்பதற்குப் பல்வேறு இருக்கிறார்கள். என்பதை ஆளுநர் அவர்கள் தெளிவு படுத்தி

அதில் அத்தியாவசியமாக கிராமங்களில் இருக்கின்ற மக்க ளுக்கு, கிராமப் பகுதிகளிலேயே உணவுப் பொருள் கிடைப் பதற்கு இந்த அரசின் மூலம் 16 ஆயிரம் கடைகளை திறப்பதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இவ்விதம் 16 ஆயிரம் கடைகள் திறக்கப்படுமானால், அது கிராமங்களில் இருக் கின்ற மக்களுக்கு பெரியதொரு வசதியாக அமையும் என்பதை கருத்திற்கொண்டு ஆளுநர் அவர்கள் அறிவித்திருப்பது மிக மிகப் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். 16 ஆயிரம் கடைகள் மூலம் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு இன்றைக்குத் தேவையான பொருள்கள் கிடைப்பதற்கு வாய்ப்பும் வசதியும் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் செய்தி உள்ளபடியே கிராம மக்களுக்கு நிச்சயமாக மகிழ்ச்சி அளிக்கும்.

வாடிக்கையாக இருக்கிற நிலைமை என்னவென்றால், நகரப் புறங்களில் ஏதாவது பொருட்களுக்குத் தட்டுப்பாடு என்று சொன்னால், பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களில் செய்தி வந்துவிடுகிறது. ஆனால் கிராமங்களில் ஏதாவது தட்டுப்பாடு ஏற்பட்டாலும் சரி, ஏதாவது கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் சரி, அதைப்பற்றிப் பலருக்கும் தெரிவதில்லை. இதைப்பற்றி அரசாங்கத்திற்கும் தெரிவதில்லை. பத்திரிகைகளுக்கும் தெரிவ தில்லை. நகர மக்களுடைய பிரச்னை என்றால் விரைவில் வெளியில் தெரியும். கிராம மக்களுடைய பிரச்னையென்றால் வெளியில் வருவ தில்லை. ஆகவே, ஆளுநர் அவர்கள் இந்த நிலைமையை உணர்ந்து புதிதாக 16 ஆயிரம் கடைகள் திறக்கப்படும் என்று அறிவித்

திருப்பது, கிராம மக்களின் மீது இந்த அரசு எந்த அளவுக்கு அக்கரையும் ஆசையும் வைத்திருக்கிறது என்பதை இதில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்தத்திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு திட்டங்களை எடுத்துச்சொல்வதாகக் கூறியிருக்கிறார்கள். திட்டங்கள் என்று சொல்லும்போது, அது வரவு செலவுத் திட்டத்தில் தான் சொல்லப்படுமே தவிர ஆளுநர் உரையில் வருகின்ற ஒன்று அல்ல. அரசின் கொள்கை அளவில் தான் இருக்கின்ற நிலைமைகளை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

மேலும், ஆளுநர் அவர்கள், இன்றைக்கு இருக்கின்ற வேலையில்லாத நிலைமை அதிகரித்து வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருப்பது பற்றியும் அதை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பதை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதன் மூலம், இன்றைக்கு நாட்டில் அதிகமாக இருந்துகொண்டிருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை, தொழிலாளர்கள் பிரச்னை இவைகளைப் போக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதையும் மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் இதைத் தெளிவாக்குகின்ற அதே நேரத்தில், இன்னொன்றையும் சொன்னார்கள்.

கிராம மக்கள் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதையும், கிராமங்களில் குடிதண்ணீர் வசதியில்லை, சாலை வசதியில்லை, சுகாதார வசதியில்லை. வீட்டுவசதியில்லை என்கிற நிலைமையையும் சுட்டிக்காட்டி இந்தக் குறைகளை எல்லாம் போக்குவதற்கு கிராமங்கள் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்கும், சாலை வசதிகளை ஏற்படுத்துவதற்கும் இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். இவ்விதம் அறிவித்திருப்பது, அது கிராம மக்களுக்கு மிகப் பெரிய பரிசு என்று தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன். இந்த 1977 ஆம் ஆண்டில் நாம் இருந்தும்கூட, 30 ஆண்டுகள் சுதந்திரத்திற்குப் பிறகும், குடிக்க தணணீர் இல்லாத கிராமங்கள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக நகரங்களுக்கு அருகாமையில் குடிநீர் வசதியில்லாத கிராமங்கள் எத்தனையோ இன்னும் இருக்கின்றன.





தேர்தல் காலத்தில் கிராமங்களுக்குப் போகும்போது ஏற்படுகின்ற நிலைமை நமக்கு எல்லோருக்கும் தெரியும். வோட்டு கேட்கும்போது, வோட்டு கேட்கிறீர்களே, எங்கள் கிராமத்தில் இன்னும் குடிதண்ணீர் வரவில்லையே என்று கேட்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். பல வேட்பாளர்கள் பல இடங்களில் குழாய்களை போட்டு வோட்டு வாங்கலாம் என்று யோசித்ததும் உண்டு. அந்த அளவுக்கு கிராமங்களில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லாம் நிச்சயமாக மறந்திருக்க மாட்டோம். அதை கவர்னர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு அதை தனது உரையில் கூறியிருக்கிறார்கள். குடிதண்ணீர் வசதியில்லாத கிராமங்களில் எல்லாம் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும், சாலை வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி இதற்கெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் அவர்கள் தனது உரையில் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கான திட்டங்களை பெரிய அளவில் விரைவாக செயலாற்றுவதற்கு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி என்று சொல்லும்போது, நகரப்பகுதிகளையும் விட்டுவிடக்கூடாது என்பதற்காக இன்றைக்கு சென்னை நகரத்திற்குத் தேவைப்படும் வீராணம் திட்டம் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்திற்கு வீராணம் எப்போது வரப்போகிறது என்று ஏக்கத்தோடு சென்னை நகரத்திலுள்ள மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்திற்கு வருகின்ற வழியில் ஒரு சிலை இருக்கும். அதன் கையில் ஒரு செம்பும் இருக்கும். அதில் தண்ணீர் எப்போது வரும் என்று சென்னை நகர மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வீராணம் திட்டத்தில் தண்ணீர் எப்போது வரும் என்று ஏங்கி சிலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் சென்னை நகர மக்கள்.

ஆனால், இன்று வீராணம் திட்டம் எங்கே இருக்கிறது என்பது பல பேர்களுக்குத் தெரியும். வீராணத்திற்கு ஏற்பட்டு இருக்கின்ற குறைகள், தவறுகள் இவைகளை விரைவில் சரிசெய்து அந்தத் திட்டத்தின் மூலமாக சென்னை நகரத்திற்குத் தண்ணீர் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுப்போம் என்றும் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு, வீராணம் மட்டுமல்லாமல், அண்மையிலுள்ள ஆந்திர மாநிலத்திலுள்ள

[திரு. எஸ். ஆர். இராதா] [1977 ஜூலை 8

கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் எடுக்க இருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைச் சொல்லுகின்ற நேரத்தில் கிராமங்களில் குடிதண்ணீர் கிடைக்கவேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறை காட்டுகிறாமோ அவ்வளவு அக்கறை நகர மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதிலும் காட்டுவதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மக்களுடைய பிரச்னைகளைப்பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் நலிவுற்றிருக்கின்ற அரிசன மக்கள், மீனவ மக்கள், வாழ்க்கையில் வசதியில்லாமல் அவதிப்படுகின்ற மகளிரையும் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். முக்கியமாக எனக்கிருக்கின்ற மகிழ்ச்சி என்னவென்றால், முக்கியமாக கைத்தறி நெசவாளர்களைப் பற்றி குறிப்பிட்டிருப்பதற்கு நான் இரண்டு நன்றி தெரிவிக்க ஆசைப்படுகின்றேன். நலிவுற்ற மக்கள் பட்டியலில் கைத்தறி நெசவாளர்களைப்பற்றி குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும். இன்றைக்கு லட்சக்கணக்கான தறிகள் செயலற்று, ஏற்கனவே உற்பத்தி செய்த துணிகளுக்கு விற்பனை இல்லாமல், அவைகள் தேங்கிக் கிடக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களைப் போக்குவதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான் மிகவும் பாராட்டிக்கொள்கிறேன். இவர்களுடைய கஷ்ட நிலைமையைக் கருதி இவர்களை நலிவுற்றோர் வரிசையில் சேர்த்திருப்பது, இவர்களுக்கு விரைவில் நல்ல பல திட்டங்கள் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையை உண்டு பண்ணும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஆளுநர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மின்சார உற்பத்தியை அதிகரித்து இதுவரை மின்சார வசதியில்லாத கிராமங்களுக்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு பழைய தேர்தல் காலம் நினைவுக்கு வருகிறது. பழைய அரசாங்கத்தில் இருந்தவர்கள் தங்களது தேர்தல் பிரகடனத்தில் நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது மின்சாரம் இல்லாத கிராமமே இருக்கக் கூடாது என்கிற நிலையை உருவாக்குவோம் என்று சொன்னார்கள். இருந்தும் அது நிறைவேற்றப்படாமல் இருப்பது நம்முடைய மனதில் உறுத்திக்கொண்டிருக்கும்போது, கவர்னர் அவர்கள்



1977 ஜூலை 8] [திரு. எஸ். ஆர். இராதா]

மின்சார உற்பத்தியை அதிகரிப்பதின் மூலம் மின்சாரம் இல்லாத கிராமமே இருக்கக்கூடாது என்ற நிலையை உண்டாக்கவேண்டும் என்ற அக்கறையோடு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

மக்களுடைய தேவைகளைப்பற்றியெல்லாம் சொன்ன ஆளுநர் அவர்கள், முக்கியமாக மதுவிலக்குபற்றி குறிப்பிட்டிருப்பது அதிகமாகப் பாராட்டுகின்ற ஒன்றாகும். அவர் மதுவிலக்கு கொள்கையிலே அக்கறை காட்டி வருகிறார் என்பது பாராட்டப்பட வேண்டிய இன்னொரு அம்சமாகும். இதே மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச்சொன்னதைப்போல், அவர்களுக்கு மதுவிலக்குக் கொள்கையில் இருந்த ஆர்வத்தையும் ஆசையையும் நாம் அறிவோம். அதே நிலையில், ஆளுநர் அவர்களும் மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருப்பேன் என்பதை மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லியிருப்பது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். பின்னால் மதுவிலக்குக் கொள்கையில் பல தடுமாற்றங்கள் ஏற்பட்டன. அது மதுவினால் ஏற்பட்ட மயக்கமா அல்லது மதுவிலக்குக் கொள்கையால் ஏற்பட்ட தடுமாற்றமா என்பது தெரியவில்லை. ஆகவே பேரறிஞர் அண்ணா அவர்களும், காந்தியடிகளும் கொண்டிருந்த மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமாக இருப்போம் என்று கவர்னர் அவர்கள் கூறியிருப்பதை நாம் மிகவும் பாராட்டியாக வேண்டும்.

ஆளுநர் அவர்கள் இன்னொன்றையும் தெரிவித்திருக்கிறார்கள். நகராட்சி தேர்தல், மாநகராட்சி தேர்தல், ஊராட்சி ஒன்றிய தேர்தல் இவைகளைப்பற்றியும் ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநர் அவர்களுடைய உரையில் என்ன புரட்சி இருக்கிறது என்று பலர் கேட்பது எனக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்பு குறிப்பிட்டார்கள், அடுத்து வருகின்ற நகராட்சி தேர்தல், மாநகராட்சி தேர்தல், ஒன்றிய தேர்தல் இவைகளில் எல்லாம் தலைவரை நேரடியாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று. அதைச் செயல்படுத்துகின்ற வகையில், இனி மேல் வருகின்ற நகராட்சி தேர்தலிலும், ஊராட்சி ஒன்றிய தேர்தலிலும் தலைவரை நேரடியாக தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்லியிருப்பது கிராமங்களில் இருக்கின்ற மக்களுக்கும், நகரங்களில் இருக்கின்ற மக்களுக்கும் கிடைத்திருக்கின்ற பரிசு என்று சொல்வேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1977 ஜூலை 8

(முற்பகல் 9-50)

இதன்மூலம் ஏற்படும் மிகப் பெரிய ஊழல் புகார்கள் எல்லாம் சொல்லப்பட்டது. பண மூட்டையை கட்டி வைத்துக் கொண்டு தலைவர் பதவிக்கு வேட்டையாடியவர்கள்கூட உண்டு. அதையெல்லாம் போக்கக்கூடிய வகையில், பொது மக்களே நேரடியாக தலைவரைத் தேர்ந்தெடுப்பது என்று ஆளுநர் அவர்கள் உரையில் கூறப்பட்டிருப்பதற்கு நான் பாராட்டும், நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆளுநர் அவர்கள் மாநிலத் திட்டக் குழுவிற்கு கூடிய விரைவில் புத்துயிர் அளித்து, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தை விரிவாக செயல்படுத்தப் போவதாக இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியதற்காக இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டுத் தெரிவிக்கின்ற நிலையிலே இருக்கிறோம். அப்படி ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே தெளிவாக எடுத்துக் கூறியதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் ஆளுநர் அவர்கள் உரையிலே இல்லை என்பதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் சிலரும் கருதுவதாகச் சொல்லப்படுகிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் ஞாபகசக்தி உள்ளவர்கள். அவர்களே, ஒரு கட்சி தேர்தலுக்கு வருகின்ற நேரத்திலே சொல்லக்கூடிய எல்லா வாக்குறுதிகளையும் ஆளுநர் அவர்கள் உரையிலே எடுத்துச் சொல்வது என்பது இயலாத காரியம் என்று கூறியுள்ளதை, இந்த மன்றத்திலே அவர்களுக்கு பதில் சொல்கின்ற வகையிலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் நாள், ஆளுநர் அவர்கள் பேருரைக்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் கலைஞர் அவர்கள் 540-ம் பக்கத்தில் கூறியுள்ளதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

"கவர்னர் உரையில் எல்லாவற்றையும் சொல்லி விடுவது என்பது இயலாத காரியம். தமிழ்நாட்டில் இருக்கும் எல்லாப் பிரச்சனையையும் பற்றி கவர்னர் உரையில் சொல்லாது என்றால், கவர்னர் ஒரு மூன்று நாட்கள் இந்த மாமன்றத்தில் நின்று



1977 ஜூலை 8] [திரு. எஸ். ஆர். இராதா]

கொண்டிருக்க வேண்டிய கஷ்டம் அவருக்கு ஏற்படும். அந்த அளவுக்கு பெரிய புத்தகம் படிக்க வேண்டியிருக்கும். அப்போதும் சில விஷயங்கள் விட்டுப்போய் விடக்கூடும்.

கவர்னர் உரையில் சொல்லப்படாத விஷயங்களை எடுத்துச் சொல்லத்தான் மாமன்றத்திலே விவாதம் நடக்கிறது. ஆகவே எல்லாவற்றையும் சொல்லி விட்டால் விவாதிப்பதற்கு விஷயமே இல்லாமல் போய்விடக் கூடும் என்பதால் சில விஷயங்கள் விட்டு வைக்கப்படுகின்றன" என்று கலைஞர் அவர்கள் இந்த மன்றத் திலே தெரிவித்திருக்கிறார்கள். இதை நான் இங்கு சுட்டிக்காட்டி, அந்த வகையிலே கவர்னர் அவர்கள் உரையிலே எல்லாவற்றையும் சொல்ல இயலாது என்பதை அவர்கள் கூறியதையே பரிசாகவும் அவர்களுக்குப் பதிலாகவும் வைத்து, இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, ஆளுநர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லாத காரணத் தால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடங் களுக்கு மேல் எடுத்துக்கொள்ளாமல் பேச வேண்டும். அப்படி எடுத்துக்கொண்டால் பேச இருக்கின்ற மற்ற உறுப்பினர்களது நேரத்தைப் பாதிக்கும். ஆகவே, ஒவ்வொருவரும் 10 நிமிட நேரம் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர் களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நன்றி தெரிவித்து சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். இப்படி நன்றி சொல்வதற்கு முன், கடந்த 17 மாத காலம் எப்படி இருந்தது என்பதைப் பார்ப்போம்.

**திரு. மு. கருணாநிதி:** நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் ஒவ்வொரு கட்சியினருக்கும் இவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் எங்கள் கட்சிக்கு 3½ மணி நேரம் ஒதுக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, இதில் ஒரு உறுப்பினர் 10 நிமிடம்தான் பேச வேண்டுமென்று கெடு வைக்காமல், எங்களுக்குள் ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு வைத்துக் கொள்கிறோம். எனவே, திரு. சுப்பு அவர்கள் 15 நிமிட நேரம் பேச அனுமதிக்க வேண்டுகிறேன்.

**திரு. க. சுப்பு :** ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் இந்த மன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கடந்த 17 மாத காலம் ஆளுநர் அவர்கள் ஆட்சி நடந்த பின்பு, இன்று இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. யார் யாருக்கு நன்றி சொல்வது? சம்பிரதாயத்திற்காக இத்தகைய நன்றி சொல்லக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த உரையைச் சிறப்பாகத் தயாரித்தவர்களுக்கு நன்றி சொல்வதா? அல்லது இந்த ஆங்கில உரை சிறப்பாகத் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டிருப்பதற்கு நன்றி சொல்வதா? இந்த நன்றி சொல்வது என்பது தவிர்க்க முடியாதது. அப்படி நன்றி சொல்வதென்றால், இரண்டு பேருக்கும் சொல்ல வேண்டும். குறிப்பாக, இந்த உரையைத் தமிழிலே படித்த சபைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். (ஆரவாரம்)

இந்த உரையிலே எடுத்துச் சொல்லும் இந்தக் கருத்துக்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தினுடையது, இந்த அரசினுடைய கொள்கை எடுத்துச் சொல்லப்படுகின்றது என்பதை மட்டும் உணர வேண்டும். 17 மாத கால நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பின், நமக்கு இத்தகைய உரிமை கிடைத்திருக்கிறது. இந்த 17 மாத காலத்தில் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள், அராஜகங்கள், அட்டூழியங்கள், சம்பவங்களை எல்லாம் தற்போது அரசு ஏற்றிருக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்க வேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் டெல்லி சென்றிருந்த போது, மத்திய உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்களைச் சந்தித்தபோது, நெருக்கடி காலத்தில் நடந்த சம்பவங்கள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக்கொண்டபோது, முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக ஏற்றுக் கொண்டு வந்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. இந்தப் பொறுப்பை உணர்ந்து, நெருக்கடி காலத்திலே நடந்த அராஜகங்கள், அட்டூழியங்கள் பற்றியும், அதற்கு அவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன என்பதுபற்றியும், என்னென்ன சம்பவங்களுக்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதுபற்றியும் ஒன்றும் குறிப்பிடவில்லை.

இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, சில கமிஷன்கள் போடப்பட்டுள்ளன. சீராளன் மரணம்பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் குழு ஏற்கனவே போடப்பட்டுள்ளது. அதேபோல்





திரு. சிட்டிபாபு, எம்.பி., மரணம் அடைந்ததற்கும் ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு, விசாரணை நடந்து கொண்டு வருகிறது. இங்கே, 17 மாத காலத்திலே அதிகாரவர்க்கம் செய்த அநியாயங்கள்பற்றியும், அக்கிரமங்கள்பற்றியும் விசாரிக்க வேண்டுமென்று ஏற்கனவே எடுத்துச் சொல்லப்பட்டது. அதுபற்றி எந்தவிதமான குறிப்பும் இந்த உரையிலே இல்லை என்பது கவனிக்கத்தக்கது. அப்படி ஏன் குறிப்பிடப்படவில்லை என்பதும் எனக்குப் புரியவில்லை. பின்னாலே வந்த இந்த அரசாங்கம் இவைகளிலே அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று நாங்கள் நினைக்கக்கூடிய வகையிலே, நினைக்கிற அளவிற்கு நீங்கள் ஏன் நடந்து கொள்ளுகிறீர்கள்?

இன்னும் சொல்லப் போனால், அரசியல் கைதிகளுக்கு அலவன்சு கொடுக்க வேண்டுமென்று மேன்டேடரி ப்ரொவிஷன், அப்படி ஒரு விதியே உள்ளது. செக்யூரிடி பிரின்சிபில்ஸ் அப்ளை ஆகும் என்று மேன்டேடரி ப்ரொவிஷனில் கூறப்பட்டுள்ளது. அதன்படி அலவன்சு கொடுக்கவேண்டுமென்று விதியே உள்ளது. சிறையிலே பலவிதமான கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஏன் இந்த அலவன்சு கொடுக்கப்படவில்லை? இதைப்பற்றியெல்லாம் இதிலே விளக்கப்படவில்லை.

சிறையிலே நடத்தப்பட்ட கொடுமைகளுக்கெல்லாம் எந்த அதிகாரிகள் காரணம்? அப்படிக் காரணமாக இருந்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இதைப் பற்றியெல்லாம் விசாரிப்பதற்கான ஒரு உத்திரவாதம் இந்த அரசாங்கம் கொடுக்க வேண்டும்; அதைப்பற்றி உரையிலே தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அதைப்பற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? 17 மாத காலம் நடந்த அராஜகங்களுக்கும், அட்டூழியங்களுக்கும் நீங்கள் உடந்தையாக இருந்தீர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், இதுபற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'மக்களாட்சி இன்று மலர்ந்திருக்கிறது' என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறீர்கள்; அதுபற்றி மகிழ்ச்சி அடைவதாக உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள், நல்லது. மக்கள் ஆட்சி மாபுகளைப்பற்றிப் பேசும்போது, 1976 ஆம் ஆண்டு ஜனவரி

[திரு. க. சுப்பு] [1977 ஜூலை 8

மாதம் 31 ஆம் தேதி ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அநியாயமாக கவிழ்க்கப்பட்டதே, அது ஜனநாயக மரபா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்றெல்லாம் ஊர்வலம் வந்தீர்களே, அது ஜனநாயக மரபா? இது எந்த ஜனநாயக மரபைச் சேர்ந்தது? இப்படி ஜனநாயக மரபுகளைப்பற்றியெல்லாம் பேசும் நீங்கள், எந்த ஜனநாயக மரபைப் பின்பற்றுகிறீர்கள் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். நீங்கள் கடைப்பிடிக்கும் ஜனநாயக மரபு எனக்கு விளங்கவில்லை.

இந்த மன்றத்திலே 2, 3 நாட்களாக நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு வருகின்றது. எந்த, எப்படிப்பட்ட ஜனநாயக மரபை மதித்து நீங்கள் நடந்து கொண்டு வருகின்றீர்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. மஸ்டர் ரோல் வழக்கு முடிந்தவுடன், சென்னை மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தப்படும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டுள்ளது. அதன்படி பார்த்தால், இப்போது நடந்து முடிந்த தேர்தலே நடந்திருக்கக் கூடாது. அரசின் விசாரணையில் உள்ளதால், அது முடிந்த பின்பே தேர்தல் நடத்துவது என்றால் அது முடியாத காரியம். தேர்தல் நடத்துவதற்கும், விசாரணைக்கும் என்ன சம்பந்தம்? அரசியல் வேறு. தேர்தல் நடத்துவது வேறு. அப்படியென்றால், போலீஸ் விசாரணை முடிந்த பின்னர்தான் போலீஸே நாட்டில் நடமாட வேண்டுமென்று சொல்வதா? அப்படியே விசாரணை முடிந்தாலும், அதற்குப் பின் பல கோர்ட்டுகள் உள்ளன. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். எனவே, விசாரணை முடியும் வரையில் தேர்தலை ஒத்திப் போடுவது என்பதைத் தவிர்த்து, உடனடியாக தேர்தல் நடத்துவதுதான் நியாயமாகும்.

[முற்பகல் 10.00]

இனி மத்திய அரசாங்கத்திடம் போய் திடமாக வாதாட சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவோம் என்று கூறியிருக்கிறார்கள். நல்லது. இப்போதுகூட உறவு நேசமாக மாற வேண்டுமென்று போய் வந்திருக்கிறார்கள். உங்கள் உறவு பாசமாக மாறினாலும் நல்லதுதான். ஆனால் மோசம் போய்விடக் கூடாது. மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் அதிகமாக



1977 ஜூலை 8] [திரு. க. சுப்பு]

வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரங்கள் பறிக்கப்படும் வகையில் 42 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. மாநில முதலமைச்சரைக் கேட்காமலே மத்தியப் போலீசைக் கொண்டு வரலாம் என்று சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு மாநில அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அதை எதிர்த்து எந்த அளவுக்கு அ.இ. அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் வாதாடினார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இனி எதை வாதாடப் போகிறார்கள் என்று அச்சமாக இருக்கிறது.

பெரியார் படத்தை, சிலையை வைக்கப் போகிறோம், அந்த மரபுகளை, கொள்கைகளைக் கடைப்பிடிப்போம் என்று சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது அண்ணா படங்கள் அரசு அலுவலகங்களில் வைக்கப் பட்டிருந்தன. அவற்றை எல்லாம் காணோம். அ.இ.அ.தி.மு.க. வினர் அண்ணா படங்களை அரசு அலுவலகங்களில் வைக்க வேண்டுமென்று ஒரு ஓட்டலில் கூடி தீர்மானம் போட்டார்கள். அப்போது பொதுக் கூட்டங்கள் வெளியிலே போட முடியாது, கட்டிடங்களில்தான் போட முடியும். அவர்களுடைய ஓட்டல் தீர்மானம் என்னவாயிற்று? அண்ணா அவர்களுடைய படங்கள் அகற்றப்பட்ட பிறகு கலைவாணர் அரங்கத்தின் பெயரை மாற்ற வேண்டுமென்று நோட் எழுதிய அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். அதுபற்றியும் விசாரிக்க வேண்டும்.

பாடப் புத்தகங்களில் பாரதிதாசன் பற்றிய பாடம், பெரியார் பற்றிய பாடங்கள் எல்லாம் அகற்றப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பற்றி எல்லாம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் பெரியார், அண்ணா வழியில் நடப்போம் என்று சொல்லுகிறார்கள்.

சாதி சமய வேறுபாடு இல்லாமல் நடப்போம் என்று சொல்லுகிறார்கள். எப்படி சாதி, சமய வேறுபாட்டோடு நடக்க முடியும்? அரசியல் சட்டமே அதைத்தான் கூறுகிறது. நினைத்தாலும் சாதி, சமய வேறுபாட்டுடன் நடக்க முடியாதே. ஆனால் அது அல்ல பிரச்சினை. நீங்கள் சொல்ல வருவதைத் தெரியாமல் சொல்லுகிறீர்கள் என்று நினைக்கவில்லை. தெரிந்து தான் சொல்லுகிறீர்கள். என்ன சொல்லுகிறார்கள்? சாதி சமய வேறுபாடு இல்லாத முறையில் எல்லோருக்கும் பாரபட்சமற்று

நன்மை செய்வோம் என்று சொல்லுகிறார்கள். பின்தங்கியவர்கள், முன்னேறியவர்கள் என்ற பாகுபாடு இருக்கிறது. கிராமப் புறங்களில், அருப்புக்கோட்டையில். . . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பெரியார், அன்று பாடங்களை அகற்றியது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** மிக்க மகிழ்ச்சி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே ஆர்வம் உடையவர்கள் என்று தெரியும். இருந்தாலும் சிலவற்றைச் சொல்லுகிறோம்.

அருப்புக்கோட்டையில் காத்தான்பட்டி கிராமத்திலிருந்து படித்துவிட்டு காலேஜில் சேர ஒரு மாணவன் வருகிறான். அது முதலமைச்சர் தொகுதியைச் சேர்ந்தது. அந்த ஊரில படித்து விட்டு வருகிற தாழ்த்தப்பட்ட பின்தங்கிய மாணவனும், இங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மகன் லயோலா காலேஜில் படித்துவிட்டு வருகிற மாணவனும் ஒரே மார்க் எடுக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி அதை ஏற்றுக் கொள்ள முடியும்? அதையா பெரியார் கொள்கை என்று சொல்லுகிறார்கள்? பெரியார் கம்யூனல் ஜி.ஓ., வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்காகப் போராடி அந்த முறையைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையில் மாணவர்கள் எடுக்கப்படுகிறார்களா? மெடிகல் காலேஜில் சேருவதற்கு குறைந்தபட்ச மார்க் இவ்வளவு என்று வைத்திருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு இவ்வளவு மார்க் என்று வைத்திருக்கிறார்கள். அந்த அளவு மார்க் இல்லாவிட்டால் இடம் கிடையாது. எல்லோருக்கும் கல்வி வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு பல பேருக்கு அட்மிஷன் கிடைக்கவில்லை. இப்படி மதிப்பெண்கள் நிர்ணயித்திருப்பது அரிசனங்களுக்கும், பின்தங்கிய மாணவர் களுக்கும் எப்படி நன்மை செய்வதாகும்? கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது பிற்பட்டவர்களுக்கு என்று தனி இலாகாவே அமைத்து . . . . .

**மாண்புமிகு திரு. க. உ. சொ. எட்மண்ட்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இருக்கும் உறுப்பினர்களை திசை திருப்ப வேண்டாமென்று அரசாங்கத்தின் சார்பில் கேட்டுக்



கொள்கிறேன். மார்க்குகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வகுப்பு வாரியாக மார்க்குகளை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த மார்க்குகள் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகி றார்கள்.

**திரு. க. சுப்பு:** அதைத்தான் நான் சொல்லுகிறேன். மார்க்கை மாத்திரம் அடிப்படையாக வைத்துக் கொண்டு பார்ப்பது சரியல்ல. பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர் களுக்கு . . . .

**மாண்புமிகு திரு. க. உ. சொ. எட்மண்ட்:** உறுப்பினர் அவர்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். இன்று குறைந்த மார்க் பெற்றவர்களையும் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்களா?

**திரு. க. சுப்பு:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை நீங்கள் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். மதிப்பெண்களை மாத்திரம் 'க்ரைடீரியா'வாக எடுத்துக் கொள்ளாமல், 'சோஷல் ஆப்ஜெக்டிவை'யும் எடுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய நடைமுறையில். . . . .

**மாண்புமிகு திரு. க. உ. சொ. எட்மண்ட்:** இப்போது உறுப்பினர் அவர்கள் இருக்கின்ற கட்சி ஆட்சியில் இருந்த நேரத்தில் இதைத்தான் செய்தார்கள்.

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நடைபெற்ற முறையின்படி எப்படி நடைபெற்றது என்பதை மட்டும் கூற முடியும். இடையில் ஓராண்டு எப்படி நடைமுறைப்படுத்தினார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. இந்த ஆண்டு நடைமுறை கடந்த ஆண்டு நடைமுறையைப் பின்பற்றியதாக இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. ஏற்கனவே இருந்த முறைப்படி கிராமப்புறங்களில் இருந்து வருகிற மாணவர்களுக்கு, அவர்களது பிற்பட்ட சூழ்நிலை, தன்மை, ரூரல் பாக்கிரவுண்ட் என்ற முறையில் தகுதி எண் சேர்க்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அது தொடர்ந்ததா அல்லவா என்பதை இப்போதுள்ள அமைச்சர்கள் பரிசீலனை செய்து பார்த்துக் கொள்வது நல்லது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளாமல் "அரசாங்க நடவடிக்கை" என்று எதையாவது குறிப்பிட்டு விமர்சிப்பது சரியல்ல.

**திரு. க. அன்பழகன் :** ஒரு அரசாங்கத்தின் கொள்கை அந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்கிற நாளுக்கு முன்பாக அந்தக் கட்சியின் சார்பில் பேசப்படுகிற பேச்சை வைத்து, வெளியில் பேசப்படுகிற பேச்சை வைத்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. வெளியில் பேசப்பட்ட பேச்சிலிருந்து, அதை விட முற்போக்காகவோ, மாற்றமாகவோ அரசு நடைபெறும் என்று சொன்னால், அது இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டால்தான் அவையினர் அறிந்துகொள்ள முடியும்.

**திரு. க. சுப்பு :** அமைச்சர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். அங்கே இரண்டு அமைச்சர்களுக்கிடையிலேயே கருத்து வேறுபாடு இருக்கிறது. கடந்த 30 ஆம் தேதியோடு அட்மிஷன் முடிந்து விட்டது. அதற்கு மேல் அட்மிஷன் வேண்டுமென்றால் யூனிவர்சிடியில் போய் எக்செம்ஷன் வாங்க வேண்டும். அதனால் எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். அட்மிஷன் கிடைக்காமல் மாணவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். 17 மாத காலம் நடந்த முறை காரணமாக இந்தத் தவறு நீடிக்க விடக் கூடாது. இதைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் எதிர்க் கட்சியைச் சார்ந்த பேராசிரியர் அன்பழகன் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல் முதலில் ஒரு முறை இருந்தது. இடையில் வேறு ஒரு முறை வந்தது. ஆனால் இப்போது மீண்டும் பழைய அடிப்படையில் அதே முறை கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** மிக்க நன்றி. இந்த விளக்கத்திற்காக மிக்க நன்றி. இந்த மாதிரியான முறையைக் கொண்டு வர வேண்டுமென்பது தான் விருப்பம்; இதைத்தான் செய்ய



வேண்டும். ஆனால் நடைமுறையில் பார்த்தால் பின்தங்கிய வகுப்பில் மேல் மட்டத்தில் இருக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பிள்ளைகள் அட்மிஷன் வாங்கியிருக்கிறார்கள்; ஆனால் கிராமங் களிலே பின்தங்கிய நிலையிலே உள்ளவர்கள் அட்மிஷன் பெற முடியாத நிலை இருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து பார்த்து சீர்திருத்தினால் போதும்.

இதேபோல் என்.ஜி.ஓ.க்களுக்காக மூன்றாவது சம்பளக் கமிஷன் அமைக்கப்படும் என்று முன்பு ஆளுநர் அவர்கள் அறிவித்தார்கள். அதைப் பற்றி இதிலே ஒரு வார்த்தைக் கூட இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் மூன்று நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. க. சுப்பு :** குறுக்கீடுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுக்கீடுகள் உறுப்பினரின் நேரத்திற்கு உட்பட்டவைதான். அப்படி இல்லை என்றால் குறுக்கீடுகளுக்கு என்று தனியாக நேரம் ஒதுக்கியிருக்க வேண்டும். தாங்கள் இன்னும் மூன்று நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஜுடிஷியல் டிஸ்க்ரீஷன் இருக்கிறது. குறுக்கீட்டுக்கு நான் என்ன பண்ண முடியும்? நான் பதிலுக்குக் குறுக்கிட்டால் நீங்கள் யாரும் பேச முடியாத நிலைமை வரும். ஓரளவு நியாயமாக நடந்து கொண்டால் போதும். நாமெல்லாம் பல நேரங்களில் பேசி இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் 1½ மணிக்கு மேல் அவையை நடத்திச் செல்லக் கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பெயர் கொடுத்திருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** நீங்கள் பேசுகிற காலத்தையாவது கழித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே செய்யுங்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய முடிவதைச் செய்து விடுவோம் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் கழகம் மக்களிடம் எடுத்துச் சொல்லி ஆதரவு கேட்கிற நேரத்தில் ரொம்ப அருமையான ஒரு கருத்தை, வரவேற்கத்தக்க ஒரு கருத்தை முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் பெண்களுக்கு சொத்துரிமை குடும்பத்தில் ஆண்களுக்குச் சொத்துரிமை இருப்பது போல் பெண்களுக்கும் சொத்துரிமைக்குச் சட்டத்தில் ஏற்பாடு செய்வோம் என்று கூறியிருக்கிறார்கள். பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கு புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்; சம வாய்ப்பு கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவுடனே அதைச் செய்ய வேண்டும். எங்களுக்கு அதிகாரம் இல்லை. மத்திய சர்க்காரிடத்தில் அதிகாரம் இருக்கிறது என்று சொல்லக் கூடாது. அந்தச் சிக்கலைத் தீர்க்க மாண்புமிகு நாராயணசாமி அவர்களை வைத்திருக்கிறார்கள். இந்த மாநில சர்க்கார் தேவையான அளவுக்கு மாநில சுயாட்சி வாங்கி அதை நிறைவேற்றலாம். அதைவிட வரவேற்கத்தக்கது வேறு இல்லை. ஆட்சிக்கு வந்தவுடன் செய்கிறோம் என்று தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். நாட்டு மக்கள் அதை எதிர்பார்க்கிறார்கள்.

இன்னொன்றும் கூறியிருக்கிறார்கள். "உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்கிறார்கள். அந்த உழுபவனுடைய மகன் படித்து விட்டு வேறு வேலைக்குப் போய்விடுவான். அந்த நிலத்தை யார் உழுவது? தந்தையின் நிலம் மகனுக்கு என்றால் உழுபவனுக்கு நிலம் என்ற அந்த வாதம் அடிபட்டுப் போய்விடுகிறது" என்று கூறியிருக்கிறார்கள். இது எப்படி. . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, "ஆப்சன்டீ லாண்ட்லார்டிசம்" நிலப் பிரபுத்துவ முறையை ஒழிப்பது நிலச் சீர்திருத்தம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால் அந்த வகையில் இது அடங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. க. சுப்பு :** கொக்கு எப்படி இருக்கும் என்றால் பாலைப் போல் இருக்கும் என்று சொல்லுவதைப் போல் இருக்கிறது. ஆப்சன்டீ லாண்ட்லார்டிசம் வேறு; மகன் தந்தைப் பிரச்சினை வேறு. இதிலே தெளிவு இருந்தால் சரிதான். தெளிவாகச் சொல்ல வேண்டும், இப்படிச் சொல்லியிருப்பது எங்களுக்குப் புரியவில்லை (மணியடிக்கப்பட்டது). பேசிக்கொண்டிருக்கும் போது இப்படி மணி அடிப்பதினால் நேரம் போய்விடுகிறது, நான் என்ன செய்வது. . . .

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரின் நேரம் முடிந்துவிட்டது என்று சொன்னால், அதிலே நேரம் ஆகிறது என்று சொல்லி அதற்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டாம். இன்னும் ஒரு நிமிடத்தில் நீங்கள் முடித்துவிட வேண்டும்.

**திரு. க. சுப்பு:** எங்களுடைய ஆட்சி வந்தால் தொழிலாளர் பிரச்னையிலே போலீஸ் தலையிடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல கொள்கைதான். ஆனால் ஆளுநர் உரையிலே போலீஸ் தலையிடாது என்ற வார்த்தையே இல்லை.

அதைப் போலவே தான் மூடிய ஆலைகளைத் திறப்பதைக் குறித்து வாயே திறக்கவில்லை, மூடிக் கொண்டார்கள். கோவையிலே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் சிறைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

சுந்தரம் கிளேட்டன்ஸ் பிரச்னை, இந்தியா மீட்டர்ஸ் பிரச்னை, கோவையிலே மூடப்பட்ட ஆலைகளின் பிரச்னை இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகள் இருந்தால் அவை பற்றியெல்லாம் இந்த ஆளுநர் உரையிலே ஒன்றும் சொல்லப்படவேயில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிச் சொன்னவர்கள், இளைஞர் அணி பற்றிச் சொல்லியிருக்கலாம், அதைப் பற்றியும் சொல்லவில்லை. இன்றைக்குத் தொழிலாளர்கள் பலர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள், இந்த அரசாங்கம் எந்தக்

கொள்கையைப் பின்பற்றப் போகிறது, ஏற்கனவே இருந்த கொள்கையைப் பின்பற்றப் போகிறார்களா அல்லது வேறு கொள்கையைப் பின்பற்றப் போகிறார்களா என்பதைச் சொல்லவில்லை.

இன்னும் பல விஷயங்கள் விட்டுப்போய் இருக்கின்றன. அடிப்படையான விஷயங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. இப்படிப்பட்ட முக்கியமான ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது முதலமைச்சர் அவர்களும் அவை முன்னவர் அவர்களும் 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்ற முறையிலே இங்கே வந்து உட்கார்ந்திருந்து கவனத்துடன் விவாதங்களுக்குப் பதில் அளித்தால் நாட்டு மக்களுக்குப் பயன் அளிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சுந்தரம் கிளேட்டன்ஸ் பற்றிச் சொன்னார்கள், அது சங்கத் தலைவர் யார் இருப்பது என்பதில் உள்ள பிரச்சினை. எங்களைப் பொறுத்தவரையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்க்கு மதிப்புத் தர வேண்டும், யாராக இருந்தாலும் சரி, தொழிலதிபர் வரவேற்று ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதை எல்லாத் தொழிலதிபர்களும் ஒரு கன்வென்ஷனாக, மரபாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்கள் எந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் We are pleased to receive you in our factory என்ற முறையிலே நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

இந்தியா மீட்டர்ஸைப் பொறுத்தவரையில்—இந்தப் பிரச்சினை பற்றியும் உங்களுக்கு எல்லாம் தெரியும்—மத்திய அரசு ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருக்கிறது. இரண்டு சங்கத் தலைவர்கள் அக்கறை காட்டியிருக்கிறார்கள், நாங்களும் ஆவன செய்வதாகக் கூறியிருக்கிறோம். என் அருமைச் சகோதரர் திரு. வி. பி. சிந்தன் அவர்களும் திரு. மோகன் குமாரமங்கலத்தின் மகன் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களும் வந்து பேசியிருக்கிறார்கள். இன்னும் பேசிக்கொண்டு இருக்கிறோம். சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் பாராட்டுத் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் டி.யு.சி.எஸ். பிரச்சினையைத் தெரிவிப்பார்கள் என்று நினைத்தேன். தெரிவித்திருக்கலாம்; நல்லது தீர்த்ததற்கு அவர்கள் பாராட்டுத் தமிழனின் பண்பு, அதைச் செய்தால் அதைப் பாராட்டுவதுதான் அங்கே 1,100 பேர் வேலை நிரந்தரம் பாராட்டியிருக்க வேண்டும். செய்தார்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழுவில் ஆளுங்கட்சிக்கு எவ்வளவு நேரம், எதிர்க் கட்சிகளுக்கு எவ்வளவு நேரம் என்று ஒதுக்கப் பட்டிருக்கிறது. எதிர்க் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திலிருந்து அமைச்சர் குறுக்கீடுகள் செய்த நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: என்னுடைய இலாகாவைப் பற்றிப் பேசியதால் நான் பதில் சொல்ல வேண்டுமென்ற முறையிலே விளக்கங்களைச் சொல்கிறேன். இந்தத் துறையிலே சில காலம் நல்ல அனுபவம் பெற்றவன் என்ற முறையிலே புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பொறுப்பை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள், கமிஷனர் போன்றவர்களிடம் பேசி தொழிலாளர்களிடம் பேசி ஒரு ஒப்பந்தம் செய்து அங்கே நல்ல நிலைமை உருவாகியிருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல காரியங்களைப் பற்றி பாராட்டியிருக்க வேண்டும், அப்படிப் பாராட்டுவதுதான் தமிழரின் பண்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, டி.யு.சி.எஸ். பிரச்சினையிலே அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு சுமுகமான முடிவு ஏற்படுத்தியதைப் பாராட்ட வேண்டுமென்று தெரிவித்தார்கள், நான் அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் அதைப் போலவே கோவைக்கு அவர்கள் நேரடியாகச் சென்று அங்கேயுள்ள பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோவை பிரச்சினை யைப் பொறுத்தவரையில் அங்கேயுள்ளவர்களை பேசுவதற்கு வரச் சொல்லியிருக்கிறோம், அதைப் போலவே எல்.எம்.டபிள்யூ.

[திரு. எஸ். ஜே. இராகவானந்தம்] [1977 ஜூலை 8

தொழிலாளர்கள் பிரச்சனை பற்றி பேச்சுவார்த்தை நடந்து
கொண்டிருக்கிறது. அம்பீஸ் கபே தொழிலாளர்கள் பிரச்சனை
பற்றியும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படித்
தொழிலாளர்களின் பிரச்சனைகளைப் பற்றி நல்லமுறையிலே விரைவாக
இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.
மாண்புமிகு முன்னாள் அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள்
எதையுமே மெதுவாகச் செய்து பழக்கப்பட்டவர், அவருக்கு
இதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் எங்கெங்கேயோ
போகிறது, ஆளுநர் உரையின் மீது கருத்துக்களைத் தெரிவிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் குறிப்பிட்டது
கோவை பஞ்சாலைகளைப் பற்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
குறிப்பிட்டது எல். எம். டபிள்யூ. பற்றி. கோவை பஞ்சாலைகள்
பிரச்சனை பற்றி கவனம் செலுத்த வேண்டும், அங்கே 2,500 பேர்கள்
வேலையில்லாமல் இருக்கிறார்கள், நூற்றுக்கணக்கான பேர்கள்
கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் . . . . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோவை
பிரச்சனையைப் பொறுத்தவரையில் வயர்லெஸ் செய்தி அனுப்பப்
பட்டு, அவர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அமைச்சர்கள்
குறுக்கிடுகிறபோது அவர்கள் ஒரு முறை வகுத்துக்கொள்வது
நல்லது என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்
பேசுகின்றபோது அவர்கள் சொல்கின்ற கருத்துக்களின் மீது
அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேச உரிமையுண்டு. உறுப்பினர்கள்
பேசுகின்றபோது, அமைச்சர்கள் அவரவர்களுடைய
இலாக்காக்களைப் பற்றிய விளக்கங்களை அளிக்கவும்
உரிமையுண்டு. உறுப்பினர் பேசிய பிறகு அமைச்சர்கள்
அவர்களுக்குள்ளே ஒரு முறை வகுத்துக் கொண்டு
பேசுவார்களானால் அது இந்த மன்றத்திற்கும் பயனுள்ளதாக
இருக்கும், விவாதமும் ஒளியுள்ளதாக இருக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் அமைச்சர்கள்



1977 ஜூலை 8] [திரு. மு. கருணாநிதி]

இரண்டு, மூன்று பேர்கள் என்று ஒரு முறை வைத்துக்
கொண்டு பதில் சொன்னால் பயன் உள்ளதாக இருக்கும்.
அடிக்கடி குறுக்கிட்டு இந்த மன்றத்திலே கட்சிகளுக்கு ஒதுக்கப்
பட்ட நேரத்தைக் குறைக்கின்ற வகையிலே நடந்துகொள்வது
முறையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு
ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற
தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனை
ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே மிகத் தெளிவாகவும்
விரிவாகவும் நல்ல பல விளக்கங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.
விமரிசனம் செய்யும்போது எதிர்க்கட்சியிலே இருந்தபோது என்ன
நிலைமையிலே விமரிசனம் செய்யப்பட்டதோ அதே நிலைமையிலே
இப்போதும் விமரிசனம் செய்து பேசுவது என்பது அவ்வளவு
சரியாக இருக்காது. இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களை
வைத்துப் பார்க்கிறபோது, நடந்து முடிந்த தேர்தல் மிகவும்
சுமுகமான முறையிலே நடைபெற்றது. இதைப் பற்றி ஆளுநர்
அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முறை
சுமுகமாகத் தேர்தல் நடைபெற்றது, நாட்டு மக்களும் நல்ல
முறையிலே வாக்களித்திருக்கிறார்கள், அவர்களுக்கு நன்றியைத்
தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கூட்டுறவுத் துறையிலே பல மோசடிகளும் பயன் இல்லாத
வேலைகளும் இருப்பதைப் பார்த்து இருக்கிறோம், அந்தத் துறை
நல்ல முறையிலே சீர்திருத்தப்பட்டு, விவசாயிகளுக்கு நல்ல முறை
யிலே கடன் கொடுப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பைக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத்
துறையின் மூலம் விவசாயிகளுக்கு நல்ல முறையிலே பலன்
கிடைக்கச் செய்யக்கூடிய முயற்சி மிகவும் பாராட்டி வரவேற்கத்
தக்க ஒன்றாகும். நம்முடைய மாநிலத்திலே நல்ல கையிருப்பு,
உணவுப் பொருளைப் பொறுத்த வரையில் இருக்கிறது. பலர் பல
வாறாக இதைப்பற்றிச் சொல்லலாம். இதன்மூலமாக விலைவாசி
யெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக்
கட்டுபடியாகக்கூடிய விலை இல்லை என்று சொல்கிறார்கள். இது
ஒரு கோணம், ஆனால் இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கிற

போது வாங்கி உபயோகப்படுத்தக்கூடியவர்களுடைய கோணத்தி லிருந்து பார்த்தால் வேறு ஒரு கருத்தைக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது.

இந்த ஆளுநர் உரை பாராட்டத் தக்க வகையில் அமைந்திருக்கிறது. 1967 ஆம் ஆண்டு ஆளுநர் உரை எப்படி யிருந்ததோ அதைப் போலவே இந்த ஆண்டும் இருக்கிறது, இது வரவேற்கத் தக்க ஒன்றாகும். இந்த உரையிலே நல்ல பல அம்சங்களை ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நன்கு போற்றப்பட வேண்டிய அம்சமாக ஏழைகளுக்கு சட்ட உதவி அளிப்பது பற்றிச் சொல்லியிருப்பது. பல குற்றங்களைப் புரிந்தவர்களுக்கும் சரி மற்றவர்களுக்கும் சரி, இலவசமாக சட்ட உதவி வழங்குவது என்ற திட்டத்தைப் பற்றி இதிலே சொல்லியிருக்கிறார்கள். அது பாராட்டத்தக்கது.

அது மட்டுமல்ல, மின்சாரத் துறையிலே ஏற்பட்டு இருக்கக் கூடிய நிலைமைகளையும் கவனிக்க வேண்டும். பங்கிட்டுக் கொடுக்கக் கூடிய நிலைமைகளையெல்லாம் மாற்றி மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த லிஸ்டத்தையும் எடுத்துவிட்டு முழுநேர சப்ளை கொடுக்க வேண்டுமென்பதற்காக கவர்னர் உரையில் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று கோடிட்டுக் காட்டியிருப்பது வரவேற்கத் தகுந்த அம்சமாகும்.

(முற்பகல் 10-20)

இந்த உரையிலே நல்ல பல அம்சங்கள் இருக்கின்றபொழுது எதிர்க்க வேண்டும், எதிர்க்க வேண்டும் என்று நாம் எல்லாவற் றையும் எதிர்த்துக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. நாம் எல் லோரும் ஒன்றாக இருந்தவர்கள்தான். எதிர்ப்பதால் என்ன பயன் என்றுதான் கேட்க விரும்புகிறேன். இதற்குமுன் ஆட்சியிலே இருந்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களோடு இணைந்தும் இருந்திருக்கிறேன். இதுமாதிரி பேசிக்கொண்டே இருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயும் பேசிக்கொண் டிருந்தோம். இப்பொழுது இந்த அரசாங்கத்திற்கு நல்ல ஒத்துழைப்பு கொடுக்கிறோம் என்று கூறியுள்ளார்கள். அப்படி





யிருக்கும்பொழுது முழு விவரங்களையும் கவர்னர் பேச வேண்டு மென்று எதிர்பார்ப்பது அவ்வளவு சரியான முறை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குப் பிரச்னையை எடுத்துக்கொண்டால்கூட இன்றைக்கு மதுவிலக்கை நல்லமுறையிலே செம்மைப்படுத்த வேண்டுமென்றும், நல்லநிலைமையிலே அதை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் இருக்கிறோம். கிராமப்புறங்களிலே இந்தக் குடிப் பழக்கம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற முதலமைச்சரவர் களின் கருத்தை கவர்னர் தம் உரையிலேயும் காட்டியிருக்கி றார்கள், அது மிகுந்த வரவேற்கத் தகுந்த அம்சமாகும். குடி யினால் பல தீமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் குடியை ஒழிப்பது சம்பந்தமாக அண்ணா அவர்கள் எந்த கொள்கையை வைத்துக் கொண்டிருந்தார்களோ அதை இந்த அரசும் வைத்துக் கொண்டிருக்கிறது என்று கவர்னர் அவர்கள் கோடிட்டுக் காட்டி யிருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியாது.

(மணியடிக்கப்பட்டது)

இப்படிப்பட்ட பல நல்ல வரவேற்கத் தக்க அம்சங்கள் இருக் கின்றன. ஒத்துழைப்பு, ஒத்துழைப்பு என்பது உதட்டளவில் இல்லாமல் உள்ளத்தளவில் இருக்கவேண்டும். எதற்கெடுத்தாலும் எதிர்த்துக் கொண்டிருப்பது என்பது கூடாது. அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கும் இந்த அரசு, இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதிக எண்ணிக்கை வந்தவுடன் எங்கள் அரிய தலைவர் மிக நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அண்ணா அவர்களின் கொள் கைகளைப் பின்பற்றி அதிலிருந்து மயிரிழைகூட, நூலிழைகூட தவறிப் போக மாட்டோம் என்று ஆணித்தரமாகச் சொல்லியிருக் கிறார்கள். அந்த முறையில் இந்த கவர்னர் உரையை எல்லோரும் வரவேற்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு இன்னொரு மணி அடிப்பதற்குள்ளாக என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன்.

* திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1977 ஜூலை 8

முதலிலே சட்டப்பேரவைத் தலைவராவர்களுக்கும், இன்று பொறுப்பேற்றிருக்கும் அரசாங்கத்திற்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மதிப்பிற்குரிய கலைஞரவர்கள் தலைமையிலே புதுக்கோட்டைக்கு நல்ல பல சலுகைகளைக் கொடுத்திருக்கின்றது. புதுக்கோட்டை ஜில்லாவாக ஆக்கியும், புதுக்கோட்டையிலிருந்து ஒரு உறுப்பினர் அமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அதேபோல, இன்று ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய அரசாங்கம் புதுக்கோட்டையிலிருந்து ஒரு உறுப்பினர் அமைச்சராகவும், புதுக்கோட்டை ஜில்லாவிலிருந்து ஒரு உறுப்பினர் உதவி சபாநாயகராகவும் எடுத்தது எங்களுக்கெல்லாம் மிகவும் பெருமையைத் தருகிறது. நான் புதுக்கோட்டை மக்களின் சார்பாக நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரையைப் பார்க்கும்பொழுது நாங்கள் சிறிது ஏமாற்றம் அடைந்தோம். இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக காங்கிரஸ் கட்சி இருபது அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்து இந்த நாட்டுக்கு நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறது. எங்கேயாவது, எந்த மூலையிலாவது கவர்னர் உரையில் அந்த இருபது அம்சத் திட்டத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் கிடையவே கிடையாது. இங்கே பாதி வழியிலே நிற்கிறது அந்த இருபது அம்சத் திட்டம். புதுக்கோட்டையைப் பொறுத்தவரையிலும், இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையிலும் இந்தத் திட்டங்கள் மிகவும் நல்லமுறையிலே பயன்படுத்தப்பட்டு, அடிமட்டத்திலே இருக்கக்கூடிய, அடித்தட்டிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு உதவிகரமாக இருந்தன என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும், அதைத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏதோ காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் கொண்டு வந்தார்கள், அதனால் இதோடு நிறுத்திவிட வேண்டுமென்ற நோக்கம் இருக்கக் கூடாது. எந்தக் கட்சியிலேயிருந்து கொண்டு வந்தாலும் நல்ல திட்டங்களாக இருந்தால் அவற்றை எடுத்துச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஜூலை 8] [திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

கவர்னர் அவர்களுடைய உரையிலே ரூரல் டெவலெப்மெண்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் பின்தங்கிய பகுதிகளாகிய இராமநாதபுரம், புதுக்கோட்டை இதுபோன்ற இடங்களிலே ரோடு வசதிகளைப் பார்க்கப்போனால் மிகவும் வருந்தத் தக்க முறையிலே இருக்கிறது. அந்தக்காலத்திலே 10 கோடி ரூபாய் செலவழித்த இந்த ரோடு வசதிகளுக்கு இப்பொழுது 1½ கோடி ரூபாய்கூட செலவழிக்கும் நிலை இல்லாமலிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் போய்ப் பார்த்தால் இந்தக் கிராமத்திலிருந்து அந்தக் கிராமத்திற்குக் கட்டை வண்டி போக முடியாது. ஆள் இரவிலே நடந்து போனால் கால் ஒடிந்து விடும். அந்தமாதிரி ஒவ்வொரு கிராமத்திலும் சாலைகள் மோசமாக இருக்கின்றன. இதில் அரசாங்கம் பின் தங்கிய பகுதிகளைக் கவனத்தில் கொண்டு அதற்கு முக்கியத்துவம் அளித்து அதிகப் பணத்தை இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கி பின்தங்கிய பகுதிகளுக்குச் செலவழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையைச் சொல்லப் போனால் விவசாயிகள் தாங்கள் விவசாயம் செய்த, உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை இன்றைக்கு டவுனுக்குக் கொண்டு போய் விற்கும் நிலையே இல்லாமலிருக்கிறது. அதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் அதைக் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலும் நான் போய்ப் பார்க்கும்பொழுது குடிநீர் வசதியே கிடையாது. ஆண்களும், பெண்களும் ஒன்றரை மைல் தூரம் போய்க் குடிதண்ணீருக்காகக் குடத்தைத் தூக்கிக் கொண்டு சென்று அங்கிருந்து தூக்கிக் கொண்டு வரும் நிலை ஏற்படுகிறது. எங்கே போனாலும் இந்தப் புகார்தான் இருக்கிறது. நீங்கள் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவில்லை, அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

புதுக்கோட்டையிலே காவேரி மில் இருக்கிறது. அது சம்பந்தமாக வெகு காலமாக அரசாங்கத்திடம் நான் மன்றாடி வந்தேன், அதை பப்ளிக் செக்டாரிலே எடுத்து நடத்த

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்] [1977 ஜூலை

வேண்டுமென்று. இப்பொழுது பப்ளிக் செக்டாரிலே எடுத்து நடத்துகிறார்கள். அப்படி நடத்தும்பொழுது அங்கே வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு மனத்தில் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது, எப்படியும் வேலை கிடைக்குமென்று, தனியாரிடத்திலேயிருந்தால் அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாக நேரிடும், ஆகவே, பப்ளிக் செக்டாராக இருந்தால் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இன்று அங்கே 500 பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது, இந்த மில்லைத் திறந்த பின். ஒன்றரை ஆண்டுகளாக மூடியிருந்ததை இப்பொழுது திறந்திருக்கிறார்கள். 1,200 பேர் அதில் முன்பு வேலை செய்தார்கள். இப்பொழுது 500 பேர்களுக்கு வேலை கிடைத்தது போக இன்னும் 700 பேர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அங்கே சென்று கேட்டால் அங்குள்ள ஒரு மெஷினை மாற்றினால்தான் முடியும் என்று சொல்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அதற்கு 25 இலட்சம் ரூபாய தேவை என்று எழுதியிருக்கிறார்கள். இன்று அது பின்தங்கிய பகுதியாக இருக்கிறது, அங்கே இரண்டே மில்கள்தான் இருக்கின்றன, அதை வைத்துக் கொண்டுதான் வேலை கொடுக்க வேண்டி

(முற்பகல் 10.30)

யிருக்கிறது. அந்தக் காரணத்தாலே ரூ. 25 இலட்சத்தை அரசாங்கம் சாங்க்ஷன் செய்து, பூரா மெஷின்களையும் புதுப்பிக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தலெல்லாம் இப்போது வரப் போகிறது. கவர்னர் அவர்களுடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். திருவரங்குளம் பஞ்சாயத்து என்ற ஒன்று இருக்கிறது. டிஸ்டிரிக்ட் ஆக மாறும்போது திருவரங்குளம் பஞ்சாயத்து புதுக்கோட்டையிலே 109 பஞ்சாயத்துக்களாக மாறிவிட்டன. 45 பஞ்சாயத்துக்களை வைத்தே சரியாக நிர்வாகம் செய்யமுடியவில்லை. இப்பொழுது 109 பஞ்சாயத்துக்களை வைத்து எப்படி நிர்வாகம் செய்வது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு எந்தப் பஞ்சாயத்து எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அந்தப் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரித்தால்தான் நிர்வாகம் சீராக நடக்கும், அதிகாரிகளுக்கும் வசதியாக இருக்கும். அதைப்பற்றி நான்



1977 ஜூலை 8] [திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

அரசாங்கத்திற்கு முன்னமே எழுதியிருக்கிறேன். இப்பொழுதும் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தப் பஞ்சாயத்தை 55 ஆக பஞ்சாயத்து எலெக்ஷனுக்குள்ளே பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டைக் கல்லூரிக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப் போகிறார்கள். எம்.ஏ. டிகிரி ஏற்படுத்த வேண்டுமென்று நாங் களும் எழுதியிருக்கிறோம். 100 ஆண்டுக்காலமாக அந்த காலேஜ் இருக்கிறது. பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புகள்தானிருக் கின்றன. எம்.ஏ. வகுப்பும் வேண்டுமென்று எழுதிக் கேட்டிருக் கிறோம். நூற்றாண்டு விழாவிற்குள்ளாக எம்.ஏ. வகுப்புக்கு வழி வகை செய்தால் அது அரசாங்கம் எங்கள் மாவட்டத்திற்குக் கொடுத்த பரிசாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி நம்முடைய கவர்னர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் காங்கிரஸ் கட்சியிலே அதை முழு மனதோடு ஆதரிக்கிறோம். ஆனால், பத்திரிகையிலே பார்க்கும்போது, அரசாங்க அதிகாரிகளுக்குச் சட்டத்தைப் போட்டு எனக்குத் தெரியாமல்தான் கேட்கிறேன், அவர்கள் பர்மிட் வைத்திருந்தால் வேலையிலிருந்து விலக வேண்டும் என்று வைத்திருக்கிறது. அந்த மாதிரி சட்டம் போட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. எதற்காக, அரசாங்க அதிகாரிகளுக்கு மட்டும் அந்தக் கட்டுப்பாடு, மற்றவர்களுக்கு வேறு மாதிரியான கட்டுப்பாடா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்கு எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டியது அவசியம். அதை எதிர்க்கவில்லை. அர சாங்க அதிகாரிகளை 'கொத்தடிமை' மாதிரி நாம் பண்ணக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். 20 அம்சத் திட்டத்திலே யிருந்த கொத்தடிமை முறையை நாம் அடியோடு ரத்து செய்து விட்டோம். அதை மறுபடியும் கொண்டு வரக் கூடாது. எல் லோருக்கும் என்ன கொள்கை வகுக்கப்பட்டு இருக்கிறதோ அது மாதிரி அவர்களுக்கும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மறுபடியும் உங்களுக்கு நன்றியும் வணக்கமும்.

*இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் எதிர்காலம் எப்படியிருக்குமோ, எதிர்காலத்தில் மக்களின் மறுவாழ்வு எப்படியிருக்குமோ என்கிற அச்சமும் ஐயமும் பீதியும் தமிழக மக்கள் மத்தியில், இளைஞரிடத்தில்,

ஏழை எளியவரிடத்தில் குடி கொண்டிருந்த நேரத்தில், அவர்களுடைய நெஞ்சங்களில் பால் வார்க்கிற செய்தியாக நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரை, எங்களுடைய ஒப்புயர்வற்ற புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் இயங்குகிற இந்த அரசாங்கம் செய்ய இருக்கிற நல்ல பல காரியங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. அத்தகைய நல்ல உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து, சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன்.

தலைவரவர்களே, 1967-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் ஆட்சி அரியணையிலே அமர்ந்த நேரத்தில் தமிழகத்து மக்கள் அரசாங்கத்திடமிருந்து என்னென்ன எதிர்பார்த்தார்களோ, அத்தகைய எதிர்பார்ப்புகளை இன்றைக்கு இந்த அரசாங்கத்தின் மீது கொண்டிருக்கிறார்கள் என்பது கவர்னருடைய உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது மெத்த பொருத்தமாயிருக்கிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்லப் போனால்,

"எப்பக்கம் வந்து புகுந்திடும் இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்
அர்ப்பமென்போம் அந்த இந்தி தன்னை
அதன் ஆதிக்கம் தன்னைத் தொலைத்திடுவோம்"

என்று பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இருமொழித் தீர்மானத்தை கவர்னர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார். அது தமிழகத்து மக்களின் எண்ணத்தைச் சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது. அதற்குப் பின்னால்கூட, அந்தத் தீர்மானத்தை எங்களாலே ஆதரிக்க முடியவில்லையென்று சுட்டிக்காட்டுகிற—மாற்றுத் தரப்பிலேயிருக்கிற உறுப்பினர்கள்—அவ்வாறு கூறுகின்ற நேரத்தில், நான் எண்ணிக் கொண்டேன், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் எதிர் அணியில் இருந்தார் என்ற காரணத்தினாலோ என்னவோ அவ்வாறு கூறுகிறார்களென்று.

அது மட்டுமல்ல, கிராமப்புற மக்களுடைய தேவைகளையும் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கிராமப்புற மக்களுக்கு எந்த வசதியும் வாய்ப்பும் தரப்படவில்லையென்ற நிலைமை பல்வேறு





பகுதிகளிலிருக்கிறதென்பதை சுட்டிக்காட்டி, அந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் நாம் பல்வேறு நன்மைகளை முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டியிருக்கிறது என்கிற கருத்தைப் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

"சிறு பாசன வசதி, நடுத்தர பாசன வசதி, சாலைகள், வீடுகள், பள்ளிகள், சமுதாய நல வசதிகள், மண்வளப் பாதுகாப்பு, குடிநீர் வழங்குதல் போன்று மக்களுக்குப் பயன் தரக்கூடிய உடைமைகளை உருவாக்க முடியாத அளவிற்குப் பல்வேறு பகுதிகள் தமிழகத்திலிருக்கிறன" என்பதை கவர்னர் அவர்கள் சுட்டிக்காட்டி, அதற்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க இருக்கிறோம் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த வகையில், அத்தகைய ஒரு பகுதியிலேயிருந்து வந்திருக்கிறவன் என்ற காரணத்தால், மதுரை மாவட்டத்தினுடைய மிகப் பிற்பட்ட பகுதியிலிருக்கக்கூடிய இரண்டு யூனியன்களை ஒன்றாக்கிய ஒரு தொகுதியிலேயிருந்து வந்திருக்கிறேன் என்ற காரணத்தாலே என்னாலே அதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சுதந்திரம் வாங்கிய காலத்திலிருந்து அங்கு அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதாவென்றால், இல்லையென்றே சொல்வேன். காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தோ, என்னவோ அன்றைய அரசாங்கம் எந்த நன்மையையும் செய்யாது திட்டமிட்டு புறக்கணித்துவிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அத்தகைய பிற்போக்கு பகுதிகளுக்கு அரசாங்கத்தின் சார்பில் பணிகளை மேற்கொண்ட நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்பணிகளை ஆரம்பித்து வைக்க முடிந்ததே தவிர, அதை முடித்து வைக்க முடியாத அளவுக்கு நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். அப்போது கூட முந்தியவர்கள் சில வசதிகளைப் பெற்றுக் கொண்டார்கள். பிற்பட்ட பகுதிகள் முழுவதுமாக, அண்ணா ஆரம்பித்த பணியின் பலனைப் பெற முடியவில்லை. அண்ணா அவர்களுக்குப் பின்னாலே, அப்படிப்பட்ட பிற்பட்ட பகுதிகளுக்கு—திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற பகுதிகளுக்கு, சாலைகள் இல்லை என அந்தப் பகுதி மக்கள் கேட்டபோது எல்லாம், சாலைகள் போட்டார்களா என்றால், போடவில்லை. அந்தப் பகுதி மக்களை ஓட்டு வாங்குவதற்குப் பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, மற்ற முன்னேற்றப் பணிகளில் அந்தப் பகுதி மக்களைப் புறக்கணித்துவிட்டார்கள்.

[திரு. இரா. முத்தையா] [1977 ஜூலை

(முற்பகல் 10-40)

அப்படிப்பட்ட நிலைமையிலே இருக்கக்கூடிய பிற்பட்ட பகுதி மக்களுக்கு எல்லாம் நல்லபல திட்டங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்ல. இந்த அரசாங்கம் அப்படிப்பட்ட பகுதிகளுக்கு எந்த அளவு தங்களுடைய காரியங்களை ஆற்ற இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுகிறது. 9,300 நியாய விலைக் கடைகளை உள்ள இடத்தில் வசதியைப் பெருக்கி 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்கள் ஒவ்வொன்றிலும் தொடங்கப்பட்டு கிராமப்புற மக்களின் தேவைகளை, வசதிகளைப் பூர்த்தி செய்யப்படும் என்று சொல்லுகிறோம். இந்த அரசாங்கம் ஏழை எளிய கிராமப்புற மக்களின் மீது எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது இது.

இத்தனைக்கும் மேலாக இன்றைக்கு எதிர்ப் பக்கத்திலே பேசியவர்கள் இதிலே ஒன்றுமே ஆதரிப்பதற்கில்லை என்று சொன்னார்கள். எதற்காக இதிலே ஒன்றுமே ஆதரிக்க முடியவில்லை எனக் கூறுகிறார்கள் என்றால், இன்றைக்கு ஆங்கிலப் பத்திரிக்கைகூட செய்திகளை போடுகிறபோது "வார் ஆன் கரப்ஷன்" ஊழலை ஒழிக்கப் போராடத் தொடங்கியிருக்கிறார்கள் என்று செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். இதனை அவர்களால் எப்படி ஆதரிக்க முடியும். அந்த வகையில் நாங்கள் முழுமையாக ஆதரிக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டி எங்களாலே முழுமையாக வரவேற்கத்தக்க அளவுக்கு அண்ணா அவர்கள் ஊட்டி வளர்த்த இந்தி எதிர்ப்பு உணர்வு, தமிழ் பண்பாடு, கலாசாரம் போன்றவைகள் பாதுகாக்கப்படும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறது. தமிழ் அறிஞர்கள், தமிழ் பெரியார்கள் பாராட்டப் படுவார்கள் என்பதெல்லாம் இதிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

"செந்தமிழுக்கு ஓர் தீங்கு வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ" என முழங்கித் தாங்கள் தேக்கு மரத் தேகங்களில் தீயை வைத்துக்கொண்டு சந்தன மரம் எரிவது போல் எரிந்து சாம்பலானார்களே, அந்தத் தியாகிகளை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆளும் கட்சி சார்பில் அளித்த தேர்தல் அறிக்கையில் இருந்த கருத்துக்கள் இங்கே ஆளுநர் உரையில் இல்லை என்று வருத்தப் பட்டார்கள். தேர்தல் அறிக்கை வெளியிட்ட நேரத்தில், அண்ணா



1977 ஜூலை 8] [திரு. இரா. முத்தையா]

தி.மு.க. கொள்கை விளக்கத்தைப் பற்றி தேர்தல் அறிக்கையிலே இல்லை என்று சொன்னார்கள். நாங்கள் கொள்கை விளக்கத்தை வெளியிட்ட நேரத்திலே சொன்னார்கள், கொள்கையே இல்லை என்று. கொள்கை இதுதான் என்று சொன்ன நேரத்தில், இது தேர்தல் அறிக்கை போல இருக்கிறதே என்று சொன்னார்கள். "இவர்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வார்கள்" என்று சொன்னார்கள். இப்போது சொல்கிறார்கள். கவர்னர் உரையிலே ஒன்றுமே இல்லையே—தேர்தல் அறிக்கையிலே இருந்தது ஒன்றுமே இல்லையே என்று சொன்னார்கள். இப்போது சொல்கிறார்கள் தேர்தல் அறிக்கையிலே நிரம்ப இருந்தது என்று. இனி பட்ஜெட் வரும்போது, பட்ஜெட்டிலே ஒன்றும் இல்லை, கவர்னர் உரையிலே நிரம்ப இருந்தது என்று சொல்வார்கள். அது நடைமுறைக்கு வரும்போது சொல்வார்கள். பட்ஜெட்டில் நிறைய இருந்தது, ஆனால் காரியங்கள் ஒன்றும் இல்லையே என்பார்கள். அதன்பிறகு காரியங்கள் நடந்திருக்கின்றன, ஆனால் அங்கங்கே சரியாக நடைபெறவில்லை என்று சொல்வார்கள்.

இதைப்பற்றியெல்லாம் நினைக்கிறபோது, எனக்கு ஒரு கதை தான் நினைவுக்கு வருகிறது. பக்கத்து வீட்டிலே புதிதாக மணம் செய்துகொண்ட பெண் கருவுற்று இருப்பதைக் கேள்விப்பட்ட மலடி சொல்வாளாம். குழந்தை வயிற்றிலேதானே கருவுற்று இருக்கிறது, அது சீக்கிரம் அழிந்து விடும், குழந்தை பிறந்தால் தானே என்பாளாம். அந்தப் பெண் அதன் பின்னர் ஒரு அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் என்ற செய்தி வந்த பின்னர் குழந்தைதானே பிறந்திருக்கிறது. 10 நாள் பொறுத்து இறந்து விடும் என்பாளாம். பையனுக்கு ஓராண்டு கழிந்த பிறகும் சுட்டிப் பயலாக இருக்கிறான், காரிலோ, ரயிலிலோ அகப் பட்டு இறந்து விடுவான் என்பாளாம். அதற்குப் பிறகு அவனுக்குத் திருமணம் ஆன பிறகும்கூட சொல்வாளாம். அவனுக்கு தோஷம் இருக்கிறது, சீக்கிரம் இறந்து விடுவான் என்பாளாம். இப்படிப் பைய பைய போய் அவனுக்கு 60 வயதாகி மணி விழாவினைக் கொண்டாடும்போதும், அந்தப் பொக்கை வாய்க் கிழவி சொல்வாளாம், 60 வயது ஆகிவிட்டதே! அப்பாடா இனி அவ்வளவுதான்; போய்ச் சேர்ந்து விடுவான் என்பாளாம். கடைசியில் இந்தக் குழந்தை அந்த வீட்டு கேதத்தை விசாரித்துவிட்டு வரும். அது வரையிலும் அந்தக் கிழவி—அந்த மலடி ஏதாவது சொல்லிக் கொண்டுதான் இருப்பாளாம். அதேபோல் கொள்கையை

சொன்ன நேரத்திலே திட்டம் இல்லை, தேர்தல் அறிக்கையிலே ஒன்றும் இல்லை, ஆளுநர் உரையிலேயும் ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் செய்ய இருக்கிற நல்ல பல காரியங்களைப் பற்றி தேர்தல் அறிக்கையிலே இருந்தன. அவை அத்தனையும் இந்த உரையிலே இருக்கின்றது. கிராமப்புற மக்கள் எந்த உதவி களையும் இதுவரையில் பெற முடியாமல் இருந்தார்கள். அரசாங்கம் என்பது காக்கி சட்டை அணிந்த போலீஸ்காரர்கள் என்ற அளவிலேதான் கிராமப்புற மக்கள் கருதிக் கொண்டிருந்தார்கள். அந்த மக்கள் நெஞ்சங்களிலே பால் வார்க்கிற இனிய செய்தியாக இந்த உரை இருக்கிறது என்று எனது முழு ஆதரவைத் தெரிவித்து வரவேற்பைத் தெரிவித்து நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

***திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இங்கே நடைபெறு கின்ற விவாதத்தில் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் 17 மாத காலம் தமிழகத்திலும், குடியரசு தலைவர் ஆட்சி முடிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் ஆட்சி ஏற்பட்டதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 17 மாத காலம் தமிழகத்திலும், 2 ஆண்டு காலம் இந்திய நாட்டிலும் பயங்கரமான கொடுமையான ஒரு நிலைமை இருந்தது என்பதை நாம் அத்தனை பேர்களும் நன்றாக அறிந்திருக்கிறோம். அப்போது இழைக்கப்பட்ட கொடுமைகள் ஏட்டில் அடங்காது. உயிர்கள் வாங்கப்பட்டன. மக்களுடைய பேச்சு சுதந்திரம் பறிக்கப்பட்டது. பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டது. கூட்டம் கூடும் உரிமை பறிக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. இதனை எதிர்த்து நீதி மன்றங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. மோசமான நிலைமையை எதிர்த்து நம் நாட்டு மக்கள் பெரிய ஊழிக் காற்றென கிளம்பி அவர்களுடைய சக்தி முழுவதையும் திரட்டி இந்த மகத்தான வெற்றிக்கான அடிப்படையைத் தேடித் தந்தார்கள்.

அதன் பலனாகத்தான் இந்த மகத்தான வெற்றியை ஜனநாயக நாட்டிலே நிலைநாட்டி பிறகு இந்தச் சட்டப் பேரவையில் நாம் அத்தனை பேரும் அமர்ந்து நமது காரியங்களின் நன்மை தீமை



களைப்பற்றி ஆராய்ந்து அறிந்து, தகுந்த நடவடிக்கைகளுக்கான முடிவு எடுக்க வேண்டிய உயரிய சந்தர்ப்பம் நமக்குக் கிடைத் திருக்கிறது. அந்த ஜனநாயக முறையை மேலும் உறுதிப் படுத்த செய்யவேண்டிய காரியங்கள் நிறைய உள்ளன. அவை அனைத்தும் தீர்ந்து விட்டது என்று நாம் கருதி விடக் கூடாது. தேர்தல் ஒன்றினால் மட்டுமே அவை முடிந்து விட்டதாகக் கருதக் கூடாது. மக்களைப் பிடித்து சிறையில் அடைப்பதற்கும், கூட்டங்கள், பிரச்சாரங்கள், பேச்சுக்கள், ஸ்தாபனங்கள் ஆகிய உரிமைகளை தடுப்பதற்காகவும் இருந்த "மிசா சட்டம்" ரத்து செய்யப்படவேண்டும். அது சட்ட புத்தகத்திலே இருந்து நீக்கப்படவில்லை, ரத்து செய்யப்படவில்லை. மக்களுக்கு வாக் குறுதி கொடுத்து அதன் அடிப்படையிலே மக்களுடைய ஆதரவு பெற்று நடைபெறுகின்ற ஒரு அரசாட்சி மத்தியிலே அமைந்து இருக்கிறது. அந்த நல்ல சூழ்நிலையை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது சட்டப் பேரவைமூலமாக, அந்த சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று நாம் வற்புறுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது. அந்த முறையில் அந்தச் சட்டம் ரத்து ஆகவேண்டும்.

இதே மாதிரி 42-வது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் என்று கூறுகிறோமே—முன்னால் அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்த நல்ல அம்சங்களை—மக்களுக்கு பிரஜா உரிமைகள் வழங்கும் சில அம்சங்கள் அவை அனைத்தும் ரத்து செய்யப்பட்டு, அரசியல் சட்டத்தினுடைய பல்வேறு நடவடிக்கைகள் முடக்கப்பட்டு, நீதி ஸ்தலங்களுக்குச் செல்ல முடியாது என்ற நிலைமை உருவாக்கப்பட்டு, 'மிசா' வில் கைது செய்யப்பட்டாலும் அந்த மிசா சட்டத்தையே சரியாகப் பயன்படுத்தி கைது செய்யப் படுகிறோமா என்று கேள்வி கூட கேட்க முடியாத நிலையிலே தள்ளப்பட்டு மோசமான நிலைமை அந்த 42-வது அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம் ஏற்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கி றோமே, வாதாடுகிறோமே அது கிடைத்துத் தீரவேண்டும். மக்க ளுக்கு நன்மை செய்ய, மாநிலங்களுக்குத் தேவையான செல்வ ஆதாரங்களைத் திரட்ட 42-வது சட்டத்தை திருத்துவதன் மூலம்தான் பெற முடியும். இந்த மாநிலத்திற்கு ஏற்கனவே இருந்த அற்ப சொற்ப அதிகாரங்கள் பலவற்றையும் பிடுங்கி

எடுக்க 42-வது சட்டத்தை உபயோகிக்கக் கூடாது. அது ரத்து செய்யப்பட வேண்டும். அதன் மூலம் மக்களுக்கு ஜனநாயக உரிமை மீண்டும் கிடைக்கப் பெற்று மாநில வளர்ச்சி தங்கு தடையின்றி கிடைத்திட சூழ்நிலைகளை உருவாக்குவது மிகமிக அவசியம் என்ற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரி அரசியல் குற்றத்திற்காக கைது செய்யப் பட்டவர்களும், நக்சலைட் கைதிகளையும் மனிதாபிமான நோக் கோடு, விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயகம் வலுப்பெற்று வருகிற இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதே மாதிரி உழைப்பாளி மக்களின் கொள்கைகளைப் பற்றி முக்கியமான கொள்கை அம்சங்களைப் பற்றித்தான் பேசுகிறேன், மற்ற விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு வேறு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்புகிறேன்—கூற விரும்புகிறேன்: தொழிலாளி மக்கள், உழைப்பாளி மக்கள் நிலைமையைப் பற்றி எடுத்துக்கொண்டால், அவர்கள் கூட்டங்கள் போடலாம், ஊர்வ லங்கள் நடத்தலாம், அவர்கள் சில போராட்டங்களை நடத்தலாம் என்று உரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்கள் இதுவரையில் ஒடுக்கி வைக்கப்பட்டு இருந்தார்கள். அடக்கி வைக்கப்பட்டு இருந்தார்கள். இப்போது அந்தக் கொடுமைகளை எதிர்த்து வெளியே வருகிறார்கள். நாட்டுக்கோ அல்லது ஆட்சிக் கோ தீங்கு இழைக்கும் காரியத்திற்காக அப்படி அவர்கள் செய்ய வில்லை. சும்மா இருக்க முடியாமல் கொழுத்துப் போய் அப்படி அவர்கள் செய்யவில்லை.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், எங்களுடைய கோவை மாவட்டத்தில் 4 பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. அதில் இருக்கும் சுமார் 2,000 தொழிலாளர்கள் பட்டினியால் வாடிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் 10 பஞ்சாலைகளை அரசுத் துறையில் எடுத்துக் கொண்டு இருப்பதைப்போல் இவற்றையும் எடுத்துக்கொண்டு நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப் பரேஷன் மூலம்—அவற்றின் சப்சிடியரி கார்ப்பரேஷன் தமிழ் நாட்டில் இருக்கிற அமைப்பின்மூலம்—இயங்கச் செய்யவேண்டு

1977 ஜூலை 8] [திரு. கு. ரமணி]

அந்தப் பிரச்னையை அவ்வளவு மென்று கேட்டுக்கொள்கிறேன். சுலபமாக தீர்த்து விடமுடியாது என்று அரசு சொல்லலாம். ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பாதிக்கப்பட்ட தொழிலாளர் களுக்கு சர்க்காரின் உதவி தேவை. அதற்காக அரசு முன் வந்தால் நிச்சயமாக அந்த பாதிக்கப்பட்ட மக்கள் அரசுக்கு பக்கபலமாக இருக்கும் எந்த நடவடிக்கையும் எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொளகிறேன். இப்போது தமிழ் நாட்டில் மூடப்பட்டுக் கிடக்கிற பஞ்சாலைகளைத் திறப்பதற் கான நடவடிக்கைகளை அரசு அறிவித்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏராளமான பேர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமை இருக் கிறது. பல்லாயிரக்கணக்கான உழைப்பாளிகள் டெம்பரரியாக, கேஷுவல் லேபரர்களாக, டிக்கெட் இல்லாதவர்களாக இருக்கி றார்கள். அப்படிப்பட்ட உழைப்பாளிகள் வேலைக்கும், ஆலை களில் உழைக்கும் தொழிலாளிக்கும் நிரந்தரமாக வேலை கிடைக்க வகைசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு சட்டப்படி கட்டாயமாக கொடுக்கப்படவேண்டிய லே-ஆஃப் சம்பளம் கூட, பதிலி, கேஷுவல் லேபரர்களுக்கு இல்லை. இது இந்த அரசாங்கத்தில் மட்டுமல்ல, பல்வேறு அரசாங் கங்களில் இருக்கும் நிலைதான் என்பதை நினைவூட்ட விரும்பு கிறேன். உழைப்பாளிகளின் வாழ்வுக்கு நல்லதொரு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அவனுக்கு வேலை இல்லை என்றால் அவனுடைய குடும்ப வாழ்க்கை முடிந்து விட்டது என்று அர்த்தம். ஆகவே, இந்த நிலைமையைத் தீர்ப்பதற்கு பல் நடவடிக்கைகளை, கொள்கை அறிவிப்புகளை அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரங்களிலும்—கிராமத்தில் எப்படி லட்சோபலட்சம் மக்கள் கஷ்டப்படுகிறார்களோ—அந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள் பட்டினியால் வாடித் தவிக்கிறார்கள். கிட்டத்தட்ட இந்த மாதிரி இருக்கும்படியான மக்களால், நகரத்தில், கிராமத்தில் இருக்கும் மக்கள் பார்த்து, நாம் அவர்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு இந்த சட்டமன்றத்திற்கு வந்தவர்கள், ஆயிரக்கணக்கான், லட்சக் கணக்கான, குடிசைவாழ்மக்களின் வாழ்க்கைப் பிரச்னை இவ்வி டத்தில் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது, அதற்குத் தேவையான

வகையில், அவர்களுடைய பட்டினி, பசியைப் போக்குகிற வகையில் நகரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முனிசிபல் கவுன்சில்கள் இருக்கவேண்டும்.

இப்போது விசேஷ அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். அவர்களால எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டு வர இயலவில்லை. அந்த மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். அவர்கள் நல்வாழ்வு வாழ நாம் பாதை அமைத்துக் கொடுத்தால்தான் நல்லது. அவர்கள் நம்மிடத்தில் பெரிய உதவியை எதிர்பார்க்கிறார்கள். இந்த மாதிரி காரியங்கள் அரசின் கவனத்திற்கு வெகுவேகமாக நாம் கொண்டு வர வேண்டியிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு, அந்த மக்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு, அவர்களுடைய குறைகளை பிரதிநிதிகள் மூலமாக எப்படி சட்டப் பேரவையில் கூறுகிறார்கள், அப்படி நகரத்தில், கிராமத்தில் உள்ள மன்றங்களில் எடுத்துக் கூறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் வளர்ச்சி அடையும். வெறும் வார்த்தைகளால் மட்டும் ஜனநாயகம் வளரவேண்டும் என்று சொன்னால் போதாது. அப்படிப்பட்ட ஜனநாயக முறைகள் வளர்வதற்கு, வளம்பெறுவதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறது என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

தொழிலாளர்களுடைய உரிமைகள் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு கிடைக்கவேண்டிய போனஸ், இன்றைக்கு போனஸ் சட்ட திருத்தத்தின் காரணமாக கிடைக்காமல் இருக்கிறது. அதனை மறுபடியும் மாற்றித் தர வேண்டும். சம்பாதித்த பணத்தையும் இன்றைக்கு கொடுக்காமல் பிடுங்கி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒருவன் உழைத்துச் சம்பாதித்த பணத்தை அவனுக்கு ஒழுங்காக பட்டுவாடா செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் இன்றைக்கு பிடித்து வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலைமையையும் மாற்றி அமைக்க வேண்டும். இந்தக் கருத்துக்களை நம்முடைய சட்டப்பேரவையின் மூலமாக மத்திய அரசுக்கு எடுத்துக்கூற வேண்டும். மத்தியில் இருக்கும் அரசாங்கம் இத்தகைய கொள்கைகளுக்கு இணக்கமாக இருக்கிற அளவில் அமைந்து இருக்கிற காரணத்தால் அவற்றை வலியுறுத்திக் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தக் கருத்துக்களை சிபார்சுகளாக மத்திய அரசாங்கத்திற்கு இந்த சட்டப்பேரவை மூலம் அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.





* டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் புதிய அரசை வரவேற்றும், உறுப்பினர்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் இந்த உரையில் மிக நல்ல முறையில் இங்கே எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் அவர்கள் மறைந்ததற்கு வருத்தம் தெரிவிக்கக்கூடிய வகையிலும், அவர்களுக்கு வருத்தத்தைத் தெரிவித்தும், நடந்து முடிந்த தேர்தல் நல்லாட்சிக்கு வழி அமைத்துத் தந்துள்ளது என்பதையும் சொல்லியிருக்கிறார்கள்.

"போர் மகளை—கலைமகளை—புகழ் மகளை
தழுவியகை பொறுமை கூற—

சீர்மகளை—திருமகளை—தேவருக்கும்
நெரிவரிய தெய்வக்கூற்பின்—

பேர்மகளை—தழுவுவான் உயிர் கொடுத்துப்—
பழிகொண்ட பித்தா—உண்டைப்

பார்மகளைத் தழுவினையே! திசையானை
பணையிறுத்தப் பணைத்த மார்பால்"

என்ற கருத்துக்கேற்ப ஆட்சி ஏற்பட்டு இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து, விளையும் பயிர் முளையிலே என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் தென்னகத்தில் புரட்சித் தலைவரின் சமநீதி மேலோங்கும் வகையில் அண்ணாயிசக் கருத்துக்களை அழகாக, தெளிவாக, சுருக்கமாக விளக்கியுள்ளதை நல்லோர்கள் வரவேற்கின்றனர், ஏழை எளியோர்கள் வரவேற்கின்றனர் என்பதை புதிய அரசை பாராட்டும் வகையில் ஆளுநர் அவர்கள் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.

[டாக்டர் கே. சமரசம்] [1977 ஜூலை 8

தமிழகத்தின் தனித் தன்மை கெடாமல், இந்திய ஒருமைப் பாடு உருக்குலையாமல், உலகில் சிறந்த காந்திய நெறிமுறையை அண்ணாவின் அடிச்சுவட்டில் நடந்து வெற்றி காணும் வகையில் ஆளுநர் அவர்களின் உரை அமைந்து இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்லாது, உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற வரட்டுவாதக் கருத்தைப் போக்கி, 'உறவுக்குத் துணையிருப்போம், உரிமைக்கு உயிர் கொடுப்போம்' என்ற தத்துவத்தை நிலை நிறுத்தும் வகையில் மிக நல்ல முறையில் இந்த அரசின் கொள்கைகளை விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, பாரதியாரின் பாட்டை நனவாக்கும் வகையில் தமிழ் தனிச் சிறப்பு பெற்று விளங்கவும், அண்ணாவின் மொழிக் கொள்கை அழியாமல் காப்பாற்றவும் இந்த அரசு நல்ல முறையில் திட்டங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பதைக் குறிப் பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மக்களுக்கும், அரசுக்கும் தொடர்பு நல்ல வகையில் இருக்கவேண்டும் என்ற வகையில் ஏரோட்டம் நின்று போனால், தேரோட்டம் இல்லை, காரோட்டமும் இல்லை என்பதை மிகத் தெளிவாக 8-வது பத்தியிலே நமக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அதையடுத்து, பசி வந்திடப் பத்தும் பறந்து போகும், அரிசி யிலேதான் அரசியல் விளையாடியது என்பதை மீண்டும் நினைவு படுத்தும் வகையில் பேறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக்களை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லும் "பிரடரிக் தி கிரேட்" என்ற மன்னனின் கதையாக மாநில அரசு போகாது என்பதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் பட்டினி போட்டு கஜானாவை காலியாக்காமல், ஏழை எளிய மக்களின் துன்பம் துடைக்கவும் மக்களைக் காப்பாற்றவும், இருப்பவர் இடிந்திடத் தேவையில்லை, உழைப்பவர் உயர்ந்தால் போதும் என்ற கருத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

நியாய விலைக்கடைக்களை பெருக்கி, அன்றாடத் தேவைப் பொருட்களை ஆங்காங்கு கிடைக்க ஆவன செய்வதால் 4½ கோடி மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த அரசு நல்ல திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுக்கு தந்து இருக்கிறது



1977 ஜூலை 8] [டாக்டர் கே. சமரசம்]

என்பதை நான் அறிகிறேன். அடுத்து வரும் திட்டங்களுக்கு செயல்களுக்கு அச்சாரமாக பல திட்டங்களை இந்த ஆண்டு ஆளுநர் பேருரையிலே காண்கிறோம்.

அதுமட்டுமல்ல, வறுமையை ஒழிப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவது, ஆகியவை அரசின் தலையாய கொள்கையாகும். ஒண்ணே முக்கால் அடியிலே உலகத்தை அளந்த வள்ளுவன் குறள் போல் சுருக்கமாக, தெளிவாக ஆளுநர் உரை விளங்குகிறது.

(முற்பகல் 11-00)

அதுவுமல்லாமல் வயிராறச் சோறு, கிழியாத துணி, ஒழுகாத வீடு இதுவே தலையாய தேவை என்பதை உணர்ந்து, உழுவோர் உலகிற்கு அச்சாணி என உணர்ந்து, விவசாயத்துக்கான விளக்க மான கருத்துக்களை இங்கே சொல்லியிருப்பது வரவேற்கக் கூடிய தாகும்.

அதுமட்டுமல்லாமல், வீராணம் திட்டம் விரியன் பாம்பு திட்ட மாக மாறி கொட்டிவிட்டது என்பதனை தெளிவாக உணர்ந்து அடுத்து வந்திருக்கக்கூடிய ஆட்சி கிருஷ்ணா நதித் திட்டத்தை நாட்டு மக்களைக் காப்பாற்றக் கூடிய முறையில் திட்டமாக தீட்ட விருப்பதை வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, சம்சாரம் இல்லையாயின் பரவாயில்லை, மின்சாரம் தேவையே என்று நாட்டு மக்கள் நினைக்கும் அளவுக்கு தேவை பெருகி வரும் நவயுகத்தில் மின்சாரத்தை நல்ல முறை யில் செலுத்தும் வகையில் அது உருவாகக் கூடிய வகையில் இந்த திட்டங்கள் மேலும் படிப்படியாக செவ்வனே செயல்படுத் தப்படும் என்று சொல்லியிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்லாமல், இன்றைய தினம் மதுவிலக்குத் திட்டத் தைப்பற்றி சொல்லும்போது, ஒரு மூடன் ஒரு கல்லைத் தூக்கிக் கடலில் எறிந்து விட்டால், 100 அறிவாளிகள் சேர்ந்து எடுப்பது என்றாலும் சிரமம் என்று அறிஞர்கள் ஒத்துக்கொள்வார்கள். இடையே ஒரு திட்டத்தை முந்தைய அரசு கொண்டுவந்ததால்

[டாக்டர் கே. சமரசம்] [1977 ஜூலை 8

அவதிப்படக்கூடியவர்கள் எத்தனை பேர் என்பதைத் தெளிவாகச் சொல்லும் அளவுக்கு, மதுவிலக்கின் மகிமையை உணர்த்தும் அளவுக்கு உரை இருந்தது வரவேற்கத்தக்கதாகும்.

அடுத்து, மக்கள் ஆட்சித் தத்துவத்தின் மகிமையாக மக்களே நகரமன்ற தலைவரையும், ஒன்றியத் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதற்காக சட்டம் கொண்டுவர இருப்பதாகச் சொல்லியிருப்பது உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும். பொதுவாக ஆளுநர் அவர்களுடைய உரை மிகச் சுருக்கமாகவும், எளிமையாகவும், இனிமையாகவும், இந்த நாட்டில் இல்லாதவர்களை முன்னேற்றக் கூடிய வகையில் இருக் கிறது என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் மாவட்டம், தர்மபுரி மாவட்டம். அங்கே ஒகேனக்கல் திட்டம் என்று ஒரு திட்டம் போடப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் நல்லமுறையில் நிறைவேற்றப்படுமேயானால், அந்தத் பலவித பிரச்னைகள் தீரும் என்று நிச்சயமாக நம்புகிறோம். ஒகேனக்கல் திட்டம் ஏற்கனவே தீட்டப்பட்டு, ஏதோ இடைக் காலத்தில் நிறுத்தப்பட்டு, செயல்படுத்தப்படாமல் போய் விட்டது. அப்படிப்பட்ட திட்டம் நிறைவேற்றப்பட்டால், நீர்மின் திட்டம், பாசனம், குடிநீர் திட்டம் ஆகியவை அங்கே செய்யப்பட வழி ஏற்படும். அதற்கு அரசு உத்திரவாதம் அளிக்க வேண்டும், அப்படிப்பட்ட திட்டத்தை அமுலாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளு வேன்.

அங்கே பஞ்சப்பள்ளி திட்டம் என்று ஒன்று போடப்பட்டது, அது பஞ்சமாபாதகத் திட்டமாக மாறி, அங்கே தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரை, அழகான, சீரான, இனிமையான உரை. ஏமாற்றம் தருகிறது என்று சிலர் உரைக்கிறார்கள். ஏமாற்றம் என்று சொல்லலாம். ஏமாற்றியவர்கள் ஏமாறுவது இயற்கையே. அழிக்க வேண்டியதை அழித்தால் ஒழிய நிலைக்க வேண்டியது நிலைக்காது என்பது சித்தாந்தம். ஆகவே



1977 ஜூலை 8] [டாக்டர் கே. சமரசம்]

அப்படிப்பட்ட நல்ல முறையில், நல்ல திட்டங்களை குறிப்பிட் டிருக்கின்ற ஆளுநர் அவர்களின் உரைக்கு ஆளுங்கட்சியின் சார் பாகவும், அவையின் சார்பாகவும் நன்றி தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர் ராதா அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நான் சபைக்குப் புதியவன் என்பதை அறிவீர்கள். வெளியிலே பல மணி நேரம் மேடையில் பேசி வழக்கப்பட்டவனே தவிர, சட்டசபையில் பேசுகின்ற அனுபவத் தில் புதியவன், இந்த வாய்ப்பை புதிதாகப் பெற்றவன். ஆகவே எனக்கு நேரத்தை கணக்கெடுத்துச் சொல்ல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, எங்கள் கட்சியின் தலைவர் முன் வரிசையில் அமர்ந்திருக்கிறார். அவரைக் கலந்து பேச முடியாமல், கடைக்கோடியிலிருந்து பேச வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். ஆகவே நான் பேசும் கருத்துக் களை கேட்டு, ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, சபையில் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுநர் உரை பற்றிய தங்கள் கருத் துக்களையும் எடுத்துச் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன்.

நாங்கள் ஆளுநர் அவர்களின் உரையைப் பற்றிப் பேசுகின்ற போது, அதிலே உள்ள குறையைச் சுட்டிக் காட்டி, நிறையை வரவேற்று, இல்லாததை எடுத்துக் காட்டுகின்ற கடமையில் இன்றைக்கு எங்கள் கட்சி இருக்கிறது என்பதை முதலில் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரை என்று சொல்லுகின்ற போது, இந்த உரை வெறும் சம்பிரதாயமாக இல்லாமல், ஆளுகின்ற கட்சியின் கொள்கைப் பிரகடனமாக அமைவதை நாம் அறிவோம். ஆகவே அதில் உள்ள வார்த்தை களை கவனமாகப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இந்த சபைக்கும், எங்கள் கட்சிக்கும் ஏற்பட்டிருக்கிறது.

முதன்முதலாக நான் குறிப்பிட விரும்புவது, தமிழில் ஆளுநர் உரை படிக்கப்பட்டது வரவேற்கத் தக்கதாகும், மகிழ்ச்சிக்குரிய தாகும். இது சம்பந்தமாக எங்கள் கட்சி சட்டமன்றக் குழு ஏற்கனவே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி சட்டசபைக்கு அனுப்பியிருக்கிறது. அவையினர் அந்த பத்திரிக்கையிலும்

பார்த்திருக்கலாம். ஆனால் சபையின் முன்னவர் இதை அறிவிக்கின்ற போது, கம்யூனிஸ்டு கட்சியின் ஆலோசனையின் பேரில் இந்த உரை தமிழில் வருகிறதா என்று கேட்டதற்கு, அது எனக்குத் தெரியாது என்று பதில் அளித்ததாக பத்திரிகையில் வந்திருக்கிறது. அது கண்டு நான் வருத்தப்படுகின்றேன். அபபடியானால் நாங்கள் அனுப்பிய தீர்மானத்தை சட்டசபை காரியதரிசி அவர்கள் முன்னவருக்கு கொடுத்தாரா இல்லையா என்பது எங்களுக்குத் தெரிய வேண்டும். ஏனென்றால் நான் இப்படி சொல்லுகிறபோது, நாங்கள் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றவர்கள் என்பது மாத்திரமல்ல, மொழி சம்பந்தமாக நாங்கள் ஒரு கொள்கையை உடையவர்கள். ஆகவே, தமிழை ஆட்சிமொழி என்று சம்பிரதாயமாக எடுத்துக்கொண்டால் போதாது. அது அமுலாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் தீர்மானம் தந்தோம். மொழி சம்பந்தமாக சர்ச்சை வருகிறபோது நாம் வெளி மாநிலங்களுக்கு ஆலோசனை கூறும் போது மிக நிதானமாக இருக்கவேண்டும் என்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் படித்த நாமக்கல் கவிஞர் கூற்று ஞாபகத்திற்கு வருகிறது. அதைக் கூற விரும்புகிறேன்.

"தன் குஞ்சு ஒன்றே பொன்குஞ்சு என்று கன்னங்கருத்த
காக்கையும் கருதும் என்னும் பழமொழி இயல்புக்கு
இணங்க, அவரவர் மொழியே அவரவர்க்கு உயர்ந்தது.
ஆயினும் தமிழை அதற்காகப் புகழ்ந்திடோம்.
பழமை மிக்கது தமிழ் என்னும் பாஷை:
செங்கண் நிறைந்த ராம காதையை வால்மீகி
முனிவன் வரைந்த போதே தமிழர் நாட்டை தனியே
புகழ்ந்து, ஆட்சியின் சிறப்பை அதிலே சொன்னான்.
வால்மீகி காலம் வரையறை அற்றது. அதற்கு
முன்னால் ஆண்ட மொழி தமிழ்"

என்று நாமக்கல் கவிஞர் கூறினார். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், தமிழை முழுமையாக சட்டசபையில் புகுத்த முடியாது என்றும், நீதிமன்றங்களில் கொண்டுவர முடியாது என்றும் கூறப்படுகிறது.

சட்டசபை ஒழுங்கு விதிகளை ஆங்கிலத்தில் கொடுத்திருக்கிறார்களே தவிர, தமிழில் கொடுக்கப்படவில்லை என்று நினைவு படுத்த விரும்புகிறேன். தமிழை ஆட்சிமொழி என்று ஏற்றுக் கொண்டபிறகு, வேகமாக, முறையாக, சகல துறைகளிலும் தமிழைக் கொண்டு வருவதில் ஈடுபடவேண்டும் என்று நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தாற்போல, இந்த ஆளுநர் உரையைப் பொருத்தும் சரி, அதுமாத்திரமல்ல அரசாங்கத்தைப் பொருத்தும் நாங்கள் ஒரு அணுகு முறையை கடைப் பிடிக்க வேண்டும் என்று முடிவு எடுத் திருக்கிறோம். இந்த நிலையைச் சொல்லுகிறபோது வள்ளுவர் பெருந்தகை கூறியுள்ளது போல்

"குணநாடி குற்றமுநாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்பதற்கு ஏற்ப நல்லவற்றை ஆதரித்து, எங்களுக்குச் சரி இல்லை என்று படுகின்ற கருத்துக்களை சொல்லுகின்ற அணுகு முறையை, ஆளுநர் உரையானாலும், அரசாங்கக் கொள்கை யானாலும், அந்த முறையை வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, நான் ஒன்றை இங்கே குறிப்பிடுவது அவசியமாகிறது. ஆளுநர் அவர்கள் உரையில் முதன்முதலில் மறைந்த குடியரசுத் தலைவர் திரு. பக்ருதின் அலி அஹமது அவர் களின் மறைவுக்காக அனுதாபம் தெரிவித்து அவரின் குணாதிச யங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அது சரியானது. இருந்தும் சில தலைவர்கள், அவசரநிலை நெருக்கடியைக் காரணமாக வைத்து அன்றைய அரசு வெளியே நடத்திய கொடுமைகளைச் சகியாமல் அவர் மறைந்தார் என்று சொல்வது அவரைச் சிறுமைப்படுத்து வதாகும். ஏனென்றால் வெள்ளை ஏகாதிபத்திய அரசை எதிர்த்துப் போராடிய பாரம்பரையைச் சேர்ந்தவர் அவர். சுதந் திரப் போராட்டத்தின் போது வெள்ளையன் நடத்திய கொடுமை களை எதிர்த்து நின்று போராடியவர்; அப்படிப்பட்டவர், நெருக்கடி காலத்தில் வெளியே நடைபெற்ற கொடுமைகளைக் கண்டு சகியாமல் மறைந்தார் என்று சொல்வது அவரை சிறுமைப்

படுத்துவதாகும். ஆகவே கவர்னர் அவர்களின் உரையில் அவருடைய குறைநிசயங்களை எடுத்துக் காட்டியிருப்பதை வரவேற்கிறேன்.

அதுமாத்திரமல்ல, ஆளுநர் உரையைப் பற்றி சொல்லுகிற போது, உங்களுக்குத் தெரியும், இன்றைக்கு அதில் பொதுவான அம்சங்கள் சில சொல்லப்பட்டிருக்கின்றன. உணவுப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், 9, 10, 11 பாராக்களில் விவசாயிகளுக்கு நியாய விலை, வாங்குவோர்க்கு நியாய விலை, பொது விநியோக ஏற்பாடு என்று மூன்று லட்சியங்கள் வைத்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஆனால் அதை அமுலாக்க சொல்லப்பட்டிருக்கும் யோசனைகள் லட்சியங்களை நிறைவேற்ற போதுமானதா என்ற ஐயப்பாடு இருக்கிறது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் தனி வியாபாரிகள் மத்தியில் தாராளமாக, நியாயமான விலையில் அரிசி கிடைக்கிறது என்று 9-வது பாராவில் சொல்லிவிட்டு, 10-வது பாராவில் இடைத்தட்டு லாபக்காரர்களுடைய லாபத்தைக் குறைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். இடைத்தட்டு லாபக்காரர்களுடைய லாபத்தைக் குறைப்பது, தடுப்பது என்பது நடக்காத காரியம். இடைத்தட்டுக்காரர்களை வைத்து அத்தியாவசியமான பொருள்களைச் சப்ளை செய்வது என்பது நடக்காது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். இடைத்தட்டுக் காரர்களை அடியோடு ஒழித்தாலன்றி பொதுமக்களுக்கு நியாய மான விலையில் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பது முடியாத காரியம். நம்முடைய நோக்கங்களுக்கு அவர்கள் இடைஞ்சலாகவே இருப்பார்கள். அத்தியாவசியப் பொருள்கள் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பதை நீங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். இதற்கு இடைஞ் சலாக, இடையூறாக இருக்கக்கூடியவர்களை, நம் நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால் நீக்கியாக வேண்டும் என்பதை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

அதுமாத்திரம் அல்ல. மற்றொரு அம்சத்தைக் குறிப்பிடுவதும் அவசியமாகிறது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட மட்டில் நீர்ப் பாசனம் சம்பந்தமாக நல்ல சீர்திருத்தத்தைக் கொண்டுவர இருக்கிறோம். என்றாலும் அவர்களுடைய கடன் சுமையைப்



பற்றிய பிரதான அம்சம் ஆளுநர் அவர்களுடைய உரையில் ஏன் குறிப்பிடப்படவில்லை என்பது தெரியவில்லை. சாதாரணமாக ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு சாதாரண விவசாயி தன்னுடைய அன்றாடத் தேவைக்கு சிறு சாமான்களை ஊரில் உள்ள கடையில் கடனாக வாங்குவான். வருகிற மகசூலில் கொடுப்பதாக வாங்குவான். சொன்னபடி கடனைத் தீர்க்க முடியவில்லை என்றால் மிகப் பெரிய தீரனாக இருந்தாலும் கடன் வாங்கிய கடைப்பக்கமே போகமாட்டான். இப்படி விவசாயி களை அழுத்திக்கெடுக்கிற பெரிய பிரச்சினை அவர்களது கடன் சுமையாகும். இந்தக் கடுமையான பிரச்சினைக்கு நிவாரணம் தேடுவது கடன் வசூலை ஒத்திவைக்கிற சட்டங்களினால் முடியாது. ஆக்கபூர்வமாக அரசாங்கக் கடன் உள்ளிட்டு, விவசாயிகளது கடனை ரத்து செய்வது பற்றிப் பரிசீலிக்க வேண்டும். விவசாயி களுடைய கடன்களை ரத்து செய்வதுபற்றி ஆளுநர் உரையில் எதுவும் இல்லாதது வருந்தத்தக்கது என்று கூற விரும்புகிறேன்.

நான் அடுத்துக் கூறுகிறபோது, மின் கட்டணம் பற்றி கடந்த கால இயக்கங்களும், போராட்டங்களும் இந்த அரசுக்குத் தெரி யாதது அல்ல. மின்கட்டணம் பற்றி இயக்கங்கள், போராட் டங்கள், நாம் பெற்ற அனுபவங்கள் நிறைய இருக்கின்றன. பழைய அரசை மாற்றி அமைக்கவே அது ஆரம்பமாக இருந் திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். மின்விசை கூடினால் போதாது. அது அவசியம் தான். மின் சக்தி ஆதிகரிக்கப்பட வேண்டியதும், சிக்கனமாக உபயோகப்படுத்தப் படவேண்டும் என்பதும் மிகச் சரியானதுதான்.

அதே நேரத்தில் மின் கட்டணம் அதிகமாக இருப்பதைக் குறைப்பதற்கான கவனமும் செலுத்தியாக வேண்டும். அதை பற்றி ஆளுநர் அவர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை. மின் கட்ட ணத்தை உயர்த்தக்கூடாது என்பதற்கு ஒரு இயக்கமே நடை பெற்றிருக்கிறது. மின் கட்டணத்தை உயர்த்தியதால் பாதிக் கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் மத்தியில் இதுபற்றி இன்றைக்கு ஒரு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. நிலத்தடி நீர் என்று வருகிறபோது குடிதண்ணீர் பிரச்சினைபற்றி கவனம் செலுத்தியிருப்பதை வரவேற்கிறேன். 30 ஆண்டுகளுக்குப் பிறகும், எவரெல்லாம் யார் வந்தாலும், எந்தக் கட்சி பிரமுகர்கள் சென்றாலும் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்ற கோரிக்கை மனுக்கள் தான் நூற்றுக்கணக்கில் வந்துகொண்டிருக்கின்றன. அந்தத் துறையில் அரசு கவனம் செலுத்துவது வரவேற்கத்தக்கது. என்றாலும் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க கடந்த கால அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் முழுவதும் ஏன் வெற்றிபெறவில்லை. இதில் உள்ள குறைகள் என்ன என்பதை நாம் கண்டறிந்து களைவதற்கு முன்வராவிட்டால், நாம் எடுத்துக்கொள்கிற நடவடிக்கைகளும் பயனற்றுப்போகக் கூடும்.

நிச்சயமாக நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். குடிநீர் வாரியத்தினால் அளிக்கப்படுகிற மோட்டார்கள் சரியாக வேலை செய்யாமல் போகின்றன.

ஒன்றென்று. ஒப்பிலாம்பட்டியில் கிணறு வெட்டப்பட்டு, தண்ணீர் இருக்கிறது. ஓவர்ஹெட் டாங்க் கட்டியிருக்கிறார்கள். மின்சார மோட்டார் போட்டிருக்கிறார்கள். என்றாலும் நான்கு மாதங்களாக இன்னும் மின்சார கனெக்ஷன் அந்த மோட்டாருக்குக் கொடுக்கப்படவில்லை. இது ஏன் என்று புரியவில்லை. எனவே கிணறு வெட்டுவது மட்டும் போதாது. ஓவர்ஹெட் டாங்க் கட்டி, மோட்டார் போடுவது மட்டும் போதாது. மோட்டாருக்கு உடனடியாக கனெக்ஷன் கொடுப்பதும், மோட்டார் ரிப்பேர் ஆனால் உடனடியாக அதை இயங்கச் செய்ய நிர்வாக அமைப்பு சரியான முறையில் செயல்பட வழிவகை செய்வதும் அவசியமாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குப் பல இடங்களில் மோட்டார்கள் இயங்காமல் இருப்பதுதான் நமது அனுபவமாக இருக்கிறது. ஆகவே புதிய கிணறுகள் வெட்டுவதோடு அன்றி, முறையாக அங்கங்கே வைக்கப்படுகிற மோட்டார்கள் இயங்குவதற்கு அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிச் சொல்கிறபோது, முகவை மாவட்டத்தில் இருந்து தான் நமது முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே அவர் கண்டறிந்த அனுபவத்தைக் கொண்டு

தான் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்றுகிற போது குறைகள் ஏற்படாமல் இருக்க சர்வ கட்சிக் குழு அமைத்தால் கூடத் தேவலை. இல்லாவிட்டால் நம் முயற்சி அழிந்துவிடக்கூடும் என்று எச்சரிக்கிறேன்.

அதோடு மற்றொன்றையும் சுட்டிக்காட்டி நேரம் குறைவாக இருப்பதால் என் பேச்சை முடித்துக் கொள்ளக் கருதுகிறேன். உங்களுக்குத் தெரியும். அவசர நிலைமை கொண்டுவரப்பட்ட ஆரம்ப காலத்தில் பல நல்ல அம்சங்கள் ஏற்பட்டதற்குப் பின்னால், சில கொடுமைகளும் அதிகாரிகளால் இழைக்கப்பட்டிருக்கின்றன. நல்ல அம்சங்களைப் பாராட்டவில்லை என்றல்ல. பல்வேறு நல்ல அம்சங்கள் ஏற்பட்டிருந்தாலும், அதிகாரிகளால், நிர்வாகத்தில் உள்ளவர்களால் அங்கங்கே தவறு இழைக்கப்பட்டிருக்கிறது என்கிறபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாது. சிலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள், அதுவும் நக்சலைட் என்கிற அளவில் கொலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன என்கிறபோது அரசியல்வாதிகளின் மனம் துடிக்காமல் இருக்க முடியாது. இன்னும் பலர் சிறையில் இருக்கிறார்கள் என்றால், வடநாட்டில் விடுதலை செய்யப்பட்டது போல, இங்கும் அப்படியாரேனும் சிறையில் துன்பப்பட்டுக்கொண்டிருப்பின் அவர்களையும் விடுதலை செய்யவேண்டும். அப்படிப்பட்ட கொடுமையான காரியங்களைச் செய்தவர்கள் மீது விசாரணை முறையாக நடத்தப்பட வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்.

அதைக் கூறுகிறபோது கடைசியாக ஒன்று சொல்வது எனது கடமையாகும். தொழிலாளர்களது பிரச்சினைகள் பற்றி, எனக்குப் பின்னால் பேச இருக்கிற உறுப்பினர்கள் குறிப்பிடுவார்கள். கல்வி சம்பந்தமாகவும் நான் குறிப்பிடவில்லை. மற்றவர்கள் சொல்வார்கள். நெசவாளர் பிரச்சினைபற்றியும் துணி உற்பத்தி பெருகவேண்டும் என்கிறதோடு ஆளுநர் உரை நின்றுவிடுகிறது. அவர்களுடைய துயரைத் துடைப்பது பற்றி அறிவிப்பு எதுவும் கிடையாது.

[திரு. கூத்தகுடி. ச. சண்முகம்] [1977 ஜூலை 8

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். பின்தங்கிய மாவட்டம் என்கிறபோது—உலகத்திலேயே கிடையாது, வேறு எங்கும் கிடையாது—எங்கள் மாவட்டத்தில் தலைநகர் கூட அந்த மாவட்டத்திற்குள்ளேயே அமையாது வேறு ஒரு மாவட்டத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். அவ்வளவு பின்தங்கிய மாவட்டமாக அது இருக்கிறது. அதற்கு அவசியமாக, அவசரமாக, ஆவன செய்யும் இந்த அரசு என்று நம்புகிறேன். பின்தங்கிய மாவட்டம் என்கிறபோது, வேறு எங்கும் இல்லாத நிலைமை அங்கே இருக்கிறது என்பதைச் சொல்லியாக வேண்டும். பின்தங்கிய மாவட்டம் என்கிறபோது புதுக்கோட்டை, தர்மபுரி, இராமநாதபுரம் ஆகிய மூன்றும் வரலாம். வேறும் இருக்கலாம். மற்றவை பின்தங்கிய நிலையில் இல்லையென்று நான் கூறுவதாக நினைக்கக்கூடாது. ஏற்கனவே இவை அறிவிக்கப் பட்டிருக்கிறது. இவற்றின் பின்தங்கிய நிலையை மாற்ற விசேஷ ஏற்பாடுகள் எடுத்துக்கொள்வது சரியானது. அதைத் தொடர்ந்து இப்புதிய அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களே இந்த மாவட்டத்தில் இருந்து வந்திருக்கிறார்கள்.

கடைசியாகச் சொல்ல விரும்புவது நிச்சயமாக உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். குறைகளை நாங்கள் எடுத்துக்காட்டுகிறபோது, அதற்குரித்தான மதிப்பு கொடுத்தாகவேண்டும்.

ஒரு நல்ல அம்சத்தை நான் வரவேற்கிறேன். ஊழல் ஏற்படுவதற்கு இடமில்லாமல் ஊராட்சி ஒன்றியத் தலைவரையும், நகர சபைத் தலைவரையும் மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வகை செய்யப்போவதாகக் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன். முன்பும் சொன்னார்கள். இப்போது அச்சிடப்பட்டு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஏன் சொல்கிறேன் என்றால் இதுபோல ஏற்கனவே ஆலோசனை செய்யப்பட்டது, கடைசியில் அந்த ஆட்சி அது சாத்தியமானது அல்ல என்று கைவிட்டது. இப்போது அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி அச்சிட்டதோடு நிற்காமல், அது சாத்தியமல்ல என்று கைவிட்டுவிடாமல் அதைச் செயல் படுத்தவேண்டுமென்று நினைவூட்டுவதை என்னுடைய கடமை யாகக் கருதுகிறேன்.



1977 ஜூலை 8] [திரு. கூத்தகுடி. ச. சண்முகம்]

இன்னும் பல பேர்கள் பேச இருக்கிறார்கள். இந்த அவையில் நான் முதல்முறையாக இன்றைக்குப் பேசியிருக்கிறேன். ஆகவே அத்தனைபேருக்கும் வணக்கம் கூறி, என் உரையை முடிக்கிறேன்.

* திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, தங்களுக்கு முதற்கண் வணக்கத்தைக்கூறி, மேதகு ஆளுநர் உரை தமிழக மக்களுக்கு பெரிய ஏமாற்றம் என்பதை முதற்கண் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நாடு எதிர்பார்த்தது எல்லாம் பல புரட்சிகரமான செயல் திட்டங்கள் வரும் என்பதுதான். அப்படி எதிர்பார்த்த நாடு பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறது. குறிப்பாக விவசாயம், சிறுதொழில், மின்சாரக் கட்டணக் குறைப்பு போன்ற பல நல்ல காரியங்களைப் பற்றி ஆளுநர் உரையில் எதுவும் இல்லை என்பதை நான் தங்கள் மூலம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அரசு அலுவலர், ஆசிரியர், 3-வது சம்பளக் கமிஷன் பற்றி எந்தவிதமான குறிப்பும் ஆளுநர் உரையில் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். மேலும் பயிர்கள் பாது காப்பு இன்ஷூரன்ஸ் பற்றி தேர்தல் அறிக்கையில் குறிப் பிட்டிருந்தார்கள். அதுபற்றியும் ஆளுநர் உரையில் எதுவும் கூறப்படவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிச் சொல்லும்போது பட்டம் பெற்றவர்கள், தொழில்படிப்பு படித்தவர்கள் வேலையில்லாமல் இந்த நாட்டில் அவதிப்படுகிறார்கள், அவர்களைப் பற்றி ஒன்றும் குறிப் பிடவில்லை. வேலையில்லாதவர்களுக்கு வேலை அளிக்க எத்தகைய நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதுபற்றியும், ஆளுநர் உரையில் எதுவும் இல்லை என்பதையும் நான் வருத்தத்தோடு தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மேலும் நான் குறிப்பாகச் சொல்வதெல்லாம், நான் மிசாவில் ஒரு ஆண்டுக்காலம் சிறையில் இருந்தவன் என்பதை தங்களுக்குச் சுட்டிக்காட்டி, அவசர காலத்தில் இந்த நாட்டில் குறிப்பாக சென்னை சிறையில் ஏற்பட்ட அவல நிலைகளைப் பற்றி ஆளுநர் அவர்களது உரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதாக

குறிப்பிடபடவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டுகிற அதே
நேரத்தில், மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
ஆணை பிறப்பித்தும், அதற்கான எந்த நடவடிக்கையும் எடுப்பதாக
ஆளுநர் அவர்கள் உரையில் இல்லை என்பதை நான் தங்களுக்கு
கவனமூட்டுகிறேன்.

அடுத்து, குறிப்பாக வட சென்னையை எடுத்துக் கொண்டால்
அங்கு புதிய கல்லூரிகள் திறப்பது பற்றி இந்தக் குறிப்பில்
எதுவும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில்
மகளிர் சார்பாக மகளிர் கலைக்கல்லூரி என்று ஒன்று இருக்கிறது.
அந்தக் கல்லூரியின் நிலையைப் பார்க்கிறபோது அது மிக மோச
மான நிலையில் இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டி
அதுபற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறீர்கள்
என்பதை அறியவிரும்புகிறேன்.

வடசென்னையில் தியாகராயர் கல்லூரி, வியாசர்பாடியில் டாக்டர்
வட சென்னையில் புதிய கல்லூரிகள் திறப்பதற்கு என்ன நடவ
வட சென்னையில் புதிய கல்லூரிகள் திறப்பதற்கு என்ன நடவ
டிக்கைகள் எடுக்கப் போகிறீர்கள் என்பதுபற்றி ஆளுநர் அவர்
களது உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை நான்
இந்த நேரத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, கிரா
மங்களிலிருந்து நகரங்களுக்கு வருகிற மக்களுக்கு சிறு தொழில்
கள், குடிசைத் தொழில்கள் போன்றவற்றை அந்தந்தக் கிராமங்
களில் ஏற்படுத்தி அவர்கள் இங்கே வராமல் தடுக்கிற வகையில்
என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி எந்த
விதமான குறிப்பும் இதில் இல்லை என்பதை நான் இங்கு சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஆதித் திராவிட பெருங்குடி மக்களுக்கும், மீனவப்
பெருங்குடி மக்களுக்கும் வீடுகள் கட்டும் திட்டங்கள்பற்றி
ஆளுநர் அவர்களது உரையில் எந்தவிதமான குறிப்பும் இல்லை
என்பதை நான் மிக மிக வருத்தத்துடன் இங்கே சுட்டிக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் குறிப்பாக சென்னையிலே ஏராளமான குடிசைப்
பகுதிகள் உள்ளன. அந்தக் குடிசைப் பகுதிகளில் உள்ளவர்
களுக்குக் குடிநீர் வசதி இல்லை, மின்சார வசதி இல்லை, சுகாதார

வசதிகள் இல்லை என்ற நிலை இருப்பதைச் சுட்டிக்காட்டி அதற்கான எந்தத் திட்டமும் ஆளுநர் அவர்களது உரையில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் சென்னையில் சுமார் இரண்டு ஆண்டு காலமாக மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் சென்னை நகரம் எவ்வளவு சீரழிந்து இருக்கிறது என்பதை சென்னைவாழ் மக்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். நான் கவர்னர் அவர்களது உரையில் கண்டதெல்லாம் மஸ்டர் ரோல் வழக்கு முடிந்த பிறகு, சென்னை மாநகராட்சிக்கான தேர்தல்கள் வரும் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தயவுசெய்து அதுபற்றி யோசிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். மஸ்டர் ரோல் வழக்கு முடிவதற்கு எவ்வளவு ஆண்டுகள் ஆகும், அதற்குப் பிறகு மாநகராட்சித் தேர்தல் எப்போது நடைபெறும், இப்படிப் பல ஆண்டுகள் சென்றால் சென்னைவாழ் மக்கள் எந்த நிலையில் இருப்பார்கள் என்பதை நீங்கள் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் அன்றாடம் வீதிகளில் உலாவுகின்ற நான் இங்குள்ள நிலையை நன்கு பார்க்கிறேன். சென்னையில் இரவில் விளக்குகள் சரியாக எரிவதில்லை என்பதோடு நாம் நடந்து சென்றால் கூட எவ்வளவோ தட்டுத் தடுமாறி நடக்கிற அளவிற்கு வீதிகளில் படுகுழிகள் இருக்கின்றன என்பதை அருள்கூர்ந்து கவனத்தில் எடுத்துக்கொண்டு விரைவில் மாநகராட்சிக்கான தேர்தல்களை நடத்துவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதுபற்றி நமது ஆளுநர் அவர்களது உரையில் எந்தவிதமான குறிப்பும் இல்லை என்பதை நான் தங்களுக்கு ஞாபகமூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நான் தெரிவித்துக்கொள்வது இந்தி எதிர்ப்பு தியாகிகள் பற்றி ஆளும்கட்சியில் உள்ள மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் மிகத் தெளிவாகப் பேசினார்கள். இந்தி எதிர்ப்பு தியாகிகளுக்குக் கொடுத்து வந்த பென்ஷன் திட்டத்தை நிறுத்திவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தங்களுக்கு ஞாபகப்படுத்த கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்பதை ஆளுநர் அவர்கள் உரையில் தெளிவுபடுத்தாமல் விட்டிருக்கிறீர்கள். ஆகவே, அதுபற்றியும் தாங்கள் அருள்கூர்ந்து கவனிக்கவேண்டும் என்று தங்களுக்கு எடுத்துக்கூறி இந்த வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

[1977 ஜூலை 8

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

**திரு. கே. மருதாசலம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்று நான் சில கருத்துக்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை இல்லாத அளவிற்கு நமது தமிழக மேதகு ஆளுநர் அவர்கள் உரை மிகச் சிறப்பாக அமைந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். விவசாயிகள் பிரச்சினைகளிலும், நெசவாளர்கள் பிரச்சினைகளிலும், ஏழை எளியவர்கள் அன்றாடம் அனுபவிக்கும் துன்பப் பிரச்சினைகளிலும் ஆளுநர் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தி, தெளிவாக ஈடுபட்டு, நிவாரணம் அளிப்பதாக அருமையாக உரையாற்றியிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்து வைத்த கொள்கைகளுக்கு வடிவம் காண்கின்ற அளவிற்கு நமது மேதகு ஆளுநர் அவர்களின் உரை அமைந்திருப்பதை நான் ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளேன். குடிதண்ணீர் எவ்வளவு இருக்கிறது, கிராமங்களில் இருப்போர் குடி தண்ணீர் கிடைக்காமல் எவ்வளவு கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துதான் மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு குடிதண்ணீர் மற்றும் பாசன வசதிகள் ஏற்படுத்தி மிகத் துரிதமாகச் செயல்படுவோம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். லஞ்சம் ஊழல் இல்லாத நிலையை நிர்வாகத்தில் உருவாக்க வேண்டும் என மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் பெருமைப்பட எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

தமிழக மக்களுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களை நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் தமது உரையில் தெளிவாக்கியிருக்கிறார்கள். ஆனால் இங்கே மற்ற உறுப்பினர்கள் பேசுகிற நோக்கில் அதுபற்றி மகிழ்ச்சி கொள்ளாமல் வருத்தம் தெரிவித்துப் பேசினார்கள்.

மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் நமது தமிழகத்தில் ஜனநாயகம் தழைத்தோங்கவேண்டுமென்பதற்காக மிகச் சிறப்பான உரையினை நேற்று நிகழ்த்தியிருக்கிறார்கள். அதற்கு



1977 ஜூலை 8] [திரு. கே. மருதாசலம்]

எடுத்துக்காட்டுதான் நகராட்சி மன்றத் தேர்தல்களும், ஊராட்சி மன்றத் தேர்தல்களும், பஞ்சாயத்துத் தேர்தல்களும். பொது மக்களே அவர்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற மிகச் சிறப்பான கருத்தினை மேதகு ஆளுநர் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அவர்கள் அப்படி எடுத்து வைப்பதற்குக் காரணம் இதற்கு முன்பு இருந்த அரசுகள் பலமுறை தங்களிடத்திலே பணத்தை வைத்துக்கொண்டு, மூட்டை மூட்டையாகப் பணத்தை வைத்துக் கொண்டு, மக்கள் வாக்களித்ததற்குப் பிறகு தாங்கள் தலைவராக ஆகவேண்டும், நகராட்சித் தலைவராக ஆகவேண்டும், மாநகராட்சித் தலைவராக ஆகவேண்டும், பஞ்சாயத்துத் தலைவராக ஆகவேண்டும் என்பதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அவர்கள் பணம் கொடுத்து அவர்களுடைய வோட்டுக்களைப் பெற்று வந்தார்கள். அந்த முறையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் தமது உரையில் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று தெளிவாக்கியிருக்கிறார்கள். ஆக, குடிநீர்ப் பிரச்சினையானாலும் சரி, பள்ளிகள் அமைப்பதானாலும் சரி, வேறு பல பிரச்சினைகளானாலும் சரி, தொழிலாளர் பிரச்சினையானாலும் சரி, மக்களின் எல்லாப் பிரச்சினைகளிலும் இந்த அரசு கவனம் செலுத்துகிறது என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் ஜனநாயக முறைப்படி இந்தத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன என்பதை அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆற்றியிருக்கிற எல்லா உரைகளும் இந்தத் தமிழக மக்களுக்குத் தேவையானதாக இருக்கின்றன. நல்ல காரியங்களும், பயன் உள்ள திட்டங்களும் அமைவதாக அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் நேற்று ஆற்றியிருக்கிற அனைத்து உரைகளும் இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான உரைகளாகும். இதில் வருத்தம் தெரிவிப்பதோ அல்லது சங்கடப்படுவதோ தேவையற்றது என்பதை என்னைப் பொறுத்தவரையில் கூறிக்கொண்டு இந்த அரசுக்கு முழு ஒத்துழைப்பும் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய அனைத்து உரையையும் நான் வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம்.

[முற்பகல் 11.30]

* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய உதவிப் பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் லஞ்ச ஊழலை ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பதாகக் கவர்னர் உரையில் படித்தேன். அது பாராட்டத் தருந்தது. நாட்டில் லஞ்சம் மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் லஞ்சம் இல்லாமல் எதுவும் நடக்க முடியாது என்கின்ற நிலை உருவாகியிருக்கின்றது. ஆகவே எந்த அரசாங்கமாக இருந்தாலும், லஞ்சத்திற்கு வழியில்லாமல் செய்தால்தான் நல்ல பெயர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பல திட்டங்களைப் போடுவதற்கு முழு கவனம் செலுத்த வேண்டும். எப்படி லஞ்சத்தை ஒழிக்கப் போகிறோம், எந்த அளவுக்கு இதற்கு எதிர்த் தரப்பிலிருந்து உதவி கிடைக்கும் என்பதையெல்லாம் திட்டவட்டமாக பல நல்ல முடிவுகளைக் கூற வேண்டும். ஆளுநர் அவர்கள் உரையில் லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி விட்டால் மட்டும் லஞ்சம் போய்விடாது. லஞ்சத்தை ஒழிப்போம் என்று சொல்லிக் கொண்டு லஞ்சம் மேலும் இருந்து கொண்டிருந்தால் அது நாட்டுக்கு நலமாக இருக்காது. எனவே லஞ்சத்தை ஒழிப்பதற்கு நல்ல திட்டங்களைப் போட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கோருகின்ற அதே நேரத்தில் நம்முடைய மாகாண அரசு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரங்களைத் தருவதற்கு முன்வர வேண்டும் என்று இதற்கு முன்பே பலமுறை பேசி வந்தும் கூட, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரங்கள் குறைந்து கொண்டு தான் வருகிறதே தவிர அதிகாரங்கள் அதிகமாகக் கிடைத்தபாடில்லை. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்தால் தான் காந்தி கண்ட கிராம ராஜ்யம் உண்மையில் இந்த நாட்டில் ஏற்படும். ஆகவே ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதாவது இராமனாதபுரம் மாவட்டத்தில் ஆண்டுக்கு ஆண்டு மழை குறைவு காரணமாக பஞ்சம் ஏற்பட்டு எங்கு பார்த்தாலும், விவசாயம்





குறைந்து அதிகமான நிலங்கள் சாவியாக போயிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியிலிருந்து தான் வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அங்குள்ள நிலைமை நன்றாக தெரிந்திருக்கக் கூடும்.

ஒரு சில இடங்களில், கோவாப்ரட்டிவ் கடன் தொல்லைகள் காரணமாக விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்கு அரசாங்கத்தில் இருந்து, எங்கெங்கு தண்ணீர் இல்லாமல் சாவியாகப் போயிருக்கின்றதோ அந்த இடங்களில் கூட்டுறவுக் கடன்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒத்தி வைக்க வேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து ஆணையிட்டிருந்தாலும், அதிகாரிகளுடைய தொந்தரவு அதிகமாக இருக்கிறது. அதிகாரிகள் நினைப்பது, வசூலை அதிகமாகச் செய்து கொடுத்தால் தங்களுக்கு பிரமோஷன் கிடைக்கும் என்ற எண்ணத்தில் அதிகாரிகள் விவசாயிகளை மிகவும் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் அந்த நிலையைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் வரி வஜா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு வேலைவாய்ப்பு எதுவுமில்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பஞ்ச நிவாரண வேலை இந்த வருடம் எதுவும் ஆரம்பிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே பஞ்ச நிவாரண வேலைகளை ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி ஆளுநர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசி மிக மிக ஏறி அதனால் மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். குறிப்பாக எண்ணெய் போன்றவை, பருப்பு போன்றவைகளுக்கு விலை மிக மிக ஏறிக்கொண்டே போயிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு 20 அம்சத் திட்டத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதன் மூலம் சிறிது விலை குறைந்திருந்தது. இப்போது மீண்டும் விலை ஏறி மக்களுக்குப் பல தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, பல சரக்குகளின் விலைகள் ஏறிக்கொண்டேயிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு சரியான திட்டம் தீட்டி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தைப்

[திரு. கரு. ராம. கரியமாணிக்க அம்பலம்] [1977 ஜூலை 8

பொறுத்தவரையில் விவசாயத்திற்குக் கட்டுப்படியான விலை இல்லை. இப்போது விவசாயம் செய்ய அதிகமான உரம் போட வேண்டியிருக்கிறது. உரமில்லாமல் விவசாயம் செய்ய முடியாது. உரத்தின் விலை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதே போன்றுதான் பூச்சி மருந்தின் விலையும் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது.

விவசாயக் கருவிகளுடைய விலையைப் பொறுத்தவரையில், வருஷா வருஷம் விலை ஏறிக்கொண்டே போகிறது. மிக அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. விவசாயம் நல்ல முறையில் செய்ய வேண்டுமென்றால், நவீன விவசாயக் கருவிகள், உரம், பூச்சி மருந்துகள் இவைகள் எல்லாம் கட்டுப்படியான விலைக்குக் கிடைக்க வேண்டும். ஆகவே புதிதாக வந்திருக்கும் அரசு விவசாயிகளுக்கு நல்ல நிவாரணம் கிடைக்கக்கூடிய வகையில், இந்த விலைகளை எல்லாம் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் குடி தண்ணீர்ப் பஞ்சம் இருப்பதை முதலமைச்சர் அவர்களே பல தடவை பேசியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். குடி தண்ணீர்ப் பஞ்சம் போவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய ராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக திருவாடானை போன்ற பல பகுதிகளைப் பற்றி இங்குள்ளவர்கள் சொன்னார்கள். எனக்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் சில கிராமங்களுக்கு இரண்டு, மூன்று மைல் போய்தான் தண்ணீர் கொண்டு வந்து தண்ணீர் சாப்பிட வேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய பகுதியை எடுத்துக் கொண்டால், ஐந்து, ஆறு மைல் சென்று தான் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீர் எடுத்து வர வேண்டும். அது மட்டுமல்ல, மற்ற எனது பகுதிகளில் எல்லாம் இதே நிலைமை தான். இதைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக இதில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

இதைப் போக்குவதற்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில், ஆழக் குழாய்க் கிணறுகளை ஏற்படுத்தினால், நல்ல விதமான ஆர்டிஷான் ஊற்றுகள் இருக்கின்றன. அவற்றைப்



1977 ஜூலை 8] [திரு. கரு. ராம. கரியமாணிக்க அம்பலம்]

பரவலாக பல இடங்களிலும் போட்டால் ஓரளவு பஞ்ச
நிவாரணத்திற்கு வழி கிடைக்கும். குறிப்பாக புலியாலியிலிருந்து
தொண்டிக்கு சென்ட்ரல் கெவர்ன்மெண்டிலிருந்து ஒரு கோடியே
ஆறு லட்சம் ரூபாய் செலவில் 20 மைல் தூரத்திற்கு குடி தண்ணீர்
கிடைப்பதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்தப்
பகுதியிலுள்ள மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக
இருக்கிறது. இதுமாதிரி அந்தத் தாலூகா முழுவதும் செய்வ
தற்குத் திட்டம் தீட்டி, ஆராய்ச்சி செய்து நிறைவேற்றினால்
பயனுள்ளதாக அமையும். இந்தத் திட்டத்தால் கடற்கரை ஓரப்
பகுதிகளுக்கு இப்படிப்பட்டத் திட்டங்கள் பயன் அளிக்கக்
கூடியதாகும். எனவே இதில் முக்கியமாகக் கவனம் செலுத்தி
இதைப் பரவலாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பினர் இவர்களுக்குப் பல இடங்களில் வீட்டு மனை ஒதுக்கியிருக்கிறார்கள். வீட்டு மனை கொடுப்பதோடு மட்டுமில்லாமல், அவர்களுக்கு வீடுகளாகக் கட்டிக் கொடுத்தால்தான் மேம்பாடு அடையும். இப்போது கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகள் கோழிக் கூண்டு போன்று இருக்கிறது. இப்போதுள்ள வீடுகளைப் பார்த்தால் ஒருவர் உள்ளே போனால் இன்னொருவர் வெளியே வர வேண்டும். இப்படி வீடுகள் கட்டிக் கொடுப்பதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஒரு சிறிய குடும்பம் இருப்பதற்கு லாயக்கான வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் தான் இப்படிப்பட்ட ஏழை எளியவர்கள் நல்ல நிலைமையை அடைய முடியும். அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் ரோடு வசதி மிக மிகக் குறைவாக இருக்
கிறது. எங்கள் தாலூகாவை எடுத்துக்கொண்டால், ரோடு வசதி
மிகக் குறைவாகவே இருக்கிறது. 1,500 மக்கள் ஜனத்தொகை
இருந்தால்தான் ரோடு வசதி செய்யவேண்டும் என்ற ஒரு உச்ச
வரம்பு இருந்தது. இந்த அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து
எங்கெங்கு கிராமங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் ரோடு
போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு ரோட்டைப்
பராமரிப்பதற்கும் நிதி ஒதுக்கி, அதற்கு வேண்டியதைச் செய்ய
வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பைத் தந்ததற்கு நன்றியைச்
செலுத்திக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்] [1977 ஜூலை 8

(முற்பகல் 11.40)

* திரு. வி. கே. கோதண்டராமன் : பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையிலே அடுத்து வரக்கூடிய சட்டப் பேரவைக் கூட்டத்திலே வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி விரிவாக சொல்லப்படும் என்று குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால், நான் அவசரப்பட்டு எந்தக் குறையையும் இப்போது எடுத்துச் சொல்லப் போவதில்லை என்றாலும், சில கருத்துக்களை மட்டும் ஆலோசனைக்கு இம்மன்றத்தின் முன் எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். தண்டனை அடைந்த கைதியாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தக் கைதியாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட சிலர் இன்னும் சிறையில் இருக்கக்கூடிய அளவில்தான் இருக்கிறார்கள். இது தெரிந்த விஷயம். ஆகவே, உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அதேபோல், அவசர காலச் சட்டத்தினால் நீக்கப்பட்ட அரசு ஊழியர்கள் அல்லது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட ஊழியர்கள் அல்லது தொழிலாளர்கள் ஆகியவர்களை மீண்டும் வேலைக்குத் திருப்பி எடுத்துக்கொள்ளப் பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய, போலீஸ் இலாகாவில் இருக்கக்கூடிய ஒருசிலர் மற்றவர்களை அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள்; சுட்டுக் கொலை செய்திருக்கிறார்கள். இதிலே நக்சலைட் என்று சொல்லக்கூடியவர்களும், மற்றவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கோயம்புத்தூரில் அப்பு என்பவரும், வட ஆற்காடு மாவட்டத்திலே சீராளன் என்று சொல்லக்கூடியவரும் போலீசாரால் அடித்து கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற கிளர்ச்சி மக்களிடையே இருந்துகொண்டு வருகிறது. ஆகவே, இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டாய சேமிப்பு என்று முன்பு பணம் பிடிக்கப்பட்டது. அது இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. எனவே, இதைத் திருப்பிக் கொடுப்பதற்கும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1977 ஜூலை 8] [திரு. வி. கே. கோதண்டராமன்]

அதேபோன்று, இன்றைக்கு அவசரகாலக் கொடுமைகளுக்கு ஆளான அத்தனைக் குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடு தொகைக் கொடுக்கப்பட வேண்டும், பென்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட அரசியல் கைதிகளுடைய விசாரணையை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும்; இது மிக மிக முக்கியமான, அத்தியாவசியமான ஒரு பிரச்னையாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்திலே, இன்றைய தினம் மேலும் மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் வளரக்கூடிய நிலைதான் இருந்து வருகின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இதுபற்றி ஆளுநர் அவர்கள் உரையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். 74-வது ஆண்டிலே வறுமை நிலை வாழ்விற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 59 சதவிகிதமாக இந்த நிலைமை உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. அதற்கு முன்பு 47 சதவிகிதமாக இருந்தது, 74-லே 59 ஆக உயர்ந்துள்ளது என்றால், இப்போது எத்தனை சதவிகிதமாக இந்த வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமை நிலையும் உயர்ந்திருக்கும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். எனவே, இதைப் போக்குவதற்கு மாநில அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இதிலே மத்திய அரசாங்கத்தின் பொறுப்பும் உண்டு. அவர்களும் இதற்காக எந்த அளவுக்கு போக்குவதற்கு முயற்சிக்க முடியுமோ, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாநில அரசுக்கும் இதிலே பொறுப்புண்டு என்று சொல்லக் கூடிய நேரத்திலே, இன்றைக்கு அரசு பாடசாலைகளில் ஏற்கனவே எலெக்டிவ் என்று சொல்லக்கூடிய கணக்கு அல்லது சயன்ஸ் பாடத்தை நீக்கியுள்ளது. அப்படி நீக்கிவிட்ட காரணத்தினால், ஏறக்குறைய தமிழ்நாட்டிலே ஆயிரம் ஆசிரியர்களுக்கு மேல் வேலை இழக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இதைச் சமாளிக்க வேண்டிய நிலையும் இன்றைக்கு அரசுக்கு ஏற்பட்டுள்ளது. 45 மாணவர்கள் இருக்கக்கூடிய ஒரு வகுப்பிலே, 50 அல்லது 55 மாணவர்கள் இருக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு உள்ளது. அப்படியில்லாமல், ஒரு வகுப்புக்கு 25 முதல் 30 மாணவர்கள் வரை என்ற நிலையை ஏற்படுத்தினால், ஏற்கனவே

வேலை இழந்தவர்களையும், ஏற்கனவே படித்து முடித்து வேலையில்லாமல் திண்டாடும் சிலருக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க முடியும் என்று சொல்லிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று, 71-ஆம் ஆண்டு 'இளைஞர் அணி' என்று ஒன்று ஏற்படுத்தி அதிலே பி.ஏ., பி.எஸ்ஸி., படித்த மாணவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டது. பட்டதாரியான அவர்களுக்கு 2 மாத பயிற்சியும் கொடுக்கப்பட்டு, ரூ. 175 சம்பளமும் கொடுக்கப்பட்டது. அப்படி 4 ஆண்டு காலமாக ரூ. 175 சம்பளம் பெற்று வந்தவர்கள், வேலை வாய்ப்பை இழந்து இன்றைக்கு 1,500 பேர்களுக்கு மேல் அப்பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்குக் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மாட்ச் பாக்டரி, பீடித் தொழிலாளர்கள், டானரித் தொழிலாளர்கள் நிலை மிகவும் மோசமாக உள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், குடியாத்தத்தில் 150 மாட்ச் பாக்டரிகள் மூலப் பொருட்கள் இல்லாத காரணத்தினாலும் விம்கோ போன்ற யந்திரத்தில் உற்பத்தி செய்யும் பேக்டரிகளுக்கு போட்டுள்ள அதே வரியை கையினால் உற்பத்தி செய்யும் பேக்டரிகளுக்கும் போட்டிருப்பதாலும் இன்றைக்கு மூடப்பட்டுள்ளன. இதனால் பல ஏழைக் குடும்பங்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு தேவையோ, அத்தகைய பாதுகாப்பு இல்லை. அந்தக் காரணத்தினால், குடிசைத் தொழில் என்று சொல்லக்கூடிய இந்த 150 மாட்ச் பாக்டரிகள் இன்றைக்கு மூடப்பட்டுள்ளன. அதற்குத் தகுந்த மூலப் பொருட்கள் கிடைக்க உடனடியாக இந்த அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்புச் சட்டமும் கிடையாது. அவர்கள் தினமும் செத்து செத்துப் பிழைக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் உடனடியாகக் கைத்தறி நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். டானரி, பீடி சுற்றும்





தொழிலாளர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் ஒழுங்கான முறையில் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை, வீட்டு வசதிகள் செய்து தரப்படவில்லை. இது விஷயமாகவும், உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என். ஜி. ஓக்களுக்கு சம்பளக் கமிஷன் அமைக்கப்படும் பிரச்னையில், உடனடியாக அமைப்பதற்கான கவனம் செலுத்தப் பட வேண்டும். செத்தால் தான் ரூ. 10,000 கொடுக்கப்படும் என்ற நிலையை மாற்றி, அவர்கள் ரிடையர்ட் ஆனாலும் ரூ. 10,000 உண்டு என்பதை உடனடியாகச் செய்ய வேண்டும்.

பக்கத்து மாநிலங்களிலே இருக்கக்கூடிய சம்பளத்தைவிட குறைவாக நமது ஆசிரியர்கள் வாங்குகிறார்கள். அதிலும், ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியருக்கும், ஹையர் கிரேடு ஆசிரியருக்கும் சம்பள வித்தியாசம் 100 ரூபாய்க்கு அதிகமாக உள்ளது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இந்த ஆசிரியர்கள் சம்பள விஷயத்திலும் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆசிரியர்களுக்கு என்று எம்.எல்.சி. தொகுதி ஒன்று அவர்களுக்குத் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஓட்டுப் போட உரிமை இல்லாத நிலையில்தான் இருக்கிறது. ஆனால், அவர்கள் தேர்தலுக்கு நின்று எம்.எல்.சி. ஸ்தானத்திற்குப் போட்டியிடலாம். ஆனால் ஓட்டுப் போட உரிமை கிடையாது. ஆகவேதான், இதுபோன்ற பிரச்னைகளிலெல்லாம் இன்றைக்கு உடனடியாகத் தீர்வு கண்டு, அவர்களுக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட வேண்டும். இதிலே இந்த அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொருட்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்க வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டுமென்று கடந்த 30 ஆண்டுகளாக சொல்லக்கூடிய பிரச்னையாக இருந்து வருகிறது. இதற்கு நேரடியாக அரசே கொள்முதல் செய்ய வேண்டும். அரசே விநியோகம் செய்ய வேண்டும், அப்படிச் செய்வதன் மூலம் உணவுப் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க முடியும் என்று சொல்லப்படுகிறது.

ஆனால், இடைத் தரகர்கள் இருப்பதன் மூலம், அவர்களி டையே ஏதோ ஊழல்கள் நடப்பதன் மூலம் இம்முறை சரிவர செயல்படவில்லை என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கேட்டால், பெருச்சாளி, எலி, காக்கை சாப்பிட்டு விட்டது அல்லது திருடு போய்விட்டது என்று சொல்லக் கூடியதைப் பார்க்கிறோம். ஆனால், ஏதோ ஊழல்கள் நடைபெற்று வருகின்றது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

(முற்பகல் 11-50)

கடைசியாக ஒன்று. இன்றைக்கு ஊழல் எவ்வளவோ விவகாரங்களில் இருக்கின்றது. அடித்தட்டில் இருக்கும் பாமர மக்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு ஊழல் அதிகமாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களும், பின்தங்கியவர்களும் தாங்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வருஷா வருஷம் சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வரவேண்டி யிருக்கிறது. மணியக்காரர், கணக்குப் பிள்ளைக்குப் பணத்தைக் கொடுத்துதான் வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. பென்ஷன் தொகையைப் போல் அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றாவது வகுப்பில் சேர்க்கக்கூடிய நேரத்தில் எந்தச் சாதியைச் சேர்ந்தவன் என்று குறிக்கப்படுகிறதோ அது ஒன்று இருந்தாலே போதும். பிறந்த உடனேயே கூட அப்படி ஒரு சர்டிபிகேட் கொடுத்து விடலாம். கார், லாரி வாங்கினால் எப்படி அந்த ஒரு சர்டிபிகேட்டை மாற்றிக் கொண்டே போகிறோமோ அதே போல் முதலில் ஒரு சர்டிபிகேட் கொடுத்துவிட்டால் போதும் என்ற நிலை ஏற்பட வேண்டும். இது மிகப் பெரிய பிரச்சினை. ஆகவே, ஆரம்ப காலத்தில் எந்த ஜாதி என்று பதிவு செய்து சர்டிபிகேட் தருகிறார்களோ அது இருந்தால் போதும் என்ற அடிப்படையில் திருத்த வேண்டுமென்றும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றும் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். ராதா அவர்கள், ஆளுநர் உரையிலே ஒரு அரசாங்கம் செய்ய இருக்கிற, ஐந்து ஆண்டுகளில் செய்ய இருக்கிற அனைத்துத் திட்டங்களையும் ஒரே நேரத்தில் சொல்லுவது என்பது முடியாது; அப்படிச் சொல்ல வேண்டுமென்றால் நீண்டகாலம் பிடிக்கும் என்று முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொன்னதை உதாரணமாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் நாடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய, மக்கள் எதிர்பார்க்கிற முக்கியப் பிரச்சினைகளை ஆளுநர் உரையிலே சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் மிகப்பெரிய கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள். கடந்த விவசாய ஆண்டில் விவசாயம் பொய்த்து விட்டது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த ஆண்டு அந்த விவசாயத் தொழிலாளத் தோழர்கள் வருங்காலம் என்ன ஆகும் என்று மிகுந்த கவலையாக இருப்பதைப் பற்றி ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே ஆளுநர் உரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது பற்றித் திட்டவட்டமாக எந்த விதமான கருத்துக்களையும் சொல்லவில்லை என்பது உள்ளபடியே வருந்தத்தக்கது. குறிப்பாகப் படித்துவிட்டு வந்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவேண்டுமென்பதற்காக முன்பு இளைஞர் அணியை உருவாக்கி 175 ரூபாய் சம்பளத்தில் நான்கு ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள், எதிர்காலத்தில் நிரந்தரமாக வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள். இன்றைக்கு ஏமாற்றத்தோடு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையில் இருந்து விடுபடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மிக முக்கியமாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகியவை பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கது என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருமொழிக் கொள்கையைப் பற்றி ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மிகுந்த ஆர்வத்தோடு சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இருமொழிக் கொள்கை தான் தமிழகத்தைப் பொறுத்தவரை மொழிக் கொள்கையாகும். இதை எதிர்த்து எந்த ஒரு அரசியல் இயக்கமும் தமிழகத்தில் இயங்க முடியாது. தோக்குமரத் தேகத்தைத் தீக்கிரையாக்கி செந்தமிழ் காத்த குடும்பத்தினருக்கு கலைஞர் அரசாங்கத்தில் உதவித் தொகை வழங்கினார்கள். இன்று அது மறுக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அளிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பூம்புகாரில் இருக்கும் மீனவப் பெருங்குடி மக்கள் கடலரிப்பால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். கடலரிக்காத அளவுக்குத் தடுப்புச் சுவர்கள் கட்டித் தர வேண்டும்.

முன்பு ஆட்சியிலிருந்த அரசாங்கம் மீனவப் பெருங்குடி மக்களுக்கும் ஏழை ஆதி திராவிட மக்களுக்கும் தரமான குடியிருப்பு வீடுகளைக் கட்டித் தந்தது. பல இடங்களில் மீனவ மக்களுக்காக இடங்கள் வாங்கப்பட்டு வீடுகள் கட்டித்தர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டது. அவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடிநீர் இல்லாத நிலையைப் போக்கவேண்டுமென்பதற்காக பெரிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு பேரூராட்சி தரங்கம்பாடி, வெள்ளையர் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு 30 ஆண்டுகள் கடந்தும் அந்தக் கடலோரப் பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்னும் கிடைக்கவில்லை. ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டுமென்பதற்காக 15,000 ரூபாய் ஆய்வு செய்வதற்காக ஒதுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி குடிநீர் கிடைக்க வழிவகை

செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய
கருத்துக்களை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்,
வணக்கம்.

* திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு தலைவர் அவர்களே,
தமிழக ஆளுநர் அவர்கள் அளித்த உரையின்மீது நன்றி
தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்திலே உழைப்பாளர் முன்னேற்றக்
கட்சியும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு நன்றியுரை செலுத்தக்
கடமைப்பட்டிருக்கிறது.

தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு ஆளுநர் அவர்கள்
அளித்திருக்கிற திட்டங்களைப் பார்க்கின்ற நேரத்தில்,
இதுவரைக்கும் பேசப்பட்டு வந்த' The development of rural
India என்று சொல்லக்கூடிய கிராமப் புறப் பகுதிகளின்
முன்னேற்றத்திற்காகச் செயல்பட வேண்டுமென்று சொல்லி
வந்தார்களாயினும் இதுவரை, இந்த அறிக்கைக்கு முன்னால்
வரையும் நாம் தெரிந்து கொண்ட, கேட்டுக் கொண்டிருந்த
திட்டங்கள் எல்லாம்' It is towards urban India என்று
சொல்லக்கூடிய அளவுக்குத் தமிழகத்தில், குறிப்பாக எல்லாவித
திட்டங்களும், முன்னேற்றங்களும் நகர்ப்புறங்களுக்கே அளிக்கப்
பட்டு இருந்தன. அதன் காரணமாகக் கிராமப்புறங்கள் எல்லாம்
புறக்கணிக்கப்பட்டு வந்தன என்பதை நாம் அறிவோம்.

முதல் முறையாக ஆளுநர் அவர்களுடைய உரையிலே இந்த
அரசாங்கம் வந்த பிறகுதான் கிராமப்புற மக்களைப் பற்றிச்
சிந்திக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிக்
கொள்வதில் பெருமை கொள்ளுகிறேன். ஏறக்குறைய 70
சதவிகித மக்கள் கிராமப் பகுதிகளில் இருக்கிறார்கள். அந்தக்
கிராமப் புறங்களில் வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத்
தரத்தை உயர்த்துவதற்கும், அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய
மக்களின் வேலை வாய்ப்பை அதிகமாக்குவதற்கும் மற்றும்
அங்கிருக்கிற அந்த மக்களுடைய சமூக, பொருளாதார, கல்வி
நிலைமைகளில் முன்னேற்றம் காண வேண்டுமென்று அந்தக்
கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இங்கே கவர்னர்
அவர்களுடைய உரையானது அமைக்கப்பட்டிருக்கிறது. அதை
நினைக்கின்ற காலத்தில் இத்தனை ஆண்டு காலமாகக் கிராமப்புற
மக்கள் கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, போக்குவரத்து, குடிநீர்
என்று சொல்லக்கூடிய அத்தனை வசதிகளும் அற்றவர்களாக

இருந்தார்கள். அந்த நிலைமைகளைப் போக்க இந்த அரசு மேற்கொண்டிருக்கிற திட்டங்களை உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி முழு மனதாக வரவேற்கிறது.

(நண்பகல் 12.00)

பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் இந்த அறிக்கையிலே காணப் படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு நேற்று மாலைப் பத்திரிகை யிலே வந்திருக்கிறது. பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் என்பது கிராமப் பொருளாதாரம் வளருவதற்காகவும், கிராமப்புறங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு கிராமங்கள் நல்ல வளர்ச்சி காண வேண்டுமென்பதற்காகவும் இந்த அரசானது—அந்தத் திட்டத்தை இந்த அறிக்கையிலே அது பற்றிச் சொல்லப்படா விட்டாலும்—அந்தத் திட்டத்தை அமலாக்கும் என்பதில் உழைப் பாளர் முன்னேற்றக் கட்சி நம்பிக்கை கொண்டிருக்கிறது.

மேலும், நகர்ப்புறங்களிலே மட்டும் கிடைத்து வந்த நல்ல தர மான உணவுப் பொருட்கள், நியாயமான விலையிலே கிடைத்துவந்த உணவுப் பொருட்கள் கிராமப்புறங்களிலேயும் கிடைக்க வேண்டு மென்ற நல்ல கொள்கையின் அடிப்படையிலே 16 ஆயிரம் கிராமங்களிலே இப்படிப்பட்ட வசதிகள் கிடைக்கும் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அப்படிப்பட்ட வசதிகள் கிராமப்புறங்களுக்குக் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். கிராமப்புறங்கள் புறக்கணிக்கப் பட்ட நிலையில் இந்த அரசானது கிராமங்களுக்கு நகர்ப்புறங்களைப் போல் நல்ல வசதிகளை உருவாக்கி கிராமங்களை உயர்த்த வேண்டு மென்ற நல்ல எண்ணத்தைக் கொண்டு இருப்பதை உண்மையி லேயே யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விழைகிறேன். குறிப்பாக, அரிசன மக்கள், பழங்குடி மக்கள், கைத்தறி நெசவாளர்கள் ஆகியவர்களுடைய நலனைப் பாதுகாக்க அரசு தனி கவனம் செலுத்தும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் பின்தங்கிய சமுதாய மக்களைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படாமல் இருப்பது, எங்கள் உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைப் பொறுத்தவரையிலே பெருத்த

ஏமாற்றத்தை அளிக்கிறது.' அடுத்து வருகிற பட்ஜெட்டிலே இந்த அரசு பின்தங்கிய மக்களுக்கு ஏற்ற திட்டங்களை அறிவிக்கும் என்று நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

பின்தங்கியோர் பட்டியலில் இன்று எண்ணிக்கை உயர்த்தப் பட்டிருக்கிறது, ஆனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் கூட்டப்படவில்லை. அதே நிலைமையில்தான் அவை இருக்கின்றன. இதனால் எந்த எந்தப் பின்தங்கிய மக்களுக்குப் பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோமோ அந்தச் சமுதாய மக்களுக்குப் போதுமான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி 1972 ஆம் ஆண்டிலே தமிழக அரசிடத்தில் 'மோஸ்ட் பேக்வர்ட் கிளாஸ்'(Most Backward Class) மக்களுக்கு பிரத்யேகமான சலுகைகள் தரப்பட வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறியது. மிக மிகப் பின்தங்கியோர் பட்டியலில் அவர்களைச் சேர்த்து அவர்களுக்குப் பிரத்யேகமான சலுகைகளைத் தந்தால்தான் அவர்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே தகுதியையும் திறமையையும் வைத்துக் கொண்டு வேலைவாய்ப்புத் தேடியாவது, அல்லது வேறு எந்த புரஃபஷனல் காலேஜில் சேர்ந்து படிக்க இடம் கேட்டாவது வந்தால் குறிப்பாக பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி பலன் கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது. காரணம், ஒரு கிராமத்திலே இருக்கின்ற மாணவன் பல்வேறு தொல்லைகளுக்கு உட்பட்டு, பலவித குடும்பச் சூழ்நிலைகளுக்கும் ஆட்பட்டு, கட்டுப் பட்டு, கஷ்டப்பட்டு படித்தாலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை, புரஃபஷனல் கல்லூரியிலே இடம் கிடைக்கவில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே நல்ல சுற்றுப்புற சூழ்நிலையை வைத்துக்கொண்டு நகரத்திலே படிக் கின்றவர்கள், மற்றும் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாக இருக்கிறவர்கள் மற்றவர்கள் தங்கள் பிள்ளைகளை டியூஷன் ஏற்பாடு செய்வதன் மூலம் நன்றாகப் படிக்கவைக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்று நல்ல மார்க்குகளை வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் இந்த மாணவர்க்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் கிராமங்களிலே படிக்கின்ற மாணவர்க்குக் கிடைக்காமல் போய் விடுகின்றது.

[திரு. ரா. மார்க்கபந்து] [1977 ஜூலை 8

ஆத்தூர் பகுதியிலே எந்தவிதமான வசதியும் இல்லாமல் கஷ்டப்பட்டுப் படித்த மாணவன் 74 மார்க்குகள் வாங்கியும் அந்த மாணவனுக்கு எம்.பி., பி.எஸ்., வகுப்பில் இடம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக கிராமங்களிலே உள்ள மாணவர்களுக்குப் படிப்பிலே இருக்கின்ற உற்சாகம் குறைந்து விடுகிறது. அந்த மாணவர்களைப் படிக்க வைக்கின்ற பெற்றோர்கள் இரண்டாவது மகனைப் படிக்க வைக்கக் கூடிய உற்சாகத்தையும் இழந்து, மாணவர்கள் கல்விப் பயனை இழக்க நேரிடுகிறது. இந்த நிலையிலே நான் கிராமங்களிலே உள்ள மாணவர்கள் மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் பெற்றோர்களின் மனமும் உற்சாகமில்லாத நிலையில் போய்விடுகிறது. அவர்கள் உற்சாகத்தை இழந்து இருக்கிறார்கள். எனவே, கிராமப்புற மக்களுக்கு கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பு மட்டுமல்ல, வேலை வாய்ப்பும் அதிகமாகக் கிடைக்கக் கூடிய திட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவிதமான திட்டங்களும் கிராமப்புற மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யக்கூடிய திட்டங்கள் இந்த அறிக்கையிலே அடங்கியிருக்கின்றன. இந்த அறிக்கையிலே கிராமப்புற பொருளாதாரம் வளரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே, ரூரல் ஏரியாஸிலே, எந்த எந்த இடங்களிலே கைப்பொருள்கள் உற்பத்தியாகின்றனவோ அவைகளை வைத்துக் கொண்டு, இன்டஸ்ட்ரியல் ரிசோர்சஸ் எங்கெங்கே கிடைக்கின்றனவோ அவற்றை வைத்துக்கொண்டு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் அங்கே இருக்கிறவர்களின் வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்தால்தான் அங்கே உள்ளவர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமையைப் போக்க முடியும்.

(முற்பகல் 12-10)

அடுத்து, குறிப்பாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன். எங்கள் வடார்க்காடு மாவட்டத்திலிருக்கும் ஜவ்வாது மலைப் பகுதியிலே அதிகமான சந்தனம் உருவாக்கப் படுகிறது, விளைகிறது. அந்த சந்தனம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உருவாக்கப்படுகிறது. ஆனால் அந்தச் சந்தனத்தை வைத்துக் கொண்டு அந்தப் பகுதியிலே ஒரு சந்தனத் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் அங்கிருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மாவட்டங்களிலே எந்தெந்தப் பொருட்கள் கிடைக்கின்றனவோ அவைகளை



1977 ஜூலை 8] [திரு. ரா. மார்க்கபந்து]

வைத்துக் கொண்டு அந்தந்தப் பகுதிகளிலே வேலை வாய்ப்பிற்கான திட்டங்களை உருவாக்கும் முறையிலே செய்து, நகர்ப்புறங்களிலே குவிக்கப்படாமல் கிராமப்புறங்களுக்கும் பகிர்ந்தளிப்பதன் மூலம், அங்கே தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் அந்தந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி அழுத்தமாகக் கருத்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் குறிப்பாக இந்த ஆசிரியர்கள் பிரச்னை ஒன்று இருக்கிறது. வேலையில்லாத பட்டதாரிகளுக்கு அரசாங்கம் ஒரு பயிற்சி தந்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தந்திருக்கிறார்கள். அவர்களில் ஏறத்தாழ 3,000 பேர்களுக்கு மேலாக வேலையிழக்கும் நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருப்பதாக நேற்று 'யூத் சர்வீஸ்' இயக்கத்திலேயிருந்து அறிக்கை தயாரித்து எதிர்க் கட்சித் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர் களிடம் அளித்து இதைப் பற்றிப் பேசுங்கள் என்று சொன்னார்கள். அவர்களிடத்திலே கேட்கும்பொழுது, "நாங்கள் படித்தோம், வேலை தந்தார்கள், குறைந்த தொகையாக கன்சாலிடேட்டட் அமவுண்ட் என்று சொல்லி 175 ரூபாய் கொடுத்து வந்தார்கள். உடனடியாக மாற்று வேலைகள் தராது வீட்டுக்கு அனுப்புங்கள் என்று சொல்லும்பொழுது இரண்டு மூன்று ஆண்டுகள் வேலை செய்தும் வேலைக்கு உத்தரவாதம் இல்லையே" என்று சொல்லும் அளவில் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அதையும் ஏற்று செயற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

மற்றொன்றையும் கூறிக்கொள்ள விழைகின்றேன். இந்தத் தமிழக அரசு ஏற்பட்ட குறைந்த காலத்திலே இலஞ்சம், ஊழல் அற்ற ஒரு நியாயமான ஆட்சியை மக்களுக்கு அளிப்போம் என்று கூறியிருக்கும் உத்தரவாதத்தை உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியானது மிக மிகப் பாராட்டி வரவேற்கிறது. அதே நேரத்திலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன். இந்தத் தேர்தல் பற்றி, சென்னை மாநகராட்சித் தேர்தல் மண்டர் ரோல் வழக்கு முடிந்த பிறகு தேர்தல் நடைபெறும் என்று இந்த உரையிலே கூறப்பட்டுள்ளது. அதை வரவேற்றுக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், நகர்ப்புறத்தில் இருந்தவர்கள்

இந்த நாட்டின் வரிப் பணத்தைச் சூறையாடினார்கள். அவர்களைச் சட்டத்திற்கு முன் நிறுத்த வேண்டும். இவர்கள் இலஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டவர்கள், இந்த நாட்டின் வரிப் பணத்தைச் சூறையாட இவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுமளவில் சட்டத்திற்கு முன்னால் அவர்களை நிறுத்துவதன் மூலம் எதிர்கால அரசியல் ஆரோக்கியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே, சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்ட பிறகு இங்கே இருக்கிற நிர்வாகம், இங்கேயிருக்கிற அதிகாரிகளின் காரணமாக செம்மையாக, செவ்வையாக நடத்தப்பட முடியாமல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு நிர்வாகத்தில் இருக்கின்ற குறைபாடுகளின் காரணத்தால் சர்வ கட்சியினரும் சேர்ந்த ஒரு அட்வைசரி கமிட்டி போன்று அமைத்து மாநகராட்சியின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இலவச சட்ட உதவி என்று சொல்கிறார்கள். அது மிக மிக பாராட்டத் தகுந்ததாகும். அதற்குக் காரணம் சட்டத்தின் உதவியை நாடுவோருக்கு, கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை மக்களுக்கு அந்த உதவி சுலபமாகக் கிடைக்க, 'பீரோகிரஸி' என்று சொல்கிறோமே, நடைமுறையில் பார்க்கும்பொழுது கோர்ட்டுகளில் தேங்கியிருக்கும் வழக்குகளைப் பார்க்கும் நேரத்தில் காலம் நீண்டு கொண்டே இருக்கிறது. உடனடியாகத் தீர்ப்பு கிடைக்காமல் இருக்கிறது. நீதியைத் தேடிச் செல்பவர்களுக்கு நீதி கிடைக்க முடியாமல் இருக்கிறது. கோர்ட் ஃபீஸ், அரசாங்கக் கட்டணம் அதிகம் செலுத்தும் நிலை ஏற்படுகிறது. நானும் பார் கவுன்சில் மெம்பராக இருப்பதால் தீர்மானம் போட்டோம். கோர்ட் ஃபீஸைக் குறைப்பதன் மூலம் சுலபமாக நீதி கிடைக்க வழி வகுக்கும் என்று சொல்லியிருக்கிறோம். இது சம்பந்தமாக ஆளுநர் உரையில் கூறியிருப்பது வரவேற்கத் தக்கது. இது சிறப்பானதொரு உரையாகும். குறிப்பாக, நலிந்த மக்களுக்குப் பாதுகாப்பு தரும் வகையில் இந்த உரை அமைந்திருக்கிறது என்று கூறி உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.





* **திரு. சோ. பாலகிருஷ்ணன் :** பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்த நேரத்தில், அந்த உரையில் நாட்டு மக்கள் எதிர்பார்த்த எந்த நிகழ்ச்சியும் இல்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நாட்டின் புதிய அரசாங்கம் ஏற்பட்ட நேரத்தில் பல நல்ல காரியங்கள் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்தார்கள். ஆனால் பழைய அரசாங்கத்தின் மறு பதிப்பாகத்தான் இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டது பற்றி அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையில் பல நல்ல திட்டங்களை நாம் எதிர்பார்த்தோம். அந்த வகையில் தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்கள் தொல்லை மிகப் பெரிய தொல்லையாகும். எங்கே சென்றாலும் பிச்சைக்காரர்கள் பெரிய படையாகத் திரண்டு நம்முடைய பகுதி மக்களுக்கும், நம்முடைய அரசாங்கத்திற்கும், வெளியிலேயிருந்து வருபவர்களுக்கும் ஏகப்பட்ட தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பிச்சைக்காரர்களை ஒழிக்க ஒரு சட்டம் ஆளுநர் உரையில் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது பற்றி ஒன்று கூடச் சொல்லவில்லை.

இது போன்றே, நான் சார்ந்திருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகப் பெரிய வறட்சியின் காரணமாக அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மட்டுமல்ல, கால்நடைகளுக்குக் கூட குடி தண்ணீர் இல்லாமல் இருப்பதைப் பற்றி இந்த அறிக்கையில் எதிர்பார்த்தோம். எனக்கு முன்பு வீற்றிருக்கின்ற அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் பஞ்ச நிவாரணத்துக்காக நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டுமென்று கலெக்டர் அலுவலகத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். எங்கள் அருமைத் தோழர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அதைப்போல பல கட்சித் தலைவர்கள் உண்ணாவிரதம் இருந்து, நான்கைந்து நாட்கள் இருந்து சோர்ந்து போகும் நிலைமையில் இன்றைய முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் நேரில் வந்து அவர்களுக்கு ஆறுதல் கூறி, வருங்காலத்தில் இந்தப் பகுதியை முன்னேற்றுவோம் என்று உறுதி கூறி, அதன் பின்பு அந்த உண்ணாவிரதத்தை வாபஸ் வாங்கினார்கள். அந்த

நிலைமையை மறந்துவிட்டு இன்றைக்கு இராமநாதபுரத்தைப் பற்றி ஒரு வரி கூட இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய ஒப்பற்ற தலைவர் திரு. காமராஜ் அவர்கள் காலத்தில் எங்கள் முதுகுளத்தூர் பகுதியில் போட்ட ரோடுகளும், ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளும் இன்றைய நிலையில் கவனிப்பாரற்று இருக்கின்றன. போடப்பட்ட ரோடுகள் பழுதடைந்து இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நம்முடைய முதலமைச்சராக வந்திருப்பவர்கள் தேர்தல் காலங்களில் ரோடு இல்லாமல் எவ்வளவு சிரமப்பட்டார்கள் என்பதை மறந்திருக்க மாட்டார்கள். நம்முடைய நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பள்ளிக்கூடங்கள் அனைத்தும் இன்று கூரைகள் இல்லாமல் கொட்டும் மழையில் மாணவர்கள் வாடி வதங்கும் நிலைமையிலே மாணவர்களை வைத்து நடத்துகிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களை உறுதியான பள்ளிக் கட்டிடங்களாகக் கட்ட இன்றைக்குத் திட்டங்கள் இதில் இல்லை.

எங்களுடைய முதுகுளத்தூர் தொகுதி என்பது தமிழ்நாட்டிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் பகுதியாகும். அதில் உள்ள அத்தனை பேரும் விவசாயிகள். விவசாய மக்களுக்கு அங்கே மழை பெய்தால் தான் வாழ்வு. மழை என்பது எப்பொழுதோ ஒரு தடவை வந்து போகும். அதுவும் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக—மற்றப் பகுதிகளில் இரண்டு ஆண்டுகள் வறட்சி என்றால் அங்கே நான்கு ஆண்டுகளாக வறட்சி. இந்த வறட்சியான காலத்தில் அங்கே நாங்கள் படும் தொல்லைகளும், துன்பங்களும் கணக்கில் அடங்காது. அந்தக் குறைகளையெல்லாம் சொல்வதென்றால் இங்கே நேரம் இல்லை. அவ்வளவு பெரிய அளவில் என் தொகுதி மக்கள் வாடி வதங்குகிறார்கள். அவர்கள் குடி தண்ணீருக்காகப் படும் துயரம் கொஞ்சநஞ்சமல்ல. ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு மூன்று மைல்கள் தண்ணீருக்காகச் செல்ல வேண்டும். அதற்காக மாட்டு வண்டிகளைக் கட்டிக் கொண்டு செல்ல வேண்டும். இப்படி எங்கள் தொகுதி மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொடிய சூழ்நிலையைப் போக்க உடனடியாக நம்முடைய தமிழ்நாடு அரசு எங்கள் பகுதிக்கு வைகையிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள்



பகுதியில் கிருதமால் என்பது மிக முக்கியமான ஒரு நதி ஆகும். இந்த கிருதமால் நதியில் தண்ணீரே வராத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது முதலமைச்சரின் அருப்புக்கோட்டை தொகுதியில் தொடங்கி எங்கள் தொகுதியில் முடிவடைகிறது. அதை நிச்சயமாகச் செய்வார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். தண்ணீர் வருகின்ற அந்த நல்ல காரியத்தை முடித்துத் தருமாறு முதலமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் குடிநீர் இருக்கிறதோ இல்லையோ, இப்பொழுது கள், சாராயம் என்பது சர்வசாதாரணமாகி விட்டது. அங்கே பஸ் ஓட்டுபவர்கள் கூட பொழுதடைந்து விட்டால் பஸ் ஓட்டப் பயப்படுகிறார்கள். அங்கே குடித்துவிட்டு தெருவிலே உருண்டு கொண்டிருக்கிறார்கள். பழைய அரசாங்கமாக இருந்தால் போலீஸ் அதிகாரிகள் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களிடம் கமிஷன் வாங்கிக் கொண்டு சென்று விடுவார்கள். இப்பொழுது புதிய அரசாங்கம் வந்தவுடன் மக்களே அங்கங்கே சாராயக் கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ரோட்டில் இரு பகுதியிலும் சாராயக் கடைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தாய்மார்கள் தனியாக நடந்து செல்ல அஞ்சுகிறார்கள்.

இந்தக் கொடிய சூழ்நிலையின் காரணமாக சாராயம் குடிக்க காசு வேண்டுமென்பதற்காகச் சிறு சிறு திருட்டுகள் நடக்கின்றன. பலயிடங்களில் கலப்பைகளைக் காணோம். ஆட்டுக்குட்டிகளைக் காணோம் என்று சொல்கிறார்கள், நான் பத்து நாட்களாகச் சென்னையிலே தங்கியுள்ளேன். எனக்கு ஏராளமான கடிதங்கள் வருகின்றன. திருட்டுகள் என்பது சர்வசாதாரணமாகி விட்டது. சாராய விற்பனை என்பது சாதாரணமாகி விட்டது. நம்முடைய கவர்னர் அவர்கள் மதுவிலக்குத் திட்டத்தில் மிக உறுதியான கொள்கை படைத்தவர்கள். ஆனால் நம்முடைய முதல் அமைச்சரவர்கள் இதில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லாமல், இதனைச் சட்டத்தால் மட்டும் செய்ய முடியாது, பிரச்சாரம் செய்தால்தான் இதனைச் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார். அவரது பேச்சில் அழுத்தம் குறைந்ததன் காரணமாக இன்று பல அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கின்றனர். அதனால் கள்ளச் சாராயம் என்பது சாதாரணமாகிவிட்ட சூழ்நிலை

இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, நம்முடைய புதிய அரசாங்கம் மிகத் தெளிவாகச் சில காரியங்களைச் செய்ய வேண்டும். இருபது அம்சத் திட்டம் என்பது எங்கள் பகுதியில் பல நன்மைகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அதற்கு இந்தக் கவர்னர் உரையில் பாராட்டு தெரிவிக்க ஏன் அஞ்சுகிறார்கள் என்று தெரியவில்லை. அவ்வாறு அஞ்சாமல் காரியம் ஆற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் நிலவள வங்கியின் சார்பில், முதுகுளத்தூர் பகுதியில் நிலத்தடி நீரே இல்லை என்று சொல்லி புதிதாகத் தோண்டும் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க மறுக்கிறார்கள். வர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்பது என் கணக்கு. ஆகவே, தயவுசெய்து அவர்களுடைய யோசனையைக் கணக்கில் கொள்ளாமல் புதிதாகக் கிணறு தோண்டுபவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த தேர்தலுக்குப் பின்னால் இந்த மாமன்றத்திலே தொகுதியினுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லி, தொகுதி வாழ் மக்களுக்காகப் பாடுபடுகின்ற ஒரு வாய்ப்பைத் திருவல்லிக்கேணி தொகுதிவாழ் மக்கள் அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தங்கள் மூலமாக முதலிலே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையினை நம்முடைய பேரவைத் தலைவரவர்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்ட உரையினை ஆற்றினார்கள். அந்த உரையில், கடந்த காலத்திலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் நாட்டு மக்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகள், அது படியரிசி திட்டமானாலும், மற்ற வேறு பல பிரச்னையானாலும் இடம் பெறும் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். ஆனால், அது பத்திரிகையிலே வருகிற செய்தி போல், சொல்லப்படுகிறது, கேட்கப்படுகிறது. ஆவன செய்யப்படுகிறது என்பது போல் இந்த உரை அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.





ஆளுநர் உரையிலே, கடந்த 17 திங்களாக, தமிழ் நாட்டில், 'குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, அச்சமற்ற, நேர்மையான தேர்தல் நடத்தப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இன்று மலர்ந்திருக்கிறது' என்று பாராட்டு வழங்கியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை கடந்த 17 திங்களாக இந்தத் தமிழகத்திலே ஜனநாயகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறதென்பதை ஜனநாயக உணர்வு படைத்த அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜனநாயகப் படுகொலையைப் பற்றி, அந்த ஜனநாயகப் படுகொலைக்குத் துணை நின்றவர்கள்தான் இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலேயிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே என்னால் சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது. அந்த ஜனநாயகப் படுகொலையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரண்டு உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. என்னைப் போன்றவர்கள் என்னுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளன்று கொடியேற்றப் போகிறேன் என்று சொன்ன ஒரே காரணத்திற்காக தடுப்புகாவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டேன். சிறையில் நிர்வாணமாக நிறுத்தப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்ட காட்சியை, மனக்கண் முன்னாலிருப்பதை உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றைக் கண்டிக்கும் வகையிலே, அல்லது அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இந்த அறிக்கையிலே, பேருரையிலே இருக்கும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஆனால், இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தமிழகத்து முதல்வர் அவர்கள் மத்திய அமைச்சரைச் சந்தித்து ஜனநாயகத்தின் பெயரிலே, நாட்டிலே கடந்த காலத்திலே நடைபெற்ற அக்கிரமங்களைக் கண்டிக்க, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முறைகளைக் கூறி, சட்டத்தினுடைய வடிவத்தை மீறின அதிகாரிகள் பொது மக்களுக்குத் தொல்லை கொடுத்திருக்கிறார்கள், கொடுமைக்கு ஆளாக்கியிருக்கிறார்கள் என்று தெரிவித்தபொழுது, நம்முடைய முதல்வர் அவர்கள், அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி அளித்ததாகப் பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தேன். ஆனால், அது பத்திரிகைச் செய்தியாகத்தானிருக்கிறதே தவிர, இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றத்தைத்தான் நான் காண முடிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இருமொழிக் கொள்கை, பேரறிஞர் அண்ணாவாலே ஏற்படுத்தப்பட்ட கொள்கை, அந்த கொள்கையின் உறுதிமொழியைத் தமிழகத்திலே காப்பாற்றப்படாமல் தமிழக அரசியலிலே எந்த அரசியல்வாதியும் தலை தூக்க முடியாது என்ற காரணத்தாலே, அதை இந்த உரையிலே இணைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த இரு மொழி திட்டத்தின் அடிப்படையிலே இந்தி மொழி எதிர்ப்புப் போராட்ட வீரர்களாகத் தியாகம் செய்த செம்மல்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழக தானைத் தலைவர் கடந்த காலத்திலே, முதலமைச்சராக இருந்த காலத்திலே, மானியமாக ஒரு நிதியை வழங்கினார்கள்.

அது மட்டுமல்ல, திருத்தணி பகுதியிலே எல்லைப் போராட்டம் நடத்திய தியாகிகளுக்கும் அங்கே மானியம் வழங்கப்பட்டது. காலஞ்சென்ற திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் இந்தப் பேரவையிலே அலங்காரமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் குமரி மாவட்டத்திலே எல்லைப் போராட்டம் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்று போராட்டம் நடத்தியவர்களுக்கும் மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், இந்தி எதிர்ப்பிலே கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல், அவர்களுக்கும் மானியம் வழங்கப்படும் என்று கலைஞர் அவர்கள் அறிவித்து, அளித்தார்கள். கட்சி சார்பற்று நாட்டுக்கு உழைத்த தியாகிகள் என்ற வகையிலே எங்களுடைய பெருந்தகை தானைத் தலைவர் நிதி வழங்கினார்கள்.

கடந்த 17 திங்களாக, அது நிறுத்தப்பட்டு ஒழிக்கப் பட்டிருக்கிறது. இரு மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறேன், அண்ணா வழியில் நடக்கிறேன் என்று சொல்கிறவர்கள் கவர்னர் உரையிலே அப்படி நிறுத்தப்பட்டதனை மீண்டும் வழங்கப்படும் என்று உறுதி அளிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன், ஏமாற்றம் அடைந்தேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இந்தத் தீர்மானத்திலே பேசுகின்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஊழல், ஊழல் என்று பேசுகிறார்கள். நான் அவைக்குப் புதியவனாக இருந்தாலும் கூட, ஒன்றைச் சொல்வதிலே தவறில்லையென்று கருதுகிறேன். * * *



[பிற்பகல் 12.30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ** தீர்ப்பு சொல்லிவிட்ட பிறகு அதைப் பற்றி பேசுவது கூடாது. அது பத்திரிகையிலே வந்தது என்று வைத்துக் கொண்டு இப்படி நேரடியாகக் குற்றம் சாட்டினால் அது தவறு. திரு. அரங்கநாதன் அவர்கள் இதுபற்றிப் பேசின பேச்சினை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென உத்திரவிடுகிறேன்.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தானைத் தலைவர் இந்தப் பேச்சை இதோடு முடித்துக் கொள்ள வேண்டுமென்று ஆணையிட்டதன் காரணமாக அதை முடித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, லஞ்சம் ஒழிய வேண்டும், வீண் விரயம் செய்யக் கூடாது, என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதை எப்படி ஒழிக்கப் போகிறார்கள் என்ற வடிவம் இந்த உரையிலே இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் வீண் விரயம் பற்றி முதல்வர் பதவி ஏற்ற அந்தத் தினத்தில் அந்த இடத்தை எண்ணிப் பார்க்கிறேன். அதுவும் பிரச்சினை உருவாகும் என்ற காரணத்தால் அதையும் முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். 12.20 க்கு ஆரம்பித்தீர்கள். 10 நிமிடம் தான் ஒதுக்கியிருக்கிறோம். நீங்கள் 13 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, பிற மாநிலங்களில் தமிழ் பயில்வதற்கு ஊக்க உதவி அளிக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே குறிக்கப் பட்டிருக்கிறது. நான் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை முழுமையாக தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லா குறிப்புகளையும் தமிழிலேயே வழங்குவதற்கு இங்கே இருக்கின்ற

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-25—12.33 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றது.

அதிகாரிகளுக்கு ஊக்கமளிக்க முயற்சிகள் எடுக்க வேண்டுமென்ற காரணத்தினால், அதிகாரிகளுக்கு உதவித் தொகை வழங்கி உற்சாகப்படுத்தி தமிழுக்கு வடிவம் காண வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக இங்கே கடலை எண்ணெய் மற்றும் சமையல் எண்ணெய் பொறுத்தவரையில் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது என்று சொன்னார்கள். கடந்த ஓராண்டு காலமாக ஜனாதிபதி ஆட்சியில் கிலோ எண்ணெய் 7½ ரூபாய் விற்றது. ஆனால் கடந்த ஒரு வாரமாக ரூ. 9½ ஆக விற்கிறது. விலைவாசியை குறைப்போம் எனறு சொன்ன இந்த அமைச்சரவை எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையும் நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களின் குடிநீர் பிரச்சினையைப் பற்றி பேசப்பட்டது. என்னுடைய தொகுதியில் நடுக்குப்பம் மற்றும் லேடி வெல்லிங்டன் கல்லூரி என்ற பகுதிகளில் இன்றைக்கும் சரியான குடிநீர் இல்லாமல் கடற்கரை கிணற்றின் நீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு சரியான குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, மாநகராட்சி மன்ற மஸ்டர் ரோல் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மஸ்டர் ரோல் வழக்குகள் முடிந்த பின்னால் மாநகராட்சித் தேர்தலை நடத்தப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த யோசனையைத் தெரிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆளுநர் மூலமாக தமிழ் நாட்டிலே சர்க்காரியா கமிஷன் அமைத்து போடப்பட்ட வழக்குகள் முடிந்த பிறகு தமிழ் நாட்டினுடைய தேர்தல்களை நடத்தலாம் என்று ஆலோசனை சொல்லி இருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு சென்னை மாநகரம் மிக கேவலமான நிலையில் இருக்கிறது. . . .

**மாண்புமிகு திரு. க. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் மஸ்டர் ரோல் வழக்கிலே இன்றைய ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா





திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை பற்றியும் சர்க்காரியா கமிஷன் முன்னாலே குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற அமைச்சர்களையும் இணைத்து பேசுவது சரியானது அல்ல என்று கருதுகிறேன். சர்க்காரியா கமிஷன் முன் தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் செல்லலாமா, அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதை விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். * * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதற்குப் பிறகு அமைச்சர் என்ன சொல்லப் போகிறார் என்ற பொறுமை இல்லாமல் அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் குறுக்கிடுவது மரபு அல்ல. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டால், அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசாமல் இருக்க வேண்டும். நீங்கள் அதற்கு முன் எழுந்து பேசுவது எனக்கு வேதனையாக இருக்கிறது. சபை ஒழுங்காக நடக்க எனக்கு வசதி செய்து கொடுங்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேசிய பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார். * *

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * * * * * உறுப்பினர் நடவடிக்கைக் குறிப்பில், குறிப்பிட்ட உறுப்பினர் அவர்களைச் சம்பந்தப்படுத்தி அமைச்சர் ஏதாவது பேசி இருப்பாரானால், அதை இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். மேற்கொண்டு தொடர்ந்து திரு. அரங்கநாதன் பேசலாம்.

**திரு. மு. கருணாநிதி :** நான் மிக தயவோடு, பணிவோடு, அவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அவைத் தலைவர் அவர்களே இருந்து கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு,

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-38—12-40-இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-40—12-45-இல் சில் பகுதிகள் அகற்றப்பெற்றது.

பேசியிருப்பாரானால் அதை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அமைச்சர்கள் இப்படி அவசரப்பட்டு, ஆதாரம் இல்லாமல் பேசுகிறார்கள். இனி அப்படி நடைபெறாமல் பார்த்துக் கொண்டு, இந்த அவையினுடைய மரபை காப்பாற்ற வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சர்கள் மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்களும் அதே மரபை கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அரங்கநாதன் தொடர்ந்து பேசுவார். இரண்டு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் தலைவரவர்களே, . . . .

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய மகிழ்ச்சியை தெரிவிக்கும்போது, சாதாரணமாக இந்த அவையில் மேஜையை அடிப்பதுதான் வழக்கம். கை தட்டுவது வழக்கம் இல்லை. தொடர்ந்து கை தட்டிக்கொண்டு வருவதால், தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஆரம்பத்திலேயே அதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இந்த விவாதத்தில் சூடேறி விட்டதால் அதைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரி விக்க வேண்டுமென்றால், கையொலி செய்யவேண்டாம். சாதாரண மாக மேஜையைத் தட்டினால் போதும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் தலைவரவர்களே, நான் பேசுவதை முழுமையாகப் புரிந்து கொள்ளாமலேயே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டைம் இல்லை, இரண்டு நிமிடம்தான், 'இதோடு முடித்துக் கொள்கிறேன்' என்று சொல்லி முடியுங்கள்.

**திரு. மு. அரங்கநாதன் :** அடுத்தபடியாக, மதுவிலக்குப் பிரச்னை பற்றி நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)



பேரவைத் தலைவரவர்களே, நான் மதுவிலக்கைப் பற்றிப் பேசும்போது ஏன் என்னைப் பேசவிடாமல் தடுக்கிறீர்கள்?

(பேரவைத் தலைவர் மணியடித்து, திரு. ஓ. சோ. வேலுச் சாமியை பேச அழைத்தார்.)

*** திரு. ஓ. சோ. வேலுச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் புதிதாக கிரியாறு-பம்பை யாறு திட்டம் வரும் என்று எதிர்பார்த்தோம். நெல்லை மாவட்டத்தின் வடபகுதியிலும், இராமநாதபுரத்தின் மேற்குப் பகுதியிலும் வறட்சியின் கோரப் பிடி நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்தப் பகுதியில் சிறு பாசன திட்டங்கள் நிறை வேற்றம் செய்வதற்காக பல திட்டங்கள் வந்தாலும்கூட, காரை யாறு-பம்பையாறு திட்டத்தையும் நிறைவேற்றி, நிரந்தர தீர்வு காணவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தையும், கேரள மாநில அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ள அரசு முன்வரவேண்டு மென்று விரும்புகிறேன். இந்தத் திட்டம் குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடாததும், மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடாததும் எனக்கு பெரிய குறையாகவே தோன்றுகின்றது. குடிநீர் பிரச்னையைப் பொறுத்தவரையில், கிராமப்புறத்தில் குடி-நீர் பிரச்னையை நிறைவேற்றம் செய்ய காலவரையறையோடு திட்டம் தீட்டுவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

அதே நேரத்தில், பேரவைத் தலைவர் மூலமாக இந்த அரசை கேட்டுக்கொள்வது எல்லாம், அரிசன மக்கள் வாழும் பகுதி களிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். ஏனெனில் முன்பு தீண்டாமை ஒழிப்புச் சட்டம், தற்பொழுது குடிஉரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவை இருந்த காரணத்தால் பல பகுதிகளில் வழக்குகள் வருவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆகவே கிராமப்பகுதிகளில் குடிநீர்வசதி செய்ய குறிப்பாக அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் 17 மாதகால குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சப்பு அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். எனது தொகுதியைப் பொறுத்த வரையில்—ஓட்டப் பிடாரம் தொகுதியில்—பாஞ்சாலம்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை இருக்கிறது. அந்த கட்டபொம்மன் கோட்டையைச் சுற்றி வாழும் மக்கள் பெரும்பாலும் தாழ்த்தப் பட்ட மக்கள். அவர்கள் குடி-நீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். இந்த 17 மாதகால ஜனாதிபதி ஆட்சியில் தான் அது நிறைவேற்றப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள 50 கிராம மக்கள் குடிநீர் வசதி பெற்று இருக்கிறார்கள். முன்பு அங்கே ரூ. 4-க்குத்தான் ஒரு கிலோ அரிசி கிடைக்கும். ஆனால் இப்போது இந்த 17 மாத ஜனாதிபதி ஆட்சியில், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் 60 பைசாவுக்கு கிடைத்தது.

ஆகவே ஜனாதிபதி ஆட்சி பற்றி உறுப்பினர் குறைகூற அவசிய மில்லை. ஆனால் யார் பாதிக்கப்பட்டாலும்கூட, ஏழை மக்கள் இந்த 17 மாத ஆட்சி காலத்தில் நல்லபடியாக வாழ்ந்தார்கள். அவர்கள் பாதிக்கப்படவில்லை.

(பிற்பகல் 12-50)

அடுத்து, அரசாங்கக் கடன்களை வசூல் செய்வதில் சில மாதங் களாக கெடுபிடி முறை கையாளப்படுகிறது. ஏழை எளிய விவசாயிகள் வாங்கிய குறுகிய கால கடன்களை நீண்டகாலக் கடன்களாக ஆக்கி தவணை முறைகளை எளிதாக்க வேண்டு கிறேன்.

கிராமப்புறங்களில் சிறு தொழில்களைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமப்புற மக்களின் 'கைத்திறனை' அடிப்படையாகக் கொண்டே சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு முயற்சிகள் மேற் கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப் பத்தில் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசை வேண்டிக் கொள்வதெல்லாம், தீப்பெட்டி செய்யும் கைத்திறனைப் பொறுத்த வரை, நமது கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு ஈடு இணை கிடையாது. தீப்பெட்டி குடிசைத் தொழிலுக்கு தனி 'போர்டு' ஒன்று அமைத்து கைத்தறி போர்டு அமைத்து கிராமப்புறங் களில் இந்தத் தொழிலை வளர்ச்சி அடையச் செய்தால், மனித சக்தியை பயன்படுத்துவதோடு, கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய ஏழை எளிய மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்.





வறுமை நிலையைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடும்போது, வறுமை நிலை வரம்பிற்குக்கீழ் வாழும் மக்களைப்பற்றி குறிப் பிடும் பொழுது, கடந்த 25 ஆண்டுகளாக என்று ஆரம்பித்து, 1974-ல் 59 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் அளவு கடந்த வறுமை நிலையைப் பார்த்தோம். அதன் பின்பு நல்ல பல திட்டங்களினால் 1964-65-ல் இந்த எண்ணிக்கை குறைந்து, அகில இந்திய புள்ளிவிவர கணக்குப்படி 40-லிருந்து 45 சத விகிதத்திற்கும் உட்பட்டே இருந்தது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் காந்திய வழியையும், அண்ணா அவர்களது கொள்கை வழியையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். இது மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதே. அதே நேரத்தில் ஒரு கருத் தினைச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். பல பேரறிஞர் களும், பல பெருந்தலைவர்களும் "வாழ்க்கைத் தரத்தை" (Standard of living) உயர்த்துவதற்கு பல நல்ல வழிகளை காட்டிச் சென்றிருக்கிறார்கள். ஆனால் "வாழ்க்கையின் தரத்தை" (Standard of living) உயர்த்துவதற்கு காந்திய வழியே சிறந்தது என்பதை காலஞ்சென்ற மார்டின் லூதர் கிங் அவர்கள் உட்பட பல பேரறிஞர்களும் ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு காந்திய வழிகளைக் கையாள வேண்டுகிறேன்.

அது ஒரு புறமிருக்க அரிசன மக்களைப் பொறுத்தவரையில் இப்போது அவர்களுக்கு வேலை வாய்ப்பை 18 சதவிகிதமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பல துறைகளில் இந்த 18 சதவிகிதம் நிறைவு படவில்லை. ஆசிரியர் தொழில் போன்ற துறைகளில் எல்லாம், ஊராட்சி ஒன்றியங்களில், முனிசிபாலிடி களில் எல்லாம் 5 சதவிகிதம், 10 சதவிகிதம்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் வேலைக்கு அமர்த்தப்படவில்லை. இந்தக் குறையை இந்த அரசு போக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1977 ஜுலை 8

*** திரு. அ. க. அரங்கநாதன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அண்ணு அவர்களுடைய கொள்கைகளும், கோட்பாடுகளும், அண்ணுவின் திட்டங்களும் புகழ் மங்கிக் கிடந்த நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மீண்டும் அண்ணுவின் கொள்கைகளும், கோட்பாடுகளும், திட்டங்களும் இந்த மாமன்றத்தில் ஒலிக்கிறது என்று சொன்னுல், அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களின் மிகப் பெருமைக்குரிய செயலாகும். இந்த நிலையான ஆட்சி உருவாகவும், அண்ணுவின் கொள்கைகள் மீண்டும் தமிழகத்தில் நிலைபெறவும், புகழ் பெறவும் வாக்களித்த வாக்காளர்களுக்கு கவர்னர் அவர்களின் உரையில் நன்றி தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது ஆகும்.

அதே நேரத்தில் இன்றைக்கு லஞ்சம் என்று சொல்லுகின்ற போது, சிலருக்கு வருத்தமாக இருக்கலாம், வேறு சிலருக்கு நன்மையாக இருக்கலாம். லஞ்சம் என்பது எல்லாத் துறைகளிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. லஞ்சம் எங்கிருந்தாலும், எப்படியிருந்தாலும், அதை ஒழித்தால்தான் இந்த நாட்டின் மக்கள் முன்னேற முடியும், நாட்டு மக்களுக்காகப் போடப்படும் திட்டங்களின் நன்மைகள் நாட்டு மக்களுக்கு போய்ச் சேரமுடியும் என்பதைச் சுட்டிக்காட்டத் தான், லஞ்ச லாவண்யமற்ற தூய்மையான அரசு ஏற்படும் என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்று, பாராட்டப்பட வேண்டிய ஒன்றுகும்.

அதே போல லஞ்ச லாவண்யம் என்று சொல்லுகிறபோது, எந்தத் தரப்பில் இருந்தாலும், அவை நீக்கப்பட்டால்தான் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற திட்டங்களின் பலன்கள் ஒழுங்காக, ஏழை மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு போய்ச் சேர முடியும். ஆனுல் அரசு ஆங்காங்கு வீண் விரயங்கள் செய்யப்பட்டு, லஞ்ச லாவண்யம் நடைபெறுமாளுல், திட்டங்களின் பலன் நாட்டு மக்களுக்கு சேரமுடியாது போய்விடும். ஆகவே தனி மனிதன் சுயலாபத்துக்காகவோ, அல்லது தன்னைச் சூழ்ந்து வாழ்கின்றவர்களின் சுகபோகங்களுக்காகவோ லஞ்சம் வாங்குவதை



1977 ஜுலை 8] [திரு. அ. க. அரங்கநாதன்]

தடுக்கவேண்டும் என்பதை தலையாய கொள்கையாக வைத்து, கவர்னர் அவர்கள் தமது உரையில் அதைச் சொல்லியிருப்பதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததாக விவசாயச் பிரச்னை. விவசாயப் பிரச்னையை எடுத்துக் கொண்டால், உற்பத்திச் செலவினங்கள் எந்த வகையில் அமைந்திருக்கிறதோ, அதற்கேற்றபடி விற்பனை விலையும் அமைய வேண்டும். ஆனுல் தற்போது விவசாயிக்கு உற்பத்தி செலவினங்கள் அதிகரித்து, விற்பனை செய்கின்றபோது நஷ்டம் ஏற்படுகின்றது. ஆகவே, உற்பத்திச் செலவினங்களுக்கு ஏற்ற வகையில் விவசாயப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கப்பட வேண்டும் என்று எல்லா அரசாங்கங்களின் சார்பிலும் சொல்லப்படுகிறது. ஆனுல் அதைச் செயல்படுத்தும்போது, பொருளாதாரக் கொள்கையின் காரணமாக முழுமையாகச் செயல்படுத்த முடியாமல் போகிறது. இப்போது பேற்றிருக்கின்ற அனைத்திந்திய அ.தி.மு.க. அரசு, குறைந்தபட்ச அளவிற்காவது வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க நடவடிக்கை எடுக்கும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதற்கு ஆளுநர் அவர்களைப் பாராட்டுகிறேம். படித்துவிட்டு, ஆங்காங்கே வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு அரசாங்கம் நல்ல வேலை வாய்ப்பைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்டுக் குரியதாகும்.

விலைவாசியை எடுத்துக் கொண்டால், அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றுல், வாங்கும் சக்தியை உருவாக்க வேண்டும். மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்த வேண்டுமென்றுல், அவர்கள் கரங்களில் பணம் செல்ல வேண்டும். பணம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றுல், தகுந்த வேலை வாய்ப்புகளுக்குக் கிடைக்க வேண்டுமென்றுல், தகுந்த வேலை வாய்ப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும். ஆகவே விலை ஏற்றத்தைத் தடுத்து வாங்கும் சக்தியை உருவாக்குவதற்கு கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டிற்கு உரியதாகும்.

[திரு. அ. க. அரங்கநாதன்] [1977 ஜூலை 8

கிராமப்புறங்களில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்த இருப்பதாக கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அது அவசியமான ஒன்றாகும். நாடு சுதந்திரமடைந்து 30 ஆண்டுகள் ஆகியும் மக்களுக்கு குடிக்க தண்ணீர் கொடுக்க முடியாமல் உள்ளது என்றால், அதற்குத் தீர்வு காண்பது மிகவும் அவசியம் என்பதோடு கூட அவசரமும் ஆகும். கிராமப் புறங்களில் மட்டுமல்ல, நகரப்புறங்களிலும் குடிநீர்ப் பஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக வேலூரில் தண்ணீர் கிடைக்கவில்லை. கீழ்மொணவூர் திட்டத்தைப் போட்டு, அதை அமுல்படுத்த முடியாமல் இதற்கு முன் இருந்த அரசு கிடப்பில் போட்டிருக்கிறது. நகர்புற குடிநீர் திட்டத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீருக்கு அடுத்ததாக மின்சாரம். இதற்கு முன்னால் இருந்த அரசு எங்கே பார்த்தாலும், கிராமப்புறத்திலும் கூட மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்று சொன்னார்கள். பல கிராமங்களில் இன்றைக்கு மின்சாரம் இல்லை. அப்படிப்பட்ட நிலையை இந்த அரசு ஏற்படுத்தாது இருக்கும் என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டு, எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர், மின்சார வசதி செய்து கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருப்பது உண்மையிலேயே பாராட்டிற்கு உரியதாகும்.

அதே போல விவசாயிகளுக்கு, பூச்சி மருந்துகள், உரங்கள் நியாயமான விலைக்கு கிடைக்கும் என்று குறிப்பிட்டிருப்பது பாராட்டிற்கு உரியதாகும். அதைப் போல நமது நகரப்புறங்களில் நியாய விலைக்கடைகள் வைத்து, அங்குள்ள மக்கள் மட்டும் சர்க்கரையும், பருப்பும், எண்ணெயும் நியாய விலையில் பெற்று நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நகரப்புறத்தைப் போல கிராமப்புற மக்களுக்கும் 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்படுவது அறிந்து உண்மையிலேயே அண்ணாவின் கொள்கை மீண்டும் தமிழகத்தில் வந்துவிட்டது என்று நாட்டு மக்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

நகர்ப்புற மக்களுக்குக் கிடைப்பதுபோல கிராமப்புற மக்களுக்கும் பதினாறாயிரம் கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் கிடைக்க இருக்கிறது என்று கவர்னர் உரையில் கேட்கிறபோது



1977 ஜூலை 8] [திரு. அ. க. அரங்கநாதன்]

உண்மையில் அண்ணா அவர்களது ஆட்சி, அண்ணா அவர்களது கொள்கை, அண்ணா அவர்களது கோட்பாடு மீண்டும் தமிழகத்தில் தோன்றிவிட்டது என்பதை நினைவுகொண்டு மகிழ்வதோடு, ஆளுநருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அண்ணா அவர்கள் கூட ஒரு படி அரிசித் திட்டத்தை கோவையிலும், சென்னையிலும் கொண்டு வந்தார்கள். ஆட்சிக்கு வந்தவுடனேயே நமது புரட்சித் தலைவர் அவர்கள் கிராமப்புறத்திற்கு பதினாறாயிரம் நியாய விலைக் கடைகளைத் திறக்க ஒரு திட்டத்தினை வகுத்திருப்பது பாராட்டிற்குரியதாகும் என்கிற முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. வெ. கருணாமூர்த்தி: மதிப்புற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் சட்டப் பேரவையில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து, எனது சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

தம்முடைய கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் பல நல்ல திட்டங்களைக் கூறியுள்ளமைக்கு நன்றியை முதன்முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். லஞ்ச லாவண்யத்தை ஒழிக்கும் திட்டம்பற்றி அவர் கூறியுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து கூறிய போது, சென்னை நகராண்மைக் கழக மஸ்டர்ரோல் வழக்கில் ஊழல் குற்றச் சாட்டுகளில் ஈடுபட்டவர்கள் அனைவரையும் சட்டத்திற்கு முன்பாக நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும், பிறகு தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறினார்கள். அதை நான் மிகவும் பாராட்டி வரவேற்கிறேன். மாநகராட்சியில் நடைபெற்ற ஊழலை மட்டுமல்ல, இன்னும் பல துறைகளில்—அறநிலையத் துறை கூட்டுறவு சங்கங்கள் போன்ற துறைகளில் ஊழல்களை புரிந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து, அவர்களை சட்டத்திற்கு முன்னால் நிறுத்தி தண்டிக்க வேண்டுமென மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிதண்ணீர் பிரச்சனைப்பற்றி அனைத்து உறுப்பினர்களும் கூறியுள்ளதுபோல நானும் கூறிக்கொள்வேன். கவர்னர் அவர்கள் அதுபற்றி குறிப்பிட்டதற்கு நான் மகிழ்ச்சி அடை

கிறேன். இந்த அரசு புதியதாகப் பதவிப் பொறுப்பை ஏற்று சில நாட்களே ஆகின்றன. இந்த அரசு விரைவாக குடிதண்ணீர் பிரச்சனையை அடியோடு நீக்க நல்ல பல திட்டங்களைத் தீட்டும் என்று நான் நம்புகிறேன். ஆகையால் குடிதண்ணீர் பிரச்சனை பற்றி ஆளுநர் அவர்கள் தம் உரையில் முக்கியமாகக் குறிப்பிட்டிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அண்டை மாநிலங்களோடு உறவு கொண்டு, குடிதண்ணீர் பிரச்சனை, பாசன வசதி, மின்வசதி போன்றவைகளைப் பெருக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கூறியுள்ளார்கள். அதற்காகவும் நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இருமொழிக் கொள்கையை செயல்படுத்துவதே இந்த அரசின் கோட்பாடாக இருக்கும் என்று ஆளுநர் அவர்கள் கூறியுள்ளமைக்கு பாராட்டு தெரிவித்து, வரவேற்கிறேன்.

அடுத்து, உணவுப்பொருள் உற்பத்தியை பெருக்குவதோடு, விற்பனைக்கும் தக்க ஏற்பாடுகள் செய்து, நியாயமான விலையில் பொதுமக்களுக்கு கிடைக்க, இடைத்தரகர்களின் லாபத்தைக் குறைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளதை ஆளுநர் அறிவித்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புத் தர, அங்கங்கே சிறுசிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, கிராம தொழில் வளதகைப் பெருக்க திட்டமிட்டுள்ளது பற்றி கூறினமைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் இளைஞர் அணியில் உள்ளவர்களுக்கு இதுநாள் வரை வேலைவாய்ப்புத் தரவில்லை, அவர்கள் விஷயத்தில் அனுதாபத்தோடு இந்த அரசு செயல்படவேண்டும் என்றார். இதற்குமுன் நடைபெற்ற அரசு அந்த இளைஞர்கள் அணியினருக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை, அவர்கள் எத்தனை போராட்டங்கள் நடத்தியும் அந்த அரசு அவர்களது கோரிக்கைக்கு நியாயம் வழங்கவில்லை, ஆனால் இந்த அரசு அவர்களுக்கு. வாழ்வளிக்க





வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட எந்த மக்களாக இருந்தாலும், அவர்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களுக்கு வேண்டிய ஆதரவை அளிப்பார்கள் என்ற உறுதியினை, அவர்கள் சார்பாக நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் வீட்டுவசதிபற்றிக் கூறியுள்ளார்கள். அனைத்து கிராம மக்களுக்கும், அரிசன மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், இன்னும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கும் வீட்டு வசதி கிடைக்கவில்லை. அதை இந்த அரசு நிறைவேற்றும் என்று கூறியுள்ளார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு கூறிக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு என். கிட்டப்பா:** பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது வேலையில் இருந்து நீக்கப்பட்ட இளைஞர் அணியினர்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் வேலை அளிக்க இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் அளித்த உத்தரவாதமாக எடுத்துக் கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பாதிக்கப்பட்டவர்களைக் கைவிடமாட்டார்கள் புரட்சித் தலைவர் என்பதையே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

**திரு. என். கிட்டப்பா :** இளைஞர் அணியினர் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு வேலை அளிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*** திரு. ஆ. நடராசன் :** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே இன்றையதினம் கவர்னர் உரையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு அளித்த திட்டமான சீரணித் திட்டத்தைப்பற்றி ஆளுநர் உரையில் இல்லாதது வருந்தத்தக்க ஒன்று என்பதைப் பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்] [1977 ஜூலை 8

அதைப்போல அரிசனங்களுக்கு குடியிருப்பு வசதி அளிக்க, கடந்த ஆண்டுகளில் லட்சம் வீடுகளை கழக அரசு கட்டித்தரும் திட்டத்தைச் செயல்படுத்தியது. அது நாட்டுமக்கள் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். அதை மீண்டும் செயல் படுத்துவோம் என்ற அறிவிப்பு இந்த உரையில் இல்லாதது உள்ளபடியே வருந்தத் தக்கதாகும்.

குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கான திட்டத்தை கலைஞர் அரசு செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டது. அது வழக்கு மன்றத்தில் தடைசெய்யப்பட்டதும் நாம் அறிவோம். அதை ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கை எடுப்பது பற்றி ஆளுநர் உரையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இருபது அம்சத் திட்டத்தின் மூலம் நாட்டில் என்னென்ன நடைபெற்றது என்பதை நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் ஏழை எளியவர்கள் வங்கியில் கடன் வாங்க முடியாமல் ஒரு பக்கம் அவதிப் பட்டார்கள், அந்த அவசர காலத்தில் கழகத்தவர்களையும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களையும் எவ்வளவு கொடுமைக்கு உள்ளாக்க அந்த இருபது அம்சத் திட்டம் பயன்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிதண்ணீர் பிரச்சனைபற்றி பலபேர் சொன்னார்கள். அண்டை மாநிலங்களுடன் முந்தைய அரசு சரியாக உறவு வைத்துக் கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களோடு கொண்டிருந்த சீரான உறவின் தன்மையினால் தான் நமது கலைஞர் அவர்கள் சிறுவாணித் திட்டத்தை கொண்டு வந்து, அந்தப் பணியைத் துவக்கினார்கள். அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனை வேகமாக நடத்தித் தரவேண்டு மென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சிறுவாணித் திட்டத்தின் மூலம் பேரூர் தொகுதியில் குடிநீர் பற்றாக்குறை யுள்ள குறிச்சி, குமாரபாளையம், குனியமுத்தூர், தெலுங்கு பாளையம் பஞ்சாயத்து குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஜூலை 8] [திரு. ஆ. நடராசன்]

அதைப்போலவே எம்.எல்.ஏ. ஆக வந்தவர்கள் சரியான முறையில் நடக்கவில்லை என்றால் அவர்களைத் திரும்பப்பெற வேண்டும் என்று இன்று ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் சொல்லி வந்தார்கள். அதைப்பற்றி கவர்னர் உரையில் ஒன்றும் இல்லை. சரியான முறையில் பணியாற்றாத சட்டமன்ற உறுப்பினர்களைத் திரும்பப்பெற விதிமுறைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மந்திரிகளைத் தொண்டர்களே தேர்வு செய்வார்கள் என்று சொன்னார்கள். இன்றையதினம் எந்த அடிப்படையில் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

கோவை மாவட்டத்தில் மூடப்பட்ட மில் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி திரு சுப்பு குறிப்பிட்டார்கள். அங்கே ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இன்றையதினம் சிறைச்சாலைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். கடந்த 1½ ஆண்டு காலமாக 20 அம்சத் திட்டத்தின்கீழ் முதலாளிகள் தங்களது லாப நோக்கில் செயல்பட்டு, ஆலைகளை மூடி, தொழிலாளர்களைப் பட்டினி போட்டு கொண்டிருந்தார்கள். அந்த நிலைமையை மாற்றுவதற்கான திட்டத்தை இந்த அரசு உடனடியாகக் கொண்டுவரவேண்டும். மூடப்பட்டிருக்கிற ஆலைகளைத் திறக்க இந்த அரசு எடுத்துக் கொள்ள இருக்கிற நடவடிக்கைபற்றி, ஆளுநர் அவர்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதில் கைதாகி இருக்கிற தோழர்களை விடுதலை செய்து அவர் களுக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

பெரியாரைப் பற்றியும், பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி யும் பாடப்புத்தகங்கள் இருந்தும், முந்தைய இருபது அம்சக் காரர்கள் அதை நீக்கிய நிலைமையையும் நாடு அறியும். இங்கே ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சொல்கிற காரணத்தால் உடனடியாக மீண்டும் அந்தப் பாடங்களைக் கொண்டுவருவதற்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்] [1977 ஜூலை 8

லஞ்சலாவண்யம் பற்றி மிக வேகமாகப் பேசினார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். திருடிக் கொண்டு ஓடுகிறவன் தெருவில் இருக்கிறவனை திருடன், திருடன் என்று சொல்லிக்கொண்டு ஓடுகிற நிலைமை. நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், இந்த மஸ்டர் ரோல் வழக்கில்; திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் இந்த வழக்கை போட்டது என்பதை உங்களுக்கு தெளிவாக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே, மதுவிலக்கை மக்களிடத்தில் பிரசாரம் மூலம் கொண்டுவரலாம் என்று சொன்னார்கள். கடந்த முப்பது ஆண்டுக் காலத்தில் இந்த பிரச்னையை பிரசாரத்தின் மூலம் காங்கிரஸ் கட்சியினரும் மற்றவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் செய்து வந்தார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் போடுகிற குழுவில் அருள்கூர்ந்து குடிக்காதவர்களைப் போட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் போடுகிற திட்டம் நல்ல திட்டம்தான். அப்படித் திட்டம் போடும்போது அதில் குடிக்கிறவர்கள் இடம் பெறுதிருப்பது நல்ல முறை என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த பென்ஷன் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், இன்றையதினம் எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எல்லைப் போராட்டத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக சட்ட விதிகளை மாற்றி பென்ஷன் கொடுப்பதற்கான, பென்ஷன் திட்டத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

அதேபோல் மிஸாவின்கீழ் இறந்து போன குடும்பங்களுக்கு உடனடியான பென்ஷன் தருவதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திட்டங்களைப் பற்றியெல்லாம் இந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்கள் தொகுதியில் இருக்கிற பாலத்துறை நீர்ப்பாசனத்திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜூலை 8] [திரு. ஆ. நடராசன்]

போனஸ் பிரச்சனையில் 8.33 சதவிகிதம் தொழிலாளர்களுக்கான
என்பதை கடந்த இருபது அம்சத் திட்ட அரசாங்கம் அதை
ரத்து செய்த முறையை மாற்றி உடனடியாக தொழிலாளர்கள்
அதைப் பெறுவதற்கு மத்திய அரசுக்கு வேண்டுகோள்
விடுக்கிற முறையில் இந்த ஆளுநர் அவர்களது உரையில் எதுவும்
இல்லாததை பணிவுடன் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கான
எனவே, இந்த ஆளுநர் உரையில் வார்த்தை
திட்டங்களையெல்லாம் போடுவோம் என்கிற முறையில்
கள் ஜாலம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர இன்னின்ன காரியங்
களைச் செய்வோம் என்ற முறையில் குறிப்பிடாததைச் சொல்லி
இந்த உரையில் இருக்கிற குறைகளை நிறைவு செய்யவேண்டும்
என்று பணிவோடு கூறி அமர்கிறேன்.

* திரு. கே. வடிவேலு : சட்டப் பேரவையின் தலைவர் அவர்களே,
நம்முடைய மேதகு கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நன்றி
தெரிவிக்கும்போது, அந்த உரை எப்படி நமது தமிழகத்திற்குப்
பயன் படக்கூடியதாகவும், எந்த வகையில் அதை நிறைவேற்றப்
போகிறோம் என்பதையும் சுருக்கமாகச் சொல்லி விளங்க வைத்
திருக்கிறார்கள். அதாவது ஒவ்வொரு பிரச்னையைப் பற்றியும்
மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் எழுத வேண்டுமென்று நினைத்
திருந்தால் இந்த பத்து பக்கம் உள்ள உரை நிச்சயமாக நூற்றுக்
கணக்கான பக்கங்கள் உள்ள உரையாக மாறி நம் சட்டமன்றத்தில்
வைக்கப்பட்டு நாம் வாதத்தையும் விவாதத்தையும் தொடுத்தால்
நமக்கு இருப்பதோ ஐந்தாண்டுக்காலம், அந்த ஐந்தாண்டுச்
காலத்தில் அந்த உரையின் மீது வாதத்தையும் விவாதத்தையும்
பேசித்தான் நாம் காலத்தைக் கழிக்கவேண்டுமே தவிர வேறு
ஒன்றும் இயலாது.

செயல்
ஆளுநர் அவர்கள் தமது உரையில் கூறியிருப்பதற்கு
வடிவம் கொடுக்கவேண்டும், செயலாற்றவேண்டும் என்பதை
அவர்கள் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகச்
சொல்லப்போனால் அவர்கள் எந்தப் பிரச்னையையும் விட்டுவிட
வில்லை என்று நான் சொல்வேன்.

உறுப்பினர்கள்
எனக்கு முன்பு பேசிய அருமை சட்ட மன்ற
பலர் சில பிரச்னைகளை விட்டு விட்டதாகச் சொன்னார்கள். பலர்,
முற்றிலும் மக்கள் [illegible] அடைந்து
[illegible]

விட்டதாகச் சொன்னார்கள். உண்மையில் ஏமாற்றம் அடைவதற்கு ஒன்றுமே இல்லை. மேதகு ஆளுநர் அவர்கள் எந்தப் பிரச்சனையை விட்டு விட்டார்கள்? நம்முடைய தமிழக மக்களுக்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதை அவர்கள் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கூறியிருப்பதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். எந்த இலட்சியத்தை அண்ணா அவர்கள் கொண்டிருந்தார்களோ அண்ணா அவர்களின் கொள்கைகளை, தத்துவங்களை செயல் வடிவமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் அவர்களது நிர்வாகத்தில் அமைச்சர்களாக அமர்ந்திருக்கிறவர்களும் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கவும் முன்னே இருந்து செயலாக்கவும் தயாராயிருக்கிறார்கள்.

இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர்கள் பகுதியில் உள்ள பிரச்சனைகளை விட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். நானும் சொல்ல வேண்டுமென்று நினைத்தால் எங்கள் கரூர் தொகுதியில் உள்ள நொய்யலாறு திட்டம் என்பது கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக அது பேச்சளவில், ஏட்டளவில் இருக்கிறதே தவிர இன்னும் அதற்கு செயல் வடிவம் கொடுக்கவில்லை. உண்மையிலே அந்த நொய்யலாறுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஏறத்தாழ 20,000, 30,000 ஏக்கர்கள் நிச்சயமாக பயிர் செய்யப்பட்டு, விவசாயம் செய்யப்பட்டு மக்களுக்கு நல்ல முறையில் உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்யலாம். அந்த நொய்யலாறு என்பது காட்டாறு போன்றது. திடீரென்று மழை பெய்தால் தண்ணீர் வரும். அது காவிரியில் கலந்து கடைசியாக கடலில் போய் சேர்ந்துவிடுகிறது. அந்தத் தண்ணீரைத் தேக்கி ஒரு அணை கட்டினால் நிச்சயமாக இருபதாயிரம் ஏக்கர்கள் சாகுபடி செய்யலாம். அத்திட்டம் கவர்னர் அவர்களது உரையில் இல்லையே என்று நான் வருத்தப்படவில்லை. நீர்ப்பாசன வசதி என்று சொல்லும்போது அதுவும்தான் சேரும். ஆகவே நீர்ப்பாசன வசதி என்று சுருக்கமாகச் சொல்லி விட்டார்கள். நீர்ப்பாசன வசதிகள் செய்வோம் என்று சொல்லி விட்டால் அத்திட்டமும் அதில் அடங்கியிருக்கிறது.



பெரியாறு திட்டம் பற்றி குறிப்பிடவில்லை, பம்பையாறு திட்டம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் நீர்ப்பாசன வசதிகள் என்று சொல்லி விட்டாலே எல்லாம் அதில் அடங்கும். நீர்ப்பாசன வசதிகள் என்று சொல்லிவிட்டாலே ஒவ்வொரு உறுப்பினருடைய தொகுதியிலுமுள்ள ஆற்றுப் பிரச்னைகள், வாய்க்கால் பிரச்னைகள் இவை எல்லாம் அதில் அடங்கும். அதல்லாது தனியாக நொய்யலாறு, பம்பையாறு, பெரியாறு என்று எழுதினால் நிச்சயமாக கவர்னர் அவர்களது உரை நூறு பக்கங்களுக்கு மேல் போய்விடும். அதை வைத்து விவாதித்தால் நமது சட்ட மன்றத்தின் ஐந்து ஆண்டுக் காலத்தில் இதைத்தான் விவாதித்துக் கொண்டிருக்கவேண்டும்.

அடுத்து, நெசவாளர் பிரச்னை. நெசவாளர்களுக்கு நமது ஆட்சி நிச்சயமாக நன்மை செய்யும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எந்தெந்த வழியில் நன்மை செய்யப்படும் என்றால், அதற்கு பொறுப்பேற்க அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அதற்கு நிச்சயமாக செயல் வடிவம் கொடுத்து வேண்டியதைச் செய்வார்கள். இன்னின்ன வகைகளில் செய்வது அல்லது செய்ய வேண்டும் என்பது அவர்களது பொறுப்பு. நெசவாளர் பிரச்னை என்பது ஒரு பொதுவான பிரச்னை. கரூரில் நெசவாளர்கள் உண்ண உணவு கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றிருக்கக் கூடிய நூல் விலையை குறைக்கவேண்டும் என்று சொன்னால் நமது அரசாங்கத்திடம் அதிகாரம் இல்லை. மத்திய அரசுதான் அதைக் குறைக்கவேண்டும். அதைக் குறைப்பதற்கு மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

எந்த ஒரு பிரச்னையை எடுத்துக்கொண்டாலும் சரி. உதாரணத்திற்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். எங்கள் ஊரில் சென்ற ஆட்சியில் ஒரு கோவில் கட்டப்பட்டு அது பாதியில் நின்றுவிட்டது. அந்தப் பிரச்னைப் பற்றி கவர்னர் அவர்களது உரையில் ஏதும் இல்லையே என்று நான் சொல்லலாம். எங்கள் ஊரில் ஒரு கிணறு வெட்டினார்கள், அது பாதியில் நின்று விட்டது, அதுபற்றி கவர்னர் அவர்களது உரையில் ஏதும் இல்லையே என்றால் என்ன சொல்வது? இந்த உரையைப்போல் நிச்சயமாக எந்த உரையுமே இருந்திருக்காது. காரணம்,

கவர்னர் அவர்கள் ஒரு இடத்தையும் விடாமல் ஒவ்வொரு இடத்திலும் சொல்லவேண்டிய இடத்தில் சுருக்கமாகச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்கள். அந்த விளக்கங்களுக்கு செயல் வடிவம் தருவது எங்கள் அமைச்சரவை எடுக்கக்கூடிய முடிவு. இது இல்லை, அது இல்லை என்று சொல்லி எங்களுடைய உடன் பிறப்புகளை, உறுப்பினர்களை திசை திருப்பிக் கொண்டு போக நினைத்தால் அது நிச்சயமாக நடக்காது. இது போன்றதொரு கவர்னர் உரையை நான் பார்த்ததேயில்லை, நீங்களும் நிச்சயமாக பார்த்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்த உரை பற்றி உங்கள் கருத்தைச் சொல்லக்கூடும். வாதம் இருந்தால் விவாதம் ஏற்படும். சட்டசபையில் வாதத்தை ஆரம்பித்தால் அது விவாதமாகப் போய்விடும். ஆகவே, இந்த உரைபற்றி குறை சொல்லவேண்டாம். இப்படி செயல்வடிவம் கொடுங்கள், இப்படி நிறைவேற்றுங்கள், இப்படிச் செய்யுங்கள் என்று சொன்னால் நிச்சயமாக எல்லோருடைய ஒத்துழைப்புடனும் தமிழக மக்களுக்கு மிக மிக நன்மைகள் செய்யலாம்.

அடுத்து, இங்கே சென்னை மாநகராட்சி தேர்தல் சம்பந்தமாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் உண்மையில் வரவேற்கிறேன். சர்க்காரியா கமிஷன் விசாரணையும் மாநகராட்சியின் மஸ்டர் ரோல் வழக்கும் நிச்சயமாக இரண்டும் வேறுபட்டது. சர்க்காரியா கமிஷனில் ஒருவர் குற்றவாளியா இல்லையா என்பதைத்தான் சொல்ல முடியுமே தவிர அந்த வழக்குமன்றத்திற்கு தண்டனை கொடுக்க அதிகாரம் இல்லை. மஸ்டர் ரோல் வழக்கில் ஒருவர் குற்றவாளி என்று சொல்லி அவருக்கு தண்டனை கொடுக்கக்கூடிய அதிகாரம் உண்டு. நமது அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவாகச் சொன்னார்கள். இரண்டிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இரண்டும் வெவ்வேறு, தனிப்பட்டவை. ஆகவே அதையும் இதையும் ஒன்றாகச் சேர்த்து ஏன் சட்டமன்றத்திற்கான தேர்தலை தள்ளி வைத்திருக்கக்கூடாது என்று கேட்பது எங்களுக்கு உண்மையில் விந்தையாக இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

அடுத்து சொல்லப்போனால், குற்றவாளி யார் யார் என்று சொல்லிவிட்டால் அவர்கள் தண்டனையை அனுபவிக்க தயாராக இருக்கவேண்டும். மஸ்டர்ரோல் வழக்கு நடந்து கொண்டிருக்



கிறது. யார் யார் குற்றவாளி என்பதை இதில் தெரிந்து கொள்ள வேண்டும். இதை தெரிந்த பின்னால் மாநகராட்சிக்கு தேர்தல் வைப்பது தான் நல்லது, ஆகவே தேர்தலை தள்ளி வைத்திருப்பது எல்லோருக்கும் நல்லது, நாட்டு மக்களுக்கும் நல்லது. யார் யார் குற்றவாளி என்பதை எல்லோரும் தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டும். மக்களுடைய தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதற்கு இணங்க, இதற்குப் பின்னால் தேர்தல் நடத்துவது தான் சரி என்ற நினைப்பில், நம்முடைய மேதகு கவர்னர் அவர்கள் தேர்தலை தள்ளி வைத்திருப்பது, வரவேற்கத்தக்க தொன்றாகும், என்ற என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று நியாய விலைக்கடைகளை எடுத்துக்கொண்டால், இப்போது இருக்கின்ற கடைகள் 9,300, இது போதாது என்று கருதி, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும், கிராமம் என்று சொன்னால் ஆங்கிலத்தில் வில்லேஜ் என்று சொல்லுவார்கள். . . இவ்விதம் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு நியாயவிலைக் கடை ஏற்படுத்துவது மிகவும் நல்ல விஷயமாகும். ஒவ்வொரு நியாயவிலை கடையும் நல்லமுறையில் நடைபெறுகிறதா என்று கவனிக்கவேண்டிய பொறுப்பு ஆளும் கட்சிக்கு இருக்கிறது. எந்தெந்த பொருட்கள் கிடைக்கவில்லை, எந்தெந்த பொருட்கள் தேவை என்பதை அமைச்சர்கள் பார்த்துக் கொள்வார்கள். இதைப்பற்றியும் சில உறுப்பினர்கள் குறை சொன்னார்கள். கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள். "ஆகாத பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம்" என்று. ஆகவே குறை சொல்லுகின்ற அருமை நண்பர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களைப் பொறுத்த வரையில். . .

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆஃப் ஆர்டர், இப்போது கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நடந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற உதாரணங்களை சொல்லும் போது, நாங்களும் அது போல் பேச வேண்டியிருக்கும். அது எங்கள் தலையெழுத்து. ஆகவே இதுபோன்ற விவாதங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது, இப்படிப்பட்ட அசிங்கமான, தரக்குறைவான உதாரணங்களை எடுத்துக் கூறவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும். . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** உறுப்பினர்களுடைய கன்னிப் பேச்சில் தலையிடுவது, குறுக்குடுவது மரபு அல்ல.

**திரு. மு. அரங்கநாதன் :** நான் பேசும்போதும் கன்னிப் பேச்சு தான். அப்போது மட்டும் அமைச்சர் அவர்கள் எப்படி தலையிட்டார்கள் . . . . .

**திரு. எஸ். ஆர். இராதா :** கனம் உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சை வைத்துத்தான் கன்னிப் பேச்சா இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். திரு. அரங்கநாதன் அவர்கள் கன்னி கழிந்தவர். அதனால் தான். . .

**திரு. மு. அரங்கநாதன் :** கனம் உறுப்பினர் அவர்கள் எனக்கு கன்னி கழிந்தாகிவிட்டது என்று சொல்லுகிறார்கள். எனக்கு மணப் பெண் ஏதாவது பார்த்து வைத்திருக்கிறார்களா. . .

**திரு. க. சுப்பு :** புதியவர்களாக இருந்தாலும் சரி, பேச்சில் தரம் இருக்க வேண்டும், ரொம்ப தரம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை, இருந்தாலும் ஓரளவுக்காவது இருக்க வேண்டும். . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** முதலாவது பேசும் கன்னிப் பேச்சில், எதை எதைப் பேச வேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கின்றது. குற்றச்சாட்டுகளை கூறக்கூடாது. ஜனாதிபதி போன்றவர்களைப்பற்றி பேசக்கூடாது என்று பொதுவாக ஏற்கனவே பல விதிமுறைகள் இருக்கின்றன. இவை தவிர மற்றவைகளைப்பற்றி பேசலாம்.

**திரு. மு. அரங்கநாதன் :** அவைத் தலைவர்கள் அவர்களே, இந்த விதிமுறைகளையொட்டித்தான் பொதுவாக நான் பேசினேன். அப்போது மட்டும் அமைச்சர் அவர்கள் எப்படி குறுக்கிட்டார்கள் என்பது தெரியவில்லை . . . .

**திரு. கே. வடிவேலு :** தரக்குறைவாக பேச வேண்டும் என்று எண்ணி பேசியோ, யாரையாவது தாக்கிப் பேசியோ, தாழ்த்திப் பேசியோ, இங்கே வரவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. குடும்பங்களில் சாதாரணமாக சொல்லக்கூடிய உதாரணத்தை வைத்துத்தான் நான் இதைச் சொன்னேன். . .





**திரு. மு. கருணாநிதி :** விளக்கம் மட்டும் சொல்ல விரும்பு கிறேன். குறுக்கிடவில்லை. இங்கே நடைபெற்றுக்கொண் டிருப்பது, கவர்னர் உரைமீது விவாதம். ஆகவே "ஆகாத பெண்டாட்டி" என்று சொன்னால் இது கவர்னர் உரையைத்தான் குறிப்பிடும். . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இங்கு 'ஆகாத பெண்டாட்டி' என்று சொல்வது எதிர்க்கட்சியைப்பற்றி தான். ஆகாத பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம் என்று சொல்லுவார்கள். அதுபோல் எதிர்க்கட்சிக் காரர்கள் எதற்கெடுத்தாலும் குறை சொல்லிக் கொண்டிருப் பார்கள் என்பதை சொல்லுவதற்காகத்தான் இதைச் சொன்னார்கள். வேறு எதுவுமில்லை.

**திரு. மு. கருணாநிதி :** நாம் இங்கே கவர்னர் உரை மீது தான் குறைகளை கூறிக் கொண்டிருக்கிறோம். ஆகவே 'ஆகாத பெண்டாட்டி' என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. கே. வடிவேலு :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் கூறியது போல், நான் குறிப்பிட்டது எதிர்க்கட்சியைத்தான் குறிப்பிடும் என்று சொன்னது உண்மைதான். பொதுவாக சொல்லக்கூடிய கருத்துக்களை சொல்லப்போனால், இங்கே கை தட்டக்கூடாது, பலகைமேல் தான் தட்ட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள்.

**திரு. க. சுப்பு :** இதைப்பற்றி தலைவர் அவர்களே, சொல்லி விட்டார்கள். . .

(மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேலு, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்களைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் சபைத் தலைவரைப் பார்த்துப் பேசவேண்டும், உறுப்பினர்களைப் பார்த்து பேச வேண்டிய தேவையில்லை.

**திரு. கே. வடிவேலு :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்முடைய மேதகு கவர்னர் அவர்களின் உரை நாம் மட்டுமல்ல, உண்மையில் நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டக்கூடிய ஒன்று

தான். வாழ்த்தக் கூடியதொன்றுதான். இது போன்ற உரையை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை, இது போன்று சுருக்கமாகச் சொல்லி, தெளிவாக விளக்கக்கூடிய உரைக்குச் செயல்வடிவம் ஏற்படும்போது, தமிழகத்திற்குக் குறைகள் ஏற்படாது என்று நிச்சயமான நம்பிக்கை மக்களுக்கு ஏற்படும் என்று கூறிக் கொண்டு, இங்கு பேச வாய்ப்பு தந்தமைக்கு பேரவைத் தலைவருக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். அப்போது அரசினர் மசோதாக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.27 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

1. Seventeenth Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1973–74 (English and Tamil). [Laid on the Table of the House under section 75 (1-A) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

### B. *Reports, Notifications and other papers.*

*1. Governor's Address to the Members of the Legislature on 7th July 1977. (English and Tamil).

*Circulated to Members on 7th July 1977.

## APPENDIX I

*Wide* footnotes on page 13

[Address by the Governor of Tamil Nadu]

Menmaithangiya Sattamandra Uruppinargale!

Honourable Members of the Legislature,

I would like to congratulate all of you on your success in the elections and extend my best wishes to you for an active and fruitful tenure of service as Members of this Legislature. May you serve our people to the best.

2. We mourn the loss on this occasion of our wise and beloved late President Thiru Fakruddin Ali Ahmed who was a symbol of secularism. Our sincere and heartfelt condolences are due to Begum Abida Ahmed.

3. It is a matter of great satisfaction and relief that seventeen months of the President's rule have ended in Tamil Nadu with a popular Government elected on the basis of free and fair elections to the Assembly. The peaceful and orderly manner in which the elections were contested by various parties and were conducted by the State administration deserve our appreciation. In these elections the people of the State have given a clear and categorical mandate. This mandate strenghtens our faith in the traditions of Parliamentary democracy and provides the basis for a strong and stable Government in Tamil Nadu.

4. My Government considers it as its first task to provide a clean and competent Government to the people of Tamil Nadu who have elected it to power and to root out corruption at all levels. Along with integrity and ability, the administration will also be responsible and responsive to the legitimate aspirations of the people. In many regulatory aspects of Government, the poorer and weaker sections of the people continue to encounter delay and difficulty in securing simple justice in administrative and judicial forums. The new Government will give special emphasis to the provision of free legal aid to the poor. In our efforts to root out

corruption, waste and arbitrariness, we should remember that in this matter, as in others, prevention is to be preferred to cure. Administrative procedures and arrangements need to be streamlined so as to reduce and eliminate the scope for corruption, waste and misuse of power. The vigilance effort will, therefore, be increasingly pursued as an integral part of administrative reform. Similarly, in the development and welfare efforts of the State, the Government will be fully attentive and sympathetic to the grievances, demands and the rising expectations of all sections of the people and of people in all parts of the State with special emphasis on the betterment of the weaker sections and the more backward areas. In all activities of Government, whether they are regulatory or developmental, it will be our aim to insulate the administration from fear or favour. Impartial justice and consideration will be available to all irrespective of caste, creed or political affiliation.

5. In the Union of India, ties between the Centre and the States and between one State and another have become not only closer but also more complex. The assurance given by the Prime Minister that the Centre will maintain cordial and impartial relations with all the State Governments regardless of their political persuasion is welcome. In turn, my Government will extend its, constructive co-operation, based on Anna's philosophy, to the Centre in their efforts for building up a democratic, socialistic and prosperous India on Gandhian lines. At the same time, we shall take every opportunity to strongly advocate the claims of Tamil Nadu, whether they relate to polical, cultural, economic or linguistic issues, with a view to ensure that the legitimate rights and interests of our State and of our people obtain due recognition and response from the Centre. We also welcome the Prime Minister' assurance that States will be given more powers so as to strengthen the economic structure of the Indian Union. It is now being increasinly recognised tha the Centre can be strong only if the States are also strengthened. We trust that the imbalances in our federal Constitution in this regard will be rectified at an early date through appropriate Constitutional amendments and we shall support all eforts in this direction. We are also confident that with more powers we can make rapid progress in our efforts for improving the development and welfare of Tamil Nadu.



6. Our relations with neighbouring States, particularly in regard to drinking water, irrigation and power, are such that mutual co-operation should be continuously fostered. Unfortunately, this has not always happened in the past and it will be the policy of my Government to promote such co-operation on the basis of mutual goodwill, understanding and benefit.

7. It will be the firm policy of my Government to implement the two-language formula which was enunciated by our late Chief Minister Anna and unanimously approved by this august Assembly. This formula fully represents and reflects the wishes of the people of Tamil Nadu. We shall pay special attention to the development of Tamil in all its aspects. Encouragement will be given to the study of Tamil in other States. Necessary funds will be allotted for preservation and research relating to Tamil literature, art, archaeology and history. A programme for the translation and publication in Tamil of classical and contemporary books in other languages will be undertaken. Government assistance will be provided to indigent Tamil scholars.

8. The agricultural year which has ended was one that caused concern mainly because of the failure of the South-West monsoon in the catchment areas and the difficulties that were experienced in the Cauvery delta. However, several remedial steps were undertaken by the Agriculture department and these efforts met with the full co-operation of our alert and enterprising ryots throughout the State and particularly in the Cauvery delta. In the coming season, we shall take necessary steps to ensure that agriculturists are provided with adequate and timely irrigation supplies.

9. The food position in Tamil Nadu is quite comfortable and we are confident that there will be no problem of shortages in the coming few months. The Government have adequate stocks of rice to maintain the public distribution system. There is also easy availability of rice in the open market at fairly reasonable prices. Our millets position is also quite comfortable and prices are reasonable. The increase in the prices of groundnut oil and other edible oils has been causing us some concern. We are keeping a close watch over the price trends and the Government will take appropriate action as will be necessary if any situation of scarcity is artificially created or if prices go up abnormally. The problem of edible oils, however, is not confined to our State alone; it is an all-India phenomenon and has to be tackled on a countrywide basis.

10. The objective of the Government will be to ensure a remunerative price for the grower and a reasonable price for the consumer by eliminating the scope for explolation by middle men. The policy which will be followed by this Government will neither by purely producer-oriented nor consumer-oriented, but essentially people-orierted and will aim at reconciling the interests of the producer and the consumer.

11. It will be my Government's endeavour to build up a network of retail points in the public sector including the Co-operative sector, to ensure equitable distribution of essential commodities at reasonable prices. There are now nearly 9,300 fair price shops distributing rice, wheat and levy sugar at controlled prices. We propose to extend the scheme of fair price shops, so that each of say about 16,000 revenue villages will have at least one fair price shop in the village itself. It will also be our aim to see that these fair price shops not only deal in the commodities under the public distribution system but also in other essential commodities like coarse grains, dhalls, edible oils, tamarind and chillies so that supply of these can be assured to the public at reasonable prices.

12. The next session of the Legislature will be the Budget session and you will have an opportunity at that time to consider in detail the concrete measures, schemes and projects of the new Government. I shall on this occasion confine myself in outlining the main policies and programmes which the Government will place before itself.

13. It is a matter of regret that, as revealed in a recent study, the proportion of people living below the poverty line in Tamil Nadu has increased during two and a half decades of planned development and has reached the high level of 59 per cent in 1974. The removal of poverty and unemployment will be the twin principal objectives of our Government and indeed today they are National objectives. Every scheme we undertake will have to stand the test whether it will help in reducing poverty and in promoting employment.

14. Villages are the backbone of our Nation's life and economy. Seventy per cent of the people in our State live and work in the rural areas. It is necessary to have a multi-pronged and integrated approach to rural development based on agriculture, irrigation, agro-based and other small-scale industries,



cottage and village industries, rural housing, trade, transportation and rural electrification. In the production of agricultural inputs such as seeds, fertilisers and pesticides and of mass consumption goods such as textiles, the rural people should obtain direct benefits through greater employment and increased incomes. At the same time, their living conditions should be improved with the provision of basic minimum needs such as drinking water, mass literacy, educational and health facilities, house-sites and housing and good communications. All-round rural development on these lines will be the main emphasis of the new Government.

15. It is regrettable that despite substantial expenditures in the Plans, a most essential need such as drinking water supply in rural areas is still substantially inadequate. It is welcome that a special provision has been made in the Central Budget to assist States in meeting this need. We shall increase our own allocations for the sector and shall announce a concrete time-bound plan of action in the Budget to effectively tackle this problem. It is also a matter of regret that despits substantial expenditure on the Veeranam project, no solution is yet in sight for solving the drinking water shortage in Madras City. We shall immediately review this problem and take all necessary steps to remedy the situation. In particular, with the co-operation of neighbouring States, we shall expedite the Krishna water project.

16. Programmes for providing substantial employment in rural areas in the off-season for unskilled labour will be formulated and implemented. These programmes will be linked to the creation and maintenance of lasting assets such as medium and minor irrigation sources, roads, housing, educational and other community facilities, soil conservation and provision of drinking water supply. The educational system will be increasingly vocationalised based on detailed surveys of technical and industrial opportunities in each district. Vocational education along with larger investments will result in better employment opportunities in urban and semi-urban areas. With assistance from the commercial banks, special emphasis will be given for increasing opportunities for self-employment especially among the rural artisans, other weaker sections of the people and small entrepreneurs. The traditionally disadvantaged sections of our society such as Scheduled

10. The objective of the Government will be to ensure a remunerative price for the grower and a reasonable price for the consumer by eliminating the scope for exploitation by middle men. The policy which will be followed by this Government will neither by purely producer-oriented nor consumer-oriented, but essentially people-oriented and will aim at reconciling the interests of the producer and the consumer.

11. It will be my Government's endeavour to build up a net-work of retail points in the public sector including the Co-operative sector, to ensure equitable distribution of essential commodities at reasonable prices. There are now nearly 9,300 fair price shops distributing rice, wheat and levy sugar at con-trolled prices. We propose to extend the scheme of fair price shops, so that each of say about 16,000 revenue villages will have at least one fair price shop in the village itself. It will also be our aim to see that these fair price shops not only deal in the commodities under the public distribution system but also in other essential commodities like coarse grains, dhalls, edible oils, tamarind and chillies so that supply of these can be assu-red to the public at reasonable prices.

12. The next session of the Legislature will be the Budget session and you will have an opportunity at that time to con-sider in detail the concrete measures, schemes and projects of the new Government. I shall on this occasion confine myself in outlining the main policies and programmes which the Government will place before itself.

13. It is a matter of regret that, as revealed in a recent study, the proportion of people living below the poverty line in Tamil Nadu has increased during two and a half decades of planned development and has reached the high level of 59 per cent in 1974. The removal of poverty and unemployment will be the twin principal objectives of our Government and indeed today they are National objectives. Every scheme we undertake will have to stand the test whether it will help in reducing poverty and in promoting employment.

14. Villages are the backbone of our Nation's life and eco-nomy. Seventy per cent of the people in our State live and work in the rural areas. It is necessary to have a multi-pronged and integrated approach to rural development based on agricul-ture, irrigation, agro-based and other small-scale industries,



cottage and village industries, rural housing, trade, transporta-tion and rural electrification. In the production of agricultural inputs such as seeds, fertilisers and pesticides and of mass con-sumption goods such as textiles, the rural people should obtain direct benefits through greater employment and increased in-comes. At the same time, their living conditions should be improved with the provision of basic minimum needs such as drinking water, mass literacy, educational and health facilities, house-sites and housing and good communications. All-round rural development on these lines will be the main emphasis of the new Government.

15. It is regrettable that despite substantial expenditures in the Plans, a most essential need such as drinking water supply in rural areas is still substantially inadequate. It is welcome that a special provision has been made in the Central Budget to assist States in meeting this need. We shall increase our own allocations for the sector and shall announce a concrete time-bound plan of action in the Budget to effectively tackle this pro-blem. It is also a matter of regret that despits substantial expen-diture on the Veeranam project, no solution is yet in sight for solving the drinking water shortage in Madras City. We shall immediately review this problem and take all necessary steps to remedy the situation. In particular, with the co-operation of neighbouring States, we shall expedite the Krishna water project.

16. Programmes for providing substantial employment in rural areas in the off-season for unskilled labour will be formu-lated and implemented. These programmes will be linked to the creation and maintenance of lasting assets such as medium and minor irrigation sources, roads, housing, educational and other community facilities, soil conservation and provision of drinking water supply. The educational system will be increasingly vocationalised based on detailed surveys of tech-nical and industrial opportunities in each district. Vocational education along with larger investments will result in better employment opportunities in urban and semi-urban areas. With assistance from the commercial banks, special emphasis will be given for increasing opportunities for self-employment especially among the rural artisans, other weaker sections of the people and small entrepreneurs. The traditionally disadvantaged sections of our society such as Scheduled

Castes and Tribes, handloom weavers, fishermen and women will receive special support and assistance from the State. In their case, economic progress and social emancipation are interlinked. The Government will devise and implement suitable schemes to redress the disabilities suffered by these large sections of the community.

17. Investments on Power development and on increasing major, medium, minor irrigation and ground water utilisation will receive immediate and continuous attention. In doing so, existing capacities will be utilsed to the maximum, new investments expedited and economics achieved in the use of power and water.

18. We are committed to the policy of Prohibition. It has great benefits for the people. Women and the younger generation are particularly affected by the evils of drinking. It also leads to anti-social activities in many spheres enabling anti-social elements to violate economic discipline and social norms. It shall be the effort of the new Government to educate public opinion while pursuing legal measures for the strict enforcement of Prohibition.

18-a. Elections to the local bodies have not been held as per schedule. As soon as the muster roll case is disposed of, elections to the Madras Corporation will be held. The public feel that there are numerous defects in the electoral rolls. In view of this, elections to the Madurai Corporation, Municipalities and Panchayats will be held when the task of correcting and setting right the electoral rolls is completed. Besides, it is my Government's desire that the Chairmen of Panchayat Unions and Municipalities should also be elected directly by the people as in the case of Presidents of Panchayats. Necessary legislation for this purpose will be brought before the House very shortly.

19. We recognise that all our efforts for economic progress should be fitted into and form part of a larger and long-term development programme. The planning process in Tamil Nadu has unfortunately fallen into a state of suspense. The new Government will revive the State Planning Commission as soon as possible and entrust it with the formulation of a detailed and comprehensive Sixth Five-Year Plan. The long-term Plan should not only be technically sound and financially feasible but



also be able to mobilise popular understanding, participation and support. In the planning process, the Government will seek to involve local people at the block, taluk and district levels so that the Plan fully reflects the felt needs and aspirations of the people and takes into account the resources available in terms of men and material at all levels.

20. Honourable Members, your present session will be a short one in which you will have to attend to only immediate legislative work which cannot be postponed. In this and in the coming sessions, I would appeal to all sections of this House to rise above the heat and controversy of the election campaign from which you have just emerged. The deliberations of this House should be conducted in its traditional spirit of dignity, decency and decorum with constructive co-operation from the Opposition and an impartial approach from the Government to all sections of the House. I have no doubt that given such a spirit of common purpose which subjects sectional interests to the larger objective of promoting the growth and welfare of Tamil Nadu, this House will be able to discharge the high responsibilities which the Electorate has placed on it. I commend you to your tasks and wish you all success and a bright future.

Vanakkam– (cheers).

## இணைப்பு—II

[91 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப் பெற்ற ஆளுநர் உரையின் தமிழாக்கம்)

மேன்மை தங்கிய சட்டமன்ற உறுப்பினர்களே,

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று வந்துள்ள உங்கள் அனைவரையும் பாராட்டி வரவேற்கிறேன். நீங்கள் அனைவரும் சட்டமன்றத்தில் ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் பணியாற்றுமாறு வேண்டி என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு அருஞ்சேவை புரிவீர்களாக!

2. இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த, நமது பேரன்புக்கு உரிய அறிவுசால் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களின் மறைவு பற்றி இத்தருணத்தில் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் மதச் சார்பற்ற இலட்சியத்தின் சின்னமாக விளங்கினார். பேகம் அபீதா அகமது அவர்களுக்கு நமது மனமார்ந்த இரங்கலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

3. தமிழ்நாட்டில் 17 மாத காலம் நீண்ட, குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, அச்சமற்ற, நேர்மையான தேர்தல் நடத்தப் பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இன்று மலர்ந்திருக்கிறது. இது நம் அனைவருக்கும் ஆறுதலையும் பெரு மகிழ்ச்சியையும் அளிப்பதாக இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் அமைதியாகவும் ஒழுங்காகவும் தேர்தல் நடைபெறப் பாடுபட்ட வெவ்வேறு அரசியல் கட்சியினரின் ஒத்துழைப்பும் அரசின் செயல்திறனும் பாராட்டுக்கு உரியனவாகும். நடைபெற்ற தேர்தலில், நம் மாநில மக்கள் தங்கள் முடிவைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்துள்ளார்கள். இது மக்களாட்சி மரபுகளின்மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையை உறுதிப் படுத்துவதுடன், தமிழ்நாட்டில் வலுவுள்ள, நிலையான அரசாங்கம் அமையும் வாய்ப்பினை அளித்துள்ளது.

4. எனது அரசாங்கம், தன்னை ஆட்சிக்குத் தேர்ந்தெடுத்துள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு நேர்மையும் திறமையும் கொண்டதோர் ஆட்சி வழங்குவதையும் எல்லா நிலைகளிலும் லஞ்ச ஊழலைக் களைவதையும் தன் தலையாய கடமையாகக் கருதுகிறது.

நாணயத்துடனும், திறமையுடனும் செயல்படுவதோடு, இந்த அரசாங்கம், மக்களின் நியாயமான வேண்டுகோள்களுக்குப் பரிவுடனும் பொறுப்புடனும் செவிசாய்த்துப் பணிபுரியும். அரசாங்கத்தின் பல்வேறு ஒழுங்குமுறை நடவடிக்கைகளில், நிர்வாக அமைப்புகளிலும் நீதிமன்றங்களிலும் ஏழை எளிய மக்களுக்கு நியாயம் கிடைப்பதில் தடங்கல்களும் தாமதங்களும் உள்ளன. இந்நிலை மாறி, ஏழைகளுக்கு நியாயம் கிடைக்க இலவச சட்ட உதவி வழங்குவதற்கு இந்த அரசு சிறப்பு கவனம் செலுத்தும். நிர்வாகத்தில் லஞ்ச ஊழல், வீண் விரயம், பார பட்சம் ஆகியவற்றைக் களையும் முயற்சிகளில், வந்தபின் பரிகாரம் தேடுவதைவிட வருமுன் காப்பதே ஏற்ற முறையாகும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். லஞ்ச ஊழல், வீண் விரயம் தலைகாட்டாவண்ணமும், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த முடியாத வகையிலும், நிர்வாக நெறிமுறைகளையும் செயல் முறைகளையும் சீரமைக்க வேண்டியது அவசியமாகும். இந்த அடிப் படையில், லஞ்சத் தடுப்பு நடவடிக்கைகள், நிர்வாகச் சீர்திருத் தங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக மேற்கொள்ளப்படும். அதே போல, வளர்ச்சித் திட்டங்களையும், நல்வாழ்வுத் திட்டங்களையும், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த பலதரப்பட்ட மக்களின் மனக்குறைகள், தேவைகள், வளரும் எதிர்பார்ப்புகள் இவை அனைத்தையும் முழு அனுதாபத்துடன் கவனித்துச் செயல் படுத்துவோம். குறிப்பாக, இந்த முன்னேற்றத் திட்டங்களில் சமுதாயத்தின் அடித்தள மக்கள், பிற்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் ஆகியவர்களுக்குத் தனிக் கவனம் அளிக்கப்படும். அரசு நடவடிக்கைகள் அனைத்திலும்—அவை ஒழுங்குமுறை நடவடிக்கைகளாயினும் வளர்ச்சி நடவடிக்கைகளாயினும்— அச்சத்திற்கும், தாட்சண்யத்திற்கும் ஆட்படாமல் நிர்வாகம் செயல்பட வேண்டும் என்பதே எங்கள் கொள்கை. மக்கள் அனைவருக்கும், அவர்கள் சாதி, சமய, கட்சி சார்பு எதுவாயிருப்பினும், நியாயமும் நன்மையும் பாரபட்சமற்ற முறையில் கிடைக்கும்.

5. இன்றைய நிலைமையில் இந்தியக் குடியரசில் மத்திய— மாநில உறவும், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் உள்ள தொடர்பும், நெருங்கியதாக மட்டுமல்லாமல், பிரச்சினை களுக்கு இடங்கொடுப்பதாகவும் உள்ளன. பாரதப் பிரதமர் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள தொடர்பு,

கட்சிப் பற்றற்ற தோழமை முறையில் அமைந்திருக்குமென உறுதி கூறியுள்ளதை வரவேற்கிறோம். எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங் கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் அண்ணாவின் கொள்கை வழி நின்று ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென உறுதி கூறுகிறேன். அதே நேரத்தில், தமிழ் நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார, மொழிப் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவோம். அதன் மூலம் தமிழ் நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவிசாய்த்துச் செயல்பட ஆவன செய்வோம். இந்திய யூனியனின் பொருளாதார அமைப்பை வலுப்படுத்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படுமென்று பாரத பிரதமர் உறுதியளித்திருப்பதையும் வரவேற்கிறோம். மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன் மூலம், தமிழ்நாட்டினை வளங்கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காண முடியுமென நம்புகிறோம்.

6. அண்டை மாநிலங்களுடன் நமது உறவுகள், குறிப்பாக, குடிதண்ணீர், பாசன, மின் வசதிகளைப் பொறுத்தவரை, பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில், நல்லவிதமாகத் தொடர்ந்து பேணப்பட வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, கடந்த காலத்தில் இந்த உறவுகள் எப்போதும் சீராக இருந்தன என்று சொல்ல முடியாது. நல்லெண்ணம், புரிந்து கொள்ளும் தன்மை, பொதுப் பயன் இவற்றின் அடிப்படையில் இந்த உறவைப் பேணி வளர்ப்பது எனது அரசின் கொள்கையாக இருக்கும்.

7. அமரர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப் பேரவையால் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதே எனது



அரசாங்கத்தின் உறுதியான கோட்பாடாக இருக்கும். இந்த இருமொழிக் கொள்கை தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தை அப்படியே பிரதிபலிக்கிறது. எல்லாவகையிலும் தமிழை வளர்க்கச் சிறப்பு நாட்டம் செலுத்துவோம். பிற மாநிலங்களில் தமிழ் பயிலுவதற்கு ஊக்க உதவி அளிக்கப்படும். தமிழ் இலக்கியம், கலை, வரலாறு, தொல்பொருள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அவசியமான நிதி ஒதுக்கப்படும். பிற மொழிகளில் வெளிவந்துள்ள பண்டைய இலக்கியங்களையும், பல்வேறு துறைகளிலும் வந்துள்ள தற்கால நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும். வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு அரசு நிதி உதவி செய்யும்.

8. இப்போது முடிவடைந்துள்ள விவசாய ஆண்டு, தமிழ் நாட்டு மக்களுக்கு கவலையளித்துள்ளது. நீர்கோள் பகுதிகளில் தென்மேற்குப் பருவக்காற்றின் மூலம் போதுமான மழை பெய்யவில்லை. மேலும், காவிரிப் பகுதிகளில் பல இடர்ப்பாடுகள் இருந்தன. இருப்பினும், இதனால் விளையக்கூடிய உற்பத்திக் குறைவைத் தடுக்கும் வகையில் வேளாண்மைத்துறை உரிய நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளுக்கு விழிப்புணர்ச்சியும், செயல்திறனும்கொண்ட விவசாயப் பெருமக்கள் இம் மாநிலம் முழுவதிலும், சிறப்பாகக் காவிரி கழிமுகப் பகுதிகளில் ஒத்துழைப்பு நல்கியது குறிப்பிடத்தக்கது. அடுத்து வரும் பயிரிடு காலத்தில், விவசாய மக்களுக்குப் பாசன வசதி, போதிய அளவிலும் உரிய காலத்திலும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்போம்.

9. தமிழ்நாட்டின் உணவு நிலை திருப்திகரமாக இருக்கிறது. அடுத்து வரும் மாதங்களில் பற்றுக்குறை ஏதும் இராது என்ற நம்பிக்கையும் இருக்கிறது. பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப அரிசி கையிருப்பும் போதுமானதாக உள்ளது. தனியார் கடைகளில் அரிசி பெரும்பாலும் நியாயமான விலையில் எளிதாகக் கிடைக்கிறது. புன்செய் தானிய வகைகளும் நியாயமான விலையில் கிடைக்கும் நிலை இருக்கிறது. கடலை எண்ணெய் போன்ற சமையல் எண்ணெய் வகைகளில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றம் கவலைக்கிடமாக உள்ளது. இந்த விலைவாசி நிலையை அரசு

கூர்ந்து கவனித்து வருகிறது. செயற்கையான பற்றாக்குறை
நிலையோ, அளவு மீறிய விலையேற்றமோ ஏற்பட்டால், அவசிய
மான, தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயங்காது.
சமையல் எண்ணெய்களைப் பொறுத்தவரையில் ஏற்பட்டுள்ள
நெருக்கடி நிலைமை நம் மாநிலத்தை மட்டும் பாதிக்கும்
ஒன்றல்ல; இந்தியா முழுவதிலுமே ஏற்பட்டுள்ள இந்த நிலையை
அனைத்திந்திய அடிப்படையில் சமாளிக்க வேண்டியது அவசியம்.

10. உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிக்கும்
தக்க வருவாய் கிடைக்க வேண்டும்; அதே நேரத்தில் இடைத்
தரகர் லாபம் குறைக்கப்பட்டு, வாங்கி உபயோகிக்கும் பொது
மக்களுக்கும் அவை நியாயமான விலையில் கிடைக்க வேண்டும்—
இதுவே அரசின் கொள்கை. இக்கொள்கையைக் கடைப்பிடிப்
பதில் உற்பத்தியாளருடைய அல்லது உபயோகிப்பவர்களுடைய
நன்மையை மட்டும் ஒருதலைப்பட்சமாகக் கருதாமல், பொது
மக்களின் ஒருங்கிணைந்த நன்மையை அடிப்படையாகக் கொண்டு
அரசு செயல்படும்.

11. அரசுத் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் இயங்கும்
நியாயவிலைக் கடைகளை விரிவுபடுத்தி, அத்தியாவசியப்
பொருட்களை வசதியாகவும் குறைந்த விலையிலும் மக்களுக்கு
வழங்க எனது அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்.
இப்போது அரிசி, கோதுமை, 'லெவி' சர்க்கரை ஆகியவற்றைக்
கட்டுப்பாட்டு விலையில் வழங்க, ஏறக்குறைய 9,300 நியாய விலைக்
கடைகள் உள்ளன. இந்த வசதியை மேலும் விரிவாக்கி, தமிழ்
நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ்வொன்றிலும்
நியாயவிலைக் கடை ஒன்றையேனும் அமைக்க முயற்சிகள்
மேற்கொள்வோம். இந்த நியாய விலைக்கடைகள் பொது
மக்களுக்கு இப்போது வழங்கி வரும் பொருள்களோடு, பிற
உணவுத் தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்
கள், புளி, மிளகாய் ஆகிய இன்றியமையாப் பொருள்களையும்
வழங்க முற்படும். இதனால் எல்லாப் பகுதி மக்களுக்கும்
அன்றாடத் தேவைக்குரிய பொருள்கள் நியாயமான விலைக்குக்
கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

12. இந்தச் சட்டமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் வரவு
செலவுத் திட்டம் கொண்டுவரப்படும். புதிய அரசின் திட்டங்
களையும் திட்டப் பணிகளையும் விரிவாக ஆராய, அப்போது



உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, அரசின் முக்கியமான
கொள்கைகளையும் குறிக்கோள்களையும் மட்டும் இச் சந்தர்ப்
பத்தில் குறிப்பிட விழைகிறேன்.

13. கடந்த 25 ஆண்டுகளாக முன்னேற்றத் திட்டங்கள் பல
செயல்படுத்தப்பட்டபோதிலும், தமிழ்நாட்டில் வறுமை நிலை
வரம்பிற்கு கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை, இக்கால
அளவில் வளர்ந்து, 1974ஆம் ஆண்டில் 59 சதவீதமாக
உயர்ந்துள்ளதென அண்மைக்கால ஆய்வு புலப்படுத்தி உள்ளது.
இந்த நிலை வருந்தற்குரியதாகும். வறுமையை ஒழிப்பது,
வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவது இவையே இந்த
அரசாங்கத்தின் தலையாய குறிக்கோள்களாக இருக்கும். இவை
இன்று தேசியக் குறிக்கோள்களாகவும் விளங்குகின்றன. நாம்
மேற்கொள்ளும் ஒவ்வொரு திட்டமும், வறுமையைக்
குறைக்குமா, வேலை வாய்ப்பைப் பெருக்குமா என்ற அடிப்
படையில் பரிசீலனைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

14. நமது நாட்டின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கிராமங்களே
உயிர்நாடி. தமிழ் நாட்டில் 70 சதவீத மக்களின் வாழ்க்கையும்
உழைப்பும் கிராமப்புறங்களிலேயேதான் நடைபெறுகின்றன.
இவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த, பலமுனைகளிலும்
முயற்சிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இவை
விவசாயம், பாசனம், விவசாய அடிப்படையிலும் பிற வகை
யிலும் உருவாகும் சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள்,
கிராமத் தொழில்கள், கிராமப்புற வீட்டு வசதி, வணிகம்,
போக்குவரத்து வசதி, கிராமப்புற மின்வசதி ஆகிய பலவற்றை
யும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். விவசாய
இடுபொருள்களான விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி
மருந்துகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் மக்கள் பெருவாரியாக
உபயோகிக்கும் துணிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதிலும்
கிராமப்புற மக்களுக்குக் கூடுதலான வேலைவாய்ப்பு. அதிகப்படி
யான வருவாய் நேரடியாகக் கிடைக்க வேண்டும் அதே
நேரத்தில், அடிப்படை வாழ்க்கை வசதிகளான குடிநீர், கல்வி,
எழுத்தறிவு, சுகாதாரம், வீட்டு மனைகள், வீட்டு வசதி, சாலைப்
போக்குவரத்து வசதிகள் ஆகிய பலவும் அமைந்து அவர்
களுடைய அன்றாட வாழ்க்கை நலம் பெற விளங்க வேண்டும்.

கிராமப்புறங்கள் இப்படி பலவகைகளிலும் முழுமையான வளர்ச்சி பெறுவதே இந்த அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக விளங்கும்.

15. ஐந்தாண்டுத் திட்டங்களில் தொடர்ந்து செலவு செய்தும், கிராமப்புறங்களில் இன்னும் பல இடங்களில் அடிப்படைத் தேவையான நல்ல குடிநீர் வசதி இன்றும் இல்லாமலிருப்பது வருந்துவதற்குரியதாகும். மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காகக் கணிசமான அளவு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். இந்தத் துறைக்காக நமது நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதோடு, கிராமப் புற குடிநீர் தேவையை நிறைவு செய்ய காலவரையறைக்குட்பட்ட திட்டம் ஒன்றை நமது வரவு-செலவு அறிக்கையில் அறிவிப்போம். வீராணம் குடிநீர் திட்டத்தில் பெருமளவு செலவு செய்திருந்தபோதிலும், சென்னை மாநகரின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினைத் தீர்த்து வைக்க இன்னும் வழிவகை காணவில்லை என்பது வருந்துதற்குரியது. நாம் உடனடியாக இப் பிரச்சினையை ஆராய்ந்து இதற்குத் தீர்வு காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்போம். குறிப்பாக, அண்டை மாநிலங்களின் ஒத்துழைப்புடன் கிருஷ்ணா குடிநீர் திட்டத்தை செயற்படுத்த விரைந்து நடவடிக்கை எடுப்போம்.

16. கிராமப்புறங்களில் வேளாண்மையில்லாத காலங்களில் வேறு வேலையற்ற நிலைமை பரவலாக உள்ளது. இந்தக் குறையைப் போக்கும் வகையில், பெரும் அளவுக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படும். இந்தத் திட்டங்கள், சிறு பாசன வசதிகள், நடுத்தர பாசன வசதிகள், சாலைகள், வீடுகள், பள்ளிகள், சமுதாய நல வசதிகள், மண்வளப் பாதுகாப்பு, குடிநீர் வழங்குதல் போன்று மக்களுக்குப் பயன்தரக்கூடிய உடைமைகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உதவும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில்துறை வாய்ப்புகள் ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் கல்வி முறையில் தொழில் சார்ந்த பயிற்சிகள் இணைக்கப்படும். தொழில் படிப்பும், தொழில் துறையில் பெருகி வரும் முதலீடுகளும், பெரு நகரங்களிலும் சிறு நகரங்களிலும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க உதவும். வணிக வங்கிகளின் உதவியைப் பெற்று, கிராமப்புறங்களில் கைத்திறன் அடிப்படை

சிறு தொழில்களில்
யாகக் கொண்டு, சொந்த முயற்சியில் சிறு தொழில்களில்
வேலைவாய்ப்பு
ஈடுபடும் எளிய மக்களுக்குப் பெருவாரியாக வேலைவாய்ப்பு
அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நமது சமுதாயத்தில்
நீண்ட நெடுங்காலமாக வாய்ப்பற்று, நலிவுற்று நிற்கும்
அரிசனங்கள், பழங்குடி மக்கள், கைத்தறி நெசவாளர்கள்,
மீனவர்கள், மகளிர் ஆகியோருக்கு அரசு குறிப்பாக உதவும்.
இவர்களின் பொருளாதார முன்னேற்றத்தையும் சமுதாய மறு
மலர்ச்சியையும் ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்த வேண்டும்.
சமுதாயத்தில் தொடர்ந்து இடர்ப்பாடுகளை அனுபவித்து வரும்
இப்பெரும்பான்மை மக்களின் துயர் துடைக்கும் வகையில்
அரசு தக்க திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தும்.

17. மின்சார உற்பத்தியில் அதிக முதலீடு செய்வதிலும்,
பெரிய, நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களை மேற்கொள்வதிலும்,
நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதிலும் அரசாங்கம் உடனடி
யாகவும் தொடர்ந்தும் அக்கறையோடு செயற்படும். இம்
முயற்சியில் இப்போதுள்ள வசதிகளை முழுமையாகப் பயன்
படுத்தவும் புதிய முதலீடுகளை விரைவுபடுத்தவும், மின்சக்தி,
தண்ணீர் ஆகியவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் வழி
முறைகள் வகுக்கப்படும்.

18. மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட மதுவிலக்குக்
கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவோம். மகளிரும் இளைஞர்
களும் குடித் தீமையால் குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
பல துறைகளில் சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதற்கும்,
அதன் மூலம் சமூக விரோதிகள் பொருளாதாரக் கட்டுக்கோப்பு
களையும், சமூக நெறிகளையும் உருக்குலைப்பதற்கும் இது உடந்தை
யாக இருக்கிறது. மதுவிலக்கைக் கண்டிப்புடன் செயற்படுத்து
வதற்குச் சட்டவகையில் நடவடிக்கைகள் எடுப்பதுடன், குடிப்
பழக்கத்தை மேற்கொள்ளாமல் இருக்கும்படி மக்களிடம்
பிரச்சாரம் செய்வதும் இந்த அரசின் முயற்சியாய் இருக்கும்.

18-அ. குறித்த காலத்தில் நடத்தப்படவேண்டிய மாநகராட்சி
மன்ற, நகராட்சி மன்ற, ஊராட்சி மன்றத் தேர்தல்கள் இதுவரை
நடத்தப்படாமல் இருந்திருக்கின்றன. மஸ்டர் ரோல் வழக்கு
முடிந்தவுடன் சென்னை மாநகராட்சிக்கு உடனடியாகத் தேர்தல்
நடத்தப்படும். வாக்காளர் பட்டியலில் குறைகள் இருப்பதாக

மக்களின் கருத்தினால்; விரைவில் அவற்றைத் திருத்தி, ஒழுங்கு படுத்தி, அந்தப் பணி நிறைவேற்றப்பட்டவுடன், மதுரை மாநகராட்சி, ஏனைய நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடத்தப்படும். அதோடு, ஊராட்சி மன்றத் தலைவரைப் பொது மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பது போல ஒன்றியத் தலைவரையும், நகர சபைத் தலைவரையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென இந்த அரசு விரும்புகிறது. வெகு விரைவில் அதற்குரிய சட்டங்கள் இப்பேரவையில் வைக்கப் படும்.

19. நம்முடைய பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் யாவும் நீண்டகால நோக்கினை அடிப்படையாகக் கொண்ட ஒரு பெரும் முயற்சியைச் சார்ந்திருக்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, திட்டம் வகுக்கும் பணி இன்று ஒரு தேக்க நிலையை அடைந்து விட்டது துரதிர்ஷ்டமாகும். புதிய அரசு, மாநிலத் திட்டக் குழுவிற்குக் கூடிய விரைவில் புத்துயிர் அளித்து, 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தை விரிவாகவும் விளக்கமாகவும் வகுக்கும் பொறுப்பை அதனிடம் அளிக்கும். நீண்ட காலத் திட்டம், நடைமுறையில் செயற்படக்கூடிய தாகவும், பொருளாதார வாய்ப்பின் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்; அது மட்டுமல்ல; பொதுமக்கள் புரிந்து கொண்டு, ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கி ஈடுபடும் வகையில் திட்டங்கள் அமைய வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு, வட்டார, வட்ட, மாவட்டப் பகுதி மக்களின் நெடுநாளையத் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள மூலப்பொருட்கள், மனித சக்தி, திறமை ஆகியவற்றை முழுமை யாகப் பயன்படுத்துவதற்கும் ஏற்றவாறு திட்டங்கள் வகுக்கப் படும்.

20. மேன்மைதங்கிய உறுப்பினர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் ஒரு சில நாட்களே நடக்கும். தள்ளிப்போட முடியாத சில முக்கியமான சட்டப் பணிகள் மட்டுமே இக்கூட்டத்தில் உங்கள் முன் கொண்டுவரப்படும். இந்தக் கூட்டத்திலும், இனி வரும் சட்டமன்றத் தொடர் கூட்டங்களிலும் நடைபெற்ற தேர்தலில் ஏற்பட்ட வெப்பங்களிலிருந்தும் சர்ச்சைகளி லிருந்தும் விடுபட்டுப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். இந்த மாமன்றம் தனக்கேயுரிய கண்ணியம், மரியாதை, தரம் போன்ற பாரம்பரியங்களைப் பாதுகாக்கத் தக்க வகையில், எதிர்க்கட்சியினர் தங்கள் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பைத் தந்தும், ஆளுங் கட்சியினர் ஒருதலைப்பட்சமற்ற அணுகுமுறைகளை மேற்கொண்டும், அவையின் நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தின் மொத்த நலனை முன்னிலைப்படுத்தி, தனிப்பட்ட நலன்களைப் பின்னிலைப்படுத்தி, பொது நோக்குடன் பணியாற்றினால், இந்த மாமன்றம் வாக்காளப் பெருமக்கள் சுமத்திய பெரும் பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்பதில் எனக்கு எந்தவித ஐயமும் இல்லை. உங்களுடைய நற்பணிகளில் நீங்கள் வெற்றி பெற, உங்கள் எதிர்காலம் சிறக்க, வாழ்த்தி விடை பெறுகிறேன். வணக்கம்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1977 ஜூலை 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; 1957-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை திருவள்ளூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. வி. எஸ். அருணாசலம் அவர்கள் 21—11—1975-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரை மதுராந்தகம் தொகுதியிலிருந்தும், 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரை அச்சரப்பாக்கம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு பி. எஸ். எல்லப்பன் அவர்கள் 25—11—1975-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்தும், 1956-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி தென் தொகுதியிலிருந்து இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. பி. பொன்னம்பலக் கவுண்டர் அவர்கள் 25—2—1976 ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டு வரை பேலூர் ரிசர்வ் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரா இருந்த திரு வி. எஸ். சிவப்பிரகாசம் அவர்கள் 28—3—19 ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

---

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இட பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற் என்பதைக் குறிக்கும்.

[பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 9

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை ராசி புரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு ஏ. ராஜா கவுண்டர் அவர்கள் 31—3—1976-ஆம் தேதி யன்று மறைந்ததைக் குறித்தும்,

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரை திருக்கோஷ்டியூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு என். வி. சொக்கலிங்க அம்பலம் அவர்கள் 26—5—1976-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1967-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரை சென்னை பேசின் பிரிட்ஜ் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு எம். ஆர். கண்ணன் அவர்கள் 15—6—1976-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1967-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரையிலும் வேலூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பின ராக இருந்த திரு மா. பா. சாரதி அவர்கள் 19—6—1976-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை திரு மங்கலம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. ஏ. வி. பி. பெரியவால குருவ ரெட்டியார் அவர் கள் 9—7—1976-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1937-ஆம் ஆண்டிலிருந்து 1939-ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை யிலும், கோட்டையம் பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை யின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு எம். பி. தாமோ தரன் அவர்கள் 13—7—1976-ஆம் தேதியன்று மறைந்த தைக் குறித்தும்,

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை, சேலம்-1 தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, சட்டமன்றப் பேரவை யின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு ஏ. மாரியப்பன் அவர் கள் 18—7—1976-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டுவரை, முசிறி
குதியிலிருந்தும், 1967-ஆம் ஆண்டிலிருந்து
71-ஆம் ஆண்டு வரை ஸ்ரீரங்கம் ரிசர்வ் தொகுதி
ருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப்



1977 ஜூலை 9] [பேரவைத் தலைவர்]

பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு எஸ். ராம லிங்கம் அவர்கள் 11—9—1976ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1952ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டுவரை பாலகாட் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. கே. ராமகிருஷ்ணன் அவர்கள் 18—9—1976ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1971ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டுவரை அரியலூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு ஜி. சிவபெருமாள் அவர்கள் 13—2—1976ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1937ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டுவரையிலும், மற்றும் 1946-ஆம் ஆண்டிலிருந்து 1951-ஆம் ஆண்டுவரை யிலும் திண்டுக்கல் மகளிர்-பொது நகர்ப்புற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திருமதி லட்சுமி அம்மாள் பாரதி அவர்கள் 1—3—1976ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1952ஆம் ஆண்டிலிருந்து 1953ஆம் ஆண்டுவரை அனந் தப்பூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு டி. நாகி ரெட்டி அவர்கள் 28—7—1976ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1957ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டுவரை நியமன உறுப்பினராக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திருமதி சுவாரஸ் அவர்கள் 28—7—1976ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1952ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டுவரை பய்ய னூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. கே. பி. கோபாலன் அவர்கள் 20—4—1977ஆம் தேதி யன்று மறைந்ததைக் குறித்தும்,

1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டுவரை வடக்கு சென்னை மாநகர மத்திய பொது நகர்ப்புற தொகுதியிலி ருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேர வையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு ஜி. ராஜமன்னார் அவர்கள் 20—4—1977ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித் தும்

[பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 9

1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டுவரை கன்னி
யாகுமரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த
திரு. வி. கே. ராஜா பிள்ளை அவர்கள் 18—6—1977-ஆம்
தேதியன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை வந்த
வாசி ரிசர்வ் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்
நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக
இருந்த திரு டி. தசரதன் அவர்கள் 26—6—1977-ஆம் தேதி
யன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை சேலம்
கிராமப்புறத் தொகுதியிலிருந்தும், பின்னர் 1957-ஆம் ஆண்டு
முதல் 1962-ஆம் ஆண்டுவரை ஏற்காடு தொகுதியி
லிருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு எஸ்.
லட்சுமணக் கவுண்டர் அவர்கள் மறைந்ததைக் குறித்தும்,

1967-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டுவரை ஆலங்
குடி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழ்நாடு
அரசின் முன்னாள் அமைச்சராக இருந்த திரு. கே. வி. சுப்பையா
அவர்கள் 30—10—1976-ஆம் தேதியன்று மறைந்ததைக்
குறித்தும்,

இப்பேரவையின் ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும்
அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின்
சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில்
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக
எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம்
மவுனமாக நின்றனர்.)

## (2) இரங்கல் தீர்மானம்.

முன்னாள் உறுப்பினர் திரு- ஆர். பொன்னப்ப நாடார்
மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—இந்த அவை முன்னவர்
மாண்புமிகு திரு. கி. மனோகரன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்
டம், கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு தொகுதிகளிலிருந்து
தேர்ந்தெடுக்கப்பெற்று இம்மாமன்றத்தின் முன்னாள் உறுப்பின
ராயிருந்த திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் மறைவு
குறித்து இரங்கல் தீர்மானத்தை மொழிவார்.



1977 ஜூலை 9]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்.—மாமன்றத்தின் அவைத்
தலைவர் அவர்களே, காலஞ்சென்ற திரு பொன்னப்ப நாடார்
அவர்களின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானத்தை நம்
சபையின் முன்னால் வைக்கின்றேன்.

"கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியிலிந்து
1962 ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையிலும்,
பிறகு 1967 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையில்
விளவங்கோடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு
இப்பேரவையின் ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவராக
இருந்த திரு ஆர். பொன்னப்ப நாடார் 12—10—1976 அன்று
எதிர்பாராதவிதமாக விமான விபத்தில் மறைந்ததைக்
குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும்,
இரங்கலையும் அவரது மறைவினால் வருந்தும் குடும்பத்தின
ருக்குத் தெரிவித்துக் கொள்கிறது."

திரு. பொன்னப்ப நாடார் அவர்களைப் பற்றி, இந்த அவை
உறுப்பினர்களுக்கு நான் அதிகம் தெரிவிக்க வேண்டிய தேவை
யில்லாத அளவு, நீண்ட காலமாக இந்த மாமன்றத்தில் அவர்
பணியாற்றியுள்ளார் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

முற்பகல் 9-10

கிள்ளியூர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு
1976-ஆம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
யின் உறுப்பினராக இருந்தார். தமிழ்ப் பகுதிகளை அன்றைய
தினம் இருந்த சென்னை மாநிலத்தோடு இணைக்க வேண்டுமென்ற
ஒரு பெரும் போராட்டத்தைத் துவங்கிய நேரத்தில் அதுவும்
தலைசிறந்த அரசியல் மேதை நேசமணி அவர்கள் தலைமையில்
அத்தப் போராட்டத்தைத் துவங்கியபோது அவருக்கு வலக்
கரமாக நின்று அந்தப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தி,
எவ்வளவு கொடுமைகளை அனுபவிக்க முடியுமோ அவ்வளவு
கொடுமைகளையும் தாங்கி அந்தப் பகுதிகளைத் தமிழகத்தோடு
இணைத்த பெருமையில் பொன்னப்ப நாடார் அவர்கள் நிச்சயம்
தனி இடத்தைப் பெறுகிறார் என்பதை நான் உங்களுக்கு
விளக்கத் தேவையில்லை.

தேவிகுளம்-பீர்மேடு தமிழகத்தோடு சேரவேண்டுமென்ற
கோரிக்கையை முன்னிறுத்தி நூற்றுக்கணக்கான, ஆயிரக்
கணக்கான மக்கள் நாகர்கோயிலில் போராட்டத்தை நடத்திய
போது பொன்னப்ப நாடார் அவர்கள் சித்திரவதை செய்யப்
பட்டார் என்ற சேதியையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர்
அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் குழு உறுப்பினராகவும்,
நாடாளுமன்ற நிர்வாகக் குழு சென்னைக் கிளை உறுப்பினராக
வும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை காங்கிரஸ் கட்சித்
தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். அவர் நல்ல வழக்கறிஞர்
என்பதை நீங்கள் அறிவீர்கள்.

[திரு. வி. மனோகரன்] [1977 ஜூலை 9

அதோடு மட்டுமல்ல—அவரை நெருங்கிப் பழகுகிற சந்தர்ப் பம் எனக்கு அதிகமாகக் கிடைக்காவிட்டாலும் ஒரு தரமுள்ள அரசியல்வாதி எப்படி இயங்கமுடியும் என்பதற்கு அவர் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினார். தனது மனதில் பட்ட கருத் தைப் பளிச்சென்று எடுத்துச் சொல்லுவதில் அவர் யாருக்கும் தயக்கம் காட்டியதில்லை. ஆனால் எந்தக் காரணத்தைக் கொண் டும் யாரையும் ஏமாற்ற வேண்டுமென்றோ, அதுதான் சாக்கிய வல்லியின் தந்திரம் என்றோ அவர் அரசியலை அணுகவும் இல்லை. அரசியல் அவருக்கு ஒரு வியாபாரப் பொருளாகவும் இருந்தது இல்லை. இலட்சிய அடிப்படையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அந்தத் தலைமகன், தமிழ் மகன், அரசியலை ஒரு புனிதமான கேந்திரமாகக் கருதி, நாட்டு மக்களுக்கு உழைக்கின்ற, நாட்டு மக்களுக்குச் சேவை செய்கின்ற ஒரு அமைப்பாகப் பயன்படுத் தினாரே தவிர, அந்த அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டு தன்னை வாழ வைக்க வேண்டுமென்றோ, தனது குடும்பத்தை வாழவைக்க வேண்டுமென்றோ துளிக்கூட கருதாதவர் என்ற அவரது அப்பழுக்கற்ற வரலாற்றைப் புரிந்தவர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தனக்கு ஒரு தனிப் பெயரை நேசமணிக்குப் பிறகு வைத்துக்கொண்டிருப்பவர் பொன்னப்ப நாடார் அவர்கள் என்பதை அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒருவர் தன் வயது காலத்தில் படுக்கையில் படுத்து அதற்குப் பிறகு காலமானார் என்ற செதி இருந்தால்கூட மன ஆறுதலைப் பெற்றிருக்க முடியும். ஆனால், பல வேலைகள் அவருக்குக் காத்துக் கொண்டிருந்த நேரத்தில் விமான விபத்தில் சிக்கி அவர் இறந்தார் என்ற சேதியைக் கேட்டுத் தமிழகம் அழுதது ; தாய்த் தமிழகம் வேதனைப் பட்டது. தமிழர்களின் இல்லமெல்லாம் நிச்சயமாகக் கண்ணீர் சிந்திற்று என்பதை நான் சுட்டிக்காட்டத் தேவை இல்லை. அப்பேர்ப்பட்ட ஒரு நல்லவரை, பண்பாளரை, அடக்கமானவரை, தலைசிறந்த 'பார்லிமெண்டேரியன்' என்ற பெருமைக்குரியவரை நாம் இழந்து விட்டோம் என்பதை நினைத்து என் சார்பாகவும், நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், முதலமைச்சர் அவர்களின் சார்பாகவும் இந்த இரங்கல் தீர்மானத்தை உங்கள் முன்னாலே வைத்து விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. மு. கருணாநிதி</u> : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த இரங்கல் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்களும் அந்த இரங்கலோடு இணைந்து ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1977 ஜூலை 9] [திரு. மு. கருணாநிதி]

இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில், குறிப்பாக நிறுவன காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து பணியாற்றிய பண்பாளர் பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு உறுப்பினராக மாத்திரம் அவர் இங்கே இல்லை. வளர்ந்து வருகின்ற தலைவர் களுடைய வரிசையில் ஒருவராக தன்னை ஆக்கிக் கொள்கின்ற அளவுக்கு தன்னுடைய தியாகத்தாலும், பழக்க வழக்கங்களாலும், மன இயல்புகளாலும் உயர்ந்தவர் என்ற முறையிலேதான் அவ ருக்கு இந்த மன்றத்தில் தனியாக ஒரு இரங்கல் தீர்மானம் நிறை வேற்றிட வேண்டுமென்ற கருத்து எதிர்க்கட்சியில் உள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பேறு முதன் முதலாக இந்த மன்றத்திற்குக் கிடைக்காவிட்டாலும், சட்ட மன்ற மேலவைக்கு நேற்றைய தினம் கிடைத்தது என்பதை எண்ணி ஓரளவு நான் மன ஆறுதல் பெறுகிறேன். இதைத்தான், முதல் நாள் இரங்கல் தீர்மானங்கள் வருகிற நேரத்தில் பொன்னப்ப நாடார் அவர் களுக்கும் அப்படிப்பட்ட ஒரு இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்க்கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ளப் பட்டது. சற்று காலதாமதமானாலும்கூட அரசுத் தரப்பில் அவை முன்னவர் அவர்கள் இந்த இரங்கல் தீர்மானத்தை இங்கு முன் மொழிந்தமைக்காக நான் என்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு பல்வேறு அடக்கு முறைகளுக்கு ஆளானவர் மறைந்த பொன்னப்ப நாடார் அவர்கள். அதுமாத்திரமல்ல ; அவை முன்னவர் குறிப்பிட்டது போல் தாய்த் தமிழகத்தோடு கன்னியாகுமரி மாவட்டத்தை இணைக்க வேண்டு மென்ற கடும் போராட்டத்தில் பல்வேறு அடக்கு முறைகளையும் ஏற்றுக் கொண்டு நேசமணி அவர்களுடைய தலைமையில் போர்க் களத்திலே நின்ற பெருமைக்குரியவர் பொன்னப்ப நாடார் அவர் கள். அதையொட்டி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரமல்லாமல், தமிழ்ப் பகுதி எங்கும், தமிழ் வாழ்கின்ற இடம் எங்கும் தன்னுடைய பெயருக்கு ஒரு தனியான இடத்தை உருவாக்கிக் கொண்டவராவார்கள். அப்படிப்பட்ட தியாகச் சீலரைப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தன்னுடைய அன் புக்குரியவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் ஆக்கிக் கொண்ட தில் எந்த வியப்பும் இருக்க முடியாது.

கன்னியாகுமரி மாவட்ட போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி களுக்கு மானியங்கள் வழங்க வேண்டுமென்பதிலும் அதே நேரத் திலே அந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கு விருதுகள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்துவார்கள். பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த அவையிலே அவ்வாறு கருத்துக்கள் எடுத் துச் சொன்னபோது அவைகளைச் சிறிதும் புறக்கணிக்காது உடனடி யாக அன்று இருந்த கழக அரசு நிறைவேற்றித் தந்தது. அவர் மனம் களிக்கின்ற வகையில். ஆனால், இன்றைக்கு அவர் மறைந் திருக்கும் நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திலே

[திரு. மு. கருணாநிதி] [1977 ஜூலை 9

அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்குத் தருவதாக வாக் களிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வந்த மானியங்கள் எல்லாம் அந்த வீரர்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையைக் காண்கிறோம். மறைந்தவருக்கு மரியாதை செலுத்துகிற வகையில் அவைகளைத் தொடர்ந்து அந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கிட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொன் னப்ப நாடார் அவர்களுடைய நினைவுக்கு அது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

இந்த அவையில் அவர் ஆற்றிய பணிகளை நேரில் இருந்து அறிந்தவன் நான். எதிர்க்கட்சி வரிசையில் அவரோடு அமர்ந்தும் அறிந்திருக்கிறேன். அவர் எதிர்க்கட்சியிலும், நாங்கள் ஆளும் கட்சியிலும் அமர்ந்திருந்த நேரத்திலும் அவருடைய பணிகளை அறிந்திருக்கிறேன். எந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் நேரத்திலும் படபடப்புக்கோ, பரபரப்புக்கோ, பதைபதைப்புக் கோ ஆளாகாமல் நிதானமாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கூடிய ஆற்றல் பெற்றவர். சில நேரங்களில் அவரையும் கூட கோபம் ஆட்கொள்ளுவதுண்டு. புயலாக மாறுவார்; ஆனால், அடுத்த கணமே தென்றலாக மாறும் மனப் பண்பு இருந்தது. அப்படிப்பட்ட பெருந்தகையாளரை இழந்திருக்கும் குடும்பத் தாருக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும் ஆறுதல் கூறும் வகையில் அவைமுன்னவர் இங்கே கொண்டு வந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்களும் இணைந்து வழிமொழிந்து அமைகிறேன். வணக்கம்.

[முற்பகல் 9-20]

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, இங்கே அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்குப் இந்த இரங்கல் தீர்மானத்தை இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி யின் சார்பிலே ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல முன்வந்துள்ளேன்.

காலஞ்சென்ற மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர் கள் இந்த அவையிலே எல்லோரும் மதிக்கக்கூடிய ஒரு உறுப்பின ராக ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராகவும் விளங்கி னார்கள் என்பது இங்கே முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் களாக இருந்த அனைவருக்கும் நன்கு தெரியும். அவர் சிறந்த பண்பாளர். கடுமையாக யாருடைய மனமும் புண்படும்படியாக இந்த அவையிலே எந்த நேரத்திலேயும் அவர் பேசியதே கிடை யாது. எந்தப் பொருள் பற்றியும் பேசும்போது அதை இதர உறுப்பினர்கள் கேட்கக்கூடிய அளவிற்கும் அவர்கள் இடத்திலே ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் அவருடைய பேச்சின் தரம் இருக்குமே தவிர, எதிர்த்தரப்பிலே உள்ளவர் களுடைய உள்ளத்தை எந்த வகையிலும் புண்படுத்தாத வகையி



1977 ஜூலை 9] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

லேதான் இந்த அவையிலே அவர்கள் தொண்டாற்றினார்கள். அவர்களுடைய நடத்தை, செயல்பாடு எல்லாம் இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களும் பின்பற்றக்கூடிய எடுத்துக் காட்டாக இருந்தன. அவர்கள் ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தாலும், என் போன்றவர்கள் அவரிடத்திலே மிகுந்த மரி யாதை வைத்திருந்தோம். அவர் தம்முடைய பேச்சுக்களை மிகக் கண்ணியமாகப் பேசக்கூடியவர் என்றாலும் கூட, அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கருத்திலே, கொள்கையிலே இம்மியளவும் விட் டுக் கொடுத்தது இல்லை. சில பேர்கள்கூட நினைக்கலாம், இவர் மிகச் சாந்தமாக இருப்பார், ஆனால் கொள்கை ரீதியாக இவர் எப்படி இருப்பாரோ என்று எண்ணினாலும் அவர் கொள்கையிலே மிகுந்த முற்போக்கு எண்ணம் கொண்டவர். இந்த நாட்டின் சமுதாய மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதிலும் கீழ் நிலையிலே உள்ள மக்கள் வாழ்க்கை உயரவேண்டுமென்பதிலும் அக்கறை கொண்டவராக இருந்தார்.

இந்த அவையிலே குத்தகைதாரர்களுக்கு நிலம் சொந்தமாக்கும் மசோதா கொண்டுவரப்பட்டது, அதைப் பற்றி இங்கே அப்போது பலத்த விவாதம் நடந்தது. அவர்களுடைய தரப்பிலே இருந்த சில உறுப்பினர்கள் கூட அந்த மசோதாவிலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லியபோது, அந்த மசோதாவை அப்படியே கொண்டுவரவேண்டுமென்றும், அதிலே, எந்தவிதமான மாற்றமும் தேவையில்லை, அதை நிறைவேற்று வதிலே தயக்கம் இல்லை, அதைப் பொறுக்குக் குழுவிற்குக்கூட அனுப்பாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற முறையிலே சொன் னார்கள். அந்த அளவில் கொள்கையிலே அக்கறை கொண்டவர். அப்படிப்பட்டவர் அகால மரணம் அடையக்கூடிய விதத்திலே விமான விபத்திலே மரணம் அடைந்தது கேள்விப்பட்டு நான் பெரிதும் அதிர்ச்சி அடைந்தேன், அவர் விமான விபத்திலே மரணம் அடைந்தார் என்ற செய்தி வந்தபோது நான் ஊரில் இருந் தேன். நான் அன்றைக்குப் பூராவும் சாப்பிடவே இல்லை, அந்த அளவிற்கு ஒரு அதிர்ச்சியை, துயரத்தை கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மட்டுமல்ல, தமிழகத்து மக்கள் எல்லோருமே அடைந் தார்கள், அந்த அளவிற்கு பெரிய நஷ்டமாக இருந்தது, அன்னா ருடைய குடும்பத்திற்கு இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மறைவு குறித்து இந்த அவையின் முன்னவர் அவர்கள் முன் மொழிந்து இருக்கக்கூடிய இரங்கல் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வழிமொழிந்து எங்களுடைய துயரத்தையும் துன்பத்தையும் இந்த நேரத்திலே நாங்கள் தெரியப் படுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

[திரு. என். சங்கரய்யா] [1977 ஜூலை 9

1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை இந்தச் சட்டப் பேரவையில் அவரோடு பணியாற்றிவரக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்த நேரத்திலேயும் அதற்குப் பிறகும் அவருடைய சிறந்த குணங்களைப் பற்றி நாங்கள் அறிந்து கொண்டோம். குமரி மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களுடைய பிரச்சனைகளைக் குறித்து நடைபெற்ற இயக்கத்திலே பல முக்கிய பணிகளை ஆற்றினார்கள், பங்கெடுத்துக் கொண்டார்கள். தமிழ் நாடு சட்டப் பேரவையில் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்கள். இங்கே முன்னாலே பேசிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதைப்போல், அவர்கள் அரசியல் ரீதியாக சர்ச்சைகள், கருத்துமாறுபாடுகள் கொண்டிருந்தாலும் தனிப்பட்ட முறையிலே அன்பும் நட்பும் கொண்டு மற்ற உறுப்பினர்களோடு பழகினார் என்பதை நேரிலே அறிந்திருக்கிறோம். அவர் தன்னுடைய கருத்தை உறுதியாகச் சொன்னாலும், அரசியல் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட முறையிலே மனிதப் பண்பாட்டோடு பழகிய ஒரு அரசியல்வாதி என்பதை நான் இந்த நேரத்திலே நினைவு கூர்கிறேன். அவர் ஒரு தேச பக்தர். ஜனநாயகத்தினுடைய மரபுகளைக் காப்பதிலே அவர் முன்னணியில் நின்றார். அப்படிப்பட்ட ஒருவர் விமான விபத்திலே காலமானார் என்பது அவருடைய கட்சிக்கும், ஏனைய கட்சிகளுக்கும் தமிழக மக்களுக்கும் ஆழ்ந்த துயரை அளித்திருக்கிறது. அருடைய மறைவால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற அவருடைய குடும்பத்தினருக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இதயப் பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரைப் போன்ற சிறந்த தலைவரை இழந்து இருக்கக்கூடிய அந்தக் கட்சிக்கும், அந்தக் கட்சியின் ஊழியர்களுக்கும் ஏராளமான தொண்டர்களுக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. ர. ஜெபமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த நம்முடைய மறைந்த தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் மறைவிற்கான இரங்கல் தீர்மானத்தை நானும் ஆதரித்து ஜனதா கட்சியின் சார்பில் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எங்களோடு நெருங்கிப் பழகியவர். அவர், திருவிதாங்கூர்-கொச்சி சட்ட சபைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். இங்கேயும் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல உறுப்பினராகப் பணியாற்றினார்கள் அவர்கள் காந்தீயத்தில் நல்ல நம்பிக்கை கொண்டவர்கள் தெய்வபக்தியும் தேச பக்தியும் உள்ளவர். காந்தியடிகளுடைய பக்தராகவும், தலைவர் காமராஜ் அவர்களுடைய சிறந்த தொண்டராகவும் பணியாற்றினார்கள். தெய்வ பக்தியோடும், தேச



1977 ஜூலை 9 [திரு. ர. ஜெபமணி]

பக்தியோடும் அவர்தூய்மையான முறையிலும் எளிமையானமுறையிலும் வாழ்ந்தார். அவர்கள் வாழ்க்கையிலே மிகவும் எளிமையாக இருந்தார். எந்தப் பெரிய பதவி தன்னைத் தேடி வந்தாலும் மறுத்தார். திருவிதாங்கூர்-கொச்சி என்ற பகுதி மாநிலமாக இருந்த போது அவருக்கு மந்திரி பதவி கொடுத்து ஆசை காட்ட முயன்றார்கள். ஆனால், அவர் அதை வேண்டாமென்று உதறித் தள்ளினார்.

அது மட்டுமல்ல, அவசர நிலை இருந்த காலத்திலே கூட திருவனந்தபுரத்திலே இருந்து கருணாகரன் வந்து எப்படியாவது கவர்னர் பதவி தருகிறோம், எப்படியாவது விலகிவிட வேண்டுமென்று கேட்டும்கூட அவர் அதைக் கண்டிப்புடன் மறுத்துவிட்டார். அப்படிப்பட்ட சிறந்த பண்பாளர் அவர். இனிமையாகப் பழகுவார். எப்போதும் தான் கடைப்பிடித்த கொள்கையை விடாது உறுதியாக வாழ்ந்தார், காந்தியடிகளின் பாதையிலே நடந்தார், தேச பக்தியோடும் தெய்வ பக்தியோடும் திகழ்ந்தார். இப்படியெல்லாம் இருந்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு அவருடைய பிள்ளை திரு. விஜயராகவன் அவர்கள் இங்கே இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உங்களிடையே அமர்ந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட தேச பக்தருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து என்னுடைய கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த இரங்கல் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வழிமொழிந்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மறைந்த மதிப்பிற்குரிய திரு பொன்னப்ப நாடார் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையில் இந்தச் சட்ட மன்றத்திலே பணியாற்றிய போது நானும் இந்தச் சட்ட மன்றத்திலே இருந்து அவருடைய குண நலன்களை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கிறேன் அது மட்டுமல்ல, நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது மாதிரி பல மசோதாக்கள் பொறுக்குக் குழுவிலே வருகிறபோதும் சரி, மற்ற நேரங்களிலேயும் சரி அவர்கள் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியிலே இருந்தாலும்கூட எங்களுடைய கட்சியினுடைய கொள்கையோடு இணைந்த மாதிரி பல முற்போக்கான கொள்கைகளை மனப்பூர்வமாகத் தெரிவித்தது மாத்திரமல்ல, அதற்காக உறுதியாகவும் இருந்தார். அவர்களோடு கமிட்டியிலே இருந்தபோது வேறு மாநிலங்களுக்கு எல்லாம் செல்லக் கூடிய நேரத்திலே அவர்களுடைய சிறந்த பண்புகளை குணங்களைத் தெரிந்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. எனக்கு முன்னாலே பேசிய தலைவர்கள் குறிப்பிட்டது போல அவர் எவ்வளவு கடுமையான வார்த்தைகளாக இருந்தாலும் கூட அதை இனிமையாகச் சொல்லிப் பழக்கப்பட்டவர்.

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஜூலை 9

முற்பகல் 9-30

'' இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று ''.

என்ற குறளுக்கிணங்க அவர்கள் தங்களுடைய வாக்கியங்களை அமைத்துக் கொண்டவர்கள். அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே இருக்கும் காலத்தில் சாதாரண, ஏழை எளிய மக்களுக்கு, கஷ்டப்படக்கூடிய மக்களுக்கு ஆதரவாக மசோதாக்களிலோ அல்லது பேசக்கூடிய காலங்களிலோ உறுதியாக அவர்கள் பேசுவார்கள். நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் சொல்லும் முற் போக்கான கருத்துக்களுக்கு இசைவாக அவர்கள் இருந்திருக் கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அவர்கள் தொடர்ந்து தேச விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் இருந்து பாடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுடைய விருப்பத்திற்காக இடை விடாது பாடுபட்ட அவர்கள் எதிர்பாராதவிதமாக விமான விபத்திற் காளாகி மறைந்திருக்கிறார்கள். அவர்களுடைய மறைவுக்கு எங்களுடைய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த வருத்தத் தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலஞ்சென்ற மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்களது அகால மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து இங்கே கொண்டு வந்திருக்கும் அனுதாபத் தீர்மானத்தை இந்திய தேசிய ஃபார் வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன்.

காலஞ்சென்ற பொன்னப்ப நாடார் அவர்கள் தமது இளமை யிலிருந்து மரணம் வரையில் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையில் நல்ல அம்சங்கள் நம் போன்றவர்களுக்கு முன்னோடியாக இருக்கும் அளவிற்குஅமைந்தன என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டி க்கிறேன். தேசபக்தியின் பெயரால் தியாகத்தை அதிக மாகச்செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அவர்கள் தேசவிடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டார்கள். விடுதலைக் குப் பின்பும் தமிழ் மக்களுக்கு நன்மைகள் வர வேண்டுமென்ற பொழுது அங்கு எடுக்க வேண்டிய முறைகளை முறைப்படி எடுத் தார்கள்.

பதவி, பட்டம், பணம் போன்ற ஆசாபாசங்களுக்கு தன்னை அடிமையாக்கிக் கொள்ளாமல் தான் மேற்கொண்ட குறிக்கோள் களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் தலைவர் தான் பொன்னப்ப நாடார் என்பதை நாடு நன்றாக அறியும்.



1977 ஜூலை 9] [திரு. கே. கந்தசாமி]

சொல்வது யார்க்கும் எளிது, ஆனால் சொல்லியவண்ணம் செயல் படுத்திக் காட்டுவது மிகக் கடினம் என்பதை நாம் அத்தனைபேரும் நன்றாக அறிவோம். ஆனால் பொன்னப்ப நாடார் அவர்கள் அவ்வப் பொழுது தான் எண்ணிய எண்ணத்தைச் சொல் வடிவிலே சொல் லவும், சொன்னதை செயலிலே காட்டவும் கூடிய மிக உயர்ந்த பண்பாளராக விளங்கினார்கள்.

சட்ட மன்றத்திற்கு வரும் பொழுது கடந்த கால சட்டமன்ற நடவடிக்கைகளிலே, நான் குறிப்பாக அவர்கள் சார்ந்திருந்த கட்சிக்கு எதிர்க்கட்சி நிலையிலே இருந்து சில காரசாரமான விவாதங்களிலே ஈடுபட்ட பொழுதெல்லாம், என் போன்றவர்கள் அனுபவக் குறைவு காரணமாகவோ அல்லது சூழ்நிலை காரண மாகவோ நிதானத்தை இழந்து சில கடுமையான வாசகங்களை உபயோகிக்க வேண்டிய நிலையிலேயிருந்தும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பொறுமையையும், அவர்களது சாந்தத்தையும், ஆனால் விவாதத்திலே உன்னிப்பான விவரங்களையும் அளித்த நிலைமைகளையெல்லாம் இந்த மாமன்றம் நன்கு அறியும். அந்த அளவிற்குத் தன்னடக்கத்தோடும், சபையினுடைய மரபோடும், மனிதாபிமானத்தோடும் வாழ்ந்து காட்டிய மாபெரும் மேதை தான் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்.

அந்த மாமேதை இன்னும் பல ஆண்டுகளுக்கு இருந்து நாட் டுக்கு, நம் போன்றவர்களுக்கு முன் மாதிரியாக இருப்பார்கள் என்று விரும்பினோம். ஆனால் இயற்கையின் சூழ்நிலை மிகவும் வேதனைக்குரிய விபத்திற்கு அவரை உள்ளாக்கி அவர்கள் மரண மடைந்து விட்டார்கள். என்றாலும் அவர்களுடைய பெயரை யும், அவர்களுடைய புகழையும் நிலை நிறுத்தும் அளவிற்கு அவர் களுடைய மைந்தர் இந்த சபையில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் காணும்பொழுது நமக்கு ஓரளவிற்கு ஆறுதல் அளிக் கக் கூடியதாக இருக்கிறது. ஆகவே, அன்னாரது ஆத்மா சாந்தி அடையவும், அவர்களது நல்ல வாழ்க்கையின் அம்சங்களான தேச பக்தி, நல்லெண்ணம், அடக்கம் போன்ற நல்ல குணங்கள் நமக் கெல்லாம் ஒரு முன் மாதிரியாக இருக்கட்டும். குறிப்பாக அவரது புதல்வர் தந்தையின் பெயரை நிலை நாட்டும் அளவிற்கு நடந்து கொள்வார் என்று நம்புகிறேன். ஆகவே, அந்தப் பெருமகனா ருக்கு இந்திய தேசிய ஃபார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொண்டு, அவர்களது குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. ப. சந்திரன்: அவைத் தலைவரவர்களே, அவையின் முன்னவர் அவர்கள் திருவாளர் பொன்னப்ப நாடார் அவர்களது மறைவு குறித்து அனுதாபத் தீர்மானத்தை முன் மொழிய அதனை வழிமொழிகின்ற வகையில் உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. ப. சந்திரன்[ 1977 ஜூலை 9

நான் மறைந்த மாபெருந் தலைவர் திரு. பொன்னப்ப நாடார்
அவர்களுடன் பழகுகின்ற வாய்ப்பினைப் பெறுதவன் என்ற வகை
யில் அது என்னுடைய துர்ப்பாக்கியம் என்றே கருதுகிறேன்.
நான் சட்டக்கல்லூரியில் இருந்து நேராக சட்ட சபைக்கு வந்ததன்
காரணமாக சட்ட சபையில் அவருடன் பழகும் வாய்ப்பை இழந்
திருப்பினும், சட்டக் கல்லூரி மாணவர்களின் பிரச்னைகள் வரும்
தருணத்தில் அவர்களுடன் பழகும் வாய்ப்பினைப் பெற்றிருக்
கிறேன். பிரச்னை எத்தனை பெரியதாக இருந்தாலும், அவர்கள்
எந்தக் கட்சி மாணவர்களாக இருந்தாலும் அவர்களை அழைத்து
நல்ல முறையில், அவர்களது சகோதரர்களைப் போன்று பழகி,
பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் நல்ல பண்பினை நான் கண்டிருக்
கிறேன். ஆக, அவர்கள் குறிப்பிட்ட கட்சி மாணவர்களுக்கு
மட்டுமல்ல, எல்லாக் கட்சி மாணவர்களுக்கும் தலைவராக விளங்
கினார்கள்.

அவர்கள், மறைந்த மாபெரும் தலைவர் திரு. காமராஜ்அவர்
களின் உண்மைத் தொண்டராக விளங்கினார்கள். அவர்களது
இறுதி மூச்சு உள்ள வரையில் அவ்வாறு விளங்கினார்கள். பெரிய
கதராடையுடன் வெண்மையாகக் காட்சியளிப்பார்கள். தலைவர்
காமராஜ் அவர்கள் மறைந்த பின்பு கட்சியிலிருந்து பலர் புதுக்
காங்கிரஸுக்குச் சென்ற பொழுதும் தன்னுடைய தலைவருடைய
கொள்கையில் மிகவும் பற்றுக் கொண்டவராகவே இறுதி நாள்
வரையிலும் பழைய காங்கிரஸ்காரராகவே இருந்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், தான் இறக்கும் பொழுதும தேசத்திற்
குத் தன்னுடைய உயிரை அர்ப்பணித்தார்கள். ஒரு வாரியத்
தின் சார்பாக வெளிநாட்டிற்குச் சென்று திரும்பும் பொழுது
விமான விபத்திற்குள்ளாகி மரணமடைந்தார்கள். அவர்கள்
இறக்கும்பொழுதும் தேசத்திற்காகத் தன்னைச் சமர்ப்பித்துக்
கொண்டார்கள். அன்னாரது மறைவிற்காக உழைப்பாளர் முன்
னேற்றக் கட்சியின் சார்பில் நான் அவர்களுடைய குடும்பத்தா
ருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே,
மாண்புமிகு அவை முன்னவரவர்கள் மறைந்த திரு. பொன்னப்ப
நாடார் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் முன்
மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து சில வார்த்தை
களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மறைந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த அவை
யிலே நம்மோடு இருந்து பணியாற்றியவர்கள். அவர்களோடு
ஐந்தாண்டுக் காலம் இந்தச் சட்ட மன்றத்திலிருந்து பணியாற்றக்
கூடிய நல்ல வாய்ப்பினைப் பெற்றவர்களிலே நானும் ஒருவன்
என்ற வகையில் மறைந்த பெரியவரைப் பற்றி நான் நன்றாக



1977 ஜூலை 9] [திரு. எம். ஏ. லத்தீப்]

அறிந்திருந்தேன். இங்கே, மற்றத் தலைவர்கள் எடுத்துச் சொல்லி
யதைப் போல பார்வைக்கு எளியவராகவும், தெளிந்த சிந்தனை
உடையவராகவும் ஆழ்ந்த தெய்வபக்தி உடையவராகவும் நாட்டுப்
பற்று உடையவராகவும் விவாதங்களில் கலந்து கொள்ளும்பொழுது
பெரும்பாலும் விவாதத்தில் விவேகத்தை வெளிப்படுத்தக்
கூடியவராகவும, தேவைப் படும்பொழுது வேகத்தைக் காட்டத்
தயங்காதவராகவும் அவர்கள் இந்த அவையிலே பணியாற்றி
யிருக்கிறார்கள். ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆக இந்த இரண்டு
மொழிகளிலேயும் மிகவும் சரளமாகத் தன்னுடைய கருத்து
க்களைச் சொல்லுவதில் வல்லவராக அவர்கள் விளங்கினார்கள்.

திருவாங்கூர்-கொச்சியிலே அவர்கள் சட்டமன்றத்தில் பணி
யாற்றியபொழுதுகூட தமிழ் நாட்டினுடைய தேவைகளுக்காக,
குமரி மாவட்டம் நாஞ்சில் நாடு தமிழ் நாட்டில் இணைக்கப்பட
வேண்டுமென்பதற்காக அயராது பாடுபட்டு வந்திருக்கிறார்கள்.
மனோன்மணியம் எழுதிய சுந்தரம் பிள்ளை அவர்கள், சதாவதானம்
செய்குத் தம்பி அவர்கள் தமிழுக்கு அளப்பரிய சேவை செய்து,
தமிழ் மொழிக்குச் சேவை செய்த நாஞ்சில் பகுதி தமிழ் நாட்
டோடு இணைந்திருக்க வேண்டுமென்பதிலே மிகுந்த ஆர்வத்தைக்
காட்டியவராக இருந்தார்கள். அந்தப் பகுதி தமிழ் நாட்டோடு
இணையவேண்டுமென்று போராட்டம் நடத்திய மாபெரும் தலைவர்
நேசமணி அவர்களுடைய நேசத்திற்குரியவராக பொன்னப்ப
நாடார் அவர்கள் விளங்கினார்கள். அவர்கள் இன்றையதினம்
நம்மை விட்டுப் பிரிந்திருப்பது உண்மையிலேயே நமக்கெல்லாம்
வருத்தத்தை தருகிறது.

அவர்கள் பல குழுக்களில் அங்கம் வகித்து நம்மோடு பணி
யாற்றி இருக்கிறார்கள். இங்கு மாண்புமிகு திரு. அழகர்சாமி
அவர்கள் சொல்லியதைப்போல அவர்களுடன் தமிழ் நாட்டின்
பல்வேறு பகுதிகளிலேயும், வெளி மாநிலங்களுக்கும் சென்று சட்ட
மன்ற உறுப்பினர் என்ற முறையிலே பணியாற்றக் கூடிய வாய்ப்
புகளை நாம் பெற்றிருக்கிறோம். அந்தக் காலங்களில் அவர்கள்
எவ்வளவு பண்போடு நடந்து கொள்வார்கள் என்பதை அறிந்
திருக்கிறோம். ஒரு குழுவின் தலைவராக இருக்கும் பொழுது
மாவட்டத் தலைநகர் ஒன்றிற்குக் குழுத் தலைவரும் உறுப்பினர்
களும் சென்றபொழுது அவருக்குத் தனி வாகனத்தை மாவட்ட
ஆட்சித் தலைவரவர்கள் ஏற்பாடு செய்து கொண்டு வந்து
இருந்தார்கள். ஆனால், அவர்கள் மற்ற உறுப்பினர்
களோடுதான் நான் வருவேனென்று, மற்ற உறுப்பினர்களோடு
பஸ்ஸிலேயேதான் வந்தார்களே தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர்
கொண்டுவந்த தனி வாகனத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

(முற்பகல் 9-40)

அதே மாதிரியாக, எல்லா சமுதாய மக்களும் மதிக்கக்கூடிய
தலைவராக அவர்கள் விளங்கினார்கள். எனக்கே கூட ஒரு அனு
பவம். குளச்சல் பகுதியிலேவகுப்புப் பிணக்கு ஏற்பட்டபொழுது

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 9

நான்கூட அங்கே சென்றிருந்தேன். அங்கே, சமரசம் செய்வதற்கான பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட பொழுது, எல்லா வகுப்பைச் சேர்ந்தவர்களும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதையே நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று ஒருமித்துக்கூறியதை நான் கேட்டிருக்கிறேன். அவ்வளவு சிறப்புமிக்கவராக, எல்லாத் தரப்பினராலும் பாராட்டப்படக் கூடியவராக, போற்றப்படக் கூடியவராக விளங்கிய திரு. பொன்னப்ப நாடார் நம்மோடு இல்லாமலிருப்பது நமக்குப் பெருத்த வருத்தத்தையும் கவலையையும் அளிக்கிறது. மறைந்த அன்னாரது குடும்பத்திற்கு என் சார்பாகவும் இந்திய மூஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, மாண்புமிகு அவை முன்னவர் எடுத்துச் சொன்ன கருத்துக்களோடு என் கருத்தையும் இணைத்து, அத்தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்னாருடைய மறைவுக்கு வருத்தம் தெரிவிக்கும் வகையில் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

இரங்கல்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று கேள்வி நேரம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (3) உரிமைப் பிரச்னை.

## " அண்ணா " நாளிதழ் மீது எழுப்பப்பட்ட பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் " அண்ணா " பத்திரிகையின் மீது ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார். அதை இப்பொழுது அவையில் வாசிக்கிறேன்.

Under Rule 194-A of the Tamil Nadu Legislative Assembly Rules I wish to raise the following matter of breach of privilege in the House:—

'On 6th July 1977 I raised a point of order in the House regarding the listing of condolence resolutions in an improper order. The Leader of the Opposition supported my point strongly along with the



1977 ஜூலை 9] [பேரவைத் தலைவர்]

leader of the Congress group. Hon'ble A. R. Marimuthu and the leader of the Janatha group Hon'ble James, in certain terms. The speeches of the leaders have appeared in several newspapers.

But in 'Anna' the Tamil daily, having the Hon'ble Chief Minister as its founder and coming from Madras, the views of the Leader of the Opposition has been purposely suppressed and mischievously reported so as to mislead the public.

The paper has published the news in the fourth page under the caption :—

" சட்ட சபையில் முதல் ஒழுங்கு பிரச்னை புரட்சித் தலைவர் நாஞ்சிலார் பதில் "

The views of the Leader of the Opposition have been published as follows :—

" கருணாநிதி : மூன்று தீர்மானங்களையும் ஒன்றாகவேபடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது". ஆகவே, அதில் சங்கடம் ஒன்றுமில்லை ".

This is the only portion published in the news item purported to have been made by the Leader of the Opposition. The fact remains quite contrary to this. Anybody who reads the news item will certainly come to conclusion that Leader of the Opposition was against the point of order raised by me and supported the Leader of the House.

This is certainly a matter affecting my privilege as a Member of the House. There is a *prima facie* case for referring the matter to the Committee of Privileges. Therefore I request you that I may be allowed to raise this issue in the Assembly ".

இதை நன்றாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபின், நான் இந்த முடிவை—தீர்ப்பை அறிவிக்கிறேன். அதற்குப் பின்னாலே அதைப்பற்றி பிரச்னை எழுப்புவதிலே நியாயமில்லையென்று கருதுகிறேன்.

பத்திரிகையில் வந்துள்ள செய்தியும், அவையில் சுருக்கெழுத்து மூலம் எடுத்துள்ளதும் ஒன்றாகவே இருக்கிறது. உறுப்பினர் கூறும் குற்றச்சாட்டு எல்லாம் அவை நடவடிக்கை எழுத்திற்கு எழுத்து சரியாக இல்லை என்பதுதான். பத்திரிகையில் பொதுவாக அவைக் குறிப்புகள் முழுவதுமாக அல்லாமல் குறிப்பிட்ட சில பகுதிகள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு வெளியிடப்படுகின்றன. அவ்வாறுதான் " அண்ணா " பத்திரிகையிலும் செய்தி வந்துள்ளது. ஆகவே, இதில் அவை உரிமை மீறல் பிரச்னை இல்லை. ஆகவே, இது குறித்து உரிமைப் பிரச்னையைக் கொண்டுவர என்னுடைய இசைவை மறுக்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, . . . . . .

[1977 ஜூலை 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு கொடுத்த பிறகு எழுப்பாதீர்கள்.

திரு. மு. கருணநிதி : தலைவரவர்களே, உங்களுடைய தீர்ப்பை நாங்கள் மறுத்திடவும் இல்லை, அதற்கு மாருகப் பேசிவிடவும் இல்லை. ஆனல் தன்னிலை விளக்கம் அளிக்க உரிமையிருக்கிறது. அவை முன்னவரிடத்திலே நான் கேட்டுக்கொண்டது, குடியரசுத் தலைவருக்கான இரங்கல் தீர்மானத்தை முதலிலே எடுத்துக்கொள்ளுங்கள். அதற்கு முதலிடம் கொடுத்து, மற்ற வர்களுக்குப் பின்னல், இரண்டாவது, மூன்ருவது இடம் தந்து இரங்கல் தீர்மானங்களை முன்மொழியுங்கள் என்பது. குடியரசுத் தலைவர் பதவியிலிருந்தவருக்கு முக்கியத்துவம் அளித்து அந்த இரங்கல் தீர்மானத்தை முதலில் படியுங்கள் என்று நான் குறிப்பிட்டதுதான் முக்கியம். அது விடுபட்டு, இதை மட்டும் பத்திரிகையில் போட்டுவிட்டதனல், தவருன நோக்கம் பொதுமக்களிடத்தில் வந்துவிட்டது என்பதைத்தான் நான் தெரிவிக்க விரும்புகிறேன். தங்களுடைய் தீர்ப்பை நாங்கள் மறுக்கவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : அண்ணு பத்திரிகையில் வந்திருக்கிற, எதிர்க்கட்சித் தலைவர் பேசியதாகப் பிரசுரம் ஆகியிருக்கிற அந்தக் கருத்து, சபையிலிருக்கிற அனைவருக்கும் தெரியும். அது நூற்றுக்கு நூறு உண்மை. எதிர்க்கட்சித் தலைவர் ஆரம்பத்தில் கிளப்பிய பிரச்னை, அதைத் தனியாகக் கொண்டு வந்திருக்கலாமே, அல்லது காலஞ்சென்ற திரு. பக்ருதீன் அலி அவர்களுக்கான தீர்மானத்தை முதலில் கொண்டு வந்திருக்கலாமே, ஊரிலே இருப்பவர்கள் தவருகக் கருத மாட்டார்களா, ஒரு பெரிய மனிதருக்கு நாம் அவமரியாதை செய்ததாக நினைக்க மாட்டார்களா, என்பது. அதற்குப் பிறகு நமது எதிர்க்கட்சித் தலைவர், சரி, மூன்றும் இன்றைக்குக் கொண்டு வருவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஒன்றும் கவலையில்லையென்று குறிப்பிட்டதை, 'நான் அப்படிப் பேசவில்லை, என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்' வாதாடுவார்களானல், நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பணிவன்போடு . . . . . . . .

* திரு. க. அன்பழகன் : ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன் அவையிலே இருந்தவன் என்ற முறையில். அந்த மூன்று தீர்மானங்களும் ஒன்ருக வந்திருந்தாலும் குடியரசுத் தலைவரைக் குறித்ததை முதலிலேயே கொண்டு வருவதால் எந்தச் சங்கடமும் இல்லையென்றுதான் சொல்லப்பட்டது. எதிர்க்கட்சித்தலைவர் அப்படிச் சொன்னபிறகு, முதலமைச்சர் அவர்கள் அதை முதலிலே படிக்கலாம் என்ருர்கள். அப்படிச் சொன்னபிறகு, முதலிலே மற்ற இரண்டையும் ஒன்ருகக் கொண்டு வரலாம் என்றும் பிறகு, குடியரசுத் தலைவருக்கான





இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம் என்றும் முன்ன வராலே சொல்லப்பட்டு, பின்னர் அவைத் தலைவராலே அவ்வாறு சொல்லப்பட்டது. அது வேண்டுமென்றே பத்திரிகையில் வெளியிடாமல் விடப்படும் என்ற நிலைமை உருவாவது அவையிலே எது நடைபெற்ருலும், எந்த விவாதத்தை வேண்டுமானலும் எப்படியும் மாற்றிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தினுடைய விளைவாகவே அது அமைவதாகும் என்பதை உணர்த்த விரும்புகிறேன்.

திரு. மு. கருணநிதி : அது தவருக வெளியிடப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்தாகும்.

தலைவரவர்களே, இன்னெரு எடுத்துக்காட்டு வேண்டுமானல், நான் அன்றையதினம் சபாநாயகருடைய நாற்காலியைப் பற்றிப் பேசும்பொழுது வெலிங்டன் பிரபுவும் வெலிங்டன் சீமாட்டியும் அளித்த நாற்காலி இதுதானே என்று குறிப்பிட்டேன் ஆனல், "...... வெலிங்டன் பிரபுவும் வெலிங்டன் சீமாட்டியும் அமர்ந்திருந்த ஆடம்பரமான நாற்காலி இது. இதை அவர்கள் வழங்கினுர்கள்". என்று பேசியதாகப் போடப்பட்டிருக்கிறது. இதே அண்ணுப் பத்திரிகையில். ஆக, இதில் தவருக வந்திருக்கிறது.

ஆனலும், இப்பத்திரிகை இப்படி பிரசுரித்ததை உரிமைப் பிரச்னையாக எழுப்பி, அதன்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அளவிற்குக் கடுமையான நடவடிக்கை தேவையில்லையென்பதுதான் என்னுடைய கருத்து. இருந்தாலும் அவைத் தலைவர்கள் இனிமேல் இப்படி தவருகப் பத்திரிகையில் வராது என்று உத்தரவாதம் அளித்தால் போதுமானது. அதற்குப் பொதுவாக ஒரு வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) செங்குன்றம் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ரெட்ஹில்ஸ் பகுதி சம்பவம் பற்றி திருவாளர்கள் சோ. அழகர்சாமி, ஓ. சுப்பிரமணியம், க. சுப்பு ஆகியோர் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தில் உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் நிகழ்ச்சி எந்தத் தேதியில் நடந்தது என்ற விவரம் அளிக்கவில்லை. இருப்பினும் உறுப்பினர் 28-ம் தேதி நடந்த சம்பவத்தைத்தான் குறிப்பிடுகிருர்கள் என்று நம்புகிறேன். உறுப்பினர்கள் திரு. க. சுப்புவும், திரு. ஓ. சுப்பிரமணியமும் 30-ம்தேதி அன்று நடந்தது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [1977 ஜூலை 9

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கும்போது உறுப்பினர்கள் நிகழ்ச்சி எந்தத் தேதியில் நடந்தது என்ற விவரத்தை விளக்கமாகக் கொடுக்க வேண்டும். இருப்பினும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள விவகாரம் எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு உகந்ததாகும், எவ்வாறு இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு ஏற்ற தாகும் என்பதையும் விளக்கவேண்டும். மேலும் இதுபற்றி ஒரு விசாரணைக் கமிஷனும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விவகாரத்தில் கமிஷனின் நடவடிக்கைகள் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு உள்ளே போகாமல் சுருக்கமாக, இது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு ஏற்றதாகும் என்பதை விளக்கவேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, சென்னைக்கு அருகில் ரெட்ஹில்ஸ் பகுதியில் எவ்விதக் காரணமுமின்றி போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் பலர் காயமடைந்துள்ளதால் அப்பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது பற்றி விவாதிக்க பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளேன். 29-6-1977 அன்று அந்தப் பகுதியிலே போலீஸ் அத்துமீறிப் பிரவேசித்து, அங்குள்ள மக்களையெல்லாம் விரட்டியடித்து துன்புறுத்தியதோடு மட்டுமல்லாமல், அங்குள்ள கடைகளையெல்லாம் சூரையாடியிருக்கிறார்கள். அதற்கு முன்னால் நடந்த ஏதோ ஒரு சம்பவத்தை வைத்துக்கொண்டு, ஏதோ லாரி டிரைவர் இந்த போலீஸ் அதிகாரி சென்ற வானைத் தாண்டி வேகமாகச் சென்று விட்டார் என்ற கோபத்தை வைத்துக்கொண்டு, அவரை விரட்டிப் பிடித்து, அடித்து, அவரிடத்திலேயுள்ள சில ரெக்கார்டுகளையெல்லாம் பறித்துக் கொண்டதன் காரணமாக, அங்குள்ளவர்கள் இதைக் கேட்கப் போன நேரத்தில், அவர்களையும் கடுமையாகத் தாக்கி, அதற்குப் பின்னால், துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டார்கள், அந்தப் பகுதியிலே உள்ளவர்கள், கிராமத்திலே உள்ளவர்கள் எதிர்த்துப் பேசிவிட்டார்கள் என்று அந்தப் பகுதி எஸ்.பி. அவர்களை மிகக் கடுமையாகத் துன்புறுத்தியதன் காரணமாக, அந்த மக்கள் 2 நாட்கள் வெளியே வரவும் முடியாமல் அஞ்ச வேண்டிய நிலமையிருந்தது. அதற்குப் பின்னாலே தான் சம்பந்தப்பட்ட தலைவர்களுடன் சென்று கலெக்டரிடம் முறையிட்ட பின்னாலே ஒரு விசாரணை அமைக்கப் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

(முற்பகல் 9-50)

அந்த மாதிரி சம்பவம் கடந்த காலத்திலே, ஆங்கில ஆட்
யிலே நடந்திருக்கிறது. அதுவும் சாதாரண மக்கள், உழை
கின்ற மக்கள், பாடுபடுகின்ற மக்கள் ஒரு சில குறைகளை எழுப்
லும் அவர்களைப் பயமுறுத்தி தடுத்து எதையும் சொல்ல விட
மல் தடுப்பது மட்டுமில்லாமல், அவர்களை கடுமையாக பாதி
கின்ற முறையில், சாதாரண மக்களே கூட வெளியே நடமா



1977 ஜூலை 9] [திரு. சோ. அழகர்சாமி]

முடியாத அளவில் கொடுமைகள் நடந்திருக்கின்றன. இத்தகைய
கொடுமைகள் நிகழ்வதற்குக் காரணமாக இருந்த போலீஸ் அதி
காரியின் கடந்த கால சர்வீசைப் பார்க்கும்போது, அவர் முகவை
மாவட்டத்திலே இருந்ததாக அறிகிறேன். அப்போது கூட
அங்கே தொழிலாளிகள், விவசாயிகள், கடுமையாக பாதிக்கப்
படக்கூடிய நிலையில் அவர் நடந்து கொண்டிருக்கிறார் என்று
அறிகிறேன். அப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நடக்காமல்
இருக்க வேண்டுமென்று, இங்கே என்ன நடந்தது, ஏன் நடந்தது
என்பதைப் பற்றி பூரணமாக விவாதிக்க வேண்டும். ஆகவே,
இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து அதனை விவா
திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேசுகின்ற திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : அவைத் தலைவர் அவர்களே, சமீ
பத்தில் நடந்த துப்பாக்கிச்சூடு பிரயோகம் அந்தப் பக்கத்து
மக்களுக்கு மிகவும் பீதி உண்டாக்கி இருக்கிறது. அத்தியாவசிய
காரணம் இல்லாத நிலையில் சிறு சிறு காரணங்களுக்காக போலீ
சார் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது என்றால் இந்த நாட்டில்
பயங்கரமான நிலமையும், சூழ்நிலையும் ஏற்படுவதற்கு ஏதுவாகும்.
ஆகவே, சரியான முறையில் இந்த போலீஸ்காரர்கள் தங்களு
டைய நியாயமான உணர்வுகளை விட்டுவிடாமல் மனசாட்சியின்படி
சட்டத்தை அமல் செய்வதன் மூலம் துப்பாக்கிப் பிரயோகம் தடுக்
கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்த மாதிரி
சம்பவங்களுக்குக் காரணம்ஆக இருந்த போலீஸ் அதிகாரிகளைத்
தண்டிப்பதோடு, இந்தப் பகுதியில் மிகவும் பதட்ட நிலை ஏற்பட்டி
ருக்கிற காரணத்தால் அதை விவாதிக்க இந்த சபையின் அலுவல்
களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு
கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சம்ப
வம் நடைபெற்ற இடம் செங்குன்றம்-ரெட்ஹில்ஸ் என்னுடைய
தொகுதியிலே நடந்திருக்கிறது. நான் முதலிலேயே நோட்டீசு
கொடுத்திருக்கிறேன். முதலிலே நான் கொடுத்தபோது என்ன
காரணத்தாலோ தள்ளிவிட்டிருக்கிறீர்கள். The matter sought to be
raised does not involve more than ordinary administration of law.
என்று பதில் அனுப்பியிருக்கிறீர்கள். திரும்பவும் நான் கொடுத்
தேன். அது ஆர்டினரி அட்மினிஸ்ட்டிரேஷன்' க்கு உட்படுவது
என்று முன்னால் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது என்னை
மூன்றாவதாக அழைத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதற்கு
நான் பதில் சொல்ல வேண்டும். திரு. சுப்பு அவர்கள் re-submit
செய்து மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்

டார்கள். அதற்கு முன்னாலேயே இரண்டு உறுப்பினர்கள் தந்
திருக்கிறார்கள். ஆகவே, உள்நோக்கம் எதுவும் இல்லை. இங்கே
எடுத்துக் கொள்ளும்போது உங்கள் பெயர் மூன்றாவதாக
வந்திருக்கிறது.

<u>திரு. க. சுப்பு :</u> தலைவர் அவர்களே, மூன்று தீர்மானங்கள்
வந்து, அதிலே ஒன்றைத் தள்ளிவிட்டு இரண்டை வைத்திருக்
கிறார்கள். அதுவே இம்பிராப்பர் (Improper) என்னுடைய
தொகுதியில் நடந்ததைக் கேட்கிறபோது என்னை மூன்றாவதாக
அழைக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் 'இம்பார்ஷியல்' தான்
அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் நல்ல வழக்கறிஞர்
என்று கருதுகிறேன். அவையிலே எதையும் பேசிவிடலாம்
என்று கருதக்கூடாது. எனவே 'பார்ஷியல்' 'இம்பார்ஷியல்'
என்றெல்லாம் சொல்ல வேண்டாம். தயவு செய்து பிரச்சினைக்கு
வாருங்கள்.

<u>திரு. க. சுப்பு :</u> சபாநாயகர் அவர்களே, உங்களைக்
குற்றம் சொல்லவில்லை. என்னுடைய தொகுதியிலே நடை
பெற்ற சம்பவத்திலே என்னுடைய பெயரைப் படிப்பதிலே
என்ன கஷ்டம். அதற்காகத்தான் சொன்னேன். அந்தச் சம்ப
வம் நடைபெற்ற தேதி குறிப்பிடவில்லை என்று சொல்லு
கிறார்கள். கொடுத்து இருக்கிறேன். வாசித்துப் பாருங்கள்.

"The serious situation arising out of the firing at Red Hills on
29-6-77 by the Police and causing sev're injuries to several persons
by beating them with lathies and boots mainly due to the failure of the
Government to prevent them in time by taking appropriate steps on the
responsible representations to the higher authorities"
என்று நான் கொடுத்து இருக்கிறேன். மாண்புமிகு முதல்வர்
பதவியேற்றதற்கு முன்னாலேயே நடந்திருக்கிறது.
அவரைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர் 30-ந் தேதி
பதவி ஏற்றார். இது 29-ந் தேதி விரும்பத் தகாத நிகழ்ச்சியாக
நடந்திருக்கிறது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். அதற்குப் பின்னாலும் ஸ்ரீவைகுண்டம்,
சென்னை போன்ற இடங்களிலே உள்ள போலீசு நிலையங்களில்
மோசமான, மானபங்கப்படும்படியான நிகழ்ச்சிகள் நடந்
திருக்கிறது. அதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்.
அவற்றை எல்லாம் குற்றம் என்று சொல்லவில்லை. இன்று
அவைக்கு பேரவைத் தலைவர் மூலமாக தவறான தகவலைத்
தந்திருக்கிறார்கள். தப்பாக, விசாரணைக் கமிஷன் அமைக்கப்





பட்டிருக்கிறது என்று தவறான தகவல் கொடுத்திருப்பதால்
எனக்கு முன்னாலே பேசிய இரண்டு நண்பர்களும் முழுமையாகப்
பேச முடியவில்லை. ஃபால்சாக (false) தகவல் கொடுத்
திருக்கிறார்கள். விசாரணைக் கமிஷன் அமைக்கப்படாமலேயே
அதை அவைக்கு தவறாக பேரவைத் தலைவர் மூலமாக
தகவல் கொடுத்தால் "அட்ஜர்ன்மெண்டு மோஷ
னில்" பேசுவதற்குச் சங்கடமாக இருக்கும். அச்சமான நிலைமை
இருக்கும். விஷயத்திற்கு வருகிறேன்.

29—6—1977 அன்று சென்னைக்கு அருகில் இருக்கும்
ரெட்ஹில்ஸ்லே ஒரு அதிகாரியினுடைய தவறான போக்கினாலே இது
நடந்தது. ஒரு லாரி டிரைவருக்கும் ஒரு சப் இன்ஸ்பெக்டருக்
கும் ஏற்பட்ட தகராறு காரணமாக லாரி டிரைவரைக் கைது
செய்ய நினைத்தார்கள். முடியவில்லை. ஆனால், ஊர்காரர்களைப்
பழி வாங்கினார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் படித்ததோடு
நிறுத்திவிடுவது கூட முறையானதாக இருக்கும். இருந்தாலும்
நீங்கள் விளக்கம் சொல்ல வேண்டுமென்று வாய்ப்பு அளித்தால்
நீங்கள் விவாதத்திற்குள் நுழைகிறீர்கள். அது வேண்டாம்.
சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. க. சுப்பு :</u> — தலைவர் அவர்களே, ஏன் நீங்கள் குறுக்கிடு
கிறீர்கள்.? மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூர்ந்து கவனிக்
கிறார்கள். முதல் அட்ஜர்ன்மெண்டு மோஷன் அல்லவா, நானாகப்
பதில் சொல்லட்டுமே. ஏன் நீங்கள் தடுக்கிறீர்கள்?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எல்லா உறுப்பினர்
களும் உங்களைக் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

<u>திரு. துரைமுருகன் :</u> தலைவர் அவர்களே, நீங்கள் மன்றத்
திற்குத் தவறான தகவல் தருகிறீர்கள் என்று அவர் சொன்னார்
அதற்குத் தங்கள் தீர்ப்பு என்ன ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> முதலமைச்சர் பதிலுக்குப்
பிறகு அதற்குக் கடைசியில் தீர்ப்புக் கொடுக்கப்படும்.

<u>திரு. துரைமுருகன் :</u> தலைவர் அவர்களே, நீங்கள் விசா
ரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னீர்கள்.
அது தவறான தகவல் என்று தெரிகிறது. ஆகவே அதைச் சொல்லி
விடுங்கள் முதலிலே.................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சுப்பு நீங்கள்
சீக்கிரம் முடியுங்கள்.

[1977 ஜூலை 9

திரு. க. சுப்பு : ஷார்ட்டாக முடித்து விடுகிறேன். இந்த
லாரி டிரைவர் சப் இன்ஸ்பெக்டர் தகராறு நடந்த பிறகு 29-ம்
தேதி காலை 2 மணி அளவில் ஒரு லாரி நிறைய வந்த போலீசார்
கிராமத்திலே இருந்தவர்களை மாதவரம், சோழவரம் போலீஸ்
நிலையங்களிலே 100 பேர்களுக்கும் மேலாகக் கைது செய்து துன்
புறுத்தி இருக்கிறார்கள். நான் உடனே, டி.எஸ்.பி., எஸ்.பி.,
ஆர்.டி.ஓ. போன்ற அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு
நடவடிக்கை எடுக்கக் கோரினேன். அவர்கள் அதற்கு அந்த
டிரைவரைக் கொண்டு வந்தால்தான் விட முடியும் என்று
சொன்னார்கள். அதற்குப் பிறகு நானும் மற்றத் தலைவர்
களுடனும் சென்று ஆளுநரைப் பார்த்து இந்த மாதிரி லத்தி
சார்ஜ் நடந்திருக்கிறது, 100 பேர்களுக்கு மேலாக கைது
செய்யப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் தலையிட்டு அவர்களை விடு
தலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆளுநர்
அவர்கள் எங்கள் கோரிக்கையை உடனே ஏற்று உத்திரவு
போட்டார்கள். ஹோம் செக்ரட்டரியிடம் சொன்னார்கள்.
மறுபடியும் கலெக்டரை அனுப்பினார்கள். ஆனால் அதற்கு
முன்னாலேயே ஃபைரிங் நடந்து விட்டது. அந்த ஃபைரிங்
தேவைதானா ? என்பதை விசாரிக்க ஒரு நிர்வாக விசாரணையை
ஆர்.டி.ஓ. விசாரணையைப் போட்டிருக்கிறார்கள். நிர்வாகத்
தவறுகளை ஆர்.டி.ஓ. விசாரணையில் கண்டுபிடிக்கலாம். நீதி,
விசாரணைக்குப் பதில் நிர்வாக விசாரணையைப் போடுவதின்மூலம்
குழப்பத்தை ஏற்படுத்திவிடுவார்கள். நிர்வாகம் தப்புப்
பண்ணினால் ஆர்.டி.ஓ. என்குயரி. That is not a Judicial
enquiry யார் தவறு பண்ணினாலும் கீழே இருப்பவர்களை
சஸ்பெண்டு செய்வது என்பது தவறு. ஃபைரிங்குக்கு ஒரு
கான்ஸ்டபிளோ, ஹெட் கான்ஸ்டபிளோ ஆர்டர் கொடுக்க
முடியாது. அது பற்றி நான் அன்றைக்கு எஸ்.பி., டி.எஸ்.பி.
என்று புகார் கொடுத்திருக்கிறேன். ஆளுநர் அவர்களை,
மீண்டும் மாலை 7-30 மணிக்கு நானும், திரு. நெல்லை ஜெப
மணி அவர்களும், டி.பி. ஏழுமலை அவர்களும் சந்தித்து ஒரு
நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். வெளி
மாநில நீதிபதி கூடத் தேவையில்லை. இங்கே இருக்கிற சிட்டிங்
ஜட்ஜே போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசிக்கொண்
டிருப்பதில் அர்த்தம் இல்லை. முழு விளக்கமும் சொல்ல
வேண்டும், உங்கள் மனதில் இருப்பதை எல்லாம் சொல்ல
வேண்டும் என்றால் 1½ மணிவரையில் கூடப் போதாது. சுருக்க
மாக முடியுங்கள்.

[முற்பகல் 10-00]

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, நாங்கள் கேட்
டிருக்கும் கோரிக்கை எல்லாம் ஒரு நீதி விசாரணை வேண்டும்.
டூது இங்கே இருக்கும் நீதிபதியை வைத்து நடத்தினால் போதும்



1977 ஜூலை 9] [திரு. க. சுப்பு]

வேறு மாநிலத்திலிருந்து வரவேண்டுமென்று கேட்கவில்லை.
சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை உடனடியாக
எடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை, மேல் அதிகாரிகள்
உடனடியாக சஸ்பண்ட் செய்தால்தான் நீதி விசாரணையை
நல்லவகையில் நடத்துவதற்கு உதவியாக இருக்கும். இந்த இரண்டு
விஷயத்தைக் குறித்தும் நிறைய தகவல்கள் தருவதற்கு வசதியாக,
இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க இந்த மன்றத்தின் பிற
அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டு
மென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, திரு. கே. பி. ஆர். பிரபாகரன் என்பவர் மாதவரம்
காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிகிறார்.
27—6—1977 இரவு கம்பிக் களவுகள் தடுப்புப் பணியாக
தமிழ் நாடு மின்வாரியத்திற்குச் சொந்தமான ஜீப்பில் மேற்
குறிப்பிட்ட உதவி ஆய்வாளர் சென்னை—நெல்லூர் நெடுஞ்
சாலையில் சுற்றுக் காவல் செய்து கொண்டிருந்தார். அந்த
நேரத்தில், செங்குன்றம் நோக்கி ஒரு லாரி மிக வேகமாக
வந்து கொண்டிருந்ததைச் சந்தேகப்பட்டு, லாரியை நிறுத்த
சைகை செய்தார். ஆனால் அந்த லாரி நிற்காமல் வேகமாகச்
செல்லவே, உதவி ஆய்வாளர் ஜீப்பில் பின் தொடர்ந்து
சென்று செங்குன்றம் அருகில் நிறுத்தி, லாரியை சோதித்த
பின்னர், போலீஸ் சைகைக்குப் பணியாத குற்றத்திற்காக
நடவடிக்கை மேற்கொள்ள லாரியின் டிரிப் ஷீட்டை எடுத்துக்
கொண்டு டிரைவரை மாதவரம் காவல் நிலையம் வரப் பணித்து
ஜீப்பில் திரும்பி விட்டார். இவர் திரும்பவும் தனது சுற்றுக்
காவல் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தபோது
மேலே குறிப்பிட்ட லாரியின் டிரைவர் சில குண்டர்களை
பயங்கர ஆயுதங்களுடன் லாரியில் ஏற்றிக்கொண்டு வந்து,
ஜீப்பின் டிரைவரையும், உதவி ஆய்வாளர் திரு. பிரபாகரனை
யும், மற்றும் அவருக்கு உதவிக்கு வந்த இருவரையும் தாக்கி
இரத்த காயம் ஏற்படுத்திவிட்டு, டிரிப் ஷீட்டையும் பறித்துக்
கொண்டு தப்பி விட்டனர். இந்த நிகழ்ச்சியின் சம்பந்தமாக
மாதவரம் காவல் நிலையக் குற்ற எண் 902/77 பிரிவு 147,
148, 307, 332 இ.பி.கோவில் வழக்கு ஒன்று பதிவு செய்து
புலனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் புலனாய்வு மேற்கொண்ட செங்குன்றம் துணை
ஆய்வாளர் திரு. மைக்கேல் மோகன்தாஸ், இவ்வழக்கில் உதவி
ஆய்வாளரைத் தாக்கியவர்கள் அடையாளம் தெரிந்த, ஆனால்
பெயர் தெரியாதவர்களாக இருந்த காரணத்தால், செங்
குன்றத்தில் லாரி டிரைவர், கிளீனர் மற்றும், காலிகள் ஆக
42 நபர்களை 28—6—1977 இரவு பிடித்து விசாரித்து,
மேற்குறிப்பிட்ட வழக்கில் சம்பந்தப்படாதவர்களெனத் தெரிந்த
22 நபர்களை உடனடியாக அனுப்பி விட்டார். தாக்கப்பட்ட

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 9

உதவி ஆய்வாளர் திரு. பிரபாகரன் உடனடியாகக் கிடைக்கா
மல் வேறு பணியில் இருந்ததால், மீதமுள்ள 20 நபர்களை
அடையாளம் காட்டுவதற்கு வேண்டி மாதவரம் காவல் நிலை
யத்தில் வைத்திருந்தார்.

இதற்கிடையில் 29—6—1977 காலை சுமார் 8 மணிக்கு
செங்குன்றம் காவல் நிலையத்தின் எதிரில் சுமார் 500 நபர்கள்
கூடி காவல் துறையினரால் பிடிக்கப்பட்டவர்களை உடனடியாக
நிபந்தனையின்றி விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.
இதுவன்றி செங்குன்றம் வழியாகச் செல்லும் சென்னை, நெல்லூர்
முக்கிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கு ஊறு விளைவிக்கின்ற
வகையில் சாலையை அடைத்து 3 லாரிகளை நிறுத்தி விட்டனர்.
இதனால் முக்கிய சாலையின் போக்குவரத்து தடைப்பட்டு பல
பயணிகளும், பொது மக்களும் பெரிதும் அல்லலுற்றனர்.
மாதவரத்தில் வைத்திருந்த—வழக்கில் சம்பந்தப்பட்டவர்
களாகக் கருதப்பட்ட 20 நபர்களையும் போலீஸ் லாரியில்
ஏற்றிக்கொண்டு செங்குன்றம் சென்ற துணை ஆய்வாளர்
மைக்கேல் மோகன்தாஸ் செங்குன்றம் காவல் நிலையத்தை
அடைய இயலவில்லை. பெரும் இடையூறுகளுக்குப் பின்னர்
மேற்சொன்ன நபர்களை செங்குன்றத்தில், தாக்கப்பட்ட உதவி
ஆய்வாளர் பிரபாகரன் அடையாளம் காட்டுவதற்காக வைத்
திருந்தார்.

செங்குன்றம் அடைந்த துணை ஆய்வாளர், நிலைமை மோச
மானதை அடுத்து திருவொற்றியூர் டி.எஸ்.பி. அவர்களுக்கு
தகவல் தெரிவித்தார். டி.எஸ்.பி. அவர்கள் செங்குன்றத்தை
காலை 9½ மணிக்கு (29—6—1977) அடைந்து, காவல்
நிலையத்தின் எதிரில் நின்ற கூட்டத்தினரின் குறைகளை கேட்டு,
சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுப்ப
தாக உறுதி அளித்து, மேலும் பிடித்து வைக்கப்பட்டவர்கள்
யாரும் கைது செய்யப்படவில்லை எனவும், அடையாளம்
காட்டப்பட்ட பின்னர், சம்பந்தப்படாதவர்கள் விடுவிக்கப்
படுவர் என உறுதியளித்து, கூட்டத்தினரை அமைதியாகச்
கலைந்து செல்லும்படியும், போக்குவரத்து இடையூறுகளை அகற்றும்
படியும், கேட்டபோது, கூட்டத்தினர் செங்குன்றப் பகுதி சட்டப்
பேரவை உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் வரும் வரை
அவ்விடத்தை விட்டு அகலமாட்டோம் என ஆணித்தரமாகச்
சொல்லி மறுத்துவிட்டனர்.

ஒவ்வொரு நிமிடமும் கூட்டம் அதிகமாமவே, நிலைமை
கட்டுக்கடங்காத சூழ்நிலை உருவாகும் அறிகுறிகள் தெரிந்து,
மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்குத் தகவல் தெரிவிக்கப்
பட்டது. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள்
ஆயுதப் படை காவலர்களுடன் (2 செக்ஷன்) காலை 10-50



1977 ஜூலை 9] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மணிக்குச் செங்குன்றம் வந்தடைந்தார். அப்போது
காவல் நிலையத்தை முற்றுகையிட்ட கூட்டம் சுமார்
2,000 இருக்குமென மதிப்பிடப்பட்டது. கூட்டத்தின்
முன்னோடியாக — தலைவர்களாக இருப்பவர்களெனக்
கருதப்பட்ட சிலரை அணுகி காவல் துறைக் கண்காணிப்பாளர்
அவர்கள், கூட்டத்தினரின் குறைகளை உடனடியாக அவ்விடத்தி
லேயே விசாரித்து, சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளின்
மீது கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து, கூட்டத்தைக்
கலைந்து செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தார். போக்குவரத்
துக்கு இடையூறு ஏற்பட்டிருப்பதால் பொதுமக்களுக்கு ஏற்
பட்டுள்ள தொல்லைகளை விளக்கியும் கூட்டத்தினர் செவிமடுக்க
வில்லை. அதுமட்டுமன்றி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. சுப்பு
அவர்கள் வரும்வரை யாரும் போகப் போவதில்லை என மறுத்து
விட்டனர். அத்துடனில்லாமல் உயர் அதிகாரிகளை வன்மொழி
களால் வசைபாடவும் செய்தனர். நிலைமை மோசமாகிக்
கொண்டே வந்தது. உடனே காவல் கண்காணிப்பாளர் அவர்கள்
அரை மணிநேரம் அவகாசம் தருவதாகவும், அதற்குள் சட்டப்
பேரவை உறுப்பினர் அவர்கள் வருவதற்கு சாத்தியப்படவில்லை
யெனில் கூட்டத்தில் முக்கியமானவர்கள் முன்னிலையில் உடனடி
விசாரணை தொடங்கி நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவித்
தார். மேற்சொன்ன விசாரணைக்கு முன்னதாகக் கூட்டம் கலைய
வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

காலை சுமார் 11-10 மணிக்கு (29-6-1977) கண்ணீர்புகை
காவலர் குழுவை ஏற்றிவந்த காவல்துறை லாரி, செங்குன்றம்
காவல் நிலையத்தை அடைய முடியாதவாறு, சுமார் 50 கெஜ
தூரத்திலேயே கூட்டத்தினரால் நிறுத்தப்பட்டு, அதனுள்ளிருந்த
காவலர்கள் கற்களாலும், கட்டைகளாலும் தாக்கப்பட்டு காயப்
படுத்தப்பட்டனர். காவல்துறை லாரியும் கண்ணாடிகள் உடைக்
கப்பட்டு பெரிதும் சேதப்படுத்தப்பட்டது. காவலர்களும், லாரி
யும் தாக்கப்படுவதை அறிந்த காவல் கண்காணிப்பாளர் அவர்கள்,
திருவொற்றியூர் உதவி காவல் கண்காணிப்பாளர், மற்றும் காவலர்
குழுவுடன் லாரியை அணுகியபோது தொடர்ந்து தாக்கப்படவே,
கூட்டத்தினர் முறையாக எச்சரிக்கப்பட்டு கண்ணீர்புகை குண்டு
மூன்று வெடிக்கப்பட்டது. கூட்டம் சிறிது கலைந்தது. ஆனால்
கலைந்தவர்களும், காவல் நிலையத்தின் முன் நின்றவர்களும் காவல்
நிலையத்தை நோக்கி ஓடித் தாக்கினர். இப்போது காவல்நிலை
யத்தைக் காக்கின்ற பெரும்பணியை காவலர்கள் மேற்கொள்ள
வேண்டிய சூழ்நிலை உருவாகி கூட்டம் கட்டுக்கடங்காமல் போய்
விட்டது. காவல் கண்காணிப்பாளரும், மற்றும் அதிகாரிகள் குழு
வும் காவலர்களும், காவல்நிலையத்தின் சுற்றுச் சுவருக்குள் செல்ல,
கூட்டத்தினர் முன்னேறித் தாக்கினர். இதற்கிடையில் வெளியே
நின்றிருந்த காவல்துறையைச் சேர்ந்த வாகனங்கள், பல்லவன்
போக்குவரத்துப் பேருந்துகள் அனைத்தும் தாக்கப்பட்டு பெரும்
சேதம் விளைவிக்கப்பட்டது. காவல்நிலையத்தின் மீது சரமாரி
யாக கற்கள் வீசப்பட்டு காவல்துறை உயர் அதிகாரிகள், காவலர்

கள் பெருமளவில் காயமுற்றனர். நிலைமை நீடித்தால் காவலர்களுக்கு உயிர் சேதமும், காவல்துறை பொருட்களுக்கும் மற்றும் பொதுவுடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்படும் என்ற நிலையில் கூட்டத்தினர் முறையாக எச்சரிக்கப்பட்டு இரண்டு கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. கூட்டத்தினர் மேலும் வன்முறையுடன் முன்னேறவே முறையாக எச்சரித்து லட்டியால் அடிக்கப்பட்டனர். அதுவும் பலனளிக்காமல் போகவே சரியான எச்சரிக்கைக்குப் பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் முதல் இரண்டு குண்டுகள் எச்சரிக்கையாக ஆகாயத்தை நோக்கிச் சுடப்பட்டது. அதன்பின்னரும் கூட்டம் கலையவில்லை. வன்முறை தொடர்ந்தது. எனவே, மேலும் மூன்று குண்டுகள் கூட்டத்தை நோக்கிச் சுடப்பட்டது. இதன் காரணமாக செல்வம், கணேசன் என்ற இருவர் காயமடைந்தனர். அதன் பின்னர் கூட்டம் கலைந்தது. துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற இருவரும் சென்னை அரசினர் ஸ்டான்லி மருந்தகத்தில் சிகிச்சை பெற்று தேறி வருகின்றனர். இந்தக் கலவரத்தில் இரண்டு டி.எஸ்.பி. உட்பட 22 காவல்துறையினருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பொதுமக்களில் 11 பேருக்குக் காயமேற்பட்டு அனைவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்து காவல்துறைத் தலைவர், செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்கள் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு விசாரணை செய்தனர். விசாரணைக்குப் பின்னர் செங்குன்றம் துணை ஆய்வாளர் மைக்கேல் மோகன்தாஸ், தலைமைக் காவலர் 1396 ராமேஸ்வரம் ஆகிய இருவரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக செங்குன்றம் காவல் நிலையத்தில் குற்ற எண். 455/77 பிரிவு 147, 148, 332, 427 மற்றும் 307 இ.பி. கோ-வில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சைதை கோட்ட ஆட்சியாளரை நீதி விசாரணை நடத்த மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டுள்ளது. விசாரணை துவக்கப்பட்டு நடந்து வருகிறது.

(முற்பகல் 10-10)

பேரவைத் தலைவரவர்களே, நீதி விசாரணை வேண்டுமென்று நண்பர்கள் கோருகின்றனர். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்வேன். இங்கு பொறுப்பேற்று இருக்கும் அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் பொதுமக்களுக்கோ, அரசியல் கட்சிகளுக்கோ அநீதி விளைவிக்கக்கூடிய காரியங்களுக்கு நிச்சயமாக அனுமதி வழங்காது என்பதையும், ஒத்துழைக்காது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு, இந்த நிகழ்ச்சியில் உயிருக்கு அபாயம் ஏற்படவில்லை என்ற காரணத்தைக் கொண்டு நீதி விசாரணை தேவையில்லை என்று நாங்களும் சொல்லிவிட்டு ஒதுக்கி விடுவோம் என்று யாரும் கருத வேண்டாம்.



ஆனால் ஒன்றை நிச்சயமாகச் சொல்வேன். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுப்பியவர்கள் 30-6-77 என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது மிகப்பெரிய உண்மைக்கு மாறான செய்தி என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் கொடுத்ததில் 29-ம் தேதி என்று நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்று குரல் எழுப்பினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பதில் சொல்லிக் கொண்டு இருக்கும்போது இடைமறிக்கக் கூடாது. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, . . . . . . . . . . . .

திரு. க. சுப்பு : நான் ஒரு தன்னிலை விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்று குரல் எழுப்பினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், சுப்பு உட்காருங்கள், தயவு செய்து உட்காருங்கள்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்று குரல் எழுப்பினர்)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் குறிப்பாக முதலமைச்சராக பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற என்னைப் பொறுத்தவரையிலும் எனக்கு கோபம் மூட்டவோ, ஆத்திரமூட்டவோ யார் முயன்றாலும் தோல்வி அடைந்து விடுவார்கள். நிச்சயமாக எனக்குக் கோபம் வரப்போவது இல்லை ஆத்திரம் வராது. நான் உங்களிடம் வெற்றி பெற்று விடுவேன் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யார் குறுக்கிட்டுப் பேசினாலும் அவர்கள் பேசுவதை, நான் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நின்று கொண்டே கேட்டுக் கொண்டு இருக்க என்னால் முடியும். ஒன்றைச் சொல்கிறேன். தாங்கள் பதவி ஏற்றுக்கொண்டு நாள் 30-ம் தேதி. இந்த நிகழ்ச்சி நடந்தது 27-ம் தேதி. (குறுக்கீடு) நான் பேசுவதை முழுமையாகக் கேட்டு விட்டு, அதற்குப் பிறகு உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கும். நீங்கள் பேசலாம். என் பேச்சை நிறுத்தி விடவேண்

டுமென்று நினைத்தால் நிச்சயமாக நிறுத்தி விடமாட்டேன். தொடர்ந்து பேசிக்கொண்டே இருப்பேன். எனக்கு அந்த அனுபவம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆகவே, ஒன்றைச் சொல்கிறேன். 27-ம் தேதி நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு 29-ம் தேதி துப்பாக்கிச் சூடு நடந்து இருக்கிறது. ஆகவே நாங்கள் பதவி ஏற்றது 30-ம் தேதி. ஆனாலும் இதிலே எங்களுக்கு பொறுப்பு இல்லை என்று தட்டிக் கழிக்கத் தயாராக இல்லை. அந்தப் பொறுப்பைப் ஏற்றுக் கொள்ள கடமைப் பட்டு இருக்கிறோம். இதற்கு முன்னால் தவறுகள் நேர்ந்தவை கவனிக்க வேண்டுமென்ற அக்கறையில் நாங்கள் இருக்கின்றோமா, எப்படி நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எந்தெந்த தவறுகள் யார் யார் இழைத்திருக்கிறார்களோ, அவர்களை சட்டத்திற்கு முன்பு கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதைப் போலவே இதிலும் தவறுகள் யார் செய்திருந்தாலும் கொஞ்சம் கூட வேறுபாடு காணாது நிச்சயமாக சட்டத்தின் படி நடவடிக்கை எடுப்போம் என்பதை உங்களுக்கு நான் உறுதி கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதை தலைவரவர்களுக்குச் சொல்ல, இந்தப் பிரச்சினை ஆய்வில் இருக்கிறது, அதற்கு அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள், அந்த தீர்ப்புக்குப் பிறகு, இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை, குறைவு இருக்கிறது என்று கொண்டு வந்து சுட்டிக் காட்டுவார்களேயானால், ஆதாரத்தோடு சொல்லுவார்களேயானால், அதற்குப் பிறகு நீதி விசாரணை வேண்டும் என்ற நிலைமை இருக்குமானால், அதற்கு நாங்கள் பின்வாங்க மாட்டோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கொடுத்து இருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் serious situation arising out of the firing at Redhills on 29—6—1977 என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதில் 30-ம் தேதி என்று சுப்பு அவர்கள் குறிப்பிடவில்லை. 29-6-1977 என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, சுப்பு தவறாக 30-ம் தேதி என்று குறிப்பிட்டார் என்று குறைகூறுவது அவ்வளவு சரியானதல்ல.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி.இராமச்சந்திரன் :</u> நான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் என்று குறிப்பிடவில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் புரிந்து கொள்ள வேண்டும். ''இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது'' என்றுதான் சொல்லி இருக்கிறேன். அதைப் படித்துப் பார்க்க வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : சுப்பு அவர்கள் 30-ம் தேதி என்று குறிப்பிடவில்லை, அவர் சரியாகத்தான் தேதி குறிப்பிட்டு இருக்கிறார் என்று முதலமைச்சர் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



தங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். ஆளுங் கட்சியோடு சுமுகமான முறையில் கொள்கை மாறுபாடுகளை, கருத்து மாறுபாடுகளை எவ்வளவு கடுமையாகவும், எவ்வளவு சூடாகவும் விவாதிக்க எதிர்க்கட்சிகள் தயாராக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஒரு உறுப்பினர் ஒரு பிரச்சினையில் முதலமைச்சர் பேசுகிற நேரத்தில் எழுந்து ஒரு தன்னிலை விளக்கம் சொல்வதற்கு முயல்வாரேயானால், அதற்கு முதலமைச்சர் இடம் தர விரும்பாவிட்டால், உட்காருங்கள், பிறகு பேசிக்கொள்ளலாம் என்று முதலமைச்சர் கூறுவதும், அந்த உறுப்பினர் உட்கார்ந்து விடுவதும் உட்காராமல் நின்று கொண்டே இருப்பாரானால், என்ன தான் சொல்கிறார் பார்ப்போம் என்று அவர் சொல்வதைக் கேட்பதும் இந்த அவையின் கடந்த கால மரபாக இருந்து இருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர் எழுந்தவுடன் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எழுந்து கொண்டு, முதலமைச்சர் நிற்கும்போது நீங்கள் பேசக்கூடாது என்று கூறுவது எல்லாம் நல்ல மரபை வளர்ப்பதற்கு உதவாது. நாம் அனைவரும் சேர்ந்து, ஆளுங் கட்சியும், எதிர்க்கட்சியும், நல்ல மரபை போற்றிக் காக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டி நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்க அவைத் தலைவர் அவர்களே, அதற்கேற்ப ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> அவைத் தலைவ முதலமைச்சர் பொறுப்பு ஏற்றுக் கொண்டு இருப்பவர் ரவர்களே, முதலமைச்சர் முற்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் சொல்ல விரும்பினால், தன்னிலை விளக்கம் தர விரும்பினால், யாராவது பேச விரும்பினால், நாம் பேசலாம் என்றும் முதலமைச்சர் பேசி முடியும்போது, முதலமைச்சர் வாய்ப்புக் கொடுத்து அல்லது அவர் பேசுவதற்கு முதலமைச்சர், இன்றைய உட்காருவதும் மரபு என்று முன்னாள் தெளிவாகச் சொன்னார்கள். நான் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் அமரர் அண்ணா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவராக இருந்த இதே இடத்தில் பேசும்போது அண்று ஒரு விஷயத்தைக் கருத்திருமன் பேச எழுந்த போது, 'நான் என்ன சொல்கிறேன் என்பதை குறிப்பிட்டார்கள். வேண்டுமானாலும் புரிந்து கொண்டு, நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுங்கள், என் பேச்சின் இடையில் கருத்துச் சொல்ல விரும்பினால் நான் என்ன சொல்கிறேன் என்பதை புரியாமல், பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு கிடைத்தும், பயன் இல்லாமல் போய் விடும்' என்று சொன்ன கொள்கையின் அடைப்படையில் தான், எங்களுடைய நிலைமை என்ன, நாங்கள் என்ன கருத்து கொண்டு இருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறோமே தவிர மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே நான் எழுந்தவுடன் பேசாமல் இருந்து விடவேண்டும், மற்றவர்கள் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்ற நிலையில் நான் சொல்லவில்லை என்பதையும், விவாதத்தில் விட்டுக்

கொடுத்து பதில் சொல்வதும், அதே நேரத்தில் விளக்கங்களைச் சொல்லும்போது கேட்டுக்கொண்டு விவாதிப்பதும் நல்ல மரபாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவை முன்னவர் எழுந்தார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு தரப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, லீடர் ஆப் தி ஹவுஸ் பேச வேண்டுமா ?

(முற்பகல் 10-20)

(மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பேச முற்பட்டார்).

திரு. துரை முருகன் : சார், நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேனே, . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்களது விளக்கத்திலேயே அதற்கு பதில் வந்துவிட்டது.

திரு. துரை முருகன் : என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டருக்கு, நீங்கள் என்ன முடிவு தெரிவிக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளவேண்டாமா ? நான் எழுப்பிய பிரச்சினைக்கு நீங்கள் தீர்ப்புச் சொல்ல வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதுபற்றி விசாரணைக்குப் போய் இருக்கிறது, மேலும் தேவைப்படுமானால் நீதி விசாரணை நடத்தலாம் என்று சொன்னார்களே, எப்போதும் நீங்கள் எழுந்திருந்து கேட்க உரிமை உண்டு என்றாலும், அவை நடவடிக்கை தொடர்ந்து நடைபெற வேண்டாமா ? தயவுசெய்து ஒத்துழைப்பு தாருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : முன்னால் இதே சட்டமன்றத்தில் இதுபோன்ற ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் படிக்கிறேன்.

" திரு. கருத்திருமன் அவர்கள் உடையார்பாளையத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி இங்கே ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே பொருள் பற்றி திரு கே. விநாயகம் அவர்களும், திரு கே. இராமமூர்த்தி அவர்களும் திரு ஆர். கருப்பையா அவர்களும் தீர்மானங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானம் பற்றி, துணைச் சபாநாயகராயிருந்து கூறுகின்ற நேரத்தில் பல கருத்துக்





களைக் கூறியிருக்கிறேன். ஒற்றிவைப்புத் தீர்மானங்களை எந்தெந்த காரியங்களுக்காகக் கொண்டு வருவது, ஒற்றிவைப்புத் தீர்மானங்களை எந்தெந்தக் காரியங்களுக்கு கொடுக்கக்கூடாது என்று இந்தப் பீடத்திலே அமர்ந்திருந்த பெரியவர்கள் தீர்ப்புகள் அளித்திருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு, வேலை நிறுத்தம், கதவடைப்பு, தீ விபத்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டவைகளாக இருப்பதால் இதற்கெல்லாம் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இந்தப் பேரவையின் காலத்தை வீணாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர்கள் கொடுத்திருக்கும் காரியம் பற்றி நீதிபதி ஒருவரை நியமித்து விசாரணைக்கு ஏற்பாடு செய்திருப்பதாலும் இது அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாக இருப்பதாலும் இதற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.''

இங்கேயும் நாங்கள் குறிப்பிட்டிருப்பது சட்டப்படி அதிகாரிகள் விசாரணை நடத்துகிறார்கள், அவர்களது தீர்ப்பு சரியில்லை என்றால் அதை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. மேலும் நீதி விசாரணை தேவையென்றால் அதற்கும் ஏற்பாடு செய்ய நாங்கள் தயங்கமாட்டோம் என்பதுதான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து ஒன்றைப் படித்துக் காட்டினார்கள். சாதாரணமாக நமது மாநிலத்தில் நடைபெறக்கூடிய திடீர்ச் சம்பவங்கள், பதட்ட நிலையை உருவாக்கக்கூடிய சம்பவங்கள் பற்றி எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்படுவது உண்டு. அதற்கு அனுமதி வழங்கப்படலாமா என்பது பற்றி இந்த அவைமுன்பும் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த பத்தாண்டுக் காலமாக எந்தச் சம்பவம் இதுபோன்று நடந்தாலும் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதை இந்த அவையில் அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முடிவில் அனுமதி மறுக்கப்பட்டேதான் வந்திருக்கின்றன. அது போன்ற பிரேரணையே அவையில் வரக்கூடாது என்கிற முறையில் தவறான அர்த்தம் கொண்டுவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர முடிவில் நீங்கள் மறுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையே விவாதம் ஆக்கக் கூடாது என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு நேரம் ஆகிவிட்டது பாருங்கள்.

திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது 1968 ஆகஸ்டு, 16ஆம் தேதி இந்த அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி ஆகும். அப்போது இருந்த துணைத்

தலைவர் இப்படி ஒரு கருத்தை வழங்கினார்கள். ஆனால் அந்த நடவடிக்கைக் குறிப்பைத் தொடர்ந்து பார்த்தால் தெரியும். அது பற்றி விவாதம் நடைபெற்று, அந்த விவாதத்திற்கு அப்போது முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்களும் பதில் அளித்திருக்கிறார்கள். எனவே இப்படி அவசரப் பிரேரணைகள் வருகிறபோது, அதைப்பற்றி விவாதிக்கவே கூடாது, அதை எடுத்துக்கொள்ளவே கூடாது என்ற முடிவுக்கு வருவது சரியல்ல.

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ நான் மீண்டும் சொல்கிறேன். இது விவாத அவை தான். நாம் இங்கே பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவேதான் வந்திருக்கிறோம். இதை என்னுடைய முதல் பேச்சிலேயே சொல்லியிருக்கிறேன். எதைப் பற்றியும் விவாதிக்கவே கூடாது, உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லவே கூடாது என்று எந்த முறையிலும், இந்த அரசும் செயல்படாது. எந்தப் பிரச்சினை பற்றி வற்புறுத்திச் சொல்லி பேசுவதற்கும் தம் கருத்தை எடுத்து வைப்பதற்கும் வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். இனியும் அளிப்பார்கள். என்றாலும் இதுபோன்ற தீர்ப்பு இங்கே வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்காக அதை எடுத்துச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

__புலவர் கா. கோவிந்தன் :__ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் முன்பு நடந்த நிகழ்ச்சி பற்றிய குறிப்பினை எடுத்துக்காட்டினார்கள். அந்த இடத்தில் அப்போது இருந்தவன் நான் என்கிற காரணத்தினால் தன்னிலை விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

__மாண்புமிகு திரு. கி. மனோகரன் :__ கருத்தா, தீர்ப்பா ?

__புலவர் கா. கோவிந்தன் :__ அப்படிப்பட்ட கருத்து, நம் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக விதிமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டி கொடுக்கப்பட்டதாகும். நம் செயலாளர் அதையெடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்படிப்பட்ட முறையில் பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அனுமதி கொடுக்கலாமா என்கிற முறையில் அவையில் விவாதித்திருக்கிறார்கள். முடிவில் அவற்றுக்கு அனுமதி மறுக்கப்படுவது ஒரு மரபாகும். ஆகவே கடந்த காலத்தில் கூறப்பட்ட ஒரு கருத்தை எடுத்துச்சொல்லி அதைப் போலவே அதுபற்றி அவையில் விவாதிக்கவே கூடாது என்ற தவறான எண்ணம் ஏற்படும் வகையில் நம் செயலகம் கருத்துக்களை வழங்கக்கூடாது என்ற கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ அரசு தரப்பில் இருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கத்தைக் கொடுத்த பின்னால் மேலும் இந்தப் பிரச்சினையை விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கூறி, இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

## __(ஆ) மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதில் காலதாமதமும், விவசாயத் தொழிலாளிகள் பாதிப்பும்.__

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. பொ. உத்திராபதி அவர்கள்,

" தஞ்சை மாவட்டத்தில் பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதில் காலதாமதம் ஆவதால் சுமார் 5 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வேலை இழந்து இருப்பதும், சிறிய நடுத்தர விவசாயிகள் கடுமையாக பாதிக்கப் பட்டிருப்பது பற்றியும் இது தொடர்பாக அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றியும் "

விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டுமென்ற, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

__திரு. ஏ. ஆர். மாரிமுத்து :__ காவிரித் தண்ணீர் பிரச்சினைபற்றி விவாதிக்க என் பெயரிலும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ இதுபற்றி திரு. மாரிமுத்து அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் சேர்த்துக்கொள்கிறேன்.

__திரு. பொ. உத்திராபதி :__ பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் காவிரிப் பிரச்சினைபற்றி குறிப்பிட்டு, அதைத் தீர்ப்பதற்கு எவ்வித உத்திரவாதமும் இல்லை. இன்றைக்கு பெரும்பாலான விவசாயிகளை எதிர்நோக்கியுள்ள பிரச்சினை அதுதான். குறிப்பாக தமிழ்நாட்டில் உணவு உற்பத்திக்கு முக்கியமாக உள்ள இடம் தஞ்சை மாவட்டம். சென்ற ஆண்டும் தண்ணீர் ஒரு மாத காலம் பின்தங்கி வந்த காரணத்தினால் உணவு உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனால் 5 லட்சம் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறு நில விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டும் ஒரு மாத காலம் பின்தங்கிவிட்டால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுமோ என்கிற அச்சம் இருக்கிறது. இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதனால் இன்றைக்கு மற்ற அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்து விட்டு, இதையே முதல் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1977 ஜூலை 9

[முற்பகல் 10-30]

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் மிக முக்கியமான உயிர் பிரச்சினையான ஒரு பொருள்பற்றி, தண்ணீர்ப் பாசனத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தைத், தங்களிடம் கொடுத்திருக்கிறேன். சென்ற ஆண்டு காவிரியில் போதிய அளவில் தண்ணீர் வராத காரணத்தால் காலம் தாழ்ந்து தண்ணீர் திறக்கப்பட்டதும், டெல்டா பகுதியில், புதிய டெல்டாப் பகுதியில் தண்ணீர் விடாமல் சாகுபடி ஆகாமல் போன நிலையையும் எல்லோரும் அறிவார்கள். அதனால் காவிரி டெல்டாப் பகுதி மக்கள் மிகப் பெரிதும் சென்ற ஆண்டு பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் மிகவும் சங்கடத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். அதன் பிறகும் இந்த ஆண்டு போதிய மழை பெய்யாத காரணத்தால் நம்முடைய அணை வரத்தும் குறைவாக இருக்கிறது. அணையில் போதிய தண்ணீர் இல்லை என்ற நிலைதான் இன்றிருக்கிறது.

இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது ? கர்நாடகத்துக்கும் நமக்கும் உள்ள பிரச்சினை இது. இதில் நான் இப்போது உள் நுழைந்து பேசுவதற்கில்லை. நான் கேட்டுக்கொள்வது எல்லாம் சாதாரணமாக ஜூன் 16-ம் தேதி அளவில் அல்லது ஜூன் இறுதிக்குள் தண்ணீர் திறக்கப்பட்டு சாகுபடிக்கு வருவது பழக்கம். குறுவை சாகுபடி செய்வதற்கு ஜூன் இறுதிக்குள் தண்ணீர் வந்தால் காலத்தோடு சாகுபடி செய்ய முடியும். இல்லை என்றால் குறுவை பாதிக்கப்பட்டு விடும். உணவுப் பற்றுக்குறையைப் போக்க குறுவை இன்றியமையாத ஒரு பயிராக இருக்கிறது. குறுவை போடுவதால்தான் அதிகப்படியான கொள்முதல் அரசுக்குக் கிடைக்கும். சம்பாவில் அதிக அளவில் கொள்முதல் இருக்காது. ஆகவே, குறுவை பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டியது அரசாங்கத்தினுடைய கடமையாகும். ஆகவே கர்நாடக மாநில அரசோடு நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசி போதிய தண்ணீர் பெற்று காலத்தோடு விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. உணவுப் பிரச்சினை ஒருபுறமிருக்க, இன்றைக்கு அங்குள்ள விவசாயிகளுக்கு வேலை கிடையாது. காலத்தோடு தண்ணீர் வந்திருந்தால் அவர்களுக்கு வேலை கிடைத்திருக்கும். பிழைப்பும் வருவாயும் கிடைத்திருக்கும். தண்ணீர் வராததால் சாகுபடி வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, அங்கு கூலி வேலை செய்யும் விவசாயிகள், சிறு விவசாயிகள் எல்லோரும் மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். வருவாய் இல்லை. பட்டினி கிடக்கவேண்டிய துர்ப்பாக்கியகரமான நிலை இருக்கிறது. ஆகவே, அங்கு பாசனத்திற்கு வேண்டிய அளவிற்கு தண்ணீர் விடுவதற்கு முன்னால் ஏதாவது நிவாரண





வேலைகள் அங்கு துவங்கப்படவேண்டும். டெல்டாப் பகுதிகளில் நிவாரண வேலைகள் கொடுத்து அங்குள்ளவர்களுக்குப் போதிய வருவாய் கிடைப்பதற்கு ஏற்பாடுகளை உடனடியாக அரசாங்கம் செய்ய வேண்டும். இது பல லட்சக்கணக்கான விவசாயிகள் சம்பந்தப்பட்ட விஷயம், ஏழை மக்கள் சம்பந்தப்பட்ட விஷயம் என்ற காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதித்து ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்வதற்கு போதிய நீர் வசதி கிடைக்காததால்அங்கு விவசாயம் தடைப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் நன்றாக அறியும். ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் உணவு உற்பத்தி மட்டுமல்லாமல் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு பெரும் கஷ்டத்தை விளைவித்திருக்கிறது என்பதையும் நம்முடைய அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவக் காற்றால் பெய்யக்கூடிய மழை சராசரி அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும் குறுவை மகசூல் மிக முக்கியமான மகசூல் என்பதால் போதிய அளவு தண்ணீரைப் பெற்றுத் தருவதற்கு அண்டை மாநில மான கர்நாடக அரசோடு ஒரு சுமுகமான முடிவை மேற்கொள்வ தற்காக நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் நானும் நாளைய தினம் கர்நாடக மாநிலத்திற்குச் சென்று கர்நாடக மாநில முதல் அமைச்சர் அவர்களைச் சந்திப்பதாக உள் ளோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த ஆண்டு சென்ற ஆண்டு நடந்ததைப் போல் நலிந்து விடக் கூடாது என்பதில் இந்த அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது.

குறுவை மகசூலுக்கு சாதாரணமாக ஜூன் மாத இறுதியில் தண் ணீர் விடுவது வாடிக்கை. ஆனால் கடந்த சில் ஆண்டுகளாக இந்த நிலை மாறி சென்ற ஆண்டு மிகவும் மோசமாகி ஜூலை மாதம் 27-ம் தேதி வரையில் தண்ணீர் கிடைக்காமல் தஞ்சை மாவட்டத் தில் இருக்கிற விவசாயிகள் கஷ்டப்பட நேரிட்டது. அந்த நிலை யைத் தவிர்த்து எவ்வளவு விரைவில் தண்ணீரைப் பெற்றுத் தர முடியுமோ அவ்வளவு விரைவில் தண்ணீர் பெற்றுத் தருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்பதை நமது மாண்புமிகு உறுப்பி னர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் குறுவை சாகுபடி செய்யாமல் விடப்பட்டுவிடுவதற்கு அல்லது விவசாயிகள் அதனால் பாதகத்திற்கு ஆளாவதற்கு நிச்ச யமாக இந்த அரசு இடம் தராது. அவர்களுக்கு எப்படியும் இந்த தண்ணீரைப் பெற்றுதர வேண்டும் என்ற முடிவினை அரசு மேற் கொண்டுள்ளது.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நாளையதினம் கர்நாடக
மாநில முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேச இருக்கி
றார்கள். விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற அச்சத்தையும் அவர்
களுக்கு ஏற்பட்டிருக்கிற துன்பத்தையும் விரைவில் நீக்குவதற்கான
நல்ல முடிவு ஒன்று எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு
அரசாங்கம் ஏற்கெனவே இதில் அக்கறை எடுத்துக் கொண்டுள்ள
காரணத்தால் சட்டமன்ற நடவடிக்கைகளை ஒற்றிவைத்து விவா
திக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பொதுப் பணித்
துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி
மேலும் விவாதிக்கத் தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு
அனுமதி மறுக்கப்படுகிறது.

—

<u>(இ) சென்னை, சேலம், ஈரோடு கோவை போன்ற பகுதிகளில்
மாணவரிடையே அமைதியின்மையும் பள்ளிகளும், கல்லூரி
களும் மூடப்படுவது குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து, திரு. ந. இராமச்
சந்திரன், திரு கே. சுப்பு ஆகியோர் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத்
தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 42-ன் கீழ், கீழ்க்
காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த நிகழ்ச்சி
குறித்து பேரவையில் விவாதிக்க பேரவையின் இன்றைய அலுவல்
களை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் குறிப்பாக சென்னை,
சேலம், ஈரோடு, கோவை போன்ற பகுதிகளில் மாணவர் மத்தி
யில் அமைதியின்மை உருவாகி போராட்டங்கள் வெடிப்பதால்
பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்பட்டு வருகின்றன. இதனைத்
தடுத்து நிறுத்தி அமைதியை நிலைநாட்டவும், மாணவர்களின்
கல்விக்கு உத்தரவாதம் அளிக்கவும் தேவையான நடவடிக்கைகள்
எடுக்கவேண்டியது குறித்து விவாதிக்க."

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஒரு சம்பவத்தைக் குறித்துதான்
இருக்க வேண்டுமேயொழிய பல பொருள்கள் குறித்து ஒத்திவைப்
புத் தீர்மானங்கள் இருக்கக் கூடாது என்பதற்குப் பல தீர்ப்புக்கள்
இருக்கின்றன. மேலும் உறுப்பினர்கள் இது குறித்து எழுப்புவ
தற்கு வாய்ப்புக்கள் இருப்பதனாலும் இதற்கு அனுமதிகொடுக்க
மறுக்கிறேன்.





<u>(ஈ) கோவையில் மூடிக்கிடக்கும் ஆலைகள் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கோவையில் மூடிக்கிடக்
கும் ஆலைகள் குறித்து திரு. சாதிக்பாட்சா அவர்களும், திரு. க. சுப்பு
அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்றனர்.
இருவருமே இது இப்போது ஏற்பட்ட நிகழ்ச்சி அல்ல என்றும்,
வெகுநாட்களாக நடைபெறும் நிகழ்ச்சி என்று குறிப்பிட்டு இருக்
கிறார்கள். மேலும் அவர்கள் ஆளுநர் உரையின் மீதான விவாதத்
தில் இப்பொருள் குறித்துப் பேச வாய்ப்பு இருக்கிறது. எனவே
இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை அவையில் எழுப்ப எனது
அனுமதியை மறுக்கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> எல்லா விஷயங்களையுமே ஆளுநர் அவர்
களது உரையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்
றது. அதை அடிப்படையாக வைத்து இந்த ஒத்திவைப்புத் தீர்
மானங்களையெல்லாம் மறுத்து விடுவது நலமாக இருக்காது என்ற
எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எல்லாவற்றையும் மறுத்து
விடவில்லை. எது எது அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்
தது என்று அவைத் தலைவர் கருதுகிறார்களோ அதை அனுமதித்தி
ருக்கிறோம். மற்றவைகள் பொது பிரச்னையாக, ஸ்பெஸிபிக்காக
இது இது என்று குறிப்பிட்டு காட்டாத வகையில் இருப்பதைத்
தான் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசலாம் என்று சொல்லி
யிருக்கிறேனே தவிர, அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்றால்
கட்டாயம் இந்த அவையில் கொண்டு வந்து விவாதிக்க அனுமதி
தரப்படும்.

<u>திரு. துரை முருகன் :</u> தமிழ் நாட்டில் கல்லூரிகள் மூடப்படு
வது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். தமிழ்
நாட்டில் பள்ளிக்கூடங்கள் மூடுகிறது என்பது அத்தியாவசியமான
பிரச்னை அல்லவா? அதுபற்றி விவாதிக்க வேண்டாமா? தெரிந்து
கொள்ளலாம் என்று கேட்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் நீண்ட காலமாக இங்கு இருக்கிறார்கள். இந்தக் கல்லூரி
யில் இந்த வேலை நிறுத்தம், இந்தத் தவறு நடக்கிறது என்று
சொல்லியிருந்தால் அதைக் குறிப்பிட்டு இங்கே பேசுவது நியாயம்.
பரவலாக மொத்தத்தில் எங்கே, என்ன, என்று குறிப்பிடாமல்
கொடுத்திருப்பதைப் பற்றி இந்த அவையில் ஆளுநர் அவர்களது
உரையின் மீதான விவாதத்தில் பேசலாம் என்பதுதான் என்
கருத்து.

## (5) அரசினர் சட்ட முன்வடிவு.

## தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 1977).

மாண்புமிகு திரு. க. நாராயணசாமி முதலியார் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1977-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை முன் வடிவு எண். 1/1977) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

இச்சட்ட முன்வடிவை முன்மொழிகையில், கிராம மக்களுக்குக் கடன் நிவாரணமளிப்பது என்பது, மிகவும் முக்கியமானதொரு சமூக நல ஏற்பாடாகும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த சட்டத்தினால் (குடியாட்சித் தலைவரது சட்ட எண். 3/1977) திருத்தப்பட்டவாறுள்ள, தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் பட்டவிவசாயிகள் (தற்காலிக நிவாரணச்) சட்டம் (குடியாட்சித் தலைவரது சட்டம் 15/1976), தமிழ்நாடு கடன் பட்டோர் (தற்காலிக நிவாரணச்) சட்டம், 1976 (குடியாட்சித் தலைவரது சட்டம் 16/1976) ஆகிய சட்டங்களின்படி விவசாயிகளிடமிருந்தும், கடன் பட்ட ஏனையோரிடமிருந்தும் சேரவேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்கான வழக்குகளுக்கும், அத்தகைய ஒரு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிகளை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பங்களுக்கும், 15-7-1977 வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைகாரர்கள் (தமிழ் நாடு சட்டம் 23/1943) சட்டத்தின் 12 ஏ பிரிவின்படி, அடகுக் கடைக்காரர்களிடம் அடகு வைக்கப்பட்ட பொருட்களின் விற்பனைக்கும் 15-7-1977 வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அடகுக் கடைக்காரர்கள் சட்டம் (தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன்பட்ட விவசாயிகள், கடன்பட்டோர் (தனி விதித்துறைகள்) சட்டத்திற்குப் பதிலாக அமைத்துக்கொள்ளப்பட்டு (குடியாட்சித் தலைவரது சட்டம் 17/1976), தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தினால் பின்னர் திருத்தப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் பல பகுதிகளில் வரட்சி நிலைமை மேலும் நீடித்து வருவதால், விவசாயிகளும், கடன் பட்டுள்ள பிறரும் அவர்கள் வாங்கிய கடன்கள், அனைத்தையும் இன்னமும் திருப்பி

8-7-1977-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



செலுத்த இயலாத நிலையில் உள்ளனர். கடன் பட்ட நிலையிலி
ருந்து மீண்டு, பொருளாதார வகையில் சீரடைவதற்கு அவர்களுக்கு
மேலும் கொஞ்ச காலமாகும். எனவே, கடனைத் திருப்பிச்
செலுத்துவதற்கான கால அளவு மேலும் ஆறு மாதத்திற்கு அதா
வது 15-1-1978 வரையில் நீடிக்கப்பட வேண்டும் என்று கருதப்
படுகிறது. மேலும், அடகுக் கடைகாரர்களிடம் அடகு வைக்கப்
பட்ட பொருட்களின் விற்பனை மீதான தடையும் மேலும் ஆறு
மாதத்திற்கு,அதாவது 15-1-1978 வரையில் நீடிக்கப்பட வேண்டும்
என்றும் கருதப்படுகிறது. மேற்சொன்ன நோக்கங்களை நிறை
வேற்றுவதே இச்சட்ட வரைவின் உத்தேசமாகும்.

இதனை இப்பேரவை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்பு
மிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத்
திருத்த பிரேரணையை நான் வரவேற்கிறேன். ஆனால் சில கருத்
துக்களை மட்டும் சொல்லி, அரசின் தரப்பிலிருந்து என்ன சொல்லப்
படுகிறது என்பதை தெரிந்து கொள்வதற்காக சில கருத்துக்களை
நான் சொல்ல விரும்புகிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் இந்தச்
சட்டத்தை இன்னும் ஆறு மாத காலத்திற்கு நீடிக்க வேண்டும்
என்ற திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். எந்த அடிப்
படையில் ஆறு மாதம் என்று தீர்மானித்தார்கள் என்பது தெரிய
வில்லை. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஆறு மாத காலத்
திற்குள் விவசாயிகளின் நிலை மேம்பாடு அடைந்து விடாது
என்பது மட்டுமல்ல, வரட்சி நிலை நீங்கி விவசாயிகள் வாங்கிய
கடனை கொடுத்துவிடக்கூடிய நிலைமையில் ஆகிவிட மாட்டார்கள்.
என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது ஆறு மாதம் நீடிக்கப்பட்ட பின்
னால் அரசாங்கத்தினுடைய கருத்து என்ன ? மீண்டும் நீடிக்கப்
போகிறார்களா, அல்லது இனிமேல் நீடிக்கப்பட மாட்டாதா என்
கின்ற விவரங்களை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதில்
சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது
இப்போது ஆறு மாத காலம் என்று போட்டிருப்பதற்குப் பதிலாக
ஓராண்டு காலம் அதாவது 78 ஜூலை வரை என்று நீட்டிக்கப்படு
மானால், கடன் வாங்கியவர்களுக்கும் கடன் கொடுத்தவர்களுக்
கும் திட்டவட்டமான முடிவுகள் என்ன என்பதை தெரிந்து
கொள்ள முடியும். இப்போது சொல்லப்பட்டிருக்கிற இந்த ஆறு
மாதம் நீட்டிப்பு என்பதை ஓராண்டு காலம் என்று நீட்டிக்கப்படு
மானால் விவசாயிகளுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் ஓரளவு குறையும்
என்று நான் நம்புகிறேன். இந்தச் சட்டத்தை கொண்டுவருவ
தின் மூலமாக உண்மையிலேயே விவசாயிகளுக்கு எதிர்பார்த்த
நல்ல பலன்கள் கிடைக்கவில்லை. இப்போதுள்ள நிலையை பார்க்

[திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1977 ஜூலை 9

கும்போது, விவசாயிகளுக்கு இப்போதுள்ள திருத்தச் சட்டத்தின்
மூலமாக பலன் கிடைக்க வழியில்லை. ஏற்கனவேயுள்ள சட்டத்தின்
மூலம் கடந்த 17 மாத காலமாக விவசாயிகள் எந்தவித பயனும்
அடையவில்லை. கூட்டுறவு கடன்களில் எவ்வளவோ கஷ்டங்கள்
இருந்தன, மேலும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய
கடனுக்காக மாடு, கன்றுகளை எல்லாம் எடுத்துக்கொண்டு போன
கொடுமைகளை எல்லாம் நாம் பார்த்து இருக்கிறோம். அத்தகைய
நடவடிக்கைகள் இனிமேல் எடுக்கப்படமாட்டாது என்பதற்கு
இதில் எந்தவிதமான குறிப்பும் சொல்லப்படவில்லை என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்போது ஆறு மாத கால
நீட்டிப்பு என்பது அட்ஹாக்-காக சொன்னாலும் இனிமேல் நீட்டிப்ப
உண்டா இல்லையா என்பதை சொல்லவேண்டும்.

ஆகவே நான் சொல்லுவது இப்போது ஓராண்டு காலத்திற்கு
நீட்டித்துக்கொண்டால் கடன் வாங்கியவர்களுக்கும் கொடுத்த
வர்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

மேலும், இந்தச் சட்டத்தில் இருக்கின்ற முக்கியமான கருத்
துக்களை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நான் சொல்ல விரும்புவது சிறிய விவசாயிகள், ஆர்டிஸான்
கள் (artisans) இவர்கள் எல்லாம் ஏற்கனவே கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய கஷ்டத்தை போக்குகின்ற
அளவில் இப்போது ஆறு மாதம் நீட்டிப்பு என்றிருப்பதை மாற்றி
ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கவேண்டும் என்ற என் கருத்தை
தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், ஓராண்டு என்று கணக்கிடு
வது பசலி ஆண்டைத்தான். ஜூன் மாதத்தோடு பசலி ஆண்டு
முடியும். ஆகவே இதை 1978 ஜூலை மாதம்வரை நீட்டிக்கவேண்
டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய
வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து.—மாண்புமிக்க தலைவர் அவர்களே,
இங்கே இன்ட்ரடியூஸ் செய்யப்பட்டிருக்கிற சட்டத்தின் மூலம்
மேலும் ஆறு மாதத்திற்கு இதை நீட்டிக்கவேண்டும் என்று
இந்த பில்லானது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

The Tamil Nad: Indebted Agriculturists (Temporary Relief)
Act, 1976 என்கின்ற இந்தச் சட்டத்தை நீட்டித்து
தருவதில் உழைப்பாளர் முன்னேற்றக் கட்சிக்கு எந்தவிதமான
ஆட்சேபணையும் இல்லை. வரவேற்கிறோம். அதே நேரத்தில்
இந்தச் சட்டத்தின் 3-வது செக்ஷனில் கீழ்க்கண்டவாறு உள்ளது.



1977 ஜூலை 9] [திரு. ரா. மார்க்கபந்து]

"3. Bar of suits and applications.—No suit for the recovery of a
debt shall be instituted, no application for the execution of a decree
for payment of money passed in a suit for the recovery of a debt shall
be made, and no suit or application for the eviction of a tenant on the
ground of non-payment of a debt shall be instituted or made apainst
any agriculturist in any civil or revenue court on and from the date of
commencement of this Act and before the expiry of one year from the
said date."

என்கின்ற இந்த மூன்றாவது செக்ஷனுக்கு சிறிது திருத்தங்கள்
செய்தால் இரண்டு தரப்பினரையும், அதாவது கடன் கொடுத்தவர்
களுக்கும் கடன் வாங்கியவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும்
என்ற முறையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

குறிப்பாக, ஆந்திர மாநிலத்தில் இதில் வேறுவிதமாக இருக்
கிறது. தமிழகத்தில் எல்லா விதமான தொகைக்கும், சிறு
தொகையாக இருந்தாலும் சரி, பெருந்தொகையாக இருந்தாலும்
சரி, அதற்காக வழக்கு தொடரக்கூடாது என்று நாம் வைத்
திருக்கிறோம். அதன் மூலமாக சிறு சிறு ஆட்கள், அதாவது
(விடோஸ்,) விதவைகள், பென்ஷனர்ஸ், டிப்பன்டன்ட்ஸ் இவர்கள்
எல்லாம் சிறு சிறு தொகைகளை கடன் கொடுத்தும் இருக்கிறார்கள்:
வாங்கியும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சிறு தொகை
களை கடன் கொடுத்திருக்கிறார்கள். சிறு தொகைகளை கடனாக
வாங்கியிருக்கிறார்கள். இந்தத் தொகைகள் எல்லாம் வசூலிக்கக்
கூடாது என்று சொல்லுவதின் மூலமாகவும், இதற்காக வழக்கு
கள் தொடரக்கூடாது என்று சொல்லுவதன் மூலமாகவும், அதிக
மாக இவர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.
ஆகவே, ஆந்திரா மாநிலத்தில் ஒரு லிமிட் அதாவது ஒரு வரையறை
வைத்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் வரை கடன் கொடுத்தால்
அதற்கு நீதி மன்றத்தில் வழக்கு தொடரக்கூடாது, அதற்கு மேற்
கொண்டு தொகை இருந்தால் வழக்கு தொடரலாம் என்று இருக்
கிறது. இதே போன்று இங்கு ஒரு குறிப்பிட்ட லிமிட் அதாவது
ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரை இருந்தால் அதை
வசூலிக்க கோர்ட்டுகளில் வழக்கு தொடரக்கூடாது, அதற்கு மேல்
இருந்தால் வழக்குத் தொடரலாம் என்றிருந்தால் அது சிறிய
விவசாயிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 10.50]

அதே நேரத்திலே, வழக்குகள் தொடுக்கப்படலாம், அப்படி
தொடுக்கப்பட்டு 'டிகிரி' தீர்ப்புகள் ஆகலாம். ஏற்கனவே,
தமிழ்நாடு அக்ரிகல்சுரல் ரிலீப் ஆக்ட் 1/1955-ல் 3-வது செக்ஷனில்
இப்படி டிகிரி ஆகும் தொகையை தவணைகளாக வசூலித்துக்
கொள்ளலாம் என்றுள்ளது. அந்த முறையில், இப்படி டிகிரி
ஆகும் தொகையைத் தவணைகளாக வசூலித்துக் கொள்ளலாம்
என்கின்ற அடிப்படையிலே இந்தச் சட்டத்தையும் திருத்தலாம்
என்ற எனது யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், குறிப்பாக இந்தச் சட்டத்தின் மூலமாக யாரும் கோர்ட்டுகளிலே வழக்குப் போடக் கூடாது என்றிருக்கும் விதியை மாற்றி, குறிப்பாக விதவைகள், உதவித் தொகை வாங்கு பவர்கள், மற்றவர்கள் பராமரிப்பில் உள்ளவர்கள் கடன் கொடுத் திருந்தால், அவற்றை வசூலிப்பதற்கு இந்தச் சட்டத்திலே எந்த விதமான திருத்தங்களும் இல்லாததால், இந்தத் திருத்தத்தையும் 3-வது செக்ஷனில் சேர்த்துக் கொண்டால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற விவசாயிகள் படுகின்ற துன்பங்கள் குறையும் என் கின்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்.—தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கின்ற கடன் நிவாரண மசோதாவை வரவேற்கின்றபோது, அதன்மீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகின்றேன்.

குறிப்பாக, இப்போது நமக்கு அமைந்திருக்கின்ற சட்ட அமைச்சர் அவர்கள் மாஜி நீதிபதியாகவும், அதிக அனுபவப் படைத்தவராகவும் இருக்கின்ற காரணத்தினால், என் போன்ற வர்கள் சொல்கின்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப் பாக இருக்குமென்று எண்ணுகிறேன். இந்த மசோதாவானது. ஏற்கனவே இருந்த சட்டம் எந்த அளவுக்கு நியாயமானது, ஏழை களுக்கு இந்த சட்டத்தின் அடிப்படையில் எதிர்பார்த்த நன்மை கள் கிடைத்ததா என்று எண்ணிப் பார்க்கின்றபோது நிச்சயமாக அதிகமான பயன் தரவில்லை என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இப்படியே இந்தச் சட்டத்தை 6 மாதங்களுக்கு ஒரு முறை நீட்டித்துக்கொண்டு போகின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற கடனோடு, கொடுக்க வேண்டிய வட்டியும் கூடவே ஏறிக்கொண்டு போகின்றதே தவிர, எல்லாவற்றையும் திருப் பிக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறதே தவிர, அவர்களு டைய நிலைமை எந்தவிதத்திலும் மாறவில்லை. 6 மாதங்களுக்குள் நமது மாநிலத்தில் நிலைமை மாறிவிடுமா என்று பார்க்கின்ற போது, அப்படி மாறக்கூடிய நிலைமையும் இங்கில்லை. அதிலும், குறிப்பாக ஏழைகள் மேலும் வட்டித் தொகையோடு திருப்பிக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுவதைப் பார்க்கின்றபோது, இந்த மசோதா எந்தவகையிலும் உதவிகரமாக இல்லை என்பது தான் என்னுடைய கருத்து. காரணம் என்னவென்று சொன்னால் இந்தமாதிரி சட்டங்கள் அல்லது சீர்த்திருத்தங்கள் கொண்டு வந் தாலும்கூட, ஏழைகளுடைய பொருளாதார நிலையில் அதிகம் மாற்றம் ஏற்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, இவ்வாறு 6 மாதங்களுக்கு ஒருமுறை இந்தச் சட்டத்தை நீடித்துக் கொண்டு செல்வதைப் பார்க்கிலும், நிரந்தரமான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது நல்லது. எனக்கு முன்னால் பேசிய



அங்கத்தினர் அவர்கள் கூறியதுபோல, ஆந்திராவில், கேரளாவில் எப்படி சட்டம் கொண்டு வந்திருக்கிறார்களோ, அந்த அடிப் படையில் இங்கும் சட்டம் கொண்டு வந்து, கொடுக்கவேண்டிய வட்டித் தொகைகளை 'ரைட் ஆப்' செய்துவிட்டு, மீதியை கொடுப்பதற்கான வழிவகைகள் செய்தால், அது ஏழைகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் கூறிகொள்ள விரும்புகிறேன்.

அதோடு, இப்போது இந்த அரசாங்கத்தின் கடன், கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் ஆகியவைகள்தான் ஏழைகளுக்கு அதிகமாக தொல்லை கொடுக்கிறது. அதனால் அவர்கள் பாதிக்கப்படுகிறார் கள். இவற்றிற்கு எந்தவிதமான விதிவிலக்கும் இல்லை. இவற்றை வசூலிப்பதில், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது, ஏழைகளால் கடனைத் திருப்பித் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படுகின்றபோது, அவர்கள் வீடுகளிலே உள்ள பாத்திரங்கள், மற்றும் தானியங்கள், மாடுகள் போன்றவற்றை ஜப்தி செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகின்றது. எனவே, இப்போதுள்ள இந்தச் சட்டம் நிச்சயமாக எந்தப் பலனையும் கொடுக்கக்கூடிய சூழ் நிலையில் இல்லை. ஆகவே, இந்த அரசுக்குச் செலுத்தவேண்டிய கடன், கூட்டுறவு வங்கிகளுக்கு கொடுக்கவேண்டிய கடன் போன்ற வைகளுக்கு இந்தச் சட்டத்தில் ஒரு வழிவகை செய்தால், அதனால் நிச்சயமாக ஏழைகளுக்கு நன்மை கிடைக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, இம்மாதிரி 6 மாதங்களுக்கு ஒருமுறை இந்தச் சட்டத்தை நீட்டிப்பதற்குப் பதிலாக, நிரந்தரமாக ஒரு சட்டம் கொண்டு வந்து, ஏழைகளுக்குப் பயன் அளிக்கக் கூடியதாக சட்டம் கொண்டு வரவேண்டுமென்று இந்த அரசை இச்சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு உறுப்பினர் வீதம் பேசினால் நல்லது. இன்னும் நிகழ்ச் சிகள் நிறைய இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்சிக்கு ஒருவர் வீதம் மிகவும் சுருக்கமாக பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து.—தலைவர் அவர்களே, இந்த மசோ தாவின் பேரிலே பலர் பேசுகின்றபோது, பல்வேறு கருத்துக்கள் வரலாம். கட்சிக்கு ஒருவர் என்று சொல்லும்போது, திரு. மாரிமுத்து பேசும்போது அவருடைய கருத்து மட்டும்தான் சொல்லப்படும். எனவே, பலரையும் அவர்களது கருத்துக்களைச் சொல்ல அனு மதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1977 ஜுலை 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—எல்லோரும் பேசவேண்டு
மென்பதுதான் என்னுடைய கருத்தும். எல்லா உறுப்பினர்களுக்
கும் சந்தர்ப்பம் தருகிறேன். நிகழ்ச்சிகள் நிறைய இருக்கின்றன.
இந்த நிகழ்ச்சிக்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டால், அடுத்த
நிகழ்ச்சிகளுக்கு நேரம் குறையும். எனவேதான், உறுப்பினர்களை
சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து.—தலைவர் அவர்களே, இந்த மசோதா
மூன்று வகையான பிரிவினர்களுக்குக் கடன் நிவாரணம் அளிப்பது
பற்றி கொண்டு வரப்பட்டுள்ளது.

(1) கிராமப்புற வங்கிகள்.

(2) விவசாயிகள் அல்லாதவர்கள்.

(3) வட்டிக் கடைகளில் அடகுக்கு நகைகள், சாமான்கள்
போன்றவற்றை வாங்கியவர்கள்.

இந்த மூன்றுவித பேர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக
இந்த மசோதா, முன்புள்ள சட்டத்தின், கால கெடுவை நீடிப்
பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. புதிதாகப் பதவி ஏற்
றிருக்கும் இந்த அரசாங்கம், இம்மாதிரியான கொள்கை ரீதியான
முடிவுகளை உடனடியாக அமுல்படுத்த முடியாமல் இருக்கலாம்.
ஆனால், விரைவில் இம்மாதிரியான பிரச்னைகளுக்குத் தீர்வுகாண
வேண்டியது, அமுல்படுத்துவது அவசியம் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

கிராமப்புற வங்கிகள், விவசாயிகள் அல்லாதவர்கள் போன்ற
வர்களுக்கு கடன் வசூலிப்பதை ஒத்திப் போடுகிறார்களே தவிர,
அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் அளிக்கவில்லை,

அடுத்து, வட்டிக் கடைகளிலே இப்போதுள்ள சூழ்நிலையில்
எந்த விதமான சாமான்களையும் வைத்துப் பணம் வாங்க முடிய
வில்லை. ஏற்கனவே, சாமான்கள் வைத்திருப்பவர்களுக்கு வட்டியில்
நிவாரணம் அளித்து இருக்கிறார்கள். ரூ. 2,400-க்கு குறைந்த வரு
மானம் உள்ளவர்களுக்கு கடனையே ரத்து செய்திருக்கிறார்கள்.
இப்படிக் கடன் ரத்து செய்யப்பட்டிருந்தாலும்கூட, தாசில்தார்
அவர்களிடம் இதற்காக மனு கொடுக்கப்பட்டு, இது அநேகமாக
இன்னும் விசாரணையில்தான் உள்ளது. இன்னும் எந்தவிதமான
முடிவும் செய்யப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டுக்கொண்டுதான்
வருகின்றது. இதற்குக் காரணம், வட்டிக் கடைக்காரர்கள் எல்
லாம் சேர்ந்து சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே வாங்கி இருக்கிறார்கள்
என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்போது சுப்ரீம் கோர்ட்டுத்
தீர்ப்பும் வந்து விட்டதாக நான் அறிகிறேன். ஆகவே, இதிலே
இன்னும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக இதற்கு ஒரு
முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜுலை 9] [தி. ஏ. ஆர். மாரிமுத்து]

பல தாலூகா ஆபீசுகளில், ஆயிரக்கணக்கான மனுக்கள்
போதிய அலுவலாளர்கள் இல்லாத காரணத்தால்அப்படியே தேங்கி
இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் விசாரித்து
உடனடியாக இதற்குத் தீர்வு காண்பது மிகவும் அத்தியாவசிய
மாக இருக்கிறது. அதேபோல், அரசாங்கக் கடனையும் மக்களால்
கொடுக்க முடியாத நிலை உள்ளது. இதற்கும், நிவாரணம் காண
வேண்டிய நிலையில், சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டியது
மிகவும் அத்தியாவசியமாக உள்ளது.

அடுத்து, விவசாயக் கடன், விவசாயிகள் அல்லாதவர் கடன்
வாங்கியவர்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றியும் இந்தச் சர்க்
கார் ஒரு நல்ல முடிவு செய்யவேண்டும். ஒத்திப்போட்டு விடு
வதால் மட்டும் கஷ்டம் தீர்ந்து விடாது. ஒத்திப் போடுவதால்
மேலும் தொல்லைகள் தான் ஏற்படும். கடன் தொகை மேலும்
ஏறிக்கொண்டுதான் போகும். பின்னால், எல்லாவற்றையும் ஒன்
றாகச் சேர்த்து வசூலிக்கும் நிலை ஏற்படும். அப்போது கோர்ட்டுக்
குப் போய் தொந்திரவுக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

[முற்பகல் 11-00]

ஆகவே, இம்மாதிரி ஒத்தி வைக்கப்படும் கடன்களிலிருந்து
எப்படி விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுப்பது என்று ஆராய
வேண்டும். அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.
அதற்கு முன்னால் இருந்த சட்டங்களில் அனுபவம் இருக்கிறது.
ராஜாஜி அவர்கள் காலத்திலிருந்து வந்த சட்டங்களில் எல்லாம்
இம்மாதிரி நிவாரணங்கள் அளிக்கப்பட்டு வட்டி முதலுக்கு மேல்
இருந்தால் விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டி
ருக்கிறது. இன்று விவசாயிகள் கடன்பட்டிருக்கிறார்கள்; தனி
யார் கடன், கூட்டுறவு நாணயச் சங்கக் கடன், அரசாங்கக் கடன்
என்று கடனில் மூழ்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு
வகையில் நிவாரணம் அளித்தாக வேண்டும். நிவாரணம் என்பது
ஒத்தி வைப்பது என்பதல்ல. ஒத்தி வைப்பதே நிவாரணம் என்று
அரசாங்கம் கருதி விடக் கூடாது. பான் புரோக்கர் ஆக்டில்
நிவாரணம் கொடுத்தது போல தனியார் கடன்களுக்கும் நிவா
ரணம் கொடுக்க அரசு முடிவு எடுக்க நடவடிக்கைகளை விரைவில்
மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் அடுத்து வரும் சட்டப்
பேரவைக் கூட்டத்தில் மசோதா கொண்டு வரும்படி கேட்டுக்
கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு என். வரதராஜன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்
களே, நம் முன்னாலே கடன் ஒத்தி வைப்பு மசோதா ஒன்றினை
விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது தமிழ்நாட்
டிலே இருக்கக்கூடிய ஏறத்தாழ இரண்டரைக் கோடி விவசாயிகள்
சம்பந்தப்பட்டிருக்கும்படியான முக்கியமான பிரச்சினை. கடன்
என்று சொன்னால் இலங்கை வேந்தனைப் போல் கண் கலங்கினான்

என்றெல்லாம் சொல்லுகிற காலம் மலையேறி விட்டது. அந்தப் பாக்களுக்கும் இன்று தமிழ் நாட்டு விவசாயிகளுடைய கஷ்டங் களுக்கும் பொருத்தம் இல்லையென்று சொல்லும்படியான அள வுக்கு நெருக்கடி முற்றியிருக்கிறது. இது ஒரு சாதாரணமான பிரச்சினை அல்ல.

விவசாய உற்பத்தி கடுமையாகப் பாதித்துக் கொண்டிருக் கிறது என்பதை நாம் உணர வேண்டும். மூவாயிரம் கோடி ரூபாய் வரையிலும் தமிழ்நாட்டு விவசாய உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு என்று எடுத்துக் கொண்டால், ஆண்டுக்கு உழவமைச் செலவுக்கும், உரச் செலவுக்கும் ஒன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட தேவையை இன்று பூர்த்தி செய்வது கடனாகத்தான் இருக்கிறது. அந்தக் கடனில் பத்தில் ஒரு பகுதியைத்தான் அரசுத் துறையும், கூட்டு றவுத் துறையும் இன்று கொடுத்து உதவுகிறது. இதுவும் பெரிய நிலச்சுவான்களுக்கு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த மாமன்றத்தில் மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர் கள் சொன்னார்கள்—'விவசாயிகளை மூன்று ரகமாகப் பார்க்கி றேன்; ஒருவன் குடையைப் பிடித்துக் கொண்டு வரப்பில் நிற் பவன் தன்னை விவசாயி என்று கூறுகிறான்; இன்னொருவன் மாளிகை யில் உட்கார்ந்து கொண்டு பட்டா புத்தகத்தை பார்த்துக்கொண்டு அவனும் விவசாயி என்று கூறுகிறான் ; இன்னொருவன் சேறு பாதி, சோறு பாதி என்று நிலத்தில் உழுகிறானே அவன் ; நான் கடைசி ரகத்தைச் சேர்ந்தவனைத்தான் விவசாயி என்று ஏற்றுக் கொள் வேன்' என்ற அருமையான விளக்கத்தை அவர்கள் இந்த மாமன்றத்திலே கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசா யிகளுக்கு நம்முடைய நிவாரணம் இருக்க வேண்டுமென்று அரசை உங்கள் சார்பாக வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இது ஒத்தி வைக்கும்படியான சட்டமாகக் கொண்டு வரப்பட்டிருந்தாலும், இந்த அரசு புதிதாக வந்திருக்கும்படியான அரசு, புதிய விஷயங்களைப் பற்றி ஆலோசிக்க இந்த ஆறு மாத காலம் தேவை என்ற காரணத்தால் வரவேற்கிறேன். ஆனால் கடனை இப்படி ஒத்தி வைத்து அவனுடைய கடன் பளுவானது உப்பி உப்பி இன்றையதினம் சுமார் 600 கோடி ரூபாய்க்கு கடனில் தமிழ்நாட்டு விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட கடன்களுக்கு விவசாயிகள் ஆண்டு ஒன்றுக்கு 100, 150 கோடி ரூபாய் வரை வட்டி செலுத்த வேண்டியிருக்கிறது. வார வட்டி, கந்து வட்டி, சந்தை வட்டி, விஷ வட்டி என்று இப்படி வட்டியே பயங்கரமாக வளர்ந்து கொண்டு போகிறது. இந்தப் பக்கம், அந்தப் பக்கம், இந்த அம்சம், அந்த அம்சம் என்று பேசிப் பிரயோசனம் இல்லை. சமுதாயத்தில் 100க்கு 99 பேருடைய உயர்வுக்காக இந்த மாமன்றம் கடன் நிவாரணச்சட்டம் கொண்டுவர வேண்டும்.



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஏற்கனவே சொன்ன கருத்தை இந்த அரசுக்கு உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5,000 ரூபாய் வருமானம் வருகிற விவசாயிகளுக்கு இருக்கும்படியான அனைத்துக் கடன்களும் ரத்து செய்யப்படா விட்டால் அவன் இனி உற்பத்தியிலேயே ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். அரசுக் கடனாக இருந்தாலும் கூட்டுறவுக் கடனாக இருந்தாலும், தனியார் கடனாக இருதாலும் ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் வருமானம் வருகிற அனைத்து விவசாயிகளுக்கும் இந்தக் கடன்களை எல்லாம் ரத்து செய்யும் படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

விதவைகள் பிரச்சினையைப் பற்றி எழுப்பினார்கள். அப்படி பாதிக்கப்படுபவர்கள் யாராக இருந்தாலும், அப்படி யாராவது கடன் கொடுத்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கும்படியான வேலையை அரசாங்கம் மேற்கொள்ள வேண் டும்.

ஐயாயிரம் ரூபாய் முதல் பதினையாயிரம் ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்கு வருமானம் வரக்கூடிய விவசாயிகளுக்கு உள்ள கடன் களுக்கு உண்டான வட்டி முழுவதும் ரத்து செய்யப்பட வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு இருக்கும்படியான கடன்களை தவணை யில், ஓரளவு, ஏழாண்டு பத்தாண்டுத் தவணையில் திருப்பிக் கொடுப்பதற்கான வழிகளைச் செய்ய வேண்டும்.

இறப்பு, பிறப்பு, மருத்துவம் இப்படி ஒவ்வொரு செலவுக்கும் இன்று பணம் கிடைக்காத நிலையிலே, தட்டுமுட்டுச் சாமான்களைத் தூக்கிக் கொண்டு அடகு வைத்தாலும், தங்க நகைகளைக் கொண்டு போய்க் கொடுத்தாலும் கடன் கிடைப்பதில்லை. கூட்டுறவு வங்கி யிலும் கடன் கிடைப்பதில்லை. மற்ற வங்கிகளிலும் கடன் கிடைப் பதில்லை. ஆகவே, கடன் கிடைப்பதையும், கடன் ஒத்தி வைப் பதையும் நிவாரணம் என்று இணைத்துப் பார்க்கும்படியான செயலை அரசு மேற்கொள்ள வேண்டும். அரசு உடனடியாக ஒரு உத்தரவு இடவேண்டும். எல்லா வங்கிகளும் விவசாயிகள் கொண்டு வரும் படியான தங்க நகைகளின்மீது அடமானமாகக் கடன் கொடுக்க வேண்டும். இந்தப் பேருதவியைச் செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக அரசுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

வட்டிக்கடை விவகாரம், அது பெரிய விவகாரம். தாசில் தார்களைப் பொறுப்பாகப் போட்டிருக்கிறார்கள் இந்தச் சட்ட மன்றத்தில் நாம் எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டு கருத் துக்களைப் பரிமாறிக் கொள்ளுகின்ற இந்த உணர்வை தாசில் தார்கள் உணர மாட்டார்கள். ஆகவே, இதை நிறைவேற்றுகின்ற

[திரு. என். வரதராஜன்] [1977 ஜூலை 9

பொறுப்பு தாசில்தாரோடு நின்று விடக் கூடாது. ஒன்று செய்ய
வேண்டும். மாவட்டங்களில் அபிவிருத்தி மன்றங்களை வைத்திருக்
கிறோம். அபிவிருத்தி மன்றங்களில் என்ன காரியங்களைச் செய்
தோம் என்று சொல்லக்கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அதற்குப்
பொறுப்பாகப் போட வேண்டும். அப்படி நியமித்து விட்டால்
எல்லாம் முடிந்து விடும் என்ற அற்ப ஆசையில் சொல்லவில்லை.
உயர்ந்த மட்டத்தில் இருப்பவர் இருந்தால் கவனம் கொஞ்சம்
கூடுதலாக இருக்கும். அவர் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில்
பதில் சொல்ல வேண்டியவர். வருமானம் 240 உள்ளவர்கள்
வட்டிக்கடைகளில் கடன்பட்டவர்கள் வட்டி கொடுக்க வேண்டிய
தில்லை என்று சட்டம் இருந்தாலும் வட்டியை மறைமுகமாக
வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் போக்கும்
வகையில் உடனடியாக நிவாரணம் கொடுக்க அரசு முயற்சி
செய்ய வேண்டும். கடனுக்காக ஜப்திகள் செய்வதைத் தடுத்து
நிறுத்த வேண்டும். ஆறு மாத காலத்திற்கு விவசாயிகளின் கடன்
களை ஒத்திவைக்கும் மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

* <u>திரு செ. சிவசாமி</u>: தலைவர் அவர்களே, இந்த மசோதாவை
வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஓராண்டுக்கு நீட்டிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டமானது தொடர்ந்து
இன்று நான்காவது தடவையாக நீட்டிக்கப்படுகிறது. 1975-ல்
ஆரம்பிக்கப்பட்டு இன்று நான்காவது தடவையாக நீட்டிக்கப்படு
கிறது.

அதே நேரத்தில் இந்த விவசாயிகளுடைய நிலைமையை எடுத்
துக்கொண்டால் நிச்சயமாக எங்கு பார்த்தாலும் நிலைமை தாழ்ந்து
கொண்டே போகிறது என்பதை நாம் பார்க்கிறோம். தமிழ்
நாடு முழுவதும் கடந்த மூன்று ஆண்டுகளாக. தொடர்ச்சியான
வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு பஞ்ச நிலைமை
வறட்சி நிலைமை நீடித்துக் கொண்டே வந்திருக்கிறது. அதன்
காரணமாக தமிழ்நாட்டில் மூன்று ஆண்டுகளாக வறட்சி நிலை
உண்டு என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. இந்தச் சட்டத்
தைத் தொடர்ந்து நீட்டித்துக் கொண்டே போகிறோம். இந்த
சட்டத்தைத் தொடர்ந்து நீட்டித்துக் கொண்டு போவதன் மூலம்
விவசாயிகளுக்கு எந்த அளவுக்குப் பலனை ஏற்படுத்த முடியும் என்று
பார்த்தால் நிச்சயமாக எந்தப் பலனையும் ஏற்படுத்த முடியாது
என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

விவசாயிகளுடைய நிலைமை சன்னஞ்சன்னமாகக் கீழே வந்து
கொண்டிருக்கிறது. அவர்களுடைய பொருளாதார நிலைமை
கீழே வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் வாங்கும் சக்தியை
இழந்திருக்கிறார்கள். திருப்பி செலுத்தும் சக்தியை, அதாவது
'ரீ-பேயிங் கபாசிடி.' யை இழந்திருக்கிறார்கள். விவசாயிகள்
முழுவதும் விரயமாகிக் கொண்டிருக்கிற



1977 ஜூலை 9, [திரு செ. சிவசாமி]

உற்பத்திக் பொருள்களின் விலைகள் ஏறிக் கொண்டிருக்
கின்றன. விவசாயியால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள்
விலை வீழ்ந்து கொண்டிருக்கின்றன. பருத்தி உற்பத்தி
யாளரை எடுத்துக் கொண்டால் பருத்தி விலை குறைந்திருக்
கிறது. அதே நேரத்தில் துணி விலை அதிகரித்துக் கொண்டே
போகிறது. கரும்பு விவசாயிகளுக்கு கரும்பின் விலை குறைந்து
கொண்டிருக்கிறது ; ஆனால் சர்க்கரை விலை ஏறிக் கொண்டே
போகிறது. நெல் உற்பத்தியாளருக்கு நெல்விலை இறங்கிக் கொண்
டிருக்கிறது ; ஆனால் அதே நேரத்தில் அரிசி விலையானது கூடிக்
கொண்டு போகிறது. இப்படி ஒவ்வொரு பொருளையும் எடுத்துக்
கொண்டால் விவசாயிகளுடைய பொருளாதார நிலைமை கீழே
தான் போய்க் கொண்டிருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துப்
பார்த்தால் அவர்கள் இந்தக் கடன்களைத் திருப்பிக் கட்ட முடி
யாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர முடியும்.
ஆகவே, இது, கடன்களை ஒத்தி வைப்பது இதற்குப் பரிகாரமாக
இருக்க முடியாது என்பதை அரசுக்கு வற்புறுத்திக் சொல்ல
விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

ஒவ்வொரு பகுதியாக எடுத்துக் கொண்டு பார்த்தால் இராம
நாதபுரத்தில் கிணறுகள் எல்லாம் வறண்டு போய் பாழும் கிணறு
களாக மாறிக்கொண்டு இருக்கின்றன. விவசாயிகள் பம்பு செட்
டுகளை எல்லாம் கொண்டு போய் வீட்டில் பந்தோபஸ்தாக வைத்
திருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நில அடமான
வங்கிகளிலிருந்து வாங்கிய கடன்களுக்காக அந்தக்
கடன்களை வசூலிப்பதில் இருக்கக்கூடிய கெடுபிடிகளுக்குப் பயந்து
அங்கே மக்கள் சாமான்களை எல்லாம் ஒளித்து வைக்கக்கூடிய
நிலைமை இருக்கிறது. சி.எஸ்.ஆர். வருகிறார் என்றால் உடனே
எல்லாச் சாமான்களையும் ஒளித்து வைத்துக்கொள்ளக்கூடிய
நிலைமை இருக்கிறது, கடன்களை வசூலிக்க வருகின்ற அதிகாரிகள்
எங்கே பம்புசெட்டுகளை தூக்கிச் சென்றுவிடுவார்களோ அல்லது
ஸ்டார்ட்டர்களையும், மோட்டார்களையும் ஜப்தி செய்துவிடுவார்
களோ என்று பயந்து ஒளித்து வைக்கக்கூடிய அவல நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டிலும் வட்டி ஏறிக்கொண்டே
இருக்கிறது. அதைச் சட்டத்தின் மூலம் நிறுத்திவைத்தாலும்
வட்டி வாங்காமல் யாரும் இருப்பது கிடையாது என்பதை நான்
சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சொஸைடி கடன்களையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் கடுமை
யான வசூலின் காரணமாக விவசாயிகள் அங்கே அழுத கண்ணீரும்
கம்பலையுமாக இருக்கிறார்கள். கடன் ரத்துச் சட்டத்தின் மூல
மாகத்தான் அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் கொண்டுவர முடி
யுமே தவிர, ஏதோ ஒரு வருடம், 6 மாதம் என்று இந்தச் சட்
டத்தை நீட்டித்துக் கொண்டுபோவதால் நிச்சயமாக அந்த விவ
சாயிகளை கை தூக்கிவிட முடியாது என்பதைக் தெரிவித்துக்

கொள்கிறேன். அரசாங்கமானது liquidation of rural indebtedness என்ற முறையிலே நிரந்தரமாக அவர்களுக்கு நிவாரணம், பரிகாரம் காணவேண்டுமென்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே இன்னொன்றையும் இந்த மன்றத்திலே நான் சொல்லிக்கொள்வது கடமையென்று கருதுகிறேன். கடந்த காலத்திலே விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக போராட்டம் நடத்தியபோது அதிலே 17 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அவர்கள் கோரிக்கை மிகச் சிறிய கோரிக்கை; மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்பது, அந்தக் கோரிக்கையை வைத்த நேரத்திலே 17 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும், கடந்தகால ஆட்சியாளர்கள்.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: இந்த பில்லுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின்மீது சுருக்கமாகப் பேசி முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. செ. சிவசாமி: கடந்த காலத்திலே விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை வைத்து இயக்கம் நடத்திய போது 25 ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டார்கள், 17 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள், அன்று அதற்குச் சொல்லப்பட்டது, இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்றும் 'பந்த்' நடத்திய போது 'பந்தைப்' பந்தாடுவேன் என்றும் சொன்னார்கள், அந்த நிலைமைகளைச் சமாளித்து விவசாயிகள் வெற்றிபெற்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடன் நிவாரணச் சட்டத்திலே பேசுகின்றபோது அதைப்பற்றிதான் பேசவேண்டுமே தவிர வேறு எதை எதையோ பேசிக்கொண்டிருக்கிறீர்களே, அதைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. செ. சிவசாமி: வட்டி ஏறிக்கொண்டே போனதன் மூலமாகக் கடனைச் செலுத்த முடியாத நிலைமை ஏற்படுகிறது, ஆகவே ஏழைகள் விஷயத்தில் கடனையே ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்கள் விஷயத்தில் பரிசீலித்து நீக்க வேண்டும். ஆனால் தற்காலிகமாக 6 மாதம் அல்லது 1 வருடம் இதை நீடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்கான ஆலோசனையில் இந்த மன்றத்திலேயே கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுமுடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணத் திருத்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் சாதாரணக் குடிமக்கள் அடைந்த *கடன் தொல்லையிலிருந்து தாற்காலிகமாக நிவாரணம் அளிப்பதற்காக ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் வாயிலாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலகெடுவை இன்றைக்கு 6 மாத காலத்திற்கு நீட்டித்துத் தருவதற்காக இந்தச் சட்டம் வந்திருக்கிறது.

இந்தச் சட்டத்திலே 6 மாத காலம் என்று இருப்பதை 1 வருட காலம் என்று அதிகப்படுத்தவேண்டுமென்ற முறையிலே இங்கே கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் எவ்வளவு காலம் தான் நீடித்துக் தந்தாலும் இறுதியாக விவசாயி கடன்பட்டிருக்கிற தொகையைத் திருப்பித் தரக்கூடியவனாகத் தான் இருக்கிறான். ஆகையினால் நீட்டித்துத் தரப்படுகின்ற இந்தக் காலத்திற்கு உரிய வட்டித் தொகையை நிவாரணம் அளிப்பதா, அந்த வட்டியைக் கொடுப்பதா என்ற பிரச்னைகளையெல்லாம் ஆராய்ந்து அதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டால் அதன்மூலம் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க பேருதவியாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். பிரசிடெண்ட்டால் 197–6ஆம் ஆண்டு போடப்பட்ட பேரண்ட் ஆக்ட் இருக்கிறதே, ஏற்கனவே இதைப்பற்றி இருக்கிற சட்டம், அதன்மீது ஜனாதிபதி பிறப்பித்த சட்டம், அந்தச் சட்டத்தின்மீது காலக்கெடு கொடுத்துள்ள இந்தச்சட்டம் ஜூலை 15 ஆம் தேதியோடு முடிவடைகிறது, அதை நீட்டிப்பதற்குத்தான் இந்தத்திருத்தச் சட்டம் வந்திருக்கிறது, இப்போது இந்தத் திருத்தச் சட்டத்தைப்பற்றித்தான் தகவல்கள், பேப்பர்கள் இங்கே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏற்கனவே இருக்கிற சட்டம் என்ன என்பதைப்பற்றியெல்லாம் குறிப்புகள் இல்லாமல் இருப்பது புதிதாக வந்து இருக்கிற அங்கத்தினர்களுக்கு உதவிகரமாக இருக்காது என்பது மட்டுமல்ல, வழக்கறிஞர்களாக வந்திருக்கின்ற உறுப்பினர்கள் மூலச் சட்டம் எங்கே என்று தேடுகிற நிலைமையில் அதற்கான வசதிகள் இல்லாமல் போகும். ஆகவே அமைச்சர் அவர்கள் திருத்தச் சட்டத்தோடு மூலச் சட்டத்திற்கான விளக்கங்களையும் உறுப்பினர்களுக்குத் தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டிலே ஏழை எளியவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கவேண்டுமென்று நாம் பேசுகிறோம். நம் நாட்டிலே உள்ள விவசாயிகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால்; இந்திய விவ

சாயி, விவசாயியாகவே பிறந்து, விவசாயியாகவே வாழ்ந்து விவசாயியாகவே மடிந்துவிடுவான் என்று ஒரு பழமொழி உண்டு. Rural indebtedness பற்றிச் சொல்லும்போது, விவசாயிகள் எப்போதுமே கடன் தொல்லையிலே தான் இருந்துகொண்டிருக் கிறார்கள் என்பதைச் சொல்லும்போது what is the extent and quantum of rural indebtedness என்பதையும் கவனிக்க வேண்டும். இந்த அரசு அவைகளையெல்லாம் ஒரு அஸெஸ் மெண்ட் செய்து, ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது நாட்டுக்கு நல்லது, நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். ரூரல் இன்டெட்னெஸ் எவ்வளவு இருக்கிறது. அதனுடைய அளவு என்ன, எங்கெங்கே எவ்வளவு தூரம் கடன் பட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் கணக்கு எடுத்து வைத்துக்கொள்வது பொருளாதாரத் திட்டங்களை வகுப் பதற்கும் பொருளாதாரத்திலே ஏற்படுகிற விளைவுகளைச் சீர் திருத்துவதற்கும் இது அடிப்படையாக இருக்கும், உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

இங்கே இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். மூலச் சட்டத் தில் 'debt' என்பது பற்றி விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்திலே 'rent' என்பதற்கு விதிவிலக்கு அளித் திருக்கிறார்கள். Debt means any liability in cash or kind whether secured or unsecured due from an agriculturist whether payable under a decree or order of civil or revenue court or otherwise but does not include rent as defined In Clause 4 or 'Karyartham' as defined in Sec. 3 Clause (1) of sub-clause (1) of Malabar Tenancy Act என்று விளக்கம் அளித்திருக்கிறார்கள். 'ரெண்ட்' என்பதற்கு விளக்கம் அளிக்காமல் 'இன்டரஸ்ட்' என்ப தற்கு விளக்கம் இருக்கிறது. கிராமப்புறங்களிலே நாம் பார்க் கிறோம்: பார்க்கிறோம் என்றால் அப்படிப் பார்க்கக்கூடிய, கேட்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது நமக்கு, வழக்கறிஞர்கள் என்ற முறை யிலே. என்ன 'ரெண்ட்', எவ்வளவு 'ரெண்ட்' கிடைக்கிறது, எதற் காகக் கிடைக்கிறது என்றால் சாதாரணமாக ஒரு சொத்தின்மீது பெறும் வருமானம் 'ரெண்ட்' என்பதாகும். ஆனால் இப் பொழுது புதிய முறையிலே, இந்தச் சட்டம் வந்தபிறகு கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே பணத்திற்கு வட்டி தான் வாங்குவது உண்டு, ஆனால் இப்பொழுது எழுதுகிறார்கள், 20,000 ரூபாய் கொடுத்தால் அதற்கு வாடகை 'ரெண்ட' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி பணத்தைக் கொடுக்கிறார் கள். அதற்காக கொடுக்கல் வாங்கல் நடக்கிறது. அரசாங்கம் [illegible]தக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





(முற்பகல் 11-20)

அதே நேரத்திலே, 'லிமிடேஷன் ஆக்ட்'-லிருந்து இந்த டாகு மெண்ட்ஸ், கிரடிட் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்க்கு லிமிட்டேஷன் ஆக்டிலே யிருந்து விதிவிலக்கு அளித் திருக்கிறோம். இந்தக் காலக் கெடுவிற்கு ஒரு புரோநோட் இருந்தால் லிமிடேஷன் மூன்றாண்டு இருக்குமேயானால், எவ்வளவு காலத்திற்கு நீடித்துக் கொடுக்கிறோமோ, நிவாரணம், மாரட்டோரியம் கொடுத்திருக்கிறோமோ அங்கு அப்ளை ஆகாது என்பது இப்பொழுதுள்ள நிலை. இன்றைக்கு இந்தச் சட்டம் காலாவதியானால் ஒவ்வொருவரும் தான் பெற்றிருக்கும் டிக்ரியை எக்சிகியூட் செய்ய போகக்கூடும். அப்படி புரோநோட் வைத்துக் கூட கோர்ட்டிற்குச் சென்று அவர்கள்மீது டிக்ரி வாங்கி எக்சி கியூட் செய்ய முயற்சிக்கும்பொழுது முதலும் வட்டியும் என்ற நிலை வரும்பொழுது யாருக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று பெருவிருப்பத்துடன் முயற்சித்துக் கொண்டிருக்கிறோமோ அவர் களின்மீதே பெருத்த பளு ஏற்பட வசதியாக இது காலக் கெடுவிலே அமைந்துவிடும். எனவே, இதிலிருந்து நிரந்தர நிவாரணம் அளிக்க அரசாங்கம் இப்பொழுதிலிருந்தே சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, இந்தக் கடன் பளு எவ்வளவு இருக்கிறது நாட்டிலே என்று அறிந்து கொள்ள இந்தக் கோர்ட்டு டாக்கு மெண்டுகளை யார் யார் வைத்திருக்கிறார்களோ அவர்கள் ஒரு அதிகாரியிடத்திலே ரெஜிஸ்தர் செய்து கொள்ளச் செய்ய வேண் டும். இப்பொழுதே அப்படி ரெஜிஸ்தர் செய்து கொண்டால் தான் பிறகு பணத்தை வசூல் செய்ய முடியுமென்ற திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொண்டு வந்தால் எவ்வளவு கோர்ட் டாக்குமெண்ட்ஸ் இருக் கின்றன, எவ்வளவு லயாபிலிடிஸ் இருக்கின்றன நாட்டிலே என்று அசெஸ் செய்ய வசதியாக இருக்கும். இப்படி ரிஜிஸ்தர் செய்து கொள்ளாதவர்கள் அவற்றைப் பயன்படுத்த முடியாது என்று வகுத்துக்கொண்டால் அதிலே சில சிக்கல்கள் தீரும், சில தவறான முறைகளும் ஒழிக்கப்படும், கடன் பளுவைத் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

''ஃபிஸ்கல் பாலிஸி'' இம்மாதிரியான சில திட்டங்களைக் கொண்டு வரும்பொழுது அரசாங்கம் இதன் விளைவுகள், Money market, general currency in circulation என்னவாகும், அதை ரெஸ்ட்ரிக்ட் செய்யும்பொழுது என்ன கமர்ஷியல் ஆக்டி விட்டீஸ் ஏற்படும், அப்பொழுது பொருளாதார விளைவுகள் என்ன என்பதை எல்லாம் அறிய இந்தச் சட்டங்களை நிறைவேற்றும் காலங் களில் அதற்காகத் தனித் துறையை வைத்துச் செயல்பட்டு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது சரியாக இருக்கும், பல

பொருளாதாரச் சிக்கல்கள் குறையும். இப்பொழுது விளக்கங்கள் கிடைக்காமல் போகிறது, அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, இன்றைக்கு வியாபாரிகள் மணி மார்க்கெட் ரொம்ப டைட் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், இதனால் கமர்ஷியல் ஆக்டிவிட்டீஸில் எவ்வளவு ரெஸ்ட்ரிக்ஷன் ஏற்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, கடன்பட்டிருப்பவர்கள் குறை சொல்கிறார்கள், நாம் ஏதோ தேவைக்கு 10, 20, 25 ரூபாய் என்று வாங்கிக்கொண்டிருந்தோம், இந்தப் பாவிகள்—அவர்கள் சொல்கிறார்கள்—இந்தச் சட்டத்தைப் போட்டு அவர்களும் பணம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள், தேவைக்குப் பணம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமையை ஆராய்ந்து what is the general impact of any measure that the Government takes either through a Bill or administrative action, what is the general impact upon the money market, what is the general impact on the commercial activities and how it is going to help or boost the economic activity என்பதையெல்லாம் கவனத்தில் கொண்டு சட்ட திட்டங்களை வகுப்பது நாட்டுக்கு நல்லமுறையிலே பயனுள்ளதாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆறு மாத காலம் என்று காலக்கெடுவை நீடித்துக் கொடுப்பதற்கான திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். காரணம், நாட்டிலே ட்ரௌட் கண்டிஷன் ஏற்பட்டிருக்கிறது. அது இருக்கும் வரையில், 6 மாதங்களுக்குள் மாறிவிடுமா. நிலைமைகள் சீர்திருந்திவிடுமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். திருத்தி விடுவோம் என்று அரசாங்கம் நம்புகிறது. ஒரு வருஷம் வரையில் எடுத்துக்கொள்வோம் என்பதற்குப் பதிலாக ஆறு மாதங்களிலே தீர்த்து விடுவோம் என்று நம்புகிறது. அரசாங்கத்தினுடைய அந்த நம்பிக்கைக்கு உற்ற வகையில் எல்லோரும் உறுதுணை புரிந்து நாட்டிலேயுள்ள வறட்சி நிலைமையை மாற்ற, அரசுக்கு உறுதுணையாக இருப்பது நம் கடமை என்பதைக் கூறி, இந்த ஆறு மாத காலத்தை ஏற்றுக்கொண்டு இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று, நாட்டிலே இருக்கின்ற கடன் தொல்லைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கும், விவசாயிகளின் நிலைமை மாறி அவர்களும் மனிதர்களாக வாழவும், "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று இலங்கை வேந்தனே கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கியதாகக் கூறி இலங்கை வேந்தனுக்கே கடன்பட்ட நெஞ்சம் என்று கூறியிருக்கிறார்கள், அதைப்போல் இந்த மக்கள் எப்பொழுதுமே இந்த நெஞ்சத்தை வைத்துக்கொண்டிருக்காமல்' அதை நிரந்தரமாகத் தீர்க்க இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.





* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கும் கடன் நிவாரணச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடன் நிவாரணச் சட்டம் ஏழை எளிய விவசாயிகள் மற்றும் உண்டான எளியவர்களுக்கு நன்மை பயக்கும் என்ற முறையிலே கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் கொண்டு வந்த பிறகு எங்கு பார்த்தாலும் கடன் வாங்குகின்ற நிலை இல்லாமற் போய்விட்டது. கடன் கொடுப்பவர்கள் இப்படிப்பட்ட சட்டம் இன்னும் வருமோ என்று பயந்து கடன் கொடுக்காத நிலையிலே இருக்கின்றார்கள். அதன்மூலமாக விவசாயிக்குப் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வட்டிக்குக் கொடுப்பவர்களிடத்திலும் கடன் வாங்க முடியவில்லை, அரசாங்கத்திலிருந்தும் சல்லிசாகக் கடனைப் பெற முடியவில்லை. விவசாயிகளுக்கெல்லாம் பூச்சி அதிகமாகப் பயிரில் மொய்க்கின்ற நேரத்திலே கடன் விரசாக வாங்க வேண்டிய நிலை. அல்லது உரம் போட வேண்டிய நேரத்திலே அவசியமாகக் கடன் வாங்க வேண்டும். இப்படிப்பட்ட நேரங்களிலே கடன் கிடைக்காத காரணத்தினாலே இந்த நாட்டிலே விவசாயம் கூடப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கூறிக்கொள்வேன். அதற்கு இப்படிப்பட்ட சட்டத்தை நீடித்துக்கொண்டே போகாமல் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து இந்தச் சட்டத்தின் மூலமாக ஏழை எளிய மக்கள் நன்மை அடையக்கூடிய வகையிலே செய்து, சுலபமாகக்கடன் கிடைக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

எனக்கு முன்பு பேசியவர்கள் கூறினார்கள், இதில் கெட்ட பெயர்கூட இருக்கிறது என்று. புரியாதவர்கள் இந்தச் சட்டம் கொண்டு வந்ததாலே கடனும் கிடைக்கவில்லை, அரசாங்கத்திலேயும் கடன் கொடுப்பதுமில்லை, அரசாங்கத்தை அணுகினால் சாமான்யமாகக் கடன் பெற முடியவில்லை என்று சொல்லிக் கொள்கின்ற நிலைகூட இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்திலிருந்து ரொம்பக் குறைந்த வட்டிக்கு, நியாயமான வட்டிக்குக் கடன் கொடுக்கக்கூடிய நிலையைச் செய்ய வேண்டும். அதிலேயிருக்கின்ற கஷ்டமான கண்டிஷன்களைத் தூக்கியெறிந்து விட்டு, சல்லிசாகக் கடன் கிடைப்பதற்குச் செய்தால்தான் நமது அரசுக்கு நல்ல பெயர் இருக்க முடியும்.

ஆகவே, புதிய அரசு விவசாயத்திலே ஈடுபட்டிருக்கின்ற கஷ்டப்படக்கூடிய மக்களுக்குக் கடன் உடனடியாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்து கொடுத்தால் விவசாயிகள் உங்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள். ஆகவே, உடனடியாகக் கடன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, கடன் நிவாரணச் சட்டங்கள் மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு நிவாரணமும் எதற்காக என்றால் கடந்த காலத்தில் போடப்பட்ட சட்டத்திற்கான நிவாரணம்தான். காலாவதியாகும் நிலையில் அதை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமே என்பதற்காக நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதானே தவிர வேறே ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. ஏற்கனவே நீட்டிக்கப்பட்டிருக்கின்ற சட்டத்தால் விவசாயிகளுக்கு நன்மைகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா, அதை நடைமுறைப்படுத்துவதிலே சிக்கல்கள் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்து அதைத் திருத்தக்கூடிய முறையிலே இது வந்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும்.

ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்று, கடன் வாங்கியவன் தானே நிரூபிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர, கடன் கொடுத்தவன் இவ்வளவு என்று சொலல வேண்டியதில்லை. 500 ரூபாய் வாங்கிக் கொண்டு 1,000 ரூபாய் என்று எழுதிக்கொடுக்கும் நிலைமையிருந்தால் 'சூட்' போடுவதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் பொய்யாக எழுதி வாங்கியிருந்தால் அதற்கு ஏதாவது பரிகாரம் இருக்கிறதா என்றால் இல்லை. பரிகாரம் செய்யக் கூடியதைப் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். கடன் வாங்கியவன் தலையிலே கட்டாமல் கடன் கொடுத்தவன் தலையிலே போட வேண்டும். அதற்கு அவசியமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 11-30)

வட்டி என்கிற ''கான்செப்ட்'' கொள்கையிலே வந்தால் நல்லது. வட்டி என்றால் என்ன? திரு. லத்தீப் அவர்கள் சுட்டிக்காட்டுவார் என்று நினைத்தேன், குரானிலே வட்டி வாங்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வட்டி என்பது உழைப்பே இல்லாமல் பெறுவது. வட்டி என்பது அநியாயமாகச் சுரண்டுவது. பல்வேறு சமூகநலத் திட்டங்களைப் போடுகிற நாம் வட்டி கேட்பது என்றால் சரியாக இருக்காது. வட்டியை ஒழிக்க வேண்டும். முதலமைச்சருடைய பெயருக்கு ஏற்றமாதிரி அதை ஒழிக்க வேண்டும். அதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். அந்த மாதிரி வட்டியை ஒழித்து விட்டால், நிலைமை ஓரளவு சீராகும்.

ஓரிடத்தில் டிரவுட் கன்டிஷன் இருக்கிறது. விவசாயி கடன் வாங்கி வட்டி செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறான்; அது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிற உண்மை. அவனிடம் வசூலிப்பதை ஒன்றிரண்டாண்டு தள்ளிவைக்கிறோம். பிறகும் அவனால் கடனையும் செலுத்த முடியவில்லை, வட்டியையும் செலுத்த முடிய



வில்லை. திரும்ப வாங்க முடியாதக் கடனை நாம் 'பாட் டெட்ஸ்' என்கிறோம். ஆனால், இது ''ஓர்ஸ்ட் டெட்ஸ்'' விவசாயிக்குக் கொடுக்கிற கடன் 'ஓர்ஸ்ட் டெட்ஸ். சமுதாயத்திலே, மிகவும் கீழான நிலையில் அவனிருக்கிறான் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. அந்தக் கடனிலிருந்து அவனுக்கு நிவாரணம் கொடுக்கிறோம். அந்தச் சட்டத்தை நீட்டித்துக் கொண்டு சென்றால் மட்டும் பலனில்லை. அதற்குப் பதிலாக வட்டியை ஒழித்து, அவனைக் கரையேற்ற என்ன வழியென்று பார்க்கவேண்டும். கடன் கொடுத்தவர்களையே நீக்கவேண்டும். விவசாயிகளிடமிருந்து கடனைப் பெற அரசே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். கடன் கொடுத்தவர்களிடமிருந்து கடன்பட்டவர்களுக்கு விடுதலை அளிக்க வேண்டும். அதற்குப் பிறகு அவன் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசீலித்து சர்க்கார் சொல்லட்டும். அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சலுகை அளிக்க வழி ஏற்படுத்தினால், கடன் பட்டதிலிருந்து அவனுக்கு விடுதலை கிடைக்கும். அப்படிப்பட்ட விடுதலையைக் கொடுப்பதிலே எக்கனமிக் கமிட்மெண்ட் ஒன்றும் கிடையாது. இப்பொழுது வந்திருக்கிற சர்க்கார் இதைச் செய்தால், வாக்களித்திருக்கிற ஏழை எளிய மக்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும்.

அடுத்ததாக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். சர்க்காரே பொறுப்பேற்றுக் கொண்டு, கடன் கொடுத்தவன் பிடியிலிருந்து விடுதலை செய்து, அதிலிருந்து நிவாரணம் தருவதற்கு வாய்ப்பளிக்கக் கூடிய முறையில் சட்டம் கொண்டு வரவேண்டும். அது ஒரு வெல்ஃபேர் மெஷராக இருக்கும். liquidation of rural indebtedness என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். லிக்விடேஷன் ஆஃப் ரூரல் டெட்ஸ் நடக்கிறதா என்றால் இல்லை. அக்குமுலேஷன் ஆஃப் ரூரல் டெட்ஸ் தான் நடக்கிறது. வட்டிக்கு வட்டி என்று போட்டுக் கொண்டே போனால், வட்டி ஏறிக் கொண்டே போகிறது. வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலையேற்படுகிறது. அசலையே கொடுக்க முடியாதவனுக்கு வட்டி, வட்டி என்று போட்டால் அவனால் எப்படி கொடுக்க முடியும். லிக்விடேஷன் ஆப் ரூரல் டெட்ஸ்-ஐ ஒத்துக்கொண்டு அக்குமுலேஷன் ஆப் ரூரல் டெட்ஸ்க்கு நடைமுறையிலே இடம் கொடுக்கக்கூடிய முறையில் கொண்டு வரப்படுகிற சட்டம் வரவேற்க கூடியதா என்றால் நிச்சயமாக இல்லை. அவகாசம் கொடுப்பதை வரவேற்கிறோம். ஆனால், உங்களிடம் மக்கள் எதிர்பார்ப்பது புரட்சிகரமான, அதிகமான வேலைகளை செய்வீர்கள் என்பதாகும். ஆகவே, அப்படி எதிர்பார்க்கிற மக்களுக்கு ஏமாற்றம் அளிக்காது கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் அளிக்கவேண்டும். இங்கு உதாரணம் கூடச் சொன்னார்கள். யானைப் பசிக்கு சோளப் பொரி மாதிரி என்று சொன்னார்கள். சட்ட அமைச்சர் ரொம்ப அனுபவம் வாய்ந்தவர், அட்வகேட் ஜெனரலாக இருந்தவர்,

நீதிபதியாக இருந்தவர், டெல்லியிலே அவருக்காக இன்னொரு
வக்கீலை வைத்தெல்லாம் வாதாடியிருக்கிறார். ஆகவே, எடுத்துக்
கொண்ட காரியத்திற்காக, எதைப்பற்றியும் சிந்திக்காமல், மக்க
ளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் காரியங்களைச் செய்ய
வேண்டும்.

அக்குமுலேஷன் ஆஃப் டெட்ஸ் என்று இருக்கிற நிலையை
மாற்றி, லிக்விடேஷன் ஆஃப் டெட்ஸ் ஏற்பட, அந்த சோஷியல்
மெஷருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஒரு முறை
யாவது திருத்தி அதற்கு வழி செய்யவேண்டும். இந்த வாய்ப்பை
அளித்த பேரவைத் தலைவரவர்களுக்கு உண்மையிலேயே உளப்
பூர்வமாக நன்றி தெரிவித்து அமர்கிறேன் வணக்கம்.

*திரு. டி. பி. மு. பெரியசாமி: மதிப்பிற்குரிய பேரவைத்
தலைவரவர்களே, சட்ட அமைச்சர் கொண்டு வந்துள்ள கடன்
நிவாரண திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 6 மாத காலம்
என்றிருப்பதை ஓராண்டு என்று திருத்திச் சட்டம் கொண்டு
வந்தால் ஏழை எளிய மக்களுக்கு, விவசாயிகளுக்கு நன்மை
பயக்கும் என்று தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, சட்ட அமைச்சரவர்களே, இந்த
அரசு விவசாய மக்களின் நன்மைக்காக பாடுபடக்கூடிய அரசு
என்று கடந்த காலத் தேர்தல் பிரகடனத்திலும் மற்றும் தேர்தல்
பொதுக் கூட்டங்களிலும் பேசி வந்திருக்கிறோம். நாட்டின்
முதுகெலும்பு விவசாயிகள் என்று ஆண்டாண்டு காலமாக, ஆட்சி
புரிந்தவர்களும் மற்றவர்களும் பேசி வந்த காட்சியை நாம் பார்த்
தோம். ஆனால், விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை
மற்றவர்கள் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்குத் தாழ்ந்து
காணப்படுகிறது என்பதை சபை நன்றாக அறியும். எனவே, நலிந்து
கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி, மக்களுக்கு வாழ்வு அளிக்
கின்ற முறையில் இந்தச் சபை கடன் திருத்தச் சட்டத்தை
ஓராண்டு காலமாக திருத்துவதோடு நில்லாமல், நிரந்தரமாக
விவசாயப் பெருங்குடி மக்கள் நல்லமுறையில் வாழ்வதற்கு
வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட அமைச்சரவர்கள் அறிவித்துள்ள இந்தத் திருத்தச்
சட்டத்தில் கூட்டுறவுத் துறையில் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள்
எந்த அளவு ஏழை எளிய விவசாய மக்களை பாதித்திருக்கிறது
என்பது—இந்தச் சபைக்கு வந்திருக்கக்கூடிய விவசாயப் பெருங்
குடியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள்—அவர்களுக்கு
நன்றாகத் தெரியும். ஆளுங்கட்சி வரிசையிலும் சரி, எதிர்க்கட்சி
வரிசையிலும் சரி, விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக
பலர் வந்திருக்கிறார்கள். அவர்களின் துன்பங்களைப் போக்கு
வதற்கு நிரந்தரமான தீர்வு காண ஒரு கமிட்டி அமைத்து, அந்த
கமிட்டியின் அறிக்கையினைப் பெற்று நிரந்தரமான தீர்வு காண
வேண்டுமென்று அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



ஏற்கெனவே, அரசு கூட்டுறவுத் துறையின் மூலமாகக்
கொடுத்து வருகிற கடன் விவசாயிகளுக்குப் பற்றாக்குறையாக
இருப்பதால் மேன்மேலும் லேவாதேவிக்காரர்களை அணுக
வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி அணுகுகிறபொழுது
இருக்கக்கூடிய சட்டத்தைக் காட்டி, எந்தவிதமான ரசீதும் கொடுக்
காமல் கடன் கொடுக்கிறார்கள். வெள்ளைக் காகிதத்தில் எழுதி
வாங்கிக்கொண்டு எந்த ரசீதும் கொடுக்காமல் கடன் கொடுக்
கிறார்கள். ரூ. 20,0000 நகைக்கு ரூ. 2,000 கொடுப்பது அமுலில்
இருப்பதை நாம் பார்க்கிறோம். இங்கே வந்திருக்கிற சட்டமன்ற
உறுப்பினர்கள் பலர் தேர்தல் காலத்தில் அனுபவித்திருப்பார்
களென்று கருதுகிறேன். இங்கே வந்திருக்கிற சட்டமன்ற உறுப்
பினர்களுடைய நகை எந்த அளவு லேவாதேவிக்காரர்களிடம்
இருக்கிறது என்பதை நான் அறிவேன். கூட்டுறவு சங்கங்கள்,
ரூ. 20,000 நகைக்கு ரூ. 1,000 கூடத் தர முடியாது என்று
தெரிவிக்கின்றனர். அங்கே கடன் வாங்குவதற்கு ஐந்து ஐந்து
பவுனுகப் பிரித்து, கொடுக்கவேண்டிய சூழ்நிலையிருக்கிறது. பவுன்
மீது, இவ்வளவு நகைக்கு இவ்வளவு ரூபாய் கொடுக்கவேண்டு
மென்ற வகையில் சட்டத்தைத் திருத்தவேண்டும். ஒரு பவுனுக்கு
ரூ. 200 என்ற வகையில் 20 பவுனுக்கு ரூ. 4,000 விவசாய
பெருங்குடி மக்களுக்குக் கிடைக்க வசதி செய்து கொடுக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பெறுகிற கடனைத் திரும்பப் பெறுகிற உரிமையும்
அரசுக்கு இருக்கிறது. பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கிற
கடமையும் மக்களுக்கு இருக்கிறது என்ற உதாரணத்தைத்
தேர்தல் காலத்தில் மக்களுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆனால்,
அந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் மூலமாகக் மக்களுக்கு ஒரு
மன அமைதி இல்லையென்பதை அரசுக்குத் தெரிவிக்கிறேன்.
நிதிநிலை அறிக்கை வராவிட்டாலும் கூட தமிழகத்தில் இருந்த
நிதிநிலை எவ்வளவு தூரம் பாழாக்கப் பட்டது
வீணாக்கப்பட்டது என்பதை நாம் நன்றாக அறிவோம்.
எனவே, நிதி நிலைச் சரியாக இல்லையென்று கூறி கூட்டுறவுத் துறை
மூலமாகக் கடன்தொகையளிப்பதை அதிகப்படுத்த இயலாவிட்
டால், லேவாதேவிக்காரர்களிடம் நேரடியாகப் பேசி குறைந்த
வட்டிக்கு கடன் கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். எனவே, சட்டத்துறை அமைச்சரவர்கள்
காலதாமதம் காட்டாமல், இந்த விஷயத்தில் நல்ல முறையில்
ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்ச
ரவையையும் அவ்வண்ணமே கேட்டு, எனது பேச்சை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. நாராயணசாமி முதலியார்: தலைவர்
அவர்களே, எனது பதிலைப் பொறுக்க வரையிலும் ஆங்கிலத்தில்
சொல்ல நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள். உறுப்பினர்களும்
அனுமதி கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்
கிறேன்.

Mr. Speaker, Sir, nearly half a dozen speakers have participated in this discussion over the moving of this Bill, an amending Bill, for extending the period of this legislation for a further period of six months. When you look at the history of this legislation, this social measure, —it is essentially a social welfare measure that has been conceived of in pursuance of the twenty point programme and this was first legislated by the D.M.K.

(முற்பகல் 11-40)

திரு. ச. கூத்தகுடி சண்முகம்: தலைவரவர்களே, சட்ட அமைச்சரே தமிழில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசினால் நாங்கள் எப்படி புரிந்து கொள்ளமுடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆங்கிலத்தில் பேசக் கூடாது என்று விதி இல்லை. தமிழில் பேசுவதுதான் நலம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். தமிழில் பேசுவதை விட ஆங்கிலத்தில் பேசினால் சரியாகச் சொல்ல முடியும் என்று அவர் கருதுகிறார். ஆகவே, தயவுசெய்து அமருங்கள். பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் பேசுகிறார்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: Mr.. Speaker, Sir, in 1966 when my beloved Anna addressed the D.M.K lawyers at Tanjore, I very well remember his opening sentence when he emphasised the importance of English in the deliberation of the August Assembly of the State and also UNO. He stated—and I remember distinctly—that the two languages namely Tamil and English are two eyes for him and one is as important as the other—and therefore with your kind permission and those of other honourable members I think—I will be grateful to you if you permit me to go ahead with the reply because this is only a measure for more extension of time of the legislation which was first brought on the Statute Book as early as January 1975.

This was legislated by the then D.M.K. Government headed by Mr. Karunanidhi. Later on, it was extended for three months.

Later on during the emergency a Presidential Act was subsitituted or the local Act and the present measure is due to expire on 14th July 1977. Therefore this Government has brought in this piece of legislation for extension of the time-limit, as quickly as possible because this has got to be examined by the Central Government and since the expiring date was 14th July 1977 we wanted to carry out this piece of legislation with a spirit of urgency.



With regard to the various suggestions made by members on the Opposite side, who had supported this amending Bill I would like to express my grateful thanks to those who had supported our amendment plus other members whose constructive suggestions had been received with great consideration and willingness to readily accept them. My friend Thiru Sadiq Pasha was mentioning about the inconvenience caused by distraint warrants in respect of some agriculturists vis-a-vis the co-operative bank loans. Unfortunately, the co-operative Bank loans are not covered by this legislation. That will be examined separatly. A number of speakers have mentioned about co-operative loans. So far as Government is concerned, I have been assured by my leader that no suit or distraint warrant or any other vexatious proceedings will be taken against the debtors. So, that assurance must be satisfying to everyone of us.

The hon. Member Thiru Margabandu mentioned about......

THIRU M. A. LATHEEF: The Hon. Minister has just now told us that no distraint action will be instituted. But may I submit that in many cases even movable properties including cattle have been confiscated by the creditor society. Now the Hon. Minister has given the assurance that no distraint proceedings will be taken in future. But in respect of those properties which had been confiscated by departmental people will they be released and given back to the people?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: Necessary steps will have to be taken keeping in view the condition of the debtors and necessary ameliorative measures will be taken by this Government. I am sure my leader will be the first person to give such a relief.

The hon. Member Thiru Marimuthu had spoken about the Pawnbrokers Act and certain of its draconian features and the manner in which some debtors are suffering. The Pawnbrokers had moved the Supreme Court and the Supreme Court had dismissed the appeals as withdrawn. The Pawnbrokers have moved the High Court again. The High Court has not merely admitted it but has granted stay. The matter is now disputed before the High Court.

THIRU R. UMANATH: Cannot Government move for vacating the stay?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: I have no materials straightaway to submit on that aspect we will move the High Court to dispose of the

[THIRU K. Narayanaswami Mudaliar] [1977 ஜூலை 9

matter at the earliest opportunity. I know from experience. It is the practice. It may not be Law. Law is one thing and practice is another custom is different. Please do not think I amnot going to be a party for moving for vacation of stay. It is not so. Once we move for vacation of stay and if petition for vacation of stay is dismissed, the general feeling is that there is no urgency. Therefore the matter is likely to be postponed. Therefore whenever there is no vacation of stay we can feel it expedient and urgent for getting the entire matter heard and decided one way or other. I want to assure Hon. Members of the House that we will examine the whole matter and we will certainly press for the expenditious disposal of the relevant writ petition.

Some friends have pleaded for extension of the benefit to co-operative loans. I think so far as this is concerned, that falls within the purview of a different Act. We will examine it carefully and come to certain conclusions. The object of the present measures is to extend the period from 14th July 1977 to 15th January 1978. What the Hon. Members have said will be taken due note of and due attention will be given with a tremendious amount of human consideration.

(முற்பகல் 11-50)

I am particularly grateful to the hon. Member, Thiru Suppu, who spoke on the manner in which the interest is mounting and therefore pleaded that there must be a greater attention on the part of the Government to liquidate the debt, but not to do otherwise in the sensa that there is a large scale accumulation of debts. We will certainly do our best.

Again here I was reminded of an episode in the early Thirties. I am just telling this for this reason. When my beloved Anna and myself were studying in the Pachaiappa's College then in those years, the agricultural indebtedness problem was a grave question for discussion. It was a subject matter of collegiate discussion. And then, the Professor of Economics Dr. B. V. Narayanaswamy Naidu had something to do with the Agriculturists Indebtedness Report. I think that question came up for discussion in those days—early days— and Professor K. T. Shah, Purushothamdas Thrikar Das and other eminent economists....

**திரு. துரைமுருகன்** : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, அங்கத்தினர்கள் பில்லிலே பேசும் போது, அந்த பில்லை ஒட்டித்தான் பேச வேண்டும் மற்ற விவரங்களைப் பற்றிப் பேசக் கூடாது என்று தாங்கள் சொன்னீர்கள். இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் அண்ணா அவர்களோடு காலேஜில் படித்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அவர் அண்ணாவோடு கல்லூரியில் படித்



இந்த பில்லில் அவர் விவாதத்தை நான் மதிக்கிறேன். ஆனால் அந்தக் காலத்தில் ஒரு புரபொசர் திற்கு பதில் கொடுக்கும்போது, அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா என்று இருந்தார் தெரியுமா, அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா என்று சொல்லிக்கொண்டு இருப்பது நியாயமா என்று கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தயவுசெய்து உறுப்பினர் அமைச்சர் அவர்கள் பேசுவதை புரிந்து கொண்டு பேச வேண்டும். அவர் அந்தக் காலத்திலேயே பொருளாதார நிபுணர்கள் விவசாயிகள் கடன் பற்றி ஆராய்ந்து இருக்கிறார்கள் என்பதற்காக சொல்லியிருக்கிறார்கள். அவர் பேசியது பில்லை ஒட்டித்தான் இருக்கிறது.

**திரு. துரைமுருகன்** : நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவர் பில்லில் பேசும்போது இவற்றைப் பேச வேண்டுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உட்காருங்கள். அமைச்சர் சொல்வதை தயவு செய்து பொறுமையாக இருந்து கேளுங்கள். அவர் அந்தக் காலத்தில் பொருளாதார நிபுணர்கள் விவசாயிகள் கடன் பற்றி ஆராய்ந்தார்கள் என்று சொன்னார். அவருடைய சொந்த வரலாறு சொல்லவில்லை. அதைப் புரிந்து கொள்ளாமல் பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்** : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிற ஆங்கிலம் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை போல் இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி** : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் புண்படும்படி பேசியிருக்கிறார். உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு அமைச்சர் பேசும் ஆங்கிலத்தை புரிந்து கொள்ள முடியவில்லையா என்று அமைச்சர் எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். அது முறையான பேச்சு அல்ல. பிறகு நாங்கள் பேசுகிறபோது, நாங்கள் பேசுகிற தமிழ் உங்களுக்குப் புரியவில்லை என்று கேட்க நேரம் ஆகிவிடாது. இப்படிப்பட்ட வார்த்தைகள் பரிமாறிக்கொள்வது நல்லது இல்லை.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்** : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் பேசும்போது உறுப்பினர்கள் குறுக்கிடுவதில் எந்தவிதமான தவறும் கிடையாது. ஆனால், பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் அமைச்சர் அவர்களை குறுக்கிட்டு விட்டு, அவர் பேசுகின்ற பேச்சு எந்த விதத்தில் நியாயம் என்று கேட்கக் கூடாது. அமைச்சர் அவர்கள் எந்தக் காரணத்திற்காக அதைக் கோடிட்டுக் காட்டுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்

திரு. துரைமுருகன் : அதைச் சொல்ல வேண்டியது, சபா நாயகர். நீங்கள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தொடர்ந்து பேசலாம்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR . Sir, I still remember those years of my company with my beloved Anna and also my association with him. It is a matter on which the Hon. Member has got to be proud of.

Sir, I was on the point of participation of great Economists like Dr. B. V. Narayanaswamy Naidu on this question. Then this burning question of the agriculturists indebtedness was agitating the minds of the great Economists during the mid-thirties. Subsequently, it assumed a more important form, a greater form with the result, as I told you earlier, men of high calibre lock Sir Purushothamadas Thrikar Das, Professor K. T. Shah, Findlay Shirras—all Economists-devoted their best abilities and best efforts for solving this problem. Ultimately it assumed a form in this State, the form of a Debt Relief Act, which went to the immortal credit of Rajaji. Striking a personal note, I may say that my family got the fullest benefit under the Act, as agriculturists.

Some of the hon. Members pleaded for the constitution of a Committee to go into the actual extent and magnitude of rural indebtedness in this State and if necessary, to suggest ameliorative measures, not tinkering measures of this type, not the limited measures, which are confined within the four corners of the present Act, I am inclined to plead with my Leader for the constitution of such a Committee, with Members whose knowledge and erudition must be varied, reliable, wide and more inspired by the integrity and honesty. Such a Committee would be desirable for this Government to push the scheme forward and it can also do its best to help the agriculturists in due course.

One difficulty that has emerged from the various speeches of the hon. Members was that at present the debtors are not able to get credit from the money lenders. The hon. Member, Thiru Latheef, wanted to emphasise this point and he resorted to add a few English sentences in his speech to give more emphasis to his plea. One difficulty for us was whether we should limit it to three months or six months. Ultimately, we arrived at six months because some of the Central Acts and many other memoranda submitted by various interests involved some vital changes in the various Acts, particularly in some of the Acts which fall within the four corners of ours. Therefore, we wanted some more time Still, we are pursuing the necessity for other amendments



Pretaining to other Acts which are impinging on this legislation. On this law, in question, we wanted some more time. Instead of coming with another piece of legislation for another extension of three months, we thought it fit to follow the provision, the pattern of six months, which has been there from January 1975. It has been followed four or five times. Therefore, we have asked for six months time. We will try our best. This Government will be earnest in taking the views of the hon. Members. Sir, I seek the approval of the House for extension by six months so that necessary piece of legislation pertaining to other Acts and this Act, in question, will be duly and deeply considered and necessary legislation will be brought before this august House.

(நண்பகல் 12–00)

THIRU K. SUPPU : பேரவைத் தலைவரவர்களே . .

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : Before I close I may congratulate Thiru Suppu for the few words of encouragement said about me at the start of his speech. I did not want to say it in the beginning lest it should sound a little flattering. I thought it any duty to express my sense of gratitude to him, born out of the culture that I have learnt from one whose name I fear not to treasure. Thank you.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களின் அடக்கம் நாம் பின்பற்ற வேண்டிய முன் உதாரணமாக இருக்கிறது. இப்போது நடைமுறையில் இருக்கும் ஒரு சிக்கல், 2,400 ரூபாய் வருமானத்துக்கு உட்பட்டவர்களுக்கு கடன் ரத்து செய்யப்படுகிறது என்று விதியிருக்கிறது. ஆனால் இப்போது என்ன நடக்கிறது என்றால், தாலூகா ஆபிசிலே சென்றால், கொஞ்சம்கூட வருமானம் இல்லாதவர்களுக்குத்தான் அது கிடைக்கும் என்று சொல்கிறார்கள். காரணம் என்னவென்றால், மினிமம் வேஜஸ் ஆக்ட்டின்படி குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் கணவன் மனைவி ஒரு வீட்டிலிருந்து அவர்கள் சம்பாதித்தால், ரூபாய் 10 தினக் கூலி கிடைக்கிறது.

. . . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத்தலைவர்: நேரடியாக ஏதாவது சந்தேகம் இருந்தால் அதைக் கேளுங்கள். இப்போது விவாதம் மாதிரி விளக்கிப் பேசிக் கொண்டிருக்க முடியாது.

திரு. க. சுப்பு : அதாவது கணவனுக்கு 5 ரூபாய், மனைவிக்கு 5 ரூபாய் என்று வருமானம் வருகிறது. இதனால் அவர்களுடைய மாத வருமானம் 300 ரூபாய். ஆகவே உங்களுக்கு விதி விலக்கு

[திரு. க. சுப்பு] [1977 ஜூலை 9

இல்லை என்று நடைமுறையில் சொல்லி விடுகிறார்கள். ஒரு நாளைக்கு 10 ரூபாய் வரும். ஆனால் மாதம் பூராவும் கட்டாயமாக வருமானம் வரும் என்று சொல்ல முடியாது. ஆகவே அரசாங்கம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, இப்படி வருமானம் இல்லாது கூலி வேலை பார்க்கின்றவர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும். குறைந்த பட்ச கூலி கொடுக்க வேண்டும் என்ற சட்டம் வந்ததற்குப் பின்னால், இந்தச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆகவே தாசில்தார்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினால் உதவியாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுதி மொழியாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. நாராயணசாமி முதலியார் : இது நியாயமான கோரிக்கை. 2,400 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது தகுதியின் அடிப்படையில், மினிமம் வேஜஸ் ஆக்டின் காரணத்தால் பாதிக்கப்படும் நபர்களுக்கு எல்லாம், அப்படி பாதிக்காமல் சலுகை கொடுப்பதில் தாசில்தார் எல்லாம் வெக்ஸேஷஸ்ஸாக அல்லது கடுமையாக நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு ஆக்ஷன் எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவரவர்களே, எனக்குத் தெரிந்த வரையில் இந்த நிவாரண கடன்களுக்கு வட்டி இல்லை என்பதுதான். நண்பர் சுப்பு அவர்கள் பேசும்போது வட்டி ஏறிக்கொண்டே போகிறது என்று சொன்னார். எனக்குத் தெரிந்த வரையில் அப்படி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : வட்டி ஏறிக்கொண்டுதான் இருக்கும். வட்டி கட்டித்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் நீங்கள் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நான்தான் அது பாயிண்ட் இல்லை என்று சொல்லி உட்கார வைத்த பிறகு, நீங்கள் பேசுவது சரியில்லை. நீங்கள் பேச்சுத் திறமை உள்ளவர்கள் என்று எனக்குத் தெரியும். அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு பேசக்கூடாது. நேராக அவருக்கு நீங்கள் விளக்கம் கொடுக்கிறீர்கள். அவைத் தலைவர் அனுமதி பெற்றுத்தான் பேசவேண்டும். நேரே அவரைப் பார்த்து நீங்கள் பேசுவது சரியில்லை. உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் ஆங்கிலத்தில் விளக்கம் அளித்தார்கள். அதிலே ஆங்கிலம் தெரிந்தவர்கள் புரிந்து கொள்கிறார்கள். என்று



1977 ஜூலை 9] [திரு. மு. அம்பிகாபதி]

லும், இந்தப் பேரவையில் ஆங்கிலம் புரியாத அங்கத்தினர்கள் நிரம்ப இருப்பதால், அவர்களைப் பற்றியும் பரிவுடன் பேரவைத் தலைவரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நம்முடைய தமிழ் நாடு அசெம்பிளி ரூல்ஸ் 61 ஆவது பிரிவில் அனுமதி இருக்கிறது. ஆகவே இதற்கு வேறு ஏதாவது பரிகாரம் இருக்கிறதா என்று கேட்கலாமே தவிர, அவர் ஆங்கிலத்தில் பேசக்கூடாது என்று விதி இல்லை. நம் விதிகளில்—

The business of the Assembly shall be transacted in English or in Tamil, provided that any member may address the Assembly in any recognised language of the State or in Hindi, and provided further that the Speaker may permit any member who cannot adequately express himself in any of the aforesaid languages to address the Assembly in his mother-tongue.

என்றிருக்கிறது.

அதுவுமல்லாமல், ஆங்கிலத்திலும் இல்லாமல், தமிழிலும் இல்லாமல், கன்னடத்திலும், மலையாளத்திலும் பேசினால்கூட என்னுடைய அனுமதி பெற்று பேசலாம் என்று விதி இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் படித்துக் காட்டிய விதியின்படி அவையில் உள்ள உறுப்பினர்கள் பேசினால் பரவா அது மற்ற உறுப்பினர்களுக்கு புரியாமல் போய்விட்டால் பரவா யில்லை. ஆனால் எல்லா உறுப்பினர்களுக்கும் தெளிவு அளிக்கின்ற நேரத்தில், விளக்கம் அளிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் பேசுவது ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்களுக்கும் புரிந்தாக வேண்டும். அதைத்தான் நண்பர் அம்பிகாபதி பிரச்னையாக் எழுப்பினார்கள். அமைச்சர் ஆங்கிலத்தில் பேசியது தவறு என்று அவர் சொல்லவில்லை. அமைச்சர் அழகாக ஆங்கிலத்தில் பேசு வதில் ஆற்றல் படைத்தவர்தான். அந்த வகையிலே வரவேற் கிறேன். ஆனால் ஆங்கிலம் தெரியாத பலர் எதிர்கட்சியிலும் இருக்கிறார்கள் ; ஆளுங் கட்சியிலும் இருக்கிறார்கள். ஆங்கி லத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : ஆங்கிலத்தில் பேசியது தவறு என்று நான் குறிப்பிடவில்லை. எங்களுக்குப் புரிந்து கொள்ள உதவுங்கள் என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் முன்னுள்ள கேள்வி : ''பிரிவு 2 சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்.''

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u>

Sir, I move the following amendment :—

"In sub-clausess (a) and (b) (c) of clause 2, for the word 'two years' substitute the words 'two years and six months".

The amendment was duly seconded.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> தலைவரவர்களே, நான் கொடுத்து இருக்கும் திருத்தம் ஒன்றரை ஆண்டு என்பது இரண்டரை ஆண்டுகளாக ஆக்கப்படவேண்டும் என்று திருத்தம் கொடுத்து இருக்கிறேன். இது ஒரு சாதாரண சிம்பிள் அமெண்ட்மெண்ட். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். நான் மசோதாவின் மீது பேசும்போது குறிப்பிட்டேன். இந்தச் சட்டத்தால் என்ன நன்மைகள் ஏற்படும் என்று எதிர்பார்த்தோமோ அந்த நன்மைகள் கிடைக்கவில்லை. மாற்றுத் திட்டங்கள் செய்யப்பட வில்லை என்று குறிப்பாகக் ருறிப்பிட்டேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பேசும்போது 20 அம்சத் திட்டத்தில் ஒரு பகுதியாக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்பதைச்சுட்டிக் காட்டினார்கள். 20 அம்சத்திட்டம் கொண்டு வந்த பிறகு மாற்றுத் திட்டம் கொண்டு வராததற்குக் காரணம் கிராம மக்களுக்கு கடன் வசதி செய்வதற்கு கிராமப் புற வங்கிகள் வரும் ரூரல் அர்பன் பாங்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. நாள்தோறும் ரேடியோ மூலம் கிராம வங்கிகள் ஏற்படுத்தப்படும் என்று ஓயாமல் பாடினார்கள். அப்படி ஓயாமல் பாடிய பிறகு என்ன நிலைமை என்று பார்க்கிறபோது தமிழ்நாடு முழுமைக்கும் சாத்தூரில் ஒரு கிராமப்புற வங்கி ரூரல் பாங்க் அமைத்தார்கள். தமிழ்நாடு பூராவும் உள்ள விவசாயிகள் சாத்தூருக்குப் போய் வாங்க முடியுமா என்று நாம் பார்க்கிறபோது, மாற்றுத் திட்டங்கள் எந்த நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன் இன்னும் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருகிறபோது மாற்றுத் திட்டங்களுக்கும் வழிவகை செய்யவேண்டும். ஏற்கனவே

திட்டம் இருந்தது. ரூரல் அர்பன் பாங்கு, ஒவ்வொரு ஒன்றி
யத்திற்கு ஒரு ரூரல் அர்பன் பாங்கு என்று ஏற்கனவே இருந்த
அரசாங்கத்தின் மூலமாக கொண்டு வரப்பட இருந்தது. இது
பற்றியும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினாலும்
கூட, தமிழில் பேசும்போது மிக அழகாகப் பேசினார்கள். நாங்கள்
எல்லாம் புரிந்து கொள்ள முடிந்தது. அந்த அளவுக்கு அவருக்குத்
திறமை இருக்கிறது. அதிலே சந்தேகம் கிடையாது. அது
மாத்திரமல்ல, பொருளாதாரத் தத்துவத்தை மிக விளக்கமாகச்
சொன்னார்கள். எங்களுக்குத் தெரியாத விஷயம், அண்ணாவோடு
அவர்கள் வைத்திருந்த உறவு, பி. வி. நாராயணசாமி அவர்க
ளோடு அவர்கள் கொண்டிருந்த உறவு ஆகியவற்றைப் பற்றி
எல்லாம் விளக்கமாகச் சொன்னார்கள். இது போன்ற கருத்துக்
கள் எங்களுக்கு மிகவும் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்
கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்ன
திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. நாராயணசாமி முதலியார்: திரு.
சாதிக் பாட்சா சொன்ன கருத்துக்கள், சஜஷன்கள், சட்டப்படி
எவ்வளவு செய்ய முடியுமா, சட்டத்தில் எவ்வளவு பிராக்டி
கபிலிடி, எவ்வளவு பீசிபிலிடி இருக்கிறதோ, அதைப் பார்த்து,
அதற்கு ஏற்ற வகையில் இடம் இருக்கிறதா என்று பார்த்து,
அதை தீர்க்கமாக ஆலோசித்து, நாங்கள் அதற்கு வேண்டிய
திருத்தங்களை, யோசனைகளை செய்கிறோம்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்
பெற்றது

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி: "பிரிவு 3 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்
பட வேண்டும்."

இரண்டாவது பிரிவிற்கான திருத்தம் திரும்பப் பெறப்பெற்று
விட்டதால் இப்பிரிவிற்கான திருத்தமும், அதே மாதிரி
இருப்பதால் அனுமதிக்கப்படவில்லை.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்றது.

பிரிவு 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி "பிரிவு 4 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

இரண்டாவது பிரிவிற்கான திருத்தம் திரும்பப் பெறப்பெற்று விட்டதால் இப்பிரிவிற்கான திருத்தமும், அதே மாதிரி இருப்ப தால் அனுமதிக்கப்படவில்லை.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்ற பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

[பிற்பகல் 12-10)

மாண்புமிகு திரு. க. நாராயணசாமி முதலியார் : தலைவ ரவர்களே, "தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1]72 சட்டமாக நிறைவேற்றப் படவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவை முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(6) அரசினர் தனித் தீர்மானம்.

மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி ஆகியவை குறித்த உத்தரவாத வரையறையை உயர்த்தல் குறித்து

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், குறுகிய காலக்கடன், நடுத்தரக் காலக் கடன், நடுத்தரக் கால மாற்று வசதிக்கடன் ஆகியவற்றின் உயரளவு வரையறையான ரூ. 6,115.00 இலட்சத்தைத் திரும்பிச் செலுத்துவதற்கு, கூட்டுறவுத் துறையின் 1977 ஆம் ஆண்டு மே மாதம் 26-ம் நாளிட்ட 341 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உத்தரவாதம் அளித் துள்ளதாலும்;

மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 8,040.00 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசி யம் என்று கருதுவதாலும் ;



தமிழ்நாடு, 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் தில் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின் கீழ் சொல்லி யுள்ளவாறு மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் உத்தரவாத வரையறையை ரூ. 8.040.00 இலட்சத்திற்கு உயர்த்த தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானித்துள்ளது'.

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். இந்தத் தீர்மானம் பற்றி விவரங்கள் ஏற்கனவே துறையின் சார்பில் உறுப்பினர் களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. விளக்கக் குறிப்பு* தனியே அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, இதை ஏற்று நிறை வேற்றித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் உத்தரவாத வரையறையை ரூ. 8,04000 இலட்சமாக உயர்த்துவதற்குமாண்பு மிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர் மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் வரவேற் கிறேன்.

அதே நேரத்தில் அந்த வங்கிகள் கடன் வழங்குவதில் உள்ள குறைபாடுகளைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் குறிப்பாக கூட்டுறவு நிலவள வங்கிபோன்ற ஸ்தாபனங்கள் மூலம் நில அபிவிருத்திக்காக வழங்கப்படும் கடன்கள் பெரும்பாலும் ஏற்கனவே பல்வேறு வசதிகளைப் பெற்ற பெருநிலச் சொந்தக் காரர்களுக்கே பயன்பட்டு வந்திருக்கிறது. அதாவது ஐம்பதா யிரம், எழுபதாயிரம், லட்சம் என்ற அளவில் ஏற்கனவே பல்வேறு வசதிகள் பெற்றிருக்கின்ற நிலச்சொந்தக்காரர்கள் நிலச் சீர்திருத்தம் அல்லது பம்புசெட்டு வைப்பது போன்ற காரியங் களுக்காகக் கடனைப் பெறுகிறார்கள். சாதாரண ஏழை நடுத்தர விவசாயிகளுக்குப் போதிய அளவு கடன் கிடைப்பதில்லை.

மேலும் ஒரு கிணறு வெட்டவோ, பம்புசெட்டு போன்றவை களை அமைக்கவோ திட்டமிட்டு, கொடுக்கிற கடன் தொகையும் போதிய அளவு கொடுப்பதில்லையாதலால் பற்றாக்குறை ஏற்பட்டு, எடுத்த வேலையை முடிக்க முடியாது, மேலும் வெளியில் பல்வேறு கடன்களைப்பட்டு விவசாயிகள் துன்பப்படவேண்டியதாக இருக் கிறது.

இரண்டாவது, இந்த வங்கிகள் மூலமாக இயந்திரங்கள் வழங் குவதில் பம்புசெட்டு மோட்டார், ஆயில் என்ஜின் போன்றவை களை வழங்குவதில் அவற்றை வெளியில் நேரிடையாகப் பணம் கொடுத்து வாங்கினால் இதைவிட குறைவான விலைக்குக் கிடைக்க லாம் என்ற சபலம் விவசாயிகள் மத்தியில் இருந்து வருகிறது

---

[323—328-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. எம். அண்ணாமலை] [1977 ஜூலை 9

அடுத்தபடியாக கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாக உரக்கடன் வழங்கப்படுகிறது. உரக்கடன் கோரி ஜனவரி மாதத்தில் விவசாயிகள் விண்ணப்பித்தால் அது மார்ச் மாதம் கூடக் கிடைப்பதில்லை. அடி உரத்திற்கு உரம் கேட்டால் களை எடுக்கிற காலத்தில் வருகிறது. ஓரளவு உரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பாக்கியை மிகக் குறைந்த விலைக்கே விற்கவேண்டிய கடன்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது.

அடுத்தபடி இந்த வங்கிகளில் ஓரளவு நல்ல வசதி படைத்தவர்களே நிர்வாகிகளாக இருக்கிறார்கள். இந்தக் காரணத்தினாலும் கூட கடன் வழங்குவதிலே கூட பாரபட்சமான நிலை ஏற்படுகிறது. கடன் ஒரு சாதாரண ஏழை எளிய விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. பல்வேறு வெளிக்கடன்களுக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டு, உள்ளபடியே மிகுந்த தொல்லைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

அடுத்தபடி நகைக் கடன்களை எடுத்துக்கொண்டால்- மத்திய கூட்டுறவு வங்கியிலும் கூட தங்க நகைகளின் பேரிலேயே கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் இன்றைக்கு கிராமப் பகுதிகளில் பெரும்பாலானவர்களிடம் தங்க நகைகள் என்பதே அற்றுப்போய் விட்டது. வெள்ளி, பித்தளை நகைகளே இருக்கலாம். பாத்திரங்களை வைத்து கடன் வாங்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். அன்றாட வாழ்வில் ஏற்படுகிற சுக துக்கங்களில் பங்குகொள்ள, இன்றைக்கு வெள்ளி, பித்தளை நகை, பாத்திரங்கள் மீது கடன் கிடைக்காத காரணத்தினால் அவற்றை விற்கவேண்டிய நிலையிலேயே உள்ளார்கள். தட்டு முட்டுச் சாமான்களைக் கூட இழக்கின்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதி மக்களுக்கும்—இன்றைக்குள்ள வட்டி விகிதமே அதிகம்தான்—இன்னும் மிகக் குறைந்த வட்டிக்கு அங்கங்கே உள்ள கூட்டுறவு வங்கியின் சக்திக்கேற்ப பணத்தை கடனாகக் கொடுப்பதற்கான வசதியினை அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20)

அடுத்தபடியாக, பங்குத் தொகை. ஒரு விவசாயி நூறு ரூபாய் டெப்பாசிட் தொகை வைத்திருந்தால் அவர் கடனாக ரூ. 500 வாங்கி இருப்பார். ஆனால் அவர் ரூ. 400 ஐயும் அதற்கான வட்டியையும் செலுத்தி விட்டு மேலும் கட்டமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு தன் பெயரில் ரூ. 100 டெப்பாசிட் தொகை இருக்கிறது என்ற காரணத்தைக் கொண்டு அதை வைத்து ஈடு செய்யலாம் என்ற நிலைமையில் அதைக் கட்டாமல் நிறுத்தி விடுவார். அவரது நிலையும் மேற்கொண்டு கட்டமுடியாததொரு நிலை. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 90 சதவீதம் விவசாயிகளின் நிலை இப்படித்தான் இருக்கிறது. மேற்கொண்டு கட்ட ···டியாத நிலையில் ஐந்தாண்டுகளில், கட்டவேண்டிய



1977 ஜூலை 9] [திரு. எம் அண்ணாமலை]

ரூ. 100-க்கு ஜப்தித் தொகை, அபராதத் தொகை எல்லாம் சேர்ந்து ஏறத்தாழ ரூ. 150, ரூ. 200 என்றாகிவிடுகிறது. அப்படி வரும்போது கூட்டுறவு ஸ்தாபனங்களின் சட்டவிதிகள், நடவடிக்கைகள் பற்றி ஒன்றும் அறியாத சாமான்ய மக்களுக்கு கூட்டுறவு ஸ்தாபனங்களின் மீது நம்பிக்கை இல்லாத ஒரு நிலை குறிப்பாக எங்களது தர்மபுரி மாவட்டத்தில் இன்று நிலவுகிறது.

நிர்வாகச் சீர்கேடு காரணமாக பல்வேறு காரியங்கள் நடந்துள்ளன, எங்கள் மாவட்டத்தில். பினாமி கடன்களை எடுத்துக் கொள்வோம். செத்தவர்கள் கூட கடன் வாங்கியதாக தர்மபுரி மத்திய கூட்டுறவு ஸ்தாபனத்தில் சொல்லப்படுகிறது. ஆகவே, இத்யாதி நிலைகளை உணர்ந்து உண்மையான கடன்கள் எவை எவை, உண்மையாக வாங்கியவர்கள் யார் யார் என்று விசாரணை செய்து உள்ளபடியே கடன் வாங்காதவர்கள் வாங்கியதாகச் சொல்லப்படும் கடன்கள் அனைத்தையும் ரத்து செய்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஸ்தாபனத்தில் உள்ளபடியே எவ்வளவு திட்டங்களைப் போட்டாலும், பெரும் நிலம் படைத்தவர்களும் இன்னும் நிலத்தை விரிவு செய்யும் கண்ணோட்டத்தைக் கொண்டவர்களும்தான் அதிகமாக இருக்கிறார்கள். இந்த ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் 70 சதவிகிதம் ஏழைகளும், மத்திய தர விவசாயிகளும் பங்கு கொள்ள விதிமுறை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இத்தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்க வளர்ச்சி நல்ல முறையில் இருக்கிறது. தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கூட்டுறவு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்களும் கூடுமான வரையில் அதிகமாகச் சேர்க்கப்பட்டு—சென்ற ஆண்டு மிகத்தீவிரமாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு—விவசாயிகள் அவ்வளவு பேர்களும் அங்கத்தினர்களாக ஆகியிருக்கிறார்கள். தமிழகத்தில் அடிக்கடி வறட்சி ஏற்படுவதால் கொடுக்கிற கடன்கள் வசூலிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டு மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல் இல்லாமல் போன காரணத்தால், விவசாயிகளுக்கு சாகுபடிக்காகக் கொடுக்கப்பட்ட கடன்கள் ஒத்திவைக்கப்பட்டு மத்திய காலக் கடன்களாக மாற்றுவதற்கான நிலை ஏற்பட்டது. சாகுபடிக்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1977 ஜூலை 9

காகக் கொடுக்கப்பட்ட கடன்கள் சென்ற ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டும் ஒத்திவைக்கப்பட்டு மத்திய தரக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கிறது. இப்போது வசூலாக வேண்டிய கடன்களும் ஒத்திவைக்கப்பட்டு மத்திய தரக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. வரக் கூடிய சாகுபடிக்கும் கடன் கொடுக்க இருக்கிறார்கள். இந்தக் கடனையும் வாங்கி, முன்பு ஒத்திவைக்கப்பட்டு மத்திய தரக் கடன்களாக மாற்றப்பட்டவையையும் சேர்த்து ஒரே ஆண்டில் கடன்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கொடுக்கிறபோது விவசாயி தன்னுடைய வருவாய் பூராவையும் கொடுத்தால் கூட இந்தக் கடனை அடைக்கமுடியாது.

ஆகவே, நிலைமைகள் இயற்கையாக ஏற்பட்டது என்றாலும் கூட நாம் கொடுக்கிற நிவாரணம் சரியானதாக இருக்கவேண்டும் ; பயன் உள்ளதாக இருக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு ரூ. 400 கடன் கொடுக்கிறார்கள் என்றால் ஐந்து ஏக்கர் உள்ள ஒருவர் ரூ. 2,000 கடன் வாங்குகிறார். ரூ. 2,000-ம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது மூன்றாண்டுகளாக. சென்ற ஆண்டுகூட ரூ. 2,000 ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இது மத்திய தரக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் ரூ. 2,000 கடன் கொடுக்க இருக்கிறார்கள்.

இதையும் வாங்கி, அடுத்த ஆண்டும் வாங்கி, அடுத்த ஆண்டு நிலைமை ஓரளவு சரியாகயிருந்தாலும் கூட ஒத்திவைக்கப்பட்ட ரூ. 4,000-ல் மூன்றில் ஒரு பகுதியும், இவ்வாண்டுதொகை ரூ. 2,000மும் கட்ட வேண்டும். வாங்கிய கடனைப்போல் இருமடங்கு அடுத்த ஆண்டு கட்டவேண்டுமென்றால் இது சாத்தியமா ?

ஆகவே, மத்திய காலக் கடனை மாற்றுவதை நீண்ட காலக் கடனாக மாற்ற முடியுமா என்பதுபற்றி யோசிக்க வேண்டும். ஒரே வருடம் தள்ளிப் போட்டால் அதை மத்திய தரக் கடனாக வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் உள்ளவற்றை நீண்ட காலக் கடனாக மாற்றுவது உசிதமாக இருக்கும். ரிசர்வ் பாங்க் பெர்மிஷன் வாங்கித்தான் செய்யமுடியும். இது ஸ்டேட் கவர்ன்மெண்ட் உடனடியாகச் செய்யக்கூடிய காரியம் அல்ல. ஆகவே ரிசர்வ் பாங்க் பெர்மிஷன் பேரில் இவற்றை நீண்ட காலக் கடன்களாக மாற்றுவதற்கான முயற்சியை மாநில அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயிகள் என்றால், நிலம் வைத்திருப்பவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு சாகுபடி செய்வதற்காகத்தான் கடன் கொடுக்கிறோம். ஆனால், கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளிகள் இருக்கிறார்கள், விவசாயத்தையொட்டி தச்சுத் தொழிலாளர்கள் போன்ற பல



1977 ஜூலை 9] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தொழிலாளிகள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் கூட நாம் உறுப்பினர்களாகச் சேர்த்திருக்கிறோம் கூட்டுறவுச் சங்கங்களில், ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான கடன் உதவியும் கொடுக்கவேயில்லை. அவர்களுக்கும் கன்ஸம்ஷன் லோன் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அது கொடுக்கப்படவில்லை. ரிசர்வ் பாங்க் அபிவிருத்திக் கடன் கொடுப்பதை அபிவிருத்திக்கு உபயோகித்துக் கொள்வோம். விவசாயிகளுக்கு, தேவையான சடங்குகளுக்காக அபிவிருத்திக் கடனில் இருந்து பணம் கொடுக்க முடிவதில்லை. ஆங்காங்கு டெப்பாஸிட் வாங்கி அந்த டெப்பாஸிட்டிலிருந்து கன்ஸம்ஷன் லோன் போன்றவற்றைக் கொடுப்பதில் எந்தத் தடையும் இருப்பதற்கு நியாயம் கிடையாது. அதைத் தடுப்பது கூடாது. அப்படிக் கொடுப்பதற்கு ரிசர்வ் பாங்க் தடையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எவ்வளவுதூரம் உண்மை என்று தெரியவில்லை. பாங்க் அதிகாரிகள் வேண்டுமென்று சொல்லமாட்டார்கள். அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும். டெவலப்மென்ட் லோனைக் கொடுக்கப்படுவது டெவலப்மென்ட்க்காகப் பயன்படுத்தப்படட்டும். அதை கன்ஸம்ஷன் லோனைப் பயன்படுத்த வேண்டியதில்லை. ஆனால் டெப்பாஸிட் தொகையாக வாங்கியதைக் கொண்டு சிறு விவசாயிகள், நிலமற்றவர்கள், விவசாயத் தொழிலாளர்கள் இவர்களின் இன்றியமையாத் தேவைகளுக்காக அவசரத் தேவைகளுக்காகக் கடன் கொடுப்பதை எந்த வகையிலும் தடுக்கக் கூடாது. அதைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். இதற்கு ஏதாவது தடை இருக்குமாயின் அதை நீக்கியாக வேண்டும்.

கிராமப்புற தொழிலாளர்களுக்கு, சிறு கடைகள் வைத்திருப்பவர்களுக்கு கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நகர்ப்புறங்களில் அர்பன் பாங்கிலிருந்து சிறு தொழில்கள் செய்ய கடன் கொடுக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் சொஸைட்டிகள் மூலமாக இதைக் கொடுக்க ஏற்பாடு இருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர கொடுப்பதாக இல்லை. அதைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதே சமயத்தில் சொஸைட்டிகள் என்ன கூறுகிறார்கள் என்றால் இம்மாதிரிக் கடன்கள் நிலமற்றவர்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறபோது நிலம் வைத்திருப்பவர்கள் காரண்டி கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நிலம் வைத்திருப்பவர்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு காரண்டி கொடுத்தால்தான் சொஸைட்டி கடன் கொடுக்கும் என்றால் அவர்களுக்கு இவர்கள் அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தது மாதிரியாகும். ஆகவே, இதற்கு கவர்ன்மென்ட் காரண்டி கொடுக்கவேண்டும். அந்தத் தொகையை வாங்கிச் சாப்பிட்டு விட்டு விவசாயத் தொழிலாளர்கள் ; ஓடிவிடப்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1977 ஜூலை 9

போவதில்லை. ஆகவே, சர்க்கார் காரண்டி கொடுக்கவேண்டும். அரசாங்கம் உத்தரவாதம் அளித்தால் சொஸைட்டி கடன் கொடுக்கலாம் நிலமற்றவர்களின், விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சத் தேவைக்கு என்று செய்து கவர்ன்மென்ட் காரண்டி கொடுக்க முன் வரவேண்டும். இப்படி காரண்டி கொடுத்து ஏதாவது நஷ்டமாகி விட்டால் அதை சர்க்கார் சொஸைட்டிக்கு கொடுக்கத் தயாராகயிருக்கவேண்டும். அப்படி காரண்டி கொடுத்தால் சொஸைட்டிகள் கடன்கள் தாராளமாகக் கொடுக்க முடியும். கிடைத்திருக்கிற ரிப்போர்ட்டுகளை வைத்துப் பார்க்கிறபோது இம்மாதிரி சிறுதொழில்கள் செய்கிறவர்கள், நிலமற்றவர்கள் வாங்கிய கடன்கள் கூடுமானவரையில் வசூலாகிவிடுகின்றது. அவர்கள் அதிகமாக ஏய்ப்பதாகத் தெரியவில்லை. வசதி படைத்தவர்கள் ஏமாற்றுவதுதான் அதிகமாக இருக்கிறது, இல்லாதவர்கள் ஏமாற்றுவது மிகக் குறைந்ததாகத்தான் இருக்கும். ஆகவே இதை எப்படிச் செய்வது என்பதைப் பற்றி அரசாங்கம் யோசிக்கவேண்டும்.

[பிற்பகல் 12-30]

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கின்ற சொஸைட்டிகளுக்கு, ரிசர்வ் பாங்கு, சென்ட்ரல் பாங்குகள் மூலமாக கொடுக்கின்ற கடன்களை கொடுத்து வருகிறார்கள். ஆனால் பல இடங்களிலும் ஷெட்யூல்டு பாங்குகள் இருக்கின்றன. ஷெட்யூல்டு பாங்குகள் மூலமாகவும் விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஷெட்யூல்டு பாங்குகள் கடனை வசூல் செய்வதற்கு அவைகளுக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே அவர்கள் கடன் வசூலுக்காக கோர்ட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது. எனவே, கடன் கொடுப்பதற்கு தயக்கப்படுகிறார்கள். வசூல் செய்வதற்கு ஏற்படுகின்ற கஷ்டங்களை நினைத்து, தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கடன் கொடுப்பதில் ஷெட்யூல்டு பாங்குக்காரர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். ஆகையினால் இவர்களுக்கும் ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் மூலம் கடனை வசூல் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கலாம்.

இந்த ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் பிரகாரம் கடன் வசூல் செய்ய அதிகாரம் கொடுக்கவேண்டிய தேவையில்லை என்று அரசு கருதினால் ஷெட்யூல்டு பாங்குகள் கிராம கூட்டுறவு பாங்குகள் மூலம் கிராம சொஸைட்டிகள் மூலம் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். அவ்விதம் செய்தால் ஷெட்யூல்டு பாங்குகள் கடனை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கும், விவசாயிகள், தொழிலாளர்கள் இந்தக் கடன் வசதியைப் பயன்படுத்திக்கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். இதைப்பற்றி ரொம்ப நாட்களாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஷெட்யூல்டு பாங்குகளுக்கு கடன் வசூல் செய்வதற்கு ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் மூலம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்கின்ற கருத்து அகில



1977 ஜூலை 9] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இந்திய அளவில் பேசப்பட்டு சில மாநிலங்களில் ஒப்புக் கொள்ளப்பட்டு அதற்கான சட்டங்களையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலும் அதைப் போன்ற ஒரு ஏற்பாட்டை செய்வதற்கு கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விதம் பல்வேறு கோணங்களில் இதை அணுகும் போதுதான், கீழ் மட்டத்திலுள்ள விவசாயிகள் இப்படிப்பட்ட கடன்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அதைப் போன்று நகையீட்டுக் கடன், அந்தந்த சொஸைட்டிகள் மூலம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களில் கொடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி:—தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது அரசு கொடுத்திருக்கின்ற உத்திரவாதத்தை 61 கோடி 15 லட்சத்திலிருந்து 80 கோடி 40 லட்சத்திற்கு உயர்த்துவதற்காக நாம் இங்கே தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். இதை 100 கோடியாக உயர்த்தலாம் என்று நினைக்கிறேன். கொடுக்கப்பட்ட பல கடன்களை நாம் மாற்றிக்கொண்டிருக்கிறோம். குறுகிய காலக்கடனை நீண்ட காலக் கடனாக மாற்றுகிறோம். ஓராண்டு காலக்கடனை, மூன்று ஆண்டுக் கால்க்கடனாக மாற்றுகிறோம். இப்படி ஓராண்டுக் கடனை மூன்றாண்டு தவணை என்று மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வரும்போது, மத்திய பாங்கு வழங்கும் மூன்று ஆண்டுக் காலக் கடனில் ஒரு பகுதி, அடுத்த ஆண்டில் வாங்கிய குறுகிய காலக்கடனில் ஒரு பகுதி, அதற்கடுத்து, இந்த ஆண்டில் வாங்கிய கடனில் ஒரு பகுதி இப்படி சேர்த்து வரும்போது, இதை சேர்த்துக் கொடுக்கக் கூடிய சக்தி விவசாயிக்கு கிடையாது. அதற்குரிய வருமானம் வருமா என்பது சந்தேகம். ஆகவே இதை மாற்றியாக வேண்டும். இல்லையென்றால், கடன் தவணை முழுவதையும் செலுத்த முடியாமல் இக்கட்டான ஒரு நிலையில், ஜப்தி போன்ற கெடுபிடியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

இதற்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல், மத்திய வங்கியிலிருந்து கொடுக்கப்பட்ட கடன்கள் பின்பு நீண்ட காலக்கடன் என்று மாற்றப்பட்டது. மதிப்பிற்குரிய மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டது போல் பழைய கடன் பாக்கிகளை நீண்ட கால கடனாக அதாவது பத்து ஆண்டுகள் தவணை என்று வரையறுத்து விட்டால், ஓரளவுக்கு அந்தந்த ஆண்டு வரவேண்டிய தவணையை வசூல் செய்து கொள்ளலாம். இல்லாவிட்டால் கடன் பளு அதிகமாகிக் கொண்டே போகும். கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் பளு அதிகமாகும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஜூலை 9

அதுமட்டுமல்ல, நிலவள வங்கியில் கொடுத்த கடன்களை எல்லாம் வசூல் செய்து செலுத்தினால்தான் திரும்பவும் கடன் பெறக் கூடிய தகுதியைப்பெறும். இவ்விதம் வசூல் செய்யாத தால், பல நிலவள வங்கிகள் கடன் வாங்கும் தகுதியை இழந் திருக்கிறது. இப்படிப்பட்ட நிலவள வங்கிகள் தகுதி பெறு வதற்கு வழிவகை காணவேண்டும். ஆகவே இப்போது இருக் கின்ற மத்திய காலக் கடன்களை எல்லாம் நீண்ட காலக்கடன்களாக மாற்ற வேண்டும். இல்லையென்றால் புதிதாக கடன் வழங்க முடியாது. ஆகவே ரிசர்வ் வங்கிக்கு உத்திரவாதம் கொடுக்கும் போது, இதை உயர்த்தி நிலவள வங்கிகள் வாங்கியிருக்கின்ற மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றி, இதேபோன்று கூட்டுறவு பாங்குகளிலும் நீண்ட காலக் கடன் களாக மாற்றி, அதை பத்து ஆண்டு காலம் தவணை என்று வரை யறுத்து, அதில் பத்து தவணைகளில் ஒரு பங்கை வசூல் செய்து கொள்ளலாம் என்ற ஒரு புதிய முறையை கொண்டு வருவதற்குத் தகுந்தபடி இந்த உத்திரவாதத்தை அதிகப்படுத்தலாம் என்ப தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் மாநில வங்கிகளிலுள்ள கடன் பளு, இப்படிப்பட்ட உத்திரவாதத்தின் மூலமாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எ. சுவாமிதாஸ்:—மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விழைகிறேன்.

கிராமப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தற்போது விவசாயத்திற்கு மட்டும்தான் கடன் வழங்குகிறார்கள். சொந்தமாக நிலம் உடையவர்களும் இருக்கிறார்கள். சொந்த நிலம் இல்லாத பாட்டக்காரர்களும் இருக்கிறார்கள். பாட்டக் காரர்களுக்கு கடன் கொடுக்கும்போது இதற்கென்று கிராம அதிகாரி சர்டிபிகேட் கொடுத்தால்தான் கிராமக் கூட்டுறவு சங்கங்களில் கடன் கிடைக்கிறது. சாதாரணமாக பாட்டக்காரர் களுக்கு யாரும் சர்டிபிகேட் வழங்குவது கிடையாது. கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள டைரக்டர் சர்டிபிகேட் கொடுத்தாலும் கடன் கொடுப்பதில்லை. அரசாங்க அதிகாரிகளே சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. கூட்டுறவு வங்கியில் டைரக்டராக இருப்பவர், உண்மையாகவே இவர் விவசாயம் செய்கிறார் இவ ருக்கு பாட்ட நிலம் இருக்கிறது என்று சர்ட்டிபிகேட் கொடுத்தா லும் கடன் கொடுக்க அதிகாரிகள் மறுக்கிறார்கள், இதை மாற்றி அமைக்க வேண்டும்.

இப்போது நாம் விவசாயிகளுக்கு மட்டும்தான் கடன் வழங்கு கிறோம். விவசாயிகள் பலரும் சிறிய விவசாயிகளாக இருக்கி றார்கள். அதோடு கிராமங்களில் உள்ளவர்கள் வேறு தொழில் லும் ஈடுபட்டிருக்கிறார்கள். உதாரணமாக துணிகளை வாங்கி



1977 ஜூலை 9] [திரு. எ. சுவாமிதாஸ்]

சுமந்து விற்பனை செய்து வருகிறார்கள். சிலர் மீனவத் தொழில் செய்து வருகிறார்கள். இவர்கள் எல்லாம் சாதாரண விவசாயி களைப்போல் தொழில் செய்கிறவர்கள் தான். இவர்களுக்கு கடன் கொடுப்பதில்லை. இதேபோன்று தச்சு வேலை, கொல்ல வேலை இப்படி எத்தனையோ தொழிலாளர்கள் விவசாயத்தோடு ஒட்டியவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கும் கடன் கொடுக்க வேண்டும் என்ற அக்கறையில் கடன் வழங்க வேண்டும்.

என்னுடைய அனுபவத்தைப் பொறுத்தவரையில் விவசாயி களுக்கு, அதாவது நெற்பயிருக்கு கடன் கொடுக்கும்போது ஆறு மாத குறுகிய காலக் கடனைக் கொடுக்கிறோம். ஆறு மாத கெடு என்றிருந்தாலும் கூட, கடன் பெற்றுக் கொடுப்பதற்குள், இரண்டு மாதம் ஆகிவிடுகிறது. ஆகவே எஞ்சியுள்ள நான்கு மாதத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று வரும்போது ஒழுங்காக தவணை செலுத்த முடிவ தில்லை. இதனால் வீட்டில் போய் ஐப்தி செய்ய வெண்டிய நிலைமை வந்துவிடுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு போகம் விவசாயம் செய்கிறார்கள். ஆகவே இங்கு கொடுக்கப் படும் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடனாக மாற்றி, அதை ஓராண்டு காலத்திற்குள் கொடுத்தாக வேண்டும் என்று வைத்துக்கொண்டால் நல்லது. அதாவது 1,000 ரூபாய் கடன் செலுத்த வேண்டும் என்றிருந்தால், அதை இரண்டு தடவை யாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆறு மாத காலத்தில் 500 ரூபா யும் எஞ்சியுள்ள பாக்கி 500 ரூபாயை இன்னொரு ஆறு மாத காலத் திலும் பெற்றுக்கொண்டால் வசதியாக இருக்கும். இப்படி வசதி செய்து கொடுத்தால் கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்றவர் வர்களுக்கும் எளிதாக இருக்கும், வசூல் செய்வதற்கும் எளிதாக இருக்கும், பணம் பட்டுவாடா கணக்குகள் தயார் பண்ணு வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே ஆறு மாத காலக் கடனை ஓராண்டு காலக் கடனாக மாற்றிக் கொடுக்கும்படி ரிசர்வ் பாங் குக்கு அரசு சிபாரிசு செய்ய வெண்டும்.

குறுகிய காலக் கடனை வாங்கிவிட்டு, பின்னால் ஓராண்டு காலக் கடனைத் தருகிறோம் என்று சொன்னால் அதற்கு ரிசர்வ் பாங்கும் ஒத்துக்கொள்ள வேண்டும். குறுகிய காலக் கடன் என்று வரும்போது வசூல் செய்வதில் சங்கடங்கள் ஏற் படுகின்றன. ஒரு பூவில் அறுவடை ஆனவுடன் நெல்லை விற்க முடியாது. அறுவடை நேரத்தில் நெல்லின் விலை மிகவும் கம்மி யாக இருக்கும். கம்மியான விலையில் விற்பதற்கும் யாரும் முன் வர மாட்டார்கள். நெல்விலை இன்னும் கூடுதல் விலைக்கு விற்றால் ஐந்து ரூபாய் கூடுதலாக கிடைத்தால் நல்லது என்று எந்த விவசாயியும் ஆசைப்படுவது இயற்கை. ஆகவே குறுகிய காலக் கடனை ரத்து செய்து இரண்டு போகு சாகுபடிக்கும் சேர்ந்து ஓராண்டு காலக் கடனாக மாற்றிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிற்பகல் 12·40

அதேபோல, சிறு தொழில்கள் செய்கிறவர்களுக்கும் கூட்டுறவு விவசாய சங்கங்களிலும் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பலருக்கு சொத்து இருக்காது; ஆனால் நாணயம் இருக்கும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள டைரக்டர்கள் உறுதி கொடுத்தால், அவர்களுக்கு கடன் வழங்கலாம் என்று விதியை மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே, அறுவடை நேரத்திலே பலர் துணிமணிகளைத் தலையிலே சுமந்து சென்று விற்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். அவ்வாறே மீனையும் தலையிலே சுமந்து சென்று விற்பதைப் பார்க்கிறோம். இதேபோல், இன்னும் தச்சு வேலை செய்யும் தச்சர், கொல்ல வேலை செய்யும் தொழிலாளி போன்றவர்களுக்கும் இந்தமாதிரி கடன் வசதி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்தின் டைரக்டர் உறுதிமொழி கொடுத்தாலே, 500 ரூபாய் வரையில் கடன் உதவி செய்யலாம் என்று விதியை மாற்றியமைக்க வேண்டும்.

இதேபோல், பாட்ட விவசாயிகளுக்கும் கடன் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்த 'பாட்டம்' வைத்திருப்பவர்களைப் பற்றிச் சொன்னேன். இவர்களுக்கு வில்லேஜ் ஆபீசர்கள் சர்டிபிகேட் கொடுக்க மாட்டார்கள், அப்படி கொடுக்கக்கூடிய நிலை ஏற்படின், அதனால் லீகல் விவாதம் எல்லாம் எழும் என்று, கொடுக்க மறுத்து விடுவார்கள். ஒருவருக்கு 5 வருஷத்திற்கு பாட்டம் இருக்கும். அப்படியிருந்தும் சர்டிபிகேட் கொடுக்க மாட்டார்கள். இவர்களுக்கு அந்தக் கூட்டுறவு சங்கத்தின் டைரக்டர் சர்டிபிகேட் கொடுத்தால் கடன் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டு, சட்டத்தில் உள்ள சிக்கல்களையெல்லாம் மாற்றி விவசாயிகளுக்கும் பிற தொழிலாளர்களுக்கும் கடன் வசதி செய்து கொடுத்தால் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மு. செல்வராஜ்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசாங்கத்தின் தரப்பில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்கள் கூற நான் விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் தரப்பில் கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம் ஆகிய நான்கு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும், அரசாங்கத் தரப்பிலே உள்ள ரிசர்வ் வங்கிகளுக்கும் 'கிரெடிட் கியாரண்டி' கொடுக்கப்பட இருக்கிறது. அப்படி





கொடுப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது. ஆனால், தொடர்ந்து கடந்த நான்கைந்து வருஷ காலமாக தமிழகத்திலே வறட்சி நிலைமை பரவலாக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு பகுதிகளுக்கு அவ்வப்போது அரசாங்கத் தரப்பிலே 'கன்வர்ஷன்' கொடுக்கப்பட்டு வருகின்றது. முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மாரிமுத்து, திரு. அழகிரிசாமி ஆகியோர் இதுபோன்று 'கன்வர்ஷன்' கொடுப்பதன் மூலமாக விவசாயிகளுக்கு சங்கடம்தான் ஏற்படுகின்றது, அவர்களுக்கு மேலும் கடன் சுமை அதிகமாக ஆகும் நிலைதான் ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார்கள். ஆனால், அதை வைத்துக்கொண்டு நான் இந்த 'கன்வர்ஷனே' வேண்டாம் என்று சொல்ல வரவில்லை. ஆனால். இந்த 'கன்வர்ஷன்' நீண்டகாலமாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

கூட்டுறவுத் துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல் இப்படி நீடிக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆனால், நில வள வங்கியில் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக அவ்வப்போது இருக்கின்ற நிலைக்கு ஏற்றவாறு இதை நாங்கள் நீடித்து இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு இதிலே செய்யலாம் என்பதற்கு, கூட்டுறவுத் துறை அதிகாரிகளை கலந்துகொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் இந்த ஆண்டு, 'கன்வர்ஷன்' கொடுத்து விடுகிறோம். இதைத் தவிர அவர்கள், பயிர் கடன் வேறு வாங்குகிறார்கள். அடுத்த ஆண்டு இதே நிலை ஏற்பட்டால், கடனையும் சேர்த்து கொடுக்கவேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். நாம் இப்படி 2, 3 ஆண்டுகளுக்கு 'கன்வர்ஷன்' கொடுக்கும்போது மேலும் கடன் சுமை ஏற்படுகின்ற நிலைமைதான் ஏற்படுகின்றது. ஆகவே, இவைகளையெல்லாம் தவிர்ப்பதற்கு சட்டரீதியாக எந்த முறையில் தீர்க்கலாம் என்பதற்கு ஒரு முறையை வகுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில், அகில இந்தியாவிலேயே கூட்டுறவுத் துறையில் தமிழகம் முதன்மை பெற்று விளங்குகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்திலே, கும்பகோணத்திலே உள்ள மத்திய கூட்டுறவு வங்கி கடந்த மூன்று ஆண்டுகளாக முதற் பரிசைப் பெற்றுக்கொண்டு வருகின்றது. மத்திய சர்க்காரிலே உள்ள காங்கிரஸ் அமைச்சர்கள் இங்கு வந்து பரிசையும் வழங்கியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அவ்வப்போது தொடர்ந்து ஏற்பட்டு வருகின்ற வறட்சி நிலை காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் சரிவர செயல்பட முடியாத நிலைமை ஏற்படுகின்றது. தஞ்சாவூர் மாவட்டத்திலே, காவிரியை நம்பியிருக்கும் தஞ்சையிலே தொடர்ந்து இந்த நிலைமை

நீடிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கிராம நிர்ணய சங்கத்திலே 50 சதவீதத்திற்கு மேல் பணம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர, இன்னும் சில பழக்கவழக்கங்களை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். வெள்ளத்தால் ஒரு கிராமம் பாதிக்கப்பட்டால், அங்குள்ள கூட்டுறவு ஸ்தாபனம் கடன் வசூலிக்க முடியாது. அதேபோல், நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களை கடன் வசூலிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டார்கள். அதைத் தொடர்ந்து, சட்ட மன்றத் தேர்தல் வந்தது. அப்போதும் கடன் வசூலிக்கக் கூடாது என்று உத்திரவிடப்பட்டது. அதற்குப் பிறகு, இப்போது தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் கூட்டுறவுத் துறையின் மூலமாக கடன்களை வசூலிக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதை நான் ஏதோ எதிர்க் கட்சியில் இருப்பதால் சொல்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் கருதக்கூடாது. இதுதான் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய உண்மையான நிலை. எனவே, உடனடியாக இதைப் பரிசீலித்து ஏழைகளைப் பாதிக்காத, விவசாயிகளுக்குத் தொடர்ந்து உதவக்கூடிய வகையிலே இதை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னும் 10 கோடி அல்லது அதற்கு மேலும் நீடித்துக் கொண்டே போகலாம். ஆனால், தொடர்ந்து வரக்கூடிய ஆண்டிலே வரக்கூடிய பிரச்சனையைக் கருத்தில் கொண்டு இதற்கு உடனடியாக ஒரு முடிவு காண வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

திரு. க. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சபையின் முன்பு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் மாநில மத்திய வங்கிகளின் வாங்கும் சக்தியை உயர்த்தும் வகையில் கொண்டுவந்திருக்கின்ற இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து இந்திய தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல முயலுகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த அனுபவ ரீதியான நிலைமைகளையும், ஆலோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று, மாநில வங்கிகள் இன்னும் கிராம வங்கிகளுக்கு கடன் கொடுத்து, கடந்த 3, 4 ஆண்டுகளாக நிலவிவரும் வரலாறு காணாத வறட்சி நிலை காரணமாக தமிழகத்தில் விவசாயிகள் வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமையில், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக இந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஷார்ட் டெர்ம் லோனை, மத்திய கால கடனாக மாற்றினார்கள். உதாரணமாக, 1974-லே பஞ்ச வறட்சி நிலை காரணமாக 1975-க்கு தள்ளிப் போட்டார்கள். 1975-லே வறட்சி ஏற்





பட்டபோது 1976-க்கு தள்ளிப் போட்டார்கள். 1976-லே இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டபோது 1977-க்கு தள்ளிப் போட்டார்கள். இந்தமாதிரி நிவாரணம் அவ்வப்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டாலும், ஆனால், அவர்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

தேர்தல் முடிந்த மறுநாள் சாமி கும்பிட கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அந்தச் சமயத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் என்னை வந்து வளைத்துக் கொண்டார்கள். இடைமறித்துக் கொண்டவர்களை என்னவென்று கேட்டபோது, அங்குள்ள மரத்தடியில் ஒரு ஜீப்பும் காணப்பட்டது. அந்த ஜீப்பிலிருந்த அதிகாரிகளைக் கேட்டபோது, தேர்தல் காலத்தில் கடன் வசூலிக்கக் கூடாது என்று உத்தரவிட்டதால், இப்போது ஜூன் டிமாண்டிற்கு வசூலிக்க வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். 50 சதவிகிதமாவது வசூலிக்காவிட்டால், வங்கி செயல்பட முடியாது. ஆகவே, தொடர்ந்து வசூலிக்க வேண்டுமென்று ரிஜிஸ்திரார் அவர்களிடமிருந்து எங்களுக்கு சர்குலர் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். கிராம மக்கள் அனைவரும், ‘நாங்கள் ஓட்டுப் போட்டோம், இப்போது சட்டத்தைக் காட்டி இப்படி வசூல் செய்கிறார்களே, இது நியாயமா’ என்று கேட்டார்கள். நானும், உடனே மாவட்ட ஆட்சியாளருக்கு மனு கொடுத்து, விசாரித்தேன். தயவு செய்து இதிலே உதவுங்கள் என்றும் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர், ஏற்கனவே 3, 4 ஆண்டுகள் தள்ளிப் போடப்பட்டுள்ளது. ஆனால், இப்போதுள்ள நிலையில் நாங்கள் சட்டரீதியாக செயல்பட வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 12·50)

ஆனால் அவர்களைக் கேட்டால் அரசு என்கிறார்கள். மாநில அரசைக் கேட்டால் ரிசர்வ் பாங்க் என்று சொல்கிறார்கள்; ரிசர்வ் பாங்கை கேட்டால் உலக வங்கி என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த ஜனநாயக அமைப்பில்— Should we not have realistic approach to the problem? என்ற கேள்வியைக் கேட்க ஆசைப்படுகிறேன். சட்ட ரீதியாக சென்னையில் இருப்பவர்கள். செய்யட்டும். நடைமுறையில் கிராமப் பகுதியில் 100—க்கு 70 பங்கு மக்கள் இருக்கிறார்கள். கிராமங்களில் ஏழை விவசாயிகள் வாழ்கிறார்கள். கவர்னர் அறிக்கையில் அதைப் பற்றிக் குறிப்பிட்டதைக் காண்கிறேன். மிக்க மகிழ்ச்சி; பாராட்டுகிறேன். நடைமுறையில் ஏழை விவசாய மக்களுக்கு கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் நிலையை அறிந்த புரட்சித் தலைவர் அரசு இந்த நடைமுறைச் சிக்கலை நீக்குவதற்கு கனிவோடு செயல்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான்கு ஆண்டுகளாக வறட்சியைக் கண்டு வருகிற அந்த மக்களுக்கு ஷார்ட் டேர்ம் லோனை மிட் டேர்ம் லோனாக மாற்ற வேண்டும். இந்த வருஷம் மழை பெய்யவில்லை. சட்ட ரீதியாக 1974-ல் வாங்கிய கடனுக்கு வட்டி மாத்திரம் கட்ட வேண்டும்.

That too with penal interest என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது, அபராத வட்டியைப் போடுகிறார்கள். வாங்கிய முதலையே திருப்பிக் கட்ட முடியாத நிலையில் எப்படி அபராதத்தைக் கட்ட முடியும்? ஆஸ்பத்திரியிலிருந்து வந்த நோயாளியை, வேகமாக நடக்க முடியாத ஒருவனை ஒரு மூட்டை சோளத்தையும் தூக்கிக் கொண்டு ஓடச் சொன்னால் எப்படி ஓட முடியும்? ரிசர்வ் பாங்க் சட்டம் இருக்கலாம்—is it practically possible for a poor farmer suffering due to unprecedented drought conditions for more than four years to pay the arrears of loan with penal interest ?

எந்தத் தவறும் செய்யவில்லை. உழைக்கத் தயாராக இருக்கிறான். டி. டி. சி. மீட்டிங்கில் பேசுகிறபோது இவ்வாறு மார்வாடியை விட கடுமையான வட்டியை வசூலிக்கிறார்கள் என்று எடுத்துக்கூறப்பட்டது. பீனல் இன்டரஸ்ட் போடுவதைத் தவிர்க்க வேண்டும். கிராமப் புறங்களில் இருப்பவர்களுக்கு வட்டியை ரத்து செய்து முதலை மட்டும் வசூலிக்க 10 வருஷ தவணையில் வசூலிக்க முன்வர வேண்டுமென்று மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் கூறினார்கள். 10 வருஷம் என்று இல்லாவிட்டாலும் 5 வருஷத் தவணையில் வசூலிக்கலாம். முதலை மட்டும் வசூலிக்க வேண்டும்.— principal without interest என்று ஏற்பாடு செய்தால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பான உதவியாக இருக்குமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கலெக்ஷன் ஏஜன்சிஸ், சூப்பர்வைசர்ஸ், பீல்டு ஆபீசர்ஸ் இருக்கிறார்கள்— sometimes they behave politically எல்லோரும் என்று சொல்லவில்லை. சில அதிகாரிகள், கூட்டுறவு வங்கிகளில் கிராமப்புறங்களில் செயல்படுகிறவர்கள் அரசியல் கண்ணோட்டத்தோடு செயல்படுகிறார்கள் என்பதை மாத்திரம் சுருக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். டிமாண்ட் மீது விவாதம் வரும்போது விவரங்களைக் கூறுகிறேன். அரசியல் கண்ணோட்டம் இல்லாமல் பணியாற்ற வேண்டுமென்று ரிஜிஸ்ட்ரார் மூலம் சர்குலர் அனுப்ப வேண்டும்.

கலெக்ஷன் செய்பவர்கள் குறுகிய காலத்தில் அதிகமான தொகை கலெக்ஷன் செய்ய வேண்டுமென்றால் ஒரு நாளைக்கு எட்டு, பத்து ஊர்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்களுக்குத் தற்போது கன்வேயன்ஸ் வசதி இல்லை. அவர்கள் டாக்சியை எடுக்கிறார்கள்— Out of forced circumstances, they are constrained to engage a taxi as conveyance. Taxi–fare is being collected from the poorest of the lot. அதற்கு 100, 200 ரூபாய் செலவாகிறது. அந்தப் பணத்தைத் துர்ப்பாக்கியவசமாக விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசு மூலம் வாகன வசதிகள் ஏற்பாடு செய்து கொடுத்தால் வேண்டாத இந்த நிலைமை ஏற்படாமல்



கிணறு வெட்ட லோன் கொடுக்கிறார்கள். ஒன்பதாயிரம், பத்தாயிரம், பதினைந்தாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். நல்ல நோக்கத்தோடு வாங்கி வெட்ட விவசாயிகள் முனைந்தாலும் பத்து பதினைந்து அடி போனவுடன் எதிர்பாராமல் பாறை வந்து விடுகிறது. விவசாயி ஏமாற்றம் அடைகிறான். பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிகிறது. 9,000 ரூபாயில் கிணற்றை வெட்ட முடிவதில்லை. நகைகளை அடகு வைத்து கடன் வாங்குகிறான். இப்படி எதிர்பாராத நிலைமை வரும்போது கடனை 'ரைட் ஆப்' செய்ய அரசு முன் வந்தால் உதவிகரமாகஇருக்கும்.

ஆண்டிப்பட்டி என்னுடைய தொகுதி. வருஷ நாடு இருப்பதில் மிகப்பெரிய தொகுதி. முன்னால் இருந்த உறுப்பினர் கூடச் சொன்னார்கள்— ஆண்டவனால் கைவிடப்பட்ட பகுதி என்று. ஆண்டவனால் கைவிடப்பட்ட மக்களுக்கு புரட்சித் தலைவர் கார்டியனாக வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட பகுதியில் லாண்ட் டெவலப்மென்ட் பாங்க் இல்லை. அது வீவர்ஸ் நிறைந்த பகுதி. நேஷனலைஸ்டு பாங்குக்குப்போனால் 10 கிலோமீட்டர் தூரத்திற்கு உட்பட்டிருக்கவேண்டுமென்கிறார்கள். தேனிக்குப் போக வேண்டுமென்றால் 15 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். இப்படி கடன் வாங்க வழியற்ற நிலைமையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்த்து நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்க்க கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களை எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று விவசாயிகள் சார்பாகக் கேட்டுக்கொண்டு இந்தத் திருத்த மசோதாவை வரவேற்று பாராட்டி அமருகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப்........ சுருக்கமாகப் பேசினால் நலமாக இருக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலக் கடன், குறுகிய காலக் கடன், நடுத்தரக் கூட்டுறவு, கடன் என்ற இந்தக் கடன்களுக்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி கொடுக்கக்கூடிய தொகையினுடைய வரையறையை ஆறு கோடியிலிருந்து எட்டுக் கோடி ஆக்க அதிகமாக்க வேண்டும்; வேண்டும் என்று இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஓரிரு கருத்துக்களைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன். மற்றக் கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் சுருக்கமாக முடித்துக் கொள்ளுகிறேன் என்று பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 9

குறிப்பாக இந்தக் கடன்கள் எல்லாம் விவசாயிகளுக்கு உதவி
கரமாக இருக்க வேண்டும். அவர்களுடைய விவசாயத் தொழில்
செம்மையாக நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக்
கடன்கள் எல்லாம் அளிக்கப்படுகின்றன. ஆனால் இதிலே பலவித
மான நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதன் காரணமாக நாம்
எந்த நோக்கத்திற்காக இந்தக் கடன்களை எல்லாம் கூட்டுறவுச்
சங்கங்களின் வாயிலாக விவசாயிகளுக்கு அளிக்கிறோமோ அந்த
நோக்கங்கள் முழுமையாக நிறைவேறுவது இல்லை. இதில்
நிர்வாகச் சீர்கேடுகளும் இருக்கின்றன. அதே நேரத்தில் விவசா
யிகளிடத்தில் சில கவன குறைவுகள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்
தாலும் இந்த நோக்கம் நிறைவேறாமல் போகின்றன என்பதும்
நாம் பார்க்கின்ற ஒரு உண்மையாகும்.

குறிப்பாக, கடன்களை வாங்கும்போது விவசாய மேம்பாட்டுக்
காக வாங்குகின்ற கடன்கள் சில சமயங்களில் ஏதாவது மற்றக்
காரியங்களுக்குப் பயன்படுத்துகிற நிலைமையைப் பார்க்கிறோம்.
கல்யாணம், மற்ற விவகாரங்களுக்கு இந்தத் தொகைகளை அவர்கள்
பயன்படுத்திவிடுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு
இருக்கிற நெருக்கடி காரணமாகச் செய்கிறார்களே தவிர, பொறுப்
பற்ற தன்மையில் செய்கிறார்கள் என்று சொல்லத் தயாராக
இல்லை. ஆகையால் இந்தக் கருத்து சொல்லப்பட்ட காரணத்தால்
பணமாகக் கொடுப்பதைவிட பொருளாகக் கொடுப்பது நன்றாக
இருக்கும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பாதி பண
மாகவும், பாதி பொருளாகவும் கொடுப்பது—உதாரணமாக பணத்
திற்குப் பதிலாக உரம் கொடுக்க வேண்டும். விதை கொடுக்க
வேண்டும், பம்ப் செட் கொடுக்க வேண்டும்—பாதியைப் பண
மாகக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்
தார்கள்.

(பிற்பகல் 1·00)

ஆனால் அந்தத் திட்டம்கூட சரியாக நடைபெறவில்லை
யென்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். பாசனத்திற்குப்
பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பழைய, துருப்பிடித்துப்
போன பம்பு செட்டுகளைக் கொடுத்து, அதை அவர்கள் வீட்டிற்குக்
கொண்டு போய்—ஏனென்றால் அவற்றை பாசனத்திற்கு விவசாயத்
திற்குப் பயன்படுத்த முடியாது—வைத்திருந்து அது வீணாகிப்
போகக் கூடிய நிலைமையைப்பற்றி பல இடங்களிலே சொல்கிறார்
கள். நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

கடன் கொடுக்கிறபோது, கடன் சாங்ஷன் செய்யப்பட்டு,
வங்கிகளிலிருந்து விவசாயிகளிடத்திலே நேரடியாகக் கொடுக்காமல்
அவர்கள் பெயரிலேயே ஒரு கிரடிட் அக்கவுண்ட் ஓப்பன் செய்து
அவர்கள் விதை வாங்கினார்கள் என்றால் அல்லது உரம் வாங்கினார்
கள் என்றால் அப்படி உரம் வாங்கிய இடத்திலிருந்து பில்லை வாங்கிக்
கொண்டு வந்து கொடுத்தால் அந்த பில்லை வைத்துக் கொண்டு



1977 ஜூலை 9] [திரு. எம். ஏ. லத்தீப்]

நேரடியாக உரம் சப்ளை செய்த இடத்திற்குப் பணத்தை அனுப்பி
விடுவதன்மூலம் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கலாம். அது
மட்டுமல்ல, உரமும், விதையும் நல்ல தரமுள்ளவையாகக்
கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதேபோன்று பம்புசெட்
வாங்கினால்கூட இந்த முறையைக் கடைப்பிடிக்கலாம்.

அதே மாதிரியாகக் கிணறு வெட்டுவதற்கு நீண்டகாலக் கடன்
கொடுக்கிறோம் என்றாலும், 10 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய்
கொடுக்கிறோம் என்றாலும், அந்தப் பணத்தை விவசாயிகளுக்கு
நேரடியாகக் கொடுக்காமல் அந்தத் தொகைக்கான கிரடிட்டை
வங்கியில் வைத்து அக்கவுண்ட் ஓப்பன் செய்து—கிணறு வெட்டு
கின்ற வேலையை காண்டிராக்டரிடத்திலே விட்டால் அவருக்கே
நேரடியாக வங்கி பணத்தை அனுப்பிவிடலாம். அல்லது கூலிக்
காரர்களை கிணறு வெட்ட அமர்த்தியிருந்தால் அவர்களுக்குப்
பணத்தை வழங்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்யலாம், ஆனால்
கூலிக்காரர்களுக்கு அந்தப் பணம் போய்ச் சேருமா என்பதும்
சந்தேகமாக இருக்கிறது. இருபது ஆயிரம் ரூபாய் சாங்ஷன்
செய்திருந்தால், ஒரு கிணற்றை வெட்டுவதற்கு அதிகமாகப் பணம்
செலவாகக் கூடிய நிலைமை இருந்தாலும்—அதாவது வெட்டுகிற
போது பாறை வந்துவிடுவதனாலேயோ அல்லது வேறு பல சூழ்நிலை
களினாலோ—அந்தத் தொகையை உயர்த்தி அதிகமான ரூபாய்
சாங்ஷன் செய்ய வேண்டுமென்றும், அந்த வேலையை முடித்த எந்த
அளவிற்குப் பணம் தேவைப்படுமோ அந்த அளவிற்குப் பணத்தை
சாங்ஷன் செய்யக்கூடிய முறையைக் கொண்டு வந்தால் நல்லது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சூப்பர்வைஸர்ஸ் பற்றிச் சொன்னார்கள், அது
உண்மைதான். எல்லோருமே சொன்னார்கள். கோவாப்ரேடிவ்
டிபார்ட்மெண்ட் சூப்பர்வைசர் வந்தாலே, ஏதோ யமதர்மராஜன்
வந்தால்கூட நம்முடைய விவசாயிகள் பயப்படுவது இல்லை, ஆனால்
இந்த சூப்பர்வைசர்களுக்குப் பயப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு
இருக்கிறது, அவர்கள் மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பயன்
படுத்துகிறார்கள். பாவம் விவசாயிகள், அறுவடை வந்தவுடன்
அடுத்த மாதம் கொடுக்கிறேன் என்று சொல்வார்கள். ஆனால்
அறுவடை சரியாக இருக்காது. ஏதோ ஒரு காரணத்தினாலே
அறுவடை பாதிக்கப்பட்டு விட்டால் அவர்களால் கடன் கொடுக்க
இயலாத சூழ்நிலை ஏற்படுகிறபோது இந்த சூப்பர்வைஸர்கள் அவர்
களைப்பற்றி கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

அது மட்டுமல்ல, இந்த சூப்பர்வைசர்கள் அரசியல் காரணங்
களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறார்கள். நம்முடைய பகுதியிலே
ஒரு பகுதியிலே ஒரே ஒரு கட்சியைச் சேர்ந்த அரசியல் கட்சிக்
காரர்கள் இரண்டு கோஷ்டிகளாக இருக்கிறார்கள். ஒரு பக்கம்

ஒரு கோஷ்டி மெம்பர்ஷிப் சேர்த்துக் கொண்டிருக்கிறது, ஒரு
கோஷ்டியினுடைய தலைவர் கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக
இருக்கிறார், அந்தக் கோஷ்டிக்காக, அவருக்காக அந்தக் கூட்டுறவு
துறையைச் சேர்ந்த சூப்பர்வைசர், ஒரு அரசியல் கட்சியைச்
சேர்ந்தவர்க்காக மெம்பர்ஷிப் கேம்பெயன் செய்யும் அளவிற்கு
நிலைமை மாறியிருக்கிறது என்று சொன்னால், இப்படிப்பட்ட
நிலைமையை மாற்ற வேண்டும்.

கூட்டுறவுத் துறை சூப்பர்வைசர்களுக்கு அரசியல் தொடர்பு
இருக்கக்கூடாது என்ற முறையிலே செய்தால்தான் இப்படிப்பட்ட
கோஷ்டி மனப்பான்மையில் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்
வதைத் தடுக்க முடியும். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம்—பணத்தின் மதிப்புக் குறைந்
திருக்கின்ற இந்த நேரத்திலே—மிகவும் தேவையான தீர்மானம்
என்று சொல்லி அதை வரவேற்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, மாண்புமிகு உணவு
அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை உழைப்
பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில்..... ....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: "மாண்புமிகு தலைவர்
அவர்களே" என்று மட்டும் சொல்லுங்கள். "மாண்புமிகு உறுப்
பினர்களே" என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u>: I stand corrected, இந்தக்
கூட்டுறவு இயக்கங்களின் சார்பாக விவசாயிகளுக்குப் பணம்
கொடுப்பது விரும்பத் தக்கது என்று நாம் வரவேற்கின்ற அதே
நேரத்திலே கொடுத்த கடன்களை வசூலிக்கின்றபோது மனிதாபி
மானமும் இருக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகச்
சொல்லவேண்டுமானுல், சிவில் புரசீஜர் கோட் இருக்கிறது, அதிலே
செக்ஷன் 60-ல் எந்த எந்தப் பொருட்களை ஜப்தி செய்யக்கூடாது
என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, விதைகள்,
விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய கருவிகள், ஏர் உழுகின்ற
மாடுகள், சாப்பிடுகின்ற சாமான்கள் போன்றவற்றையெல்லாம்
சட்டத்தின் மூலமாக ஜப்தி செய்யக்கூடாது என்று அதிலே
சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் கூட்டுறவு அதிகாரிகள், வங்கி
களின் அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் எல்லாம் அந்தச் சட்டத்
திற்குச் சிறிதும் மதிப்பு அளிக்காத முறையிலே அவர்கள் வீடுகளிலே
நுழைந்து எந்த எந்தப் பொருட்களை ஜப்தி செய்யக்கூடாதோ
அந்தப் பொருட்களையே ஜப்தி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது



அதே நேரத்திலே முன்னறிவிப்பு இல்லாமல் வீட்டிலே ஆள்
இருக்கிறார்களோ இல்லையோ வீட்டிற்குள் அனுமதியில்லாமல் தானே
நுழைந்து, வீடு பூட்டியிருந்தாலும்கூட, வீட்டில் நுழைவதற்காக
பூட்டை உடைத்து உள்ளே சென்று சாமான்களை ஜப்தி
செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது, அது மட்டுமல்ல, உள்ளே
இருந்த சாமான்களை அள்ளி வெளியே எறிந்து அங்கேயுள்ளவர்களை
வெளியே கொண்டு வந்து மானபங்கம் செய்து வெளியே இழுத்துப்
போடுகிறார்கள். இந்தக் காரணத்தினால், சிலர் இதைப் பொறுக்க
முடியாது, தூக்கு மாட்டிக் கொண்டு இறந்திருக்கிறார்கள்,
விஷத்தை அருந்தி இருக்கிறார்கள் என்ற நிலைமை யெல்லாம்
இருக்கிறது.

கடனை திரும்பப் பெறுகிறபோது அதற்கு கால வரையறை
வைத்து அதற்குள் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டு
மென்று முன்னறிவிப்புக் கொடுத்து—பணத்தை அந்தக் குறிப்
பிட்ட காலத்திற்குள் கொடுத்து விடுவார்கள், அப்படிக் கொடுக்க
வில்லை என்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். கொடுக்க
முடியாமல் போகலாம், யாரும் பணத்தை வைத்துக் கொண்டே
வேண்டுமென்று கட்டாமல் இருக்க மாட்டார்கள் என்று கருது
கிறேன்—சில வேளைகளிலே கட்டமுடியாத நிலைமை ஏற்படலாம்,
அதற்குக் காரணங்கள் என்ன என்னவோ இருக்கலாம். இத்தனை
நாட்களுக்குள் கொடுத்துவிட வேண்டும் என்று முன்னறிவிப்புக்
கொடுத்து, வசூலிப்பதற்கு முன்னறிவிப்புக் கொடுத்தால் வசூலிக்கி
றார்கள் என்ற பொருளில் அடங்கும்.

ஆனல், கடன் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்ற ஒரே
ஒரு காரணத்திற்காக—போலீஸ் அதிகாரிகள் தங்களிடத்திலே
என்ன என்ன அதிகாரங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம்
பயன்படுத்தி எப்படி மக்களைச் சில நேரங்களிலே துன்புறுத்துகிறார்
களோ அந்த முறையிலே பணத்தை வசூலிக்கின்றபோது விவசாயி
களை, விவசாயிகளாக மதிக்கப்படக் கூடிய நிலைமை இல்லை
என்பதை வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது, எனக்கு
முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல்
அதிகாரிகள் கடனை வசூலிக்க வரும்போது யமதர்மராஜனைக் கண்டு
பயப்படுவதைப்போல் பயப்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.
இந்த சிவில் புரசீஜர் கோடிலே சொடுக்கப்பட்டிருக்கின்ற ஜப்திக்
கான பொருட்களுக்கு உள்ள எக்ஸ்ம்ப்ஷன்களை இந்தச் சட்டத்தி
லேயும் கொண்டு வருகிற முறையிலே தேவையான திருத்தங்களைக்
கொண்டு வரவேண்டுமென்றும், அதன்மூலம் அவர்களுக்குப் பாது
காப்புத் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் இங்கே பேசும்போது எடுத்துத் தெரிவித்தார்
கள்; மவுண்டிங் இன்டரஸ்ட் என்று. காம்பவுண்ட் இன்டரஸ்ட்
என்று சொல்லக் கூடிய அளவில் ஒரு முறை கட்டவில்லை என்று
சொன்னால் மேலும் வட்டி அதிகரித்து காம்பவுண்ட்
இன்டரஸ்ட் என்ற முறையிலே மேலும் மேலும் விவசாயிகளின்

தலையிலே சுமையை ஏற்றக்கூடிய முறைதான் இருக்கிறது கோவாப்பரேடிவ் சொஸைடி, வங்கிகள் இவற்றில் வாங்கக் கூடிய கடன்களுக்கு இன்ட்ரஸ்ட் ரேட் மிகவும் அதிகமாக இருக்கிறது, தனிப்பட்ட மக்களுக்கு 9 சதவீதத்திற்கு மேல் வட்டிவீதம் இருக்கக் கூடாது என்று செய்துவிட்டு அரசாங்கக் கடன், கூட்டுறவு கடன்கள் வங்கிக் கடன்களுக்கு, 18 சதவீதம் விதிக்கப்படக்கூடிய அளவிற்கு வட்டி வசூலாகிறது. கட்டவில்லையென்று சொன்னால் காம்பவுண்ட் இன்ட்ரஸ்ட் கான்ட்ராக்ட் ஆக்டிலே கூட பீனல் கிளாஸ் That is being struck down by court of Law ஆனால் இங்கே எந்த முறையிலே காம்பவுண்ட் இன்டரஸ்ட் வசூலிக்கப்படுகிறதோ தெரியவில்லை, நாம் கேட்டால், நான் வழக்கறிஞர் என்ற முறையிலே நான் அதிகாரிகளிடம் சென்று இதைப்பற்றி மனுக்களைக் கொடுத்தபோது அவை பரிசீலிக்கப்படவில்லை, நான் வழக்கறிஞர் என்ற முறையிலே வக்காலத்தும் கொடுத்திருக்கிறேன்.

[பிற்பகல் 1·10]

ஆனால் கொடுத்து ஆறு மாதங்களானாலும் சரி, ஒரு வருட காலமானாலும் சரி அந்த மனுக்களின் மீது பரிசீலனை செய்யப்படாது அது லாட்ஜ் செய்யப்படுகிறது. எந்த விதமான பரிகாரமும் செய்யப் படாமல், குறிப்பாக ஓரிடத்திலே ஜப்தி செய்த பொருளை எடுத்துச் சென்றுவிட்டார்கள். பிறகு பணமும் கட்டி விட்டார்கள் ஆனால் அந்தப் பொருளை திருப்பிக் கேட்கும் பொழுது இவர்களாகவே தங்கள் இஷ்டத்திற்கு வைத்துக்கொண்டு திருப்பிக் கொடுக்காத நிலைமை ஒரு கிராமத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் பரிகாரம் காணும் முறையிலே தக்க நடவடிக்கைகள் எடுத்து விவசாயப் பெருமக்களுக்கு ஆதரவு தர வேண்டுமென்ற முறையிலே சட்டங்களைத் திருத்த வேண்டும். அதே நேரத்திலே Govornment instructions should be in such a way that these people should not misuse their power என்ற முறையிலே நாம் செயலாற்ற வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u>: பேரவைத் தலைவரவர்களே, அரசு தரப்பில் இங்கே கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து இங்கே பேசிய எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய ஒருமித்த கருத்தைத் தெரிவித்ததற்காக அரசின் சார்பில் நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் கொடுக்க வேண்டிய உத்திரவாதத் தொகையைக் கூட்டிக் கொடுக்க இந்த அவையின் அனுமதியைப் பெறுவதற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்றெல்லாம் இந்தத் தீர்மானத்தின்மீது பேசிய எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கூறினார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசு



கின்ற நேரத்தில் இந்தத் துறை நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு எந்த அளவிலே முழுமையாகப் பாடுபட வேண்டுமென்ற கருத்துக்களைச் சொன்னதற்காக அரசின் சார்பில் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று முதல் நிதி நிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் அளித்த நேரத்தில் தன்னுடைய அரசாங்கத்தினுடைய நிதிக் கொள்கையையும். இன்னும் பல்வேறு கொள்கைகளையும் பற்றி இரத்தினச் சுருக்கமாகஒரே வார்த்தையில் சொன்னார்கள். அண்ணாவினுடைய அரசு, tap the rich and pat the poor என்று தன்னுடைய கொள்கையை வகுத்துக் கொள்வதாக அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்தில் சொன்னதைப் போல் அண்ணாவினுடைய வழியிலே உண்மையிலேயே இந்த ஆட்சியை நடத்த வேண்டுமென்று இந்த ஆட்சியை அமைத்திருக்கின்ற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்கள் அந்தக் கொள்கையை நிச்சயமாக அடிப்படையாகக் கொண்டு ஆட்சியை நடத்தவேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ள வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்த மட்டில் பொதுவாக இந்தத் துறையின் மூலம் நாட்டிலேயிருக்கின்ற எல்லா விவசாயிகளும் பயனடைய வேண்டுமென்ற நிலைமை இருந்தாலும், இங்கே தன்னுடைய கருத்தைச் சொல்லிய மாண்புமிகு உறுப்பினர் திரு அண்ணாமலை அவர்கள் சொன்னதைப் போல, நாட்டிலே இருக்கின்ற ஏழ்மை நிலையிலே வாடிக் கொண்டிருக்கும் விவசாயிகள் இநதத் துறையின் மூலம் நிச்சயமாக அதிகமான பலன்களை அடைய வேண்டுமே தவிர, வசதி படைத்தவர்கள், பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் இந்தத் துறையின் மூலம் வசதிகளையும், வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொள்வதை இந்த அரசாங்கம் ஓரளவுக்குத் தடுத்து நிறுத்தும் என்பதை இந்த நேரத்திலே நான் உறுப்பினர்களுக்கு மெத்தப் பணிவன்போடு அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இதற்கு முன்னாலே இருந்த அரசு இந்தத் துறையை எந்த அளவிற்குத் தவறான வழிகளிலே பயன்படுத்தியிருக்கிறது என்பதைத்தான் இங்கே பேசிய உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். குறிப்பாக இதற்கு முன்னாலே ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கூட இந்த அவையிலே இந்தத் தீர்மானத்தின் மீது தன்னுடைய கருத்துக்களைச் சொல்லும் பொழுது, இந்தத் துறை எவ்வளவு பெரிய கொடுமைகளை விவசாயிகளுக்கு இழைத்

திருக்கிறது என்பதையும், இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய
விவசாயிகள் இந்தத் துறையின்மூலம் முழுமையான பலனை அடைய
வில்லை என்பதையும் இங்கே கோடிட்டுக் காட்டியதிலிருந்து,
இதற்கு முன்பிருந்த அரசு எந்த அளவிற்கு இந்தத் துறையைப்
பயன்படுத்தியிருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக்கொண்
டார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்
பட்டிருக்கிறேன். ஆகவே, முன்னாலே நடந்த தவறுகள் இந்த
அரசிலே தொடராவண்ணம்........

திரு. மு. செல்வராஜ்: பேரவைத் தலைவரவர்களே,
மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே நான் பேசிய கருத்தைத்
திசை திருப்பிச் சொல்கிறார்கள். நான் சொல்லியது, நாடாளு
மன்றத் தேர்தலின் போது கடன் வசூலை நிறுத்தி வைத்து விட்
டார்கள் அதிகாரிகள். அதேபோன்று சட்ட மன்றத் தேர்தல்
நடந்த பொழுதும் நிறுத்தி வைத்து விட்டார்கள். அதற்குப்
பிறகு கடுமையாக வசூலித்திருக்கிறார்கள். தேர்தல் நடந்து
முடிந்த பிறகு என்று சொன்னேன். அதுமட்டுமல்ல, தொடர்ந்து
தான்கைந்தாண்டுக் காலம் வறட்சி ஏற்பட்டு விட்டதால் இப்படிப்
பட்ட கன்வர்ஷன் ஏற்பட வேண்டியிருக்கிறது. இது விவசாயி
களுக்குக் கடன் சுமையை மேலும் அதிகரிக்கும். இதற்குத் தீர்வு
காண வேண்டுமென்று சொன்னேனே தவிர தயவு செய்து திசை
திருப்பிப் பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே,
நானும் அதைத்தான் இங்கே சொன்னேன். இதற்கு முன்னாலே
ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் விவசாயிகளிடம்
எந்த அளவிற்கு வசூல் செய்தார்கள் என்பதையும் நம்முடைய
அருமை நண்பர் அவர்கள் நல்ல முறையில் உணர்ந்து வைத்திருக்கி
றார்கள். அந்த அடிப்படையில் இந்தத் துறையைப் பொறுத்த
வரையில் நாட்டிலுள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கு முழுமை
யாகப் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்திற்கு மாறாக இந்தத்
துறையின் மூலம் ஏழை எளியவர்களுக்குப் பயன்படுவது அரிதாகி
விட்டது என்று இங்கே பேசிய எல்லா நண்பர்களும் சொன்னார்கள்
இங்கே கடன் வசூலைப்பற்றிப் பேசிய எல்லா நண்பர்களுமே கடன்
களை எந்த அளவிற்கு மிகவும் கொடூரமான முறையில் வசூலிக்கி
றார்கள் என்பதைச் சொன்னார்கள் அரசாங்கமும் மிக உன்னிப்
பாக அக்கறையோடு இந்தக் குறையை நீக்குவதற்கு உண்டான
முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த மட்
டில் கடனை வசூலிக்க வேண்டும். ஆனால் வசூலிக்கின்ற முறையிலே
மாற்றம் காண வேண்டும் என்ற முறையிலே இந்த அரசாங்கம்
ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்பதை நான் மாமன்றத்திலே
இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் உண்
மையிலே மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே பல நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். சில
பகுதிகளிலே கடனைக் கட்டாயமாக வசூலிக்கிறார்கள். விவசாயி
களுக்குச் சொந்தமான பொருட்களைக்கூட ஜப்தி செய்கிறார்கள்



என்று இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். குறிப்பாக இங்கே
பேசிய நம்முடைய உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் ஒரு
கருத்தைச் சொல்லும் பொழுது இந்த நடவடிக்கையைப்
பொறுத்த மட்டிலும் ரியலிஸ்டிக் அப்ரோச்' இருக்க வேண்டு
மென்று சொன்னார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில்
ரியலிஸ்டிக் அப்ரோச்' இருக்க வேண்டுமென்று மட்டுமல்ல,
'ஹூமனிடேரியன் அப்ரோச்' மனிதாபிமான அடிப்படையில்
இந்தத் துறையை அணுக வேண்டுமென்ற நிலைமையிலே மிகுந்த
அக்கறை வைத்திருக்கிறது. ஆகவேதான், விவசாயிகளைப்
பொறுத்தமட்டிலே விவசாயிகளிடம் கடனைக் கேட்கின்ற முறை
யிலே மனிதாபிமான உணர்வு கேட்பவர்களுக்கு இருக்க
வேண்டும். அதைப்போல விவசாயப் பாக்கிகளை முறைப்படி தருவ
திலே மனிதாபிமானத்தோடு அவர்களிடம் வசூலிக்க வேண்டு
மென்று, அரசாங்கம் அணுக வேண்டுமென்று......

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, வாங்கிய கடனைத்
திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்வது எப்படி மனிதாபி
மான உணர்வாகும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நான் அதனாலே
தான் அந்தக் கருத்தைச் சொன்னேன். எல்லா விவசாயிகளும்
வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் இருப்பதற்குச் சில கார
ணங்களைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எல்லோராலும்
கொடுக்க முடியாது என்பதல்ல பொருள். கொடுக்கக் கூடியவர்
கள் கூட கொடுக்கக்கூடாது என்பதற்காகக் கடனைத் திருப்பிச்
செலுத்த தவணை, அவகாசம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: அப்படியானால் விவசாயிகளைத்
தரம் பிரித்து எந்த முறையில் நடவடிக்கை எடுப்பதாக இந்த
அரசு உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரொர். எட்மண்ட்: ஆகவேதான் நம்
முடைய முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலை
வரவர்களுக்கு இதைப் பற்றி உடனடியாக இந்த மன்றத்திலே
பதில் சொல்கின்ற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். கடனை வாங்கியவர்கள் திருப்பிக் கொடுக்கா
மல் இருப்பதற்குப் பல காரணங்களைச் சொல்கிறார்கள். உண்மையி
லேயே கொடுக்கக்கூடிய வசதி படைத்தவர்கள்கூட........

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, உண்மையிலேயே
கொடுக்க முடியாதவர்கள், வசதி படைத்தவர்கள் கொடுக்கத்
தவறினால் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை அவர்கள்மீது எடுக்கப்
படுமா அல்லது தவிர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: உண்மையிலேயே வசதி படைத்தவர்கள், விவசாயத்திற்காகக் கடனை வாங்கி அந்த விவசாயத்தின் மூலம் வருமானத்தைப் பெற்றவர்கள், வசதி படைத்தவர்கள் வேண்டுமென்று அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் நாள் கடத்தி வருவார்களேயானால் அவர்கள்மீது இந்த அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதில் எந்தவிதமான தயக்கமும் இல்லை.

(பிற்பகல் 1.20)

*திரு. ப. உ. சண்முகம்:—தலைவரவர்களே, கிரெடிட் சொஸைட்டியில் கடன் கொடுக்கும்போது ஓராண்டுக் காலக் கடனாகக் கொடுக்கிறோம். ஆனால், விவசாயி விளைச்சல் இல்லாத காரணத்தால், அவனால் கொடுக்க முடியவில்லையென்ற நிலைமை ஏற்படும்போது, 'அனாவாரி சர்ட்டிஃபிகேட்'-ஐ அவன் ஆர். டி. ஓ. விடத்தில் வாங்கிக் கொடுத்தால் ஷார்ட் டேர்ம் லோன், மீடியம் டேர்ம் லோனாக மாறுகிறது. ஓராண்டுக் காலம் என்பது மூன்றாண்டுக்காலத்தில் வசூலாகலாம் என்றிருக்கிறது.. இப்பொழுதிருக்கிற சிக்கலெல்லாம் ஒவ்வொரு விவசாயியும் ஆர். டி. ஓ. விடத்தில் சென்று அனாவாரி சர்டிபிகேட் வாங்குவது என்பது அவ்வளவு சாத்தியக் கூறாக அமையவில்லை. நாங்களும் ஆட்சியிலிருந்தபொழுது அதை யோசித்துப் பார்த்து, பொதுவாக, உத்தரவு போடலாம் என்ற கருத்து இருந்தது. எந்தெந்தப் பகுதி வறட்சிப் பகுதி என்று அரசாங்கம் அறிவிக்கிறதோ அந்தப் பகுதியிலெல்லாம் அனாவாரி சர்ட்டிஃபிகேட் வாங்கவேண்டிய அவசியமே இல்லை. அனாவ்ாரி சர்டிபிகேட் இல்லாமலே ஷார்ட் டேர்ம் லோனை மீடியம் டேர்ம் லோனாக மாற்றிவிடலாம் என்று போட்டு விட்டால், வசூலிக்க வேண்டிய நிலை ஏற்படும்போது, விவசாயி விளைச்சல் இருந்தால்தான் பணம் கொடுப்பான், இல்லாவிட்டால் கொடுக்கமாட்டான். ஆகவே, வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் இந்த வசூலை நிறுத்தி வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா? அப்படி வறட்சி என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில், கடன் கொடுக்க வசதி படைத்தவர்களிடம் கடன் வசூலிக்க தனிப்பட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :—மாமன்றத் தலைவர் அவர்களே, நமது முன்னாள் முதல்வர் அவர்கள் வசதியுள்ள விவசாயிகள் கடனைத் திருப்பித் தர மறுப்பார்களானால் அதைப் பெறுவதற்கு முயற்சிப்போம் என்று உணவுத் துறை அமைச்சர் தெரிவித்தபொழுது எப்படிப்பட்ட நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்வீர்கள் என்று உணவு அமைச்சரைப் பார்த்துத் திருப்பிக் கேட்டிருக்கிறார். 7 ஆண்டுக்கால முதலமைச்சர் அனுபவம் பெற்ற நமது இன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பவாதத்தைச் சந்திக்கும்போது எப்படிப்பட்ட நடவடிக்கையை அவர் மேற்கொள்ளக்கூடும் என்பதைப் பற்றி இந்தச் சபைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.





திரு. மு. கருணாநிதி :—உங்களுக்கே அது புரியும் என்று
கேட்பதால் சொல்கிறேன். கடந்த
இருந்தேன். என்னைக் திருப்பிக் கொடுக்காதவர்
காலத்தில் வசதியிருந்தும் கடனைத் எடுக்கப்பட்டன. வசதி
கள்மீது கடுமையான நடவடிக்கைகள் கட்டாமலிருந்தவர்கள்மீது
யில்லாமல் கடனைத் திருப்பிக் ஆங்காங்குள்ள மக்கள் பிரதி
நடவடிக்கை எடுக்கப்படுமானால், பெறப்பெற்றதும் உடனடி
நிதிகள் மூலமாக அந்த முறையீடுகள் அரசின் சார்பில்—
யாக அரசின் சார்பில்—கடந்தகால வசூலிப்பதிலே துன்புறுத்தல்
நடவடிக்கைகள் மேற்கொண்டு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.
வேண்டாம் என்று ஆணைகள் வேண்டுமென்றே கடனைத்
வசதி உள்ளவர்களாக இருந்து அவர்கள்மீது ஜப்தி போன்ற
திருப்பித் தர மறுப்பார்களானால் அந்த மாதிரி நட
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. என்று கூறக்
வடிக்கைகள் ஏழைகள் மீதும் எடுக்கப்பட்டது சொன்னேனேயல்லாமல்
கூடாது என்பதற்காகத்தான் இதைச் திருப்பித் தர மறுத்து
வேறல்ல. வசதியிருந்தும் கடனைத் வசூலிக்க அரசு தக்க
விடுவார்களானால் அவர்களிடமிருந்து அரசை நடத்தவே
நடவடிக்கைகள் எடுக்கத் தவறுமானால், கருவூலம் காலியாகி
முடியாது. அவ்வாறு நடந்தால் அரசுக் தருகின்ற கடனாக
விடும். கூட்டுறவுத் துறை மூலமாகத் மீண்டும் கடன் தர
இருந்தாலும் அதனை வசூலித்தால்தான் மாத்திரமல்ல,
முடியும். நான் முன்னாள் முதலமைச்சராக இன்னாள் நிதி
நிதியமைச்சராகவும் இருந்த காரணத்தினால், திருப்பிப்
யமைச்சருக்குக் கூறுகிறேன், கூட்டுறவுக் கடன்களைத் கொடுக்கிற உலக
பெருமலிருந்தால், டெல்லியும் சரி, கடன் ரொம்ப தாராளமாக
வங்கியும் சரி, ரிசர்வ் வங்கியும் சரி, தெரிவித்துக்கொள்
இருக்க முடியாது என்பதை நான்
றேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :—தலைவரவர்
களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சில கருத்துக்களைச்
சொல்லியிருக்கிறார்கள். நல்ல யோசனைகளைச் சொல்லியதற்
காக நான், இன்னாள் முதல்வர், நன்றி கூறக் கடமைப்பட்ட
வனாக இருந்தாலும் தெரியாததற்காக, கேட்டதற்காகப் புரிய
வைக்கிறேன் என்று சொன்ன நிலையில் நமது எதிர்க்கட்சித்
தலைவரவர்கள் இருப்பதை எண்ணி உண்மையிலேயே நான்
பெருமைப்படுகிறேன்.

அவர்கள் என்ன செய்தார்கள் என்பதையும் இங்கே குறிப்
பிட்டார்கள். ஒரு நிகழ்ச்சியை இங்கே நினைவுப்படுத்துவது
அவசியம் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக
அரசு இங்கே பணியாற்றிக்கொண்டிருந்தபொழுது இராமநாத
புரம் மாவட்டத்தில் பஞ்சம் வந்துவிட்டது என்ற நிலை
தோன்றிய சூழ்நிலையில் இங்கே அனைத்துக் கட்சி நண்பர்கள
உண்ணாநோன்பு ஏற்று சாகும் வரை உண்ணாநோன்பு ஏற்
போமென்றும் அதிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 9

சேர்ந்த நண்பர்களும், எங்கள் கட்சியைச் சேர்ந்த நண்பர்
களும், இன்னும் மற்ற நண்பர்களும் கலந்து பஞ்சப் பிர
தேசமாக அறிவிக்க வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்த
நேரத்தில், அவ்வளவு பயங்கரமான சூழ்நிலையிருந்த அந்தக்
காலத்தில் ஜப்தி நடந்தது, மாடுகளைப் பிடித்துக் கொண்டு
போனார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வெளி வந்ததும்
அதைப் பற்றி மேடையிலே பேசப்பட்டதையும் இங்கே
கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியவனாக இருக்கிறேன்.
இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற இவர்தான்
அப்பொழுது முதலமைச்சராக இருக்கக்கூடிய சூழ்நிலை
அந்தக் காலத்தில் இருந்தது என்பதை நான் சொல்லிக்கொள்
கிறேன்.

ஆட்சியிலே இருப்பவர்கள் வரி வாங்கித்தான் ஆட்சியை
நடத்த வேண்டுமென்றும் ஆனால் மனிதாபிமானத்துடன்
நடந்துகொள்ள வேண்டுமென்றும் சொன்ன நேரத்தில், கடன்
கொடுத்தவர்கள், கடன் வாங்கியவர்கள் இவர்களிலே கடன்
வாங்கக்கூடியவர்கள் எப்படி மனிதாபிமானத்துடன் நடப்பது
என்ற கேள்வியையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
இங்கே எழுப்பினார்கள். இந்த நேரத்தில் ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டில் வாழ்கின்ற ஒவ்
வொரு மனிதனும் மாற்றானும் வாழ வேண்டுமென்ற எண்
ணம் கொண்டவனாக இருப்பானானால் அந்த மனிதன் மனிதாபி
மானத்துடன் வாழ்கிறான் என்பதற்கு உகந்தவனாக இருக்கிறான்
என்பதைப் பணிவன்போடு தலைவர் அவர்களுக்குத் தெரி
வித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த மனிதாபிமானம் ஒவ்வொருவரிடத்திலும், கடன்
வாங்கியவரிடத்திலும் இருக்கவேண்டும். கடன் வாங்கிய
வர்கள் வசதி படைத்தவர்களாக இருக்கும்போது, அதைத்
திரும்பச் செலுத்த வேண்டிய நிலையில் இருப்பதுதான் மனி
தனாக வாழ்பவனுடைய கடமை என்பதை உணர்ந்து செயல்
பட வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயம் என்று நான்
கருதுகிறேன்.

அத்தோடு, இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன். எந்த அரசும் இப்படிப்பட்ட நேரத்தில்
நாங்கள் எப்படி இதை நிறைவேற்றுவோம் என்று சொல்வது
முறையாக இராது என்பது முதலமைச்சராக 7 ஆண்டுக்
காலம் அனுபவம் பெற்ற—எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்கு
தெரியும். சந்தர்ப்பம் ஏற்படும்போது, வாய்ப்பு ஏற்படும்
போது எப்படி அதை வசூலிப்போம், எப்படி அதை மக்
களுக்குப் பயன்படுத்துவோம் என்பதை நிச்சயமாக வெளி
யிடுவோம் என்பதை இங்கே நான் பணிவன்போடு கூறிக்
கொள்கிறேன்.



1977 ஜூலை 9]

*திரு. மு. கருணாநிதி : அரசாங்கக் கொள்கையை இப்படி இரகசியமாக வைத்துக் கொண்டிருக்க முடியாது. இன்னின்ன செய்யப்போகிறோம் என்று ஒரு அரசாங்கம் அறிவிப்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை வெளியீடு என்கிற தலைப்பிலே பொருந்தும்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள் நம்முடைய அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்பொழுது கடன் வாங்கக்கூடியவர்கள் திருப்பிக் கொடுப்பது மனிதாபிமானம் என்று சொன்னால் அதைப் போல் வசூலிப்பவர்கள் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். நான் அதற்குத் திருத்தத்தைத்தான் சொன்னேன். கடன் வாங்கியவர்கள் திருப்பி கொடுப்பதற்கு மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டியதில்லை. பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். அதைப் போல் கடன் வசூலிப்பவர்கள் மனிதாபிமானத்துடன் வசூலிக்கவேண்டும். கடன் வாங்கியவன், இரக்கத்திற்காக. ஐயோ பாவம், கடன் கொடுத்தானே, திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று இரக்கத்தின் காரணமாக அவன் திருப்பிக் கொடுப்பதல்ல, வாங்கிய கடன் பொறுப்போடு கொடுக்கப்பட வேண்டிய ஒன்று. எனவேதான் கடன் வாங்கியவன் பொறுப்போடு உணர்வினைக் காட்ட வேண்டும், கடன் கொடுத்தவன் மனிதாபிமானத்தோடு வாங்கவேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவும் நான் சொல்லவில்லை.

இராமநாதபுரம் பஞ்சப் பிரதேசம் என்று அறிவிப்பதிலே ஒன்றுமில்லை. ஆனால் அப்பகுதிக்கு என்னென்ன சலுகைகள் அளிக்க வேண்டுமோ அவைகள் அளிக்கப்படும் என்று அன்றைக்கிருந்த கழக ஆட்சி ஏராளமான வேலைகளை, வேலை வாய்ப்புகளை உருவாக்கி, பல ஏரிகளுக்கெல்லாம் கரைகளை அமைத்து, ஆர். எஸ். மங்கலம் ஏரி, பல்லாண்டுகாலமாக தூர் வாராத ஏரி, அந்தப் பணியை இராமநாதபுரம் மாவட்டத்திலே கழக அரசு எடுத்துக் கொண்டது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மீண்டும் அதைத் துவங்க நான் விரும்பாவிட்டாலும், நான் பேச எனக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரக்கம் வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், இரக்கம் வேண்டும். இரக்கமற்றவன் அரக்கன் என்று சொல்வது வழக்கம். ஆகவே, மனித உணர்வோடு மனிதன் வாழ வேண்டுமென்றால் பிறரை வாழ வைக்கின்ற பாங்கு, பிறர் வாழ வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்தாக வேண்டும். கடன் வாங்குவது அந்த மனிதனுடைய உழைப்

1977 ஜூலை 9] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பிலிருந்து அல்ல. யாருடைய உழைப்பிலிருந்து கடன் வாங்கு
கிறோம். கடன் வாங்கியவன் அந்தப் பணத்தைத் திருப்பிக்
கொடுக்காவிட்டால் எத்தனை பேருக்குப் பாதகத்தை உண்டாக்கும்
என்ற நல்லெண்ணம், நல்லுணர்வு ஏற்பட வேண்டும் என்பதைத்
தான் அபிமானம் என்று சொல்கிறோம். அபிமானம் என்பது
தமிழ் வார்த்தை அல்ல. என்றாலும் அபிமானம் என்பது பிறர்
மேல் கொள்கிற அக்கறை. அபிமானம் உள்ளவர்கள் கடன்
வாங்கிவர்கள் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்றால்
ஒவ்வொருவருக்கும் பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பு
எல்லோருக்கும் இருக்க வேண்டும். அதிகாரி போய் காரியத்
தைச் செயல்படுத்த வேண்டுமென்றிருந்தாலும் எப்பொழுதும்
பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டும். பொறுப்பற்ற
நிலைமையில் நடந்து கொள்பவர் யாராக இருந்தாலும் கடமை
யிலே தவறிவிட்டவர் ஆவார். ஆகவே என்னுடைய நினைப்
பெல்லாம், கருத்தெல்லாம் எந்தக் காரணத்தினாலும் கடன் வாங்
கியவர்கள் நாம் கடன் வாங்கிவிட்டோம், ஏமாற்றலாம் என்று
நினைக்கக் கூடாது. ஏமாற்றுகிறவர்கள் யாருமே இருக்கக் கூடாது.
நாம் கொடுக்க வேண்டிய கடன் அரசுக்கு. நாம் கடனைத்
திருப்பிக் கொடுக்காவிட்டால், அரசு மக்களுக்குச் செய்ய வேண்
டிய காரியம் நின்று விடும் என்று அந்த நல்லெண்ணத்தோடு,
அபிமானத்தோடு, மனிதாபிமானத்தோடு, அவர்கள் நடந்து
கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

[பிற்பகல் 1-30]

முன்னால் இருந்த அரசு என்னென்ன காரியங்கள் செய்தது
என்பதை பட்டியலிலே பார்த்திருக்கிறோம், இல்லை என்று சொல்ல
வில்லை. ஆனால் அவை முழுக்க முழுக்க மக்களுக்குப் போய்
சேர்ந்ததா என்பதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன என்று
சொல்லி, அரசு செய்ய இருக்கின்ற காரியங்கள் எல்லாம் இங்கே
வெளியே சொல்வது நியாயம் இல்லை என்று சொல்லிக்கொள்ளு
கிறேன். இப்போது பட்ஜெட் வருவதற்கு முன்னாலே சொன்
னால் ''பிரிவிலெஜ் மோஷன்'' வரும் என்று எனக்குத் தெரியும்.
எதை எதை எவ்வப்பொழுது சொல்ல வேண்டும், எப்போது சந்
தர்ப்பம் வாய்க்கிறதோ அப்போது சொல்லப்படும் என்பதை
நான் சொல்ல விரும்புகிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> கடனை வசூலிப்பது என்று சொல்வது
கூட பட்ஜெட்டிலே வரவேண்டிய விஷயமா?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்
களே, பட்ஜெட்டிலே வரவில்லை. சட்டமாக கொண்டு வரும்
போது இந்தப் பிரச்சினை உருவாகாதா? சட்டம் கொண்டு வரு
வதற்கு முன் வெளியே சொல்வது நியாயம் ஆகாது என்று நான்
கூறிக் கொள்ளுகிறேன்.



1977, ஜூலை 9]

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, எனவே கூட்டு
றவுக் கடனை எப்படி வசூலிப்பது என்பது பற்றி பட்ஜெட்டிலே
சட்டம் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்
களே, எதை எப்போது கொண்டு வரவேண்டுமென்று இந்த
அமைச்சரவைக்குத் தெரியும். அப்போது கொண்டு வருவோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தீர்மானம் நிறைவேறுகிற
வரையில் அவையின் அனுமதியுடன் நேரத்தை நீட்டிக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்:</u> பேரவைத் தலைவர்
அவர்களே, இங்கே குறுக்கிட்டுப் பேசிய முன்னாள் அமைச்சர்
எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர் மாண்புமிகு ப. உ. சண்
முகம் அவர்கள் இங்கே சில ஆலோசனைகளை சொன்னார்கள். ஒரு
சில விளக்கங்களைக் கேட்டார்கள். அவர்கள் கேட்ட விளக்
கத்திற்கு இந்த அரசாங்கத்தைப் பொறுத்த மட்டிலே இப்
போதைக்கு நாங்கள் எந்த விதமான பதிலையும் சொல்வதற்கு
இல்லை. காரணம் ஏற்கனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் அதைப்பற்றி இப்போது தெரிவித்திருக்கிறார்கள். என்றா
லும் அவர்கள் சொன்ன யோசனையை பரிசீலனைக்கு எடுத்துக்
கொள்வதா என்பதுபற்றி அரசாங்கம் நிச்சயமாக முடிவு செய்
யும்.

ஒன்றை மாத்திரம் இந்த மன்றத்தில் மிகத் தெளிவாக
சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கத்தைப்
பொறுத்த மட்டில் இந்தத் துறை முழுக்க முழுக்க, முழுமையாக
நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு பாரபட்சம்
இல்லாமல் கடன் வழங்கும் முயற்சியில் ஈடுபடும். அதிலே
வெற்றி காணும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன
தைப்போல இதற்கு முன்னாலே இருந்த அரசு செய்த பல்வேறு
தவறுகள் இந்தத் துறையை வகித்து வந்த ஒரு சிலர் இந்த
நாட்டு மக்கள் மேலே காட்டிய பாரபட்சங்கள், தேவையற்ற
சலுகைகள் அதன் மூலம் அவர்கள் செய்த ஊழல்கள் எல்லாம்
நாட்டு மக்களுக்கு நல்லமுறையிலே புரியும். இந்த அவையிலே
இருக்கிற எல்லா உறுப்பினர்களும் அதை நிச்சயமாக புரிந்து
வைத்திருக்கிறார்கள். இந்தத் துறையைப் பொறுத்த மட்டில்
இதற்கு முன்னாலே இந்தத் துறையைக் கையாண்ட அரசாங்
கம் நடத்திய முறைகேடான ஒரு சில நடவடிக்கைகள், இந்தத்
துறையிலே எவ்வளவு பெரிய ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன
என்பதை நாட்டு மக்கள் புரிந்திருப்பதைப் போல இந்த அவை
யிலே உள்ள எல்லா உறுப்பினர்களும் உண்மையிலேயே புரிந்து
வைத்திருக்கிறார்கள்.

[1977 ஜூலை 9

திரு. மு. கரு ூநிதி : அப்படி ஒரு ஊழலை நடத்தி இருக்கிறதாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சரை இந்தத் தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்ததே, அது எந்த வகையிலே ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான், பணி வன்போடு தெரிவித்துக் கொள்வேன், ஆதாரம் இல்லாமல் நாங்கள் ஆதரித்தோம் என்று சொல்வது அவருடைய தகுதிக்கு ஏற்ற கருத்தும் அல்ல, பொருளும் அல்ல. ஆகவே தயவுசெய்து ஆதாரம் இல்லாமல் இத்தனை ஆண்டுகாலம் அனுபவம் பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், யாரோ தங்களை விளம்பரப் படுத்திக் கொண்டதற்கு, நாங்கள் அனுமதி கொடுக்காத, ஆதரிக் காத எங்களைப் பற்றி குறை கூறுவது நியாயம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், யாரோ அவரைப் பயன்படுத்தி......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பயன்படுத்திக் கொண்டு என்ற வார்த்தையை நான் சொல்லவில்லை. விளம்பரப்படுத்திக் கொண்டார்கள் என்று தான் சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, விளம்பரப்படுத் திக் கொண்டார்கள். முதலமைச்சர் படத்தைப் போட்டு "எம். ஜி. ஆர்." அவர்களால் ஆதரிக்கப்படுகிற ஆதித்தனாருக்கு வாக்களியுங்கள் " என்று அவர் நின்ற சாத்தான்குளம் தொகுதி யில் பல விளம்பர சுவரொட்டிகள் போடப்பட்டிருந்தன. நோட் டீசுகளும் போடப்பட்டன.

நானும், முதலமைச்சர் அவர்களும், பழைய இனிய நண்பர் களாக இருந்த அந்தக் காலம் இப்போது நினைவுக்கு வருகிறது. அப்போது "எம். ஜி. ஆர். பீடி" என்று யாரோ ஒருவர் அவர் பெயரைப் பயன்படுத்தி இருந்தார். உடனே எம். ஜி. ஆர். அவர்கள் அதற்கு மறுப்பு அறிவிப்பு விட்டு என்னுடைய பெயரைப் பயன்படுத்தி விளம்பரங்கள் செய்யக்கூடாது என்று துணிச்சலாக அறிவித்தார். ஆகவே, முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் நின்ற தொகுதியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படத் தைப் போட்டு எம். ஜி. ஆர். ஆதரிக்கின்ற வேட்பாளர் ஆதித்த னாருக்கு வாக்களியுங்கள் என்று சுவரொட்டி போட்ட போது இப்படியொரு மறுப்பு வெளியிட்டிருப்பாரேயானால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.



1977 ஜூலை 9]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்ற நாடாளுமன்றத் தேர்தலிலேயும், இப்போது நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலிலும் எனக்கு எதிராகப் போட்டியிட்ட வேறு கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் யார் என்று நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை, தேவை இல்லை என்று கருதுகிறேன். என்னுடைய படத்தைப் போட்டு நான் ஆதரிக் கின்றவர்களுக்கு வாக்களியுங்கள் என்று விளம்பரம் செய்து கொண்டார்கள் பலர் என்பதை இங்கே எடுத்துக் கூறி, அதே நேரத்தில் அவர்களுக்கெல்லாம் நான் மறுப்பு விட்டுக் கொண் டிருந்தேனானால், என்னுடைய மற்ற வேலைகள் கெட்டுவிடும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அந்தத் தொகுதி வேட்பாளருக்கு என்னுடைய பெயரைப் பயன்படுத்தி விளம்பரம் செய்யக் கூடாது என்று நான் எழுதிய கடிதத்தின் நகல் என்னிடம் இருக்கிறது என்பதை இங்கே நான் தெளிவு படுத்திக் கொள்ளுகிறேன்.

நாடாளுமன்ற தேர்தலில் நாங்கள் யாரை ஆதரித்தோமோ அவர்கள் இந்தத் தேர்தலிலே, இந்தச் சின்னத்தை எம். ஜி. ஆர். ஆதரித்தார்கள், அதற்கு வாக்களியுங்கள் என்று கேட்டார்கள் என்பதையும், நடந்து முடிந்த இடைத் தேர்தல் பற்றி எல்லா உறுப்பினர்களுக்கும் நினைவிருக்கும் என்று கருதுகிறேன்—திண்டுக் கல் தேர்தல்—அதிலே என்னுடைய படத்தைப் போட்டு உதய சூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று விளம்பரம் செய்தார்கள் என்பதையும், அந்தப் பிரசுரம் என்னிடம் இருக்கிறது என்பதை யும் இங்கே தெரிவித்துக் கொண்டு, மக்களுக்கு எது பயன் படுமோ அந்த விவாதத்தில் இங்கே இறங்கினால் நல்லது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கரு ூநிதி: தலைவர் அவர்களே, இங்கே விவாதம் வந்ததற்குக் காரணம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்தான். சாதாரணமான தீர்மானம். 65 கோடி ரூபாயை 80 கோடியாக உயர்த்துவது பற்றிய தீர்மானம். அந்தத் தீர் மானத்தை மாண்புமிகு உறுப்பினர்களும், அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் தங்கள் கருத்துக்களை சொல்லும்போது மாண்பு மிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு பதில் அளித்திருப்பாரேயானால் இந்த விவாதம் முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல இந்த அளவுக்கு நீண்டு இருக்காது. அவர் கள்தான் தேவையில்லாமல் பல்வேறு விஷயங்களை இணைத்த காரணத்தால் விவாதம் நீண்டு விட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மீண்டும் குறுக்கிட வேண்டி இருக்கிறது. தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன். நமது உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எதனால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று [illegible] ஒரு சில சொல்ல வேண்டிய அளவுக்கு [illegible]

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 9

நிகழ்ச்சிகளை யாரையும் குறிப்பிடாமல் மக்கள் மத்தியிலே இப்படி ஏற்பட்டுவிட்ட காரணத்தால் இப்படி செய்யவேண்டி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். வேண்டுமென்றே குறை காண்கிற வகையில் அவமானத்தையும் தலைக் குனிவையும் ஏற்படுத்த அந்தக் கருத்தை சொன்னார் என்று யாரும் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 1.40)

<u>மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்:</u> பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதைப் போல் நாங்கள் இந்த மன்றத்தில் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டி பேசுவதற்கு விரும்பவில்லை. இந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்த அனுபவத்தின் காரணமாக, இந்த மன்றத்தின் வெளியே இருப்பவர்களைப் பற்றிக் கூட பேசக்கூடாது என்ற சட்டவரம்பை நான் நல்ல முறையில் அறிந்து புரிந்து வைத்து இருக்கிறேன். ஆனால் முன்னாலே தன்னோடு இருந்து, இப்போது தன்னைவிட்டுப் பிரிந்து இருக்கிற காரணத்தாலோ என்னவோ தெரியவில்லை, எதிர்க் கட்சித் தலைவருக்கு அவருடைய பெயரை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது என்று கருதுகிறேன்.

ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் ஊழல் செய்தவர்கள், தவறு செய்தவர்கள் கூட்டுறவுத் துறையை நாட்டு மக்களின் நலனுக்கு, அதிலும் குறிப்பாக ஏழை விவசாயிகளின் நலனுக்குப் பயன்படுத்தாமல், அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு, அவர்களுடைய இன, பந்த, உறவு நண்பர்களுக்கு அந்தத் துறையை தவறான முறையில் யார் பயன்படுத்தியிருந்தாலும், அவர் இந்த வரிசையில் இருந்தாலும் சரி, அந்த வரிசையில் இருந்தாலும் சரி, எந்த வரிசையில் இருந்தாலும் சரி, நிச்சயமாக அரசாங்கம் பாரபட்சம் இல்லாமல் சட்டப்படி குற்றம் சாட்டி, ஊழல் அற்ற நிர்வாகத்தை, ஊழல் அற்ற ஆட்சியை நிச்சயமாக நிலைநாட்டிக் காட்டவேண்டுமென்ற உறுதி எங்களுக்கு இருக்கிறது, இந்த அமைச்சரவைக்கு இருக்கிறது. இந்த அமைச்சரவையை வழி நடத்திச் செல்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணங்களை நிச்சயமாக இந்த அரசாங்கம் நிறைவேற்றிக் காட்டும் என்பதை இந்த நேரத்தில் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் எத்தகைய பெரிய மோசடிகள், எத்தகைய பெரிய தவறுகள், நிர்வாகக் கேடுகள் நடந்து இருக்கின்றன என்பதை இந்த அராசங்கத்தின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அப்படி கொண்டுவரப்படுவதன் காரணமாக நிச்சயமாக இந்த அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்கும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.



1977 ஜூலை 9] [திரு. க. உரொா. எட்மண்ட்]

கடுமையான நடவடிக்கை எடுப்பதன்மூலம் நிலைமைகள் மாறுபட்டு, அந்தத் துறையில் இருக்கும் சீர்கேடுகள் களையப்பட்டு, அந்தத் துறையின் முழு நோக்கம் நல்ல வகையில், நேர்மையான வகையில், நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள், விவசாயிகள் நிச்சயமாக. இந்தத் துறையால் உதவிபெறுவார்கள் என்பதை இந்த மன்றத்தில் இருக்கும் எல்லா உறுப்பினர்களுக்கும் அரசின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இதுபோல் பல்வேறு கருத்துக்கள், நல்ல கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியவற்றை இங்கே பேசிய நண்பர்கள், உறுப்பினர்கள் இந்த அவையில் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் நிச்சயமாக அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, எவை எவற்றில் சாத்தியக் கூறுகள் இருக்கிறதோ அவற்றை நிச்சயமாக அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து அவர்கள் சொல்கிற யோசனைகளை இந்தத் துறை மூலம் நல்ல முறையில் ஆராய்ந்து பார்த்து, அந்த யோசனைகள் ஏழை எளிய மக்களுக்கு விவசாய மக்களுக்கு பயன்படுகிற யோசனைகளாக இருக்குமானால் நிச்சயமாக இந்த அரசு அந்த ஆலோசனைகளை ஏற்று, அவற்றை செயல்படுத்தும் முறையில் நடவடிக்கையில் ஈடுபடும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சில நண்பர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு, உறுப்பினர்கள் தெரிவித்த பல் வேறு கருத்துக்களுக்கு நான் தனித்தனியாக இந்த நேரத்தில் பதில் சொல்வதற்கு நேரம் இல்லை. அதற்கான மானிய கோரிக்கை இந்த மன்றத்தில் கொண்டு வரப்படுகிற நேரத்தில், அவர்கள் அந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்புவார்களானால், அரசாங்கத்தின் சார்பில் அவர்களுக்கு பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டும், ஏகமனதாக நிறைவேற்றித் தருவதற்கு ஒத்துழைக்க எல்லாக் கட்சித் தலைவர்களும் முன்வரவேண்டுமென்று கேட்டு, அரசாங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்து, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று, பேரவைத் தலைவரவர்களே, உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவை முன்னுள்ள கேள்வி:- ''மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி ஆகியவற்றை பொறுத்த மட்டில், குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன், நடுத்தரக் கால மாற்று வசதிக் கடன் ஆகியவற்றின் உயரளவு வரையறையான ரூ. 61,150.00

இலட்சத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூட்டுறவுத் துறையில் 26-5-1977ம் நாளிட்ட 341-ம் எண் அரசாணையில் தமிழ் நாடு அரசு உத்தரவாதம் அளித்துள்ளதாலும்;

மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 8,040·00 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் என்று கருதுவதாலும்;

தமிழ் நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் உத்தரவாத வரையறையை ரூ. 8,040.00 இலட்சத்திற்கு உயர்த்த தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானித்துள்ளது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை மறுநாள் காலை (11—7—1977) 9-மணியளவில் (திங்கட்கிழமை) பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-44 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

இல்லை.



## இணைப்பு- I

(289-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### விளக்கக் குறிப்பு.

குறுகிய கால, நடுத்தரக் கால, நடுத்தரக்கால மாற்று வசதிக் கடன்களைப் பொறுத்த மட்டில் கீழ்க்காணும் உயரளவு உத்தரவாத வரையறைகளை தமிழ்நாடு அரசு, கூட்டுறவுத் துறையின் 26-5-1977 நாளிட்ட 341-ம் எண் அரசாணையில் நிர்ணயித்தது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| குறுகிய காலக் கடன் .. .. .. .. | 250·00 |
| நடுத்தரக் காலக் கடன் .. .. .. | 1,490·00 |
| நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன் வரையறைகள் | 4,375·00 |
| மொத்தம் .. | 6,115·00 |

மத்தியக் கூட்டுறவு வங்கி வாரியான புள்ளி விவரங்கள், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் தனித் தனியாகக் கொடுக்கப்பட்டுள. நடுத்தரக் கால மாற்று வசதிக் கடன்களின் உத்தரவாத வரையறை, இதுவரை ஏற்படாத அளவுக்கு வறட்சி நிலைமைகள் நிலவியதன் காரணமாக உயர்ந்துள்ளது. கீழ்க்காணும் மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில், மாநில அரசு நிர்ணயித்துள்ள வரையறைகளுக்குக் கூடுதலாக மாற்று வசதிக் கடன் வரையறைகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியும் ஒப்புதல் அளித்துள்ளது.

| மத்தியக் கூட்டுறவு வங்கியின் பெயர். | மாநில அரசு நிர்ணயித்துள்ள உத்தரவாத வரையறை. | ஒப்புதல் அளிக்கப் பட்ட மாற்று வசதிக் கடன் வரையறை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கும்பகோணம் .. .. .. | 325·00 | 911·46 |
| கோயம்புத்தூர் .. .. | 400·00 | 619·67 |
| மதுரை .. .. .. | 500·00 | 1,014·72 |
| இராமநாதபுரம் .. .. | 900·00 | 1,065·51 |

எனவே, இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்டும் கடன் அனுமதிப்பதற்கான வாய்ப்பைக் கருத்திற்கொண்டு, நடுத்தரக் கால மாற்று வசதிக் கடன்களைப் பொறுத்தமட்டில், மேற் கூறிய வங்கிகளுக்குக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு உத்தரவாத வரையறைகளை உயர்த்த வேண்டியுள்ளது:—

| மத்திய கூட்டுறவு வங்கியின் பெயர். | தற்போதுள்ள உத்தரவாத வரையறை. | நிர்ணயிக்கப் படவிருக்கும் உயர்த்தப் பட்ட உத்தரவாத வரையறை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கும்பகோணம் .. .. .. | 325·00 | 950·00 |
| கோயம்புத்தூர் .. .. | 400·00 | 700·00 |
| மதுரை .. .. .. | 500·00 | 1,200·00 |
| இராமநாதபுரம் .. .. | 900·00 | 1,200·00 |

மேற்கூறிய மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு உத்தரவாத வரையறைகளை உயர்த்தியதன் விளைவாக, மாற்று வசதிக் கடனின் மொத்த உத்தரவாத வரையறையை ரூ. 4,375 இலட்சத்திலிருந்து ரூ. 6,300 இலட்சத்திற்கு உயர்த்த வேண்டும். இவ்வாறு உயர்த்துவதால் மொத்த உத்தரவாத வரையறை ரூ. 6,115 இலட்சத்திலிருந்து ரூ. 8,040 இலட்சத்திற்கு உயரும். எனவே, உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 8,040 இலட்சத்திற்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

## இணைப்பு.

மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டிய இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கொடுக்கப் படும் குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன், நடுத் தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கான வரையறை.



| தொடர் எண், மத்திய வங்கியின் பெயர். | குறுகிய காலக் கடன். | நடுத்தரக் காலக் கடன். | நடுத்தரக் கால மாற்று வசதிகள். | மொத்தம் (பத்திகள் 2+3+4.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 காஞ்சிபுரம் | .. | 150.00 | 175.00 | 325.00 |
| 2 தென்னாற்காடு | .. | 150.00 | 350.00 | 500.00 |
| 3 வேலூர் .. | .. | 150.00 | 150.00 | 300.00 |
| 4 தஞ்சாவூர் | .. | 50.00 | 325.00 | 375.00 |
| 5 கும்பகோணம் | .. | 50.00 | 325.00 | 375.00 |
| 6 திருச்சிராப்பள்ளி | .. | 150.00 | 350.00 | 500.00 |
| 7 புதுக்கோட்டை | .. | 50.00 | 125.00 | 175.00 |
| 8 சேலம் .. | .. | 150.00 | 300.00 | 450.00 |
| 9 தர்மபுரி | 250.00 | 30.00 | 100.00 | 380.00 |
| 10 கோயம்புத்தூர் | .. | 150.00 | 400.00 | 550.00 |
| 11 மதுரை .. | .. | 150.00 | 500.00 | 650.00 |
| 12 இராமநாதபுரம் | .. | 100·00 | 900·00 | 1,000·00 |
| 13 திருநெல்வேலி | .. | 100·00 | 300·00 | 400·00 |
| 14 கன்னியாகுமரி | .. | 30·00 | 25·00 | 55·00 |
| 15 நீலகிரி .. | .. | 30·00 | 50·00 | 80·00 |
| மொத்தம்: | 250·00 | 1,490·00 | 4,375·00 | 6,115·00 |

## English version of Resolution

Whereas the Government of Tamil Nadu have guaranteed the re-payment in respect of Central Co-operative Banks and the Tamil Nadu State Co-operative Bank, the maximum limit of Short-Term Credit, Medium-Term Credit and Medium Term Conversion to the extent of Rs. 6,115·00 lakhs in G.O. Ms. No. 341, Co-operation, dated 26th May 1977;

And, whereas it is considered necessary to increase the maximum guarantee limit in respect of Central Co-operative Banks and the Tamil Nadu State Co-operative Bank to the extent of Rs. 8,040·00 lakhs;

The Tamil Nadu Legislative Assembly resolves to increase the limit of guarantee in respect of Central Co-operative Banks Band the Tamil Nadu State Co-operative Bank to the extent of Rs. 8,040·00 lakhs, as required under Section 73-D of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).

## EXPLANATORY NOTE

The following maximum limits of guarantee in respect of Short-Term, Medium Term and Medium Term Conversion loans were fixed by the Government of Tamil Nadu in their G.O. Ms. No.341, Co-operation, dated 26th May 1977.

| | (RUPEES IN LAKHS.) |
|---|---|
| Short-Term Advance .. .. .. | 250·00 |
| Medium-Term advance .. .. .. | 1,490·00 |
| Medium-Term Conversion limit .. | 4,375·00 |
| Total .. | 6,115·00 |

The Central Co-operative Bank-wise break up figures are furnished in the Statement annexed. The limit of guarantee for Medium-Term conversion loans has since been exceeded in view of the unprecedented drought conditions and the Reserve Bank of India has also sanctioned conversion limits in excess of the limits fixed by the State Government in respect of the following Central Co-operative banks :—

| *Name of the Central Co-operative Bank.* | *Guarantee limits fixed by the State Government.* | *Conversion limits Sanctioned.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (RUPEES IN LAKHS.) | |
| Kumbakonam .. .. .. .. | 325·00 | 911·46 |
| Coimbatore .. .. .. .. | 400·00 | 619·67 |
| Madurai .. .. .. .. | 500·00 | 1,014·72 |
| **Ramanathapuram** .. .. .. | 900·00 | 1,065·51 |



Hence, and also having regard to any possible further sanctions by the Reserve Bank of India the guarantee limits in respect of Medium Term conversion loans have to be enhanced for the above banks as mentioned below:—

| *Name of the Central Co-operative Bank.* | *Existing guarantee limits.* | *Enhanced guarantee limits to be fixed.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (RUPEES IN LAKHS.) | |
| Kumbakonam .. .. .. .. | 325·00 | 950·00 |
| Coimbatore .. .. .. .. | 400·00 | 700·00 |
| Madurai .. .. .. .. | 500·00 | 1,200·00 |
| Ramanathapuram .. .. .. | 900·00 | 1,200·00 |

Consequent on the increase in the guarantee limits for the above Central Co-operative Banks, the overall guarantee for conversion limits will have also to be enhanced from Rs. 4,375·00 lakhs to Rs. 6,300·00 lakhs. This increase, in turn, will result in the enhancement of the total of the guarantee limts from Rs. 6,115·00 lakhs to Rs. 8,040·00 lakhs. Therefore, it is proposed to paise the maximum guarantee limit to Rs. 8,040·00 lakhs.

### ANNEXURE

Limits for Short-Term, Medium-Term and Medium Term conversion advances from the Reserve Bank of India to be guaranteed by Government for Central Co-operative Banks.

| *Serial number and name of the Central Bank.* | *Short Term.* | *Medium Term.* | *Medium Term. conversion.* | *Total (columns 2+3+4.)* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (RUPEES IN LAKHS.) | | |
| 1 Kancheepuram .. | .. | 150·00 | 175·00 | 325·00 |
| 2 South Arcot .. .. | .. | 150·00 | 350·00 | 500·00 |
| 3 Vellore .. .. .. | .. | 150·00 | 150·00 | 300·00 |

| Serial number and name of the Central Bank. | Short Term. | Medium Term. | Medium Term conver-sion. | Total (columns 2+3+4.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (RUPEES IN LAKHS.) | |
| 4 Thanjavur .. .. | .. | 50·00 | 325·00 | 375·00 |
| 5 Kumbakonam .. | .. | 50·00 | 325·00 | 375·00 |
| 6 Tiruchirappalli .. | .. | 150·00 | 350·00 | 500·00 |
| 7 Pudukottai .. .. | .. | 50·00 | 125·00 | 175·00 |
| 8 Salem .. .. .. | .. | 150·00 | 300·00 | 450·00 |
| 9 Dharmapuri .. .. | 250·00 | 30·00 | 100·00 | 380·00 |
| 10 Coimbatore .. .. | .. | 150·00 | 400·00 | 550·00 |
| 11 Madurai .. .. | .. | 150·00 | 500·00 | 650·00 |
| 12 Ramanathapuram .. | .. | 100·00 | 900·00 | 1,000·00 |
| 13 Tirunelveli .. .. | .. | 100·00 | 300·00 | 400·00 |
| 14 Kanniyakumari .. | .. | 30·00 | 25·00 | 55·00 |
| 15 Nilgiris .. .. | .. | 30· 00 | 50·00 | 80·00 |
| Total .. | 250·00 | 1,490·00 | 4,375·00 | 6,115·00 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திங்கட்கிழமை, 1977 ஜூலை 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு ..பேரவைத் தலைவர்: பட்டியலில் வினாக்கள் இல்லாத காரணத்தினால் அடுத்த அலுவலுக்குப் போகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி எண் 82 இன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

### 1. அமைச்சர் அறிக்கை

**காவிரி நீர் பிரச்சினை குறித்து கர்நாடக மாநில முதலமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை.**

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நானும், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரனும் நேற்று பெங்களூர் சென்று, கர்நாடக முதலமைச்சருடன் காவிரி நீர் வழங்குவது பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தினோம். இப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் நடந்துள்ளன என்பதை பேரவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறுவைப்பயிர் சாகுப்படிக்காக, கூடுமானவரை எவ்வளவுக்கு சாத்தியமோ, அவ்வளவுக்கு தண்ணீர் கொடுத்துதவுவதாக. கர்நாடக முதலமைச்சர் கூறியுள்ளார். இதனையொட்டி, ஜூலை மாதம் 15-ஆம் தேதி முதல் மேட்டூர் அணையிலிருந்து சம்பந்தப் பட்ட எல்லா நஞ்சை நிலங்களுக்கும் தண்ணீர் திறந்து விடப்

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

படும். நெருக்கடியான இந்நேரத்தில், கர்நாடக அரசினர் தாராள மனப்பான்மையுடன் முன்வந்து ஒத்துழைப்பு நல்கியதற்கு தமிழக அரசின் சார்பிலும், உங்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பருவ நிலையை அனுசரித்து மேலும் தண்ணீர் விடுவது சம்பந்தமாக, கர்நாடக முதலமைச்சரை இம்மாத இறுதியில் மீண்டும் சந்தித்துப் பேச இருக்கின்றேன்.

கைமாருக, தமிழக அரசு, கர்நாடக அரசின் வேண்டுகோளை ஏற்று, அம்மாநிலத்திற்கு மின்சார உதவியளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. இது சம்பந்தமாக, விரைவில் கர்நாடக மின் துறை அமைச்சர் சென்னை வந்து பொதுப்பணித்துறை அமைச்சருடன் பேச்சு வார்த்தைகள் நடத்த இருக்கிறார்.

* திரு. எ. ஆர். மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி எண் 82-இன் கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையின் மீது விவாதம் எதுவும் கிடையாது. சிறு விளக்கம் வேண்டுமானால் கேளுங்கள்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: ஒரு சிறு விளக்கம் தான் பெற விரும்புகிறேன். நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களோடு பேசி காவிரியில் தண்ணீர் கொண்டுவருவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எவ்வளவு தண்ணீர், எப்படிக் கிடைக்கும் என்ற விவரம் அறிக்கையில் இருந்து தெரியவில்லை. சாதாரணமாக ஒரு நாள் ஒன்றுக்கு காவிரி டெல்டா பிரதேசத்திற்கு முழு அளவுக்கு விடுவோமானால் இரண்டேமுக்கால் டி.எம்.சி. தேவைப்படுகிறது. ஆனால் பத்திரிகையில் "தினமணியில்" ஒரு கோடி கன அடி தண்ணீர் அதாவது ஒரு டி.எம்.சி. விடப்படும் என்ற செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தி தவருகவும் இருக்கக்கூடும் என்று கருதுகிறேன். நமக்குப் போதிய அளவு தண்ணீர் கிடைக்குமா, எந்த அளவுக்கு பேச்சுவார்த்தையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: போதிய அளவிற்குத் தண்ணீர் கிடைக்கும் என்பதை பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நம் [illegible] முதலமைச்சர் அவர்கள் கர்நாடக மாநிலத்தில், அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரைச் சந்தித்து, தஞ்சை டெல்டா பகுதிக்குச் தேவையான தண்ணீருக்காக முறையிட்டு, ஓரளவு பெற்று வந்தமைக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், நாம் எப்போதுமே கர்நாடக மாநிலத்தின் தயவு தாட்சண்யத்திற்குக் காத்திராமல் காவிரி டெல்டா பகுதிக்கு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் பெறுவதற்கான உரிமைகள் பாதிக்கப்படாத அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்துள்ளோம். அந்த அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடந்து இருக்கு மென்று நான் நம்புகிறேன்.

கபினி நீர்த் தேக்கத்தில் தேக்கப்பட்டு வைத்திருக்கின்ற தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டுமென்பது நீண்டகாலமாக தமிழக அரசின் கோரிக்கையாக இருந்து வருகிறது. அரசுப் பொறுப்பில் எந்தக் கட்சி இருந்தாலும் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் காரியங்கள் நடைபெறவேண்டுமென்பதை, எல்லாக் கட்சித் தலைவர்களும், கட்சி மாச்சர்யங்களுக்கு இடமில்லாமல் கலந்து பேசி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படை முடிவுக்குச் சேதாரம் இல்லாமல் இந்த ஒப்பந்தம் பேசப்பட்டுள்ளதா, ஒப்பந்தம் ஏதாவது கையெழுத்தாகியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே. இதை விவாதத்திற்குரிய பிரச்சினையாக்கிக் கொள்ள முடியாவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க் கட்சித் தலைவர், விரும்பி, ஆர்வத்துடன் எதிர்பார்ப்பதற்கு சிலவற்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கையெழுத்துப்போட்டு ஒப்பந்தத்தை நாங்கள் நிறைவேற்றிக் கொள்ளாமல், எப்படி எப்படி நடந்துகொள்வது என்பதை கலந்து பேசுவதன் மூலமாக நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். அதே

நேரத்தில் கபினி ஆற்றில் இருந்து முதலிலும், பிறகு கே. ஆர். சாகரில் இருந்தும் தண்ணீர் கொடுக்க இசைந்துள்ளார்கள். நமக்குத் தண்ணீர் எவ்வளவு தேவையோ அந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிற . . . (குறுக்கீடு) புரியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: புரியவில்லை என்று சொல்லுங்கள். கையெழுத்திட்டோம் என்று சொல்ல வேண்டாம். இந்தப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக, ஒருவர் நலனில் ஒருவர் அக்கறை கொண்டு, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, அவரவர்களுக்குத் தேவையானவைகளை எந்த வகையில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற பொறுப்புணர்ச்சியோடு, பொறுப்பேற்றுச் செய்திருக்கிற முடிவு ஆகும்.

1974-ம் ஆண்டுக்கு முன்பே இங்கே பழைய ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளப் பேசி உடன்பாடு காண நாம் நடவடிக்கை எடுக்க முற்பட்டிருந்தால் இந்த நிலை வேறாக இருக்கும். 1974 ஆம் ஆண்டுக்குள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டு, பேசாமல் இருந்துவிட்டது என்ன காரணம் என்று இப்போது எனக்குத் தெரியாது. நான் கோப்புகளை எல்லாம் பார்க்கவில்லை. ஒன்றைமட்டும் சொல்லிக் கொள்வேன்.

கர்நாடக மாநிலத்தின் முதல் அமைச்சரும், பதவிப் பொறுப்பில் உள்ளவர்களும் தமிழகத்திற்கு உதவ வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்றுவார்கள் என்பதையும், நமக்குத் தேவையான தண்ணீரைக் கபினியில் இருந்தும், அதற்குப் பிறகு கே. ஆர். சாகரிலிருந்தும் விடுவிப்பார்கள் என்றும், தண்ணீர் நமக்குத் தேவையான அளவு கிடைக்கும் என்பதையும் திரு. மாரிமுத்து அவர்களுக்கும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கூறி, தயவுசெய்து இந்தப் பிரச் சினையை இதோடு முடித்துக்கொள்வது நல்லது என்று தெரிவித்து கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: முன்பு இருந்த அரசை முதலமைச்சர் குறை கூறுவதால் ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். 1968 ஆம் ஆண்டே, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்





கொள்வதுபற்றி, அண்ணா முதலமைச்சராக இருந்தபோதே பேச்சு
வார்த்தைகள் தொடங்கிவிட்டன. 1974 ஆம் ஆண்டுவரை பேச்சு
வார்த்தைகள் நடந்திருக்கின்றன. 1968 ஆம் ஆண்டு கர்நாடக
மாநில முதலமைச்சராக இருந்த திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள்
ஹேமாவதி அணைக்கட்டுத் திட்டத்தை தமிழக அரசின் ஒப்புதல்
இல்லாமல், மத்திய அரசு தடுத்தும் கூடக் கேளாமல் கட்டுவதற்குத்
தொடங்கினார்கள். அடுத்து வந்த முதல்வர் திரு. தேவராஜ்
அர்சும் அதே பணியை, தமிழக அரசு எடுத்துச் சொல்லியும் மத்திய
அரசு எடுத்துச் சொல்லியும் கேளாமல் நிறைவேற்றினார்கள். இது
பற்றி 1968 ஆம் ஆண்டிலேயே இருந்து, ஒருமுறை அல்ல, இரு
முறைகள் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. பேச்சு
வார்த்தைகள் சுமூகமாக நடந்து, விட்டுக்கொடுக்காத காரணத்
தினால் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தையொட்டி. தஞ்சை, திருச்சி
போன்ற மாவட்டங்களின் பழைய ஆயக்கட்டுகளுக்கு எவ்வித
பாதிப்பும் இல்லாத வகையில் ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்
கொள்வது என்ற முடிவை தமிழக அரசு மேற்கொண்டது. எந்தக்
கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அந்த முடிவில் இருந்து மாறக்
கூடாது என்பது அத்தனை கட்சித் தலைவர்களுடைய எண்ணமாக
இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாறக் கூடாது என்பது நல்ல நோக்கமாக இருந்தாலும், மாறுவதன் மூலம் நல்ல நிலை கிடைக்கிறது என்றால், சந்தர்ப்பத்திற்கும், வாய்ப்புக்கும் ஏற்ப, தமிழகத்திற்கு எது நன்மையைப் பயக்குமோ அதைத் தமிழக அரசு நிச்சயமாகச் செய்யும் என்று தெரிவித்துக் கொள்கி றேன்.

(முற்பகல் 9.10)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை புதுக் கல்லூரி மூடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சென்னையிலுள்ள புதுக் கல்லூரி குறித்து கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :—

திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள், "சென்னை, புதுக் கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்களிடம் நன்கொடை வசூலிப்பதை எதிர்த்து அக்கல்லூரியில் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள

கொந்தளிப்பு காரணமாக அக்கல்லூரி மூடப்பட்டுள்ளதைப்பற்றிய விஷயம் குறித்து விவாதிக்க" என்றும்,

திரு. துரை முருகன் அவர்கள், "சென்னையிலுள்ள புதுக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது குறித்த அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த நிகழ்வு குறித்து விவாதிக்க" என்றும்,

திரு. அப்துல் லத்தீப் அவர்கள்.
"the closure of New College, Madras-14, on account of acts of violence and agitation by the students of the College and the grave consequences arising therefrom"
என்றும் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். விளக்கம் மிகச் சுருக்கமாக இருக்கவேண்டும்.

* திரு. ஓ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக் கல்லூரியில் நடைபெறுகிற போராட்டம், புதுக் கல்லூரியில் மற்ற எந்தக் கல்லூரியையும் விட மிக அதிகமான அளவில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பது குறித்து. உதாரணமாக, விவேகானந்தா கல்லூரியில் ஒரு டேர்மக்கு (term) ரூ. 150 என்றும், லயோலாக் கல்லூரியில் ஒரு டேர்மக்கு (term) ரூ. 200 என்றும் வாங்கும் நேரத்தில் புதுக் கல்லூரியில் ரூ. 250 வசூல் செய்கிறார்கள். இது மிகவும் அதிகம். கூடுமான வரையில் தனியார் கல்லூரிகள் அத்தனையிலும் ஒரே மாதிரியான ஒரு வசூல் முறையை ஏற்படுத்தினால் மாணவர்களுக்கு அது உபயோகமாக இருக்கும்.

மேலும், 1975-ம் ஆண்டு அவர்கள் வெள்ளி விழா கொண்டாடு கிறோம் என்று சொல்லி அந்த ஆண்டு மாணவன் ஒருவனுக்கு ரூ. 50 வீதம் வசூல் செய்திருக்கிறார்கள். அந்த ஆண்டு வெள்ளி விழா நடத்தப்படவில்லை. மறுபடியும் 1976-ம் ஆண்டு மாணவர்கள் ஒவ்வொருவரிடத்தில் இருந்தும் ரூ. 50 வீதமும், 1977-ம் ஆண்டும் மாணவர்கள் ஒவ்வொருவரிடத்தில் இருந்தும் ரூ. 50 வீதம் வசூல் செய்திருக்கிறார்கள். ஆக மூன்று ஆண்டுகள் வசூல் செய்து விட்டு அந்த நிகழ்ச்சியை நடத்தாமல் மேலும் மேலும் ஆண்டு தோறும் வசூல் செய்வது எந்த விதத்திலும் நியாயமாகாது. ஆகவே அவர்கள் இந்த விழாவினை நடத்தாத நிலையில் மேலும் வசூல் செய்வதைத் தடுத்து வசூல் செய்த பணத்தை அவர் களுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பதுதான் நிர்வாக

அடுத்து, மாணவர்கள் யூனியனுக்கு மற்றக் கல்லூரிகளைப் போல் அல்லாது மிகக் குறுகிய அளவில் அவர்களுக்கு தேர்வு முறையை வைத்திருக்கிறார்கள். எந்தக் கல்லூரியிலும் மாணவர்கள் யாராயிருந்தாலும் காலேஜ் யூனியனுக்குப் போட்டி போடக் கூடிய நிலை இருக்க, இந்த ஒரு கல்லூரியில் மட்டும் பைனல் இயர் மாணவன்தான் இரண்டாம் ஆண்டு வகுப்பில் எல்லா சப்ஜக்ட் களிலும் பாஸ் செய்திருந்தால்தான் போட்டிக்கு நிற்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஆக, அவர்களது உரிமை கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் அது மாணவர்களின் உணர்ச்சியை பெரிதும் பாதிக்கிறது.

மேலும் மாணவர்களிடம் ஆண்டு ஒன்றுக்கு லாபரட்டரி பீஸ் என்று ரூ. 50 வசூல் செய்கிறார்கள். ஆனால் வருடக் கடைசியில் ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது குறை சொல்லி கட்டிய பணத்தை அவ்வளவையும் காலேஜுக்கு சேர்த்து விடுகிறார்கள்.

இந்தமாதிரி நிலையில், மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் நியாயமற்ற முறையில் நன்கொடைகள் வசூலிக்கக்கூடாது என்ற ஒரு பொது விதியிருந்தும் தவறுதலாக ஒரு கல்லூரியில் அப்படி வசூல் செய்வது மாணவர்கள் மத்தியில் ஒரு உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தி நாட்டு மக்களுக்குப் பாதகமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நேரத்தில் இது குறித்து விரிவாக விவாதிப்பதற்கு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையில் இருக்கிற மிகப் பெரிய கல்லூரிகளில் ஒன்று புதுக் கல்லூரி. ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிற ஒரு கல்லூரியாகும் புதுக் கல்லூரி. அந்தக் கல்லூரியை இப்போதுதான் திறந்திருக்கிறார்கள். அப்படித் திறந்தவுடன், அட்மிஷன் முடிந்தவுடன் காலவரம்பின்றி அது மூடப்பட்டிருக்கிறது என்ற செய்தி மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றாகும். காரணம், கல்லூரிகளில் இப்படி ஒரு ஸ்ட்ரைக் நடப்பதும், கல்லூரி இழுத்து மூடப்படுவதும் இந்த நாட்டிலுள்ள நல்லவர்களால் விரும்பத்தக்கதல்ல என்பது மட்டுமல்லாமல் மாணவர்கள் மத்தியில் இப்படிப்பட்ட ஒரு வேலைநிறுத்தம்

நடப்பது என்றால் அது சர வெடிக்கு தீ வைப்பது போலாகும். ஒரு கல்லூரியில் இப்படி ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டால் நாலைந்து நாட்கள் அல்லது ஒரு வாரம் கழித்து, இந்நிலை நீடிக்குமானால், வேறு கல்லூரியில் இருந்து இதற்கு 'ஸிம்பத்தட்டிக் ஸ்ட்ரைக்' (sympathetic strike) என்று அவர்கள் ஆரம்பிப்பார்கள். அதற்கடுத்து இன்னொரு கல்லூரியில் ஆரம்பிப்பார்கள். இப்படி கல்லூரிகள் மூடப்பட்டுக் கொண்டு போனால் கல்வியின் தரம் என்னவாகும் என்பது நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் எழுந்திருக்கிற ஒரு கவலையாகும்.

இன்று, 180 நாட்கள் 'வொர்க்கிங் டேஸ்' ஒரு ஆண்டுக்கு வேண்டும். ஏற்கனவே தேர்தல் வருகிறது என்று சொல்லி அதில் வேறு 20 நாட்கள் கடந்துதான் இப்போது கல்லூரிகள் திறக்கப் பட்டிருக்கின்றன. இருபது நாட்கள் அதில் போயிருக்கிறது. இந்த நிலையில்தான் கல்லூரி மூடப்பட்டிருப்பதுகுறித்து, அது பற்றி விவாதிக்க வேண்டும் என்று என்னுடைய தீர்மானம் கோருகிறது.

மாணவர்கள் பத்து கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தப் பத்துக் கோரிக்கைகளில் ஒன்று, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினரவர்கள் எடுத்துச் சொல்லியதைப்போல் அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்பதாகும். ஒரு மாணவரிடம் இவ்வளவுதான் வசூலிக்க வேண்டும் என்ற ஒரு நியதி இருந்தும்கூட தனியார் கல்லூரிகளில் அவர்கள் விருப்பம்போல், அவர்களது நிலைக்கு ஏற்றாற்போல் கல்லூரிகளில் இன்று கட்டணங்கள் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன் அப்படி வசூலிக்கிறார்கள், அரசாங்கம் அதற்கு ஒத்துழைக்கிறதா என்பதெல்லாம் கூட நாம் ஆராயவேண்டிய ஒன்றாக இருக்கிறது.

அடுத்து, பி.யு.ஸி. மாணவன் இந்த ஆண்டு முடித்த பிறகு அடுத்த ஆண்டு காம்பெட்டிடிவ் எக்ஸாமினேஷனுக்கு, சிலர் என்ஜினியரிங் காலேஜுக்குப் போவார்கள், சிலர் மெடிக்கலுக்குப் போவார்கள். அவர்கள் நிறைய படிக்கவேண்டியிருக்கிறது. ஹைஸ்கூலில் தமிழில் படித்து விட்டு கல்லூரியில் ஆங்கிலத்தில் படிக்க நேரிடும்போது அவர்கள் கஷ்டப்பட்டு படிக்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவே தேர்தல் காரணமாக இருபது



நாட்கள் கழித்து திறக்கப்பட்டன கல்லூரிகள். இப்போது மூடப் பட்டிருக்கிறது என்ற நிலை இருந்தால் அவர்கள் எப்படி போர்ஷன்களை முடிப்பது, எப்போது படிப்பது? ஆக, கல்லூரி மூடப்பட்டிருக்கும் நிலை என்பது வருத்தத்திற்குரியது.

நிர்வாகத்தின் சார்பில் சொல்லப்படுகிற பதிலைப் பார்த்தால், மாணவர்கள் வன்முறையில் இறங்கினார்கள் என்று சொல்கிறார்கள். நான் வாதப் பிரதிவாதத்தில் இறங்க விரும்பவில்லை. அதோடு, நிர்வாகிகளில் ஒருவர் வெளிநாட்டிற்குச் சென்றிருப்பதால் அவர் வந்த பிறகுதான், அவர்களிடம் எடுத்துச் சொல்லப்படும் என்றால் ஐயர் வருகிறவரையில் அமாவாசை காத்திருக்குமா என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள்—அதைபோல் அவர் வருகிற வரையில் இந்தக் கல்லூரி மூடப்பட்டுக் கிடக்கும் என்றால் மாணவர்களது நிலை என்னவாகும்? அவர்களது படிப்பு என்னவாகும்? படாத பாடுபட்டு பல பேர்களிடம் சிபார்சு வாங்கி கல்லூரியில் படித்துவரும் மாணவர்களின் நிலை, பெற்றோர்களின் நிலை என்னவாகும்? இதுபற்றி ஆராயவேண்டும், இது நாட்டு மக்களைப் பெரிதும் பாதித்துள்ள பிரச்னை. எனவே அவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்திற்கும் இதுபற்றி தகவல்கள் வந்திருக்கலாம். ஆக, எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, ஒரு 'கேர் டேக்கரைப்' (care taker) போட்டு உடனடியாக அந்தக் கல்லூரியைத் திறப்பதற்கு வழி செய்யவேண்டும். தனியார் கல்லூரிகளில் 'கேர் டேக்கரைப்' போட்டு திறப்பதற்கு வேண்டிய முன் மாதிரிகள் இருக்கின்றன. ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்புகூட தஞ்சை சரபோஜி கல்லூரி மூடப்பட்டு ஒரு 'கேர் டேக்கரைப்' போட்டு கல்லூரி திறக்கப்பட்டு பிறகு பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணலாம் என்று கூறினார்கள்.

கல்வி என்பது கண் போன்றது. பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து படிக்கிற மாணவர்கள் இருக்கிறார்கள். கல்லூரி மூடப் பட்டிருப்பதால் பொது மக்களும், மாணவர்களும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இது மாணவர்களைப் பாதிக்கக்கூடியதொரு பிரச்சினை. மாணவர்கள் சமுதாயத்தினிடையே ஒரு கொந்தளிப்

[திரு. துரை முருகன்] [1977 ஜூலை 11

யையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் பிரச்சினை இது. நிர்வாகத்தின் முறைகேட்டினை தடுத்து நிறுத்தவேண்டிய ஒரு பிரச்சினை இது. ஆகவே, இதுபற்றி பேசி விவாதித்து முடிவு எடுக்க—இதர அலுவல்களை விட அதி முக்கியமும் அவசரமும் வாய்ந்ததாகும் இது—இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்** : பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் அவசியமும் அவசரமுமான இந்தப் பிரச்சினை குறித்து அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதன் வாயிலாக இன்று சென்னைமாநகரில் கவலைக்குரிய ஒரு பிரச்னையாக உருவாகியிருக்கிற இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்பதற்காகத் தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற, ஒரு குற்றச்சாட்டை நிர்வாகத்தினர் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது மற்றவர்களோ மாணவர்கள்தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டை ஒட்டுமொத்தமாகச் சொன்னதாக எந்தப் பத்திரிகையிலும் தகவல் வரவில்லை. நேரடியாக நாங்கள் பேசிய போதும் அத்தகைய தகவல் இல்லை. எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி இந்த வன்முறையில் ஈடுபட்டவர்கள் மாணவர்கள் அல்லாத சிலர் கல்லூரியில் மாணவர்களோடு சேர்ந்து வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏதோ வேறு பல காரணங்களை வைத்துக்கொண்டு இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கிறார்கள் என்ற ஒரு தகவல்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களோடு மாணவர்களும் சேர்ந்துகொண்டார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கமுடியும்.

இதிலே அரசு கவனிக்கவேண்டியது என்னவென்றால் கல்வி ஆண்டு இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. கல்லூரி தொடங்கியவுடனே ஒரு கிளர்ச்சி என்றால் சாதாரணமாக எந்தக் கல்லூரியிலும் நடைபெறாத ஒரு நிகழ்ச்சியாகும் அது கல்லூரி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, மூன்று மாதங்கள் கடந்து விட்டது, ஆறு மாதங்கள் நடக்கிறது. அந்நேரத்தில் மாணவர்கள் கோரிக்கைகள் ஏதாவது வைத்து, தங்களுக்கு தேவையானவை



1977 ஜூலை 11] [திரு. எம். ஏ. லத்தீப்]

செய்யப்படவில்லை என்று சொல்லி கிளர்ச்சி நடைபெறுவது என்பதுதான் நாம் சாதாரணமாக பார்க்கக்கூடிய ஒன்றாக இருக்கமுடியும். நான் கூட பல கல்லூரிகளில் மாணவர் தலைவனாக இருந்திருக்கிறேன். இது கல்லூரி தொடங்கியவுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் அரசாங்கம் இதில் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்களை விட மற்றவர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற ஒரு உண்மையை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 9.20)

மற்றக் கல்லூரிகளைவிட இந்தக் கல்லூரியில் அதிகமாக கட்டணம் வசூலிக்கின்றார்கள் என்ற அபாண்டமான பழி சுமத்தப்படுகின்றது. அதே சமயத்தில் மற்றக் கல்லூரிகளில் இல்லாத வசதிகள் இங்கே செய்து கொடுக்கப்படுகின்றது; அதையும் கவனித்துப் பார்க்க வேண்டும். கேன்டீன் வேண்டுமென்று கேட்கிறார்கள்; வகுப்பறைகளில் நல்லவகையில் நாற்காலி, மேஜை போன்றவைகள் வேண்டுமென்று கேட்கிறார்கள், லாபரட்டரி வசதிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதுபோன்ற மற்றக் கல்லூரிகளில் இல்லாத பேசிக் அமினிடீஸ் வேண்டுமென்று கேட்கும்போது, அதற்கான ஸ்பெஷல் பீஸ் என்று வசூலிக்கின்றார்கள். இந்த ஸ்பெஷல் பீஸ் மூலம்தான் இதுபோன்ற பேசிக் அமினிடீஸ்களை மெயின்டனன்ஸ் செய்ய வேண்டியிருக்கிறது. க்விட் புரோ க்வோ (quid pro quo) இல்லாமல், சும்மா ஒட்டுமொத்தமாக நியூ காலேஜில்தான் அதிகமாக கட்டணம் வசூலிக்கின்றார்கள் என்று பரவலாகச் சொல்வார்களானால், அது பொதுமக்களிடத்திலேயும், மாணவர்களிடத்திலேயும் ஒரு தவறான எண்ணத்தைத் தூண்டிவிட்டு செயல்படக்கூடிய காரியமாகத்தான் இருக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டியூஷன் பீஸ் என்பது வேறு; ஸ்பெஷல் பீஸ் என்பது வேறு. இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. பேசிக் அமினிடீஸ் அதிகமாக எந்த அடிப்படையிலே செய்யப்படுகின்றதோ, அதற்குத் தகுந்தபடி ஸ்பெஷல் பீஸ் வாங்குகின்றார்கள். இப்படி வாங்கும் ஸ்பெஷல் பீஸ் கணக்கை ஒவ்வொரு ஆண்டும் டைரக்டர் ஆப்

காலேஜியேட் எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலிருந்து வந்து தணிக்கை செய்து விடுகிறார்கள். அதற்கு அவர்கள் ஒப்புதலும் தருகிறார்கள். டியூஷன் பீஸ் அதிகம் என்று சொன்னால், அப்படி அதிகமாக டியூஷன் பீஸ் வாங்கினால் அதற்குத் தகுந்தாற்போல் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படும் கிராண்டில் குறைத்து விடுகிறார்கள். ரூ. 110க்குப் பதில் ரூ. 140 என்று மாணவர்களிடம் வசூலித்து விடுவதால், எந்தவிதமான லாபமும் இல்லை. இப்படி மாணவர்களிடம் ரூ. 30 அதிகமாக வசூலித்து விட்டால், அரசும் அந்தப் பணத்தை தனது கிராண்டிலிருந்து கொடுத்து விடாது. எனவே, சென்னை நகரத்திலே நியூ காலேஜிலே மட்டும் மற்றக் கல்லூரிகளை விட அதிகமாகக் கட்டணம் வசூலித்து விடுகிறார்கள் என்று சொல்லிவிடமுடியாது என்ற கருத்தினை மட்டும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

மாணவர்கள் இப்போதுதான் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்; விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சேர்ந்தவுடனே மாணவர்கள் இப்படி வன்முறையில் இறங்கி விட்டார்கள் என்று சொல்வது சரியான வாதம் ஆகாது. மாணவர்களைவிட இதில் மற்றவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள், அதற்கான புகைப்படங்கள் எல்லாம்கூட இருக்கின்றன. எனவே இதிலே மற்றவர்களுடைய ஈடுபாடுதான் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அவர்கள்தான் வன்முறையில் இறங்கி, உள்ளே நின்ற காரையும், வெளியே இருந்த கார்களையும், லாபரட்டரி, போன்றவைகளை நொறுக்கி இருக்கிறார்கள். கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கின்ற இடங்களில் எல்லாம் கண்ணாடிகளை நொறுக்கியிருக்கிறார்கள். சில பேராசிரியர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அதையெல்லாம் பார்க்கும்போது மாணவர்கள் செய்த காரியமாகத் தெரியவில்லை. இதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. எடுத்துள்ள புகைப்படங்களைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். நானே கல்லூரிக்கு நேரில் சென்று பார்த்தேன். மற்றவர்களையும் சந்தித்துப் பேசினேன். இந்தக் கல்லூரிக்கு விரோதமாக வேறு சிலரும் இதிலே ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பது தெரிய வருகின்றது. மற்றக் கல்லூரிகளைக் காட்டிலும், இந்தக் கல்லூரிக்கு இழுக்கு ஏற்பட வேண்டுமென்பதற்காக

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக முடியுங்கள்.





***திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், கல்லூரியை விரைவாகத் திறந்து, தொடர்ந்து நடத்த வேண்டுமென்பதற்காகவே இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நீண்ட நாட்களுக்கு இந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்க வேண்டாமென்பதற்குத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம். இந்தக் கருத்துக்களில் ஏதேனும் தவறு இருக்குமானால், அரசாங்கத்தின் சார்பிலே அமைச்சர் அவர்கள் பதில் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் முஸ்லீம் லீக் தலைவராகவும், உறுப்பினராகவும் உள்ள லத்தீப் அவர்கள் சொல்லுகின்ற காரணங்களை எல்லாம் பார்க்கும்போது, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லை என்று சொல்வது போல் இருக்கின்றது. ஆனால் இங்குள்ள தீர்மானமோ ஒத்தி வைப்பு தேவை என்கின்ற அடிப்படையிலே அமைந்தது. இப்போது கல்லூரி உடனடியாகத் திறக்கப்படவேண்டுமென்பது தான் முக்கியக் கருத்து. அவர் பேசுவது எதிர்க் கட்சிகளின் சார்பில் தரப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று வேண்டுகோள் விடுப்பது போல் இருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இவ்வாறு திரித்து சொல்லவேண்டாம். கல்லூரியைத் திறக்க வேண்டுமென்பதற்காகவே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று சொல்கின்றபோது, இந்தக் கல்லூரியில் நடைபெற்ற சில சம்பவங்கள் குறித்து முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டியுள்ளது. அதற்கான காரணங்களை விளக்க வேண்டியுள்ளது. அந்தவகையிலேதான் நான் சொல்லிக்கொண்டு வந்தேன். திரு. அன்பழகன் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் என்ன? அதன்மீது என்ன பேசவேண்டுமென்று எனக்குச் சொல்ல வேண்டாம். அவர் பேராசிரியர். வகுப்பறையில் சொன்னால் கேட்டுக் கொள்கிறேன். அந்த வேலையை இங்கே செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. அன்பழகன்:** நான் அங்கத்தினர் என்கின்ற அடிப்படையிலேதான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டிய நேரத்தில் இவ்வாறு பேசலாமா என்று கேட்கிறேன். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கருத்துக்கள் மாறுபாடாக இருந்தால், எங்கே இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியம்

[திரு. க. அன்பழகன்] [1977 ஜூலை 11

இல்லை என்று கூற இடமாகிவிடுமோ என்ற சந்தேகத்திலேதான் கேட்டேன். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் நோக்கம் கல்லூரி திறக்கப்படவேண்டுமே தவிர, குறிப்பிடப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானம் விவாதத்துக்கு ஏற்கப்படா முன்னரே—முன்னர் பேசியது சரியா? அல்லவா? என்ற அடிப்படையிலே பேசுவதற்கு இடமில்லை என்ற எனது வேண்டுகோளை பாயிண்ட் ஆப் ஆர்டர் மூலம் தெரிவித்தேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்னை நியாயமான பிரச்னை தான். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே விளக்க முற்பட்டு, அதற்கு அரசு சரியான வழிவகைகளைக் கடைப்பிடித்து எப்படியாவது கல்லூரி திறக்கப் பட வேண்டுமென்பதற்காக முற்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அந்த நிலையில் கல்லூரி திறப்பதற்கு என்ன யோசனைகள் கூறயிருக்கிறார்கள் என்பதை இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது விரிவாகப் பேசுவதற்கு அவைத் தலைவர் அவர்கள் அவருக்கு அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் இந்தக் கல்லூரியைத் திறப்பதற்கான வழிவகைகளை மட்டும் சொல்ல வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது அனுமதி அளிக்கப்பட்டு, விவாதம் நடைபெறுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானம் அவசியம் தானா என்பது பற்றி பேச அனுமதி அளிக்கப்பட்டுதான் இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எப்படியாவது எனது கவனத்தை திசை திருப்ப வேண்டுமென்று பார்க்கின்றார்கள். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவைதானா என்று அறிவதற்காக இப்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



1977 ஜூலை 11]

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் திரு லத்தீப் அவர்கள் இந்த யோசனைகளைக் கூறலாம் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். தாங்கள் இந்த ஒத்தி வைப்புக்கு அத்தியாவசியமான காரணம் என்னவென்று கேட்கிறீர்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களோ இது பற்றி யோசனை சொல்லலாம் என்கிறார்கள். ஆகவே, தாங்கள் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்துத்தான் இந்த விவாதம் இங்கே நடைபெறுகின்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலேயே நான் இதற்கு அனுமதி அளித்திருக்கக் கூடாது. பேராசிரியர் அவர்களை முதலில் அனுமதித்ததே தவறு.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவா அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய எண்ணத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக் கிறார்களோ என்று ஐயப்படுகிறேன். மாணவர்கள் போராட்டத் தில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்கிற கருத்தை திரு. துரை முருகன் அவர்கள் சொன்னபோது, மற்றொரு கருத்தையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்படியே இந்தப் போராட் டத்தைவிட்டால், இவை மற்றக் கல்லூரிகளுக்கும் பரவி, அங்கே யெல்லாம் தீமையை விளைவிக்கலாம் என்ற அச்சத்தைத் தெரி வித்தார்கள். அந்த அச்சம் தேவையில்லை என்கின்ற அளவிற்குத் தான், நமது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது தனது கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது, அங்கே மாணவர்கள் என்ன செய்தார்கள், வேறு ஆட்கள் அங்கே வந்து என்னென்ன செய்தார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்ன யோசனையைக் கேட்பதில் தவறில்லை.

(திரு. துரை முருகன் பேச முற்பட்டார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் ஏற்கெனவே பேசி யாகி விட்டது. மன்னிக்க வேண்டும்; தயவு செய்து இருக்கை யில் அமருங்கள். பேசிவிட்ட பிறகு மீண்டும் பேச முற்பட வேண்டாம்; தயவுசெய்து உட்காருங்கள்.

[1977 ஜூலை 11

**மாண்புமிகு திரு கி. மனோகரன்:** அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையிலே ஈடுபட்டு, தங்களது கருத்துக்களைத் தெரிவித்த நேரத்திலே, ஒரே நேரத்திலே ஒரே கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர்கள் எழுந்து நின்று, கட்டுப்பாட்டைக் குலைக்க ஈடுபடுவதைத் தவிர்க்க எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதனை மேலும் விவாதத்திற்குரிய பொருளாக ஆக்க வேண்டாம்.

(முற்பகல் 9-30)

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்கள்).

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆப் ஆர்டர் ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டரை இப்போது எழுப்பவேண்டாம். பின்னால் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. இங்கே முடிவு செய்ய வேண்டிய விஷயத்தைப்பற்றி நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து உட்காருங்கள் உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை பின்னர் எழுப்பலாம். ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லிய பிறகு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** பாயின்ட் ஆப் ஆர்டர்....

(திரு. கே. சுப்பு அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து உட்காருங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக்கொண்டு வந்தவர் பேசி முடித்த, பின்னர் துணைத் தலைவர் அவர்கள் பேசினார்கள். இதன் பின், அமைச்சர் அவர்கள் தனது கருத்தைச்சொல்ல வேண்டும். அதன் பின்னர் தேவைப்பட்டால் பாயின்ட் [illegible]



1977 ஜூலை 11]

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆப் ஆர்டரை எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் எழுப்புவதற்கு ஒரு அங்கத்தினருக்கு உரிமை இருக்கிறது. நமது சபை விதி முறைகளில்

**A Member is entitled to raise a point of order at any time......**

என்று இருக்கிறது. இந்த அடிப்படையில் தான் நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு விதிமுறைகளைக் கற்றுக் கொடுத்ததற்கு நன்றி. பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு நாலைந்து பேர் சேர்ந்து எழுந்து நின்றுகொண்டு எழுப்பக்கூடாது. ஒருவருக்கு சந்தர்ப்பம் கொடுக்கும்போது, உடனே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று மற்றவர்களும் எழுந்து விட்டால் என்ன செய்வது?

(திரு. எம். ஏ. லத்தீப் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று கேட்டு எழுந்திருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** What does the hon. Member want to say?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. க. சுப்பு:** அமைச்சர் அவர்கள் மட்டும் இப்போது பேசலாமா?

**திரு. துரை முருகன்:** உறுப்பினர் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டரைப் பற்றி கேட்டுக்கொண்டிருக்கும்போது அமைச்சர் அவர்கள் பேசுவது சரியா?

(திரு. துரை முருகன் எழுந்து நின்று மெதுவாக பேசிக் கொண்டிருந்தார்.........

(திரு. க. சுப்பு அவர்களும் எழுந்து மெதுவாக பேசிக்கொண் டிருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிக்கொண்டே இருங்கள். நான் இங்கே உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு க. உரோ. எட்மண்ட்:** அங்கத்தினர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, அமைச்சர்கள் யாராவது பேசுவதற்கு எழுந்திருந்தால் அங்கத்தினர் உட்கார்ந்துவிடுவது இந்த அவையின் மரபு.

(திரு. க. சுப்பு அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்).

(ஆளும்கட்சி தரப்பிலிருந்தும் சில உறுப்பினர்கள் பேசுவதற்கு எழுந்தார்கள்).

**திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முசிறிபுத்தன். . . தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் முதலில் பேசட்டும். .

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, கனம் சுப்பு அவர்கள் பேசும்போது, எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்று இங்கே சொன்னார்கள். சட்டமன்ற 83-வது விதியின் கீழ் சொல்லப்பட்டிருப்பது போல், திரு. சுப்பு அவர்கள் சொன்னது போல், பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் எந்தெந்த நேரத்தில் எந்தெந்த சந்தர்ப்பங்களில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்பட வேண்டும் என்றும் இந்த 83-வது விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதியின் கீழ் 7-வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பது. . .

'**A Member shall not raise a point of order—**

**(*a*) to ask for information; or**

(*b*) to explain his position; or

(*c*) when a question on any motion is being put to the House . . . . . . . . .

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. க. சுப்பு:** அது தான் இங்கு இல்லையே. . .

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** அதைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன் ... ...





(திரு. க. சுப்பு அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்.)

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்களும் பேசுவதற்கு எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலாவது சுப்பு அவர்கள் பேசட்டும், பின்னர் நீங்கள் பேசுங்கள். . . சுப்பு அவர்கள் தமது கருத்தை சுருக்கமாகச் சொன்னால் நல்லது. .

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் மீண்டும் பேசுவதற்கு எழுந்தார்.)

(திரு. துரை முருகன் அவர்களும் பேசுவதற்கு எழுந்தார்.)

(ஆளும் கட்சி தரப்பிலிருந்து சிலர் பேசுவதற்கு எழுந்தார்.)

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** பாயின்ட் ஆப் ஆர்டரை எந்த உறுப்பினரும் எந்த நேரத்திலும் எழுப்பலாம் என்பது தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கின்ற இதே விதியில். .

(1) Any Member may at any time submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine himself to stating the point.

**(2) The Speaker shall decide all points of order which may arise, and his decision shall be final.........**

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே நடைபெறுவதை நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது. . .

**It becomes handy for the hon. Members to express anything as they want.**

ஆகையினால் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரை சொல்லிவிட்டு, பாயின்ட் ஆப் ஆர்டர் என்றில்லாமல் பாயின்ட் ஆப் டிஸ் ஆர்டர் என்ற முறையில் கிளப்பி, என்னென்ன கருத்துக்களை சொல்ல வேண்டுமோ அதை சொல்லிவிடுவது என்பது பாயின்ட் ஆப் ஆர்டர் தானா இல்லையா என்று சொல்லுகின்ற உரிமை பெற்றிருக்கிற நீங்கள் அந்த உரிமையை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு அவர்களை பேசுவதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் அழைத்தார்.)

திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அவரை கூப்பிட்டாகி விட்டது, அவர் முதலில் பேசட்டும் . . .

THIRU M. A. LATHEEF :

Regarding the admissibility of the point of order, I want to raise a point of order.

**திரு. க. சுப்பு :** கனம் அமைச்சர் அவர்களுக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. அவர் சொன்னதில் எனக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அவர் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். இங்குள்ள விதியில் 'கன்ஃபையன்' செய்து பேச வேண்டுமென்றிருக்கிறது. . . . . . மாண்புமிகு திரு. எட்மண்ட் சொல்வது போல் எந்த நேரத்திலும் எழுப்பக்கூடாது என்று சொல்லப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் ரெய்ஸ் பண்ணலாம். அது அங்கத்தினருடைய உரிமை. ஆனால் . . . .

**திரு. க. சுப்பு :** நானும் அதைத்தான் வலியுறுத்த விரும்புகிறேன். நான் இங்கே கூற விரும்புவது, விதி 42-ன் கீழ் அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னையைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரும்போது, தீர்மானம் அனுமதிக்கப் படுவதற்கு முன்பு ஒரு உரையை ஆற்றலாம், அதாவது எந்த விதத்தில் அது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி விளக்கலாம்.

இரண்டாவது என்னென்ன அடிப்படையில் இத்தீர்மானம் அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சொல்லி ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொண்டு வந்தால் போதுமா அல்லது. . . . . . (சட்டமன்ற செயலாளர் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்கள்) செயலாளர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேசி முடிக்கட்டும். ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசும்போது தீர்மானத்தை எடுத்துக்கொள்வதற்கு முன்பு எந்த முறையைக்





கையாள்வது என்பதை எடுத்துச்சொன்னால் உதவிகரமாக இருக்கும் என்பதைப்பற்றி கேட்டுக்கொள்வதற்குத்தான் இந்த பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பினேன்.

THIRU M. A. LATHEEF : The point of order is that during the discussion on an Adjournment Motion, it is not the convention in this House to allow any point of order on the points raised by the hon. Member who is just explaining the causes for getting the business of the House adjourned.

இதுதான் மரபு. இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் ஒருசில கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கும்போது, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ரெய்ஸ் செய்தால் அதை அனுமதிப் பதில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகின்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லி உட்கார்ந்த பின்னால் தான் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணலாம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் எப்போது வேண்டுமென்றாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். . . (எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆரவாரம்). . . இதைச் சொல்லுவதால் பாயின்ட் ஆப் ஆர்டரை ஏற்றுக்கொள்கிறேன் என்று அர்த்தமல்ல. யார் பேசிக் கொண்டிருந்தாலும் எந்த உறுப்பினரும் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். . .

THIRU M. A. LATHEEF :
Please find out whether that is possible...........

தலைவர் அவர்களே, கல்லூரி திறக்கவேண்டும் என்பதில் எல்லோரும் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. கல்லூரி திறக்கவேண்டும் என்பது தான் முக்கிய கோரிக்கை. இப்போதுள்ள கிளர்ச்சிகளைத் தவிர்க்க எல்லாத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து சுமுகமாகப் பேச வேண்டும் என்பது தான் என் அபிப்பிராயம். இதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். இதற்காக கிளர்ச்சியில் ஈடுபட வேண்டாம், காரியங்கள் மூலம் செயலாற்ற வேண்டும் என்று சொல்லுவதின் மூலமாக மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன் இருக்கவேண்டுமே தவிர வேறு விதத்தில் நம்முடைய பேச்சு அமைந்துவிடக் கூடாது என்பது தான் என் வேண்டுகோள். ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி சீக்கிரமாக—இங்கே சொல்லப்பட்ட கருத்துக்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஜூலை 11

களையும் விளக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு விரைவில் கல்லூரியைத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத் தந்தேனே ஒழிய வேறு எதையும் சொல்லக் கருதவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து . . .

(முற்பகல் 9.40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேச்சை முடித்து விட்டு மறுபடியும் பேச ஆரம்பிக்காதீர்கள். சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு உங்கள் பேச்சை முடித்து விடுங்கள். நீங்கள் அனுபவம் வாய்ந்த உறுப்பினர். உங்களுக்கு நான் சொல்லவேண்டிய அவசியமில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் கேட்டுக் கொள்ள விரும்புவது கல்லூரியில் தேர்தல்கள் நடைபெற வேண்டும். பொதுவாக பொது வாக்கெடுப்பின் மூலம் நடத்தப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நடத்தப்படும்போது புகுமுக வகுப்பு மாணவர்களையும் அதில் இணைத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி அனுமதித்தால் கல்லூரியின் கல்விச் சூழ்நிலை என்னவாகும்? அதையும் முடிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்லூரியைத் திறக்க அரசாங்கம் யாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இருக்கும் குறைகளைக் கேட்டறிந்து எவ்வளவு சீக்கிரம் திறக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கல்லூரியைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது 3 உறுப்பினர்கள்தான் இதுபற்றிக் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மற்ற மன்ற உறுப்பினர்களும் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் வகையில் அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புதுக்கல்லூரி மாணவர்கள் சில அது சம்பந்தமாக அவர்கள் கோருகின்ற கோரிக்கைகளைப் பிரச்சினைகளைக் கிளப்பி அங்கே வேலை நிறுத்தம் செய்கிறார்கள்.



1977 ஜூலை 11] [திரு. செ. அரங்கநாயகம்]

அந்த கோரிக்கைகளின் அடிப்படையில் நிர்வாகம் எடுத்திருக்கிற முயற்சிகளையும் நான் உங்கள் முன்னாலே தெரிவிக்க விரும்பு கிறேன்.

கட்டாய நன்கொடை வசூல் ஒழிக்கப்பட வேண்டுமென்று மாணவர்கள் கேட்டிருக்கிறார்கள். கட்டாய நன்கொடை வசூலிக்கப்படவில்லை என்று கல்லூரி முதல்வர் அவர்கள் கூறி யிருக்கிறார்கள்.

படிப்புக் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். கட்டணக் குறைப்பு நிர்வாகஸ்தர்களால் ஆலோசித்து முடிவு செய்யப்பட வேண்டும்; நிர்வாகக் குழுவின் செயலாளர் ஜப்பான் சென்றுள்ளார்; அவர் திரும்பியவுடன் குழுவினர் கூடி முடிவு எடுப்பார்கள். கல்லூரிக்குத் தரப்படுகிற மானியத் தொகை இப்போது அரசால் அதிகப்படுத்தப்பட்டிருக்கும் காரணத்தால் அது குறைக்கப்படுகிற வாய்ப்பு அதிகமான அளவு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி மாணவர்கள் அவைத் தேர்தல் நடைபெற வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். எல்லாக் கல்லூரிகளிலும் மாணவர்கள் தேர்தல்கள் சம்பந்தமாக அவசரகால நிலைமையில் போடப்பட்டிருந்த உத்தரவை மாற்றி 8—7—1977-ல் போடப் பட்ட உத்தரவின் மூலம் தேர்தல் நடைபெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாணவர்களுக்குக் கழிவறை வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். நிர்வாகத்தினர் 1½ லட்சம் ரூபாய் செலவு செய்து கழிவறைகள் கட்ட முடிவு செய்திருக் கிறார்கள். இன்னும் மூன்று மாதத்திற்குள் இவ்வேலை செய்து முடிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

டென்னிஸ் மைதானம், கூடைப்பந்து மைதானம் செப்பனிடப் பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும் என்று நிர்வாகத்தினர் சார்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1977 ஜூலை 11

கல்லூரியின் வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது 1977-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சிறப்பாக நடைபெறும் என்று கல்லூரி முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

சிற்றுண்டி விடுதி அமைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று மாணவர்கள் சார்பில் கேட்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் சிற்றுண்டி விடுதியில் பாத்திரங்களையும், கண்ணாடிப் பீங்கான் சாமான்களையும், மேஜை நாற்காலிகளையும் பெருமளவு சேதப்படுத்திவிட்ட காரணத்தால் எந்த ஒப்பந்தக்காரரும் சிற்றுண்டி விடுதி நடத்த முன்வரவில்லை என்றும், இருப்பினும் ஒருவரை சிற்றுண்டி நடத்திட அமர்த்தியுள்ளனர் என்றும், இன்னும் இரண்டு நாட்களில் சிற்றுண்டி விடுதி செயல்படத் துவங்கும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

மேற்கண்ட நிலைமைகளை விளக்கி மாணவர்களிடையே எடுத்துக் கூறி, அமைதியாக வகுப்புகளுக்குச் செல்லுமாறு கோரியபோது, வெளியாரின் தூண்டுதல் காரணமாக அவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் கல்லூரிச் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கும் வகையில் கல்வீசி சேதம் ஏற்படுத்தினார்கள். நிர்வாகஸ்தருடைய அம்பாசடர் காரைச் சேதப்படுத்தினார்கள். சேதத்தின் மதிப்பு 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை இருக்கும் என்று கல்லூரி முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் சூழ்நிலை மேலும் இதே போல் நீடிக்காமல் இருக்க, நிர்வாகத்தினருடன் தொடர்பு ஏற்படுத்தி, மாணவர்களையும் சந்தித்து விரைவிலே இந்தக் கல்லூரியைத் திறப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஜப்பான் சென்றிருந்த செயலாளர் இன்று அல்லது நாளை வந்து விடுவார்கள். ஆகவே, விரைவில் கல்லூரி திறக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூறினார்கள். அமாவாசைக்கு ஐயர் வந்து விடுவார் என்று கூறி சபையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு சபையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 3. அறிவிப்பு

**தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு மேலவையில் நிறைவேற்றப்பட்டது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1977-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/77), 9—7—1977-ஆம் நாளன்று சட்ட மன்ற மேலவையில் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் அளித்து அனுப்பப்பட்டுள்ளதென்று மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

## (4) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—(தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடருவதற்கு முன் திருத்தங்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். திருத்தத்தை முன்மொழிபவர்கள் அவையில் இருந்தால்தான் அந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ள முடியும். உறுப்பினர்கள் அவையில் இல்லையென்றால் திருத்தங்கள் தள்ளப்பட வேண்டும். ஆயினும் பல உறுப்பினர்கள் புதிதாக வந்திருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு இருக்கிற உறுப்பினர்கள் திருத்தத்தை முன்மொழியட்டும். இல்லாதவர்கள் நாளை வந்து முன்மொழியலாம்.

**திரு. மா. மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன் :—

(1) காவிரி வாய்க்கால் பகுதியில் உரிய காலத்தில் தண்ணீர் வராததைப் பற்றியும்,

(2) நீதித் துறை, ஆட்சித் துறை ஆகியவற்றில் தமிழ் மொழியே கையாளப்பட வேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றியும்,

குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன்—

(1) இடைத் தரகர்களை ஒழித்து, அரசாங்கமே உணவுப் பொருள்களை நேரிடையாகக் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய வேண்டும் என்பது பற்றியும்,

(2) சிறு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது, நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பது, ரசாயன உரங்களின் விலைகளை பாதியாகக் குறைப்பது ஆகியவைகளைப் பற்றியும்,

குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன்—

(1) மொழிப்போர் வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த அரசினர் உதவித் தொகை நிறுத்தப்பட்டது பற்றியும்,

(2) தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு காவிரியில் பாசன நீர் விடுவது பற்றியும்,

(3) நெருக்கடி நிலை காலத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற போலீஸ் மற்றும் சிறைத் துறையினர் கொடுங்கோன்மையைப் பற்றியும்,

குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.



**திரு. எஸ். கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன்—

(1) தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை பொய்த்து அதனால் பாதிக்கப்பட்டுள்ள 3 லட்சம் விவசாயத் தொழிலாளிகள் நிலை பற்றியும்,

(2) வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது குறித்து தெளிவாகக் குறிப்பிடாதது பற்றியும்,

(3) சேதுசமுத்திரத் திட்டம் பற்றியும்,

(4) சேலம் இரும்பாலைத் திட்டம் பற்றியும்,

குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

**திரு. தாழை மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன்—

(1) காவிரி நீர் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றியும்,

(2) விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டத்தை அமல்படுத்துவது பற்றியும்,

(3) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குறிப்பாக அவர்கள் முன்னேற்றத்திற்கு திட்டங்கள் அறிவிக்காதது பற்றியும்,

குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

**திரு. என். வரதராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன்—

(1) அவசர நிலைமை அமலில் இருந்த காலத்தில் பல அரசு ஊழியர்கள் கட்டாயமாக பதவியிலிருந்து வெளியே அனுப்பப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்க அரசு முயற்சி செய்வது பற்றியும்,

(2) தமிழ்நாட்டின் பாசனம் பாதிக்கப்படாமல் இருக்கவும், தஞ்சை மாவட்ட குறுவை விவசாயத்தைப் பாதுகாக்க தண்ணீர் கிடைக்கவும், 1924-ஆம் ஆண்டு காவிரி நீர்ப்பாசன ஒப்பந்

[திரு. என். வரதராஜன்] [1977 ஜூலை 11

தத்தைப் புதுப்பிக்கும் வரை அதையே அமுல் நடத்த வேண்டுமென கர்நாடக மற்றும் மத்திய அரசுகளுடன் பேச்சு நடத்த வேண்டியது பற்றியும்,

(3) தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கைகளைப் பரிசீலித்து, இன்றைய விலையேற்றம் போன்ற பிரச்சினைகளையும் கவனத்தில் கொண்டு, அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவது பற்றியும்,

(4) மூடிக்கிடக்கும் பஞ்சாலைகள் போன்ற தொழிற்சாலைகளைத் திறக்க அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும்,

(5) தீவிர நிலச் சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றி உழைக்கும் மக்களுக்கு நிலம் கிடைக்க அரசு உதவி செய்ய வேண்டியது பற்றியும்,

(6) திண்டுக்கல் நகர் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு பல லட்சம் செலவழித்தும், திண்டுக்கல் சித்தையன்கோட்டை காமராஜ் நீர்தேக்கத்திற்கு வரும் நீர்க்கால்களை சில தனிப்பட்டவர்கள் தடுத்து நிறுத்தி செயற்கையான குடிதண்ணீர் நெருக்கடியை உண்டாக்குவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டியது பற்றியும்,

(7) வேலையில்லாதவர்களுக்கு உதவும் முறையில் "இளைஞர் அணி" என்ற பெயரில் வேலை செய்து வந்தவர்கள் தற்சமயம் வேலையிழந்து இருப்பதை அரசு கவனத்தில் கொண்டு அடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டியது பற்றியும், குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஓ. சுப்பிரமணியம், திரு. எம். அம்பிகாபதி, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள், அதை அவர்களில் யாராவது ஒருவர் முன்மொழியலாம்.



1977 ஜூலை 11]

**திரு. மு. அம்பிகாபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) சீரான நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றி, நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றியும்,

(2) நூல் விலை உயர்வாலும், சுமார் 30 கோடி ரூபாய் பெறுமான கைத்தறி ஜவுளிகள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளதாலும் வேலையின்றித் தவிக்கும் கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும்,

(3) தமிழ்நாட்டின் சிறைக்கூடங்களில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது பற்றியும்,

(4) புதிய அரசின் தொழில் கொள்கை, மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பது ஆகியவற்றைப்பற்றியும்,

(5) தொழிலாளர்கள், விவசாயிகளின் இயக்கங்களில் போலீஸ் தலையிடுவது பற்றியும்,

(6) காவிரி நீர்ப் பங்கீட்டைப் பெறுவது பற்றியும்,

(7) அரசு ஊழியர்களின் மூன்றாவது சம்பளக் குழு பற்றியும், ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழிமுறைகள் பற்றியும்,

(8) மாணவர்களின் நலன்களைப் பேணுவதற்கு அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கல்விக் கொள்கை ஆகியவை பற்றியும்,

(9) வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் மொத்த வர்த்தகத்தை அரசு மேற்கொள்வது பற்றியும்,

(10) கிராமப்புற விவசாயிகளிடம் கூட்டுறவு, அரசுக் கடன்களைக் கெடுபிடியாக வசூலிப்பது நிறுத்தப்படும் என்பது பற்றியும்,

(11) குடியிருப்பு வசதி இல்லாத அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்கி வீடு கட்டிக் கொடுப்பது பற்றியும்,

குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

இத் திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. அ. ரகுமான் கான், திரு. ந. இராமச்சந்திரன், திரு. மு. அரங்கநாதன், திரு. கா. சுப்பிரவேலு, திரு. அ. செல்வராஜன், திரு. தாழை மு. கருணாநிதி, திரு. எஸ். கணேசன், திரு. க. சுப்பு ஆகியோர் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் முன்மொழியலாம்.

**திரு. கா. சுப்பிரவேலு:** தலைவர் அவர்களே, கீழ்க்காணும் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

"ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும்:—

(1) அரிசனங்கள், மீனவர்கள் போன்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பற்றியும்,

(2) தொழிலாளர்களுடைய பிரச்சினையில் அரசாங்கத்தினுடைய நிலையைப் பற்றியும்,

(3) நொடிந்த ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றை அரசே ஏற்று, அவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்தைப் பற்றியும்,

(4) அரசாங்கத்தின் தொழிற்கொள்கை பற்றியும்,

(5) நெருக்கடி கால நிலையின் போது நிகழ்த்தப்பட்ட அக்கிரமங்களையும், அநியாயங்களையும் பற்றியும்,

(6) சென்னை மாநகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துவது பற்றியும்,

(7) ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும், கூட்டுறவு மத்திய வங்கிகளும் கலைக்கப்பட்டுள்ள நிலையில், பொது மக்கள் அனைவருக்கும் தொல்லைகளும், பொது வேலைகள் அனைத்தும் தேங்கிக் கிடப்பது பற்றியும்,





(8) ஊழலையும், லஞ்சத்தையும் ஒழிப்பதற்கு மேற்கொள்ளவிருக்கும் திட்டத்தைப்பற்றியும், சட்டத்தைப் பற்றியும்,

(9) உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் இடையே இடைத் தரகர்களை ஒழிப்பது பற்றியும்,

(10) அரசு ஊழியர்களுக்கு மூன்றாவது சம்பளக் குழு அமைப்பது பற்றியும்,

(11) இளைஞர் அணியினருக்கு மீண்டும் வேலை கிடைக்க வழிவகை செய்வது பற்றியும்,

(12) நெருக்கடி நிலையின் போது வேலைக் குறைப்பு செய்து வீட்டிற்கு அனுப்பப்பட்ட பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகளுக்கும், அரசு அலுவலர்களுக்கும் மீண்டும் வேலை கொடுக்க வேண்டியது பற்றியும்,

(13) மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு முழுச் சம்பளத்துடன் மீண்டும் வேலை கொடுக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும்,

(14) வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிப்பதற்கு மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களைப் பற்றியும்,

(15) காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றியும்,

(16) மிசாவில் கைது செய்யப்பட்டிருந்த அனைவருக்கும் சட்டப்படி கொடுக்க வேண்டிய உதவித் தொகையைக் கொடுக்காததைப் பற்றியும்.

குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

இத் திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

***திரு. என். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னைப் பேச அழைத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையிலே நான் ஆற்ற

இருக்கிற என்னுடைய கன்னிப் பேச்சை ஆரம்பிக்கின்ற முறையிலே நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் தம்முடைய உரையிலே பல பொருள்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருக்கின்ற நேரத்திலே குறிப்பாக இந்த அரசு லஞ்சலாவண்யமற்ற அரசை உருவாக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்கிற நேரத்திலே மேற்போக்காகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர எந்த அடிப்படையிலே, எப்படி லஞ்சத்தைக் களைவார்கள் என்பதைச் சொல்லவில்லை. ஆனால் சொல்கிறார்கள், லஞ்சம் களையப்படும், ஊழல் ஒழிக்கப்படும் என்று. ஏற்கனவே இருந்த கழக அரசு பப்ளிக்மென் கிரிமினல் மிஸ்காண்டக்ட் ஆக்ட் கொண்டுவந்த நேரத்தில் அந்த ஆக்டைக் குறை சொல்லி வெளியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், அவர்கள் குறை சொன்ன சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரப் போகிறார்களா அல்லது வேறு சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறார்களா என்பதை இதிலே சொல்லவில்லை. ஏதோ போகிற போக்கில் புழுதியை வாரித் தூற்றலாம், யார் மீதாவது விழட்டும் என்ற முறையிலே தான் குறை சொன்னார்களே தவிர, சொல்கின்ற சொல் நடைமுறைப்படுத்தப்படுகிற நிலைமை இல்லை என்பது வருத்தத்தைத் தருகிறது.

இந்த நாட்டிலே லஞ்சத்தை, ஊழலை ஒழிப்பேன் என்று சொன்னவர்கள் எல்லாம் இன்றைக்கு நாட்டிலே என்ன ஆகியிருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். லஞ்சத்தை ஒழிப்பேன், ஊழலை ஒழிப்பேன் என்று சொன்னவர்கள் இந்த நாட்டிலே ஒழிந்து இருக்கிறார்கள் என்ற வரலாற்றை நாம் பார்க்கிறோம். காரணம் அப்படிச் சொன்னவர்கள் அதை ஒழிக்கத் தேவையான திட்டத்தைத் தெளிவாகப் போடவில்லை என்பது தான். முன்னாள் உள் துறை அமைச்சராக இருந்த நந்தா அவர்கள் லஞ்சத்தை ஒழிப்பேன் என்றார்கள், ஆனால் சரியான திட்டம் போடாத காரணத்தால் அந்த லஞ்சமே அவர்களை விழுங்கிவிட்டது. இப்படி எதை எடுத்தாலும் லஞ்சத்தை ஒழிப்பேன் என்று சொன்னவர்கள் இன்றைக்கு அதற்கான திட்டத்தை இந்த





அவையிலே சொல்லவில்லை. பொய்யான குற்றச்சாட்டுச் சொன்னவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற விதிமுறை இந்த ஆக்டிலே இருக்கிறது. அதை குறை சொன்னவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் திருத்தப்படுமா என்று அவர்கள் சொல்லவில்லை.

அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள், மனிதனை மனிதனுக வாழ்கிற சமுதாயத்தை உருவாக்குவோம், ஏழை பணக்காரர் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவோம் என்று பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கைகளை வகுத்துச் சென்றார்கள்.

முன்னால் இருந்த அரசு அரிசனங்கள் அர்ச்சகர்களாக வரக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்தது, ஆனால் அந்தச் சட்டத்தை சுப்ரீம் கோர்ட் நிராகரித்து விட்டது.

அதேபோல இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட வீரர்களின் குடும்பங்களுக்கு அரசு பென்ஷன் வழங்கியது, ஆனால் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினால் அதை நிறுத்திவிட்டார்கள்.

முன்னால் இருந்த அரசு பல புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்தது, அதை மீண்டும் செல்லுபடியாக்கத்தக்க விதத்தில் மாற்றம் செய்யப் போகிறார்களா என்பதையும் இந்த ஆளுநர் உரையிலே சொல்லவில்லை.

இன்றைக்கு ஆளுகிற கட்சியிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள், முதலமைச்சராக புரட்சித் தலைவர் வந்திருக்கிறார்கள், ஆனால் புரட்சி ஒன்றும் காணப்படவில்லை. பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய கொள்கைகளைப்பற்றியும் இதிலே சொல்லப்படவில்லை, மனிதனை மனிதனை வாழவைப்பது, ஏழை பணக்காரன் இல்லாத சமுதாயத்தை அமைப்பது என்ற கொள்கையை இதிலே காணோம்.

என்னுடைய கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது அரிசனங்கள் அர்ச்சகர்களாகக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்தார்கள், அதை மீண்டும் அமலாக்குவதற்கு அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்னைபற்றி இதிலே சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்கது. நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் மிக நம்பிக்கையாக மிக அழுத்தமாக இருந்த கொள்கை, கல்லூரிகளிலே உயர்நிலைப் பள்ளிகளிலே எந்த மொழியிலே சொல்லிக்

(முற்பகல் 10-00)

கொடுப்பது என்பதுபற்றிய கொள்கையாகும். இந்தப் பிரச்னையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் அழுத்தந்திருத்தமாக நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அந்த மொழிப் பிரச்னை பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற ஒரு அமைச்சரவர்கள் பேசுகின்ற நேரத்தில் தமிழையும், ஆங்கிலத்தையும் இரண்டு கண்களாக அண்ணா அவர்கள் மதித்தார்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வது என்னைப் பொறுத்த வரையில் பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். தமிழைப் பொறுத்தவரையில் அதற்கு முதலிடம் தருவோமே தவிர ஆங்கிலத்தை அவசியம் கருதி, தேவை கருதி ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் தமிழுக்குத்தான் முதலிடம் என்றுசொல்லி அவருடைய கருத்துக்கு என்னுடைய மறுப்புரையாக இதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியை ஆட்சிமொழியாக்கும் 17-வது பகுதியை இன்றைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்து அதை மாற்றுவதற்கு ஆளுநர் உரையில் முயற்சித்திருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படியெல்லாம் இதில் இல்லை. இந்தி ஆட்சிமொழியாக ஆகவேண்டும் அல்லது ஏக ஆட்சிமொழியாக இந்தி இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா என்று தெளிவாக ஆளுநர் உரையில் இல்லை, குறிப்பிடப்படவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் அவர்கள் பேசும் போக்கில் ஏதாவது சொல்லிவிட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அண்ணாயிசம் அண்ணாயிசம் என்று சொல்லி அண்ணா சொன்ன கொள்கை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். "'டெமாக்ரடிக் சோஷலிசம் நம்முடைய கொள்கை" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள் ஆனால் இன்றைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர்களோ





சோஷலிசம், கேப்பிடலிசம், கம்யூனிசம் என்று மூன்றையும் இணைத்து அதுதான் அண்ணாயிசம் என்று சொல்லி அண்ணா அவர்களை இழிவுபடுத்தும் நிலையிலே இருக்கிறது. அதையெல்லாம் பற்றி, சோஷலிசத்தைப்பற்றி இதில் சொல்லப்படவில்லை.

பஸ் தேசியமயம் செய்திருக்கிறோம். ஏறக்குறைய ஏழு போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கி தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அவற்றிற்கு அண்ணா, பெரியார், சேரன், சோழன், பாண்டியன், கட்டபொம்மன், பல்லவன் என்று வைத்திருக்கிறோம். அதை இன்றைய அரசு மீண்டும் செயல் படுத்துமா என்பதைப்பற்றி ஆளுநர் உரையில் சொல்லப்படவில்லை. ஏனென்றால் மக்களிடத்திலே ஒரு ஐயப்பாடு இருக்கிறது. பஸ் முதலாளிகள் ஆளுநரைப் பார்த்து பஸ் தேசிய மயக் கொள்கை வெற்றி பெறவில்லை, மீண்டும் தனியாரிடத்தில் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே மீண்டும் அவற்றைத் தனியாரிடத்தில் கொடுத்து விடுமா அல்லது தேசியமயக் கொள்கை நீடிக்கப்படுமா, மீதியிருக்கின்ற பஸ்களை அரசாங்கம் எடுக்குமா என்பதைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

இப்படிப் பல்வேறு விதமான பிரச்னைகளைப்பற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிடாமலிருப்பது மக்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நலிந்து போன மில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப்பற்றி இதில் குறிப்பிருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அதுவும் பெரிய ஏமாற்றத்தைத்தான் தருகின்றது. ஏனென்றால், மத்திய அரசிலே இருப்பவர்கள் இன்றையதினம் பொருளாதார நிலைமைகளின் காரணமாக நலிந்துபோன மில்களை எடுக்கவில்லை; நாங்கள் எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படியென்றால் தமிழக அரசும் அப்படி எடுத்துக்கொள்ள மறுக்குமா, இல்லாவிட்டால் என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை.

வேலைவாய்ப்புப் பிரச்னையைப் பொறுத்தவரையில் வேலை வாய்ப்பினை அதிகமாகத் தருவோம் என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பொதுவாகச் சொல்லும் நேரத்தில்

[திரு. என். இராமச்சந்திரன்] [1977 ஜூலை 11

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ மூன்று கோடி மக்கள் ஒருவேளைச் சோற்றுக்குக்கூட வழி இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ 20 இலட்சம் பட்டதாரி மாணவர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்க எப்படி வேலைவாய்ப்பு அளிக்கும் நிலைமை இருக்கிறது, 'ஜாப் ஓரியண்டட் சர்வீஸ்' என்று எப்படி உருவாக்குகிறார்கள் என்பதைப்பற்றி இதில் குறிப்பிடப்படவில்லை.

அடுத்து, 'பின் தங்கியோர் நலன்' என்று முன்பிருந்த அரசு அவர்களுக்குச் சிறப்புத் திட்டங்களை அறிவித்தார்கள். இந்த அரசாங்கம் அவர்களுக்கு எந்தவிதமான திட்டத்தையும் சொல்லவில்லை. பின் தங்கியோர் நலன் என்று சொல்லும்பொழுது, முற்போக்கான வகுப்பினரும் அதில் சேர்ந்து விடுகிறார்கள். ஆகவே, இரண்டு பிரிவுகளை வைத்து, பின் தங்கியோர் நலன், மிகவும் பின் தங்கியோர் நலன் என்று பிரிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அரிசனங்களுக்கு வீடு கொடுக்கும் சமுதாய நலத் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டம் மீண்டும் தொடர்ந்து நடைபெறப்போகிறதா அல்லது கைவிட்டு விட்டார்களா என்பது பற்றி ஆளுநர் உரையில் சொல்லப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று மிகவும் முக்கியமானது. நம்முடைய முதலமைச்சர்களுக்கு மிகவும் விருப்பமான ஒன்று. மதுவிலக்கைப் பொறுத்தவரையில் அவர்கள் நாட்டம் கொள்ளக் கூடியவர்கள். அவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்தபிறகு ஒரு புதிய அப்பாயின்ட்மென்டைப் போட்டிருக்கிறார்கள். அது என்னவென்றால் மதுவிலக்குக் கொள்கையில் நாட்டம் கொண்ட இந்த அரசு மது பர்மிட் வைத்திருப்பவரை அரசாங்க அதிகாரியாகப் போட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே மதுவிலக்குக் கொள்கையிலே பற்றும் உறுதியும் உடையது இந்த அரசு என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். மது பர்மிட் வைத்திருக்கின்றவர்கள், இன்றைக்கு,



1977 ஜூலை 11] [திரு. என். இராமச்சந்திரன்]

அதிகாரிகளாக, பெரிய உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். இதை எப்படி இந்த அரசாங்கம் அனுமதித்தது என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்கை அமல் படுத்த வேண்டும், அமல் படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதை அமல்படுத்துவதற்கான திட்டங்களைப் போட வேண்டும். கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற முறையில் அதைச் சாப்பிடுகின்றவர்களுக்குத் தண்டனை என்று சட்டங்கள் இருந்தாலும் அவற்றை நடைமுறைப் படுத்தும் நேரத்தில் சிக்கல்கள் இருந்தன. அவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படத் துறையை எடுத்துக்கொண்டால் அதில் நம்முடைய முதல்வரவர்கள் மிகுந்த பற்றுக் கொண்டவர்கள். அந்த அரங்குகளைத் தேசிய மயமாக்குகின்ற கொள்கையினை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா அல்லது அதை கைவிட்டிருக்கிறதா என்பதைப்பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை. இன்றைக்குத் திரைப்படங்களைத் தயாரிப்பவர்கள் பெங்களூருக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதனால் இங்கு திரைப்பட உற்பத்தி பாதிக்கப்படுவதால் தொழிலாளர்கள் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றும் நிலையிலே திரைப்படங்களை அதிகமாக இங்கிருக்கின்ற ஸ்டுடியோக்களிலேயே உருவாக்க முயற்சிப்பார்களா என்பதைப் பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்:** பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையை வரவேற்று நன்றி கூறுகின்ற வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியறிதலை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இன்று மலர்ந்திருக்கிறது" என்றும், நடைபெற்ற தேர்தலில், நம் மாநில மக்கள் தங்கள் முடிவைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்துள்ளார்கள்" என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்றைய நிலையிலே மாற்று முகாமிலே இருக்கும் நண்பர்களோ இந்த உண்மையை ஏற்க மறுத்து, தென்

ருட்டு மக்களை மந்த புத்திக்காரர்கள் என்றும், கோழைகள்
என்றும் வர்ணிக்கின்ற விசித்திரத் தன்மையைப் பார்க்கின்றோம்.
மக்கள் தீர்ப்பை ஏற்க மறுத்தவர்களின் நிலையை வரலாறு காட்டு
வதை இவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

1967 தேர்தலில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்
இருந்தபொழுது நாம் தேர்தலில் நின்று 138 இடங்களையும், 62
இலட்சம் வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றோம். அந்த
நேரத்திலே காங்கிரஸ் கட்சியினருக்குக் கிடைத்த இடங்கள் 48,
பெற்ற வாக்குகள் 63 இலட்சம். அப்போது காங்கிரஸ்காரர்கள்
பெற்ற வாக்குகளை வைத்து வெற்றி பெற்றவர்களையும், மக்களையும்
ஏளனம் செய்யும் வகையிலே பேசினார்கள். என்ன ஆயிற்று?
1971-ல் அவர்கள் நிலை என்ன? 48 இடங்கள் 15 ஆகக் குறைந்ததை
வரலாறு படம் பிடித்துக் காண்பித்து உள்ளது. அதை நாம்
உணர வேண்டும். நகர மக்கள் புத்திசாலிகள், கிராமத்து மக்கள்
ஏமாளிகள், மந்த புத்திக்காரர்கள் என்றும், அறிவு இல்லாதவர்கள்
என்றும், ஆகவே வாக்களிக்கிறார்கள் என்றும் பேசுகின்றார்கள்.

இந்த நேரத்தில் நாம் ஒன்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்,
67 தேர்தலிலும், 77 தேர்தலிலும் கிராமப்புறங்களிலே வாழ்கின்ற
பல்லாயிரக்கணக்கான மக்களின் வாக்குகள்தான் சர்க்காரை
அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும். முக்கியமாக சென்னை நகரத்தின் நிலை வேறாக இருந்த
போதிலும் நடந்து முடிந்த தேர்தலில், கோவை, மதுரை, திருச்சி,
சேலம், வேலூர், நெல்லை ஆகிய நகரங்களிலேயிருக்கும் மக்களின்
பெருவாரியான ஆதரவினால்தான் இன்றைய அரசு இங்கே அமைந்
திருக்கிறது என்பதை நாம் தெளிவாக உணரவேண்டும். தமிழ்
நாட்டில் வலுவான அரசாங்கம் அமையும் வாய்ப்பினை அளித்த
மக்களுக்கு நன்றி சொல்லும் வகையிலே அமைந்துள்ள ஆளுநர்
அவர்களின் உரையைப் பாராட்டி வரவேற்க கடமைப்பட்டிருக்
கிறேன். அச்சத்திற்கும், தாட்சண்யத்திற்கும் ஆட்படாமல் அர
சாங்கம் செவ்வனே செயல்படும் என்று கவர்னர் உரையிலே குறிப்
பிட்டிருப்பது வரவேற்கத் தகுந்த ஒன்றாகும். "உறவுக்குக் கை
கொடுத்து உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்ற வகையிலே
மத்திய அரசுக்கு கொள்கையிலே, கோட்பாட்டிலே அந்த
அடிப்படையிலே சமதர்ம அடிப்படையிலே மலர்ந்து வளர்
கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய
அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அண்ணா வழியில் நின்று

நாம் மத்திய அரசுக்கு ஒத்துழைப்பைத் தருகின்ற அதே நேரத்தில் நம்முடைய மொழி, கலாச்சார உணர்வுகளுக்கு நம்முடைய குரலை மத்திய அரசுக்கு ஒலிப்போம் என்று கூறியிருப்பது மிகவும் பாராட்டி வரவேற்கத் தகுந்த ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(முற்பகல் 10.10)

இன்றைய முதல்வராக இருக்கிற மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் அந்நியப் படையெடுப்பின்போது, மத்திய சர்க்காரின் கோரிக்கைக்கு இணங்கி, முதன்முதலாக ஓடோடிச் சென்று நிதியுதவி அளித்தது இங்கே பேரவையிலிருக்கிற உறுப்பினர்களுக்கு நினைவிலே இருக்கும் என்று நினைக்கிறேன். அவரை முதல்வராகக் கொண்டு விளங்குகின்ற இந்த அரசு நிச்சயமாக மத்திய அரசுக்கு உரிய காலத்திலே உறவுக்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுக்கும் என்று கூறியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன்மூலம் அண்டை மாநிலங்களோடு நல்ல உறவை வளர்த்து, பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் நமது மாநில நலன்கள் பேணிக் காக்கப் பட வேண்டுமென்பது இப்பேரவையிலிருக்கிறவர்களால் ஒரு மனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துவது இந்த அரசாங்கத்தின் உறுதியான கோட்பாடாக இருக்கும் என்றும் கூறியிருப்பது, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இலட்சியங்கள் ஈடேறுகின்ற வகையிலே அமைந்திருப்பதைப் பாராட்ட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். நேர்மை உள்ளம் கொண்ட யாராலும் இந்த உண்மையை நிச்சயமாக மறுக்க இயலாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழுக்காக, தமிழ்ச் சான்றோர்களுக்காக பெரும் அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதே மாதிரி தமிழோசை உலகமெல்லாம் பரவவும் வகை செய்தல் வேண்டுமென்ற நிலைமைக்கேற்ப, அண்டை மாநிலங்களில் உள்ளவர்களுக்குத் தமிழ்மொழி கற்பிக்கும் பயனுள்ள பணியினை அரசு மேற்கொள்ளும் என்று கூறியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] [1977 ஜூலை 1[illegible]

அடுத்துவரும் பயிரிடு காலத்தில், காவிரிப் பாசனப் பகுதி மக்களுக்கும் விவசாயப் பெருமக்களுக்கும் பாசன வசதி போதிய அளவிலும் உரிய காலத்திலும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுப்போம் என்று கவர்னர் அவர்கள் உரையிலே கூறியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதற்கான முயற்சியிலே முதற்கட்டமாக காவிரி நீர்ப் பிரச்னைக்காகத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பயணம் மேற்கொண்டு, கர்நாடக முதல்வர் அவர்களைச் சென்று பார்த்து, நல்ல முடிவுடன் திரும்பியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அத்தியாவசியப் பண்டங்களில் ஒன்றான சமையல் எண்ணெய் போன்ற வகைகளில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக கிராமங்களிலே இருக்கிற விவசாயப் பெருங்குடிமக்களுக்கு அளிக்கப்படும் நெல் விலை ஏறவில்லை. ஆனால், அவர்களுக்குத் தேவைப்படும் இரசாயன உரங்கள் கிடைக்காத காரணத்தாலே, அவற்றினுடைய விலைகளெல்லாம் ஏறிக் கொண்டேயிருக்கிற காரணத்தால், உணவுப் பண்டங்களை உற்பத்திச் செய்ய நிறையச் செலவாகிறது. ஆனால், அவர்களுக்கு அளிக்கப்படும் கொள்முதல் விலை அதிகமாக இல்லை. அவர்கள் மிகவும் நட்டம் அடைகிறார்கள் என்றால், பயிரிடு வதையே நம்பி வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல வருவாய், கொள் விலை அளிக்கப்படும் என்று கவர்னர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அவற்றை வாங்கி உபயோகிக்கின்ற மக்களுக்குக் குறைவான விலையில் கிடைக்கும் வகையிலே இடைத்தரகர்கள் நீக்கப்படுவார்கள் என்று கூறியிருப்பது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முன்னுதாரணமாக அமையும் என்று பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு கிராமத்தையும் எடுத்துக்கொண்டால், கிராம மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற எண்ணெய், சர்க்கரை ஆகியவற்றை வாங்கவேண்டுமென்றால் ஏராளமான விலை கொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக வேண்டியிருந்தது. அந்நிலை மாற, கலைஞர் அவர்களுடைய அரசு நியாய

விலைக் கடைகளைத் திறந்திருந்தபோதிலும் இன்னும் அதிக அளவிலே எண்ணிக்கையை உயர்த்தக்கூடிய அளவில், புதிய கடைகள் திறக்கப்படும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருப்பது, வரவேற்கத்தக்கது என்று கருதுகிறேன்.

வறுமை கிராமப்புறங்களில் இன்னுமிருக்கிறது என்ற நிலையில், வறுமையை ஒழிப்பதும், வேலையில்லா திண்டாட்டத்தை அகற்றுவதும் அரசாங்கத்தின் தலையாய குறிக்கோள்களாக இருக்கும் என்று கவர்னர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே வேலை வாய்ப்பிழந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். வேலை வாய்ப்பை இழந்து தவிக்கும் அந்த மக்களுக்கெல்லாம் திட்டங்கள் அமையும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் வறுமையில் வாடும் ஆயிரமாயிரம் மக்களுக்கு வறுமையைக் குறைக்கின்ற அளவிலே இந்த அரசாங்கம் செயல்படும் என்று கவர்னர் உரையிலே கூறியிருப்பதும் வரவேற்கத்தக்க விஷய மாகும் என்று கூறி அதற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழகம் மட்டுமல்ல, இந்திய நாடே கிராமங்கள் நிறைந்த நாடாகும். கிராமங்கள் ஏராளமாக இருக்கிற நம்முடைய நாட்டிலே, கிராமப்புற மக்களுடைய பொருளாதாரமும் வாழ்வும் லர வேண்டுமென்று காந்தி அவர்கள் கனவு கண்டார். விரும்பினார். அப்படியிருந்தபோதும், நாட்டிலே நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தும்கூட, அவைகள் ஓரளவு செயல் பட்டாலும்கூட, இன்றையதினம் அல்லல்படுகின்ற மக்களை நாம் காணமுடிகிறது. தேர்தல் நேரங்களிலே கிராம மக்களிடம் வாக்குகளைச் சேகரிக்கச் செல்லும்போது அவர்கள் நம்மிடம் பொன்னையும் பொருளையும் விரும்பிக் கேட்கவில்லை. ஆனால், குடிப்பதற்குத் தண்ணீரும், உண்ண உணவும் இருக்க இடமும் கேட்கிறார்கள். உண்ணுவதற்கு தண்ணீரையும், உணவையும் உடுப்பதற்கு உடையையும், அவர்கள் கேட்காத நேரத்திலும்கூ முக்கியமாக, குடியிருக்க வசதி செய்து தரவேண்டுமென்ற படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது வ தக்கது. அந்த வாழ்க்கை வசதிகளை அவர்களுக்கு வேண்டும்.

குடிநீர், கல்வி, எழுத்தறிவு, சுகாதாரம் ஆகியவை வழங் வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சுகாதாரம் சொல்கின்ற நேரத்திலே, பெருவாரியான காலனி பகுதி

விடத்திலே தொழு நோய் வேகமாகப் பரவுவதை நாம் கண் கூடாக காணமுடிகிறது. அவர்கள் சுகாதாரமற்ற முறையிலே, மிக நெருக்கமாக வாழ்கின்ற காரணத்தால், அந்தத் தொழு நோய் மற்றவர்களுக்குப் பரவ ஏதுவாகிறது. எழுத்தறிவை அவர்களுக்கு அளித்தால் போதாது. சுகாதாரத்தையும் அளிக்க வேண்டுமென்ற வகையில் சிரத்தையெடுத்து அவர்களுக்கு வீட்டு மனைகள் அதிக அளவில் அளித்து, அத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்திலே, வீட்டு வசதிகளையும், பல்வேறு வகையான சாலைப் போக்குவரத்து வசதிகளையும், அளிக்க வேண்டு மென்ற அடிப்படையிலே அவர்கள் ஆற்றிய உரையை வரவேற் கிறேன். அவ்வாறு செய்வது அவர்களது வாழ்க்கை நலம் பெற ஏதுவாகும் என்ற அடிப்படையிலே உறுதி கூறியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

கிராமப்புற குடிநீர் தேவையைப் பற்றி நான் முன்னமே குறிப்பிட்டதுபோல், தென்னகம் முழுவதும் இது ஒரு பிரச்னை யாக இருக்கிறது. உப்பு நீர் கிடைக்கின்ற நேரத்தில், குடிப்பதற்குக் கூட நல்ல தண்ணீரில்லாத நிலைமையை தமிழகம் முழுவதும் காண முடிகிறது. என்னுடைய தொகுதிக்கு அருகிலே செய்யாறும் பாலாறும் இருந்தாலும் கூட, குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுவதை காணும்போது, வேதனையாக இருக்கிறது. ஆகவே, குடிநீர் அளிக்கும் பிரச்னையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நிச்சயமாக, முதல் கட்டமாக நடவடிக்கை எடுக்கும் என்று கூறி இருப்பதற்காக கவர்னர் அவர் களுக்கு நன்றி சொல்ல, பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

கிராமப்புறத்திலே இருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பு தருவோம் என்று கூறியிருப்பது, பாராட்டுக்குரியதாகும். ...ன்னாட்டிலே நெசவாளர்கள் படுகின்ற துன்பம் கொஞ்ச ...சமல்ல. அண்ணா அவர்கள் காலத்திலேயிருந்து மற்றவர்கள் ...திலும் இது தீர்க்கப்பட வேண்டுமென்று விரும்பினாலும் கட...இன்னும் சுமுகமாகத் தீர்க்கப்படவில்லை. அவர்களை ...வைத்து, பழங்குடி மக்களுக்கும் வசதி செய்து ...படும் என்று கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய ...யிலே அதிகமாக நெசவாளர்கள் வாழ்கின்ற காரணத் ...ஒரு நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையிலே ஆளுநர் உரை யை வரவேற்று நன்றி கூறுகிறேன்.





...ட்டுமொத்தமாக, இங்கே கவர்னர் உரையிலே இருக்கின்ற திட்டங்கள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற கருத்திலே இதனை எல்லாரும் நிச்சயமாக விரும்புவார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்த மன்றத்திலே, கவர்னர் அவர்கள் கடைசியாக கூறி யிருப்பது, 'இந்த மாமன்றம் தனக்கேயுரிய கண்ணியம், மரியாதை, தாம் போன்ற பாரம்பரியங்களைப் பாதுகாக்கத்தக்க வகையில், எதிர்க்கட்சியினர் தங்கள் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பைத் தந்தும், ஆளுங் கட்சியினர் ஒருதலைப் பட்சமற்ற அணுகுமுறை களை மேற்கொண்டும், அவையின் நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், என்பதாகும். அது வரவேற்கத்தக்கதாகும். ஆகவே, சுமுகமான உறவைப் பயன்படுத்தி, செம்மைப்படுத்தி, தமிழக சட்டப் பேரவையிலே நல்ல பல திட்டங்கள் நிறைவேற, செம்மையாக அவை நடைபெற வேண்டுமென்று கூறி, கவர்னர் உரையை வரவேற்று நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10.20)

* **திரு. ஓ. சுப்பிரமணியன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ஆளுநர் உரையில் பின்தங்கிய பகுதிகளுக்குத் தனிக் கவனம் அளிக்கப்படும் என்று கோடிட்டு காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற நிரந்தரமான பின்தங்கிய மாவட்டங்களைப் பற்றி ஏதும் குறிப் பிட்டு சொல்லாததற்காக நான் வருத்தப்படுகிறேன். கடந்த மூன்று ஆண்டுகாலமாக, காலமழை பொய்த்ததின் காரணமாக அங்கு பஞ்சம் தாண்டவமாடியது அரசுக்கும் தெரியும், பொது மக்களுக்கும் தெரியும். அந்தமாதிரி மாவட்டங்களில் நிரந்தரமான பாசன வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். கேரளாவில் மேற்கு நோக்கி செல்லுகின்ற—வீணாக செல்லுகின்ற நீரைத் தேக்கி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பஞ்ச நிலையில் உள்ள மாவட்டங்களுக்கு திருப்பிக் கொடுத்தால் அது பயன் அளிக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

[திரு. ஓ. சுப்பிரமணியன்] [1977 ஜூலை 11

ஆகவே, நமது முதலமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தால் கட்டாயமாக அவர் விசேஷ கவனம் செலுத்துவார்கள் என்று கருதுகிறேன். குறிப்பாக, கோளத்தோடு நல்ல நட்புறவு அவருக்கு இருக்கிறது என்ற காரணத்தினால் நிச்சயமாக அவர் செய்வார் என்று நம்புகிறேன். அதைச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சென்ற வருடம் கடந்த பஞ்ச காலத்தில், குடிநீருக்கு ஆழ் குழாய் கிணறுகள் போடப்பட்டன. பெரும்பாலும் 100க்கு 90 குழாய் கிணறுகள் நல்ல தண்ணீராகவும் நல்ல ஊற்றுள்ள தண்ணீராகவும் கிடைத்தன. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய தரைமட்டத்திற்கு கீழ் உள்ள தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு எந்தவிதமான திட்டமும் சொல்லப்படவில்லை. அந்தத் திட்டங்களைப் போட்டுக் கொடுத்தால், மழையைமட்டும் நம்பி வாழ்கின்ற அந்த மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வைகை கெனல் மாடர்னைசேஷன் ஸ்கீம் என்று ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதன் மூலமாக கிடைக்கின்ற உபரி நீரை முதலில் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பிறகு ஏதோ காரணங்களுக்காக விடப்பட்ட அந்தப் பகுதிகளுக்கு கொடுக்க முடியும் என்று வல்லுநர்கள் சொல்லுகின்ற காரணத்தினால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். வாங்கி உபயோகிக்கும் பொதுமக்களுக்கும் அவை நியாயமான விலையில் கிடைக்கவேண்டும் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. இரண்டும் ஒரே நேரத்தில் எப்படி இருக்க முடியும் என்று தெரியவில்லை. இங்கே எல்லாருக்கும் தெரியும். இங்கே வந்திருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள். ஆகவே விவசாயிகளுக்கு உற்பத்தி செய்ய என்ன செலவாகிறது என்பது தெரியும். உற்பத்திக்கு வேண்டிய பொருள்களின் விலை எவ்வளவு கூடி இருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரியும். ஆகவே, சர்க்காரால் நிர்ணயிக்கப்படுகின்ற விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடியதாக இருக்க மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



1977 ஜூலை 11] [திரு. ஓ. சுப்பிரமணியன்]

விவசாயிகள் உபயோகப்படுத்துகிற தேவையான பொருள்களின் விலை ஏறி இருக்கிறது. நியாயமான விலையில் நிர்ணயிக்கப்படுகின்ற பொருள்கள் கிடைக்கவில்லை. அப்பொருள்களை வாங்கும் அளவிற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. ஒரு மண்வெட்டி 20 ரூபாய் கொடுத்து வாங்குகின்ற நிலையில் இருக்கிறது. விவசாயிகளுக்கு அந்த அளவுக்கு உற்பத்திச் செலவு பெருகியிருக்கிற காரணத்தால் சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலை அவர்களுக்கு கட்டுபடியாவது இல்லை. அதற்கு வேறு வழிகள் இருக்கின்றன. சர்க்கார் கோதுமை போன்ற பொருள்களுக்கு 'சப்சிடி' கொடுப்பது போல, விவசாயிகள் உபயோகிக்கும் பொருள்களுக்கும் 'சப்சிடி' கொடுத்தால் விவசாயிகள் மேம்பட உதவியாக இருக்கும்.

அதே நேரத்தில் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். விவசாய மக்களிடமிருந்து தேவையான பொருள்களை வாங்குவதற்கு ஒரு விலை நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதே தானியத்தை அரசாங்கக் கிடங்கிலிருந்து வாங்கும்போது மிக அதிக விலைக்கு வாங்கவேண்டியிருக்கிறது. இந்த விலை ஏன் என்று தெரியவில்லை. அதைப்பற்றி டி.டி.சி. கூட்டத்தில் கேட்டபோது, சர்க்கார் தீர்மானிக்க வேண்டிய விஷயம் என்று சொல்லி விட்டார்கள்.

அதிர்ஷ்டவசமாக அரசின் கவனத்திற்கு நேரடியாக கொண்டு வருகிற பாக்கியம் கிடைத்திருப்பதால் இந்த மாமன்றத்தில் அதனை எழுப்ப ஆசைப்படுகிறேன்.

நெல்லுக்கு, கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய், 2½ ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அப்படி செய்தால் குவிண்டால் 200, 250 ரூபாயாக இருக்கிறது. விவசாயிகளிடம் நாம் வாங்குவது அதிகபட்சம் 90 ரூபாய். அதே விவசாயி வாங்கும்போது 200 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது எப்படி சாத்தியம் ஆகும்? அவனுக்கு லாபம் இருக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் மறுபரிசீலனை செய்து குறைந்த நிலையில் அவனுக்கு கொடுத்தால் அதிகம் நஷ்டப்படுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, இந்த விலை நிர்ணயம் செய்யும்போது அதற்கான முறையான விலையைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையில் இருக்கும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கவர்னர் உரையில் சொல்லப் பட்டிருக்கிறது. நான் மன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கூட்டுறவு சங்கங்கள் தங்களுக்கு லாபமான பொருள்களை மட்டும் விற்பனை செய்கின்றார்களே தவிர நஷ்டம் உண்டாக்குகின்ற பொருள்களை வாங்கி வியாபாரம் செய்வது கிடையாது. சீனி போன்றவற்றில் நேரடியாகவும், மறைமுகமாகவும் லாபம் இருக்கும். ஆனால் மக்களுக்கு அத்தியாவசியமான மண்ணெண்ணெய் போன்றவற்றில் லாபம் இல்லை என்ற காரணத்தால் விற்க மறுக்கிறார்கள். ஆகவே, அத்தனை பொருள்களும் கிடைக்கும் வண்ணம் செய்யவேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன், முனிசிபல் கவுன்சில் போன்றவைகளுக்கு தலைவர்களை நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அது எந்த அளவு நடைமுறை சாத்தியம் என்பதை பரிசீலனை செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன், முனிசிபல் கவுன்சில் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொல்லுகிற நேரத்தில், ஏன் மாநகராட்சிக்கு இதைக் கொண்டுவரவில்லை என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். கிராமங்களில் இருப்பவர்களும் சரி, நகரங்களில் இருப்பவர்கள் எல்லாம் பின் தங்கியவர்கள் என்று கருதப்படுகிறார்களா? மாநகராட்சியிலே உள்ளவர்கள் விசேஷ சலுகைகள் பெற்றவர்கள் என்று நினைக்கிறார்களா? என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப் படுகிறேன். ஆகவே, அதை நாம் அமுலுக்குக் கொண்டு வரும் போது பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். நடைமுறையில் கிராம பஞ்சாயத்துகளுக்கு தலைவர், பொதுமக்களால் தற்போது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த மாதிரி மக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்போது தலைவருக்கு நேர்மாறான கருத்துடையவர்களைத் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். அந்த பஞ்சாயத்து சரிவர நடைபெறுவது இல்லை. அதற்கு பரிகாரம்—வழி இருக்கவேண்டும். அந்த அளவுக்கு எந்த சிரமமும் பஞ்சாயத்து யூனியங்களுக்கும், முனிசிபல் கவுன்சில்களுக்கும் நடைமுறையில் ஏற்படாத அளவுக்கு அரசு யோசித்து முடிவு காணவேண்டும்.





அடுத்து, தலைவர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்வது தலைசிறந்தது என்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இன்னொரு சிறு யோசனையையும் சொல்லிக் கொள்ளுகிறேன். முதலமைச்சரைக் கூட பொதுமக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற வகையில் சட்டத்தை திருத்தம் செய்து மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யக் கேட்டுக்கொண்டால் சரியாக இருக்காதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராம மக்கள் முன்னேறும் வகையில் அமையவேண்டும். சிறு தொழில் தொடங்க வேண்டுமென்று இலாகாவினரைக் கேட்டால் அவர்கள் 5 லட்சம் ரூபாயில் திட்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில் சாதாரண கிராம மக்கள், குடிமக்கள் எப்படி சிறு தொழிலை ஏற்று நடத்த முடியும் என்பதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும்.

ஜப்பான், அரியானா போன்ற இடங்களில் ஒவ்வொரு வீட்டிலேயும், ஒரு குடிசைத்தொழில் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதேபோல சிறு தொழில்களைச் செய்ய கிராம மக்களுக்கு வசதி வாய்ப்பு செய்து கொடுத்தால் உற்பத்தி செலவும் குறையும். இதை புனராலோசனை செய்து நல்ல மாற்றம் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்திலும் மற்ற வறட்சி மாவட்டங்களிலேயும், புயல், பஞ்சம், வறட்சி போன்ற நேரங்களில் ரஸ்தாக்களுக்குப் பணம் அதிகமாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த சமயத்தில் பஞ்ச நிவாரண, வெள்ள நிவாரண, புயல் நிவாரண நேரங்களில் செய்யப்படுகிற நல்ல பணிகள், போடப்படுகின்ற ரஸ்தாக்கள் மறுபடியும், மராமத்து செய்யப்படுவது இல்லை. அதற்கு எந்தவிதமான பணமும் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டுமென்ற அந்த நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். பிறகு அந்த ரஸ்தாக்களை மராமத்து செய்யக்கூடிய வழிகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவுக் கடன்கள் பற்றி நேற்றைக்கு முன் தினம் அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள் என்றாலும், எங்கள் பகுதி இராமநாத [illegible] [illegible]த்தில் சென்ற ஆண்டு மக்கள் [illegible] இல்லாமல்

அடுத்து, கூட்டுறவுத் துறையில் இருக்கும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கவர்னர் உரையில் சொல்லப் பட்டிருக்கிறது. நான் மன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கூட்டுறவு சங்கங்கள் தங்களுக்கு லாபமான பொருள்களை மட்டும் விற்பனை செய்கின்றார்களே தவிர நஷ்டம் உண்டாக்குகின்ற பொருள்களை வாங்கி வியாபாரம் செய்வது கிடையாது. சீனி போன்றவற்றில் நேரடியாகவும், மறைமுகமாகவும் லாபம் இருக்கும். ஆனால் மக்களுக்கு அத்தியாவசியமான மண்ணெண்ணெய் போன்றவற்றில் லாபம் இல்லை என்ற காரணத்தால் விற்க மறுக்கிறார்கள். ஆகவே, அத்தனை பொருள்களும் கிடைக்கும் வண்ணம் செய்யவேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன், முனிசிபல் கவுன்சில் போன்றவைகளுக்கு தலைவர்களை நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அது எந்த அளவு நடைமுறை சாத்தியம் என்பதை பரிசீலனை செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன், முனிசிபல் கவுன்சில் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொல்லுகிற நேரத்தில், ஏன் மாநகராட்சிக்கு இதைக் கொண்டுவரவில்லை என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். கிராமங்களில் இருப்பவர்களும் சரி, நகரங்களில் இருப்பவர்கள் எல்லாம் பின் தங்கியவர்கள் என்று கருதப்படுகிறார்களா? மாநகராட்சியிலே உள்ளவர்கள் விசேஷ சலுகைகள் பெற்றவர்கள் என்று நினைக்கிறார்களா? என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, அதை நாம் அமுலுக்குக் கொண்டு வரும்போது பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். நடைமுறையில் கிராம பஞ்சாயத்துகளுக்கு தலைவர், பொதுமக்களால் தற்போது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த மாதிரி மக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்போது தலைவருக்கு நேர்மாறான கருத்துடையவர்களைத் தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். அந்த பஞ்சாயத்து சரிவர நடைபெறுவது இல்லை. அதற்கு பரிகாரம்—வழி இருக்கவேண்டும். அந்த அளவுக்கு எந்த சிரமமும் பஞ்சாயத்து யூனியங்களுக்கும், முனிசிபல் கவுன்சில்களுக்கும் நடைமுறையில் ஏற்படாத அளவுக்கு அரசு யோசித்து முடிவு காணவேண்டும்.

1977 ஜூலை 11] [திரு. ஓ. சுப்பிரமணியன்]

அடுத்து, தலைவர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்வது தலைசிறந்தது என்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இன்னொரு சிறு யோசனையையும் சொல்லிக் கொள்ளுகிறேன். முதலமைச்சரைக் கூட பொதுமக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற வகையில் சட்டத்தை திருத்தம் செய்து மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யக் கேட்டுக்கொண்டால் சரியாக இருக்காதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராம மக்கள் முன்னேறும் வகையில் அமையவேண்டும். சிறு தொழில் தொடங்க வேண்டுமென்று இலாகாவினரைக் கேட்டால் அவர்கள் 5 லட்சம் ரூபாயில் திட்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில் சாதாரண கிராம மக்கள், குடிமக்கள் எப்படி சிறு தொழிலை ஏற்று நடத்த முடியும் என்பதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும்.

ஜப்பான், அரியானா போன்ற இடங்களில் ஒவ்வொரு வீட்டிலேயும், ஒரு குடிசைத்தொழில் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதேபோல சிறு தொழில்களைச் செய்ய கிராம மக்களுக்கு வசதி வாய்ப்பு செய்து கொடுத்தால் உற்பத்தி செலவும் குறையும். இதை புனராலோசனை செய்து நல்ல மாற்றம் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்திலும் மற்ற வறட்சி மாவட்டங்களிலேயும், புயல், பஞ்சம், வறட்சி போன்ற நேரங்களில் ரஸ்தாக்களுக்குப் பணம் அதிகமாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த சமயத்தில் பஞ்ச நிவாரண, வெள்ள நிவாரண, புயல் நிவாரண நேரங்களில் செய்யப்படுகிற நல்ல பணிகள், போடப்படுகின்ற ரஸ்தாக்கள் மறுபடியும், மராமத்து செய்யப்படுவது இல்லை, அதற்கு எந்தவிதமான பணமும் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டுமென்ற அந்த நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். பிறகு அந்த ரஸ்தாக்களை மராமத்து செய்யக்கூடிய வழிகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவுக் கடன்கள் பற்றி நேற்றைக்கு முன் தினம் அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள் என்றாலும், எங்கள் பகுதி இராமநாதபுரம் மாவட்டத்தில் சென்ற ஆண்டு மக்கள் விளைச்சல் இல்லாமல்

அவதிப்பட்ட நேரத்தில் கூட்டுறவுக் கடன்கள் வசூலிக்கப்பட வேண்டாமென்று அரசாங்கம் உத்தரவு இட்டு இருந்தாலும்கூட கூட்டுறவுக் கடன்கள் நிலவள வங்கிக் கடன்கள் ஆகியவற்றை வசூல் செய்வதில் மிக அதிகம் கெடுபிடிகள் செய்து இருக்கிறார்கள். சர்க்கார் கடன்கள் வசூல் செய்வதில்கூட கெடுபிடிகள் செய்து இருக்கிறார்கள். ஆகவே, வறட்சி என்று அறிவிக்கப்பட்ட பின்னரும், கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் விதி விலக்கு அளிப்பதுபோல் நிலவள வங்கி கடன்களுக்கும் வசூலிப்பதில் விதி விலக்கு அளித்தால் வசதியாக இருக்கும். இதைக் கேட்போமானால் முன்னாள் முதல்வர் சொல்லியதைப்போல், அது அரசாங்கம் ரிசர்வ் பாங்க், உலக பேங்க், ரூல்ஸ் என்று எல்லாம் சொல்கிறார்கள். அந்த அளவுக்குப் பொருளாதாரம் கிராமத்தில் இருப்பவர்களுக்குத் தெரியாது. அவர்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து, கடன் வசூல் செய்வதில் நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும். கெடுபிடி இல்லாமல் எல்லோரும் தக்க உதவியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அண்டை மாநிலங்களுடன் நமது உறவுகள், குடிநீர் வசதி, பாசன வசதி ஆகியவை பற்றி மட்டும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரஸ்தா வசதி பற்றி குறிப்பிடப்படவில்லை. ஏற்கனவே முன்னாள் ஆளுநர் அவர்கள் ஒரு சமயத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். கேரளத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே இரு மாநிலங்களையும் இணைக்கும் சாக்குளத்துமெட்டு என்ற ரஸ்தா போடப்படும் என்று. அந்த ரஸ்தா போடப்பட்டால் மதுரை மாவட்டத்தில் உள்ள தேவாரம், கோம்பை, உத்தமபாளையம் போன்ற பகுதியில் உள்ள மக்கள் கேரளத்தில் உள்ள எர்ணாகுளம் செல்வதற்கு வசதியாக இருக்கும். இந்த இணைக்கும் ரஸ்தா ஒரு குறுகிய தூரத்திற்குத்தான் போடவேண்டியிருப்பதால், ஏற்கனவே முன்னாள் அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள்கூட அங்கே வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டுச் சென்று இருக்கிறார்கள். அது சம்பந்தமாக திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அது பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. அங்கே வசிக்கும் மக்கள், ஏலத் தோட்டத்தில் வேலை செய்யும் மக்கள் தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து கேரள பகுதிக்கு அடிக்கடி செல்ல வேண்டியிருப்பதால், அந்த ரஸ்தாவை அமைக்கும் பணியை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரள எல்லையில் உள்ள ரஸ்தாவை அவர்கள் ஜீப்



போகிற அளவிற்கு அமைத்து விட்டார்கள். இந்த ரஸ்தா மிகக் குறுகிய தூரத்தில் சுருக்கமாக கேரளாவிற்கு செல்ல வசதியாக இருக்குமாதலால்—தூரம் 5 மைலுக்குள்தான் இருக்கும்—அந்த ரஸ்தாவை சீக்கிரம் முடித்துக் கொடுத்தால் போக்குவரத்து வசதிக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, இது மாதிரி பல விஷயங்கள் இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்படாததற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏறக்குறைய 26 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு எழுதிக் கேட்டு இருப்பதால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. அந்த குறிப்பிட்ட நேரத்திற்குள்ளேயே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உரையை தயவுசெய்து முடித்துக்கொண்டால், விருப்பம் தெரிவித்து இருக்கும் அனைவரையும் இங்கே பேச அனுமதிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே ஆளுநர் அவர்களுடைய உரையை நான் ஆதரித்துப் பேச விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையில் அண்ணாவின் கொள்கைகளும் கருத்துக்களும் நிரம்ப பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஆதலால் அவருடைய உரையை நான் இங்கே வரவேற்கிறேன்.

எங்களுடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் 25,000-க்கும் மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறிகள் அந்தப் பகுதியில் இயங்காமல் இருக்கின்றன. அதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான துணிகள் அங்கே தேங்கிக் கிடக்கின்றன. இந்த ஆளுநர் உரையில் கைத்தறித் தொழிலாளர்கள் குறைகள் தீரும் வகையில் இருப்பதால், இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன்.

விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், ஆளுநர் உரை எங்களுடைய தொகுதி மக்களுக்கும், மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஆதரவு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டு இருக்கிறது.

எங்களுடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியைப் பொறுத்த வரையில் 100 க்கு 75 பேர் விவசாயிகளாக இருக்கின்றனர். ஆனால் இந்த விவசாயம் செழிக்க வேண்டுமானால் நீர் வேண்டும். அந்த விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நீர் அந்தப் பகுதியில் கிடைக்கவில்லை. குடிநீரும் கிடைக்கவில்லை. இந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமானால் எங்களுடைய ஊருக்கு மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகும் தண்ணீர் வீணாகக் கடலில் போய் விழுகிறது. அந்தத் தண்ணீர் அழகர் அணைத் திட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தினால் 20,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இதன் காரணமாக ஸ்ரீவில்லிப் புத்தூர், சாத்தூர், சிவகாசி, விருதுநகர், இராஜபாளையம், அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளும் பயன்பெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி விவசாயத்தில் மட்டும் அல்லாது பொருளாதாரம், மற்றும் வியா பாரம், தொழில் துறை முதலியவற்றிலும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அதையும் நிவர்த்தி செய்யும் வகையில் ஆளுநர் உரை அமைந்து இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்கு ஏற்ப நம்முடைய நகரசபைத் தலைவர்களின் தேர்தலும், ஒன்றியத் தலைவர்களின் தேர்தலும் நேரடியாக நடைபெறும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருப்பதால் சாமானியர்களும் இன்றைக்கு அந்தப் பதவிக்கு வர வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால் நான் ஆளுநர் உரையைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, தொழில் பிரச்னையைப் பொறுத்தவரையில், ஆளுநர் உரை நமக்கு ஆதரவாக இருக்கிறது என்று நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். எங்களுடைய ஊருக்குப் பக்கத்தில் சிவாகாசியில் 50,000-க்கும் மேற்பட்ட அச்சுத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்த அச்சுத் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளம் கிடையாது. இ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல் வசதி கிடையாது. பி.எப். வசதி கிடையாது. அங்கேயுள்ள முதலாளிகள் 2 கோடி ரூபாய்க்கு மேல் மாதத்திற்கு ஒரு தடவை வரி கட்டும் முதலாளிகளாக இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அங்கேயுள்ள தொழிலாளர்களை அவர்கள் பர்மனென்ட் செய்யாமல் வைத்து இருக்கிறார்கள். 6 மாதத்திற்கு ஒரு தடவை வேலையை விட்டு நீக்கி, டெம்பரரியாக வைத்து இருக்கிறார்கள். தொழில்





பிரச்னை குறித்து ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டி இருப்ப தால், இந்தக் கோரிக்கையும் நிறைவேறும் என்று நான் எதிர் பார்க்கிறேன்.

எங்களுடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் கூட்டுறவு சொசைடிகள் நிறைய இருக்கின்றன. கூட்டுறவு சொசைடிகளில் எந்த அளவுக்கு ஊழல் இருந்தது என்பது தெரியும். ஆளுநர் ஆட்சிக்கு முன்னால் உள்ள ஆட்சியினர் ஊழல் செய்துவிட்டார்கள் என்று சொல்லி, எங்களுடைய தொகுதியில் ஏகப்பட்ட கூட்டுறவு சொசைடிகளை ஆளுநர் அவர்கள் கலைத்து விட்டார்கள். நிறைய சொசைடிகள் இப்படி கலைக்கப்பட்டன. இன்னும் பல சொசைடி கள் பழைய நிர்வாகத்தினரின் பொறுப்பில் இருப்பதால், அவர்கள் நாள்தோறும் விதண்டாவாதம் பேசிக்கொண்டு அலைந்து கொண்டி ருக்கிறார்கள். அந்த சொசைடிகள்மீதும் முறைப்படி நட வடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். ஆகவே, புதிய அரசு கொண்டு வரும் திட்டங்கள் நல்ல திட்டங்களாக ஆளுநர் உரையில் அமைந்து இருப்பதால், அண்ணன் இராதா அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே எனது கட்சியின் தலைவர் ரமணி அவர்கள் குறிப்பிட்டதைத் தொடர்ந்து எங்களு டைய கட்சியின் நிலையை வெளிப்படுத்த நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏற்கனவே போனஸ் சட்டம் அவசர காலத்தில் வாபஸ் பெறப் பட்டதன் விளைவாக, குறைந்தபட்ச போனஸ் கொடுப்பதை நிறுத்தியதன் காரணமாக, ஒப்பந்தம் செய்த போனஸ்கூட கொடுக்க மறுக்கிறார்கள், அப்படிப்பட்ட மதுரா கோட்ஸ் நிர்வா கத்தின்மீது வழக்கு தொடர்ந்ததன் பேரில் ஹைக்கோர்ட் ரிட்டை யர்டு நீதிபதி மகராசன் அவர்கள் நிர்வாகத்தினர் உடனடியாகப் போனஸ் வழங்க வேண்டுமென்று தீர்ப்பு சொல்லியும்கூட இன்னமும் வழங்காமல், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய்விட்டது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு தெளிவாக சொல்ல வேண்டுமென தீர்ப்புக் கூறி 9 மாதங்கள் ஆகியும் விசாரணையும் நடைபெறவில்லை. மதுரா கோட்ஸ் நிறுவனம் போனஸ் கொடுக்காமல் இருக் கிறது. இதை ஆளுநர் உரையில் சேர்த்துக்கொள்ள வேண்டும்; ஒப்பந்த போனஸ் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், இந்த போனஸ் சட்டமானது உடனடியாக திருத்தப்பட்டு, பழைய சட்டத்தைப்போல் 8.33 சதவிகிதம் போனஸ் அளிக்கப்படவேண்டும் என்றும், அந்த வகையில் ஆளுநர் உரையில் சட்டம் திருத்தப்படவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்யவேண்டுமென்றும் என்னுடைய கட்சியின் சட்டசபைக் குழுவின் சார்பில் அதை நான் வலியுறுத்துகிறேன்.

இரண்டாவது, தண்ணீர் தட்டுப்பாட்டைப்பற்றி ஏற்கனவே பல உறுப்பினர்கள் இங்கே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதுவும் ஆளுநர் உரையில் சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பயிர்கள் எல்லாம் காய்ந்து இருக்கிறது, கருகிப்போய் இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. அதற்காக தமிழக அரசு முன் முயற்சி எடுத்து இருக்கிறார்கள். இனியும் இப்படி தட்டுப்பாடு ஏற்படாது இருக்கும் வகையில் தஞ்சைவாழ் மக்களுக்கு தண்ணீர் அளிக்க தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த உறுதிமொழியை ஆளுநர் உரையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, கட்டாய டெபாசிட் ரத்து செய்யப்பட்டது என்றாலும். இரண்டாவது தவணை திருப்பிக்கொடுக்க வேண்டியது இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, இரண்டாவது தவணை பணம் உடனடியாக திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

நான்காவதாக, ஏற்கனவே இனும் ஒழிப்புச் சட்டம் அமலிலிருந்தும், அந்தச் சட்டத்தை ஆட்சேபிக்கும் வகையில் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றும், அந்தச் சட்டம் சட்டப்படி செல்லும் என்றும் சுப்ரீம் கோர்ட்டு 1974 ஆம் ஆண்டு தீர்ப்பு கொடுத்திருக்கிறது. ஆயினும், இன்றுவரை சில நிலச்சுவாந்தார்கள் இனும்தார் என்ற பெயரில் இருக்கிறார்கள், நிலத்தில் பயிர் செய்யக்கூடிய விவசாயிகளிடம் குத்தகை கொடுக்க வேண்டுமென்று கொடுமைப் படுத்தி வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். எனவே, அந்தச் சட்டத்தை சரியான முறையில் அமலாக்கும்படியான முறையில் சட்டத்துறை அதிக கவனம் செலுத்தி அந்தச் சட்டத்தை நல்லபடியாக அமல்படுத்திக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, எங்கள் பகுதியில், என் தொகுதியில் சிவந்திபுரம், கோடாரங்குளம், விக்கிரமசிங்கபுரம் ஆகிய பகுதிகளில் இன்னமும் கூட இனும்தார்கள் என்பவர்கள் குத்தகை வசூலித்துக் கொண்டு வருகிறார்கள், அவர்கள்மீது அரசு கவனம் செலுத்தி, சட்டத்தை அமல்படுத்தி தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இனும் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்ததாக, அவசரகால நிலையில், 17 மாத காலமாக நடைபெற்ற கொடுமைகளை விசாரிப்பதற்காக, குறிப்பாக சென்னை சிறைச்சாலையில் நடைபெற்ற கொடுமைகளை விசாரிப்பதற்காக, ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டக் கொடுமைகளுக்கு எந்தெந்த அதிகாரிகள் காரணமானவர்களாக, குற்றவாளிகளாக குறிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் சஸ்பெண்ட் செய்யப்படாமலிருந்தால் அவர்கள் சாட்சிகளை 'டேம்ப'ர் செய்ய, கலைக்க வசதிகள் ஏற்படாமல் இருக்க, அவர்கள் எல்லாம் 'சஸ்பெண்ட்' செய்யப்படவேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, சமீபத்தில் காவிரியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதைப்போல தாமிரபரணியிலும் தண்ணீர் சப்ளையில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன—அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தாமிரபரணியில் தண்ணீர் இருந்தபோதிலும் மேற்பகுதி விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்காத காரணத்தால் அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து மாண்புமிகு அமைச்சருக்கு தந்திகள் கொடுக்கப்பட்டு அமைச்சரின் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக, தெற்கு வடக்கு கோடைமேல் அழகியன் கால்வாயிலும், நதியுண்ணி கால்வாயிலும் பாசன வசதிக்காக தண்ணீர் சப்ளையை மேற்கொள்ள உடனடியாக அரசு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியில், குறிப்பாக, "அப்பர் டாம்", சேர்வலாறு பாபநாசம் ப்ராஜெக்ட் போன்ற பகுதிகளில் ஆடு மாடுகளை வளர்த்து வருகிறார்கள். ஆனால், அங்கெல்லாம் கால்நடைகள் மேய்ச்சல் செய்யக்கூடாது என்று வற்புறுத்தப்பட்டு, ஆடு மாடுகள் மேய்ப்பவர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். குறிப்பாக, அந்தப் பகுதியில் பெரியசாமி என்பவர் இரண்டு நாட்

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்] [1977 ஜூலை 11

களுக்கு முன்பாக, தண்ணீரில் மூழ்கி இறந்தது பற்றிய செய்தி தந்தி மூலம் மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமைகள் நீங்கும் முறையில் அங்கே கால்நடைகளை மேய்ப்பதற்கு அனுமதி அளிக்கும் வகையில் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திருமதி சுப்புலட்சுமி:** மாமன்றத் துணைத் தலைவரவர்களே, ஜூலைத் திங்கள் 7-ம் நாள் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி கூறுமுகத்தான், குறிப்பாக, தாய்மார்கள் சார்பாக, அந்த உரையில் குறிப்பிடப்பட்டுள்ள, இன்றைய தினம் தாய்மார்களுக்குப் பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ள குடிநீர் பிரச்சினை, உணவுப் பொருட்கள் விலையேற்றம், மதுக் கடைகள் ஆகியவைகளைப்பற்றி சிறிது கூற விரும்புகிறேன்.

சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக, பருவ மழை தவறியதின் காரணமாக, நீர்ப்பாசனத் திட்டங்கள் சரிவர அமுல் நடத்தப் படாததன் காரணமாக, குடிநீர்த் திட்டங்கள் சரிவர அமுல் நடத்தப் படாததன் காரணமாக குடிநீர் கிடைக்காமல் அவதிப் பட்டுக் கொண்டிருக்கிற தாய்மார்களுக்கு ஆளுநரின் உரையில், குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தகவல் ஒரு நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்தபடியாக, உணவுப் பொருட்களின் விலையேற்றத்தைப் பொறுத்தவரையில், உற்பத்திப் பெருக்கத்தால் மட்டும் விலைவாசியைக் குறைத்துவிட முடியாது. இடைத் தரகர்களின் தலையீட்டின் காரணமாக, லாப நோக்கோடு செயல்படுகிற காரணத்தால்தான் உணவுப் பொருட்கள் சரியான விலைக்குக் கிடைப்பதில்லை. எனவே, அத்தகைய இடைத்தரகர்களின் லாபம் குறைக்கப் பட்டு மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிராம மக்களுக்கு சரியான விலையில் கிடைக்க வேண்டுமென்று ஆளுநர் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு இந்த இடைத் தரகர்களால் ஏற்படும் தொல்லைகள் எண்ணிலடங்கா. பெரும் நகரங்களிலிருந்து வியாபாரிகள் தாங்கள் வாங்கும் விலையுடன் சேர்த்து லாபம் வைத்து விற்கிறார்கள். அத்தகைய இடையிலுள்ள வியாபாரிகளிடமிருந்து கிராமத்திலுள்ள வியாபாரிகள் வாங்கி விற்கும்போது இன்னும் சிறிது விலை ஏற்றம் ஏற்படுகிறது. இப்படி இடையில் இரண்டு மூன்று தரகர்கள்



1977 ஜூலை 11] [திருமதி சுப்புலட்சுமி]

இருப்பதால் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து விடுகிறது,
என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அத்தோடு, அப்படி
விற்கப்படுகின்ற பொருட்கள் தரமானவைகளாக இருக்கின்றனவா
என்றால் அதுவும் இல்லை. கிராமப்புற மக்கள் எப்படியும் நம்
கடைகளில்தான் உணவுப் பொருட்களை வாங்கியாக வேண்டும்
என்ற எண்ணத்தோடு உணவுப் பொருட்களின் தரத்தையும்
குறைத்துவிடுகிறார்கள். இப்படி அவதிப்படும் மக்களுக்கு, குறிப்
பாக கிராமப்புற தாய்மார்களுக்கு, கிராமங்களில் நியாயவிலைக்
கடைகள் ஏற்படுத்தப்படும், பொருள்கள் சரியான விலையில்
விற்கப்படும் என்று அறிவித்திருப்பது தாய்மார்களிடையே
மாபெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அண்டை மாநிலமான மைசூர் மாநிலத்தோடு,
குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக பரஸ்பர உடன்
பாடு காண்பது பற்றி ஆளுநர் உரையில் மட்டுமின்றி மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் விளக்கி இருப்பதும் வரவேற்கத் தக்க
ஒன்றாகும். இதனால் காவிரி டெல்டா பகுதி மட்டுமின்றி கோவை
மாவட்டத்திலும், கீழ் பவானி விவசாயிகளுக்கு இந்த ஆண்டு
தண்ணீர் விடப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அடுத்தபடியாக, மாபெரும் தலைவர்கள் பெரும் போராட்டங்கள்
நடத்தி அமுலாக்கிய மதுவிலக்கினை எந்தக் காரணத்தாலோ
இதற்கு முன் இருந்த அரசு இடைக்காலத்தில் தளர்த்தியது.
அதன் காரணமாக, மதுவிலக்கை முழுமையாக அமுலாக்குவது
மிகவும் கடினமாக ஒன்றாக இருக்கிறது. இதனால் ஒரு
தலைமுறையே பாதிக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குத் திட்டம்
அமுலாக்கப்பட்டபோதிலும் மது உண்ணும் பழக்கம் மக்க
ளிடையே முற்றிலுமாக நீக்கப்பட முடியாத நிலை காணப்படு
கிறது. நான் தேர்தல் காலங்களில் பொதுமக்களை சந்திக்கின்ற
நேரத்தில், குறிப்பாக தாய்மார்கள், "நீங்கள் எங்களுக்கு எந்த
நன்மையை செய்தாலும் செய்யாவிட்டாலும், மீண்டும் கள்ளுக்
கடைகளை கொண்டு வராமலும், இந்தத் திருட்டுத்தனமாக விற்கப்
படும், 'கள்ளச் சாராயக் கடைகளை' அறவே ஒழித்தால் அது
ஒன்றே போதும்" என்று ஒருமுகமாக வேண்டிக் கொண்டனர்.
குறிப்பாக எனது தொகுதியில் கள்ளச் சாராயம் சில அதிகாரி
களுக்கு சமூக விரோதிகளுக்கு, ஒரு காமதேனுவைப் போல,
நினைத்ததை எல்லாம் கொடுக்கின்றதாக இருக்கிறது. இப்படிப்

[திருமதி சுப்புலட்சுமி] [1977 ஜூலை 11

பட்டவர்களை எல்லாம் வளர விடாதவாறு மதுவிலக்குத் திட்டத்தை தீவிரமாக அமுல் படுத்துவதற்காக ஒரு குழு அமைப்பதுபற்றி ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்பதோடு என் தொகுதி மக்கள் சார்பாக, ஆளுநர் உரைக்கு என் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள், மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான சாதனங்கள் ஆகியவை அந்தந்நேரத்தில் கொடுக்கப்படும் என்று ஆளுநர் அவர்களின் உரையில் காணப்படுவது மகிழ்ச்சிக்கு உரிய ஒன்றாகும். "prevention is better than cure" என்று கூறுவதைப் போல, ஆரம்பத்திலேயே லஞ்ச ஊழல்களையும் பணம் வீண் விரயம் செய்யப்படுவதையும் தவிர்த்து, லஞ்ச ஊழலற்ற ஆட்சியை அமைத்துக் கொடுக்கும் என்ற ஆளுநரின் உரை வரவேற்கத்தக்கது.

ஜனநாயக மரபைப் பேணிக் காப்பதற்கு, ஒன்றியத் தலைவர்களையும், நகரசபைத் தலைவர்களையும் மக்களே தேர்ந்தெடுக்க இந்த அரசு விரும்புகிறது என்கிற ஆளுநரின் உரை, நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற முறையில் அமைந்துள்ளது என்பதை இந்த மாமன்றம் மன நிறைவோடு வரவேற்கும்.

இத்தகைய நல்ல அம்சங்களைக் கொண்ட ஆளுநரின் உரைக்கு நன்றி கூறும் வாய்ப்பினை எனக்கு அளித்த மாமன்றத் துணைத் தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்து எனது உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

* திரு. எ. சுவாமிதாஸ்: மதிப்புக்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது ஒரு சில கருத்துக்களை, ஜனதா கட்சியின் சார்பில் கூற முற்படுகின்றேன்.

இந்தப் பேரவையில் நாம் எல்லோரும் ஜனநாயக அடிப்படையில் உட்கார்ந்து கொண்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி விவாதிக்க நமக்கு வாய்ப்பு தற்போது ஏற்பட்டிருக்கிறது. அவசர நிலையிலே, தேர்தல் வருமா, வராதா என்று ஐயுற்றுக்கொண்டிருந்த நேரத்திலே, ஜனதா அரசு



1977 ஜூலை 11] [திரு. எ. சுவாமிதாஸ்]

மத்தியில் அமைந்தவுடன் விரைவாக தேர்தலை தமிழகத்திலே நடத்தித் தந்திருக்கிறார்கள். அப்படி, தேர்தலுக்கு உத்திரவிட்ட, தேர்தலை நடத்திய மத்திய அரசுக்கு ஒரு வார்த்தை நன்றி இந்த உரையிலே கூறியிருக்கலாம். அது விடப்பட்டிருக்கிறது. என்ன காரணமோ, தெரியவில்லை.

(முற்பகல் 10.50)

அடுத்து, இந்த உரையின் மீது, நீண்டநேரம் பேசுவதற்கு எங்களுக்கு வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே கூற விழைகிறேன்.

இந்த உரையில் இருமொழிக்கொள்கையை அரசு பின்பற்றும் என்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். நமது குழந்தைகள் பள்ளியில் படிப்பது வெறும் அறிவுக்காக மட்டும் அல்ல. 'ஏதாவது வேலை கிடைக்ாதா, எந்த மாநிலத்திற்காவது ஓடிச் சென்று வேலை பார்க்க வேண்டாமா, நமது குடும்பத்தை ஆதரிக்க மாட்டோமா' என்ற முறையில் தான் கல்வி கற்கிறார்கள். அப்படி இருக்க, இருமொழிக் கொள்கையை அடிப்படையாக வைத்து கல்வித் தரத்தை வைத்துக் கொண்டிருந்தால், நமது தமிழ்நாட்டில் படிக்கிற மாணவர்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்று வேலை தேடிக் கொள்ள இயலாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு மாணவர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணவேண்டும்.

தமிழ்நாட்டில் இரு மொழிகளைக் கற்றுக் கொண்டு வருகிறவர்களுக்கு இங்கேயே நம்மால் வேலை அளிக்க முடியாது. பாரத நாடு முழுவதும் சென்று வேலை தேடிக் கொள்ளத் தக்க முறையில் நமது மொழிக் கொள்கை இருக்க வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளை மட்டும் வைத்துக் கொண்டிருப்பது போதாது என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து வருகிறோம். ஆகவே, இந்தக் கொள்கையில் சில மாறுதல்கள் வேண்டும்.

காங்கிரசு அரசு தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் மும்மொழிக் கொள்கையைக் கையாண்டார்கள். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டுடன், இந்திய நாட்டில் வழங்குகின்ற இன்னொரு மொழியையும் படிக்கலாம். அப்படி படிக்கலாம் என்று சொல்லியிருப்பது கட்டாயம் அல்ல.

ஆப்ஷனல் பாடமாக, விருப்ப பாடமாக, மாணவர்கள் படிக்க விரும்பினால் இன்னொரு மொழியைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதே அன்றைய கொள்கையாக இருந்தது. அந்தக் கொள்கை இருந்த காரணத்தினால் மூன்றாவது மொழியாக, இந்தியைப் படிக்க விரும்பியவர்கள் இந்தி படித்தார்கள். மலையாளத்தை, தெலுங்கைப் படிக்க விரும்பியவர்கள் அதை அதைப் படித்தார்கள். அதனால் அவரவர்கள் இன்னொரு மாநிலத்திற்குச் சென்று வேலை தேடிக் கொள்ள வாய்ப்பு இருந்தது. அப்படியின்றி இன்றைக்கு இருமொழிக் கொள்கை இருப்பதால் நமக்கு இடையூறாக இருக்கிறது. ஆகவே கட்டாய பாடமாக இல்லாமல் இருந்தாலும், படிப்பதற்கு விரும்பினால், விரும்புகிற மாணவர்களுக்கு இன்னொரு மொழியைக் கற்றுக்கொடுக்க வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் கொள்கையை மாற்றுவது நலமாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நியாயவிலைக் கடைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். ஆனால் இப்பொழுதே நியாயவிலைக் கடைகள் அங்காங்கு எல்லா இடங்களிலும் திறந்து வைத்திருக்கிறார்கள். நியாயவிலைக் கடைகளில் பொருள்களை வாங்க வருகிறவர்கள் உண்மையிலேயே — அரிசியை எடுத்துக்கொள்ளுங்கள், அல்லது சர்க்கரையை எடுத்துக்கொள்ளுங்கள் — ஒரு கிலோ வாங்கப் போனால், ஒரு கிலோ இருக்காது. எந்தக் கடையில் வாங்கினாலும் அளவு குறைவாக இருக்கிறது. காரணம், நியாய விலைக் கடைகளில் உள்ளவர்கள் திருடுகிறார்கள் என்று சொல்ல மாட்டேன். அனுபவ பூர்வமாகச் சொல்கிறேன். நியாயவிலைக் கடைகளுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அரிசி, சர்க்கரை போன்றவற்றைக் கொடுக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுன்களில் இருந்து அரிசி, சர்க்கரை எடுத்து வரும்போதே, அவர்கள் எடை குறைவாகத்தான் கொடுக்கிறார்கள் என்று நான் நிச்சயம் சொல்ல முடியும். சிவில் சப்ளைஸ் கிடங்குகளில் சரியான எடையில் கொடுப்பதில்லை.

நான் ஒரு கூட்டுறவு சங்கத்தில் இருக்கிறேன். எங்களுக்கும் [illegible] கடை இருக்கிறது. நான் எம்.எல்.ஏ. ஆக இருந்தபோதே [illegible] சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிடங்குக்கு [illegible]





வாங்கி வந்திருக்கிறேன். சரியான எடையில் தருவதில்லை. ஏதாவது சொன்னால் நாளைக்கு வா, மறுநாள் வா என்று அனுப்பி விடுகிறார்கள். கலெக்டர் தலையிட்டாலும், கீழ் இருக்கிற சிப்பந்திகள் சரியானபடி கொடுப்பதில்லை. அவர்கள் சரியான எடையில் கொடுத்தால் சங்கடம் இராது. அவர்கள் எடை குறைவாகக் கொடுக்கிறபோது சங்கங்களில் சரியான எடை கொடுத்தால் சங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும். தணிக்கையின்போது சங்கப் பொறுப்பை ஏற்றவர்கள் தவறான கணக்கை எழுதியதாகச் சொல்லி இந்த வியாபாரத்தையே நீங்கள் நிறுத்திவிடுங்கள் என்று சொல்கிறார்கள். அந்த நஷ்டத்தை சங்கங்களால் பொறுப்பேற்க முடியவில்லை ஆகவே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்துகின்ற கிட்டங்கிகளில் சரியான எடையில் சர்க்கரை, அரிசி போன்றவற்றை சங்கங்களுக்குக் கொடுக்க அங்குள்ள தராசு, எடைக் கற்கள் ஆகியவற்றைக் கண்காணிக்க வேண்டும். வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் இன்ஸ்பெக்டர் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிட்டங்கிகளை அடிக்கடி கண்காணிக்க அங்கே போடப்படவேண்டும். அப்போதுதான் நியாயவிலைக் கடைகளை நாம் ரெவின்யூ கிராமங்களில் திறப்பதனால் ஏழை மக்களுக்குப் பயன் ஏற்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து 'சமுதாயத்தில் நீண்டநெடுங்காலமாக வாய்ப்பற்று, நலிவுற்று நிற்கும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள், மகளிர் ஆகியோருக்கு அரசு குறிப்பாக உதவும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே இன்னும் சில இனத் தொழிலாளர்கள்பற்றியும் குறிப்பிட்டிருந்தால் நலமாக இருக்கும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நகரசுத்தித் தொழிலாளர்கள் — அவர்களைப்பற்றி அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களது நிலை, அவர்கள் செய்கிற தொழிலின் நிலை இவற்றைப்பற்றி நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். டிரைனேஜ் சிஸ்டம் இருக்கிற இடங்களில் அவர்கள் மக்களுக்கு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. விஷக்காற்றினால் எத்தனையோ பேர் முடிந்துவிடுகிறார்கள். அதைத் தடுக்க முயற்சி செய்வதாகத் தெரியவில்லை. சில நகரங்களைப் பார்த்தால் அவர்கள் பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள். அந்த ஊரில் திருமணம் நடக்கிறது என்று சொன்னால் நகரசுத்தித் தொழிலாளர்கள் அத்தனை பேரும் சாப்பாட்டிற்கு வந்து

விடுகிறார்கள் அந்த அளவுக்கு அவர்களை நாம் புறக்கணித்திருக்கிறோம். வேண்டிய சம்பளத்தைக் கொடுக்கவில்லை. கையுறை, காலுறை போன்றவற்றைக் கொடுக்கவில்லை. அவர்களுடைய குழந்தைகளின் படிப்புக்கு ஏற்பாடு செய்வதில்லை. இவர்களைப்பற்றி அரசு கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பனையேற்றத் தொழிலாளர்கள். நம் மாநிலத்தில் பனையேற்றத் தொழிலாளர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். அவர்களைப்பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடவில்லை. அவர்கள் பதநீர் உற்பத்தி செய்கிறார்கள். கருப்பட்டி என்ற வெல்லத்தைக் காய்ச்சுகிறார்கள். அது நல்ல சத்தான பொருள். க்ளுகோஸ் அதில் அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். எங்கள் பகுதியில் சர்க்கரையை நாங்கள் அதிகமாகப் பயன்படுத்தமாட்டோம். கருப்பட்டி காப்பியைத்தான் அதிகம் பயன்படுத்துவார்கள். அது பல நோய்களுக்கு இடமளிக்காமல் இருக்கிறது. பல வழிகளில் நன்மை பயக்கிறது. அதை உற்பத்தி செய்கிறவர்கள் பனையேற்றத் தொழிலாளர்கள், அவர்கள் நிலைபற்றியும் இந்த அரசு சிந்தித்தாக வேண்டும்.

அவர்கள் செய்கிற தொழில் மிகவும் ஆபத்தானது. ஐம்பது, அறுபதடி உயரமுள்ள மரத்தில் ஒரு நாளைக்கு காலை, மாலை நூற்று ஐம்பது, நூற்று அறுபது மரங்கள் ஏறவேண்டிய நிலை இருக்கிறது. கை தவறினால் மரணம் என்ற நிலையில் உள்ளார்கள். கொஞ்சம் அசதியாக இருந்தால் போயிற்று. கீழே விழுந்து உயிரைவிட வேண்டியதுதான். அப்படி உயிரிழக்கிறவர்கள் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக ஏற்பாடு இருக்கிறது. அதை அதிகமாக்கி உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு நலன் ஏற்படும் வகையில் அரசாங்கம் அவர்களுக்கும் நலன் செய்யவேண்டும்.

அதைவிட இன்னொரு நெருக்கடி — மிகுதியாக இருக்கிற நெருக்கடி மதுவிலக்குச் சட்டம். இந்தச் சட்டத்தின் கீழ் குடித்திருப்பதாக பனையேற்றத் தொழிலாளர்களைப் போலீசார் நினைத்தால் எந்த நேரத்திலும் கைது செய்யலாம். மது அருந்தியிருக்கவேண்டுமென்ற நிலை இல்லை. கள் குடிக்க வேண்டாம்.





அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அருகில் வந்தாலே கள் நாற்றம் வீசும். கள் வாடை வீசும். பதனீரை வாங்கி வைத்திருந்தால்போதும். சில மணி நேரத்தில் கள் நாற்றம் — கள் வாடை வீசும். பனையேற்றத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் இடத்திலும் கள் வாடை வீசுகிறது. கேஸ் இல்லை என்றால் போலீசார் வேண்டுமென்றே இந்தப் பனையேற்றத் தொழிலாளர்களைப் பிடித்துச் சென்று, கள் குடித்திருப்பதாக அவர்கள் மீது வழக்குப்போடுவது மிகவும் நெருக்கடியான நிலையை உருவாக்கி வருகிறது.

(முற்பகல் 11-00)

இதை மனதில் வைத்துக்கொண்டு மதுவிலக்குத் திட்டத்தை நாம் அமுலாக்கும்போது அதை மனிதாபிமானத்தோடு அணுகவேண்டும். மதுவிலக்குத் திட்டத்தை தீவிரப்படுத்த வேண்டுமென்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை எல்லோரும் வரவேற்கிறோம். ஆனால் மதுவிலக்குத் திட்டத்தை அமுல்படுத்தும்போது அது எப்படி செயல்படுத்தப் படுகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். இவ்வளவு காலமாக அதை மிகுதியாக அமல்படுத்தவேண்டும் என்று ஆசைப்பட்டாலும் கிராமப்புறங்களில் அது சரியாக அமல்படுத்தப்பட்டிருக்கிறதா? மது அருந்துபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறதா? அல்லது கூடிவருகிறதா? என்பதுபற்றி அரசாங்கக் கணக்கு இருக்கிறது. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலுமுள்ள கணக்குகளை எடுத்துப் பார்த்தால் தெரியும். மதுவிலக்குச் சட்டத்தை மீறியவர்களின் பெயரில் போடப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கையை எடுத்துப்பார்த்தால் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு போவதைப் பார்க்கலாம். அதை சற்று அதிகமாகக் கவனிக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது.) வெள்ளிக்கிழமைகூட நாங்கள் விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆகவே, எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை சற்று அதிகப்படுத்திக் கொடுத்தால் நலமாயிருக்கும்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** வெள்ளிக்கிழமை அன்று பேரவைத் தலைவர் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்க மறுக்கவில்லை. நீங்களாகவே அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள மாட்டோம் என்று வெளியேறினீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஜனதா கட்சி சார்பில் இன்னொரு உறுப்பினர் பேச இருக்கிறார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ்: போலீஸ் இலாகாவைப் பற்றி அல்லது அந்த இலாகாவில் பணியாற்றுகிற ஊழியர்களைப் பற்றி குறை கூறிப் பேச வேண்டுமென்று பேசவில்லை. நாட்டில் இருக்கிற நடைமுறையைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போலீஸார் மாதக் கடைசியில் தங்களுக்குத் தேவையான அதிகமான வழக்குகளைக் காட்ட வேண்டும் என்று என்னைத்தோடு 'ரெய்ட்', செய்கிறார்கள். அப்படி ரெய்ட் செய்யும்போது மது அருந்தியவர்களையும் மது அருந்தாதவர்களையும் கைது செய்கிறார்கள். அதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மது அருந்தியவர்கள் மீதும் மது அருந்தாதவர்கள் மீதும் வழக்கு போடுகிறார்கள். மது அருந்தியதாக வழக்கு போட அவர்களால் இயலவில்லை என்றால், மாறுபாடாக டாங்கள் இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டால், என்ன செய்கிறார்கள்? திருட்டுச் சாராயம் என்று எப்படியும் ஒன்றிரண்டு வழக்குகளில் கைது செய்திருப்பார்கள். அவர்கள் கைப்பற்றிய திருட்டுச் சாராயத்தை அப்படியே கோர்ட்டில் ஆஜர்படுத்துவதில்லை. ஏதோ பத்து காலன் பிடித்து வைத்தால் ஆஜர்படுத்துவது இரண்டு பாட்டில்களாக இருக்கும். மீதியை எதற்காக வைத்திருக்கிறார்கள் என்றால் தங்களுக்கு வேண்டியபோது வழக்குகளை ஜோடனை செய்து போடுவதற்கு இந்தச் சாராயத்தை வைத்து மக்கள் மீது திணித்து வழக்கு போடுகிறார்கள். இது நடைமுறையில் உள்ள உண்மை. எல்லா உறுப்பினர்களுக்கும் இது தெரியும் என்று நினைக்கிறேன். இந்நிலை மாற வேண்டும். இந்நிலையை மாற்றியமைத்தாக வேண்டும். இல்லை என்றால் ஏழை எளிய மக்கள் ஊரில் வாழ முடியாது.

நான் கிராமத்தில் இருக்கிறேன். பொது மக்கள் வந்து சொல்கிறார்கள். "மது அருந்தாதவர்களையும் போலீஸார் கொண்டு போகிறார்கள், வழக்கு போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். வழக்கு தொடர்ந்து "நான் மது குடித்தேன் அல்லது மது தயாரித்தேன்" என்று ஒத்துக்கொள்ளச் சொல்கிறார்கள்; ஒத்துக் கொண்டால் 15 ரூபாய் அபராதத்தோடு நின்று விடுகிறது; ஒப்புக்கொள்ள மறுத்து வழக்காடினால் எங்களுக்கு வேலை இல்லாது போகிறது. நாங்கள் அன்றாடம் கூலி வேலை செய்துதான் சம்பாதித்துச் சாப்பிட வேண்டும், வழக்கு போட்டால் பத்

நாட்கள் வேலைக்குப் போக முடிவதில்லை" என்று கூறுகிறார்கள். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குகளை உடனடியாக விசாரணை செய்வதில்லை. நடைமுறையைச் சொல்கிறேன். பத்து நாட்கள் வழக்கை போஸ்ட்போன் செய்துவிடுகிறார்கள். இதனால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இது நீண்ட நாட்களாக இருக்கக் கூடிய ஒரு தொத்து வியாதியாக இருக்கிறது.

இன்னொன்றும் சொல்வேன். உடனடியாக ஆதாரங்களைக் கொடுங்கள் என்று கேட்கக் கூடாது. போலீஸ் இலாகாவில் அடிமட்டத்தில் இருக்கிறவர்கள் எல்லோரும் ஊழலற்றவர்கள் என்று சொல்ல முடியாது. ஊழல் செய்பவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். மறுக்க முடியாது. கீழ் உள்ள போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கு பதவி உயர்வு கிடைக்க வேண்டுமென்பதற்காக, மேல் அதிகாரிகளுக்கு உகந்தவர்களாக நடக்க வேண்டும் என்று கருதினால் மேல் அதிகாரிகளுக்கு கொஞ்சம் 'கேட்டர்' செய்ய வேண்டும். அவர்களது தேவைகளுக்கு சிறிது 'கேட்டர்' செய்து கொண்டு போக வேண்டியிருக்கிறது. இதை விசாரித்து அங்குள்ள ஊழல்களை மாற்ற ஒரு விசாரணை கமிஷன் போடுங்கள். போலீஸ் இலாகாவிலேயே நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள். சிறந்தவர்கள் இருக்கிறார்கள். ஒப்பற்றவர்கள் இருக்கிறார்கள். கை சுத்தமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் போட்டு விசாரித்தால் பல உண்மைகள் தெரிய வரும். மேல் அதிகாரிகளுக்கு 'கேட்டர்' செய்ய பணம் தேவைப்படுகிறது. அரிசி தேவைப் படுகிறது. காய்கறி தேவைப்படுகிறது. கறிகள் எல்லாம் தேவைப்படுகிறது. இவற்றையெல்லாம் கீழ் உள்ள அதிகாரிகள் மேல் அதிகாரிகளுக்கு கொடுத்தாக வேண்டும் என்ற இந்த நிலை இருக்கும்போது அங்கு ஊழலை எப்படி அகற்ற முடியும்? இந்நிலையில் மதுவிலக்கு வழக்குகள் அதிகமாக ஜோடிக்கப் படுகின்றன என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். ஆகவே, இந்த நிலையை மாற்றுவதற்காக, மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த அடித்தளத்தில் உள்ள அதிகாரிகள் குடிப் பழக்கம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். நேர்மையாக அவர்கள் நடந்து கொள்ள வாய்ப்பு வசதியை நாம் செய்து கொடுக்க வேண்டும்.

ஆகவே, இந்நிலையை மாற்றுவதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் கட்டாயம் போட்டாக வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் இருபது உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் உறுப்பினர் அவர்கள் தயவு செய்து சீக்கிரத்தில் முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** நீர்ப்பாசனம் பற்றி ஒரு சில விஷயங்கள் கூறி முடித்துக் கொள்கிறேன். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக கோதையாறு பாசனத் திட்டத்திற்கு உட்பட்ட கால்வாய்கள் செப்பனிடப்படவில்லை. அவை சரியாக மராமத்து செய்யப்படவில்லை. எல்லாம் நிரந்து போயிருக்கின்றன. அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்டால் அது கீழ் நோக்கி வராமல் மேல் நோக்கிப் போகிறது. அப்படி மேல் நோக்கிப் போவதால் கால்வாய்களில் நிரம்ப உடைப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து உடனடியாக கால்வாய்களை செப்பனிட்டு கடைவரம்புப் பகுதிகளுக்கு தண்ணீர் போக வேண்டியதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பதினேழு மாத காலம் குடியரசுத் தலைவர் ஆட்சி நடந்து வந்திருந்த நேரத்தில் கவர்னருடைய ஆட்சி நேர்தலை வைத்து, அண்ணா அவர்களின் கொள்கையைக் கடைப்பிடிக்கும் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நிர்வாகம் நடந்து வரும் இச்சமயத்தில் கவர்னர் அவர்களது உரையின் மேல் பேச வாய்ப்பு கிடைத்திருப்பதற்கு நான் பெருமிதம் கொள்கிறேன்.

லஞ்ச லாவண்யமற்ற நிர்வாகம் நடைபெறும், இரு மொழிக் கொள்கை செயலாற்றப்படும், ஏழை எளிய விவசாயிகளுக்கு பாசன வசதி அமைத்துக் கொடுத்தல், மின் வசதி அளித்தல், மின் வசதி இல்லாத இடங்களில் மின் வசதி செய்து கொடுத்தல், குடிசைத் தொழில் மற்றும் கிராமங்களில் வீட்டு வசதி செய்து கொடுத்தல் போன்றவற்றைச் செய்வதாக, தமிழக மக்களுக்கு, ஏழை மக்களுக்கு செய்து கொடுப்பதாக இந்த உரையில் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத் தக்கது.





பொதுவாக, குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில், எனது தர்மபுரி மாவட்டத்தில் மூன்று ஆண்டுகளாக சரிவர மழை இல்லாததால் குடி தண்ணீர் வசதிக்காக இந்த அரசு முதன்மை இடம் கொடுத்திருப்பதாக கவர்னர் அவர்களது உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல் கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிக்கு முதல் இடம் கொடுத்திருப்பதையும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக வரவேற்கிறேன்.

மதுவிலக்குத் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்துவது குறித்து ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை தாய்மார்களின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டில் மின்சார வசதி இல்லாத கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தர இருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் போக்குவரத்து வசதி இல்லாத சிறு கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுப்பது பற்றி ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிட்டிருப்பதையும் வரவேற்கிறேன்.

(முற்பகல் 11-10)

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பருத்தி அதிகமாக விளைகிறது. அதை வைத்துக் கொண்டு தர்மபுரி மாவட்டத்தில் பருத்தி ஆலைகளை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரியை பொறுத்தமட்டில் அது ஒரு பின் தங்கிய மாவட்டம். இராமநாதபுரம் மாவட்டத்தைப்போல் இதுவும் ஒரு பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்றது. இந்த மாவட்டத்திற்கும் அதிக நிதி ஒதுக்கித் தருமாறு இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தர்மபுரி மாவட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிபுரிந்த காலத்திலும் சரி, அதற்கு முன் காங்கிரஸ் ஆட்சி புரிந்த காலத்திலும் சரி எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை. இப்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றிருப்பதால், இந்த மாவட்டத்திற்கு குறிப்பாக பர்கூர் பகுதிக்கு நீர்பாசன வசதிகளையெல்லாம் நல்ல முறையில் ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எச். ஜி. ஆறுமுகம்]

ஆளுநர் அவர்கள் உரையிலே இதற்கு இடமளித்
வரவேற்கத் தக்கதாகும். எனவே, இந்த நே
முதலிடம் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொ

எனது மாவட்டத்திலே, போக்குவரத்து வ
கிராமங்கள் இருக்கின்றன. அதிலும், குறிப்ப
தொகுதியிலே சாமல்பட்டியிலிருந்து குன்ன
வழியில் ஒரு பெரிய ஆறு இருக்கின்றது. அ
கட்டும்படி கேட்டுக் கொள்கிறேன். அதேபோல
பக்கத்திலேயும் ஒரு பாலம் கட்டும்படி கேட்
அதேபோல வேலம்பட்டிக்கு கால்வாய் தண்ண
அந்தக் கால்வாயை இன்னும் விரிவுபடுத்தினால்
போல், குந்தமான் ஏரியையும் விரிவுபடுத்த
கொள்கிறேன்.

ஆரூர் நகரம் ரிசர்வ் தொகுதியாக இ
நகரத்திற்கு குடிநீர் பிரச்னை மிகவும் தேவைய
அங்கே இப்போது 10, 15 குழாய்கள் போட்டு
செய்யப்பட்டிருக்கிறது. இது போதாது.
வசதி செய்து தர திட்டம் சாங்ஷன் ஆகி உள்ள
அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ள
கேட்டுக் கொள்கிறேன். எனக்கு, இந்தப்
வாய்ப்புக் கொடுத்த மன்றத் துணைத் தலைவர்
கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. டி. இராமசாமி : சட்டமன்றப்
தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள்
தெரிவிக்கின்ற, ஆதரித்துப் பேசுகின்ற
மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதா அ
வந்த இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்த
வந்திருக்கிறேன். இந்த வாய்ப்பு அளித்த
பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு
தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் உரையில் கிராமப்
வாழ்கின்ற மக்கள் பாதுகாப்பாக வாழ்வத
திட்டங்களை இந்த அறிவிப்பிலே செய்திருக்கி
நாட்டில் 9,300 நியாய விலைக் கடைகள்



1977 ஜூலை 11] [திரு. டி. இராமசாமி]

16,000 நியாய விலைக் கடைகள் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஏற்படுத்த இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். 9,300 நியாய விலைக் கடைகள் செயல்பட்டுக் கொண்டிருந்ததை, இப்படி அதிகரிக்கும்போது இடையே இடைத் தரகர்கள் இதிலே நுழைந்து மக்களுக்கு நியாயமாகப் போய்ச் சேர வேண்டியதற்கு மாறாக, இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்பட முடியாமல் போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. 16,000 ரெவின்யூ கிராமங்களுக்கும் ஒரு நியாய விலைக் கடை என்கின்ற திட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்ற இந்த நேரத்தில், இதிலே இடையிலே இடைத் தரகர்கள் உள்ளே நுழைந்து விடாமல், நிறைவேற்றப்படுகின்ற இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்பட்டு, இந்த வசதிகள் பூராவும் அங்குள்ள மக்களுக்கே முழுமையாகப் போய்ச் சேர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அதிலே இந்த அரசு கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், குடி தண்ணீர் பிரச்னை சம்பந்தமாக கவர்னர் அவர்கள் உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இராமநாதபுரம் தொகுதியைப் பொறுத்தமட்டில் அது மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து வருகின்றது என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல் அமைச்சர் பதவியை ஏற்றபோது, அவரது காலத்தில் இந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய குடி தண்ணீர் பிரச்னையை உணர்ந்து, அவர்களுக்கு வாழ்வளிப்பதற்காக 40 லட்சம் ரூபாய் செலவில் குடி தண்ணீர் திட்டம் கொண்டுவரப்பட்டு, செயல்பட்டுக் கொண்டு இருந்தது. இந்தத் திட்டம் முழுமையாக செயல்பட்டு இருந்தும்கூட, கடந்த மூன்று ஆண்டு காலமாகவும், இன்றைய தினமும் முழுமையாக செயல்பட்டது என்று மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் இருப்பதாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. காரணம் 12 மைல் தொலைவிலுள்ள பொட்டிசட்டி என்ற கிராமத்திலிருந்து, வைகை ஆற்றுப் படுகையிலிருந்து ஆங்காங்கே கிணறுகள் வெட்டி, குழாய்கள் மூலமாக இராதாபுரத்துக்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இன்றைய தினம் இப்படி வரக்கூடிய தண்ணீர், காலையில் அரை மணி நேரமும், மாலையில் அரை மணி நேரமும் விடக்கூடிய நிலையில்தான் உள்ளது. மாதத்திற்கு

ஐந்தாறு நாட்கள் தொடர்ந்து தண்ணீர் வராமலும் போய் விடுகின்றது. இதைப் பற்றி அதிகாரிகளிடம் பலமுறை சொல்லியும்கூட, அவர்களால் செயல்படுத்த முடியாத அவல நிலையில்தான் உள்ளது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதையெல்லாம் தீர்ப்பதற்கு சட்ட ரீதியாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மனப்பூர்வமாக இந்த கவர்னர் உரையை நான் ஆதரிக்கின்றேன், வரவேற்கின்றேன்.

அடுத்தாற்போல், நகராட்சித் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்தால், அதற்கான தலைவர்களை பொது மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பது என்று கவர்னர் அவர்கள் உரையிலே அறிவித்திருக்கிறார்கள். மக்களாட்சி இன்னும் சிறப்பாக அமையும் வகையில் இந்தக் கருத்து கவர்னர் அவர்கள் உரையிலே அமைந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவ வசதியைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். தற்போது கிராமங்களிலே மருத்துவ வசதியில்லாமல் ஏழைகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதுவும், குறிப்பாக தாய்மார்கள் கர்ப்பமாகி, பிரசவ வேதனைப்படுகின்ற நேரத்திலே, பெரிய ஆஸ்பத்திரி வசதியில்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அப்படி பிரசவ வேதனைப்படும் நேரத்திலே, பஸ்ஸிலோ அல்லது கட்டை வண்டிகளிலோ போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப் போகும்போது பிரசவம் வெற்றி பெறுமா, பெறாதா என்ற நிலைகூட ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அவல நிலையை கிராமங்களிலே ஒழித்தாக வேண்டும். அப்படி உயிருக்குப் போராடும், பிரசவ வேதனையைப் போக்கக்கூடிய வகையிலே, கிராமங்களிலே மருத்துவ வசதிகளைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, கவர்னர் அவர்கள் உரையிலே மருத்துவ சம்பந்தமாக அறிவித்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்தாற்போல், முக்கியமாக மீனவர்களுடைய பிரச்னை உச்சக்கட்டமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டவனாய் இருக்கிறேன். என்னுடைய தொகுதியான



இராமநாதபுரத்தில் மீன் பிடிப்புத் தொழில் முக்கியமான தொழிலாகும். அதிலும் முக்கியமாக இராமநாதபுரம் தொகுதியிலுள்ள கடலாலே சூழப்பட்ட இராமேசுவரம் தீவுப் பகுதியிலும் மற்றுமுள்ள கடலோரப் பகுதிகளிலும் இருக்கின்ற மீனவர்கள் விசைப் படகுகள் மூலமாகவும் தோணிகள் மூலமாகவும் போய் மீன்பிடித் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பல நேரங்களிலும் இந்தப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பும் புயலும் அதிகமாக ஏற்படுகின்ற நேரத்தில் கடலில், விசைப் படகுகளிலும், தோணிகளிலும் போகின்றவர்கள் கரைக்கு திரும்பி வந்து சேர முடியுமா என்பது நிச்சயமற்றதாக இருக்கிறது. இதன் காரணமாக பல மீனவர்கள் இப்படிப்பட்ட இயற்கை கோளாறுகளினால் இறந்து விடுகிறார்கள். இப்படி கடலில் காணாமல் போகும் மீனவர்களை கண்டுபிடிக்க இப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் போதுமானதாகவும், உதவியானதாகவும் இல்லை. காணாமல் போகும் மீனவர்களை கண்டுபிடிக்க வீணாக காலதாமதம் ஏற்படுகிறது. இதற்கு வேண்டிய சரியான வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு இன்னும் அறிவிக்கவில்லை. விசைப் படகு, தோணி இவைகளைப் பயன்படுத்திக்கொண்டு போகும் மீனவர்கள் காணாமல் போகும் போது, அவர்களை கண்டுபிடிக்க, அரசு உடனடியாக 'ஆபத்து உதவி படகு'களை தயாரான நிலையில் வைத்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். இதற்காக, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில திட்டங்கள் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதை செயல்முறைக்கு கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டவனாய் இருக்கிறேன்.

அத்துடன் இராமேசுவரம் தீவில் ஹெலிகாப்டர் ஒன்றை வைத்தால்—காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிக்கவும், மீனவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் முடியும். சாதாரணமாக மீனவர்களைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டு, அவர்களை தேடுவதற்காக ஹெலிகாப்டர் வருவதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே ஹெலிகாப்டர் மீன் துறையில் இருக்குமானால் இதுபோன்ற ஆபத்தை தவிர்க்க முடியும். ஆகவே இராமேசுவரத்தில் ஹெலிகாப்டர் ஒன்றை வைத்துக் கொள்வதற்கு மீன் துறைக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாய் இருக்கிறேன்

இன்னொரு முக்கியமான தொழில் பிரச்னை, பன்னெடுங் காலமாக இராமேசுவரத்திலுள்ள மீனவர்கள் அருகிலுள்ள கச்சத் தீவில் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சமீப காலத்தில் கச்சத் தீவு இலங்கைக்கு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கச்சத் தீவை அடுத்துள்ள இடங்களில் நம் மீனவர்கள் சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை. கச்சத் தீவு போனதைப் பற்றியோ அல்லது நாம் இழந்து போன உரிமையை திரும்பப் பெற வேண்டுமென்றோ நான் பேசவில்லை. அந்த உரிமைக்காக நான் வாதாடவும் வரவில்லை. இலங்கையோடு இருக்கும் இந்த கச்சத் தீவில் இரால் மீன் கிடைக்கக் கூடிய வளம் கொழிக்கும் பகுதியாக இந்தத் தீவு இருந்து வந்தது. ஆகவே இன்றைய தினம் கச்சத்தீவின் அடுத்துள்ள இடங்களில் நம் மீனவர்கள் சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அந்தவிதமான அனுமதி இல்லாததின் காரணமாக அந்தப் பகுதியில் மீன் பிடிப்புத் தொழில் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே தமிழக அரசின் சார்பாக இந்த கருத்தைத் தெரிவித்து இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள், வழி தவறி, பிற நாடுகள் அல்லது பிற மாநிலங்களின் கடற்கரைக்கு செல்லும் போது, இவர்கள் மீனவர்கள்தானா என்பதை அறிய முடியாத காரணத்தால் தேவையில்லாத பல தொல்லைகளுக்கு ஆளாகின்ற ஆபத்தான கட்டம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நேரத்தில் இவர்கள் தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள்தான் என்று தெரியும்படியான அளவில் அடையாள கார்டுகளை இவர்களுக்கு வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவிக்க நான் கடமைப்பட்டவனாய் இருக்கிறேன்.

மேலும் தமிழக மீன்துறை அதிகாரிகளுக்கு கச்சத் தீவு போன்ற இடங்களுக்குச் சென்றுவர பாஸ்போர்ட் வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. வழி தவறி செல்லும் மீனவர்களுக்கு உதவி செய்யும் வகையில் மீனவர்களை மீட்டுத் தருவதற்கு பிற இடங்களுக்குச் செல்ல பாஸ்போர்ட் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற இந்தக் குறிப்பை இந்த நேரத்தில் தெரிவிக்க வேண்டிய கடமைப்பட்டவன் ஆவேன்.





இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் பார்க்கின்ற நேரத்தில், விவசாயப் பிரச்னையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதாவது எங்கள் பகுதியில் சுமார் 6,500 ஏக்கரா பாசனத்திற்கு பெரிய கண்மாய் என்ற பெரிய ஏரிக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் விட வேண்டியிருக்கிறது. ஆனால் அணையிலிருந்து உரிய நேரத்தில் தண்ணீர் விடாமல் இருப்பதால், சாவியைத்தான் அறுத்தெடுக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. காலந்தாழ்ந்து தான் தண்ணீர் திறந்துவிடுகிறார்கள். இதன் காரணமாக பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற எங்கள் இராமநாதபுரம் பகுதி மக்கள் சாவியைத்தான் அறுத்தெடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மேலும் பெரிய அதிகாரிகளைச் சந்திக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினால், எங்கள் மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தாலும் கூட, அலுவலகம் எல்லாம் மதுரையில்தான் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. திருச்சி மாவட்டம் என்று சொன்னால், திருச்சியில் அலுவலகம் இருக்கும். மதுரை மாவட்டத்தில் என்றால் மதுரையில் இருக்கும். நெல்லை மாவட்டம் என்று சொன்னால் நெல்லையில் இருக்கும். ஆனால் இராமநாதபுரம் என்று சொன்னால் இதனுடைய தலைமை அலுவலகங்கள் எல்லாம் மதுரையில் இருக்கின்றன. எங்களுடைய குறைகளைத் தெரிவிக்க வேண்டுமென்றால், இதற்கான அதிகாரிகள் மதுரையில் இருப்பதால் எங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல முடிவதில்லை. இதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, திரு. இராதா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து, கவர்னர் உரையில் அண்ணாவைப் பற்றியும் இதில் சொல்லியிருக்கிறார்கள் என்று கூறி, இதை மனதார உளமார வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கீழ்க்கண்ட கருத்தை சொல்ல விழைகிறேன்.

[திரு. மு. அம்பிகாபதி] [1977 ஜூலை 11

ஆளும் கட்சியின் கொள்கையைப் பிரதிபலிப்பதுதான் மேதகு ஆளுநர் அவர்களின் உரையாகும். சமூகப் பொருளாதார கொள்கையில் தெளிவான பார்வையின்மையின் விளைவால் ஆளுநர் உரையிலும் கொள்கை தெளிவாக இல்லை. நிறைவேற்றுவதற்கான திட்டமும் இல்லை. குறிப்பாக, தமிழ்நாடு இந்தியாவிலேயே தொழில் துறையில், கல்வித் துறையில், நிர்வாகத் துறையிலும் முன்னணியில் இருந்ததாகும். முன்னணியிலிருந்த நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கு வறுமையின் எல்லைக் கோட்டுக்குகீழ் வாழ்கின்ற மக்கள் 59 சத வீதமாக நம்முடைய வாழ்க்கைத்தரம் அமைந்திருக்கிறது என்று ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

தொழில் துறையைப் பொறுத்தளவில், இருபது ஆண்டுகளாக நாம் 250 சத வீதம் வளர்ந்திருப்பதாக திட்டக் கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. பிறப்பு விகிதத்தை எடுத்துக்கொண்டால் 25 சத வீதம் உயர்ந்திருக்கிறோம். அதாவது மூன்று கோடி, நான்கு கோடி என்ற அளவில் மட்டுமே வளர்ந்து இருக்கிறது. இவ்விதம் தொழில்துறை வளர்ச்சி அபாரமாக இருந்திருக்கிறது. பிறப்பு விகிதம் குறைந்திருக்கிறது. தொழில் வளர்ந்தும் வறுமை 59 சதம். காரணமென்ன? இந்த அடிப்படையை உணர்ந்து நம்முடைய தமிழகத்தை வளமாக்குவதற்கு வேண்டிய திட்டங்கள் ஸ்தூலமாக ஆளுநர் உரையில் சொல்லப்படவில்லை.

தமிழகத்தில் தொழில் துறை என்று எடுத்துக்கொள்ளும் போது விவசாயத் துறையின் வளர்ச்சியையும் இணைத்துத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். மகாகவி பாரதியார் சொல்லியது போல் . . . உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் . . . என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து, உழவுத் தொழிலையும் சேர்த்து எடுத்துக்கொண்டால் தான் தொழில் துறை முன்னேற்றத்தைக் காண முடியும். கரும்பு விவசாயம் நன்றாக இருந்தால்தான், சர்க்கரை ஆலை ஓட முடியும். பருத்தி விவசாயம் நன்றாக இருந்தால்தான், பஞ்சாலை ஓட முடியும். கடலை நன்றாக விளைந்தால்தான் ஸோப்பும், பற்பசை போன்ற பொருள்கள் செய்கின்ற தொழிலும் வளர முடியும். நம்முடைய தொழில் துறை வளர வேண்டுமென்றால் குறைந்தது 100 கோடி ரூபாய் மானியம் மத்திய அரசு கொடுக்கவேண்டும். அந்த 100 கோடியில் தஞ்சை



1977 ஜூலை 11] [திரு. மு. அம்பிகாபதி]

மாவட்டத்தைப் பொறுத்தவரை ராட்சஸ குழாய்க் கிணறுகளை அமைத்து தண்ணீர் கொடுப்பதற்கான வசதி செய்து கொடுக்க வேண்டும். அதற்கான உத்தரவாதம் கவர்னர் உரையில் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக விவசாயத் துறை செழித்தால்தான் நம்முடைய தொழில் துறை வளர முடியும்.

பெரிய தொழில்களை எடுத்துக்கொண்டால், மத்திய அரசின் கீழ்தான் துப்பாக்கித் தொழிற்சாலை, டாங்கி தொழிற்சாலை, ஹெவி பாய்லர் தொழிற்சாலை, முதலியவை இருக்கின்றன. நம் அரசின் துறையை எடுத்துக் கொண்டால், எலக்ட்ரிசிட்டி, டிரான்ஸ்போர்ட், அதாவது சோழன் போக்குவரத்துத் துறை போன்ற துறைகள் இருக்கின்றன. மத்திய அரசுத் துறையை எடுத்துக் கொண்டால், சுமார் 400 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு இருக்கிறது. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் தமிழக அரசுத் துறை சுமார் 380 கோடி ரூபாய் என்றும் சொல்லுகிறார்கள். தமிழகத்தொழில் துறையைப் பொறுத்தவரையில், புதிய திட்டங்களைப் போடுகின்றபோது, தொழிலாளிகளுக்கு நிர்வாகத்தில் போதிய பங்கு அதாவது உண்மையான பங்கு கொடுத்து, அதன் மூலம் வீண் விரயத்தைப் போக்கி லாபத்தைப் பெருக்கி தொழிலை வளர்ப்பதற்கான திட்டம் எதற்கும் கவர்னர் உரையில் உத்திரவாதம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இப்படிச் செய்தால் வரியைக் குறைக்க முடியும், வசதியைப் பெருக்க முடியும்.

[முற்பகல் 11-30]

16,000 கடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சிக்குரிய விஷயம்; வரவேற்கத்தக்கது. அந்த 16,000 கடைகளுக்குத் தேவைப்படுகிற உணவுப் பண்டங்கள், துணி, எண்ணெய், சோப்பு, புத்தகம் இவைகளுக்கு அரசு என்ன செய்யப் போகிறது என்று உத்தரவாதம் இல்லை. அதற்குத் தேவையான உணவுப் பொருள்களை அரசே கொள்முதல் செய்யும் கொள்கையும் மக்களுக்கு அளிப்போம் என்பதற்குத் திட்டவட்டமான உத்தரவாதமும் இல்லை.

பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. கோவையில் பிரகாசா ஆலை, தமிழ்நாடு நூற்பாலை, லோடஸ் ஆலை மூடப்பட்டிருக்கின்றன. ஒரு மாத காலத்திற்கும் மேலாக மூடப்பட்டிருக்கின்றன. பேச்சு வார்த்தை நடந்து கொண்டே இருக்கிறது. தொழிலாளர்கள்

வருகிறார்கள். வருகிற தொழிலாளர்களுக்குத் தேவையான சகல விதமான வசதிகளையும் நிர்வாகமும் அரசாங்கமும் செய்து கொடுக்கவேண்டும். கைத்தறி நூலின் விலை 25 சதவிகிதம் உயர்கிறது. புத்தகத்திற்குத் தேவையான காகிதத்தின் விலை உயர்ந்திருக்கிறது. எப்படி நீங்கள் உணவுப் பொருளையும், அத்தியாவசியப் பண்டங்களையும் 16,000 கடைகளுக்கும் வழங்கப் போகிறீர்கள்? எனவே, அரசே கொள்முதலையும், விநியோகத்தையும் ஏற்க வேண்டும்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் அரசாங்கத் துறை, கூட்டுறவுத் துறை என்பதற்கு மேல் கூட்டுத் துறை—ஜாயின்ட் செக்டார் என்று ஒன்று கண்டுபிடித்துள்ளார்கள். அரசாங்கத்தின் பணம் அதிகமாகவும் தனியாருடைய பணம் குறைவாகவும் சேர்ந்தது. 'ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே' என்பது போல் அரசாங்கப் பணத்தைக் கொடுத்து அதற்குத் தனிப்பட்ட முதலாளி ஒருவர் பொறுப்பு இருப்பார்கள் என்று இருக்கிறது. அதற்கு உதாரணமாக 'ஸ்பிக்'-கைச் சொல்ல முடியும். அத்தகைய துறைகளை அரசே மேற்கொள்ள வேண்டும். சகலமும் அரசாங்கத் துறையில் நடக்க வேண்டும். சோஷலிசம் என்று சொல்லும்போது அந்நாட்டின் உற்பத்திச் சாதனங்களின் மீது அரசு மேலாதிக்கம் செலுத்துவதாகும். அதைத்தான் தோழர் லெனின் 1917-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7-ஆம் நாள் செய்து காட்டினார். ஆட்சி ஏற்ற மறுநாளே செய்தார். 'Land to the tillers' உழுபவனுக்கு நிலம், உழைப்பவனுக்குத் தொழில் என்ற திட்டத்தை நிறைவேற்றிக் காட்டினார்கள். நம்முடைய அரசு உற்பத்திச் சாதனங்களில் மேலாதிக்கம் செலுத்துவது பின்னர் இருக்கட்டும். நொடித்த மில்களைத் தமிழக சர்க்கார் எடுப்போம் என்ற உத்தரவாதத்தையாவது தயவு செய்து கொடுக்கவேண்டும். மத்தியில் வந்திருக்கும் சர்க்கார் நொடித்த மில்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளாமல் நன்றாக நடக்கும் மில்களுடன் சேர்த்து விடுவோம் என்று கூறுகிறார்கள்.

இங்கே நம்முடைய தொழில் துறையைப் பொறுத்தவரை தெளிவான கொள்கை வேண்டும். தொழிலாளருக்குப் பாதுகாப்பு வேண்டும். பதிலி, காண்டிராக்ட், ட்ரெயினீ, லேர்னி என்று பல காடகிரிகள் இருக்கின்றன. இன்ட ... ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரிஸ்



என்று சொல்லக்கூடிய பஞ்சாலைத் தொழில், சர்க்கரை ஆலைத் தொழில் ஆகியவற்றில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கே பாதுகாப்பு இல்லை. வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையில் 1970 ஆகஸ்ட் 5-ம் தேதி, வி. பி. சுப்பையா என்ற தொழிலாளியும் மற்றும் நான்கு பேர்களும் நிலமீட்சிப் போராட்டத்தைக் காரணம் காட்டி சம்பந்தமின்றி கைது செய்யப்பட்டு அதன் காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட வழக்கு இன்னமும் நடக்கிறது. எந்தக் கோர்ட்டுக்குப் போவது என்றே தெரியவில்லை. ஃபுல் பெஞ்சில் வழக்கு இருக்கிறது. தொழிலாளி கோர்ட்டுக்குப் போவதற்கான செலவை அரசாங்கமோ, அல்லது நிர்வாகமோ ஏற்கவேண்டும் என்று சட்டம் வேண்டும்.

ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரியிலேயே இந்தக் கதி என்றால், ஆர்கனைஸ்டு இல்லாத லாரி, சுருட்டு, பீடி, உப்பளம், புகையிலை, அச்சகம், சுமைதூக்குதல் போன்ற தொழிலில் இருக்கக்கூடிய தொழிலாளர் நிலையை என்ன சொல்லுவது? சுருட்டுத் தொழிலாளிக்கு எல் 2 லைசென்ஸ் முறையைப் புகுத்தியதன் மூலம் தஞ்சை, குடந்தை, திருச்சி, நாகை, நல்லாடை, மன்னார்குடியிலும் சகல சுருட்டுத் தொழிலாளர்களும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் கணக்கில் கொண்டு பார்க்க வேண்டும். அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச போனஸ் உத்தரவாதமும் வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை வேலை நிறுத்தங்கள் குறைந்திருந்தாலும் லாக்-அவுட்ஸ் அதிகமாகியிருக்கிறது. டி.வி.எஸ்., இளேட்டன் மற்றும் பல தொழிற்சாலைகள் லாக்-அவுட் செய்யப் பட்டிருக்கின்றன. லாக் அவுட் செய்யும் முதலாளிகளை 'மிசா'-வில் கைது செய்ய வேண்டும். லாக்-அவுட்டால் பாதிக்கப்பட்ட தொழிலாளி கோர்ட்டுக்குப் போய் வர கடன்பட்டு செத்துக் கொண்டிருக்கிறான். கம்பன் கூறியதுபோல்—

'விடங்கொண்ட மீனென வெந்தணல்வாய் மெழுகென
படங்கொண்ட பாம்பின்வாய் பற்றிய தேரையென
திடங்கொண்ட ராமபாணம் செருகளத்துற்றபோது
கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை
வேந்தன்

என்பது போல் கடன்பட்டு நெஞ்சம் துடிக்கிறார்கள் தொழிலாளர்கள்.

[திரு. மு. அம்பிகாபதி] [1977 ஜூலை 11

தொழிலாளி வேலைக்குப் போகும்போது அவனுடைய சைக்கிளில் இரண்டு பேர் போனால் போலீசார் பிடித்துக் கொள்ளுகிறார்கள். ஆந்திராவில் இரண்டு பேர் போகலாம் என்று இருக்கிறது. மத்தியப் பிரதேசம், இந்தூரில் போவதை நானே கண்டேன். இங்கே மூன்று பேர் போகலாம் என்றுகூட வைத்தால் நல்லது. அப்படி இரண்டு பேர் போகக்கூடாது என்று சொன்னால் இன்னொருவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுங்கள்; லைட் இல்லாதவர்களைப் பிடிப்போம் என்று சொன்னால் லைட் வாங்கிக் கொடுங்கள் அல்லது மான்யம் அளியுங்கள். இப்படி ஏழை எளிய நிலைமையில் வாழ்கின்ற லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுங்கள்.

தஞ்சையில் தாவுத் பீபி அம்மாள் தலைமையில் 200-க்கு மேற்பட்ட பெண்கள் தண்ணீர் வேண்டுமென்று ஊர்வலம் சென்றிருக்கிறார்கள். தோழர் கூத்தங்குடி சண்முகம் தொகுதியில் நெற்குப்பையில் தண்ணீர் வசதி தேவை என்று கூறியிருக்கிறார்கள். நகரங்களிலேயே கடும் தண்ணீர் பற்றாக்குறை. இது பற்றியெல்லாம் தெளிவான கொள்கையை அளிக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த மாற்றங்களை எல்லாம் செய்து வேகமான முன்னேற்றத்திற்கான முறையில் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக மேதகு ஆளுநர் அவர்கள் அளித்திருக்கும் பேருரைக்கு நன்றியையும், வரவேற்பையும் தெரிவிக்கின்ற முறையில் சில கருத்துக்களை கூறமுற்படுகிறேன்.

தமிழக ஆளுநர் அவர்கள் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிற வகையில், வரவேற்கின்ற வகையில் தமிழக வரலாற்றிலேயே முதன் முதலாக மேதகு ஆளுநர் உரை தமிழில் படிக்கப்பட்டது மிகவும் பாராட்டுதற்குரியதாகும், வரவேற்கக் கூடியதாகும். தமிழில் இப்போதைய அரசு வைத்திருக்கிற நம்பிக்கையையும் தமிழாராய்ச்சியில் இந்த அரசு எடுக்கப் போகிற ஆக்கபூர்வமான திட்டங்களுக்கும் இது முன்னோடியாக இருக்கிறது என்பதால் இதை வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1977 ஜூலை 11] [திரு. கே. கந்தசாமி]

ஜனநாயகத்தைப் பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். அப்படிப் பேசுகிற நேரத்தில் இன்றைய அரசின் முதல்வராக வந்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் ஆள்வதற்குத் தகுதியுடையவராக இருப்பார்களா, பொறுப்பை ஏற்று—தான் அதிகமாகப் புகழை ஈட்டியிருந்த சினிமாத் துறையிலிருந்து வந்து அரசுப் பொறுப்பை ஏற்று நடத்துவாரா, சோஷலிச சமதர்மத் திட்டத்தை அண்ணா சொன்னது மாதிரி நடத்திக் காட்டுவாரா என்ற பெரும்பாலான அரசியல்வாதிகளின் கேள்விக்குறிக்குப் பதிலளிக்கின்ற வகையில் அவற்றை நடைமுறையில் செயல்படுத்திக் காட்டுகிறேன் என்ற அளவுக்கு, ஜனநாயகத்தில் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதற்கேற்ப புரட்சித் தலைவர் அவர்கள், ஒன்றியத் தலைவர்களின் தேர்தல், நகராட்சித் தலைவர்களின் தேர்தல்கள் மக்கள் வாக்கெடுப்பு மூலம் நேரடியாக நடைபெறும் என்று அறிவித்திருப்பதைப் பார்க்கும்போது அவர் எந்த அளவுக்கு ஜனநாயக, சமதர்மத் திட்டங்களை நிறைவேற்றிக் காட்டுவார் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

கவர்னர் உரையில் விரிவான, ஆக்கபூர்வமான திட்டங்களைப் பற்றி விவரமாக, விளக்கமாகக் கூறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தெரிவித்தார்கள். அப்படிக் கூறுவது அவர்கள் உரிமை என்றாலும் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறன். 'பின்னால் பட்ஜட் தயாரிக்கப்பட இருக்கிறது; புதிய அரசு அதைத் தயாரித்து சமர்ப்பிக்கும்போது விரிவான திட்டங்கள்' வெளியிடப்படும் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இது ஒரு முன்னோடி—

**skeleton announcement for future programme**

இது ஒரு சுருக்கமான அறிவிப்பே தவிர, மேலெழுந்தவாரியான அரசினுடைய கொள்கைத் திட்டங்களே தவிர, விரிவான அறிக்கை அல்ல என்பதை ஆளுநர் அவர்களே கூறியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை மேற்கொண்டு நல்ல முறையில் மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புக் கிடைக்காமல் இருப்பவர்களுக்கு 'ஈக்வல் ஸ்டேடஸ்' கொடுக்க முடியாவிட்டாலும், 'ஈக்வல் ஆப்பர்சூனிடி'—சம வாய்ப்புக் கொடுக்கும் வகையில் சோஷலிச ஆட்சியை இன்றைய அரசு

[திரு. கே. கந்தசாமி] [1977 ஜூலை 11

நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காகப் பலவிதமான முற்போக்குத் திட்டங்களை எதிர்காலத்தில் உருவாக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, அந்தத் திட்டங்களையெல்லாம் நல்ல முறையிலே செயல்படுத்தவேண்டுமென்று கேட்டு அட்மினிஸ்ட்ரேஷனைப் பொறுத்தவரையில் கிளீன் அண்ட் ப்யூர் அட்மினிஸ்ட்ரேஷன் கொண்டுவருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள், மிக சுத்தமான பரிசுத்தமான தூய அரசை ஏற்படுத்துவோம் என்றும்—ஆட்சிப் பிடிப்பிலே உள்ளவர்கள், மற்ற பொறுப்பில் உள்ளவர்கள் அரசியல் ரீதியாகவோ வேறு விதமாகவோ தலையிடக்கூடிய நிலைமையை செல்வாக்கு உள்ளவர்கள் தலையிடக்கூடிய நிலைமையை, தங்கள் சொந்த லாப நட்டம் காரணமாக நிர்வாகத் திறமையைக் குலைக்கக்கூடிய வழியில் தலையிடக் கூடியநிலைமையை, நியாயமான தீர்வுகளை ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காமல் செய்யக்கூடிய நிலைமையை—நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள், அது பாராட்டுதலுக்குரியது.

அதேபோல ஆளுநர் அவர்களின் உரையில் மத்திய மாநில அரசுகளின் உறவு குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த உறவு நல்ல முறையிலே இருக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டாக மத்தியிலே ஜனதாக் கட்சி ஆட்சி இருக்கிறது, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துவிட்டு அதற்குப் பிறகு பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் உட்பட பல தலைவர்களையும் அமைச்சர்களையும் சந்தித்துவிட்டு எதிர்காலத்திலே தமிழக அரசு என்ன என்ன முறையிலே செயல்படும் என்று தெரிவித்துவிட்டு வந்திருப்பது உள்ளபடியே ஒரு நல்ல சகுனம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துரதிருஷ்டவசமாக இதற்கு முன்னால் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே இருந்த உறவு அரசியல் காரணமாக சரியாக இல்லாமல் இருந்தாலும், மத்திய அரசும் மாநில அரசுகளும் தங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளைத் தீர்க்கக்கூடிய முறையிலே பலநிலங்களுக்கு விட்டுக் கொடுத்து, குறிப்பாகத் தண்ணீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையில், அது காவிரி நதி நீர்ப்பிரச்னையாக இருந்தாலும், கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்னையாக இருந்தாலும், கங்கை--காவிரி இணைப்புத் திட்டமாக இருந்தாலும்—இதைப் பற்றி எங்கள் தேசிய பார்வார்டு பிளாக் கட்சி ஏற்கனவே வலியுறுத்திக் கூறியிருக்கிறது—இந்த நதிகளை மத்திய [illegible]



1977 ஜூலை 11] [திரு. கே. கந்தசாமி]

கொள்வதாக இருந்தாலும் மாநிலங்களுக்குத் தண்ணீர் பங்கிடுகிற பிரச்னையாக இருந்தாலும், மாநிலங்கள் தங்களுக்கிடையே உள்ள பிரச்னையை அண்ணன் தம்பி பிரச்னை என்ற முறையிலே எடுத்துக்கொண்டு குடும்பத்தின் தாய் என்ற முறையிலே மத்திய அரசு இருந்துகொண்டு ஒரு வீட்டிலுள்ள தாய் அங்கே உள்ள எல்லாக் குழந்தைகளின் நலன்களையும் பார்த்து காரியங்களைச் செய்வது போல், மத்திய அரசு தாய் ஸ்தானத்தில் இருந்து மாநிலங்களின் தேவைகளை உணர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் காவிரி நீர்ப் பிரச்னையாகட்டும், வைகை நதிப்பிரச்னையாகட்டும், அரபிக் கடலிலே சென்று விழுகின்ற தண்ணீர் ஆகட்டும், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து பல நதிகளின் நீர் மேற்கே சென்று கடலிலே வீணாகின்றது—எது எதற்கோ பாம் பயன்படுத்துகிறார்கள், நாச வேலைகளுக்காக மக்களுடைய உயிர், உடைமைகளை அழிப்பதற்காக பாம்களைப் பயன்படுத்துகிறார்கள், அந்த குண்டுகளை அழிவு வேலைக்குப் பயன்படுத்தாமல், மேற்குத் தொடர்ச்சி மலையிலே போட்டால் அது உடைத்தெறியப்பட்டு தண்ணீர் திரும்பி மக்களுக்குக் கிடைக்கிறவேலை சுலபமாக முடிந்துவிடும், அதன்மூலம், மதுரை, இராமநாதபுரம், கோவை மாவட்ட மக்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும். இப்படிப் பட்ட ஆக்க வேலைகளுக்கு விஞ்ஞானத்தைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்பட வேண்டும்.

Scientific brains should be used for constructiv: purposes and not distructive f:r purposes.

இதைப்பற்றியெல்லாம் மாநில அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லவேண்டும். இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் மாநில அரசுக்கு மத்திய அரசு ஒத்தாசை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே முன்னாலே பேசிய சகோதரி சுப்புலட்சுமி அவர்கள் பேசியபோது குடிநீர்ப் பிரச்னை தாய்க்குலத்தின் பிரச்னை, அது உடனடியாகத் தீர்க்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். அது தாய்க்குலத்தின் பிரச்னை மட்டுமல்ல, மனித குலத்தின் பிரச்னை என்ற முறையிலே நீண்ட நாளைய பிரச்னை என்ற முறையிலே கவனிக்கப்படவேண்டும். இந்த நாட்டிலே கிராமங்களிலே உள்ள

விவசாயிகள்தான் 100க்கு 70 சதவீதம் பேர் இருக்கிறார்கள். ஆகவே கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு உள்ளபிரச்னை களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

They are the backbone of industry and they are the backbone of human life

ஒரு இண்டஸ்ட்ரியிலே 1,000 ஒர்க்கர்ஸ் வேலை செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அவர்கள் உடனே கவர்னரைப் பார்க்கிறார்கள் அல்லது அமைச்சர்களைப் பார்க்கிறார்கள், இந்த முறையிலே அவர்களுடைய கிரிவன்ஸ் ரெட்ரஸ் ஆகிறது.

ஆனால் விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவன் பல வருஷங் களுக்கு முன்பு வைத்துக்கொண்டிருந்த கலப்பைதான் இன்றும், மாற்றுக் கலப்பை கிடையாது, மாற்றுக் குடிசை கிடையாது, கிஸ்திப் பணம் கட்டாவிட்டால் சருவப் பானையைத் தூக்கிக் போய்விடுகிறார்கள். அவர்கள் ஆர்கனைஸ்டு ஆக இல்லை, மேலும் அவர்களுக்கு ஊர்வலம் நடத்தத் தெரியாது.

A majority of them are down trodden, worst affected people, uncared for people and ill-fated ryots.

ஆகவே, ஒரு சமுதாயம் கவனிப்பாரற்று இருக்கிறது, அந்த சமுதாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்குரிய தேவைகளைக் கவனிக்கவேண்டும். அவர்களுடைய வாங்கும் சக்தி குறைந்து இருக்கிறது, ஆனால் அவர்கள் வாங்குகிற பொருட்களின் விலை மூன்று மடங்காக உயர்ந்திருக்கிறது, அவர் களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விலை களைக் குறைக்கவேண்டிய நிலைமை இருக்கிறது.

Therefore, they are the most unorganised sector, most ill-fated, most
forgotten ryots. They should be given priority by the Prime Minister
of India and by this Ministry, so that they could look after the welfare
of the majority of the people. We definitely give more respect to the
democratic rule. But I wonder as to how we are ruling the majority
of these people. Somehow or other the technical brains of the politi-
cians express the views through speeches or pamphlets—I must be
excused for saying so—and are able to get the majority verdict of the
people and come to power. I wonder whether this Government or any
other Government had forgotten this wrots affected ryots and ignored
them because they are illiterates. Because, they are illiterates, they
are ignored and they are economically weak.





சென்ற அரசு இருந்தபோது, இப்போது எதிர்க்கட்சித் தலை வராக இருப்பவர் முன்னாள் முதலமைச்சராக இருந்தபோது. விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்க வேண்டு மென்று சொன்னோம், இங்கே அப்போது அதைப்பற்றிப் பேசிய போதுகூட, மற்ற சில கட்சியினர் அதை எதிர்த்தார்கள். நான் சொன்னது என்னவென்றால்

But in proportion to the cost of production, he should be given reasonable and fair price. That is how you can protect him.

விவசாயிகளுக்கு ஒரு நியாயப் பூர்வமான விலையைக் கொடுத்து அந்த சமுதாயத்திற்கு ஒரு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அவர்களுக்குப் போது பூரியாவுக்கு 50 ரூபாயைக் குறையுங்கள். அவர்கள் பொறுத்துக் கொண்டு மான விலையைக் கொடுங்கள். அவர்கள் மிரட்டி வாங்கிவிடு போகிறார்கள், அதிகாரிகள் அவர்களிடம் மண்வெட்டியை கிறார்கள். அவர்கள் மாட்டேன் என்று சொல்லி எடுத்துவிட்டால் அவ்வளவுதான், இந்த நாட்டிலே ஒன்றும் இருக் காது, சட்ட மன்றம் இருக்கமுடியாது, யாரும் இருக்கமுடியாது அந்த நிலைமை ஏற்பட்டுவிடும், ஆகவே, அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டும்.

இன்னும் அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்வதற்கு இந்த அரசு முயல்கிறது. கிராமப்புற பொருளாதாரத்தை மேம் படுத்த இந்த அரசு திட்டங்களைத் தீட்டுகிறது. முழுக்க முழுக்க ஒரு சோஷலிஸ சமதர்ம ஆட்சிக்கு, இந்தத் திட்டங்கள் எல்லாம் ஒரு குட் இன்டிகேஷன், நல்ல சகுனம் என்ற முறையிலே இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்று, மற்றத் திட்டங்கள் பின்னாலே பட்ஜெட்டிலே வர இருக்கின்றன என்று இதிலே சொல்லியிருப்ப தால், இந்த உரையை நான் மனதார பாராட்டி நன்றி கூறி, எனக்கும் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரி வித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** இந்த மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் உரை நிகழ்த்திய மேன்மைதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையைப் பொறுத்தமட்டில் ஆளுநர்
உரையில் 7-வது பக்கத்தில், 'இந்தச் சட்டமன்றத்தின் அடுத்த
கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் கொண்டுவரப்படும். புதிய
அரசின் திட்டங்களையும் திட்டப் பணிகளையும் விரிவாக ஆராய,
அப்போது உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, அரசின்
முக்கியமான கொள்கைகளையும் குறிக்கோள்களையும் மட்டும் இச்
சந்தர்ப்பத்தில் குறிப்பிட விழைகிறேன்' என்று குறிப்பிட்டு
உள்ளார்கள். ஆக, அரசினுடைய முக்கியமான கொள்கை, குறிக்
கோள் ஆகியவற்றை இந்த ஆளுநர் உரையில் நாம் எதிர்பார்ப்பது
நியாயமானது என்று கருதுகிறேன். அந்த வகையில் புதிதாக
ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கின்ற அகில இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் புதிய புரட்சிகரமான திட்டங்களைக்
கொள்கைகளை இதிலே அறிவித்திருக்க வேண்டும். அப்படிப்
பட்ட அறிவிப்புகள் இந்த உரையிலே இருக்கிறதா என்று கேட்
டால் நான் சொல்லிக் கொள்வேன், நான் ஏமாற்றப்பட்டிருக்
கிறேன், இந்த நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள், இங்கே
நம்பிக்கை மோசம் நடந்திருக்கிறது என்பதை முதலாவதாக
நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த, ஆளுங்கட்சியினுடைய
தலைவர் முதல்வரவர்கள் தமிழகத்தின் தேர்தல் பிரச்சாரத்தின்
பொழுது படியரிசித் திட்டம் கொண்டு வரப்படும் என்று வலி
யுறுத்தி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வானொலியில்
1—6—77 ஆம் தேதியன்று பேசும்பொழுது, "இதய சுத்தியோடு
படியரிசி திட்டம் படைத்த அமரர் அண்ணா இருந்த அந்த இடத்
தில் இப்படிப்பட்டவர்களும் அமருகின்ற நிலை ஏற்பட்டு விட்டதே
என்று எண்ணி கண்ணீர் வடித்தேன். அந்தக் கண்ணீரில்
தோன்றியதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்"
என்று வானொலியில் பேசியிருக்கிறார்கள், 1—6—77 ஆம் தேதி
என்று சொல்லியிருக்கிறார்கள். கண்ணீர் வடித்திருக்கிறார்கள்,
அதற்குக் காரணம், அந்தத் தலைவன், கடல் அலைகளுக்கருகே
வெண்மணற்பரப்பில் உறங்கிக்கொண்டிருக்கும் காஞ்சித் தலைவன்
பேரறிஞர் அண்ணா எந்தப் பதவியிலிருந்து அமல்படுத்தினாரோ
அந்தப் படியரிசித் திட்டம் இன்று இல்லையே என்ற பதைபதைப்
பிலே கண்ணீரில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உரு
வாக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.





படியரிசித் திட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால்
குறிப்பிடப்படவில்லை. அது பட்ஜெட்டிலாவது வரும் என்று
சொன்னால் மெத்த மகிழ்ச்சியடைவேன். அதை ஆவலோடு
எதிர்பார்க்கிறேன்.

இரண்டாவதாக முக்குலத்தோர் பிரச்னை. நம்முடைய
பொறுப்பு வாய்ந்த முதலமைச்சரவர்கள் தேர்தலுக்கு முன்
தமிழகத்தின் வீதிகளில் சூறாவளி சுற்றுப் பயணம் செய்த நேரத்
தில், எங்கள் கட்சி ஆளுங்கட்சியாக ஆகுமேயானால், நாங்கள்
ஆட்சிக்கு வந்தால், முக்குலத்து மக்களை இழிவுபடுத்தும் குற்றப்
பரம்பரை தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்வோம் என்று அருப்
புக்கோட்டையில் பேசியிருக்கிறாகள். அது அவர்களது அதி
கார பூர்வமான பத்திரிகை அல்லது அவர்களுடைய சார்புடைய
பத்திரிகையான 10—6—77 ஆம் தேதிய தென்னகத்தில் வந்திருக்
கிறது. இப்பொழுது நான் ஆளுநர் உரையில் பார்த்தேன்,
தேடிப் தேடிப் பார்த்தேன். புதிய கட்சி வந்திருக்கிறது,
புரட்சித் தலைவர் வந்திருக்கிறார், புதிய ஆட்சி மலர்ந்திருக்கிறது,
முக்குலத்து மக்களுடைய பிரச்னை பற்றி வாக்குறுதி கொடுத்து
வந்தார்களே, முக்குலத்து மக்களை இழிவு படுத்தும் குற்றப்
பரம்பரை சட்டம்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறதா
என்று. இல்லாவிட்டால் பட்ஜெட்டில் அதுபற்றி சட்டம்
வருமா? நானும் ஒரு வழக்கறிஞன். நான் விசாரித்துப் பார்த்
தேன். ஏற்கனவே இருந்த அரசு 10, 20 ஆண்டுக் காலத்திற்கு
முன்னால் அதனை நீக்கியிருப்பதாகவும் அறிகிறேன். இப்பொழுது
பாரதியார் இல்லை. வள்ளுவரை, "வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று
பாரதியார் பாராட்டியிருக்கிறார். அவர் இப்பொழுது இருந்தால்
இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வரும் நம்முடைய
முதலமைச்சரைப் பாராட்டியிருப்பார் என்று எண்ணுகிறேன்.
ஆளுங்கட்சியைச் சேர்ந்த நம்முடைய முதல்வரவர்கள் நிச்சய
மாக பட்ஜெட்டிலாவது முக்குலத்து மக்களை இழிவு படுத்தும்
சட்டத்தை அகற்றுவதற்குச் சட்டம் கொண்டு வருவார் என்று
எதிர்பார்க்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு
உறுப்பினரவர்கள் பேசுகிறார்கள், ஏதோ பத்திரிகையில் வந்த
தாகக் கூறி. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவையில்
இல்லாதபொழுது அவர்கள் முக்குலத்து மக்களைப்பற்றி அறிக்கை

வெளியிட்டுப் பத்திரிகையில் வந்ததாகக் கூறுகிறார்கள். இது அமைச்சரவர்களுக்கு இருக்கின்ற பொது அறிவையும், தரத்தையும் பாதிப்பதாக இருக்கிறது. ஏதோ செய்தி வந்ததாகவும், அதைத் தான் படித்ததாகவும், அதற்கான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்றும் கற்பனை செய்து கொண்டு பேசுவது முறையானதா? இதற்குத் தங்கள் ரூலிங் தேவை.

திரு. மு. கருணாநிதி: முதலமைச்சர் இல்லாத நேரத்தில் என்று நண்பர் திரு. கந்தசாமி அவர்கள் சொல்கிறார்கள். முதலமைச்சர் இல்லாதது ரகுமான்கானின் குறை அல்ல, முதலமைச்சரின் குறை.

திரு. கே. கந்தசாமி: முதலமைச்சரவர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவ்வாறு பத்திரிகையில் வந்ததாகக் கூறுகிற ஒன்றை அதிகாரபூர்வமானதாகக் கொண்டு தாக்கிப் பேசுவது அவருடைய அந்தஸ்தை அழிப்பதாக இருக்கிறது, இது முறைதானா?

திரு. ஏ. ரகுமான்கான்: துணை சபாநாயகரவர்களே, நான் பத்திரிகையில் வந்ததைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஒன்று இதை உண்டு என்று சொல்லட்டும், இல்லையென்றால் இல்லை என்று சொல்லட்டும். அமைச்சரவை என்பது 'கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி.' கொண்டதாகும். ஆகவே, முதலமைச்சரோ அல்லது யார் வேண்டுமானாலும் அதைப்பற்றிச் சொல்லட்டும்.

அடுத்த பிரச்னை, நம்முடைய பெண்களுக்கு சொத்துரிமை கொண்டு வருவோம், சமுதாயத்தில் ஆண்கள் இருக்கிறார்கள், பெண்கள் இருக்கிறார்கள். பெண்களும், ஆண்களும் சம உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, பெண்களுக்கு நாங்கள் சொத்துரிமை கொண்டு வருவோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் வானொலிப் பேச்சிலே பேசப்பட்ட பேச்சு. தேதி 1—6—1977. மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை, கல்வி, கைத்தொழில், வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கு திட்டங்கள், சமவாய்ப்பு பெறச் செய்தல் என்று கூறியிருக்கிறார்கள். மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு வேறு



பொருளில் அல்ல, பெண்களுக்கு சொத்துரிமை கொண்டு வந்து சம வாய்ப்பை ஏற்படுத்துதல் என்று கூறியிருக்கிறார்களே அதைப் பற்றி நான் கேட்கிறேன். நான் ஒரு வழக்கறிஞர். இந்து லா, மொகம்மதியன் லா, கிறிஸ்டியன் லா ஆகியவற்றைப் படித்துப் பார்த்தேன். இதிலே அடிக்கடி நிபுணர்கள் என்று சொல்கிறார்களே, அவர்களைக்கூட கலந்தாலோசித்தேன். அவர்கள் சொன்னார்கள், நானும் படித்துப் பார்த்தேன், அப்பெண்களுக்கு ஏற்கனவே சொத்துரிமை இருக்கிறது. மொகம்மதியன் லாவிலும் இருக்கிறது, கிறிஸ்டியன் லாவிலும் இருக்கிறது, இந்து லாவிலும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும் அதிகாரம் ஸ்டேட் லிஸ்டில் இல்லை, இந்த அதிகாரம் சென்ட்ரல் லிஸ்டில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இருந்தாலும் கூட நம்முடைய தெளிவான முதலமைச்சரவர்கள் இதை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி. ஆனால் ஆளுநர் உரையில் இதுகுறித்து ஒன்றுமில்லையே. பட்ஜெட்டிலாவது அதை எதிர்பார்க்கிறேன். ஆளும் தரப்பிலேயிருந்து அதற்கான சட்டம் கொண்டுவரப்படும், பெண்களுக்காக அரும்பாடுபடும், என்று சொன்னால் சுயமரியாதை இயக்கத்தில் ஒரே கொடியில் பூத்த மலர்கள் ஆகிய நாங்கள் மெத்த மகிழ்ச்சியடைவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இலஞ்சம், ஊழல் ஆகியவற்றை எல்லா மட்டங்களிலேயும் களைவது. இதுகுறித்து மெத்த மகிழ்ச்சி. இதில் அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. இன்னும் சொல்லப்போனால், இதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்ன சட்டம் இருக்கிறது, இதை எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி. ஏற்கனவே இண்டியன் பீனல் கோட் இருக்கிறது. ஐ.பி.சி. மூலம் லஞ்சத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க முடியும். இப்படி ஏற்கனவே சட்டம் இருக்கிறது. "பப்ளிக் மென் கிரிமினல் மிஸ்காண்டக்ட் ஆக்ட்" என்று எங்கள் அன்பிற்குரிய இதய வேந்தர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்தபொழுது, பொது வாழ்விலே தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவற்றிற்குப் பிறகு எப்படி இலஞ்சத்தை ஒழிக்கப் போகிறார்கள் என்ன திட்டத்தைக் கொண்டு வரப் போகிறார்கள் என்று தெரியவில்லை. முதலாளித்துவ வர்க்க அமைப்பில், நிலப்பிரபுத்துவ வர்க்க அமைப்பில் தனியார்

சொத்துக்களை நியாயப்படுத்தும் சமுதாயத்தில், இலஞ்சத்தை ஆயிரம் அடிக்குக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும். அப்படிப்பட்ட சுரண்டலற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அதற்கு விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஏதாவது சட்டமிருக்கிறதா, திட்டம் இருக்கிறதா? அப்படியானால் எப்படி இதனை ஒழிக்கப் போகிறீர்கள். இது பற்றியும் ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. பட்ஜெட்டிலாவது இருக்கும் என்று நான் நம்புகிறேன். அப்படியிருந்தால் மகிழ்ச்சியடைபவர்களில் முதலாவதாக நான் இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த இலஞ்ச லாவண்யத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது,

(மணியடிக்கப்பட்டது)

அருள்கூர்ந்து சில மணித்துளிகள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமான பிரச்சினை குறித்துப் பேசுகிறேன். அவசரமும், முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினை இது. இலஞ்சம், ஊழலைக் களைவது என்றால், அமைச்சரவையைச் சார்ந்திருக்கிற ஒரு நபர் மீது வெங்கடாத்திரி கமிஷனில் புகார் மனு இருக்கிறது. ஏறக்குறைய 500 ரூபாய், 1,000 ரூபாய் 1,500 ரூபாய் என்ற அளவில் இலஞ்சம் வாங்கியிருப்பதாக என்கொயரி கமிஷன் முன்னால் அந்த மேட்டர் பெண்டிங் மேட்டராக இருக்கிறது. இதிலே வாரண்ட் கொடுக்கப்பட்டு, ஜி.ஜி. அவர்கள் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதால் எக்சிகியூட் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். அந்தக் கமிஷன் காலாவதியாகிவிட்டதா, அந்தக் கமிஷன் இருக்கிறதா? அல்லது வேறு கமிஷன் போடப் போகிறீர்களா, அதில் தீர்ப்புச் சொல்லப் போகிறீர்களா என்று தெரியவில்லை. அன்றைக்கு நாங்கள் ஆளுங்கட்சியில் இருந்தபொழுது, உங்கள் மீது குற்றச்சாட்டுகள் இருக்கின்றன, ஆகவே, நீங்கள் பதவியில் இருக்கக்கூடாது, வெளியேறுங்கள் என்று சொல்லி, எம்.எல்.ஏ.க்களின் வீட்டு வாசல் முன்னால் மறியல் செய்தார்கள். ப.உ.ச. போன்றவர்கள் இலஞ்ச லாவண்யக் குற்றச்சாட்டில் இருக்கிறார்கள், எனவே, அவர்கள் அமைச்சர் பதவியில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்படியானால் ஒரு குற்றச்சாட்டு இருக்கும்பொழுது அவ

அமைச்சரவையில் இடம் பெறலாமா என்று கேட்க விரும்புகிறேன். இவ்வளவுக்குப் பிறகு எல்லா மட்டத்திலேயும் இலஞ்ச லாவண்யத்தை, ஊழலைக் களைவோம் என்று சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவைகளெல்லாம் மக்களை ஏமாற்றும் வெறும் ஸ்லோகங்கள்தான் என்று நான் சொல்லவில்லை, வெளியிலே உள்ள மக்கள் பேசிக்கொள்கிறார்கள், அதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, இண்டஸ்ட்ரியல் பாலிசி பற்றி ஆளுநர் உரையில் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

அதைப்போல அதிகாரிகளை நியமிப்பதில் ஊழல் நடந்திருக்கிறது. அமைச்சர் அரசாங்கத்தின் ஊழியர், கவர்ன்மெண்ட் சர்வெண்ட்.

(நண்பகல் 12-00)

அட்வகேட் ஜெனரல் கவர்ன்மெண்ட் சர்வண்ட். இரண்டு பேரும் இன்றைக்குக் குடிகாரர்களாக இருக்கிறார்கள். 'Drunkard' என்று ஆங்கிலத்தில் சொல்வோம். அவ்வகையில் அமைச்சரவையைச் சேர்ந்த ஒருவர் மது பர்மிட் வைத்திருக்கிறார்—அவர் கவர்ன்மெண்ட் சர்வண்ட். அட்வகேட் ஜெனரல் கவர்ன்மெண்ட் சர்வண்ட்—அவர் மது பர்மிட் வைத்திருக்கிறார். மதுவிலக்கை அமுல் நடத்துவோம் என்று சொல்கிறவர்கள்—நான் திரும்பவும் சொல்கிறேன், மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்துவோம் என்று சொல்பவர்கள், சொல்லிக் கொண்டிருப்பவர்கள், மது பர்மிட் வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்ததற்குப் பிறகும், குடிக்கிறார்கள் என்று தெரிந்ததற்குப் பிறகும் எப்படி நியமிக்கலாம். கவர்னர் அவர்கள், அரசாங்க ஊழியர்கள் மது பர்மிட் வைத்திருந்தால் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று சொன்னார். நான் இந்தச் சபையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், அப்படியானால் அமைச்சரவையிலிருக்கிற ஒருவர் மது பர்மிட் வைத்திருக்கிறார், அட்வகேட் ஜெனரல் மது பர்மிட் வைத்திருக்கிறார், அவர்கள் அரசாங்க ஊழியர் என்பதால், கவர்னர் உத்தரவின்படி அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது கவர்னர் நீக்கப் போகிறாரா? என்று. அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று.

[திரு. ஏ. ரகுமான்கான்] [1977 ஜூலை 11

வெங்கடாத்திரி கமிஷன் இருக்குமா, இருக்காதா? எனக்குத் தெரிய வருகிற செய்தி என்னவென்றால், சட்ட அமைச்சரவர்கள் வெங்கடாத்திரி முன்னாலேயுள்ள ஃபைல்களையெல்லாம் வாங்கி வைத்திருக்கிறார் . . . .

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய வரம்பை மீறுகிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: எப்படி வரம்பை மீறுகிறேன் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அந்த அமைச்சர் அதை வைத்திருக்கிறார், இந்த அமைச்சர் இதை வைத்திருக்கிறார் என்று சொல்வதிலே, இந்த அமைச்சரவைப் பொறுப்பேற்றவுடன் . . . . (குறுக்கீடு) நீங்கள் ஒரு வழக்கறிஞர். நீங்கள் விவாதம் வைத்த பிறகு இன்னொரு பக்க விவாதத்தையும் கேட்டுக்கொண்டு பேசுங்கள்.

அவையிலே மாண்புமிகு உறுப்பினர் பேசும்பொழுது பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். எந்த அமைச்சர் என்று அவர் சொல்லவில்லை. அதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்பவில்லை. எந்த அளவிலே வரம்பை மீறி அவர் பேசுகிறாரென்றால், சட்ட அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட விசாரணை கமிஷனோடு தொலைபேசியில் பேசி, ஏதோ தொடர்பு கொண்டு பேசியதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இவ்வாறு தொடர்பு கொண்டார் என்றெல்லாம் கற்பனையில் பேசிய பேச்சை எடுத்துக்கொள்ள வேண்டாமென்று நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குத் தெரிய வருகிறது, நான் அறிந்தேன், நான் கேள்விப்பட்டேன், நான் புரிந்துகொண்டேன் என்று சொல்வது இந்த மன்றத்தினுடைய மரபல்ல. ஆதாரத்தோடு பேசினால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: இன்றைய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர், அன்றைய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்மீது குற்றச்சாட்டுகள் எழுப்பியபோது நான் அறிந்து கொண்டேன்.

'I come to understand, I come to understand' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள் . . .



1977 ஜூலை 11]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அந்தக் குற்றச்சாட்டு வெளியிலே கொடுக்கப்பட்டது. ஆனால், நீங்கள் பொறுப்புள்ள அவையிலே கொடுக்கிறீர்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. அன்பழகன்: பொறுப்புள்ள அமைச்சரவர்கள் அந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கலாம். அடியோடு மறுத்தால், அங்கத்தினர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டு, தான் சொல்வது தவறாக இருக்குமானால் விட்டு விடுகிறேன் என்று சொல்லலாம். ஆனால் அடியோடு மறுக்காமல் ஆதாரத்தோடு சொல்லப்படவில்லையென்று மட்டும் சொல்வது பொருத்தமாக இருக்காது. எனவே, அடியோடு மறுப்பதாக இருந்தால், அமைச்சர் அவர்கள் மறுத்தபிறகு அங்கத்தினர் அவர்கள் தொடர்ந்து அதுபற்றி பேசாமலிருப்பார்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நான் மெத்தப் பணிவோடு சொல்லிக்கொள்வதெல்லாம் சம்பந்தப்பட்ட சட்ட அமைச்சர் இப்பொழுது இந்த அவையில் இல்லை. ஆகவே, இப்பொழுது . . . .

திரு. க. அன்பழகன்: அமைச்சரவர்கள் வருகிறபொழுது அதை மறுப்பதற்கு அவருக்கு உரிமையிருக்கிறது. அவர் தாராளமாக மறுக்கலாம். மறுத்தால் இந்த அவை அதை ஏற்றுக்கொள்ளும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேசிய உறுப்பினர் இத்தனும் தேதி, இத்தனை மணிக்கு, சட்ட அமைச்சர் சம்பந்தப்பட்ட விசாரணை கமிஷன் அதிகாரியோடு தொடர்பு கொண்டு இவ்வாறு சொன்னார் என்ற ஆதாரத்தோடு சொல்லலாம். அமைச்சர் மறுக்கலாம், அல்லது அமைச்சர் சார்பில் யாரும் மறுக்கலாம். ஆனால், கற்பனை உலகில் மிதந்துகொண்டு இப்படி தெரிய வருகிறது, அறிய வருகிறது என்று அவர் சொல்வது தவறு, மரபல்ல. அதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு சட்ட அமைச்சர் ஒரு ஃபைலைக் கொண்டு வரச்சொல்லி ஃபோன் செய்தார் என்பது பெரிய பிரச்சினையில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொன்னது, ஒருவர் மீது குற்றம் சாட்டி, அது விசாரணைக்கு உட்

பிடுமானல், குற்றம் சாட்டப்பட்டவர் பொறுப்பிலே இருக்கக்
கூடாது என்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்
தலையாய கொள்கையாகும். இது பல்வேறு நிலைகளிலே
வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிக் குற்றம் சாட்டப்
பட்டு ஏற்கனவே வெங்கடாத்திரி கமிஷன் விசாரணைக்குட்பட்ட
ஒருவர் அமைச்சரவையில் இருப்பது நியாயமாகுமா, என்பது
தான். அதற்குக் கூட்டுறவுத் துறை அமைச்சர் பதில் அளித்தால்
எங்களுக்கெல்லாம் பெருத்த பயனுள்ளதாக இருக்கும்.

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே,
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டப்பட்
டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். குற்றமே தவறு, குற்றம் சாட்டிய
நபரே உலகத்தில் இருக்கிறாரா, உலகத்தை விட்டு மறைந்து
விட்டாரா என்று திரு. வெங்கடாத்திரி கமிஷனிலே தேடிக் கொண்
டிருக்கிறார்கள். அவர் இன்னும் அவர்களுக்கு அகப்படவில்லை.
அவரைப் பிடித்துத் தருவார்களானால், திரு. வெங்கடாத்திரி
கமிஷன் விசாரிக்கத் தயாராக இருக்கிறது என்று மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல
அமைச்சர் அவர்கள் தானாகவே முன்வந்து பேசியதிலிருந்து,
புகார் அவர்மீதுதான் வந்துள்ளதாக நான் அறிகிறேன். தலைவ
ரவர்களே, மற்ற அமைச்சர்கள் வாளாவிருக்கும்போது அவர் முன்
வந்து பேசுவது, அவைமுன் கூறப்பட்டுள்ள, விசாரணைக்
கமிஷனில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்களில் ஒருவர்
அவராகத்தான் இருக்கும் என்று நம்புகிறேன். எனவே, என்ன
குற்றம் சாட்டப்பட்டது என்று அவை முன் எடுத்து வைத்தால்,
நன்மையாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: என்ன குற்றம்
சாட்டப்பட்டது என்பதல்ல முக்கியம். குற்றம் சாட்டியவர். . . .

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அமைச்சரவை
என்பது கூட்டுப் பொறுப்புள்ள ஒன்று. ஏற்கனவே முதலமைச்ச
ராக இருந்தவருக்கு இந்தக் கூட்டுப் பொறுப்புணர்வு தெரிந்
திருக்கும் என்று நினைத்தேன். தெரியாமலிருப்பது பற்றி உள்ள
படியே மெத்த வருத்தப்படுகிறேன்.





திரு. மு. கருணாநிதி: இது எனக்குச் சொன்ன பதில் அல்ல.
மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்டுக்குச் சொன்ன பதில்.
ஏனென்றால், சட்ட அமைச்சர் இல்லாதிருக்கும்போது பேசக்
கூடாது என்று மாண்புமிகு திரு. எட்மண்ட் அவர்கள்தான் சொன்
னார்கள். ஆகவே, ஒவ்வொரு அமைச்சரைப்பற்றிச் சொல்ல
வேண்டுமானாலும், எந்தெந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பி
னர்கள் பேசுகிறார்களோ, அந்தந்த நேரத்தில் மாண்புமிகு
அமைச்சர் இருக்கிறார் என்று பார்த்து, இருக்கும்போது
பேசுவது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இயலாது. எனவே,
அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு என்பதை ஆட்சி
யிலே உள்ளவர்கள்தான் உணரவேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கூட்டுப் பொறுப்பு
இருப்பதை நானும் உணர்கிறேன். கற்பனையிலே குற்றச்சாட்டை
வைக்காதீர்கள் என்றுதான் சொன்னேனே தவிர, இந்த அவை
யிலே சட்ட அமைச்சர் இல்லாத நேரத்தில் பதில் சொல்ல
எனக்கு கடமையிருக்கிறது.

*திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் கேட்கின்ற
குறிப்பு, ஐயப்பாடு அல்லது கேள்வி—தெரிந்து கொள்ள வேண்டு
மென்று விரும்புகிற விளக்கம்—அதற்கு மாண்புமிகு அமைச்சர
வர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்—
தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் மீது திரு. வெங்க
டாத்திரி கமிஷனில் இப்பொழுது ஒரு குற்றச்சாட்டு 'பென்டிங்கா'
இல்லையா? இருக்கிறதா, இல்லையா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே,
குற்றச்சாட்டு இருக்கிறது என்பதைச் சம்பந்தப்பட்ட அமைச்சர
வர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் கேட்ட
கேள்விக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்லவில்லை. குற்றச்
சாட்டை யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதிலே சிறப்பு
ஒன்றும் இல்லை. அமைச்சர் மீது குற்றச்சாட்டு இருக்கிறது. அது
விசாரணையிலிருக்கிறது என்று அவரே எடுத்துச் சொல்லியிருக்
கிறார். ஆனால், இந்தப் பக்கத்திலே எழுப்பிய கேள்விக்கு எதிர்க்
கட்சித் தலைவர் பதில் சொல்லவில்லை. கொடுத்தவர் யார்? உயி
ரோடு இருக்கிறாரா? விசாரணைக் கமிஷனோடு தன்னை ஈடுபடுத்திக்
கொண்டிருக்கிறாரா என்ற நியாயமான கேள்விக்கு எதிர்க்கட்சித்
தலைவரோ, அல்லது அந்தப் பிரச்னையை எழுப்பிய திரு. ரகுமான்
கான் அவர்களோ பதில் சொன்னதாகத் தெரியவில்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, குற்றச்சாட்டு இருக்கிறது என்பதுதான் பிரச்னை. கொடுத்தவர் உயிரோடு இருக்கிறாரா, இல்லையா, இருந்தால் எங்கே என்பது வேறு பிரச்னை. குற்றச்சாட்டு கொடுத்து, உயிரோடு இருந்து, விசாரணை மன்றங்களுக்கு வந்து தான் சொன்னதைச் சொல்ல மறந்துவிட்டவர்கள் கூட இருக்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அது வேறு விவகாரம்.

திரு. மு. கருணாநிதி: ஆனால், அமைச்சர்மீது குற்றம் சொல்லியவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதல்ல பிரச்னை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: திரு. ரகுமான்கான் குறிப்பிட்டுச் சொல்லவில்லையென்பதுதான் (குறுக்கீடு) இப்பொழுது விசாரணை வேண்டுமென்று கேட்டுவிட்டு நீதிமன்றத்திற்கு வரமாட்டேனென்று யாரும் சொல்லவில்லை. மேற்கொண்டு விசாரணை கமிஷனுக்கு வரவேண்டிய அவசியமில்லையென்றுதான் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, புகார் கொடுத்துவிட்டு குறுக்கு விசாரணைக்கு வர முடியாது என்று பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடியவர்கள் யார் என்று நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அந்தத் தீர்ப்பைக் கொடுக்க வேண்டியது நீதிமன்றமே தவிர, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அல்ல.

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வாதாடுவதைப் பார்த்தால் அவர்களே மொட்டை பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள்போல் தெரிகிறது. தயவு செய்து இதை இந்தப் பேரவையின்மூலம் விசாரிக்கவேண்டுமென்று நான் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: அமைச்சரவர்கள் எதை நினைத்துக் கொண்டு அவ்வாறு சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை அவையிலுள்ள உறுப்பினர் மீது 'இன்சினுவேஷன்' ஏற்படுவதாக





இருக்கிறது. எதிர்க்கட்சியினரே மொட்டை பெட்டிஷன் போட்டிருப்பார்கள் என்று சொல்வது தவறு. இன்று ஆட்சி உங்களிடம் இருக்கிறது. யார் கொடுத்தார்கள் என்று அமைச்சர் கண்டு பிடிக்கலாம். ஆனால், இங்கே இருப்பவர்களே கொடுத்திருப்பார்கள் என்று சொல்வது, 'இன்சினுவேஷன்' ஆகும். அவையிலே சொல்லத்தகாதது என்ற காரணத்தால் அதை அவர் வாபஸ் பெற வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நான் சொல்வது இன்சினுவேஷன் அல்ல; அவர் பேச்சின் ஒரு பகுதிதான் அது. இதைப் பேரவைத் தலைவர் அவைக் குறிப்பை எடுத்துப் பார்த்தாலே நன்றாகத் தெரியும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் யார் என்று கண்டு பிடிக்கிற பொறுப்பில் நாங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நிச்சயமாகக் கண்டு பிடிப்போம்; அப்படி ஒரு நபரே இல்லை. இருந்தால் நிச்சயமாகத் தண்டனை அளிக்கப்படும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவரைக் கண்டு பிடிப்பதற்கு முன்பாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரும் பேசிய உறுப்பினரும்தான் மொட்டை பெட்டிஷன் போட்டிருப்பார்கள் என்று ஊகித்துச் சொல்வது உள்ளபடியே இன்சினுவேஷன் ஆகும். அதைத் தாங்கள், தக்க நடவடிக்கை எடுத்து, வாபஸ் பெறுமாறுச் செய்யவேண்டும்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து கனம் உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். ஒன்றைச் சொல்லும்போது, குறிப்பிட்ட அமைச்சரைப் பற்றியோ, அங்கத்தினரைப் பற்றியோ குற்றச்சாட்டு சொல்லும் போது, முன்னாலேயே ஆதாரத்தை அவைத் தலைவரிடம் காட்டி, அவர் ஒப்புதல் பெற்று பேசுவதுதான் இந்த மன்ற மரபு. தாங்கள் அவையில் இல்லாத அமைச்சரைப் பற்றிக் குற்றம் சாட்டுவதில் தவறில்லை. ஆனால் ஆதாரத்தோடு குற்றம் சாட்டுகிறார்களென்றால், அல்லது பொறுப்பேற்றுக் கொள்கிறார்களென்றால், சந்தேகம் நிவர்த்தி ஆவதற்காக அவைத் தலைவரின் அனுமதி பெற்று பேசியிருக்கவேண்டும். ஆக, அப்படிப் பேசாமல் அமைச்சரைப் பற்றி இந்தச் சபையில் பேசியது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அப்படி இனிமேல் பேசாமலிருப்பது நலம் என்று கருதுகிறேன்.

அதே போன்று நம்முடைய அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் ஒருவரைப் பற்றி சொல்கிற பொழுது, மொட்டை பெட்டிஷன், அப்படி, இப்படி என்றெல்லாம் சொல்வதைக்கூட ஓரளவுக்குத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். காரணம், இந்திய துணைக்கண்டத்திலே, நமது அவை நல்ல மரபோடு, பொறுப்போடு, பண்போடு, நடக்கின்ற அவை என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. ஆகவே, பொறுப்போடு பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதை இத்தோடு முடியுங்களென்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ரகுமான்கான் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும். 11-49-லிருந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இன்னும் இரண்டு நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஏற்கனவே நம்முடைய அவையில் ஒரு தீர்ப்பை முன்பு இருந்த பேரவைத் தலைவரவர்கள் வழங்கியிருக்கிறார். பொறுப்புள்ள உறுப்பினர் யாராக இருந்தாலும் அமைச்சர் மீதோ அல்லது உறுப்பினர் மீதோ ஊழல் குற்றம் சாட்டினால் ஆதாரம் தர வேண்டுமென்றும் அப்படித் தரவில்லையென்றால், அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டுமென்றும் இந்த மன்றத்தில் ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர் ஆதாரம் தருகிற வரையில், அவைக் குறிப்பில் அவை இடம் பெறாமல் இருப்பதுதான் நல்லது. இல்லையென்றால், பத்திரிகையிலே பெரிய எழுத்திலே போட வாய்ப்பாகிவிடும் என்று கூறி, இவை அத்தனையும் அவைக் குறிப்பிலே இடம் பெறுவது நியாயம் அல்ல என்பதையும் எடுத்துச் சொல்லி பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்பினை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைத் தலைவர் தீர்ப்புக்குப் பிறகு, உறுப்பினர் சொன்னதிலேயிருந்து ஏதாவது தவறான கருத்துக்கள் மக்கள் மத்தியிலே ஏற்படுமா என்று பார்க்கிற பொழுது, அவர் சொன்னதை மறுத்து அவைத் தலைவர் தீர்ப்பளித்துவிட்டார். தக்க ஆதாரம் இல்லாமல், அவைத் தலைவரிடம் முன்னாலேயே அவற்றைக் காட்டாமல் பேசக் கூடாது, பேசியது தவறு என்று அவைத் தலைவர் கூறியபிறகு, அவை பத்திரிகையிலே வந்தாலும் மக்கள் மத்தியிலே புரிந்து விடும். ஆகவே, அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டிய அவசியமில்லை. மேற்கொண்டு திரு. ரகுமான்கான் நீங்கள் பேசுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: மன்றத் தலைவரவர்களே, உழைக்கும் மக்களுடைய தலைவர், எங்கள் தலைவர் என்று இன்றைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரைப் பற்றிச் சொல்லப்படுகிறது. தொழிலாளர் பிரச்னை குறித்து, தொழில் கொள்கை என்ன, 'இன்டஸ்ட்ரியல் பாலிஸி' என்ன என்பது குறித்து ஆளுநர் உரையில் தெரிவிக்கப்படவில்லை. அது மட்டுமல்லாமல், லேபர் பாலிஸி என்ன என்பதும் தெரிவிக்கப்படவில்லை. வங்காள முதல்வர் ஜோதி பாசு அவர்கள் அரசாங்கத்தினுடைய சார்பாக தொழில் கொள்கை என்ன என்று தெளிவு படுத்தியிருக்கிறார்கள். ஒரு விஷயத்தை இங்கே அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய சர்க்கார் அவசர நிலைச் சட்டத்தின்பொழுது பழி வாங்கப்பட்டு, வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளிகளை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வோம் என்று இன்றைக்கு 'டைரக்ஷன்ஸ்' கொடுத்திருக்கிறது. சோஷலிச சமுதாயத்தை அமைக்க எல்லா வழிகளிலும் பாடுபடும் என்று அறிவித்திருக்கிறது. இன்றைக்குப் புதிதாக பொறுப்பேற்றுள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன சொல்லியிருக்கிறது? எதையும் சொல்லவில்லையென்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சுந்தரம் கிளேட்டன் பகுதியில் மிகவும் பரபரப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. டி.ஐ. டையமண்ட் தொழிற்சாலையில் எமர்ஜன்ஸி காலத்தின்போது 21 பேர் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 21 பேரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு வழக்கறிஞர் நான்கு நாட்களாக உண்ணாவிரதமிருக்கிறார். அந்தத் தொழிலாளிகளை வேலைக்கு எடுத்துக் கொள்வது பற்றி பேசப்பட்டிருக்கிறது, கோவையிலே இந்தப் பிரச்னைபற்றி பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது, இந்த ஆலை அதிகாரிகளுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர, அமைச்சரவர்கள் அறிக்கை வைத்திருக்கிறாரா என்றால் இல்லை. பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது, அனுதாபத்துடன் கவனிப்போம் என்று சொல்வது சரியாக இருக்காது. பிரச்னையை உடனே தீர்க்க வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

[1977 ஜூலை 11

திரு. எம். எம். ஏ. ரசாக் : மாமன்றத்தின் தலைவர் அவர்களே, என்னுடைய மதிப்பிற்குரிய குடந்தை இராதா அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையில் அரசாங்கத்தின் பல்வேறு ஒழுங்கு முறை நடவடிக்கைகளிலும், நிர்வாக அமைப்பு களிலும், நீதி மன்றங்களிலும் ஏழை, எளிய மக்களுக்கு நியாயம் கிடைப்பதில் தடங்கல்களும், தாமதமும் உள்ளன. முந்தைய ஆட்சியில் பெயாளவுக்குத்தான் தர்மமாக அப்பீல் முறை என வைத்திருந்தார்கள். ஆனால், செயல் முறையில் திருப்திகரமாக இல்லை. இந்த நிலை மாறி இந்த ஆட்சி நியாயம் கிடைக்க இலவச சட்ட உதவி வழங்குவதற்கு சிறப்புக் கவனம் செலுத்துவதாக கூறியுள்ளது. இதை ஏழை, எளிய மக்கள் இன்முகத்துடன் வரவேற்பார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

தமிழறிஞர்கள் பலர் வறுமையால் வாடிக்கொண்டு இருக்கும் போது முந்தைய ஆட்சி கவனம் செலுத்தாதபோது தமிழ் மொழியின் மீது பற்றும் பாசமும் கொண்டிருக்க இந்த ஆட்சி பண்டைய இலக்கியங்களையும் பல்வேறு துறைகளில் வந்துள்ள தற்கால நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும். வறுமையால் வாடும் தமிழறிஞர்களுக்கு அரசு நிதி உதவி வழங்கும் என்பதனை நான் மனமார பாராட்டுகிறேன்.

கடலை எண்ணெய் போன்ற சமையல் எண்ணெய் வகைகள் விலையேற்றத்தை இந்த அரசு உற்று நோக்கி தக்க நடவடிக்கை எடுப்பதாக கூறி இருப்பதை நான் மனதார பாராட்டுகிறேன்.

பல கிராமங்களில் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்ற நேரத்தில் கடலைபோன்ற விவசாய பொருள்களுக்கு ஆறு மணி நேரம் தான் மின்சாரம் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த மின்சாரத்தை முழு நேரமும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



1977 ஜூலை 11] [திரு. எம். ஏ. ரசாக்]

தமிழ்நாட்டின் மக்களின் வறுமைநிலை நாளுக்கு நாள்
அதிகமாகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் வறுமையை
ஒழிப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவது இந்த
அரசின் தலையாய குறிக்கோளாக கொண்டிருப்பதை மனதாரப்
பாராட்டுகிறேன். தமிழ்நாட்டில் 70 சதவிகிதம் மக்களின்
வாழ்க்கையும் உழைப்பும் கிராமப் புறங்களில்தான் நடை
பெறுகிறது. இந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல
முனைகளிலும் முயற்சிகள் ஒருங்கிணைத்து மேற்கொள்ளவேண்டும்
என்பதனையும் கிராமங்களின் மீது இந்த அரசு எந்த அளவு
நல்லெண்ணத்தை வைத்துள்ளது என்பதனை தெளிவாகக் காட்டு
கிறது. நமது ஆளுநர் அவர்களின் உரையில் கிராமங்களில்
எவ்வாறெல்லாம் ஆலைகள் பெருக வேண்டும் என்று கூறப்
பட்டுள்ளதோ அதே போல சிரத்தை எடுத்து கூடிய விரைவில்
இந்தப் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்ளுகிறேன். குடிசைத் தொழில் வளரவேண்டுமென்றால், பீடி
சுற்றுதல் போன்ற தொழிலிலே அவர்களை ஊக்குவிக்க வேண்டு
மென்று அவர்கள் சார்பிலே நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப் புறங்களிலே முதல் கட்டமாக குடிநீர் பிரச்சினையை
முழுக் கவனம் செலுத்தி, தமிழகத்தில் குடிநீர் கிடைக்காத ஊரே
இல்லை என்ற நிலை உருவாக வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளு
கிறேன். பல இடங்களில் குடிநீர் தேக்கத் தொட்டிகள் இருந்தும்,
மின்சார இணைப்புகள் சரிவர அமுல் படுத்தவில்லை என்று
சொல்லிக் கொள்ளுகிறேன். கூடியவிரைவிலே மின் இணைப்பைக்
கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ்நாட்டில் நலிவுற்றுக் கிடக்கும் அரிசனங்கள், பழங்குடி
மக்கள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள், மகளிர் ஆகியவர்
களின் நல்வாழ்விற்கு இந்த அரசு கவனம் செலுத்தியதற்குப்
பாராட்டுகிறேன்.

மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட மதுவிலக்கு
கொள்கையை உறுதியாக கடைப்பிடிப்பதற்கு பாராட்டுகிறேன்.
குடிப்பழக்கத்தை மேற்கொள்ளாமல் இருக்க மக்களிடையே
பிரச்சாரம் செய்வதுடன் மது குடிப்பதற்கு அனுமதி
வழங்குவதை இப்போதிருக்கும் முறையை மாற்றி சற்று
கடுமையாக சட்டத்தை மாற்றவேண்டும் என வேண்டுகிறேன்.

அத்துடன் பொழுதுபோக்கு மன்றங்கள் என்று கூறி சிலர் தனிப்பட்ட முறையில் சூதாட்ட விடுதிகளையும் நடத்துகிறார்கள். அவைகளை ஒழிக்கப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பஞ்சாயத்து ஒன்றியத் தலைவரையும், நகராட்சித் தலைவரையும் மக்கள் நேரிடையாக தேர்ந்தெடுக்க வேண்டும் என அரசு கூறியதை மனமாரப் பாராட்டுகிறேன். இந்த முறையில் ஒன்றியத் தலைவர், நகராட்சித் தலைவர் மக்களிடையே நேரடித் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது.

(பிற்பகல் 12-20)

தமிழ் நாட்டில் நலிவுற்றுக் கிடக்கும் பட்டதாரி ஆசிரியர்கள், மற்றும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் நலனில் இந்த அரசு அக்கறை காட்டுகிற வகையில், அவர்களின் குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின் தங்கிய மாவட்டங்கள் என்று குறிப்பிடும் மாவட்டங்களில் நெல்லை மாவட்டமும் ஒன்றாகும். மற்ற மாவட்டத்தை விட எங்களுடைய மாவட்டத்திற்கு அதிக கவனம் செலுத்தி, எங்களுடைய மாவட்டத்தை பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பஞ்சாயத்துத் துறையில் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தி, அதிலே புதிதாக கல்லூரியில் படித்துவிட்டு வருகிற டாக்டர்களைப் போடுகிறார்கள். அந்த டாக்டர்கள் அனைவரும் கிராமப்புறங்களில் தங்குவது இல்லை. கிராமப் புறங்களில் அவர்கள் தங்குவதற்கு போதிய வசதிகள் இல்லை. அதோடு, நம்முடைய அரசும் அந்த மருத்துவ அதிகாரிகள் அந்த கிராமப்புறங்களில் தங்குவதற்கு பதிலாக ஐந்து மைல் சுற்றளவுக்குள் தங்கலாம் என்று சட்டபூர்வமாக அனுமதி அளித்து இருக்கிறது. அதன் காரணமாக அந்த மருத்துவ அதிகாரிகள் தங்களுடைய தனிப்பட்ட வைத்தியம் செய்வதற்காக டவுன் சைடில் வந்து தங்குகிறார்கள். ஆகவே, இந்த அரசாணையை தவறாகப் பயன்படுத்துவதால், அந்த டாக்டர்கள் அந்த கிராமங்களிலேயே இரவு நேரத்தையும் கழித்திடும் வகையில் அந்த இடத்திலேயே தங்கவேண்டும் என்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த கவர்னர் உரையை மனதாரப் பாராட்டி அமைகிறேன், நன்றி. வணக்கம்.

*திரு. து. ராமசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே பல நல்ல திட்டங்களையும், பல பிரச்னைகளையும் பற்றிக் கூறியிருந்தாலும்கூட சில முக்கிய பிரச்னைகள்பற்றி இங்கே குறிப்பிடாததற்காக வருத்தம் தெரிவிக்கிறேன்.

காவிரி நீர் பிரச்னைக்கு தீர்வு காண உறுதி அளித்து இருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே கோவை மாவட்டத்தின் உயிர் நாடியாக விளங்கும் லோயர் பவானி திட்டத்திற்கு தண்ணீர் கொடுப்பது பற்றி எந்தவிதமான அறிவிப்பும் இல்லை என்பது வருந்தத்தக்கது. லட்சோப லட்சம் ஏழை விவசாயிகளுக்கு சில ஆண்டுகளாக தண்ணீர் கிடைக்காததால் அங்கே அவதிப்பட்டுக்கொண்டு இருக்கும் நிலையை நாம் அங்கே காணமுடிகிறது. சில ஆண்டுகளாக நஞ்சைக்கு என்று விட்டுக் கொண்டு இருந்த தண்ணீரை இப்போது புஞ்சைக்கு என்று விடுகிறார்கள். அதுவும் ஒரு வருஷத்தில் 8 மாதம் விடவேண்டிய தண்ணீரை நான்கு மாதம் தான் விடுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் 1 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அங்கேயுள்ள விவசாயிகள் அனைவரும் இதனால் அவதிப்படுகிற நிலையில் இருப்பதால், இந்த அரசு அதற்கு ஆவன செய்து அங்கே நிரந்தரமாக, உறுதியாக தண்ணீர் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் கிருஷ்ணா நதி தண்ணீரை சென்னைக்கு கொண்டு வரப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். அதே நேரத்திலே அதை விட முக்கிய மிகப் பெரிய திட்டத்தைப் பற்றி இந்த அறிக்கையிலே எந்த விதமான அறிவிப்பும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. கேரளத்தில் ஒரு ஆண்டில் சராசரி 1,500 டி.எம்.சி. தண்ணீர் வீணாகி இறுதியில் கடலில் சென்று கலக்கிறது.

அதிலே கேரள அரசு எதிர்காலத்தில் உபயோகிக்க இருக்கும் தண்ணீர் 500 டி.எம்.சி. மீதமுள்ள 1,000 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. அதை கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழகத்திற்குப் பெறுவார்களானால், கோவை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், மதுரை மாவட்டம், இராமநாதபுரம்

மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் இருக்கும் வறட்சி நீங்கி, அங்கே பெரியதொரு பசுமைப் புரட்சி ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்ததாக, பாண்டியாறு-புன்னம்புழா திட்டம், பரம்பிக்குளம்-ஆழியாறு விஸ்தரிப்புத் திட்டம் போன்றவைகளைப் பற்றி பல ஆண்டுகளாக கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், கோவை மாவட்டம் மிகவும் பயன் பெறும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்த இரண்டு திட்டங்களையும் அரசு உடனடியாக நிறைவேற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கோதாவரி, கிருஷ்ணா இரண்டு ஆற்று தண்ணீர்களையும் பெறுவதற்காக ஆந்திரா அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, அவற்றை தமிழ் நாட்டிற்கு பெற்றால், அது நல்ல பயனை அளிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன், ஒகேனக்கல் அருகில் ஒரு அணையைக் கட்டி நீரைத் தேக்கினால், தருமபுரி-சேலம் மாவட்டம் அதிக பலனைப் பெறும். இதனால் காவிரி டெல்டா பிரதேசத்திற்கும் ஸ்திரமாக தண்ணீர் கிடைக்க முடியும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இம்மாதிரியாக முக்கிய திட்டங்களைப் பற்றி ஆளுநர் அறிக்கையில் அறிவிக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு விலைவாசிகள் மிகவும் உயர்ந்து இருக்கிற காரணத்தாலே, குறிப்பாக உர விலை, பூச்சி மருந்து விலை, மற்றும் மின்சாரக் கட்டண உயர்வு, மின்சார பம்ப் செட்டுகள், ஆயில் இன்ஜின் போன்றவற்றின் விலைகள் மிகவும் அதிகமாக உயர்ந்து இருக்கிறது. டிராக்டரின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்து இருக்கிறது. அதன் காரணமாக இன்றைக்கு விவசாயம் செய்வது கட்டுபடியாகாத தொழிலாகிவிட்டது விவசாயிகள் வறுமையால் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். ஜனத்தொகையில் 70 சதவிகிதம் விவசாயத்தை நம்பி கிராமப்புறங்களில் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்க மேற்கண்ட பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்ய



வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலையை அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சில அயல்நாடுகளில் இருப்பதைப் போல் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களை அரசு அவர்களுக்கு கட்டுப்படியாகும் விலையில் வாங்க முன் வரவேண்டும். வெளி மார்க்கெட்டில் அதிக விலை கிடைத்தால், விவசாயிகள் அங்கே விற்பதற்கும் உரிமை உடையவர்களாக இருக்கவேண்டும். வெளி மார்க்கெட்டில் விலை குறைவாக இருக்கும்போது, அரசு அந்தப் பொருள்களை வாங்க முன் வரவேண்டும். அதற்குத் தக்க வகையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில், இப்போது நியாயமான முறையில் தேவையான அளவு நூல் கிடைக்காமல் லட்சோப லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இன்று அவதிப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு கைத்தறி இலாகா மூலம் தேவையான நூல் நியாயமான விலையில் கிடைக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொண்டு, அதே நேரத்தில் அவர்கள் உற்பத்தி செய்யும் ஜவுளிகள் ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களிலும் லட்சோப லட்சம் ரூபாய்க்கு தேங்கிக் கிடக்கும் நிலையை நாம் காண்கிறோம். இந்த ஜவுளிகளையெல்லாம் கைத்தறி இலாகா உடனடியாக வாங்குவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த தேசத்தின் தந்தை காந்திஜி துவக்கி வைத்த கதர் இயக்கத்தைப் பற்றி ஆளுநர் உரையில் எதுவுமே தெரிவிக்காதது மிகவும் வருந்தத்தக்கது. லட்சோப லட்சம் தாய்மார்கள் நூற்பதற்கு தேவையான பஞ்சு கிடைக்காமல் அவதிப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். காதி டிபார்ட்மென்ட்டில் இரண்டு கிலோ பஞ்சு கேட்டால் ½ கிலோ பஞ்சுதான் கொடுக்கும் நிலை இருக்கிறது. நூற்போருக்கும், நெய்வோருக்கும் நியாயமான கூலியும் கிடைக்காமல் இருக்கிறது. இந்த கதர் இயக்கத்தை நம்பி என்னுடைய வெள்ளக்கோயில் தொகுதியில் இருக்கும் மக்கள் இருக்கிறார்கள். இந்த மூன்று ஆண்டுகளாக இருக்கும் பஞ்ச காலத்தில், அவர்களுக்கு இருக்கும் ஒரே உப தொழில் காதி தான். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, உடனடியாக அந்த மக்களுக்கு

[திரு. து. ராமசாமி] [1977 ஜூலை 11

தேவையானவற்றைக்கொடுக்க ஆவன செய்து, தேவையான பஞ்சு கொடுப்பதற்கும், நியாயமான ஊதியம் கிடைப்பதற்கும் வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு சர்வோதயா சங்கம் மேற்சொன்ன பணியை மிகச் சீரோடும் சிறப்போடும் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு சில நேரங்களில் அவர்களுக்கு நிதிப் பற்றாக்குறையின் காரணமாக மக்களுக்குப் போதிய பஞ்சு கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதன் காரணமாக மக்களும் அவதிப் படுகிறார்கள். ஆகவே, இந்த நிலையைப் போக்க அரசு சர்வோதய சங்கத்திற்கு நிதி கஷ்டம் வரும் காலத்தில் தற்காலிகக் கடன் அளிக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக்கோவில் தொகுதியில் வட்டமலை, ஓடைக்கரை திட்டத்தில் 3,000 ஏக்கர் சேர்த்து இருக்கிறார்கள். அதில் நஞ்சைக்குத் தண்ணீர் கொடுப்பதாக அரசு கூறி இருக்கிறது. நஞ்சை என்பதை புஞ்சை என்று செய்தால் 3,000 ஏக்கருக்கு பதிலாக 6,000 ஏக்கர் பயன் அடையும் என்பதை வலியுறுத்தி, இதனால் வறட்சியான அந்தப் பிரதேசத்தில் அதிக விவசாயிகள் பயன் அடைவது நன்மை பயப்பதாக இருக்கும் என்று கூறி, நஞ்சையாக இருப்பதை, புஞ்சை என்று மாற்றிக்கொடுக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்தபடியாக, கூட்டுறவு வங்கிகளுடைய தேர்தல்களைப் பற்றி ஆளுநர் அறிக்கையில் ஏதுமே தெரிவிக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்கள், முனிசிபாலிடிகள் ஆகிய தேர்தலைப் பற்றி தெரிவித்திருக்கிறார்கள். கடன் நிவாரணச் சட்டம் அமுலுக்கு வந்ததால், மக்கள், விவசாயிகள், தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்க முடியாமல், கூட்டுறவு இயக்கங்களையே நம்பி இருக்கின்ற நிலையில், அப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கங்களில், "பப்ளிக் ரெப்ரசன்டேஷன்" பற்றி ஒன்றுமே கூறப்படாதது ஒரு பெரிய குறை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தேர்தல்களை அரசு விரைவாக நடத்தி, விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றிய தேர்தல்களிலே ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர் தேர்தலை நேரடியாக நடத்தி மக்களே தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சட்டத்தைத் திருத்தக்



1977 ஜூலை 11] [திரு. து. ராமசாமி]

கூறியிருக்கிறார்கள். இதை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மனமார வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இதில் சில குறைபாடுகள், சிக்கல்கள் என்னென்ன இருக்கின்றன என்பதைப் பார்த்து அவைகளை நிவர்த்திக்க வேண்டும்.

மறைந்த பாரத ரத்னா ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த நேரத்திலே, பாரதப் பெருந்தலைவர் கர்ம வீரர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டன. 1961 ஆம் ஆண்டிலே, அன்று, கடற்கரையில் ஒரு மாபெரும் மாநாட்டை நடத்தி அதன் மூலம் அதை அறிமுகப்படுத்திக் காட்டினார். அன்று முதல் 1967 ஆம் ஆண்டு வரை மிகச் சிறப்பான முறையிலே ஊராட்சி ஒன்றியங்கள் பணியாற்றி வந்தன. அதற்குப் பிறகு—தி.மு.க. ஆட்சியிலே, ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரங்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கப்பட்ட காரணத்தால் இன்று அவை சிறப்பாக பணியாற்ற முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போது, நேரடித் தேர்தல் என்று வைக்கும்போது, ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுவுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்ற நிலை இருக்காது. அவர் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது. இப்படி நடக்க ஆரம்பித்தால், 60 ஆயிரம் மக்களுடைய பிரதிநிதித்துவம் பெற்ற ஊராட்சி ஒன்றியங்கள் கெட்ட பலன்களையே அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும். மேலும், போட்டியிடுகின்ற நேரத்தில், பஞ்சாயத்து அங்கத்தினருக்கு ஒரு வோட்டும், தலைவருக்கு ஒரு வோட்டும், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவருக்கு ஒரு வோட்டுமாக, மூன்று வோட்டுகள் வருகின்றன. இந்த மூன்று அங்கத்தினர்களும் கட்சி ரீதியாக நிறுத்தப்படப் போகிறார்களா, அல்லது ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கட்சி அப்படையில் போட்டி இருக்கக் கூடாது என்ற கொள்கைக்கு மாறுபட்டு, தேர்தல் போல நடக்கப் போகிறதா என்ற குழப்பங்கள் உருவாக வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகையால் இதிலுள்ள குறைபாடுகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து தவறுகள் நிகழாதவாறு பார்த்து இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகள் அமைக்கும்போது, புதிய சாலைகள் தான் அமைக்கப் பட வேண்டும், பழைய சாலைகள் செப்பனிடக்கூடாது என்ற ஒரு உத்திரவு இருக்கின்ற காரணத்தால், சாலைகள் செப்பனிடப்

படாமலே இருக்கின்றன. புதிய சாலைகள் அமைக்கப்பட வேண்டிய நிலை தற்போது இல்லை. கோவை மாவட்டத்தில், எல்லாக் கிராமங்களுக்குமே தற்போது சாலைகள் இருக்கின்றன. எனவே, பழைய சாலைகளைச் செப்பனிடக் கூடாது என்று கூறுவதால், புதிய சாலை அமைக்க ஒதுக்கும் நிதியை பழைய சாலைகளை ஒட்டி புதிய சாலைகளை அமைக்கின்றதைப் பார்க்கிறோம். 48 அடிக்கு ரோடு போட வேண்டும். இருக்கும் இட்டேரி 15 அடி அகலம்தான் இருக்கிறது. விவசாயிகளின் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது. இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லாமல் சர்க்கார் பணம் விரயமாகிறது. எனவே, பழைய சாலைகளைச் செப்பனிட்டுக் கொள்ளலாம் என்று சட்டத்தைத் திருத்தி மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தாராபுரம் தாலூகா கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலேயே வறட்சியான, பிற்போக்கான ஒரு தாலூகா என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகையால், தாராபுரம் தாலூகாவை "இண்டஸ்ட்ரியலி பேக்வார்ட்" என்று அறிவித்து அங்கே இண்டஸ்ட்ரீஸ் அதிகமாக உருவாவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளையெல்லாம் விட மிக முக்கியமான ஒரு விஷயம், ஆளுநர் உரையில் தீண்டாமையைப் பற்றி ஒன்றுமே கூறப்படாதிருப்பது. தமிழகத்தில் தீண்டாமை ஒழிப்பு என்பது மிக அத்தியாவசியமான ஒன்று. 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தீண்டாமை ஒழிப்பிற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் இன்னமும் தீண்டாமை அறவே ஒழிக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தீண்டாமை ஒழிப்பிற்கு அரசு பல சட்டங்களை வகுத்திருந்த போதிலும் இத்தகைய நிலை இருப்பதால், இதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை. முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னை கடற்கரைக் கூட்டத்தில் இருபது லட்சம் மக்களுக்கு முன்னால் ஒரு கருத்தைக் கூறினார்கள். அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது அந்த வீடுகள் ஒதுக்குப் புறமாக இருக்கக் கூடாது நகர்ப்புறங்களிலே மக்கள் வசிக்கும் பகுதியிலேயே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று



சொன்னார்கள். அதன் மூலமே தீண்டாமையை ஒழிக்க முடியும். மிக முக்கியமான இந்தக் கருத்து ஆளுநர் உரையில் இடம் பெறுமைக்காக நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆளுநர் உரை மீது என்னுடைய கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. ஆனூர் ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் மிகச் சிறப்பான பல அம்சங்கள் இருக்கின்றன. லஞ்ச ஊழல் ஒழிப்பு பற்றி மிகத் தெளிவாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல் கிராமப் பகுதிகளில் அதுவும் அரிசன மக்கள் வாழ்கிற பகுதிகளிலே குடிநீர் வசதி போதுமானதாக இல்லை. அத்தகைய குறையைப் போக்குவதற்கு வழிவகுக்கும் முறையில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஒவ்வொரு கிராமத்திலும் குடிநீருக்காக தாய்மார்கள் இரண்டு மூன்று மைல்கள் சென்று தண்ணீர் எடுக்க வேண்டிய அவல நிலையில் இருக்கிறார்கள். பல கிராமங்களில் போதுமான அளவு கிணறுகள் வெட்டப்படவில்லை. அப்படி வெட்டிய கிணறுகளிலும் தண்ணீர் கிடைக்கவில்லை அல்லது அவைகள் முழுமையாக வெட்டப்படாமல் பாழடைந்த நிலையில் விட்டு விடப்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட கிணறுகளில் உள்ள தண்ணீர் ஆடுமாடுகள் கூட குடிக்க உதவாத நிலையில் நாற்றம் எடுத்துக் கொண்டு இருக்கின்றது. அப்படிப்பட்ட தண்ணீரைத்தான் அரிசனப் பெருங்குடி மக்கள் குடிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நான் குறிப்பிட்டபடி இரண்டு மூன்று மைல்கள் சென்றால் தான் குடி தண்ணீர் கிடைக்கிறது. அந்தத் தலிப்பட்டவர்களின் கிணறுகளிலே கூட தண்ணீர் மொள்ளுகிறபோது சம்பந்தப்பட்ட நபர்கள் துரத்தி அடிக்கின்ற துர்ப்பாக்கிய நிலை இன்றைக்கும் காணப்படுகிறது. வெட்டிய கிணறுகளும் தூர் எடுக்கப்படாமல்

[திரு. ஆனூர் ஜகதீசன்] [1977 ஜூலை 11

இருக்கின்றன. இதனால் தண்ணீர் நாற்றம் அடிக்கிறது. அதை அவர்கள் மொண்டு குடிக்க முடியாமல் இருக்கிறது. இத்தகைய குறைகளை நிவர்த்திக்க ஆளுநர் உரையில் நடவடிக்கைகள் கண்டு இருப்பதை நான் வரவேற்கிறேன்.

விவசாயிகளுக்கான உரம், பூச்சி மருந்துகள், விவசாயக் கருவிகள் ஆகியவை விலை ஏற்றப்படாமல் கட்டுப்படுத்தியாக வேண்டும். விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க இந்த அரசு நிச்சயம் வழி செய்யும் என்று நம்பிக்கை ஏற்பட்டு இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியவில்லை.. அவர்களுக்கு நியாய விலை கிடைக்க வழி செய்ய இந்த ஆளுநர் உரையில் வகை செய்து இருப்பதை வரவேற்கிறேன். ஊராட்சிகளின் நிதி வசதி போதுமானதாக இல்லை. குடிநீர் வசதி மின்சார வசதி போன்ற பல வசதிகளைச் செய்து தர போதிய நிதி வசதி ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அந்த அளவுக்கு வருமானம் திரட்ட போதிய வழிகளைச் செய்ய இந்த அரசு முயற்சி எடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

(பிற்பகல் 12-40)

காலனி வீடுகள் புதியதாகக் கட்டப்பட்டிருந்தாலும் கூட, அவர்களுக்கு கொடுக்கின்றபோதே, குடியேறுவதற்கு முன்னலேயே அதன் கூரைகளும், தரைகளும், சுவர்களும் வெடிப்புகள் ஏற்பட்டு, குடியேற முடியாத நிலைமையில் பயங்கரமாக இருக்கிறது.

கடந்த காலத்தில் நடந்த அரசியல் சம்பந்தப்பட்ட தாக்குதல்கள், கொலைகள் பற்றி துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள இந்த அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களது துயர் துடைக்க புரட்சித் தலைவர் தலைமையிலான அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள இருப்பது பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.



1977 ஜூலை 11] [திரு. ஆனூர் ஜகதீசன்]

அதே நேரத்தில் மீனவர்கள், பீடித் தொழிலாளர்கள், மற்றும்
கிராமத்தில் இருக்கிற கைத்தொழிலாளர்கள் வாழ்க்கையில்
முன்னேற்றம் காண்பதில் இந்த அரசு அக்கறை காட்ட
வேண்டுமென்று நான் இந்த அரசை வேண்டிக் கேட்டுக்
கொள்கிறேன்.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு வரவுகால்களை தூர்
எடுத்து, ஏரிகளை ஆழப்படுத்தி, மடுவு நீரை சிறு சிறு
அணைக்கட்டுகள் மூலம் தடுத்து பாசனத்திற்குப் பயன்படுத்த
இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் ஆங்காங்கே இருக்கின்ற புறம்போக்குகளை
ஓரளவுக்குப் பயன்படுத்துகிற நிலை இருக்கிற இந்த நேரத்தில்—
அவர்கள் தரிசு நிலங்களைப் பயன்படுத்துவதில் யாருக்கும்
ஆட்சேபணை இருக்க முடியாது. அப்படிப் பயிர்
செய்கிறவர்களுக்கு உடனடியாக பட்டா கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரவு கால், ஏரி நீர் பிடிப்பு போன்ற இடங்களையும்
ஆக்கிரமிப்பு செய்துவிட்ட காரணத்தினால் உருகின்ற நிலத்தின்
அடி மண், உடனடியாக ஏரியைத் தூர்த்து, பயிரிடுவதற்கு ஏரி
நீரைப் பயன்படுத்த முடியாமல் தடுக்கிறது. அதனால் ஒரு மாத,
இரண்டு மாத காலத்தில் அறுவடையாக வேண்டிய பயிர்கள்
சாவியாகிவிடுகின்ற அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை
உடனடியாகப் போக்கவும், ஆக்கிரமிப்பாளர்களை அங்கிருந்து
அப்புறப்படுத்தவும் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சித் தலைவர்களையும், நகரமன்றத் தலைவர்களையும்
தேர்ந்தெடுக்கையில் உறுப்பினர்களைக் கடந்திச் சென்று
ஜனநாயகத்தையே கேவலப்படுத்தக் கூடிய இந்நிலையை மாற்ற,
ஊராட்சி ஒன்றிய நகராட்சித் தலைவர்களை நேரிடையாகத்
தேர்ந்தெடுக்கும் முறையை ஏற்படுத்த இருப்பது பற்றிய
குறிப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

கிராமங்களில் இருக்கிற தாய்மார்கள், நாங்கள் எல்லாம்
அங்கங்கே செல்கிற நேரத்தில், அவர்கள் எப்படிப்பட்ட
தொல்லைகளையும் தாங்கிக் கொள்வதற்குத் தயாராக இருப்பதாகச்

சொல்கிறார்கள். ஆனால் தங்களுடைய குடும்பத் தலைவன், தங்கள் பிள்ளைகள் குடித்துவிட்டு வந்து ஒவ்வொரு நாளும் வீட்டில் பண்ணுகிற தொல்லைகளைத்தான் தங்களால் தாங்க முடியவில்லை என்கிறார்கள். இப்படிப்பட்ட தொல்லையில் இருந்து தாய்மார்களுக்கு விடுதலை கிடைக்க மதுவிலக்குத் திட்டத்தில் இந்த அரசு உதவியாக இருக்கும் என்பதாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

அதே போல கிராமத்தில் இருக்கிற ஆதரவற்ற அநாதைமக்களும், விவசாயிகளும் இந்த அரசு அவர்களுக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்யும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்கேற்ப ஆளுநர் உரையில் விவசாயிகளுக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்ய இந்த அரசு முன்வரும் என்று கூறியிருப்பது எங்களுக்கு எல்லாம் ஆறுதல் அளிக்கிறது. இப்படிப்பட்ட ஆளுநரது உரையை நான் மனப்பூர்வமாக வரவேற்று, அமர்கிறேன். நன்றி.

***திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ஆளுநர் உரையில் 18 ஏ பாராவில், நகராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டுவர இருப்பதுபற்றி குறிப்பிட்டுள்ளதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சி வரவேற்கின்றது. இதை ஏற்கனவே எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் வரவேற்றார்கள். காரணம் என்னவென்றால், ஜனநாயகம் இன்னும் விரிவுபடுத்தப்படுகின்றது என்ற அடிப்படையில்தான் வரவேற்றார்கள். ஆனால் ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் அதிகமாகக் கிராமப்புறங்களே வர முடியும். அந்தக் கிராமப்புறங்களில் பெரும் பகுதி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் ஊராட்சி ஒன்றியத் தலைவராக வரக்கூடிய நிலை நிச்சயமாக இருக்க முடியாது. ஆகவே தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களும் ஊராட்சி ஒன்றியத் தலைவராக வரக்கூடிய அளவில் சட்டத்தில் ஒரு பாதுகாப்பு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது அரசியல் சட்டத்தில் இன்றைக்கு நாடாளு மன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் இட



ஒதுக்கீடு வழங்கியுள்ளதுபோல ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலிலும் இட ஒதுக்கீடு சட்டப்படி ஏற்படுத்தித்தரவேண்டுமென்பதாக இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 18 ஆவது பாராவில் குறிப்பிட்டிருக்கிறபடி குடிப் பழக்கத்தை அகற்றுவதற்கு இந்த அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதை நான் வரவேற்கிறேன். குடிப் பழக்கத்தைத் தடுப்பதற்குச் சட்டத்தால் மட்டுமின்றி பிரச்சாரத்தாலும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நிச்சயமாக வரவேற்கிறோம்.

ஏற்கனவே நகர்ப்புறங்களில் இருக்கிற இளைஞர்கள், மாணவர்கள் இன்றைக்கு அபின், கஞ்சா, இன்டாக்ஸிகேடிங் இன்ஜெக்ஷன்ஸ் போன்றவைகளைப் பயன்படுத்துகிற சூழ்நிலையைப் பார்க்கிறபோது—இப்படிப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகிற பொருளாகவும், கள்ளத்தனமாக விற்கப்படுகிற பொருளாகவும் இருக்கிற காரணத்தினால், இப்படிப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்யப்படாமலும், விற்பனையை முடக்குகின்ற தன்மையிலும் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமில்லாமல் கல்வி நிலையங்களில் பிரச்சாரம் செய்து, இப்படிப்பட்ட பழக்கத்திற்கு மாணவர்கள் ஆளாகி விடாதவாறு தவிர்க்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 'ப்ரீ லீகல் எய்டு டு த புவர்' என்கிற அடிப்படையில் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்த இலவச சட்ட உதவி கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, பப்ளிக் ட்ரஸ்ட் ப்ராபர்ட்டீஸ், மடங்கள் சம்பந்தப்பட்ட நிலங்கள் ஆகியவற்றைப் பயிர் செய்கிற சாதாரண விவசாயிகளைப் பொறுத்தவரையில்—அவற்றை மேற்பார்வை செய்கிற நிர்வாகிகள் செலவுக் கணக்கைக் காட்ட அந்த நிலங்களைப் பயிரிடுகிறவர்கள்மீது அபாண்டமான பல்வேறு வழக்குகளைப் போடுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றுவதோடு, இந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதோடு மட்டுமல்ல. சி. ஆர். பி. சி. செக்ஷன் 41 இன் கீழ் சந்தேக கேஸ்கள் என்று கிராமத்து மக்கள் நகரங்களுக்குச் சென்று பஸ் கிடைக்காமல், அங்கு, இங்கு படுத்திருந்தால் அவர்கள்மீது எல்லாம் போலீஸ்காரர்கள் போட்டுவிடுகிறார்கள். இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரண ஏழை எளிய மக்கள் இதனால் படுகிற சிரமம் அதிகமாக இருக்கிறது. ஸ்டேஷன்களில் வழக்கு குறைவாக இருக்கிறது என்கிற காரணத்தினால் இதுபோல சந்தேகக் கேஸ்கள் ஏழை எளிய மக்கள் மீது போடப்பட்டு வருவதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு இதுபோல சந்தேக கேஸ்கள் ஏழை எளிய மக்கள்மீது போடாதிருக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே அவசர காலத்தில் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. பம்பு செட்டுகள் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு மின்சாரம் யூனிட் 11 பைசாவில் இருந்து 16 பைசாவாக உயர்த்தப்பட்டது. அதைப்போன்று பஸ் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு காசு உயர்த்தப்பட்டது. அதைப் போல வீட்டு வரி முனிசிபாலிட்டிகளில் இரண்டு, மூன்று மடங்கு உயர்த்தப்பட்டது. இப்படி மின்சாரக் கட்டணத்தையும், பஸ் கட்டணத்தையும், ஏழை எளிய மக்களுடைய வீட்டு வரியையும் அவசர காலத்தில் உயர்த்திய காரணத்தினால் அவர்கள் வாய்மூடி மௌனியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவற்றை எல்லாம் பழைய நிலைக்கே கொண்டுவர இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

நெசவாளர்களைப் பொறுத்தவரையில் கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கிற ஒரே பிரச்னை என்னவென்றால் 36 அங்குலப் பாவு—அதற்கு மேல் போடாமல் இருந்தாலும்—அவர்களுக்கு நியாயமான அடிப்படையில் அதிகமான அளவிற்கு கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் பாவு நூல்கள் கிடைத்தால் கைத்தறி நெசவாளர்களின் பிரச்னை தீரும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அரசு மருத்துவமனைகளில்—மருத்துவமனை



என்றால் அங்கே மருந்து இருக்க வேண்டும். ஆனால் இங்கிருக்கிற ஏராளமான அரசு மருத்துவமனைகள் மருந்தே இல்லாத மனைகளாகத்தான் இருக்கின்றன. இதையும் கவனத்தில் கொண்டு ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ள குறைபாடுகளை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். குடிப் பழக்கத்தைப் பொறுத்த வரையில்—கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புக்களை அதிகப் படுத்துவதால் தடுக்க முடியும். என் வாசுதேவநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு சர்க்கரை ஆலை ஒன்று வந்துவிட்டால் அங்குள்ள கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாக ஏற்படும். அப்படி ஏற்படும் காரணத்தால் சாராயம் குடிக்கிற பழக்கமும், குடிக்கிற பழக்கமும் குறைக்கப்படும். ஆகவே வேலைவாய்ப்புக்களை கிராமங்களில் அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

* திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களது உரையின் மீது ஜனதாக் கட்சி சார்பில் ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ளலாம் என்று விரும்புகிறேன்.

இந்த உரையைப் பொறுத்தவரையில் பொதுவாக ஏற்படுகிற ஒரு கண்ணோட்டம் என்னவென்றால் இந்த உரையில் திட்டவட்டமான திட்டங்கள் எதுவும் காணப்படவில்லை, பொதுவாகத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தேர்தல் காலத்தில் சொல்லப்பட்ட உறுதிமொழிகள் ஒன்றையும் இந்த அறிக்கை பிரதிபலிப்பதாக இல்லை என்பதை நான் இங்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உரையைப் பொறுத்தவரையில் லஞ்ச லாவண்யம், வீண் விரயம் இவை தவிர்க்கப்பட்டு நல்ல முறையில் இங்கே ஆட்சி நடத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஜூன் மாதம் 30 ஆம் தேதி இந்த அரசு பொறுப்பேற்கிற போது இங்கே ஆடம்பரச் செலவுகள் ஏற்பட்டு வீண் விரயம் செய்ததாக பொதுமக்கள் மத்தியில் இன்று பேசுகிற ஒரு

[திரு. பொ. விஜயராகவன்] [1977 ஜூலை 11

சூழ்நிலையை நான் எடுத்துக் காட்டிக் கொள்ள விரும்புகிறேன். எடுத்த உடனேயே இந்த மாதிரி வீண் விரயங்களைச் செய்ய இவர்கள் தொடங்கியிருக்கிறார்கள், போகப் போக என்ன செய்யப் போகிறார்களோ என்னவோ என்று மக்கள் அஞ்சுகிற ஒரு சூழ்நிலை இன்று இங்கு ஏற்பட்டிருப்பதை இந்தத் தருணத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மேலும் நெருக்கடி நேரத்தில் நடந்த அடக்குமுறைகள் பற்றியும், அவல நிலைகள் பற்றியும், இங்கு ஏற்பட்ட அராஜகங்கள் பற்றியும், மத்திய அரசில் அங்கே விசாரணைக் கமிஷன்கள் பல நியமித்திருக்கிற இந்த வேளையில் இங்கு தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், அடக்கு முறைகளையும், பழி தீர்க்கிற முறைகளையும், கட்டாய ஓய்வு பற்றிய முறைகளையும் பற்றி ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிக் குறிப்பிடப் பட்டிருக்குமானால் பழி தீர்க்கப்பட்ட ஊழியர்கள், அவர்கள் அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி அல்லது தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்கள பழி வாங்கப் பட்டிருந்தாலும் சரி அவர்களுக்கு அது ஒரு ஆறுதலாகவாவது இருந்திருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது. இன்னும் கூட்டுறவுத்துறைபற்றிச் சொல்கிற வேளையில் கூட்டுறவுத் துறையில் ஜனநாயக முறைப்படி நிலைமைகள் மாற்றப்படவில்லை. இன்னும் அங்கு அதிகாரிகள், தனி அதிகாரிகள் ஆட்சி செலுத்தக்கூடிய ஒரு முறையை உருவாக்கியிருக்கிறார்கள். அவசர கால நிலைமையின்போது உருவாக்கப்பட்ட அந்த நிலைமைகள் இன்று மாற்றப்படுவதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்று கவர்னர் அவர்களது உரையில் தேடிப் பார்த்தால் காண முடியாத ஒரு சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது தேர்தல்களை நடத்தி ஜனநாயக முறைப்படி அவற்றை நிர்வகிக்கிற பொறுப்பை ஏற்படுத்தித் தரும் விதத்தில் இந்த அரசு தக்க பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தல் நேரடித் தேர்தலாக வர வேண்டும் என்று, நேரடித் தேர்தல் நடைபெற வேண்டும் என்று, அரசுச் சார்பில் கூறி இருப்பதை நான் மகிழ்ச்சியோடு



1977 ஜூலை 11] [திரு. பொ. விஜயராகவன்]

ஏற்றுக்கொண்டாலும் எங்கள் குமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் எங்கள் மாவட்டத்தில் பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டபோது இருந்த சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கு பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டபோது கிராமப் பஞ்சாயத்துக்களாக இருக்கவேண்டியவை நகரப் பஞ்சாயத்துக் களாகவும், நகரப் பஞ்சாயத்துக்களாக இருக்கவேண்டியவை கிராமப் பஞ்சாயத்துக்களாகவும் பிரிக்கப்பட்டு, இன்று வருவாய் இல்லாத ஒரு சூழ்நிலையில், வருமான அடிப்படையில் பிரிக்க முடியாத ஒரு நிலையில், அங்கு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள், கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்கப்பெறாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தச்சம்பரம்பு என்ற பஞ்சாயத்தைப் பிரித்தார்கள். அந்தக் கிராமப் பஞ்சாயத்தில் இருக்கிற வசதிகள், நிலைமைகள் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது, சப்-ரெஜிஸ்ட்ரார் அலுவலகம் இருக்கிறது, போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ் பெக்டர்கள் அலுவலகங்கள் இருக்கின்றன, பொதுப்பணித்துறை இளம் பொறியாளர் அலுவலகம் இருக்கிறது, மின்சாரத் துறை இளம் பொறியாளர் அலுவலகம் இருக்கிறது, இப்படி ஒரு நகரப் பஞ்சாயத்து இருக்க வேண்டிய நிலைமைகள் அத்தனையும் இருந் தாலும் அந்தப் பஞ்சாயத்தில் 500 வாக்காளர்களே இருக்கக்கூடிய அளவிற்கு அதை ஒரு கிராமப் பஞ்சாயத்தாகப் பிரித்திருக் கிறார்கள். தனி ஒருவர் வோட்டு பெற வேண்டும், தனிநபர்கள் வோட்டு பெற வேண்டும் என்று அன்றையதினம் பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டு, பஞ்சாயத்துக்கள் இன்று வருவாயற்ற நிலையில், மக்களுக்குப் பயன் இல்லாத நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தமாதிரி வசதிகள் ஏற்படாத பஞ்சாயத் துக்கள் இருப்பதை விட இந்தப் பஞ்சாயத்துக்கள் புனரமைக்கப் பட்டு நல்லமுறையில் பஞ்சாயத்துக்கள் அமைந்தால்தான் மக்களுக்கு நன்மை கிடைக்க வாய்ப்புண்டு என்ற காரணத்திற்காக இந்தப் பஞ்சாயத்துக்களை புனரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கான டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் ஆபீஸர் அவர்கள் இதற்கு முன்னால் அரசுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித் திருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் பரிசீலித்து அந்த

[திரு. பொ. விஜயராகவன்] [1977 ஜூலை 11

அறிக்கையின்படியோ அல்லது அதை விட நன்றாக இருக்கிற வகையிலோ பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டு அவை நல்ல முறையில் அமைக்கப்படுமானால் இன்னும் நல்லமுறையில் மக்களுக்குப் பணியாற்ற வாய்ப்புண்டு என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மேலும் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜன வகுப்பைச் சார்ந்த ஏழை எளிய மக்களுக்கும், மீனவர்களுக்கும் வீட்டுவசதி செய்து தரப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியது என்றால் அது மிகையாகாது.

அதேபோல் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில், அடித்தளத்தில் இருக்கிற பனையேறும் தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் வீட்டுவசதி செய்து தரவேண்டும் என்று இந்நேரத்தில் தங்கள் வாயிலாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கல்வி அறிவு அதிகமான அளவு முன்னேறியிருக்கிற ஒரு மாவட்டம் எங்கள் மாவட்டம் என்பதை எல்லோரும் உணருவார்கள். 1971-ம் ஆண்டு புள்ளிவிவரக் கணக்குப்படி 58 சதவீதம் அங்கு படித்தவர்கள் இருக்கிறார்கள். வேலைவாய்ப்பாக இருந்தாலும் சரி, வேலை வாய்ப்பிற்கான தொழிற் கல்லூரிகள், தொழிற் கல்விக்கூடங்கள் வாய்ப்பு வசதிகளானாலும் சரி, அங்கே குறைவாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சுமார் 110 ஐ.டி.ஐ. இடங்களுக்கு இந்த முறை 5,000-க்கும் அதிகமான விண்ணப்பத் தாள்கள் பெறப்பட்டு மிகுந்த நெருக்கடியானதொரு சூழ்நிலை, மிக இடர்ப்பாடானதொரு சூழ்நிலை அங்கு ஏற்பட்டிருப்பதை இன்று அரசே உணருகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கல்வி அறிவு அதிகமாக உள்ள குமரி மாவட்டத்தில் இருக்கிற ஐ.டி.ஐ. பள்ளியை இன்னும் ஒன்று அதிகமாக கூட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, குறிப்பாக அதிகமாகப் படிக்கிற மக்கள் வாழ்கிற விளவங்கோடு தாலுகாவில் அந்தப் பள்ளி அமையுமானால் அங்கிருந்து வருபவர்களுக்கு அது சிறப்பாக அமையும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1977 ஜூலை 11] [திரு. பொ. விஜயராகவன்]

இன்னொரு இடர்ப்பாடான சூழ்நிலை, மிகவும் மோசமான சூழ்நிலை ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற நிலைமை மோசமானதொரு நிலைமையிலிருக்கிறது. பல பள்ளிக்கூடக் கட்டடங்கள் இன்று கீழே விழுந்துவிடுமோ, வகுப்புகள் நடந்து கொண்டிருக்கும்போதே, மாணவர்கள் ஆசிரியர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கும்போதே அவர்கள் தலையில் விழுந்துவிடுமோ என்று சொல்கிற அளவிற்கு மிக மோசமான சூழ்நிலையில் பல பள்ளிக்கூடங்கள் அங்கு இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்கிறபோது ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் ரூபாய்தான் மாநில அளவில் கல்விக் கூட கட்டடங்களுக்காக ஒதுக்குகிறார்கள், ஆகவே சரியானபடி எங்களால் செலவு செய்ய முடிவதில்லை என்றும் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

ஆகவே, பள்ளிக்கூடங்கள் இடிபாடுகளுக்கு ஆளாகாமல் இருக்க, பள்ளிக் கட்டடங்களுக்கு அதிகமான அளவு பணத்தை ஒதுக்கீடு செய்து செப்பனிட வேண்டும். சில பள்ளிக்கூடங்களில் மழை நேரங்களில், ஆசிரியர்களும் மாணவர்களும் வெளியே ஓடிப்போகின்ற நிலைமை ஏற்படுகிறது. பல பள்ளிக்கூடங்களில் கூரையில்லாமல் வெயிலில் மாணவர்கள் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது என்பதை இந்த அரசுக்கு உணர்த்த விரும்புகிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் இவைகள் அனைத்தும் அரசுப் பள்ளிக்கூடங்கள் ஆகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீர்ப்பாசன வசதியை எடுத்துக் கொண்டால், சிற்றாறு பட்டணங்கால், மற்றுமுள்ள கோதையாறு இந்தத் திட்டங்களில் உள்ள கால்வாய்களில் எல்லாம் சுமார் மூன்று வருடங்களாக தூர் எடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு கடந்த மூன்று வருடங்களாக பணம் அனுமதிக்கப்படாமல் இருப்பதால் நீர்ப்பாசனம் சரியாகச் செயல்படாமல் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, கிளை கால்வாய்களில் சிமிண்ட் லைனிங் கொடுக்காத காரணத்தால் சரியாக தண்ணீர் செல்லாமல், பற்றாக் குறை ஏற்படுகின்ற சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. முக்கியமாக

[திரு. பொ. விஜயராகவன்] [1977 ஜூலை 11

கிளை கால்வாய்களில் எல்லாம் சிமின்ட் லைனிங் கொடுத்தால் இன்னும் நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் விவசாயத்திற்குக் கொண்டு வந்து பயிர் ஏற்றுவதற்கு தகுந்தபடி உருவாக்க முடியும் என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்று வருகின்ற முக்கியமான நிகழ்ச்சி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இளைஞர் அணியிலிருந்த வேலையில்லாத பட்டதாரிகள் சுமார் 1,500-க்கு மேற்பட்டவர்கள் இன்று நிரந்தரமான வேலை எதுவும் இல்லாமல் நிற்கின்ற நிலையில் அரசைப் பார்த்து போராடுகின்ற நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கு அரசு ஏதாவது பரிகாரம் செய்து இருக்கின்றதா என்பதை நான் கவர்னர் உரையில் துருவித் துருவிப் பார்த்தும் காணப்பட வில்லை.

இதைப்போலவே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் நெருக்கடி காலத்தில் நடத்தப்பட்ட ஆட்குறைப்பு, அந்த நேரத்தில் பிரித்துவிடப்பட்ட கண்டக்டர்கள், டிரைவர்கள், மெக்கானிக்குகள் இப்படிப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் இன்னும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதே நேரத்தில் பல இடங்களில் பல வழித்தடங்களில் பஸ்கள் நீக்கப்பட்டு இருப்பதன் காரணமாக ஆட்குறைப்பு ஏற்பட்டு, தொழிலாளர்கள் வாடுகின்ற ஒரு சூழ்நிலையும் இருக்கின்றது என்பதை எடுத்துச் சொல்வது எங்களுக்குக் கட்டாயமாக இருக் கின்றது. இவர்களுடைய வாட்டத்தைப் போக்குகின்ற அளவு நீக்கப்பட்ட வழித்தடங்களில் புதிதாக பஸ்கள் விடும்போது, வேலையின்றி இருக்கும் இவர்களை அமர்த்த வேண்டும் என்றும், எல்லா காலியிடங்களிலும் இப்படிப்பட்டவர்களை அமர்த்த வேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, போலீசாரின் அடக்குமுறை அளவுக்கு மீறி அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி தினம் தினம் புகார்கள் வந்து சொல்லுகின்ற அளவுக்கு மோசமான நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. prohibition கேஸ் என்று சொல்லி பொய் வழக்குகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



1977 ஜூலை 11] [திரு. பொ. விஜயராகவன்]

மேலும், முக்கியமாக எங்களுடைய மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் கடலரிப்பு அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு தடுப்புச்சுவர் கட்டுவது என்று பல திட்டங்கள் முன்பு வகுக்கப்பட்டன. முக்கியமாக மீனவர்கள் கடலரிப்பினால் தங்கள் தொழிலுக்கு பாதகம் ஏற்பட்டு, இந்தப் பிரச்னைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வாழ்கின்ற இடங்களில் தடுப்புச்சுவர் கட்ட வேண்டியது அவசியம். கேரளாவில் விழிஞ்சம் போன்ற பகுதிகளில் கட்டியிருப்பதுபோல், இவர்கள் தொழில் நடத்துவதற்கு ஏற்ற முறையில் இங்கும் தடுப்புச்சுவர் கட்ட வேண்டும் என்பதை அரசின் பரிசீலனைக்கு எடுத்துச் சொல்லி, இதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. தீ. சு. நல்லதம்பி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இன்றையதினம் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்த திராவிட முன்னேற்றக் கழகத் திற்கும், அதன் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து, என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கும் பூங்கா நகர் தொகுதி மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் அவர்களுடைய உரை மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்த உங்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இங்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்த வைப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்த நேரத்தில் எங்களைப்போன்று புதிதாக வந்திருக்கக்கூடியவர்கள் அதிகமாக எதிர்பார்த்தோம். புரட்சித் தலைவருடைய ஆட்சியில் அண்ணா தி. மு. க. அரசு அமைத்து இருக்கின்ற நேரத்தில் எதிர்பார்ப்பதெல்லாம், இன்றைய தினம் உரையாற்று கின்ற நேரத்தில் 17 மாத காலமாக, நீண்ட நெடுங்காலமாக குடியாசுத் தலைவருடைய ஆட்சியில் அச்சம் இருந்தது, இப்போது அச்சமற்ற நிலைமையில் மக்கள் ஆட்சி மலர்ந்திருக் கின்றது என்று சொல்லுகின்றார்கள்.

அப்படிப்பட்ட மக்கள் ஆட்சி மலர்வதற்குப் பாடுபட்ட அந்த என். ஜி. ஓ க்களை மறந்து விட்டார்கள் என்பதை நினைத்து என்போன்றவர்கள் வருந்தவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். அனைத்து அரசியல் கட்சிகளுடைய கோபதாபங்களை, வசை மொழிகளைத் தாங்கிக் கொண்டு தேர்தலை நல்ல முறையில் நடத்தித் தந்தவர்கள் என். ஜி. ஓ.க்கள். அப்படிப்பட்ட என். ஜி. ஓ. க்களைப் பற்றி மாண்புமிகு கவர்னர் அவர்கள் ஒன்றுமே குறிப்பிடவில்லை.

இரண்டாவதாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி நம்முடைய உறுப்பினர்கள் பலர் இங்கே பேசினார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எந்தத் திட்டத்தையும் இங்கே வைக்கவில்லை.

பொதுவாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழில் துறையைப் பற்றி என்ன கொள்கையை கொண்டிருக்கிறது, அவர்களுடைய குறிக்கோள் என்ன என்பதைப் பற்றி திட்டவட்டமாக ஏதுவும் தெரிவிக்கப்படவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொழில் துறையில் தனியார் துறையை ஊக்குவிக்கப் போகிறார்களா அல்லது பொதுத் துறையை ஊக்குவிக்கப் போகிறார்களா அல்லது கூட்டுறவுத் துறையை ஊக்குவிக்கப் போகிறார்களா அல்லது தேசிய மயமாக்குவதை ஊக்குவிக்கப் போகிறார்களா என்பதை மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிடவில்லை. முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு எங்கள் தலைவர் கலைஞர் ஆட்சியில் இருந்தபோது கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் விட்டு விட்டு ஆட்சியை நடத்தப் போகிறார்களா என்று தெரியவில்லை.

பஸ்களைத் தேசியமயமாக்குவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்களிடம் மகஜர் கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். எந்த அளவுக்கு அது உண்மை? அது எந்த அளவுக்கு நியாயம் என்பதைக் கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

இன்றைய தினம் தொழில் துறையில் எங்கள் திட்டம் இன்னின்ன என்று திட்டவட்டமாகக் கோடிட்டுக் காண்பிக்கப்படவில்லை. தேசியமயமாக்கும் பிரச்னையில், பேருந்துகளைப்பற்றி திட்டவட்டமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில்,

எப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பது எதையும் தெரிவிக்காததைப்பற்றி நாங்கள் மிகவும் மனக்கசப்போடுதான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதில், பிரதமர் கூறியிருப்பதற்கு, ஆளுநர் உரையில் வரவேற்பு தந்திருக்கிறார்கள். வரவேற்பு தந்திருக்கின்ற அதே நேரத்தில், நீண்ட நாள் இதற்காகப் பாடுபட்டுப் போராடிய சில தலைவர்களுக்கு இதில் நன்றி கூறவில்லை. குடியரசுத் தலைவர் ஆட்சி வருவதற்கு முன்பு நமக்கு எந்தவிதமான உரிமையும் இல்லாது இருந்த நேரத்தில், புரட்சித் தலைவர், முதலமைச்சர் பதவியில் இருக்கும் போதும், அமைச்சராக திரு. எட்மன்ட் இருக்கும் போதும், இதுவரைக்கும் நமக்கு இல்லாது இருந்த உரிமையை அதாவது கோட்டையில் இந்த நாட்டிலுள்ள முதலமைச்சரே கொடி ஏற்றி வைக்க வேண்டும் என்ற உரிமையை, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது, அதற்குத் தலைவராக இருந்த கலைஞர் இந்த உரிமையைப் பெற்றுத் தந்தார். அதற்காக மூன்றாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்காமல் விட்டுவிட்டார்கள். இவர்களுடைய பெருந்தன்மை இவ்வளவு தான் என்று நாங்கள் அதை விட்டுவிடுகிறோம்.

(பிற்பகல் 1-10)

அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசினர் குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கித் தந்தார்கள். குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கலைஞர் அவர்கள் ஆட்சியில் எந்த நிலையில் விடப்பட்டதோ, அதே நிலையில் இன்றும் நின்று கொண்டிருக்கிறது. அந்த வண்டிச் சக்கரம் சுற்றும் நகரவில்லை. வேண்டுமென்றால், ஆளும் கட்சியைச் சேர்ந்த 2 அல்லது 3 பேர்கள் என்னுடன் வரட்டும், நான் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் இன்றுள்ள நிலையைக் காட்டுகிறேன்.

குடிசை மாற்று வாரியத்திலே அன்று கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்திலே, ஒவ்வொரு கட்டிடத்திற்கும் மின்சார விளக்கும், தண்ணீர் வசதியும் உருவாக்கித் தந்தார்கள். அந்த ஆட்சி நீக்கப்பட்டவுடன், அந்த நேரத்தில் ஒவ்வொரு

வரும் போட்டி போட்டுக் கொண்டு சில கட்டிடங்களில் குடி புகுந்தார்கள். அந்தக் கட்டிடங்களுக்கு இன்னும் மின்சார வசதி கிடையாது, தண்ணீர் வசதி கிடையாது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு இம்மாதிரி இருப்பது நன்கு தெரியும்.

என்னுடைய தொகுதியாகிய புளியந்தோப்பு, ஆனைகவுனி ஆகிய பகுதிகளில் இன்றும் இம்மாதிரி மின்சாரம், தண்ணீர் வசதிகள் இல்லாத நிலை இருக்கிறது. கலைஞர் ஆட்சி முடிந்த வுடன் இப்பகுதிகளிலுள்ள கட்டிடங்களுக்குப் போட்டி போட்டுக் கொண்டு போனார்கள். அவர்கள் இன்றைக்கு தண்ணீருக்காக 2, 3 மைல்கள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், கலைஞர் ஆட்சியிலே எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டன. அதன்பின்னர், மிசா, நெருக்கடி கால நிலைமை வந்தவுடன் மக்களுக்கு எந்தவிதமான தன்மையும் கிடைக்கவில்லை.

இப்போது பொதுவாக, வேலையில்லாத் திண்டாட்ட நிலைமைக்கு ஒரு மாற்றுத் திட்டம் கொண்டு வரப்போவதாக ஆளும் கட்சியினால் சொல்லப்படுகிறது. குடிசை மாற்றுத் திட்டத்தினால் அவதிப்படும் ஏழை மக்களைப்பற்றி எந்த ஒரு திட்டமும் வைக்கப்படவில்லை. இரண்டாவதாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இன்றைய தினம் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பண்டங்களுக்குப் போதுமான ஆதாயம் கிடைக்கவேண்டும். அதேநேரத்தில், இடைத் தரகர்கள் குறுக்கிடு அதிலே இருக்கக்கூடாது. எனக்குத் தெரிந்த வரையில், அண்ணா அவர்களுடைய கொள்கை என்னவென்றால், 'இந்த இடைத் தரகர்களே இருக்கக் கூடாது' என்பதுதான். இன்றைய தினம் அண்ணா அவர்களின் கொள்கைப்படி ஆட்சி நடத்துவதாகச் சொல்கின்றவர்கள், இந்த இடைத் தரகர்களுக்கு ஓரளவுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கின்றார்கள். இதுதான் அண்ணா அவர்களின் கொள்கையா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, இன்றைய தினம் லஞ்ச ஒழிப்பைப்பற்றி அறிவிக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை எப்படி கொண்டு வரப் போகிறீர்கள்? மத்திய அரசும் இதற்குச் சட்டம்





கொண்டு வரப் போகிறார்கள். நமது சட்டம் அதை ஒட்டியிருக் குமா அல்லது நாம் தனியாகச் சட்டம் செய்யப் போகிறோமா? நாம் எப்படி கொண்டு வரப்போகிறோம் என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

பொதுவாக ஒரு உதாரணம் சொல்கிறேன். இங்கே, முன்பு ஒரு புகார் கொடுக்கப்பட்டால், அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம், புகார் சரி இல்லை என்றால் புகார் கொடுத்தவரின் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று இருந்தது. ஆனால் இன்றையதினம் அதைப்பற்றி என்ன சட்டம் கொண்டு வரப்போகிறீர்கள்? மத்திய அரசாலே கொண்டு வரப்போகின்ற சட்டத்தை ஆதரிக்கப் போகின்றீர்களா? இன்றையத் தினம் சட்டம் கொண்டு வருகின்ற நேரத்தில், ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இவைகளையெல்லாம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியே நாம் சட்டம் கொண்டுவந்தாலும், போலீஸ் அதிகாரிகள் அதிலே வெகு ஜாக்கிரதையாக பிளாக் மெயில் பண்ணுவார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். 4 நாட்களுக்கு முன் நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் ரோட் பகுதியில் சிறு நகைக் கடை வியாபாரம் செய்யும் வியாபாரிகள் கடைகளுக் கெல்லாம் போலீஸ் ஒரு நபரை அழைத்துக்கொண்டு போய் வீணை தொந்திரவு கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கடைக்காரர்கள் எல்லாம் சேர்ந்து புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து மகஜர் கொடுத்திருக் கிறார்கள். அவர்களும் அதுபற்றி விசாரித்து ஆவன செய் வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி விசாரித்து இதற்கு நல்ல பரிகாரம் காண வேண்டுமென்று நானும் கேட்டுக் கொள் கிறேன்.

என்னுடைய கட்சியின் கொறடா அவர்கள், என்னைச் சீக்கிரம் முடித்துக் கொள்ளுமாறு ஜாடை காட்டுகிறார்கள். எனது ஒருசில கருத்துக்களைச் சொல்லி சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன்.

உடனடியாக மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நான் இப்படி கேட்டுக் கொள்கின்ற நேரத்திலே, இதற்கு சிலபேர் எதிர்ப்பும் தெரிவிக் கலாம். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், இன்றைய தினம் ஒரு அதிகாரி இருக்க வேண்டிய இடத்திலே ஒன்பது அதிகாரிகள் உட்கார்ந்துகொண்டு செய்யக்கூடிய அட்டூழியங் களும், அக்கிரமங்களும், அநியாயங்களும் கொஞ்ச நஞ்சமல்ல.

மாண்புமிகு நமது கைத்தறி அமைச்சர் அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்; நல்ல பண்பாளர். அவர் அப்படி இருந்த நேரத்தில் நாங்கள் இருவரும் அங்குள்ள வேதனைகளைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அங்கு நீண்டகாலமாக இருந்திருக்கிறார். இவ்வளவு வேதனைகளையும் அவர் இங்கே சொல்லாவிட்டாலும், காபினெட் கூட்டத்திலேயாவது இதைப்பற்றி எடுத்துச் சொல்லி, அதற்கான வழிவகைகளை காண்பார் என்று நம்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவோ இருக்கின்ற இன்றைய நிலையில் ஒரு ரிடையர்ட் ஆன அதிகாரியை அழைத்து, அவரை நிதி இலாகாவின் ஆலோசகராகப் போட்டு, ஓராண்டு காலமாக அவரை பம்பாய்க்கும், கல்கத்தாவிற்கும் பயிற்சிக்கு என்று அனுப்பிக் கொண்டிருக்கிறார்களே, இது எந்த அளவுக்கு நியாயமானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், உறுப்பினர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைக்கு வேலையில்லாத படித்த இளைஞர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், ஓய்வு பெற்ற ஓர் அதிகாரியைக் கொண்டுவந்து, நிதி இலாகாவின் அட்வைசராகப் போட்டு அவரை பயிற்சி பெற அனுப்பியிருக்கிறார்கள் என்றால், இது எந்த வகையில் நியாயம்? பொதுமக்கள் நன்மையை எதிர்பார்க்கும் இந்த நேரத்தில், இதற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

* **திரு. த. புஸ்பராஜ் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் அளித்த உரையைத் தொடர்ந்து நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என் கருத்தைக் கூறுவதற்கு முன்னர், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், வருகின்ற 15 ஆம் தேதி மறைந்த நமது மாபெரும் தலைவர் காமராஜ் அவர்களது பிறந்த நாள். அந்த நாளை ஒட்டி, அவரது நினைவாக பெரும் தலைவர் காமராஜ் அவர்களது திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்திலே திறந்து வைக்க ஏற்பாடு செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், தொழில் துறை வாய்ப்புக்கள் பற்றி ஆராயும்படி ஆளுநர் அவர்கள் உரையில் கூறியுள்ளார்கள். எங்கள் புதுக்கோட்டை மாவட்டம் தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டம். எங்கள் மாவட்டம் [illegible]





இதுவரை எந்தவிதமான தொழிலும் அமைக்கப்படவில்லை. காகிதத் தொழிற்சாலை, வன சம்பந்தமான தொழிற்சாலை ஆகியவைகள் அமைக்க சாத்தியக் கூறுகள் எங்கள் மாவட்டத்தில் அதிகமாக உள்ளது. வருகின்ற பட்ஜெட்டிலே எங்கள் மாவட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கி, வளப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் ஒரு தொழுநோய் மருத்துவ மனை அமைக்கப்பட்டுள்ளது. அந்த மருத்துவ மனை நகரத்தின் மேட்டுப் பகுதியில் அமைந்திருக்கிறது. மழைக்காலத்தில் அங்குள்ள அழுக்குத் தண்ணீர் நகரத்திற்குள் வந்து அதனால் நகரத்தில் குடிதண்ணீர் உபயோகிக்க முடியாத அளவிற்கு பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. இதனால் நகரத்தில் வாழும் ஒரு லட்சம் பேர் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த தொழுநோய் மருத்துவ மனையை உடனடியாக நகரத்திலே இருந்து குறைந்தது ஐந்து மைல் தொலைவிற்காவது மாற்ற வேண்டும். அதற்கு வசதியான இடம் நகரத்திற்கு கிழக்கு, மேற்கு பகுதியில் உள்ளது. இதற்குத் தேவையான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்கிறேன்.

தவிர, புதுக்கோட்டையில் காட்டு இலாகாவின் நிலம் நீண்டகாலமாகத் தரிசாக இருக்கிறது. அந்த நிலங்களை அரசு ஆக்கிரமித்து, சமுதாயத்தில் நீண்ட நாட்களாக நிலம் இல்லாத ஏழைகளுக்கும், அரிஜனங்களுக்கும், இலங்கையிலிருந்து திரும்பியுள்ள அகதிகளுக்கும் குடும்பத்திற்கு 5 ஏக்கர் என்று பிரித்து அவர்களுக்கு இலவசமாகப் பட்டா செய்து கொடுத்து, மேலும் அவர்களுக்கு விவசாயம் செய்ய நீண்டகால கடன் உதவி செய்தால், அங்குள்ள ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். விவசாய உற்பத்தி பெருகும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலங்குடி நகரப் பஞ்சாயத்தை முனிசிபாலிடியாக்கித் தர வேண்டும். அதற்கான எல்லாத் தகுதியையும் அந்த நகரப் பஞ்சாயத்து பெற்றிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆலங்குடியிலுள்ள அரசினர் மருத்துவ மனையில் போதிய கட்டிட வசதி இல்லாத காரணத்தாலும், பத்து மைல் சுற்றளவில் வேறு மருத்துவமனை இல்லாத காரணத்தாலும்,

இதனருகில் பல கிராமங்கள் இருக்கும் காரணத்தாலும் மருத்துவ மனைக்குப் புதிய கட்டிடத்தைக் கட்டி வைத்திய வசதியை விரிவுபடுத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

ஆலங்குடித் தொகுதியில் மூன்று ஆண்டுகளாகத் தீராத பிரச்னையாக இருந்து வருவது விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காதது ஆகும். நூற்றுக்கணக்கான பம்பு செட்டுகளை பாங்கு மூலமாகக் கடனாக வாங்கி மின் இணைப்புக் கிடைக்காத நிலையில் பாங்குக்கு மிகுதியான கஷ்டத்துடன் தான் தவணைத் தொகையைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் வடகாடு என்ற கிராமத்தில் 112 ஏழை விவசாயிகள் மூன்று ஆண்டுகளாகப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் மீது அக்கறை கொண்ட இந்த அரசு, அந்த ஏழை விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க உடனடியாக வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலும் பாசனக் குளங்கள், ஆழ்கிணறுகளை அமைத்துக் கொடுத்தால் விவசாயிகள் மழையை மாத்திரம் நம்பியிராமல் உணவு உற்பத்தியைப் பெருக்க வசதியாக இருக்கும். மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் இதைக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது. இதை நிறைவேற்றிக் கொடுத்தால் இருபோக விவசாயம் செய்யப் பயன்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்குக் கட்டாயமாகக் குடிதண்ணீர் வசதியும், ரேடியோ நிலையமும் பஞ்சாயத்து மூலம் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு கிராமப் பஞ்சாயத்தில் நிதி நிலைமை இல்லாவிட்டால் யூனியன் பொது நிதியிலிருந்து கட்டாயமாகச் செய்து கொடுக்கும் வகையில் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. சி. ராமநாதன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இங்கு பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத் தேர்தலில்



வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்திருப்பதோடு, குடியரசுத் தலைவர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தன்னுடைய இரங்கலையும் தெரிவித்திருக்கிறார்கள். 17 மாத காலம் ஜனாதிபதி ஆட்சியிலிருந்து இப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஆட்சி ஏற்பட்டதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அரசாங்கம் லஞ்ச லாவண்யத்தை விலக்கி வீண் விரயத்திற்கு இடம் கொடுக்காமல் பாரபட்சமற்ற முறையில் அரசு நடத்தும் என்று கூறியிருப்பதற்காக மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். லஞ்சம் என்ற நிலை நம்முடைய தமிழகத்திலே எப்படி இருந்தது என்றால், கடந்த காலத்திலே ஏழை எளிய மக்கள் செயல் திறனை எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாத அளவுக்கு கையிலே பணம் உள்ளவர்களே காரியம் சாதிக்கலாம் என்ற நிலை இருந்ததை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்த அரசுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்த லஞ்சத்தை எப்படி ஒழிக்கப் போகிறார்கள், இந்த நிலையை எப்படி மாற்றப் போகிறார்கள் என்று எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் பேசினார்கள்.

நான் உதாரணத்திற்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு மாட்டு வண்டியை ஓட்டும்போது அந்த வண்டியை ஓட்டுபவனைப் பொறுத்துத்தான் வண்டி ஓட்டிச் செல்லப்படும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். வீண் விரயம் பற்றிச் சொல்லும்போது, 'முடிவும் இடையும் உற்றுப் பார்த்துச் செயல்படும்' முடிவு எப்படி ஆகும், இடையிலே ஏற்படக்கூடிய செலவுகள் என்ன என்பதை உணர்ந்து ஆராய்ந்து செயல்பட வேண்டும். ஒரு காரியத்தைச் செய்தால் நஷ்டமோ, தீங்கோ ஏற்படும் என்றால் அதைப் பற்றி ஆராய்ந்து செய்வதுதான் ஒரு செயலுக்குப் பொருத்தமாக இருக்கும்.

கடந்த கால ஆட்சியில் பொதுமக்களுடைய பணத்தை வீண் விரயம் செய்தார்கள். அதற்கு உதாரணம் வீராணம் திட்டம்; கிராமப்புறங்களிலே குடிநீர் வாரியத்தின் மூலமாகக் கட்டமுற்பட்ட கிணறுகளில் பெரும்பாலான கிணறுகளில் தண்ணீரே கிடையாது, வெறுமனே தும்பை மாதிரி நின்று கொண்டிருக்

[திரு. சி. ராமநாதன்] [1977 ஜூலை 11

கின்றன. அவ்வாறே குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டதும் தண்ணீரின்றி வெறுமனே இருக்கின்றன. அப்படிப்பட்ட வீண் விரயம் இல்லாமல் இந்த அரசு நல்ல முறையிலே காரியங்களை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது வந்திருக்கும் அரசு எந்த ஒரு கட்சிக்கும் பாதகம் இல்லாமல், பாரபட்சம் இன்றி நடந்து கொள்ளும். ஏழை எளியவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற எந்தவித பாகுபாடும் இன்றி அவரவர்கள் தகுதிக்கேற்ற முறையில் இந்த அரசு செயலாற்றும் என்று அறிந்து மகிழ்ச்சியைத் தெரிவித்து கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை (12-7-1977) 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

2. Notification issued in G.O. Ms. No. 958, Commercial Taxes and Religious Endowments, dated 21st May 1977 in regard to the date on which certain provisions of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) shall come into force in the Ilavangarkudi Inam Estate bearing T.D No. 689, in Nannilam Taluk, Thanjavur district. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]



*1977 ஜூலை 11]*

3. Notification issued in Memo. No. 29554|VIII-2|76-7, Commercial Taxes and Religious Endowments, dated 9th May 1977, in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1613 of 1965, dated the 9th April 1965, published at pages 669-672 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette,* dated the 14th April 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

### B. *Reports, Notifications and other Papers.*

@ 2. The Tamil Nadu Debt Relief Laws (Second Amendment) Bill, 1977 (L.A. Bill No. 1 of 1977) with annexure.

---

@ Despatched to Members on 8th July 1977.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, M[illegible]s-5.
9 C. Venkatesan Chetty and Company No. [illegible], Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Apnaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street,

---

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.